The Beatitude Undefiled

நீலசுவாமி கதை



Institute of Asian Studies

Chemmancherry, Chennai - 600 119

India

The Beatitude Undefiled
நீலசுவாமி கதை

General Editor

G. JOHN SAMUEL

Editor

G. SELVALAKSHMI

English Rendering

D. THOMAS



INSTITUTE OF ASIAN STUDIES
Chemmancherry, Chennai - 600 119
India

The Beatitude Undefiled : நிலசுவாமி கதை

Pages : lxii + 372

First Edition : December 1999

Price : Rs. 350/- US $ 35

Publication No. : 74

Published under the financial assistance received from the Directorate of Tamil Development of the Government of Tamil Nadu for good translations.

Copies can be had from

The Publications Division,
Institute of Asian Studies,
Chemmancherry, Chennai - 600 119,
India.

Phone (Off.) 4961662, 4960831
(Res.) 4960085
Fax : 91-44-4960959
E-mail : ias@xleb.com
World Wide Web site: http://xlweb.com/heritage/asian/

Composed by: INSTITUTE OF ASIAN STUDIES, Chennai-600 119.

Printed by: STUDENTS OFFSET SERVICES, Chennai - 600 017. Ph. 4343862

Contents

A System of Transliteration of Tamil

VOWELS

Short		Long	
அ	a	ஆ	ā
இ	i	ஈ	ī
உ	u	ஊ	ū
எ	e	ஏ	ē
ஒ	o	ஓ	ō

ஐ	ai
ஔ	au

CONSONANTS

Hard		Soft		Medial	
க்	k	ங்	ṅ	ய்	y
ச்	c	ஞ்	ñ	ர்	r
ட்	ṭ	ண்	ṇ	ல்	l
த்	t	ந்	n	வ்	v
ப்	p	ம்	m	ழ்	ḻ
ற்	ṟ	ன்	ṉ	ள்	ḷ
ஸ்	s	ஷ்	ṣ	ஹ்	h
		ஜ்	j		

ĀYTAM

ஃ ḵ

பதிப்புரை

உயர்தனிச் செம்மொழியாம் தமிழ் மொழியில் அச்சில் வாராமல் ஓலை வடிவிலேயே இன்னும் பல நூல்கள் உள்ளன. அவற்றை வெளிக்கொணரும் முயற்சியில் ஈடுபடும் நிறுவனங்களுள் ஆசியவியல் நிறுவனத்துக்குத் தனிச்சிறப்பு உண்டு இந்நிறுவனம் இதுவரை 12 கதைப்பாடல்களையும், மூன்று யட்சகான நாடகங்களையும், இரண்டு இலக்கியங்களையும் ஒரு வர்மசூத்திரத்தையும் ஒரு நொண்டி நாடகத்தையும் ஒரு கணித நூலையும் சுவடியிலிருந்து வெளிக்கொணர்ந்துள்ளது. அவற்றுள் நீலியட்சகானத்தோடு தொடர்புடையதாய் வருகின்ற கதைப்பாடல் நீலசுவாமி கதை என்னும் இந்நூல் ஆகும்.

பதிப்புச்சுவடி

நீலசுவாமி கதை என்னும் இந்நூல் சென்னை, ஆசியவியல் நிறுவன நூலகத்தில் எண் 160இல் பாதுகாத்து வைக்கப்பட்டிருக்கும் ஓலைச்சுவடியில் இருந்து எடுத்துப் பதிப்பிக்கப்படுகிறது.

புற அமைப்பு

சுவடியின் மொத்த ஏடுகள் - 102. எழுதப்பட்ட ஏடுகள் 99. இருபுறமும் இருவெற்று ஏடுகளும், நடுவில் ஒரு வெற்று ஏடும் உள்ளன. சுவடியின் நீளம் 36.5 செமீ அகலம் 3.5 செ.மீ. இருபுறமும் இரண்டு மரச்சட்டங்கள் மட்டுமன்றி முதல் மரச்சட்டத்தையடுத்து மற்றொரு மரச்சட்டமும் காணப்படுகிறது. ஏடுகள் நல்ல நிலையில் உள்ளன.

ஆயிரத்து நூற்றி முப்பத்தி நாலாமாண்டு மேஷ மாசம் 24ஆம் தெய்தி வடக்கு சுரங்குடியூர் பொன்னுவிஸ்வ நாடார் எழுதி முடித்த வன்னியடி மறவன் கதையேடு என்று மலையாளமும் தமிழும் கலந்து எழுதப்பட்ட ஒரு ஏடு இச்சுவடியின் முன்புறம் இணைக்கப்பட்டுள்ளது. இது வன்னியடி மறவன் கதைக்குரிய ஏடாக இருக்க வேண்டும்

அக அமைப்பு

முதல் ஏட்டின் முதல்பக்கத்தில் நீலசுவாமிகதை மலைவளப்பம் கதை காப்பு என்ற தலைப்பிடப்பட்டு ஒரு செய்யுள் மட்டும் எழுதப்பட்டுள்ளது அதன் பின்பக்கத்தில் ஏடு இரண்டு பிரிவுகளாகப்

பிரிக்கப்பட்டு ஐந்தும் ஆறும் வரிகள் எழுதப்பட்டுள்ளன. இரண்டாவது ஏட்டிலிருந்து ஏடு மூன்று பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டு ஐந்து அல்லது ஆறுவரிகள் எழுதப்பட்டுள்ளன. இறுதி ஏட்டில் நீலசுவாமி கதை நாட்டுவளப்பம் முற்றிவிட்டது. கடவுள் துணை சுபம் என்று எழுதப்பட்டுள்ளது.

எழுத்து முறை

க்க, த்தி, ற்றி, த்து, ச்ச, ரா ஆகியன கூட்டெழுத்துக்களாக அமைந்துள்ளன.

போ[illegible] - போற்றி
நிற [illegible] ா[illegible] - நிறத்தானை
நீல[illegible]சன் - நீலராசன்
வள [illegible] - வளக்க.

இ என்பது [illegible] என்ற வடிவில் எழுதப்பட்டுள்ளது. இடையிடையே கிரந்த எழுத்துக்கள் கலந்து எழுதப்பட்டுள்ளன.

சான்று. தெக்ஷணா பூமி, சரஸ்பதி

ளகர, ழகர, ணகர நகரங்கள் முறையாக அமையவில்லை. பல வேறுபாடுகள் காணப்படுகின்றன.

அளகு, புகள், சந்தமுடநேனடந்து.

கூ என்பது [illegible] என்றும் டி என்பது [illegible] என்றும் இடம்பெற்றுள்ளன. மெய்யெழுத்துக்களுக்குப் பொதுவாக ஏட்டில் புள்ளி இராது. இச்சுவடியில் ஏட்டின் இறுதியாக வரும் மூன்றாம் பகுதியின் சில இடங்களில் மெய்யெழுத்துக்கள் புள்ளியுடன் எழுதப்பட்டுள்ளன.

பதிப்புமுறை

பாடல்கள் யாப்புக்கேற்றபடி தனித்தனிப் பாடல்களாக அடிவரையரையுடன் பிரிக்கப்பட்டு விருத்தம், நடை, என்று தலைப்புகள் கொடுக்கப்பட்டுள்ளன. பாடல்களுக்கு வரிசை எண் கொடுக்கப்பட்டுள்ளது. கும்மிப்பாடல்கள், கீர்த்தனை ஆகிய ஒவ்வொன்றிற்கும் தனித்தனி எண் கொடுக்கப்பட்டுள்ளது. நடையில் ஐந்து அடிகளுக்கு ஒருமுறை இறுதியில் எண் கொடுக்கப்பட்டுள்ளது. எழுத்துப்பிழைகள் நீக்கப்பட்டுச்

சுவடிச்சொற்கள் ஆங்காங்கு அடிக்குறிப்பாகக் கொடுக்கப்பட்டுள்ளன. கதைக்கேற்றவாறு ஆங்காங்கே உட்தலைப்புகளும் கொடுக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு தலைப்பிலுள்ள பாடல்களுக்கும் ஆங்காங்கே கருத்துரையும், எழுத்துப்பெயர்ப்பும், மொழிபெயர்ப்பும் கொடுக்கப்பட்டுள்ளன. கடுமையான சொற்களுக்கு மட்டும் பொருள் தரப்பட்டுள்ளது.

பாடலில் மிகைச்சொற்கள் மிகை எழுத்துக்களுக்கு [ ] அடைப்புக்குறியும், சுவடியில் இல்லாமல் சேர்க்கப்பட்டதற்குப் ( ) பிறைக்குறியும் தரப்பட்டுள்ளன. நூலின் இறுதியில் துணைநூற்பட்டியலும், பாட்டுமுதற்குறிப்பும், சொல்லடைவும் தரப்பட்டுள்ளன.

நன்றி

நீலசுவாமி கதை என்னும் சுவடியைப் பதிப்பிக்கும் உரிமையைக் கொடுத்து ஊக்குவித்துவந்த ஆசியவியல் நிறுவன இயக்குநர் டாக்டர் ஜி. ஜான் சாமுவேல் அவர்களுக்கு முதலில் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்

இந்நூல் தொடர்பான பல்வேறு ஐயங்களைக் கேட்டபோதெல்லாம் இன்முகத்துடன் விளக்கமாகச் சொல்லிக் கருத்துரை, ஆய்வுரைகளைச் செம்மைப்படுத்தி உதவிய சுவடித்துறைத் தலைவர் டாக்டர் பூ. சுப்பிரமணியம் அவர்களுக்கு என்றும் நன்றியுடையேன்.

பாடல்கள், பொருள் திருத்துவதில் உதவியவர் செல்வி ஆர். ஜயலட்சுமி அவர்கள். சொல்லடைவு போடுவதில் உதவியவர்கள் திரு. கோ. உத்திராடம், திரு. ய. அந்தோணிசாமி ஆகியோர். ஆங்கில மொழிபெயர்ப்பைச் சரிபார்த்துதவியர்கள் டாக்டர் இ. சு. முத்துசுவாமி மற்றும் டாக்டர் வீ. கணேசன் அவர்கள். அச்சுப்படி முழுமையும் சரிபார்த்துதவியவர் டாக்டர் கி ஜெய குமார் அவர்கள். கணினியில் அச்சிட்டுக் கொடுத்தவர் திருமதி த. செ. சாந்தம் அவர்கள். அட்டைப்படம் வரைந்துதவியவர் திரு அ. செ. நடராசன் அவர்கள். இந்நூலினை அச்சிட்டுத்தந்தவர்கள் மாணவர் மறுதோன்றி அச்சகத்தார் அத்துணைபேருக்கும் நன்றி செலுத்தக் கடமைப்பட்டுள்ளேன்.

ஜி. எஸ்.

Editor's Note

There are many unpublished works in the manuscript form in Tamil, one of the most developed and sophisticated languages. The Institute of Asian Studies which is engaged in the publication of such manuscripts, has a special significance of its own. This institute has so far published 15 ballads, three dramas of *yaṭcakāṉam* type, two literary works, one mathematical work, one *Varmacūttiram*. Among these, *Nīlacuvāmi*'s story, (ballad) is closely connected with *Nīliyaṭcakāṉam*.

The Edited Version

The story of Nīlacuvāmi is edited from the palm leaf manuscript no. 160 in the library of the Institute of Asian Studies.

The external specifications or (External Structure)

The number of palm leaf (sheets)-102.

The number of palm leaves with writing on them - 99. On both ends there is one blank palmleaf with one more blank palm leaf in the middle. The length of the palm leaf is 36.5 cm, breadth 3.5 cm. On both sides there are two wooden frames, and adjacent to the first frame, there is another wooden frame. The palm leaves are in good condition. In the front part of the manuscript another palm leaf written in a mixed Tamil and Malayalam language is attached. It says that it was written in 1134th year, 24th day in the month of Mēcam by North *Teiti* Curaṅkuṭiyūr Ponnuvisva Nadar. It is called *Vaṉṉiyaṭi Maṟavaṉ* story.

Internal Structure

On the first page of the first palm leaf one poetic stanza is written with the title '*Nīlacuvāmi*'s story, the story of the prosperous mountain'. On the reverse of that page, the leaf is divided into two sections and five and six lines are written. From the second palm leaf, it is divided into three sections and five or six lines are written. In the last leaf it is written that the story of the prospering of Nilacuvami's land is over (or completed). Finally it ends with thanks to god.

Method of editing

The poems are divided into separate poetic stanzas according to prosody and are given with footnotes and are assigned titles such as *Viruttam, Naṭai*. Serial number is given for these poetic stanzas. Separate number is given for

Kummi songs and *Kīrttaṉai* . For *Naṭai* at the end of every five lines a number is given.

Spelling mistakes have been removed and words from the text are given as foot notes. According to the story, subtitles (or headlines) are given wherever necessary. For every poem under a caption, the gist, transliteration and translation are given. Meaning is given only for difficult words.

Superfluous words and superfluous letters have been put in box brackets [ ] and any addition not found in the text is put in crescent brackets ( ). In the end I have given bibliography, alphabetical index of the poems and glossary.

Acknowledgement

I am most indebted to Dr. **G. John Samuel**, the Director of Institute of Asian Studies for permitting me to edit *Nīlacuvāmī's* story and for encouraging me to carry out this task. I thank him most sincerely.

Whenever I approached Dr. P. Subramanian, the Head of the Department of Manuscriptology, with all kinds of doubts, he always clarified all my doubts with a smiling face. I thank him for all the help he rendered to bring out this work.

Selvi. K. Jayalaxmi corrected the poems and the meaning. K. Uthiradam and Y. Antonisamy helped me in preparing the glossary. Dr. E.S. Muthusamy supervised the English translation. Dr. K. Jayakumar went through the typed script and Mrs. T.C. Santham was responsible for computer print. Mr. A. Natarajan has done the cover design. Student Maruthonri Printers have done the printing. I thank each and every one of them most sincerely.

G. S.

ஆய்வுரை

இந்திய வரலாற்று ஆதாரங்களில் இலக்கியமும் ஒன்று. இலக்கியத்துள் ஒரு பிரிவாகிய நாட்டுப்புற இலக்கியம் வரலாற்றுச் செய்திகளை உள்ளடக்கியதாகும்.

பண்டைய மக்களின் பழக்கவழக்கங்களைப் பாதுகாத்துவைக்கும் கருத்துப்பெட்டகங்களாகக் கதைப்பாடல்கள் விளங்குகின்றன. கதையைப் பாடல் வடிவில் கூறுவதே கதைப்பாடல் ஆகும். அஃது ஒரு கதையாகவோ பல உட்கதைகள் கொண்ட கூட்டுக்கதையாகவோ இருக்கும். ஆங்கிலத்தில் இதனை 'Ballad' என்று கூறுவர். இச்சொல் 'Ballare' என்ற இலத்தீன் சொல்லி னின்று பிறந்ததாகும். இதற்கு நடனம் என்ற பொருளும் உண்டு. மேலைநாட்டில் பல பொருளில் வழங்கி வந்த இச்சொல்லுக்கு 16ஆம் நூற்றாண்டிற்குப் பின்னரே குறிப்பிட்ட வரையறை ஏற்பட்டது.

நாட்டுப்புறக் கதைப்பாடல்கள் வாய்மொழியாகப் பரவும் தன்மையன. பொருளிலும், வடிவிலும், நடையிலும் நாட்டுப்புற மக்களுக்கே உரியன. ஒவ்வொரு கதைப்பாடலும் ஏதேனும் ஒரு கதை நிகழ்ச்சியை அடிப்படையாகக் கொண்டது. நாடக உத்தி (Dramatic Theme) அமைந்து காணப்படுவது. கதைப்பாடலுக்குப் பெரும்பாலும் ஆசிரியர் இல்லாமல் இருக்கும். சில கதைப்பாடல்கள் இசையோடும், நடனத்தோடும் இயைந்து பாடப்படுவதாகும். கதைப்பாடலில் கதையின் நிகழ்ச்சிப்போக்கு (Action),பாத்திரங்கள் (Characters), பின்புலம் (setting), கரு (Theme) முதலியன முக்கியப் பண்புகளாக அமையும். கதைப்பாடல்கள் பாடுவதற்காகவே முதலில் எழுந்தன. நாட்டுப்புற மக்களின் பேச்சுமொழியிலேயே அமைந்திருக்கும்.[1] கதைப்பாடல்களில் இடம்பெறும், 1. வியப்பூட்டும் நிகழ்ச்சிகள் 2. அதிர்ச்சியூட்டும் செயல்கள் 3. இரக்கத்தை ஊட்டும் அவலங்கள் முதலியன நாட்டுப்புற மக்களின் மனதில் ஆழமான பாதிப்பை ஏற்படுத்தும் தன்மையுடையன. அவை கதைப்பாடல்களின் பாடுபொருள்களாக அமையும்[2] என்பர்.

நாட்டுப்புறப் பாடல்களுக்கும் அதன் ஒரு பிரிவாகிய கதைப்பாடல்களுக்கும் உள்ள வேறுபாடுகளைக் குறிக்குமிடத்தில் தமிழ்க் கதைப்பாடல்கள் பொதுவாக நீண்டதாகவும், கதையை உள்ளடக்கியதாகவும் உள்ளன. நாட்டுப்புறப் பாடல்கள் பாடல் தன்மை மிகுந்தும், அளவில் சிறியதாகவும், கதைக்கரு இல்லாமலும் இருக்கும்[1] என்று கூறுவர்.

1 சு. சக்திவேல், நாட்டுப்புற இயல் ஆய்வு பக் 59-60

2. அ நா. பெருமாள், தமிழில் கதைப்பாடல் பக் 4

கதைப்பாடல்கள் அம்மானை என்றும், கதை என்றும், மாலை என்றும் பெரும்பாலும் முடிகின்றன. சான்றாக இராமப்பய்யன் அம்மானை, நீலசுவாமி கதை, அல்லி அரசாணி மாலை போன்றவற்றைக் கூறலாம். சிந்து, கும்மி, சண்டை, போர் என்ற பெயர்களிலும் முடிவதுண்டு. சான்றாக பூலித்தேவன் சிந்து, கட்டபொம்மன் கும்மி, கர்ணமகராஜன் சண்டை கன்னடியன் போர் போன்றவற்றைக் கூறலாம்.

நாட்டுப்புற மக்களால் அனுபவித்துப் பாடப்படும் இக்கதைப் பாடல்கள் இசையுடன் பாடுவதற்கு ஏற்ற சொற்களையும், எளிமையான வருணனைகளையும், இயல்பான மொழிநடையினையும் பெற்றுத் திகழ்கின்றன. வட்டார வழக்குச் சொற்கள் அதிகமாக இடம்பெறுவது கதைப் பாடல்களுக்கேயுரிய தனித்தன்மை எனலாம். சில கதைப்பாடல்களின் இடையே விருத்தப்பாக்களும் வருவதுண்டு.

கதைப்பாட்டு என்ற இலக்கிய வகையானது மக்களது வாயில் வாழ்கிறது என்று கூறுவதுண்டு. வாயின் வாயிலாகப் பரவவும் செய்கின்றது. இதை இயற்றியவர் யாராயினும் இதைப் பாடுபவரது உரிமையாகவே மாறிவிடுகின்றது. 'இதற்கு முன்னுரையும் பின்னுரையும் விளக்கமும் தேவையில்லை.[2]

கதைப்பாடல் என்ற பெயர் சுவடிகளில் இல்லை. கதைப்பாடலாக அமைந்த நாட்டுப்புற இலக்கியங்களுக்குப் பெரும்பான்மையாக அம்மானை என்ற பெயரே காணப்படுகின்றது.[3]

மூவர் அம்மானை கி.பி 1575ல் எழுதப்பட்டது. இது தமிழிலுள்ள முதல் கதைப்பாடலாகக் கருதப்படுகிறது. இராமப்பய்யன் அம்மானை 1640லும் அல்லி போன்ற கதைப்பாடல்கள் 1575-1625லும் தோன்றின[4] என்பர்.

'குறிப்பிட்டதொரு பண்பாட்டில் குறிப்பிட்டதொரு சூழல்களில் வாய்மொழியாக ஒரு பாடகனோ அல்லது ஒரு குழுவினரோ சேர்ந்து நாட்டார்முன் எடுத்துரைத்து இசையுடன் நிகழ்த்தும் அல்லது நிகழ்த்திய ஒரு கதை தழுவிய பாடல் கதைப்பாடல் ஆகும்[5] என்பது சிந்திக்கத்தக்கது.

---

1. M. Arunachalam, peeps into Tamil literature - The Ballad poetry p.35.

2 நா இராமச்சந்திரன் - சமூகக் கதைப்பாடல் ஒரு வரையறை நாட்டார் வழக்காற்றியல் ப 71

3 கதைப்பாடல்கள் - சில அணுகுமுறைகள், கருத்தரங்கக் கட்டுரை ப-1

4. M. Arunachalam, Ballad poetry p.10.

5 நா இராமச்சந்திரன், சமூகக்கதைப்பாடல் ஒரு வரையறை நாட்டார் வழக்காற்றியல் ப. 71

வகைப்பாடு

எண்ணற்ற கதைப்பாடல்கள் மக்களிடையே வழங்கி வருகின்றன. இதிகாசத் துணுக்குகள், சமூகக் கதைப்பாடல்கள், வரலாற்றுக் கதைப்பாடல்கள், கிராம தேவதைகளின் கதைப்பாடல்கள் என்று வகைப்படுத்துவர்.[1] புராணக் கதைப்பாடல்கள், வரலாற்றுக் கதைப்பாடல்கள், சமூகக் கதைப்பாடல்கள் என்றும் வகைப்படுத்துகிறார்.[2]

சரித்திர சம்பந்தமானவை, புராண சம்பந்தமானவை வீரச்செயல்கள் சம்பந்தமானவை, காதல் கதைகள் சம்பந்தமானவை என்று நான்கு வகைப்படுத்துவர்.[3] சமூகக் கதைப்பாடல், காவியக் கதைப்பாடல், வரலாற்றுக் கதைப்பாடல்[4] என்னும் மூன்று வகையாகவும் பாகுபடுத்துகின்றனர்.

வீரகாவியக் கதைப்பாடல்கள், புராணக் கதைப்பாடல்கள், சமுதாயக் கதைப்பாடல்கள், பிறவகைக் கதைப்பாடல்கள்[5] என்றும், புராணத் தொடர்பானவை, வரலாற்றுத் தொடர்பானவை, சமூகத் தொடர்பானவை[6] என்றும், புத்தார்வக் கற்பனைக் கதைப்பாடல், வரலாற்றுக் கதைப்பாடல், புராணக் கதைப்பாடல், சமூகக் கதைப்பாடல், தத்துவக் கதைப்பாடல், இன்பியல் கதைப்பாடல், சமணக் கதைப்பாடல், முஸ்லீம் கதைப்பாடல், கிறிஸ்தவக் கதைப்பாடல்[7] என்றும் பலமுறையில் வகைப்படுத்துகின்றனர்.

கதைப்பாடல்கள் வரலாறுகள் அல்ல. அவை வீர காவியங்கள். இடையே மனிதப்பண்பின் உயர்ந்த அம்சங்களைப் போற்றுபவை. சமூகச் சீர்கேடுகளைக் கேலி செய்பவை. இவற்றைக் கற்பனையால் உருவான நாட்டார் பாடல் என்றே சொல்ல வேண்டும். ஆனால் அக்கற்பனை ஆகாசக் கோட்டைகள் அல்ல[8] என்பர்.

ஒரு நாட்டில் வழங்கும் கதைப்பாடல்கள் அந்த நாட்டின் சட்டங்களைவிட முக்கியமானவை என்பர் ஆன்ட்ருசு பிளச்சர்.[9]

---

1 நா வானமாமலை, தமிழர் நாட்டுப் பாடல்கள் ப-5

2 நா வானமாமலை, வீரபாண்டிய கட்டபொம்மன் கதைப்பாடல் ப. 181

3 அன்னகாமு, ஏட்டில் எழுதாக் கவிதை ப 202

4. Somale, Folklore of Tamilnadu p-129.

5. கதைப்பாடல்கள் - சில அணுகுமுறைகள் கருத்தரங்கக் கட்டுரை ப-2

6 சு. சண்முகசுந்தரம், நாட்டுப்புற்இயல், ப 269

7. M. Arunachalam, Ballad poetry.

8 நா. வானமாமலை, ஐவர்ராசாக்கள்கதை ப 21.

9 அன்னகாமு, ஏட்டில் எழுதாக் கவிதைகள் ப 129

கிராமிய மக்களில் பலர் தனியாகக் கதைகளைச் சொல்லி வந்தார்கள். பாடல்களையும் பாடி வந்தார்கள். ஆனால் சிலர் கதை தழுவிய பாடல்களைப் பாடிய போது அதனைக் கதைப்பாடல்கள் என்றே அழைத்தனர். இதற்கு அம்மானை என்றும் பெயர் உண்டு. வில்லுப்பாட்டு, லாவணி, கும்மி, தாலாட்டு, ஊசல் என்பன போன்ற வடிவங்களில் கதைப்பாடல்கள் அமைந்துள்ளன.[1]

இத்தகைய கதைப்பாடலுள் ஒன்று பதிப்பிற்கு எடுத்துக்கொண்ட நீலசுவாமி கதையாகும். இதில் நீலன், நீலி என்ற அண்ணன், தங்கைப் பேய்கள் தவம் செய்து கயிலை சென்று சிவபெருமானிடம் வரம் வாங்கிப் பின்னர் மலை வளப்பங்களைக் காணும் செய்தி கூறப்படுகிறது. இதில் வரும் நீலி, இயக்கி என்றே கூறப்படுகிறாள்.

இயக்கி–சொற்பொருள்

இயக்கி - இயக்கர் என்ற இரண்டு சொற்களும் ஒரே வேர்ச் சொல்லின் அடியாகப் பிறந்த ஆண் - பெண் தெய்வங்களைக் குறிப்பனவாகும். யஸ் (yus) யக்கா (YAK-A) வஜ் (Vaj) போன்ற வேர்ச்சொற்களிலிருந்து இச்சொற்கள் பிறந்திருக்கலாம் என்பது ஆய்வாளர்களின் கருத்தாகும்.

இவற்றிற்குப், 'புதிரான' (mysterious) வியப்புக்குரிய, சிறந்த (marvellous) எனப் பொருளுரைக்கின்றனர்.[2] பாலி மொழி உரைகாரர் இது 'பலி கொடுக்கத்தக்கது' என்று பொருள் கூறுகின்றனர். மேலும் சிலர் 'விரைந்து செல்லக்கூடியது' 'விரைந்து செல்லும் ஒளி', 'ஆவி', 'பேய்' என்று பொருள் கூறுகின்றனர் மேலும் சிலர் இயற்கை இறந்த தன்மையுள்ளது, தெய்வத்தன்மை பொருந்திய ஆவி (spiritual apparation) ஓரளவு தெய்வத்தன்மை பெற்றது (Semi divine beings) என்று பொருள் கூறுகின்றனர்[3]

இயக்கி வழிபாடு தோற்றமும் வளர்ச்சியும்

இயக்கி வழிபாடு இந்தியத் தொல்குடியினரிடத்துத் தோன்றி வளர்ந்த தொன்மைமிக்க வழிபாடாகும் கி.மு இரண்டாம் நூற்றாண்டிற்கு முன்பிருந்தே இவ்வழிபாடு தொடர்பான சான்றுகள் கிடைத்துள்ளன.

---

1 சு சண்முகசுந்தரம், நாட்டுப்புற இலக்கிய வரலாறு ப 157

2. Margaret and James, A dictionary of Hinduism. Its mythology, Folklore and Development - 1500 B-C-AD1500, Allied publishers private limited, Bombay, New Delhi - 1972, p.346.

3. Sir.Moner williams, Sanskrit English Dictionary p-838.

சங்க இலக்கியம்

சங்க இலக்கிய காலத்தில் இயக்கி என்ற பெயரில் இயக்கியர் வழிபாடு பற்றிய சான்றுகளைக் காணமுடியாவிட்டாலும் இயக்கியரின் தன்மைகளைக் கொண்டு பெண் தெய்வங்களைப் பழந்தமிழிலக்கிய காலத்தில் காணமுடிகின்றது. இவற்றிற்கு எடுத்துக்காட்டாக சூலி, சூர்மகள், சூரரமகளிர், வரையற மகளிர், கடல்கெழு செல்வி, கானமர் செல்வி, பாவை, அணங்கு போன்ற பெண் தெய்வங்கள் பத்துப்பாட்டு, எட்டுத்தொகையிலுள்ள பழந்தமிழிலக்கியப் பாடல்களில் வருவதைக் குறிப்பிடலாம்.

சிலப்பதிகாரம்

சிலம்பில், மதுரைக்கு வெளியே பூங்கண் இயக்கிக்குக் கோயில் இருந்ததாகவும், மாதரி என்னும் இடைப்பெண் அதற்குப் பாற்சோறு வைத்து வழிபட்டதாகவும் கூறப்படுகிறது.

மணிமேகலை

தமிழ்நாட்டில் பௌத்த சமயத்தில் விளங்கிய இயக்கி வழிபாட்டைச் சாத்தனாரின் மணிமேகலைக் காப்பியத்தில் காணமுடிகின்றது. சாத்தனாரால் மணிமேகலையில், காப்பியத்தின் கதைப்போக்கிற்கும் அதன் வளர்ச்சிக்கும் துணைபுரியும் வகையில் சம்பாபதி, மணிமேகலை, சிந்தாதேவி, சித்திர தெய்வம், கந்திற்பாவை முதலிய பெண் தெய்வங்கள் வருகின்றன.

சிற்பங்கள், கல்வெட்டுகள்

ஐந்தாம் நூற்றாண்டுக்கு மேல் சமணர்கள் தங்கள் அம்பிகா, பத்மாவதி போன்ற பெண் தெய்வங்களுக்கு உருவ வழிபாடு கொடுத்து இயக்கி வழிபாட்டை வளர்த்தனர். இவர்களது உருவங்கள் புடைப்புச் சிற்பங்களாகவும், ஐம்பொன் திருமேனிகளாகவும் இருந்தன. கல்வெட்டுகள் இவர்களை இயக்கர் என்றும், அவ்வை என்றும் இயக்கி, பட்டாரகி, பகவதி என்றும் குறிப்பிடுகின்றன.

பிற்காலம்

பிற்காலத்தில் வைதீக சமயங்களில் இயக்கி வழிபாடு துர்க்கை, இலட்சுமி வழிபாடாக மாறிவிட்டது. நாயக்கர் காலத்தில் இயக்கி வழிபாடு நாட்டுப்புறத் தெய்வ வழிபாட்டோடு கலந்துவிட்டது. சில இடங்களில்

நாட்டுப்புறப் பெண் தெய்வ வழிபாடாக மாறியும் உள்ளது. தமிழ் நாட்டில் இன்னும் சிறப்புடன் வழிபடப்பெற்றுவரும் பொன்னியம்மன், அவ்வையாரம்மன், பகவதி, பேச்சி, இராக்காயி, இசக்கியம்மன் போன்ற தெய்வ வழிபாட்டில் இயக்கியரின் தன்மைகளைக் காண முடிகின்றது. தமிழ்நாட்டில் தென்கோடி மாவட்டங்களில் வழிபடப்பெற்றுவரும் இசக்கியம்மன் இந்தியாவில் தொன்றுதொட்டு இருந்துவந்த பழமையான இயக்கி வழிபாட்டின் எச்சமாக இருக்கின்றது என்று கருதுமளவிற்கு இயக்கியின் தன்மைகளைக் கொண்டு விளங்குகின்றது.

இயக்கியின் கதை திருநெல்வேலி, கன்னியாகுமரி மாவட்டங்களில் இசக்கியம்மன் விற்கதை, பழகைநல்லூர் (பழையனூர்) நீலியம்மன் கதை என்னும் பெயர்களில் நாட்டுப்புறக் கதைப்பாடல்களாக வழங்கி வருகின்றது.

பழகைநகர் எது என்பது திட்டவட்டமாகத் தெரியவில்லை. வைகையாற்றின் தெற்கே திருப்புவனம் பகுதியில் பழையனூர் என்ற ஓர் ஊர் உள்ளது. ஆனால் இந்தப் பகுதியில் நீலியம்மன் வழிபாடு புகழுடன் இல்லை. பழகைநகர் திருநெல்வேலிக்கு அருகிலுள்ள பாளையங்கோட்டைப் பகுதியில் இருந்திருக்க வாய்ப்பு உள்ளது. நீலி வழிபாடு கி.பி. 19ஆம் நூற்றாண்டிற்கு முன்பிருந்தே திருநெல்வேலி மாவட்டப் பகுதியில் இருந்திருக்க வேண்டும் என்பதற்குத் திருநெல்வேலிப் பகுதியிலுள்ள நீலிதநல்லூர் என்ற ஊரின் பெயர் சான்றாக விளங்குகின்றது. இங்குள்ள கோயிலில் காணப்பெறும் கி.பி. 10ஆம் நூற்றாண்டைச் சார்ந்த சோழன் தலைகொண்ட வீரபாண்டியனின் வட்டெழுத்துக் கல்வெட்டிலும் இவ்வூர் 'நீலிதநல்லூர்' என்றே குறிப்பிடப்படுகின்றது.

நீலியட்சகானம், பெரியபுராணம்

ஆனால் நீலியட்சகானம், பெரியபுராணம் போன்ற நூல்களில் தொண்டைநாட்டில் திருவாலங்காட்டுக்கு அருகிலுள்ள பழையனூரே நீலியின் ஊராகக் குறிப்பிடப்படுகிறது. நீலி கதையில் தீப்பாய்ந்த வேளாளர்கள் தொண்டை மண்டல வேளாளர்கள் என்றே அழைக்கப்படுகின்றனர். இவர்களுடைய சிற்பங்கள் தொண்டை நாட்டுப் பழையனூரில் காணப்படுகின்றன. நீலகவாமி கதையில் பெரும்பாலும் பாண்டிய நாட்டு ஊர்களே சுட்டப்படுகின்றன. சபரிமலைக்கு அருகில் நீலிமலை என்ற பெயரில் ஒருமலை உள்ளதாக மெக்கன்சி குறிப்பு கூறுகிறது.

எனவே நீலி வாழ்ந்த இடம் தென் மாவட்ட்ப் பகுதியா அல்லது தொண்டை மண்டலமா என்பது மறு ஆய்விற்குரியது.

கதைப்பாடலின் அமைப்பு

கதைப்பாடல்கள் பொதுவாகத் தொடக்கம், கதை சொல்லும் முறை, முடிவு என்ற அமைப்பினைக் கொண்டிருக்கும். கதைப்பாடலின் சில உத்திகளாகக் காப்பு, இறைவணக்கம், அவையடக்கம், நுதலிப்புகுதல், கதைத்தொடக்கம், கதையினைக் கொண்டு செல்லும் முறை, முடிவு ஆகிய பண்புகளைப் பெற்றும் திகழ்கின்றன. இதே அடிப்படையில் நீலசுவாமி கதையும் அமைந்துள்ளது.

காப்பு

நீரையும், நீரால் சூழப்பட்ட உலகையும், உலக உயிர்களையும் படைத்தல், காத்தல், அழித்தல் என்னும் முத்தொழில்களை மேற்கொண்டு இயக்கி வருபவன் இறைவன். அவ்விறைவன் நீலனுக்கு அழியாத வரம் கொடுத்தவன். வரம் பெற்று மலை பல கடந்து வரும் நீலனின் வரலாற்றை ஆசிரியர் தானறிந்தவாறு சொல்லத் தொடங்குவதாகக் கூறுகிறார்.

இறைவணக்கம்

ஒரு செயலைச் செய்வதற்குமுன் இறைவனை நினைத்து அருள்புரியும்படி வேண்டுவது தமிழ் மரபு அதன்படி கணபதி, சிவன், திருமால், உமையம்மை, சரஸ்வதி, பத்திரகாளி, வள்ளிவடிவேலர் போன்ற தெய்வங்களைப் போற்றி, அத்தெய்வங்களைத் தமது வாக்கினில் இருந்து அருள்புரியுமாறு வேண்டுகிறார் ஆசிரியர்.

அவையடக்கம்

தனது கல்வியில் தனக்கு ஆணவம் வரக்கூடாது என்பதற்காகத் தன்னைத் தாழ்த்தி அடக்கத்தோடு தன் திறமையைக் கூறும் அவையடக்க உத்தி இந்நூலிலும் கையாளப்பட்டுள்ளது.

கல்வித்திறனும் கற்பனை வளமும் நிறைந்த சான்றோர் முன் தாமும் கவிபாடத் தொடங்கியுள்ள தன்மையானது, திறமைவாய்ந்த ஓட்டக்காரர் முன்னால், நடக்கமுடியாத சப்பாணி ஒருவன் தானும் அந்த ஓட்டக்காரனுக்கு நிகராக ஓடுகிறேன் என்று கூறித் தவழ்ந்து செல்வது போல் உள்ளது என்பது ஆசிரியரின் அவையடக்கக் கூற்று. இதே போல, சான்றோர் கூடியுள்ள அவையில் வழக்கை ஆய்ந்து நல்ல முடிவு செய்யும் தலைவன் முன்னே நிற்கும் ஊமை ஒருவன் தலைவனுக்குச் சமமாக நானும் பேசுகிறேன் என்று நிற்பது

போலவும், வீட்டிலுள்ள வெள்ளாட்டுக்குட்டி, பெரிய புலியுடன் போரிட்டு வெற்றி பெற்று வருவேன் என்று புறப்படுவது போலவும் உள்ளது நான் பாடத் தொடங்கியுள்ள செயல். யாருக்கும் சிறு உதவியும் செய்யாத உலோபிகள் நன்றியுணர்வும், வள்ளல்தன்மையும் பேரறிவும் படைத்த சான்றோருக்குச் சமமாவோம் என்று கூறுவது போலவும், பிச்சை எடுத்து உண்டு வாழ்க்கை நடத்தும் ஆண்டி ஒருவன் நஞ்சுண்ட கண்டனாகிய சிவபெருமானுக்கு நானும் நிகராவேன் என்று நடந்து கொள்வது போலவும் காணப்படுகிறது என் செயல்; வீட்டில் முடங்கிக் கிடக்கும் நொண்டி ஒருவன் வீரர்களின் மக்களான பலசாலி களுடன் போரிட்டு வெற்றி பெறுவேன் என்று புறப்படுவது போலவும் இருக்கிறதல்லவா நான் பாடத்துணிந்த செயல் என்றெல்லாங் கூறி, அப்படியிருந்தும் சான்றோர் என் பிழையைப் பொறுத்து இக்கதையை ஏற்று அருள்புரிவர் என்னும் துணிவால் மட்டுமே தொடங்குவதாகக் கூறுகிறார் ஆசிரியர்.

நுதலிப்புகுதல்

அவையடக்கம் முடிந்த பிறகு இன்ன கதையைப் பாடப் போவதாகக் கூறுவதே நுதலிப்புகுதலாகும் சோழனுக்கு மக்களாகப் பிறந்த நீலனும் நீலியும் தென்பழகை என்னும் திருத்தலத்தில் எழுந்தருளியுள்ள சிவனையும், உமையையும் தொழுது தங்கள் பயணத்தில் குறையேதும் வராதபடி வேண்டி வரம்பெற்றுத் திருவனந்தபுரம் புறப்பட்டுச் செல்லும் நீலன் நீலி கதையைக் கூற விரும்புவதாக ஆசிரியர் கூறுகிறார்

நூலாசிரியர்

வலங்கைக் குலத்திலே பிறந்து சிவனின் திருவருளைப் பெற்று காளத்திநாதரையும், பத்திரமாகாளியையும் இடைவிடாது தொழுதுவரும் சிறந்த ஆசிரியராகிய ஆறுமுகப்பெருமாள் என்பவரின் மரபிலே பிறந்து வளர்ந்த பொன்னணஞ்சான் என்பவரின் மகனாகப் பிறந்தவன் அடியேன் என்று நூலாசிரியர் தன்னைக் குறிப்பிட்டுள்ளார் பெயர் குறிப்பிடப்படவில்லை.

காலம்

கொல்லம் தொள்ளாயிரத்து ஐம்பதாம் ஆண்டு நீலசுவாமி பூசையேற்றார் என்றும், ஆளடியான் என்ற நீலசுவாமி கூறியபடி பாடிமுடித்தேன் என்றும் கூறுவதிலிருந்து கொல்லம் 950 ஆம் ஆண்டில் (கி.பி. 1774) பாடப்பட்டது என்பது தெரிகிறது.

மீண்டும் இறையருள் வேண்டுதல்

கணபதி, முருகன், சரஸ்வதி ஆகியோரை மீண்டும் வணங்கி, அருள்புரியும்படி வேண்டி நூலினைப் பாடத் தொடங்குகிறார் ஆசிரியர்

தொடக்கம்

சிவன் உமையுடன் வீற்றிருக்கும் கயிலாயக் காட்சி கூறப்பட்டுள்ளது. தவம் செய்து இறைவனின் வரம் பெற விரும்பி, பொன்னால் செய்யப்பட்ட செப்புக்குடத்தில் பொன்னூசியை நாட்டி, அதில் கால் வைத்துத் தவம் மேற்கொள்கிறான் நீலன். நீலனின் தவத்தைக் கண்ட சிவன், தவம் செய்வது யாரென்று உமையிடம் கேட்க, உமையம்மை நீலனின் முற்பிறப்பைக் கூறுகிறாள். நீலனுக்கு வரமளிக்குமாறு உமை கூறுகிறாள். நீலனை அழைத்துவர நந்தி தேவரைச் சிவன் அனுப்புவதாகக் கதை செல்கிறது.

கதை நிகழ்த்தும் முறை

அரனார் ஆணைப்படி நந்திதேவன் நீலனை அழைத்துக்கொண்டு கயிலை வருகிறான். திருவாபரணங்களையும், அக்கு, அறுகு, கொன்றை, தும்பை ஆகியவற்றாலான மாலைகளையும், திருமார்பிலே நல்ல பாம்பு படமெடுத்து ஆட சடாமுடியிலே அம்புலி சூடிய ஈஸ்வரரின் தோற்றத்தை உள்ளத்தில் பதித்திருந்த நீலன், அதே வடிவில் காட்சியளித்த ஈஸ்வரரைத் தொழுது நிற்கிறான்; இறைவனின் வினாக்களுக்கு விடை கூறுகிறான். பின்பு தனது நடனத்தைச் சிவபெருமான் பார்க்க வேண்டும் என்று பெருமிதத்தோடு இறைவனை வேண்டிக் கொண்ட நீலன், பலவ்கையான ஆடை ஆபரணங்களால் தன்னை அழகுபடுத்திக் கொண்டும், மேனியில் வாசனைப் பொருள்களைப் பூசிக் கொண்டும் ஆடத் தொடங்கினான். நீலனின் நடனத்தைக் காண தேவர், தேவகன்னியர், தானவர், தவத்தியர், கணபதி, முருகன், காலன் ஆகிய அனைவரும் கூடியிருக்கின்றனர். அவர்கள் அனைவரும் மயக்கங்கொண்டு நீலனின் நடனத்தைப் பாராட்டி மகிழ்கின்றனர். பாட்டும், இசைக்கருவிகளும் முழங்குகின்றன. சிறப்புடன் நடனமாடுகின்ற நீலனுக்கு என்ன பரிசு கொடுப்பது என்று சிந்தித்தவாறே சிவபெருமான் நீலனின் பெருமைகளைப் பாராட்டுகிறார். சிவபெருமானின் கருத்துக்கு உமையம்மையும் பரிந்துரை செய்கிறாள். சிவன் நாரதரையும் முனிவர்களையும் வினவி ஒரு முடிவுக்கு வருகிறார். விலையுயர்ந்த முத்துமாலை, மோகனமாலை, அரவுமணிமாலை போன்ற ஆபரணங்களை மகிழ்ச்சியுடன் கொடுப்போம் என்று முடிவு செய்கிறார்.

நீலனோ சிவபெருமானிடம் வரங்கள் பலவற்றை வேண்டுகிறான். சிவபெருமானும் நீலன் வேண்டியபடியே வரங்களைக் கொடுத்து அருள்புரிகிறார். இன்னும் ஓர் வரம், ஓர் வரம் என்று மீண்டும் மீண்டும் வேண்டி அனைத்து வரங்களையும் பெறுகிறான். வரம்பெற்ற நீலன் வசதிகள் பலவற்றையும் பெறுகிறான். இறைவனைத் தொழுது விடைபெற்று நீலனும்

நீலியும் அலங்காரம் செய்த தெய்வப்புரவியில் புறப்படுகின்றனர். பூவுலகு வந்து நாடு, மலை, அருவி, ஆறு, சோலை, சுனை, காடு போன்றவற்றையெல்லாம் கடந்து திருச்செந்தூரையடைகின்றனர்.

திருச்செந்தூர் திருமாலை வணங்கிய நீலனிடம் திருமால் எங்கிருந்து வருகிறாய் என்று வினவுகின்றார். தவமிருந்து சிவபெருமானிடம் வரம்பெற்றுவந்த வரலாற்றை நீலன் கூறக்கேட்ட திருமால், சிவன் தந்த வரங்களைத் தானும் தந்ததாகக் கூறித் தென்பூமிக்குப் போகுமாறு பணிக்கிறார். தாமரைப் பொய்கையில் நீலனைக் கண்ட மகளிர் வாழ்த்திக் கும்மியடித்து மகிழ்ந்தவர்களாய் ஏக்கம் கொள்கின்றனர். அவ்விடம்விட்டு நீங்கி குடமாடு மலை கடந்து தங்கள் தென்பழகையை அடைகின்றனர். பழகையின் பழமையை நினைக்கின்றனர். முன்பிருந்த வளங்களையும், தங்களால் அழிக்கப்பட்ட நிலையையும், இப்போது சிறப்படைந்திருக்கிற காட்சியையும் நினைக்கின்றனர்.

மலைப்பெருமாள் கோவிலுக்கு வரும்வழியில் நீலனைக் கண்டு குயில்கள் இசைபாட, வண்டுகள் ஆட, மலையில் வாழும் கன்னியர் குரவையிட சந்தோசமாக வரும் நீலனைப் பார்த்த பெருமாள், நீலன் வந்த காரணத்தைக் கேட்கிறார். தென்பழகை மாநகரையும் தென்னாட்டுத் திருத்தலங்களையும், மலைவளப்பங்களையும் காணவந்ததாக நீலன் கூறுகிறான்.

பெருமாளின் வாழ்த்தைப் பெற்று, சோழநாட்டு வளத்தைக் காண்கிறான். மலைகளைக் கடந்து வரும்போது நீலனைக் கண்ட மிருகங்கள் நீலனின் அடிதொழுது, தம்புரானே! தாங்கள் வந்த காரணமென்ன என்று கேட்டு வணங்கி நிற்கின்றன. நீலன் உலக இயல்பினைக் கூற அவற்றைக் கேட்ட மிருகங்கள் மகிழ்ந்து சென்றன. பின்பு நீலன் குருதியுண்ணும் வேட்கையால் வேட்டையாட நினைக்கிறான். மிருகங்கள் வந்து வணங்க, மந்திரம் சொல்லி பச்சிலை பறித்தெறிகிறான். மிருகங்கள் பயமின்றி நீலனின் மனநிலையறிந்து இருப்பிடம் தேடிவர, நீலன் விலங்குகளை முறியடிக்கிறான்.

நீலன் கொன்ற மிருகங்களின் இரத்தம் மலைகளிலே வெள்ளமாக ஓடி வருவதைக் கண்டு அஞ்சி ஓடிய மிருகங்களை நீலனும் நீலியும் வலை போட்டு மயக்கத் தொடங்கினர். அந்த நிலம் படுகளமாகக் காட்சியளித்தது. விருந்து கிடைத்த பேய்கள் நீலனின் அடிகளை வணங்கிப் போற்றின. காட்டு விலங்குகளைக் கொன்று பேய் பூதங்களுக்கு இரையளித்த நீலன் சிவபெருமானின் அருள்விளங்க பூசையேற்று நிற்கிறான்.

இயற்கையின் வரவேற்பினால் சுனையை வந்தடைந்த நீலன் அங்கிருந்த மகளிருடன் ஆடத் தொடங்குகிறான். நீலனைக் கண்ட மகளிர் அவன்மீது மையல் கொண்டு நீலனைப் புகழ்கின்றனர். செம்பியன் பெற்ற தெய்வகுல நீலதம்புரானாகவும், நாராயணனாகவும், நீலகண்டனாகவும், பேயோடு ஆடும்

பெருமானாகவும் ஒருத்தி மட்டும் பார்க்கிறாள். பிற மகளிரோ தங்களுக்குள்ளே பலவிதமாக நினைத்து மையலாகி நிற்கின்றனர். மருந்திட்டு மயக்குவோம் என்று சொன்ன பெண்ணிடம் மற்றொருத்தி நீலனின் திறமைகளைக் கூறி, அன்பு ஒன்றால் மட்டுமே அவனைப் பெற முடியும் என்கிறாள்.

பலவாறு பேசி மயங்கி நின்ற மகளிரைக் கடந்து சென்று பல்பனாபப் பெருமாளை வணங்குகிறான் நீலராசன். பெருமாள் நீலனின் பிறப்பைப்பற்றிக் கேட்க, நீலன் தன் பிறப்பைக் கூறத் தொடங்குகிறான்.

முதல்பிறவியில் வீரமிகுந்த வள்ளுவர்குடியிலே பிறந்து வளர்ந்தோம். மறுபிறவியில் அடியேன் வீமனாகவும் என் தங்கை சூர்ப்பனகையாகவும் பிறந்தோம் அடுத்த பிறவியில் மதுரையில் கூத்துவர்களாகப் பிறந்து பாண்டிய மன்னனின் செங்கோலை வாழவைத்தோம். மீண்டும் இழிகுலத்தோனின் மக்களாகப் பிறந்தோம். அப்பிறவியில் அந்தணன் ஒருவனின் சூழ்ச்சியால் இருவரும் இறந்தோம். மீண்டும் சிவபெருமான் அருளால் தாதி ஒருத்தியின் வயிற்றில் நட்டுவர்களாகப் பிறந்து இசையில் பெருமையடைந்தோம். முற்பிறவியில் தங்களைக் கொன்ற அந்தணனை அறியும் வாய்ப்பினைப் பெற்றோம். அப்பிறவியைக் கடந்து செம்பியன் மக்களாகப் பிறவியெடுத்தோம் எங்கள் அழி செயலால் செம்பியன் கோபம் கொண்டு எங்க்ளைக் காட்டிலே விட்டுவிட்டான். அப்பிறவியைத் தொலைத்து, கயிலை சென்று இறைவனை வணங்கி வரம் பெற்றுத் திரும்புகிறோம். முனிவர் ஒருவரின் சாபத்தால் தாங்கள் எடுத்த பிறவிகளைக் கூறிய நீலனைப் பார்த்து, நீலன் கற்ற நடனக்கலையைத் தங்கள் முன் நடத்திக் காட்டுமாறு பணிக்கிறார் திருமால்.

இறைவன் கட்டளைப்படி அணிமணிகளால், தன்னை அலங்கரித்துக் கொண்டு 18 வகையான நடனக் கலையையும் நடத்திக் காட்டுகிறான் நீலன். திருமாலும் கண்டு களிக்கிறார். இவ்வாறே சிவபெருமான், பிரம்மதேவன் ஆகியோரின் இருப்பிடங்களை அடைந்து அவர்கள் விருப்பப்படி நடனமாடி, வரங்கள் பலவற்றைப் பெறுகிறான் மும்மூர்த்திகளிடமும் தாம் விரும்பிய வரங்களைப் பெற்ற நீலனும் நீலியும் அவர்களால் அளிக்கப்பட்ட குதிரையிலும் பல்லக்கிலுமாக புறப்பட்டு, வைகை நாடு, பழகை, குமரி ஆகியவற்றைச் சுற்றி வருகின்றனர். இப்பூவுலகில் காளிகாதேவியை வணங்கி அவள் அருளையும் பெறுகின்றனர். தாங்கள் பெற்ற வரத்தின் மகிமையோடு நாட்டின் முச்சந்திகளில் குடியிருக்கும் பேற்றைப் பெற்று அவ்வாறே முச்சந்திகளில் கடவுளர்களாக நிலைபெறுகின்றனர். நாட்டில் ஒவ்வொரு குடியும் தன் அருளைப் பெற்று விளங்குமாறு, வீற்றிருந்த நீலன் ஆளடியான் என்றும், நீலதெய்வம் என்றும் மக்களால் போற்றப்பட்டு அருள்புரிந்து வருகிறார்.

இக்கதையை எழுதி வைத்தோரும், பாடினோரும், பாடக்கேட்டோருமாகிய மக்கள் அனைவரும் நீலதெய்வத்தின் அருளைப்பெற்று நீடூழி வாழ்வார்களாக என்று கூறி நூலை முடிக்கிறார் ஆசிரியர்.

இறுதியில் விநாயகன், சிவபெருமான், திருமால், முருகன் ஆகியோரை வணங்கிக் கும்மிப் பாடல்களைப் பாடி வாழ்த்தி வணங்குகிறார் ஆசிரியர். நீலதெய்வத்தின் சிறப்புக்களைக் கூறி நீலதெய்வத்தையும் கும்மிப் பாடலால் வணங்கி வாழ்த்துகிறார்.

பா அமைப்பு

நீல சுவாமிகதை பலவிதமான யாப்புகளுடன் அமைந்துள்ளது. விருத்தம், கும்பி (சிந்து), தந்தனானா கீர்த்தனை, நடை ஆகிய அமைப்புகள் காணப்படுகின்றன. விருத்தம் 6, கும்மி 3, தந்தனானா 1, கீர்த்தனை 3, நடை 9 ஆக மொத்தம் 22 பாடல்கள் உள்ளன.

அடிவரையறை

சராசரி 2000 அடிகள் கொண்ட கதைப்பாடல்களே உண்டு என்பர். ஆனால் 30000 அடிகள் கொண்ட மகாபாரத அம்மானை மிகப்பெரிய கதைப்பாடலாகக் கருதப்படுகிறது.[1] நீலசுவாமிகதையில் 1972 அடிகள் உள்ளன.

கதைப்பாடலின் மரபுகள்

மரியாலீச் என்பவர் கதைப்பாடலின் மரபுகளாக 5 கூறுவர்

1. கதைப்பாடல் வாய்மொழியாக வழங்கப்படுவது.
2. பாட்டாகப் பாடப்படுவது
3. பொருளாலும், நடையாலும், பெயராலும் மக்களுக்கே உரியது
4. சிறுகதைகளில் காணப்படுவதைப் போன்று தனிச்சம்பவத்தைப் பிரதிபலிப்பது.
5. நாடக உத்தி அமைந்து காணப்படுவது என்பர்.[2]

ஆயினும், ஊர்கள், மலைகள், ஆறுகள், சுனைகள், நாடுகள் ஆகியவற்றை அடுக்கிச் சொல்வதும் கதைப்பாடல் மரபில் ஒன்றாகக் காணப்படுகிறது. கதைப்பாடலில் தலைவன் தலைவியரின் பிறப்பின் அருமை கூறுவதாக, அவர்களின் பெற்றோர் பல்வேறு தலங்களுக்குச் சென்று குழந்தை வரம் கிடைத்ததாகவும் அமைவதுண்டு

---

1. சு சண்முக சுந்தரம், நாட்டுப்புறஇயல் பக் 275

2. The standard dictionary of folklore, mythology and legend p.106.

நீலசுவாமி கதையில், நீலனும் நீலியும் செம்பிய மன்னன் சிவனை வேண்டியதால் குழந்தைகளாகப் பிறக்கின்றனர். அவர்களின் பக்தியைச் சோதிக்கும் வகையில் பேய்களாக இரவில் திரிகின்றனர்

நீலசுவாமி கதையால் அறியப்படும் செய்திகள்

கதைப்பாடல்களின் மூலம் கலைகள், இயற்கை இகந்த நிகழ்வுகள், மக்களின் நம்பிக்கைகள், பழக்கவழக்கங்கள், ஆடை ஆபரணங்கள், பயன்படுத்திய இசைக்கருவிகள், அவ்வக்கால வட்டார பேச்சு வழக்குகள், சொல்லாட்சிகள், ஊர்ப்பெயர்கள், ஆறுகள் ஆகிய அனைத்தையும் அறியலாம். இவ்வாறே நீலசுவாமி கதையிலிருந்தும் பல செய்திகளைத் தெரிந்து கொள்ள முடிகிறது

கலைகள்

மனிதர்கள் மட்டுமன்றி இறைவர்களும், தேவர்களும், தேவகன்னியர்களும் தானவர், தவத்தியர், முனிவர்கள் ஆகிய அனைவருமே நடனக்கலையில் ஆர்வம் உடையவர்கள் என்பது சிவன், திருமால் முன்பு நீலன் ஆடிய நடனத்தைக் கண்டு ரசித்ததன் மூலம் புலனாகிறது.

நடனம் ஆடும் முன்பு திரைச் சீலை கட்டும் வழக்கம் இருந்திருக்கிறது. நடனம் ஆடுபவர் ப்ல்வேறு ஆடை ஆபரணங்களால் தங்களை ஒப்பனை செய்து கொண்டமையும் கத்தூரி, களபம், புனுகு போன்ற வாசனைப் பொருள்களைப் பயன்படுத்தியுள்ளமையும் தெரிகிறது. பம்பை, மத்தளம் கிடுபிடி, வீணை, கின்னரம், சீங்குழல், மல்லாரி, சங்கு, முதலான இசைக்கருவிகளைப் பயன்படுத்தித் தாளத்திற்கேற்றபடி நடனம் ஆடியமையும் புலனாகிறது.

கண்ணுருட்ட நீலதெய்வம் காதாட்ட நீலதெய்வம் என்ற வரியிலிருந்து கண், காது போன்ற உறுப்புகளின் அசைவுகளின் மூலம் தங்கள் திறமையை வெளிப்படுத்தியுள்ளமை தெளிவாகிறது நடனத்திற்கேற்ற பரிசுப்பொருளாக எதைக் கொடுப்பது என்று புரியாமல் சிவன், நாரதரையும் முனிவர்களையும் கலந்து ஆலோசிக்கிறார் மன்னன் தன்னால் முடிவெடுக்க முடியாத நிலையில் அமைச்சர்களையும், அவையிலுள்ளவர்களையும் கலந்து ஆலோசிப்பது போல சிவனும் நீலனின் நடனத்திறமையைக் கண்டு வியந்து விவாதிக்கிறார். பின்னர் நீலன் விரும்பிக் கேட்ட வரங்களைக் கொடுத்து அருள்புரிவதானது தன்னைச் சரணாகதி அடைந்தவர்களுக்கு இறைவன் எதையும் வாரி வழங்குவான் என்ற பேருண்மையைப் புலப்படுத்துகிறது. இன்னும் ஓர் வரம், இன்னும் ஓர் வரம் என்று நீலன் மீண்டும் மீண்டும் கேட்பது படிக்கின்ற போதே ஆர்வத்தையும்

வெறுப்பையும் ஒருங்கே விளைவிக்கிறது. ஆனால் சிவபெருமான் பொறுமையாகக் கேட்டு அனைத்து வரங்களையும் நீலனுக்குக் கொடுத்து அருள்புரிகிறார்.

இயற்கை இகந்த நிகழ்ச்சி

வாய்பேசா மிருகமெல்லாம் நீலன் வந்த காரணத்தைக் கேட்டு வணங்குகின்றன; உலக இயல்பினை நீலன் கூறுகிறான். ஐந்தறிவு படைத்த மிருகங்களின் வினாவும், அவற்றிற்கு நீலன் உலக இயல்பினைக் கூறுவதும் இயற்கை இகந்த கற்பனையாக உள்ளது.

எழுபிறவிக் கொள்கை

பல்பனாபப்பெருமாள், வணங்கிய நீலராசனிடம் பிறந்த காரணங்கேட்க நீலன் தனது பிறப்பைக் கூறுகிறான்.

ஒருமையுள் ஆமைபோல் ஐந்தடங்கல் ஆற்றின்
எழுமையும் ஏமாப் புடைத்து. (குறள் 13 : 6)

ஒருமைக்கண் தான்கற்ற கல்வி ஒருவற்கு
எழுமையும் ஏமாப் புடைத்து. (குறள் 40 : 8)

என்று வள்ளுவர் குறிப்பிட்ட எழுபிறவிக் கொள்கையை நீலசுவாமி கதை உறுதிப்படுத்துகிறது.

மக்களைப்பற்றிய செய்திகள் இல்லாமை

இயற்கையின் வரவேற்பு, கன்னியர் குரவைபாடி வரவேற்கும் வரவேற்பு, பெண்கள் ஆரத்தி எடுத்துக் கும்மியடித்தல், நாட்டுவள்ங்கள், மலை வளங்கள் ஆகியவை பலபட எடுத்துக் காட்டப்பட்டுள்ளதேயன்றி நாட்டு மக்களைப்பற்றிய செய்திகள் எதுவும் இடம்பெறவில்லை. பெண்கள் மட்டுமே வருணிக்கப்படுகின்றனர். நாராயணனாகவும், நீலகண்டனாகவும், பேயோடு ஆடும் பெருமானாகவும்,தெய்வபிரமனாகவும் பார்ப்பதோடு நீலசுவாமியையே தெய்வமாகவும் கண்டு ஐயுறுகின்றனர். இது பரவைநாச்சியார் சுந்தரரைப்பார்த்து ஐயுறும் காப்பிய நிலையோடு ஒப்புநோக்கத்தக்கதாக உள்ளது. பெருமாள் நீலன் வந்த காரணத்தைக் கேட்கும் போது தென்பழகை மாநகரையும், தென்னாட்டுத்திருத்தலங்களையும், மலைவளப்பங்களையும் காணவந்ததாகக் கூறுகிறான். அப்போதுகூட தென்பழகை மக்களைப் பற்றிய செய்திகள் இல்லை. மன்னனைப் பற்றிய செய்தியும் இல்லை. இதற்கான காரணம் விளங்கவில்லை ' சோழ, சேரநாட்டு வளங்கள் காட்டப்பட்டுள்ளன.

ஆடை

நீலன் நடனம் ஆடும் முன்பு தலைப்பாகை, பட்டுச்சட்டை, சல்லடம் அரைக்கச்சை ஆகியவற்றை அணிவதாகக் காட்டப்பட்டுள்ளது.

பெண்கள் துப்பட்டி, சேலை, சித்தாடை, கண்டாங்கி, போன்றவற்றை உடுத்தினர் எனத் தெரிகிறது.

ஆபரணம்

நீலசுவாமி கதையில் நீலன் நடனம் ஆடும் போது அணிந்து கொண்ட ஆபரணவகைகளாக, மோதிரம், முத்துத்தாவடம், கால்மணி, உள்கெட்டுத்தாவடம், ஒய்யவி தொங்கல், வீரதண்டை, முத்துவடம் தக்கு, சிலம்பு, பொன்னால் செய்யப்பட்ட அரைஞான் கயிறு போன்றன கூறப்பட்டுள்ளன. நடனமாடிய நீலனுக்குப், பரிசுப்பொருள்களாக மோகனமாலை, சரப்பணி, அரவுமணி, மாணிக்கங்கள் வயிடூரியம் பதித்த ஆபரணங்கள் ஆகியவற்றைக் கொடுக்கலாமா என்று சிவன் கேட்கிறார்.

மேலும் பெண்கள் பாம்படம், பீலிமயிலடி, தண்டட்டி ஐம்பொன்வடம், தண்டைக்கால் மோதிரம், வளையல் ஆகியவற்றை அணிந்தனர் என்றும் தெரிகிறது.

இசைக்கருவிகள்

மத்தாளம், கைமணி, கிடுபிடி, மகுடம், தப்பு, மோதாரி, வீராணம், பம்பை, வீணை, கொட்டு, கின்னரம், சீங்குழல், மல்லாரி, சங்கு, பேக்காளம், முதகைமணி, முரசு, தாரை போன்ற இசைக்கருவிகள் இடம்பெற்றுள்ளன.

மரவகைகள்

செஞ்சந்தனம், வாழை, புன்னை, அத்தி, கல்லத்தி, தேக்கு, செண்பகம், வேங்கை, அரசனி, பாலை, வெப்பாலை, உழுவை, ஆளி, வேம்பு, நெல்லி, மஞ்சாடி, ஓதகத்தி, மயிலை, உளுக்கு, பிலா, மா, மருதாசணி, முள்ளிலுப்பை வன்னி, பனை, கூந்தப்பனை, எலுமிச்சை, நாரத்தை இலவங்கம், கமுகு, மூங்கில் போன்றன காட்டப்பட்டுள்ளன.

வாசனைப் பொருள்கள்

கத்தூரி, களபம், புனுகு, அத்தர், சந்தனம் இடம்பெற்றுள்ளன.

பறவை

அன்னம், குருவினம், தாரா, நாகணவாய்ப்புள், குயில், கழுகு, மயில் போன்ற பறவை இனங்களும் அறியப்படுகின்றன.

விலங்குகள்

கடுவாய், வரிப்புலி, சடப்புலி, மதகரி, ஆடு, புள்ளிமான், கருநாகம், பன்றி, முயல், காட்டானை, கரடி, புலி, புல்வாய், ஆளி, சிங்கம், கலைமிளா, கடமான், புற்றில் வாழும் அரவம் ஆகிய விலங்குகளும் அறியப்படுகின்றன.

உலாவருதல்

தெய்வப் புரவியில் பூவுலகு வந்து மலை, ஆறு, அருவி, நாடு, சோலை, சுனைகளைக் கடந்து வருவதும் சுனையில் நீராடும் பெண்கள் நீலனைப் பார்த்து மையல் கொள்வதுமாகிய உலா நிகழ்ச்சிகள், இலக்கித்தில் பாட்டுடைத்தலைவன் வீதிஉலா வருவதும் அவனைக் கண்ட ஏழு பருவ மங்கையரும் காதல் கொள்வதுமாகிய நிகழ்ச்சிகளை நினைவூட்டுகின்றன. நீலன்ன மயக்கி மருந்திடுவோம் என்று ஒருத்தி கூற மற்றொருத்தி, கயிலாய மலைக்குச் சென்று வந்தவன், நமன்கணக்கு அறிந்தவன், சிவன், மால் மகிழும்படி நடனம் ஆடிப் பரிசுப்பொருள் பெற்றவன், இறப்பு என்பதேஅறியாதவன், உபதேசங்கள் பெற்றவன், மந்திரங்கள் கற்றவன், பல வரங்கள் பெற்றவன், தென்னாடு வடநாடு மட்டுமன்றி உலகங்களையும், அவற்றின் மலைவளப்பங்களையும் அறிந்தவன், அனைத்துப் பொருள்களிலும் கலந்திருப்பவன், சாஸ்திரங்கள், லக்கனங்கள் அனைத்தும் கற்றவன் திண்புயத்தான் என்றெல்லாம் கூறுவதானது தன்னிகரில்லாத் தலைவனுக்குரிய சிறப்புகளைப் பெற்றவன் நீலன் என்பதை எடுத்துக்காட்டிவிடுகிறது.

பின்னோக்கு உத்தி

குடமாடு மலையினைக் கடந்து தென்பழகை வரும்போது நீலனும், நீலியும் பழகையின் பழமையை நினைக்கின்றனர். பழகைநகர் முன்பிருந்த வளங்களையும், தங்களால் அழிக்கப்பட்ட நிலையையும், மீண்டும் சிறப்படைந்த நிலையையும் நினைத்துப் பார்க்குமிடத்தில் பின்னோக்கு உத்தி கையாளப்பட்டுள்ளது.

முரண்பாடுகள்

தவம் செய்து கயிலை சென்று வரம்பெற்று வந்த நீலன் தன்னை வணங்கிச் சென்ற மிருகங்களைப் பார்த்ததும் முன்பு செய்த கொலைத்தொழில்

நினைவுவர மிருகங்களை வேட்டையாடிப் பேய், பூதம், கூளிகளுக்கும் விருந்திடுவது முன்னுக்குப் பின் முரணாக உள்ளது. இறுதியில் காளிகாதேவியைச் சென்று நீலன் வணங்கும்போதும், காளி, நீலன் உயர்ந்த குடியாகிய சோழர்குலத்தில் தோன்றியவன் திறமைவாய்ந்தவன், வாக்குத் தவறாத பேரன்புடையவன், பாவச் செயல் செய்யாமல் மேலுலகப் பேறு பெற்றவன் என்று கூறுகிறாள். அரச குலத்தில் பிறந்து பேய்த்தன்மை கொண்டு மிருகங்களை வேட்டையாடி தவமிருந்து சிவனிடம் அனைத்து வரங்களையும் பெற்றுத் திருந்திய நிலையில் நீலசுவாமியாக, நீலதம்புரானாக வரும் தெய்வகுல நீலன் மீண்டும் மிருகங்களை வேட்டையாடுகிறார். வேட்டையாடி, மிருகங்களின் கழுத்தை நெறித்துக் குருதியுண்டு பசியாறி வரும் நீலசுவாமியைப் பார்த்துக் காளி, பாவச்செயல் செய்யாமல் மேலுலகப் பேறுபெற்றவன் என்பது பொருத்தமுடையதாக இல்லை.

இராமாயணக் கருத்து

நீலனும் நீலியும் தென்பழகைக்கு வரும் போது தங்களால் தென்பழகை நகர் அழிக்கப்பட்டதை நினைத்துப் பார்த்துச் சொல்லும் போது, இலங்கா புரியைப் போல் அழித்துத் தீவைத்ததாகக் கூறுகின்றனர். (8-39)

பலம்பெரிய அனுமானும் பெருமாளுக் காகவல்லோ
நிலங்கிரியை விட்டெறிந்த நீதியுள்ள மலைநாடு
மருந்துவாழ் மலதனிலே வடிவழகன் நீலராசன்

(8-78, 79, 80)

பெருமாளுக்காக, பலமிக்க அனுமான் சஞ்சீவி மலையையே கொண்டு வந்த செய்தி கூறப்பட்டுள்ளது. இங்கு கூறப்பட்டுள்ள மருந்துவாழ் மலை என்பது சஞ்சீவி மலையாக இருக்கலாம். சீதையைச் சிறைவைத்த இராவணனை வெல்வதற்காக இராமன் அனுமனை அனுப்பி எண்ணூறு காதவழிப் பரப்புள்ள இலங்கையை எரித்தான் என்னும் செய்தியும், இராமன் பத்துத் தலைகளையுடைய இராவணனை அழித்து உலகைக் காத்தான் என்னும் செய்தியும், நீலன் வீமனாகப் பிறந்தபோது நீலி சூர்ப்பனகையாகப் பிறந்தாள் என்னும் செய்தியும் இராமாயணக் கருத்துக்களாக நூலுள் இடம்பெறுவன.

பாரதக் கருத்து

திருமாலைத் துணையாகக் கொண்டு பாண்டவர்கள் வனவாசத்தினை மேற்கொண்ட குருநாட்டு மலையினை நீலன் கடந்து வருகிறான் என்பதும், துரோபதையால் பெரும்பகையைத் தழுவிய பஞ்சவர் ஐவரில் ஒருவனும் வலிமைமிக்கவனுமாகிய வீமனாகப் பிறந்தவனே நீலன் என்பதுமாகிய நூல்செய்திகள் பாரதக் கதையோடு தொடர்புடையவை.

சிலம்புச் செய்தி

கண்ணகி மதுரையை எரித்தபோது இறைவன் அருளால் பாண்டியனின் அங்குசத்தை வாழவைத்தவர்கள் மதுரையில் கூத்துவராகப் பிறந்த நீலனும் நீலியுமாவர் என்னும் சிலம்புச் செய்தியையும் உள்ளடக்கியுள்ளது.

திருமாலின் பெருமைகள்

காலிநிரை மேய்த்தவன் கண்ணன்; காயாம்பு மேனி நிறத்தவன்; உறியிலிருந்து வெண்ணெய், தயிர், பால் திருடி உண்டவன்; பாம்பணையில் தெற்கு வடக்காகப் பள்ளி கொண்டவன்; பஞ்சவரை ஈடேற்றிப் பாரதப் போர் முடித்த வள்ளல்; அசுரர்களை வென்று ஆலிலையில் துயில் கொண்டவன்; இவ்வுலகை மூன்றடியால் அளந்து மாவலியைச் சிறையில் வைத்தவன்; அரி என்ற நாமத்தையும் நினைக்காமல் சிவனையும் வணங்காமலிருந்த இரணியனைப் பிளந்தவன்; பரசுராமனை வென்றவன்; கல்லைப் பெண்ணாக்கிக் கடலை அடைத்தவன்; விதுரனின் வில்லை முறித்தவன் என்பன போன்ற சிறப்பு அடைகள் பல திருமாலின் பெருமைகளைப் பறைசாற்றுபவையாக உள்ளன.

சிவனைப் பற்றிய செய்திகள்

கயிலாய மலையில் உமையுடன் வீற்றிருப்பவன்; காலனைக் காலால் உதைத்து மார்க்கண்டேயனைக் காத்தவன்; திரிபுரமெரித்தவன்; அடிமுடி காணாது தேவர்களால் வணங்கப்பெற்றவன்; பிரமனின் மண்டையோட்டில் பிச்சை எடுத்தவன்; கண்ணப்பரின் எச்சிலை உண்டவன்; கல்லுக்குள் வசிக்கும் தேரைக்கும் படியளப்பவன் என்பன போன்ற சிவபெருமானைப் பற்றிய செய்திகளையும் இந்நூல் உள்ளடக்கியதாகத் திகழ்கிறது.

நீலனின் அழகும் உயர்வும்

முனிவர்களே மயங்குமாறு திருமால் மோகினி வடிவம் எடுத்தது போலிருந்தது நீலனின் நடன அலங்காரம். திரிபுரமெரித்த சிவனும், திருமாலும், முருகனுமாய் வந்தவன் நீலன். எனவே அனைவரும் அவனை வரவேற்கிறார்கள் என்னும் நூல் செய்திகள் நீலனின் அழகையும், பெருமையையும் உணர்த்துவன.

சமய ஒற்றுமை

நீலன் சிவன், திருமாலை வணங்கி, அவர்களின் முன்பு ஆடிய நடனங்களைப் பார்க்கும் போது சமய ஒற்றுமை புலனாகிறது.

உவமை

அவையடக்கப் பகுதி உவமைகளால் அலங்கரிக்கப்பட்டுள்ளது. கதையினூடேயும் ஆங்காங்கே உவமைகள் கையாளப்பட்டுள்ளன.

நீலனின் மேனியழகைக் கூறும்போது
'பூலோகச் சந்திரன்போல் பொன்மேனி தானிலங்க'

என்றும், அரையில் கட்டியிருந்த அரைஞாண்கயிறைப் பற்றிக் கூறும்போது 'திருவரயில் பொன்னரஞாண் செங்கதிரோன் உதித்தாற்போல்' என்றும் தேவர், கன்னியர், தானவர், போன்றோர் நீலனின் திருநடனத்தைகண்டு களித்ததை,

'கவினுருகிக் கடைந்திடு பொன்னுருகி னாபோல
காவலன் நீலன் திருநடனம் கண்டார்'

என்ற வரிகளும் உணர்த்துகின்றன.

'மாமயில் போலே நிறத்தழகி
மங்கை நல்லா ளெங்கள் நீலியம்மை
பூமயில் போலே நிறத்தாளை
போற்றிக் கும்மி அடிப்போமடி'

மயில் போன்ற நீல நிறத்தை உடையவளா நீலி அல்லது உயர்வு நவிற்சிக்காகக் கூறப்பட்டுள்ளதா என்பது தெரியவில்லை.

அடுக்கியல் முறை

ஒரே பொருள் தரும் சொல் மீண்டும் மீண்டும் கூறப்படுவதே அடுக்கியல் முறையாகும்.

நீலராசனைப் பற்றிக் கூறும் போது,

'வன்னமுள்ள நீலராசன் ராசன்தெய்வ ராசன்'

என்றும், 'நீலன் பிறப்பைக் கூறும் போது,

'சொல்லக்கேளும் சிவன்முதலே நீலன்பிறந் திறந்த
சொல்பெரிய நீலன்முப் பிறப்பெல்லாம் தொலையாது
சொல்லைக் கேளுமக தேவரே யின்று
சொல்பெரிய நீலன் முப்பிறப் பெல்லாம்'

என்றும் கூறப்பட்டுள்ளது. மேலும் நீலன் இறைவனிடம் வரம் கேட்கும் போது,

இன்னம் ஒருவரம் எந்தனுக்குத் தரவேணும்
எந்தன் தம்புரானே இறையவனே மகதேவா
பொன்னய னேவரம் என்னயனே தரவேணும்

என்று இறைவனை, தம்புரான், இறையவன், மகதேவர், பொன்னயன், என்ஐயன் என்று அடுக்கிச் சொல்லப்பட்டுள்ளது.

தாளம்

தாள வகைகளாக,

'தொந்தோம் திமிதிமிதோம்
தத்தலாங்கு தித்திதிமிதிமி'
'தொந்தோ திமிதிமி தெய்
தத்தலாங்கு திமிதிமி தோம்'
'தகுதிகு திகு
தத்தி திமிதிமி தெந்தோம்
தத்தரி கிடதக தரகிறு திதா'
'தித்திதித்தி திமிதெய்
தரிகிட தோம்'

போன்றவை இடம் பெற்றுள்ளன.

வருணனைகள்

மலைவளப்பத்தைக் கூறும் போது வருணனைகள் சிறப்புற அமைந்துள்ளன.

'குப்பமிட்ட கூட்டமாய்ச் சோலை வழியாகக்
குற்றமில்லா நீலராசன் மெத்தமன மகிழ்ந்து
வாழைவன முஞ்சுனையும் கான்யாறும் விட்டு
மாரிபொழி யும்மலையில் மேகம் சிறந்தோட
பாக்கு விரிய கமுகுப்பூ குலைசரிய
பய்யப் பரிவண்டு பறந்து மணங்களுண்ண

என்பன போன்ற வருணனைகள் பல நூலுள் இடம்பெறுகின்றன.

'அன்னங்கள் ஓலமிட அருவாயில் குயில்கூவ
நீலன்தன்னைக் கண்டவுடன் நின்மலையில் மிருகமெல்லாம்
கோலமுடன் மயிலாடக் குயில்கூடிக் குரவையிட'

என்பன போன்ற பல வருணன்னைத் தொடர்கள் இடம் பெற்றுள்ளன.

நீலனும் நீலியும் செல்லும் வழிகளாகக் குறிப்பிடும் போது பல ஊர்க்ளின் பெயர்கள் சுட்டப்படுகின்றன. இவை இன்றைய வழித்தடங்களோடு ஒப்பிடப் பொருத்தமாக உள்ளன. இதேபோல ஆறுகள் பலவும், மலைகளும், காடுகளுமாகிய இடங்கள் பலவும் முறையாகச் சுட்டப்படுகின்றன. இவையும் நீலனும் நீலியும் சென்ற வழித்தடத்தை எடுத்துக்காட்டுகின்றன.

சபரிமலைக்குப் பக்கத்தில் நீலிமலை என்ற மலை உள்ளது .... நீலி மலை ஏத்தத்தில் கண்டுள்ளதென்ற காட்டு மனுஷர் வரலாறு என்ற செய்தி அரசினர் கீழ்த்திசைச் சுவடிகள் நூலகத்திலுள்ள மெக்கன்சி D. 3946ம் எண்ணில் உள்ளது.

அணங்கு, கானமர்செல்வி, சூரர்மகள், சூலி, பாவை போன்ற பெயர்களையுடைய, பெண்தெய்வங்கள் தமிழர்தம் வழிபாட்டிற்குரியனவாக இருந்துள்ளன. இதேபோன்று சிலப்பதிகார காலத்துப் பூங்கண் இயக்கியும், மணிமேகலை காலத்துக் கந்திற்பாவை, சம்பாபதி சிந்தாதேவி போன்றவர்களும் பெண் தெய்வங்களாக விளங்கியுள்ளனர் இத்தகு பெண்தெய்வ வழிபாட்டுவழியிலேயே நீலி வழிபாடும் தென்னகத்துத் தோன்றியுள்ளது. பெண்தெய்வவழிபாடு மட்டுமன்றி ஆண் தெய்வவழிபாட்டையும் மேற்கொள்ளும் வகையில் நீலியின் உடன்பிறப்பாகிய நீலனும் வழிபாட்டிற்குரியவனாக ஏற்றுக் கொள்ளப்படுகிறான். இந்த அடிப்படையில் நீலசுவாமிகதை உருவாகியுள்ளது.

வழிபாட்டிற்குரிய பெருமை பெற்றவர்கள் நீலனும் நீலியும் என்னும் கருத்தை நிலைநிறுத்தி இக்கொள்கைகளை மக்கள் ஏற்று நீலன் - நீலி வழிபாட்டை ஏற்க வேண்டும் என்ற பெருநோக்கில் மக்களிடையே பாடப்பட்டு வந்தது இக்கதைப்பாடல்.

வழிபாட்டிற்குரிய பெருமைகளைப் பெற்றவர்கள் என்பதை உணர்த்த மும்மூர்த்திகளையுங் கண்டு அவர்களிடம் வேண்டும் வரம் பெற்றார்கள் என்னும் செய்திகள் பலபட பாடலுள் எடுத்துக் காட்டப்படுகின்றன.

இயல்பாகவே வழிபாட்டிற்குரிய திறம் பெற்றவர்கள் என்பதை மக்களிடையே நிலைக்கச் செய்வன பாடலுள் இடம் பெறும் - நீலன் நீலியரின்

இயற்கைத் தோற்றம், ஆடையணிச்சிறப்பு நடனக்கலையின் தேர்ச்சி போன்ற செய்திகள். மக்களிடையே நீலன் - நீலிகதையை ஒரு வரலாற்றுச் செய்தியாக அமைத்து, அவர்கள் சென்ற பல நாடு நகரங்களையும், காடு, மலை, ஆறுகளையும் இயல்பாகவே புகுத்திக் காட்டியுள்ள திறம் முழுக்க முழுக்க ஆசிரியரைச் சார்ந்தது

நீலசுவாமி கதை என்னும் இக்கதைப்பாடல் வழிபாட்டுக்கதையாக மட்டுமன்றி ஒரு வரலாற்றுப் பாடலாகவும் கொள்ளுந்தகுதி பெற்றது.

ஒப்பாய்வு

தமிழில் காணப்படும் நீலிகதைகளில் ஆங்காங்கே சில வேறுபாடுகள் காணப்படுகின்றன. அவை வருமாறு:

நீலிகதை (தமிழ் வில்லுப்பாட்டுகள்)

இலட்சுமி எனும் கணிகையை அவள் ஆசை நாயகனான வேதியன் கொலைசெய்து விடுகிறான். அவளது நகைகளைக் கவர்ந்து செல்கையில் அரவம் தீண்டி இறக்கிறான். கணிகையின் முடிவுகண்டு கதறிய அவள் அண்ணன், தானும் தற்கொலைசெய்து மடிகிறான். இந்த நேரத்தில், சோழமாதேவி கோவிலில் பிள்ளைவரம் வேண்டித் தவம் செய்கிறாள். தவத்திலிருந்த சாமத்தில் நல்ல நேரத்தில் கனவு காண்கிறாள்.

'முள்ளெலியை ஒருபாம்பு
முடுக்கிவரக் கனவுகண்டாள்
வெள்ளாடு தன்னைதின்ன
வெருகுவரக் கண்டாளே
பூனைதன்னை விரட்டியல்லோ
பெருச்சாளி வரவும்கண்டாள்
கூடப்பிறந்ததோர் பிள்ளைக்குத்தான்
கொங்கைப்பால் பற்றாமல்
மடுவறுத்து பால்குடிக்க
மங்கையவள் கனவுகண்டாள்.'

என்ற வரிகள் முன்உணர்த்தும் உத்தியாகக் கனவு மூலம் காட்டப்படுவது, கேட்பவர், படிப்பவர் நெஞ்சங்களில் ஒரு ஆர்வத்தை, எதிர்பார்ப்பை உண்டாக்குகின்றன. மேலும், தவம் மேற்கொண்ட சோழமாதேவியின் கனவு நினைவாகிறது. கணிகையும், அவள் அண்ணனும் சோழமாதேவியின்

குழந்தைகளாகப் பிறக்கின்றனர். வேதியன் வணிகர் மகனாகப் பிறக்கிறான். சாதாரணக் குடும்பங்களிலேயே குழந்தை பிறந்ததும் ஜாதகம் கணிப்பது நடைமுறையில் உள்ளது. தவம் புரிந்து பெற்ற அரச வாரிசுகளான குழந்தைகளின் ஜாதகத்தை அறிய ஜோதிடர் வரவழைக்கப்படுகிறார்.

அரண்மனையில் இருந்ததானால்
அரசாங்கம் அழிவதாகும்
நாட்டில் உள்ள ஆடுமாடு
நமக்குப் பால்தான் கொடுக்காது
மாடுகளும் ஆடுகளும்
மக்களாலே அழிவாகும்
அரண்மனையில் வைக்காது
அடந்தவனம் வைத்தால் நன்மை

என்ற ஜோதிடரின் கூற்றைக் கேட்ட மன்னன், சோதிடரைப் பார்த்து,

பாலர்கள்தான் குற்றம் செய்தால்
பாங்கிணத்தில் தள்ளலாமா
பிள்ளைகள்தான் குற்றம் செய்தால்
பெற்றோர்கள் கொல்வாரோ
மண்டையதில் சிலந்திவந்தால்
மண்வாரி கொட்டலாமோ
விதிப்பயனும் யாரையும்தான்
விட்டிடுமோ சோதிடரே

என்று வினவுகிறான். தங்கத் தொட்டிலில் தூங்கிக் கொண்டிருந்த தங்கை அண்ணனை எழுப்பி, பசியெடுப்பதாகக் கூறுகிறாள். எருமைகளையும், பசுக்களையும் கொன்று தின்று வருகிறார்கள். மூன்றாம் நாள் உண்மையை அறிந்த மன்னன் சேவகர்களிடம் குழந்தைகளை அடர்ந்தவனத்தில் விடச் சொல்கிறான்.

நீலியட்சகானத்தில், சிவக்கியானி, நவக்கியானி இருவரும் பேய்களாகத் திரிகின்றனர். மக்கள் தலைவன் புரிசைக்கிழான் பிள்ளை வரம் வேண்ட, அண்ணன் தங்கையாகப் பிறக்கச் செய்கிறான் இறைவன். இரவில் பிசாசுகளாக பிணம், ஆடு போன்றவற்றைத் தின்ன, ஆடுகளை இழந்தவர்கள் புரிசைக் கிழானிடம் முறையிடுகின்றனர். உண்மையறிந்த புரிசைக்கிழான் இறைவனின் ஆலயத்தில் குழந்தைகளை விட்டுவிடுவதாகக் கூறப்பட்டுள்ளது.

இதுவே, ஸ்ரீ நீலி பராக்கிரமம் அல்லது வேளாளர் தீக்குளித்தல் என்னும் தலைப்பில் எம். எஸ். சுப்பிரமணிய ஐயர் அவர்களால் பின்வருமாறு கூறப்பட்டுள்ளது.

விதேகன் என்ற வேதியனுக்கு இரண்டு மனைவியர் இருக்கின்றனர். மூத்தவள் நவஞானியையும் அவள் மகனையும் வெறுத்த விதேகன் அவர்களைக் கொன்றுவிடுகிறான். நவஞானி பழிவாங்க நினைக்கிறாள்.

திருவாலங்காட்டில் புரிசைகிழான் என்னும் பூசுரனின் மகளாகப் பிறக்கிறாள். அவளது தோற்றம் கண்டு அஞ்சி வீட்டை விட்டுப் போகச் சொல்கிறான் புரிசைகிழான். அதற்கு, நான் பேய்தான், பழிவாங்க வந்துள்ளேன் என அங்கும் இங்கும் திரிந்ததாகக் காட்டப்பட்டுள்ளது.

நீலசுவாமி கதை

நீலன் தவமிருக்கும்போது, நீலனின் தவத்தைக் கண்ட சிவன், உமையிடம் தவம் செய்வது யாரென்று கேட்க உமை நீலனைப்பற்றிச் சொல்லத் தொடங்குகிறாள்.

பிள்ளைவரம் வேண்டித் தவம் செய்த சோழனின் பக்தியைச் சோதிக்கும் வகையில், இறைவனின் ஆணைப்படி பிள்ளைகள் இரண்டும் இரவில் பேய்வடிவில் மிருகங்களை வேட்டையாடிக் கொலை செய்கின்றன. உண்மையறிந்த மன்னன், மனம்வருந்தி தலையாரிமார்களிடம் சொல்லிப் பிள்ளை இரண்டையும் காட்டில் விடச் சொல்ல அவர்கள் காட்டில் வேப்பமரத்தடியில் கொண்டு போய்விட்டதாகக் கதைசெல்கிறது.

வில்லுப்பாட்டில் நீலன்

அடர்ந்த வனத்தில்விட்ட பிள்ளைகள் இரண்டு வடிவம் மாறி மாயரூப்மாய் நீலனும் நீலியுமாக வாழ்ந்தனர். நீலன் ஒரு வேப்பமரத்தில் தங்கியிருக்க, அந்த மரத்தைப் பழகைநல்லூர் கோவில் கொடிமரத்திற்காக வெட்ட அம்மரத்தில் வீற்றிருந்த நீலன் இறந்துவிடுகிறான்.

நீலியட்சகானத்தில் நீலன்

ஆலயத்தில் விடப்பட்ட குழந்தைகள், சுயவடிவோடு நீலன் நீலி என்ற பெயரில் காட்டில் திரிந்து, நீலன் ஆண்பேய்களின் தலைவனாகத் திருவாலங்காட்டில் தங்குகிறான். நீலி பெண்பேய்களின் தலைவியாகத் திருச்செங்கோட்டில் தங்குகிறாள்.

நீலன் தங்கியிருந்த வேப்பமரத்தைக் கோயில் கொடிக்கம்பத்துக்காகப் பழையனூரார் வெட்டுகின்றனர். நீலன் பழிவாங்க நினைத்து, எதிரில் வந்த கோயில் அர்ச்சகரை அடித்துத் துன்புறுத்துகிறான். அர்ச்சகர் இறைவனிடம் முறையிட, இறைவன் குண்டோதரனை அனுப்பி நீலனைக் கொல்லச் செய்கிறான். அண்ணன் இறந்த செய்தியறிந்த நீலி பழையனூர் மக்களைப் பழிவாங்கச் சபதம் எடுத்துத் திருவாலங்காட்டில் திரிகிறாள்.

நீலியட்சகானத்தில் மட்டுமே, நீலனின் இறப்பு விரிவாகக் கூறப்பட்டுள்ளது. மற்ற கதைகளில் நீலன் தங்கியிருந்த வேப்பமரத்தைக் கோயில் கொடிக்கம்பத்திற்காகப் பழையனூரார் வெட்ட நீலன் இறந்துவிடுகிறான் என்று மட்டுமே சொல்லப்பட்டுள்ளது.

நீலசுவாமி கதையில் நீலனும் நீலியும் தென்பழகைக்கு வரும் போது, முன்பிருந்த வளங்களைச் சொல்லி, நீலன் தங்கியிருந்த வேப்பமரத்தினை வெட்டியதால் ஏற்பட்ட அழிவுகளை நினைத்துப் பார்ப்பதாகக் கூறப்பட்டுள்ளது.

மறுபிறவிச் செய்திகள்

எடுத்துக்கொண்ட நீலிகதை மூன்றிலுமே மறுபிறவிக் கருத்துக்கள் இடம்பெற்றுள்ளன.

வில்லுப்பாட்டு நீலிகதையில் வேதியன் காவிரிப்பூம்பட்டணத்தில் ஆனந்தன் என்னும் வணிகனாகப் பிறக்கிறான்.

நீலியட்சகானத்தில் நவக்கியானியின் கணவனான புவனபதி, காஞ்சியில் நாகந்தையின் மகனாகப் பிறந்து தரிசனன் என்னும் பெயர் பெறுகிறான் நீலி பராக்கிரமத்தில், விதேகன், செட்டிமகன் சுதரிசனனாகப் பிறக்கிறான்.

நீலசுவாமி கதையில் வரம் பெற்று வரும் நீலனும் நீலியும், தங்களது முற்பிறவிகளைக் கூறுகின்றனர்.

வில்லுப்பாட்டில் பழிவாங்குதல்

நீலி ஆனந்தனைப் பழிவாங்கும்போது கள்ளிக்கொப்பை ஒடித்து வீசிப் பத்துவயதுப் பாவையாக்குகிறாள். நீலியின், தாய் தகப்பன் போல் இருவர் வருகின்றனர். கள்ளிக் கொப்பை முறித்துக் கக்கத்தில் இடுக்கிக் குழந்தையாக்கி பழகைநல்லூர் ஊராரிடம் முறையிடுகிறாள். தீர்வுகாண முடியாத ஊரார்

மடத்தில் தங்கச் செய்ய, இரவிலேயே நீலி ஆனந்தனைப் பழிவாங்குகிறாள். பிள்ளையைப் பூமியில் அடிக்க, கள்ளிக்கொப்பாக மாறுகிறது. காலையில் ஆனந்தனின் தாய்போல் வடிவம்கொண்டு வந்து, பயமுறுத்தி ஓட ஓட விரட்டுகிறாள். பின்பு, அம்பலக்காரரின் மகள் வடிவில் வந்து தாகத்திற்கு மோர் கொடுப்பதாகச் சொல்லி கள்ளிப் பால் கொடுத்துக் கொன்றுவிடுகிறாள். ஒரு கிழவன் மட்டும் ஏர்பூட்டி உழுவதை அறிந்து அந்தக் கிழவனின் மகள் போல வடிவம் தாங்கிக் கூழ் கொடுத்துப் பசி தணிக்கச் செய்கிறாள். உழவன் கிழவி கரத்தால் மடிவதைவிட உன்கரத்தால் மடிவது நன்மை என்று கூறி சால்தடத்தில் படுக்க, ஏர் ஓட்டி நெஞ்சைக் கிழித்து உயிரைப் போக்குகிறாள். பின் தென்னாடு வந்து முப்பந்தல் இசக்கியாக நிலையம் கொள்வதாகக் கதைமுடிகிறது.

நீலி யட்சகானத்தில் பழிவாங்குதல்

தரிசனன் பிறந்ததும் சோதிடர், பெண்ணைக் கொன்ற தோஷத்தால் ஒரு பெண் பிசாசால் தரிசனன் உயிருக்கு ஆபத்து என்று கூற அதனைப் போக்க ஓமாக்கினி வளர்த்தனர். ஓமத்தீயில் தோன்றிய வாளினை எப்போதும் கையில் வைத்திருக்க வேண்டும் என்றும், பழையனூர் வழியில் போகக்கூடாது என்றும் கூறினர். ஆனால் பழையனூர் செல்ல முடிவெடுத்துத் தீயசகுனங்கள் தோன்றியும், புறப்படுகிறான். நீலி, அவன் மனைவி பூங்கோதை வடிவு கொண்டு குழந்தையுடன் வந்தாள். வாளைக் காட்டியதும் மறைந்து தாகத்துடன் வரும் தரிசனனுக்காகத் தண்ணீர்பந்தல் அமைத்தாள். தரிசனன் வந்ததும் பிசாசு வடிவம் எடுக்கிறாள். தரிசனன் கத்தியைக் கையில் எடுத்ததும், பிசாசால் ஒன்றும் செய்ய முடியவில்லை. "பழையனூரார் முன் வந்து பேசி உன்னைக் கொல்கிறேன். எழுபது பேரையும் தண்டிக்கவே இப்போது விடுகிறேன்" என்று கூறுகிறாள். தரிசனன் பழையனூரார்முன் அடைக்கலம் காப்பாற்றுங்கள் என்ற போது நீலி பூங்கோதை உருவில் குழந்தையுடன் அழுதபடி வந்து நிற்கிறாள். ஊராரிடம் தரிசனன் அவள் என் மனைவியல்ல நீலி என்று கூற, அதற்கு நீலி பரத்தையர் மோகத்தால் பூதம் என்றும் அரக்கி என்றும் தன்னைக் கூறுவதாகக் கூறுகிறாள். தரிசனன் எடுத்துக் கூறியும், ஊரார் ஒப்புக்கொள்ளவில்லை. நீலி தரிசனன் கையிலுள்ள வாளை வாங்கச் செய்கிறாள். தரிசனன் நீலி தன்னைக் கொன்று விடுவாள் என்று கூற, அவையோர் அப்படி நடந்தால் தங்கள் உயிரைக் கொடுப்பதாக உறுதிமொழி கூறிக் கோயிலுள் அடைக்கின்றனர். தான் செய்த பாவத்தைத் தரிசனன் கேட்க நீலி சொல்கிறாள். நீலி, தரிசனனைக் கொன்று கிழவி வடிவுடன் (தரிசனின் தாய்) வேளாளர்களிடம் சென்று புலம்பி, மகனிடம் கூறியவாறு தீக்குளிக்கச் சொல்கிறாள். அறுபத்தொன்பது வேளாளரும் தீக்குளிக்கின்றனர். எழுபதாவது வேளாளன் மகள் போல வடிவு கொண்டு, உழுத வேளாளனிடம் ஊரின் நிலையைக் கூற, நானும் பழிக்குரியவன் என்று கூறி, அவன் ஏர்க்கலப்பையிலுள்ள கொழுவினால் குத்திக் கொண்டு இறக்கிறான்.

நீலி பராக்கிரமத்தில் பழிவாங்குதல்

நீலி, கள்ளிக்கட்டையைக் குழந்தையாக்கி, சுதர்சனனை வம்புசெய்து அம்பலத்தாரிடம் முறையிடுகிறாள். இரவு தங்கச் சொன்னதும் சுதர்சனன் இவள் பேய் என்கிறான். பேயாயின் நாங்கள் எழுபதின்மரும் பிணை ஆவோம் என்கின்றனர். நீலி பழிவாங்குகிறாள். 69 பேர் அக்கினி குண்டம் வலம் வந்தனர். ஒருவன் மட்டும் உழச் சென்றிருக்க, நீலி அவன் மனைவி உருவம் கொண்டு சென்று,

"நீர் மட்டும் உயிர்வாழ விரும்புவீரோ? வேளாண் மகனுக்குக் கொழுவன்றோ சமயத்தில் ஆயுதம் ஆகும், என்றதும், உடன் உழுகலப்பையின் கொழுவைக் கொண்டு உயிர் மாய்கிறான்.

"விழுவேன் எனச்சென்று வீழ்ந்தாரில்
ஓர் மைந்தன் வேறுபட
உழுவேலியில் சென்று ஒரு நீலி
முன்கை உடையவற்குக்
கொழுவே படைக்கலம் என்று
சொலாமுனம் கூறிய சொல்
வழுவேயெனப் பொன்று வல்லாளனும்
தொண்டை மண்டலமே

படிக்காசுப்புலவர்.

வில்லுப்பாட்டு நீலிகதையில் வேட்டை

நீலனும் நீலியும், பசுக்களையும் எருமைகளையும் அடித்துத் தின்கின்றனர். இதனைக் கண்டுபிடிக்க மன்னன், இரண்டு நாட்கள் காவல் வைக்கிறான். தலையாரிகள் காவல் காத்துக் கண்டுபிடிக்கின்றனர்.

வானம்பூசி ஒன்றுபோல நிற்கும் இருளைப்பார்த்து அதிசயத்து, பின்பற்றிவர, அந்த இருள் அரண்மனை வாசல் வந்து சிறு பிள்ளைகளாகிக் கதவைத் தாழிட்டுச் செல்வதைப் பார்க்கின்றனர்.

நீலியட்சகானத்தில் வேட்டை

இரண்டு பிள்ளைகளும்; இரவில் பிசாசு வடிவாகி, சுடலையில் வேகும் பிணங்களையும், ஆடுகளையும் தின்பதாகவும் பின்னர் ஊரில் நுழைந்து வீடுகளில் பானை, சட்டிகளை உருட்டிச் சோறு, கஞ்சி, கூழ் முதலான

உணவுகளையெல்லாம் திருடித் தின்றதாகவும் காட்டப்பட்டுள்ளது.

"தொட்டில்விட் டிழிந்துபோய் சுடுகாட்டி லேவிறகுக்
கட்டையுடன் வேம்பிணத்தைக் கண்டு பசியாறி"

'ஊரெல்லாம் பானைசட்டி யுருட்டியவ ரவர்வீட்டுச்
சோறுகஞ்சி கூழெல்லாம் சூறைகொண்டு தணிந்து'

'ஆட்டுமந் தையிலோடி ஆயர்அறி யாமல்நூறு
ஆட்டைஆவ தானமாய்ப் போட்டுக்கொண்டு வாயில்'

என்பன அப்பாடல் வரிகள்.

நீலசுவாமி கதையில் வேட்டை

இரவில் பேய்களாய் காட்டில் வாழும் உயிர்களை அழித்ததாகக் கூறப்பட்டுள்ளது.

வரம் பெற்று வரும் நீலனும் நீலியும்

மலையதிலே வரும்போது மதிநினைந்தார் நீலராசன்
கொலைகள்செய்து குருதியுண்டார் கூண்டமலை மிருகங்களை
கூக்கையிட்டுத் தான்பிடித்துத் துணிந்துவேட்டை ஆடுவாராம்
வாகுடைய நீலராசன் வயிற்றுப்பசி ஆறவென்ன

10-(47, 48, 49)

மிருகங்களின் கழுத்தை நெறித்துக் குருதி குடித்தனர். வேட்டையாடிய நிலம் படுகளமாகக் காட்சியளித்தது. பேய், பூதம், கூளிகள் விருந்து உண்டு மகிழ்கின்றனர்.

சின்னணஞ்சி கதையில் நீலனும் நீலியும்

நா. இராமச்சந்திரன் அவர்களால் தொகுக்கப்பட்டு ஆசியவியல் நிறுவனத்திலுள்ள சின்னணஞ்சி கதையில்,

பொன்னணஞ்சப் பெருமாளும், சிவனணஞ்சப் பெருமாளும் செண்பகமலையில் வரும்போது, இருவருக்கும் முன்னால்சென்று ஏற்றவரங்களை வாங்கிவந்த வேளையில்,

வடிவன்நீல சுவாமியர்
புரவியேறி நீலராசன்

பொங்குமாமலையில்வர
கண்டுஒரு தூதன்கண்டு
காவலவா நீலராசே

என்று கூறப்பட்டுள்ளது. சிவனணஞ்சனார் தெய்வக்குதிரையிலே ஏறிவருவதால் பூமியில் பூசைகொள்ள வேண்டாம் என்ற உத்தரவு தவறாமல் அடியவர்களைக் காத்து தாமரைபோல் வளர்க்க வேண்டும் என்ற கருத்து இடம்பெற்றுள்ளது. இதுவே நீலசுவாமி கதையில்,

தப்பாமல் எப்போதும் அடியவர் தம்மைத் தாமரை போலே வளர்க்கவும் வேணும் என்றும் நீலியைப் பற்றி,

'அன்னநடை பிரமசத்தி
ஆயிழை நீலியம்மை'

என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

டாக்டர்.சூ. நிர்மலா தேவி அவர்கள் பதிப்பித்த முத்தாரம்மன் கதை என்னும் நூலில்,

'முன்னடந்த அகோர வயிரவன்
மூல தேவனும் நீலனும் நீலியும்
கண்டந்தமி ழோதிய பூதியர்
கவிவாணர் தொழுது முன்னேவர'

இதில் நீலனும் நீலியும் முத்தாரம்மனுக்கு முன்னே செல்கின்ற காவல் தெய்வங்களாகக் காட்டப்பட்டுள்ளனர்.

அச்சு நூல்கள்

டாக்டர் சு. சண்முகசுந்தரம் அவர்கள் நாட்டுப்புற இலக்கிய வரலாறு என்ற நூலில் இராமசாமிப் புலவர் பாடிய பழையநல்லூர் நீலிகதை என்ற கதைப்பாடல் 1934ல் அச்சிடப்பட்டுள்ளது. நீலியைப் பற்றிய பல்வேறு கதைகள் உள என்று குறிப்பிட்டுள்ளார். இதில் கூறப்பட்டுள்ள நீலிகதையும் 'தமிழ் வில்லுப்பாட்டுகள்' என்ற தலைப்பில் தி.சி. கோமதிநாயகம் எம்.ஏ அவர்களால் எழுதப்பட்ட புத்தகத்தில் உள்ள நீலிகதையும் ஏறத்தாழ ஒன்றுபோல் உள்ளன. மேலும் 1978ல் இறுதியில் ஆறுமுகப்பெருமாள் நாடார் பழகைநல்லூர் நீலி யம்மன் கதை என்ற நூலை வெளியிட்டார் என்ற செய்தியும் காணப்படுகிறது.

Research Notes

Literature is one of the foundations of Indian History. Folk literature, one of the divisions (sections) of literature, includes within it historical facts.

Ballads are the embodiment and preserver of the ancient people's customs and habits. Ballads are stories narrated through songs. It may be a single story or a number of minor stories put together. In English it is called 'Ballad'.

This word comes from the Latin word 'Ballare'. It also means dance. In Western nations this word was used in different meanings. Only after the 16^{th} century the present meaning of this word was demarcated.

Ballads based on folklore spread only through oral transmission. In meaning, shape (structure) and style they belong to the country folk. Every ballad is based on some incident. They have a dramatic theme. Mostly there is no author for ballads.

Some ballads are sung synchronised with music and dance. Some of the important characteristics of the ballads are action, characters, setting and theme. Originally, ballads were meant for singing. They were written in the spoken language of the country folk. Surprising incidents, shocking incidents, pathos creating incidents which are narrated in ballads, create a deep impression and effect on the minds of the country folk. They become the central theme of the ballads.

There are differences between folk songs and ballads. Ballads in Tamil are long and generally contain a story. Folk songs have more of music to sing, short and without a story as the central theme.

Ballads end up as *Ammāṉai, katai* (story) and *Mālai* (garland). For example: Rāmappayaṉ Ammāṉai, *Nīlacuvāmi katai, Alli Aracāṇi Mālai* (garland). They also end up as *Cintu, Kummi, quarrel*, and war; for example, *Pūlittēvaṉ Cintu, Kaṭṭapommaṉ Kummi, Karṇamakārājaṉ cantai*, and *Kaṉṉaṭiaṉ pōr.*

These ballads which the country folk enjoy singing, have words fit for singing, simple descriptions, and natural language style. One of the distinctive features of the ballad is that they have many words of regional flavour. In some ballads we have '*Viruttappā*' also.

Ballad as a branch of literature lives in the tongue (oral tradition) of the people. It spreads orally. Irrespective of the author of the ballad, it becomes the

property of the singer. There is no need of explanation for this, neither prologue nor epilogue.

The name ballad is not found in palm leaf manuscripts. Folk literature in the form of ballad is mostly called *Ammāṉai.*

Mūvar Ammāṉai was written in 1575 A.D. This is considered to be the first balad in Tamil. They say that *Rāmappayyaṉ Ammāṉai* and ballads like Alli appeared in 1640 A.D. and 1575-1625 A.D. respectively.

The following definition of ballad is worth considering. "In a particular culture, and in a particular surrounding, orally an individual singer or a group performs with music a song with a story.

Classification of ballads

Innumerable ballads exist among people. Mythical bits, social ballads, historical ballads, ballads on village deities, are some of the varieties. Mythological ballads, historical ballads and social ballads fall under this classification.

In a different classification, we have ballads on heroes, mythological ballads, social ballads, those connected with mythology, history, society, enthusiastic imaginative ballads, philosophical ballads, comic ballads, Jain ballads,Christian ballads, etc.

Ballads are not history. They are epics of heroic deeds. They uphold the greatness of human qualities. They criticise social evils. We have to say that they are the imaginative songs of the people. But they are not imaginary castles in the air. Andrews Fletcher says that the ballads prevalent in a country are more important than the laws of the land.

The village folk used to narrate stories individually. They also sang. But, when some sang songs with a story they called it ballads. It is also called *Ammāṉai. Villuppāṭṭu, lāvaṇi, kummi, tālāṭṭu* (lullaby), *ūcal* (swing) are some of the different forms of the ballad.

What we have taken for editing is one such ballad called *Nīlacuvāmi* story. In this, the story of Nīlaṉ and Nīli, brother and sister devils doing penance (Tapas), reaching Kailash, getting boon from Civaṉ and then witnessing the prosperous beauty of the mountains is narrated. Nīli of this ballad is called demi goddess.

The Meaning of Iyakki (demigoddess)

The words (Iyakki-Iyakkar) [demi-goddess , demo-god,] come from the same stem and refer to the male demigod, and female demigoddess. Some researchers think that these words may be born out of the stems (root word) Yus, Yak-A, Vaj...etc.

Some say that these words mean 'mysterious', 'marvellous'. Pali language commentator says that it means 'Fast moving', 'quick moving light' 'ghost' 'devil'-etc. Some say that nature has the quality of the dead. It means 'spiritual apparition' or 'semi divine beings'.

The Birth and Growth of Demigod Worship

The worship of demigods is an ancient form of worship very much in vogue among the primitive tribes of India. There are proofs that such worship existed even before 2nd century B.C.

Cankam literature

In the *Cankam* period we have no proof of demigod worship under the name 'Iyakki'. However in old Tamil literature period, we have feminine goddesses resembling 'Iyakki'. For example, *Cūli, Cūrmakaḷ, Cūraramakaḷir, Varaiyaṟa Makaḷir, Celvi* of the seas, *Pāvai, Aṇanku* are some of the female goddesses found in ancient Tamil poems of *Pattuppāṭṭu* and *Eṭṭuttokai.*

Cilappatikāram

In *Cilappatikāram* we have the information that outside Maturai there was a temple for *Pūnkaṇ Iyakki* and the milkmaid Mātari presented milk rice for worship.

Maṇimēkalai

In Cāttaṉār's epic '*Maṇimēkalai*', we find Iyakki worship, in Buddhist religion in Tamilnadu. In Cāttaṉār's '*Maṇimēkalai*' female goddesses (demi goddesses) *Campāpati, Maṇimēkalai, Cintātēvi, Cittirateyvam, Kantiṟpāvai* appear helping the progress of the story and the development of the plot.

Sculptures and Stone Inscriptions

After the 5th century, Jains gave physical shape to their female goddesses *Ampikā, Patmāvati* and nurtured their worship. Their figures were chiselled

sculptures and five metal physical shapes. Stone inscriptions call them *Iyakkars, Avvai, Iyakki, Paṭṭāraki, Pakavati.*

Later Period

In later years, in orthodox religions, Iyakki worship was converted into the worship of Lakṣmi and Turkai. In the period of Nayaks Iyakki worship mingled with the worship of village deities. In some places it changed into the worship of village women. In Tamilnadu, in the special worship offered to *Poṉṉiammaṉ, Avvaiyārammaṉ, Pakavati, Pēcci, Rākkāyi, Icakkiyammaṉ*, we find the qualities of *Iyakkiyars*. In the southern districts of Tamilnadu the worship of *Icakkiyammaṉ* has so much of Iyakki worship features that it seems tobe the remnant of the ancient existence of Iyakki worship.

In Tirunelvēli and Kaṉyākumari districts the story of Iyakki appears as folklore ballads in the form of Icakkiyammaṉ story, Paḻakainallūr (Paḻaiyanūr) Nīli's story.

We are not very sure about the exact location of Paḻakainakar. Near Tiruppuvaṉam, South of Vaikai river there is a place called Paḻaiyaṉūr. But Nīliyammaṉ worship is not found here. There is a possibility that Paḻakainakar existed near Pāḷaiyamkōṭṭai adjacent to Tirunelvēli. Nīli worship must have existed before 19th century in Tiruṉelvēli district. The name of a village called Nīlita nallūr near Tiruṉelvēli is a proof for this. In the temple of this place, we find a 10th century round stone inscription with the head of Vīrapāṇṭiya Cōḻaṉ in which this place is called "Nīlitanallūr".

Nīliyaṭcakāṉam and *Periyapurāṇam*

In the works like *Nīliyaṭcakāṉam* and *Periyapurāṇam*, Paḻaiyaṉūr, near Tiruvālaṅkāṭu in Toṇṭaināṭu is mentioned as Nīli's place. In Nīli's story, fire entrant Vēḷāḷars are called Toṇṭaimaṇṭala (regional) Vēḷālars. Their sculptures are found in Paḻaiyaṉūr of Toṇṭaināṭu. In *Nīlacuvāmi*'s story, mostly places in Pāṇṭiyaṉ country are mentioned.

Therefore, whether Nīli lived in Southern districts or Toṇṭaināṭu region is open to research.

Structure of ballad

Generally ballads have the following structure:

Beginning, story development and narration and end. Some of the literary devices of the ballad are, Invocation, God's praise, humility in court, choice of the story, beginning, story development and narration, and end. Nīlacuvāmi's story also is based on the same structure.

Invocation

Water, surrounded (girded) world and all life in the world have been created, protected, and destroyed by the Prime Mover and Triple active God. This God gave Nīlaṉ the boon of immortality. After getting this boon, Nīlaṉ was returning crossing many mountains. The author (poet) narrates this story as he knows it.

In Praise of God

It is Tamil tradition to ask for God's blessing before doing any work or action. Accordingly, the author prays to Kaṇapati, Civaṉ, Tirumāl, Umaiyammai, Carasvati, Pattirakāḷi, Vaḷḷivaṭivēlar, and others to bless him in his venture as an author.

Humility in the Court (or assembly)

No one should become proud and arrogant because of his learning. For this purpose, the device of humility in court is adopted in this story.

The author's attempt to sing poems in the presence of very learned and highly imaginative scholars is compared to the attempt of a lame disabled man crawling slowly competing with a regular runner. This is the author's attempt of expressing humility in court. Similarly, he compares his attempt to that of a dumb man trying to speak equal to a learned scholarly leader in the assembly of men of learning and character.

It is equal to the challenge of a domestic goat that it will fight and be victorious against a huge tiger. It is equal to the claim of stingy misers that they are on par with grateful learned benefactors of character. It is similar to the claim of a beggar that he is equal to Civaṉ, who consumed poison. It is similar to the challenge of a maimed man that he will fight against seasoned strong soldiers and get victory. Saying all these, the author appeals to the learned scholars to forgive any mistake and accept his work. Only with this hope, he makes so bold as to sing this story.

Advance Indication and Narration

After humility in court or assembly, it is customary to introduce the choice of the topic (or story or theme). The author says that he wants to narrate the story

of Nīlaṉ and Nīli who were born as the children of Cōḻaṉ and how, after worshipping Civaṉ and Umaiyāḷ at Teṉpaḷakai, they started for Tiruvaṉantapuram. They prayed God to have their journey without any problem.

The Author

The name of the author is not mentioned. He calls himself the son of Poṉṉaṇañcaṉ who was born in the family group of the great teacher (or author) Ārumuka Perumāḷ who hailed from *Valaṅkai* caste (race) and who worshipped incessantly with Civaṉ's blessing, Kāḷatinātar and Pattirakāḷi.

Date of the Work

The author says that he God's servant completed this song and that Nīlacuvāmi accepted worship in the Kollam year 950. This goes to prove that this was written in the the year 1774 A.D.

Praying for God's blessing again

The author begins his work worshipping Kaṇapati, Murukaṉ, Carasvati once again and prays again for their blessing.

Beginning

The scene at Kailāsh of Civaṉ being seated with Umā is described. After performing penance to get boon from God, Nīlaṉ undertakes another severe penance of standing on gold needle placed in a copper pot. Seeing the penance of Nīlaṉ, Civaṉ asks Umā who that person is. Umā narrates the previous birth of Nīlaṉ and asks Civaṉ to grant him the boon. Civaṉ sends Nantitēvār to bring Nīlaṉ.

The Method of Narration

According to Civaṉ's order, Nantitēvaṉ reaches Kailāsh with Nīlaṉ. The picture of god imprinted in Nīlaṉ's heart as the god wearing the crescent moon in his locks of hair with the cobra dancing in His chest with spread hood and Civaṉ adorned with sacred jewels and wearing garlands made of Chank bead, Harialli grass, Indian laburnum and leucas, was exactly the same as he witnessed in Kailāsh. Nīlaṉ stood worshipping god in this shape. He answers the questions put by god. With due pride he requests God to witness his dance. He started dancing wearing all kinds of dress and jewels and smearing his body with scents. Tēvars, heavenly

virgins, —ascetics, Kaṇapati, Murukaṉ, Yamaṉ and others assemble to witness his dance. All of them praise him bewitched by his dance. Songs and musical instruments are played. Thinking of what reward to give Nīlaṉ, Civaṉ praises the rare qualities of Nīlaṉ. Umā also, concurring with Civaṉ, recommends proper reward. Civaṉ comes to a conclusion after consulting Nāratar and sages. He decides to give costly pearl chain, (garland) Mohana garland and snake shaped chain (garland).

Nīlaṉ requests Civaṉ to give him many boons. Civaṉ grants all the boons requested by Nīlaṉ. Nīlaṉ went on asking repeatedly for one more boon, one more boon. Thus he gets all the boons. After getting these, he gets a number of other facilities. Worshipping God and taking leave of him, Nīlaṉ and Nīli started on a decorated heavenly horse. After reaching the world they cross land (country), mountain, waterfalls, river, grove, spring and forest and arrive at Tiruccentūr.

Tirumāl of Tiruccentūr, whom Nīlaṉ worshipped, questioned him from where he comes. When Nīlaṉ narrated the boons he got from Civaṉ after his penance, Tirumāl says that he also gives him the same boons and orders him to go to the southern land. The women folk, seeing Nīlaṉ in the lotus tank, joyfully performed *Kummi* praising him and were bewitched by him and longed for him. Leaving this place they crossed Kuṭamāṭu mountain and reached their place then Paḻakai. At then Paḻakai they think of their past. They think of the former prosperity of the place, the destruction made by them, and the present reconstructed state of the place.

On their way to the temple of Mountain Perumāḷ, the cuckoo began to sing; the bees began to dance and the mountain women folk began to perform *Kuravai* dance on seeing Nīlaṉ. On seeing Nīlaṉ coming with joy, Perumāḷ asked him the reason for his coming. Nīlaṉ says that he has come to see the ancient Teṉpaḻakai city, southern holy places and the prosperous mountains.

Getting the blessings of Perumāḷ, he witnesses the fertile Cōḻa country. While crossing the mountains, the animals, worshipping with fear for Nīlaṉ, ask him the reason for his coming. When Nīlaṉ gave the usual worldly reasons, the animals were happy on hearing it. Then Nīlaṉ thinks of hunting animals, being overcome by the desire to drink blood. The animals stood worshipping him. He plucked herbs and threw them on the animals. Understanding Nīlaṉ's mind the animals came to his place without fear and thus Nīlaṉ defeated the animals.

Seeing the copious flow ot blood of animals killed by Nīlaṉ other animals began to run out of fear. Nīlaṉ and Nīli began to entice them in their net. That

place appeared to be a battlefield. The devils which feasted on this worshipped Nīlaṉ's feet. Nīlaṉ who offered a feast for demons and devils killing the animals of the forest, stands there accepting worship with the blessings of Civaṉ.

Nīlaṉ reaches the spring with Nature's welcome and begins to dance with women. Seeing Nīlaṉ, the women praise him, being infatuated with desire for him. One woman alone sees him as Cempiaṉ's godly Nīlatampurāṉ, Nārāyaṇaṉ, Nīlakaṇṭan and the Lord that dances with devils.

Other women think of him in different ways and get infatuated with him. One woman wants to entice him with aphrodisiac. Another woman tells her that it is possible to get him only through love.

Crossing these women who stood talking variously bewitched by Nīlaṉ, Nīlaṉ worships Palpaṉapap Perumāḷ. God asks him to narrate the story of his birth and Nīlaṉ starts narrating it.

In their first birth they were born in the brave Vaḷḷuvar caste (race). In the next birth he was born as Pīmaṉ and his sister was born as Cūrppaṉakai. In the next birth they were born as *Kūttuvar* (dancers) at Maturai and protected the sceptre of the Pāṇṭiyā king. Then they were born in low caste. In this birth both died owing to the intrigue of a brahmin. Once again because of Civaṉ's grace they were born as children of a consort and became famous in music and dance. They had the chance of knowing the Brahmin who was responsible for their death in the previous birth. Then they were born as the children of Cōḷaṉ Cempiaṉ. Enraged by their destructive action Cempiaṉ ordered to leave them in the forest. After finishing this birth, they return from Kailāsh worshipping god and getting his blessings. Because of the curse of a sage, Nīlaṉ narrated his previous births and Tirumāl ordered Nīlaṉ to demonstrate his dancing before him.

In response to God's order, decorating himself with all kinds of ornaments Nīlaṉ demonstrated 18 different kinds of dance which Tirumāl appreciates greatly. Nīlaṉ visits the abode of Civaṉ and Pirammaṉ and dancing according to their wishes gets a number of boons. Nīlaṉ and Nīli after getting boons from the Triple God (Tīṉ Mūrtti) go around Vaikai land, Paḷakai, Kumari on horse and palanquin presented by God. In this earth they worship Kaḷikātēvi and get boons from Her. With all the power of the boons they got, they have the rare privilege of taking abode at all triple junctions and have established themselves as Gods in all triple junctions. In order that every citizen may get his grace or blessing, Nīlaṉ who is called godly Nīlaṉ is praised by every one and he showers grace and blessings on all.

The author concludes the story saying that those who wrote, sang or heard this story would get the blessings of godly Nīlaṉ and will live long.

In the end the author sings the praise of Vināyakaṉ, Civaperumāṉ, Tirumāl and Murukaṉ through *Kummi* songs. He also sings the praise of godly Nīlaṉ through *Kummi* songs.

Structure of the songs

Nīlacuvāmi story consists of different types of prosody. Some of them are *Viruttam, Kummi, (cintu), Kīrttaṉai, Naṭai.* There are 6 *viruttam*, 3 *kummi, Tantaṇāṉā* 1, *Kīrttaṉai* 3, *Naṭai* 9. Thus there are 22 different songs.

Length limit

Ballads, on an average, run to 2000 lines. But Makāpārata ammāṉai with 30,000 lines is counted as the longest ballad. *Nīlacuvāmi* story consists of 1972 lines.

Traditional Characteristics of Ballad

Maria Leech mentions the following five as the traditional characteristics of ballad.

1. Ballads exist and are passed on orally.
2. They are sung as songs.
3. In theme, style and name it belongs to people.
4. Just as in short stories, it deals with a single incident.
5. Dramatic techniques are employed.

In addition giving a long list of names of places, mountains, rivers, springs, countries is also considered to be one of the traditional characteristics of the ballad. In order to enhance the birth of the hero and the leading lady of the ballad, their parents are supposed to have gone on pilgrimage to holy place, for the boon of bringing forth a child.

In *Nīlacuvāmi*'s story, Nīlaṉ and Nīli are reported to be born after Cempiyaṉ prayed to Civaṉ for the boon of a child. They roam as devils at night to test the devotion of their parents.

Information gathered from *Nīlacuvāmi's* story:

From ballads we can learn the arts, natural happenings, people's belief, customs and habits, dress and jewels, musical instruments, regional characteristics of language, names of places, rivers. From *Nīlacuvāmi's* story, we can gather a lot of information about many things.

Arts

Not only men but also gods, devas, demigods, heavenly virgins,—ascetics, sages were also interested in dance. This is known from the way they enjoyed the dance of Nīlaṉ before Civaṉ and Tirumāḷ. Before starting dance it was customary to tie a front curtain. The dancers decorated themselves with dress and jewels and applied make up with *kastūri, kaḷapam, punuku* (civet) and other scents. According to the rhythm of the musical instruments Tabour, Drum, Oval tambourine, *vīṇai,* Lyre, Perh, *mallāri,* conch they changed their dances.

From the line 'To twirl the eyes *Nīlateyvam*', 'To move the ears *Nīlateyvam*' it is clear that they expressed their talent through the movement of ears and eyes. Unable to decide what proper present to give for the dance of Nīlaṉ, Civaṉ consults Nāratār and sages. Just as a king, being unable to decide, consults his ministers and courtiers, Civaṉ also discusses after witnessing the talented dance of Nīlaṉ. Granting of all the boons desired by Nīlaṉ proves the truth that God will grant anything generously to those who surrender himself completely to him. Asking for one more boon and then one more boon repeatedly creates our interest and disgust at the same time as we read the lines. Yet Civaperumāṉ listens to it patiently and grants Nīlaṉ all the boons he requested.

Incident in Consonance with Nature

Dumb animals worship Nīlaṉ hearing the reason for his coming. Nīlaṉ tells them the nature of the world. The questions put by the five sensed animals and Nīlaṉ's reply about the nature of the world are fine imagination in consonance with nature.

The Principle of Seven births

When Nīlarācaṉ worships Palpanāpap perumāḷ, the god asks him the reason for his birth, Nīlaṉ narrates the story of his birth.

The learning acquired by one in one birth will stand him in good stead for all the seven births.

If one controls the five senses like the tortoise, it will stand him in good stead for all the seven births. Thus Vaḷḷuvar's idea of seven births is confirmed by *Nīlacuvāmi*'s story.

orumaiyuḷ āmaipōl aintaṭaṅkal āṟṟiṉ
eḻumaiyum ēmāp puṭaittu. *(kuṟaḷ 13:6)*

Orumaikkaṉ tāṉkaṟṟa kalvi oruvaṟku
eḻumaiyum ēmāp puṭaittu. *(kuṟaḷ 40:8)*

No Information about people

There are various descriptions about Nature's welcome, welcome by virgins with *Kuravai* song, women performing *Kummi* after sacred *Āratti*, fertile nature of lands, prosperous mountains; yet there is not a single description about the people. Only women are described. Looking at God as Nārāyaṇaṉ, Nīlakaṇṭaṉ, the dancer with devils, supreme Pirammaṉ, they are also afraid of Nīlacuvāmi as a God. This is comparable to the fear of Paravai Nācciyār on seeing Cuntarar. When Perumāḷ asks Nīlaṉ the reason for his visit, he replies that he came to see Teṉpalakai city, southern holy places, and fertile mountains. Even then there is not a word about the people of Teṉpaḷakai. There is nothing about the king. The reason for this is not very clear. The fertile nature of Cōḻar and Cērar country is described.

Dress

Before dancing, Nīlaṉ wears turban (head dress), silk shirt, half pant, and sash.

Women wore blanket like dress, saree, mini dress and *Kaṇṭāṅki* saree.

Ornaments

While dancing Nīlaṉ wore the following jewels and ornaments, rings, pearl chain, bells for the leg, *uḷkeṭṭuttāvaṭam, oyyavi*, studs, *vīrataṇṭai, takku, cilampu* hip chain in gold. Civaṉ asks whether he can give *Mōkaṉa mālai, Carapāṇi*, snake shaped pearl, diamonds, sapphires studded jewels as a present to the dancer Nīlaṉ.

Women wore *Pāmpaṭam, Pīlimayilaṭi taṇṭaṭṭi, aimpoṉvaṭam* rings and bangles.

Musical instruments

The following musical instruments are mentioned.

Drum, Jingle bells, Tambourine, *makuṭam, tappu*, mōtāri, vīrāṇam, Tabour, Veena, koṭṭu, Lyre, perh, musical mode, conch, *pēkkāḷam, mutakaimaṇi, muracu, tārai.*

Types of trees

The following trees find a place; Red sandalwood, Banana, Puṉṉai, Fig, *kallatti*, teak, *vēṅkai*, Michelia, Neem, Gooseberry, Jack tree, Mango, Palmyra, Lime, Wild lemon, Areca, Bamboo, South Indian Mahna, Indian Mesquit, pipal, clove tree, *ōtakatti, mañjāṭi.*

Aromatic products

Kattūri, Kaḷapam, attar, Civet Sandal paste are mentioned.

Animals

Hyena, cheetah, elephant, goat, dotted deer, black cobra, pig, rabbit, rogue elephant, bear, tiger, lion, snakes in anthills are mentioned.

Going round the places

Riding the heavenly horse, crossing mountains, rivers, water falls, countries, groves and springs, he takes bath in the springs and seeing him the bathing women are attracted by his beauty and are bewitched. This incident is comparable to the literary incident in which the hero enters the street and the seven young women are infatuated with longing for him. One woman says that she can entice him with a medicinal herb. Another says that he has returned from Kailāsh and he knows Yamaṉ's calculations and he danced to the enjoyment of Civaṉ and got a number of presents and he has no death. He has been tutored on the sublime; he has learnt mantiras; he has received many boons. He knows not only the south and the north but the entire world and the prosperity of the mountains. He has mixed with everything in this world. He has learnt all the sastras, astrology. Calling him the one with strong shoulders shows that Nīlaṉ possesses the unparalled hero's (leader) qualities.

Flashback technique

When he comes to Teṉpaḷakai after crossing Kuṭamāṭu mountain, Nīlaṉ and Nīli think of the old state of Paḷakai. Their thinking of the old prosperous

conditon of Paḻakai, the destruction caused by them and its remergence are made possible with the flash back device.

Contradictions

After penance and returning from Kailāsh with a number of boons Nīlaṉ sees the animals which worship him. On seeing them he remembers his past murderous life and kills a number of animals and offers it as a feast for devils, demons and gnomes. This is contradictory. At the end of the story Kāli worships Kāḷika tēvi. Kāḷi says that Nīlaṉ is born of the high family of Cōḻās and that he is talented, a great lover of mankind who always keeps his word and that he reached heaven without a sin. Born in a royal family, possessing devilish nature, then after doing penance getting boons and favours from Civaṉ, in his reformed state he appears as Nīlacuvāmi and Nīlatampurāṉ and hunts animals once again. Nīlacuvāmi, who feasts on the blood of strangulated animals, is addressed by Kāḷi as the one who went to heaven without a sin. This is not proper.

Parallels from *Rāmāyaṇam*

When Nīlaṉ and Nīli come to Teṉpaḻakai, they think of the destruction of Teṉpaḻakai by them. They say that this destruction was like the destruction of Laṅkā through fire.

It brings out the information that Aṉumāṉ brought Cañcīvi mountain for the sake of Perumāḷ. It is possible that the medicinal mountain mentioned here is Cañcīvi mountain.

The ten headed Rāvaṇaṉ who imprisoned Cīta was killed by Rāmaṉ through Aṉumāṉ by burning the vast land of Laṅka and thus protected the world when Nīlaṉ was born as Pīmaṉ simultaneously Nīli was born as Cūrppaṇakai. This establishes a grand link between *Nīlacuvāmi* story and the *Rāmāyaṇam.*

Related to the *Mākāpāratam*

Nīlan crossed mountains of Kurunāṭu (region) where the Pāṇṭavās with the help of Tirumāl, undertook their exile in forest. Pīmaṉ, one of the great five, who were the sworn enemies of Traupati, was none other than Nīlaṉ in one birth. These two factors establish a link between the *Makāpāratam* and *Nīlacuvāmi*'s story.

Related to *Cilappatikāram*

When kaṇṇaki burnt Maturai, with God's grace. The Pāṇṭiyaṉ's sceptre stood upright by the reborn Nīlaṉ and Nīli as *Kūttuvars.*

The Glories of Tirumāl

He is the great cowherd, the blue bodied person; the one who stole and ate butter from suspended pots; the one who sleeps in the soft bed of snake in South-North direction. The one who clinched the Bharath war, the killer of giants who sleeps on the leaf of the banyan tree, the one who measured the world with three steps and imprisoned Māveli, the one who split Iraṇiyaṉ who never worshipped Civaṉ and never thought of God's name Hari, the one who overcame Paracurāmaṉ, the one who changed a stone into a woman and plugged the sea, the one who broke the bow of Vituraṉ. Such are the expressions that glorify Tirumāl.

Glories of Civaṉ

He is enthroned with Umā at Kailash; the one who kicked Yamaṉ and saved Mārkkaṇṭēyaṉ, the one who burnt Tiripuram, the one worshipped by Devas unable to find his feet and head, the one who swallowed Kaṇṇappar's saliva,. the protector and provider for the toad inside the stone.

Nīlaṉ's beauty and greatness

Nīlaṉ's decoration as a dancer was exactly Tirumāl's appearance as Mōkiṉi which mesmerized even the gods. Nīlaṉ appeared as Civaṉ and Tirumāl. Therefore all of them welcomed him. Such is the description of Nīlaṉ's beauty and greatness.

Religious harmony

The fact that Nīlaṉ danced before Civaṉ and Tirumāl goes to prove the existence of religious harmony.

Simile

The section 'humility in assembly' is decorated with fine similes. Even within the story there are a number of good similes scattered. Describing the beauty of Nīlaṉ's body, we have the line "The golden body looked like the earthly moon". The gold chain worn in the loins by Nīlaṉ is described thus:

'In the sacred loin the gold string appeared like the golden sunrise'.

Devas, virgins and other heavenly creatures enjoyed the dance of Nīlan̲ thus,

'They melted as gold melts'

"As beautiful as the great peacock,
Nīli, the one woman among women,
Resembles the peacock in colour.
Let us perform *kummi* in her praise"

It is not clear whether Nīli was really blue in colour like the peacock or whether this is a piece of sophisticated exaggeration.

Series of words method

This means that a number of words with the same meaning are used repeatedly (almost consecutively).

About Nīlarācan̲ we have

"Beautiful Nīlarācan̲ godly rācan̲'

About Nīlarācan̲ birth we have

"Hear. O! Civan̲! the birth and death of Nīlan̲
Hear O! Civan̲! the previous birth of Nīlan̲
Hear O! Makātēvar Nīlan̲'s words
About all his previous births"

While asking for boons Nīlan̲ says

"Kindly grant me one more boon,
My Tampurān̲, Oh God! Makatēva
Golden God, My Lord give me one more boon"

God is called Tampurān̲, Makatēvar, golden God,Lord in a series of (equivalent) words.

Rhythm (or Beat)

The following beats are used

Tantōm timi timi tōm
Tattalāṅku titti timi timi
Tontō Timitimi tei

Tattalāṅku Timitimi Tōm
Taku Tiku Tiku
Tatti Timi timi Tontōm
Tattari kiṭataka Tarakuṟu titā
Tittititti Timitey
Tarikiṭa Tōm.

Descriptions

Description of the fertile mountains is extraordinary. A number of the names of places are mentioned while describing the route taken by Nīlaṉ and Nīli. They can be aptly compared with the present day routes. Similarly rivers, mountains and forests are correctly pinpointed. All of them clearly illustrate the route taken by Nīlaṉ and Nīli.

Near Caparimalai, there is a mountain called Nīlimalai. "The forest men in the slopes of Nīlimalai" is an information found in Government record in Mackenzie notes No. D. 3946 kept in the Government Oriental Manuscript Library.

Women goddesses called *Anaṅku, Kāṉamarcelvi, Cūrmakaḷ, Cūli, Pāvai* are found fit to be worshipped by Tamils.

Similarly in Cilappatikāram period *Pūṅkaṉ Iyakki*, in Maṇimēkalai period *Kantirpāvai, Campāpati,* and *Cintātēvi* were considered as female goddesses, Nīli worship was born in the south in line with such worship of women as goddesses. [In addition to being the female goddess worship, Nīli's brother Nīlaṉ is accepted as a fit person to be worshipped as a male God. Only on this basis Nīlacuvāmi's story came into existence].

In order to maintain the fact that Nīlaṉ and Nīli are fit to be worshipped and in order that the people may accept the worship of Nīlaṉ and Nīli this story was written with the broad perspective.

In order to instill the fact that they were fit enough to be worshipped it is repeatedly mentioned in many songs that they got many boons after meeting the triple God.

Nīlaṉ and Nīli's natural appearance, their dress and ornaments, their great talent in dance already make them fit for worship. In order to make this permanently embedded in people's mind, many poems repeat this. The author has shown his talent

in introducing cities, lands, forests, mountains and rivers in a natural way and also in making this a historical story.

This ballad of '*Nīlicuvāmi*'s story' can be taken not only as historical ballad but also as a story of worship.

Comparative research

The Story of Nīli (*Tamil Villuppāṭṭukaḷ*)

A brahmin lover kills his mistress Lakṣhmi. When he goes after stealing her jewels, he dies owing to snake bite. Seeing the tragic end of his sister, her brother dies committing suicide. At that time, in a temple Cōḻamātēvi prays for the gift of a child and undertakes ascetic practices. At the time of ascetic practice she has a dream.

She dreamt of a snake
Chasing the rat in the fence.
She saw the wild cat approach
To eat the goat.
She saw the bandicoot
Chasing the cat
A child born of her,
Mother's breast milk being insufficient
Tore her breast and sucked the milk.

These lines give through a dream a premonition of future events. Such lines create in the hearts of the readers an interest and eager expectation. Besides, the dream of Cōḻamātēvi, who does practise asceticism, becomes a reality. The woman and her brother are born as the children of Cōḻamatēvi. The brahmin is born as the son of a merchant. It is customary in ordinary families to calculate the horoscope of the new born child. The astrologer is called to calculate the horoscope of the royal progeny who were born as a result of ascetic prayer.

If they stay in palace
The Government will be destroyed,
The cattle in the country
Will not yield milk.
The cattle will be destroyed

By the people.
It is better to place them in a forest
And not in the palace.

Hearing these words of the astrologer the king says.

If children commit crimes
Can we push then into unused wells?
If sons do some wrong
Will parents kill them?
If there is a boil in the head
Can we throw sands on it?
Oh! astrologer, who can be
Free from the clutches of Fate?

The sister who was sleeping in the gold cradle wakes up her brother and says that she is hungry. They kill cows and buffaloes and eat them. On the third day, coming to know the truth, the king orders the servants to leave the children in the forest.

In *Nīliyaṭcakāṉam*, Civakiyāṉi and Navakiyāṉi roam about as devils. The headman of the people Puricaikkiḻāṉ wants the boon of a child. God makes them be born as brother and sister. At night they ate corpses and goats in the shape of devils. Those who lost the goats complain to Puricaikkiḻāṉ. It is said that after knowing the truth he left the children in the temple.

The same is narrated by M.S. Subramania Iyer under the title *Sri Nīli Parākkiramam* of fire bathing by Vēḷḷāḷar. The story is as follows:

A brahmin called Vidhegan had two wives. He hated his first wife Navgñaṉi and her son and killed them. Navakyāṉi wants to take revenge and is born in Thiruvalaṅkāṭu as the daughter of Puricaikkiḻaṉ alias Pūcuran. Seeing her figure he becomes frightened and asks her to leave the house. She accepts that she is a devil and says that she has come to take revenge. She was roaming all over the places.

Nīlacuvāmi's story

When Nīlaṉ was doing penance, Civā asks Umā details about the one who was doing penance, Umā says the following:

To test the devotion of Cōḻaṉ who did (penance) ascetic action for the boon of a child. According to God's order, the children in the shape of devils at night hunted down a number of animals. The king, knowing the truth feels sad and tells the watchmen to leave the children in the forest. They leave the children under a neem tree. Thus goes the story.

Nīlaṉ in *Villuppāṭṭu*

The children left in the thick forest take different shapes twice and live as Nīlaṉ and Nīli with invisible shapes. When Nīlaṉ was staying on a neem tree, it was cut down for the flagpole of Paḻakainallūr temple and Nīlaṉ died.

Nīlaṉ in *Nīliyatcakāṉam*

The children who were left in the temple, took their original shape as Nīlaṉ and Nīli and roamed about in the forest. Nīlaṉ stayed in Tiruvālaṅkāṭu as the head of male devils. Nīli stayed in Tiruccenkōṭu as the head of female devils.

The people of Paḻaiyaṉūr cut down the neem tree for the flagpole of the temple. Nīlaṉ beats the temple priest and takes revenge. The priest complains to God. God sends Kuṉṭōtaraṉ to kill Nīlaṉ. On hearing the death of her brother, Nīli, taking a vow to take revenge on the people of Palaiyaṉūr roams about in Tirunvālaṅkāṭu.

Only in *Nīliyaṭcakāṉam* the death of Nīlaṉ is described elaborately. In other stories, Nīlaṉ's death is reported simply after the cutting down of the neem tree for the temple flagpole.

When Nīlaṉ and Nīli come to Paḻakai, they narrate the previous prosperity of the place and think of the consequential destruction after the cutting down of the neem tree.

The cycle of Rebirth

In all the three stories of Nīli, rebirth is mentioned.

In *Villuppāṭṭu Nīlikatai* the brahmin is born as merchant Āṉantaṉ at Kāviriepūmpaṭṭiṉam

The husband of Navakiāyāṉi, Puvaṉapati is born at Kāñci as the son of Nākantai and gets the name of Taricaṉaṉ

In *Nīli Parākiramam,* Vitēkaṉ is born as Cutaricaṉaṉ, son of Ceṭṭi.

After getting boons, while returning, Nīlaṉ and Nīli narrate all their previous births.

Revenge in *Villuppāṭṭu*

When Nīli takes revenge on Aṉantaṉ, she throws a branch of cactus and changes him into a girl of ten. Two appear as the father and mother of Nīli. Breaking the cactus branch and supporting it on her hip, converts it into a baby and complains to the people of paḻakainallōr. Unable to decide, the people allow her to stay in the temple for the night. At night she wreaks vengeance on Āṉantaṉ. Putting the baby on the ground, it becomes a cactus branch. In the morning, taking the shape of Āṉantaṉ's mother she chases him out. Then taking the shape of the head man's daughter, saying that she will give butter milk for thirst, she gives cactus milk and kills him. Seeing an old man ploughing the field, taking the shape of his daughter, she offers gruel and quenches his hunger. The old ploughman says that it is better to lie down on the ploughed furrow. She operates the plough on his chest and kills him. Then coming to the south she takes permanent abode as Icakki at Muppantal.

Revenge in *Nīliyaṭcakānam*

After the birth of Taricaṉaṉ, the astrologer says that there is danger from devil for his life because of the killing of one woman. To escape from this, they made a sacred fire. He was told always to keep the sword coming out of the sacred fire and that he should not go near Paḻaiyaṉūr. But he, in spite of bad omens, decides to go to Paḻaiyaṉūr. Nīli comes there, taking the shape of his wife Pūṅkōtai. When he exhibited the sword, she disappeared. She set up a shamiana for distributing water to Taricaṉaṉ who came with thirst. On his arrival, she takes the shape of the devil when he takes the sword, the devil is powerless to do anything, she says, " I will speak to you in paḻaiyaṉūr and kill you there. In order to kill all the seventy people, I leave you now". When Taricaṉaṉ asked for protection from the people of paḻiayaṉūr, Nīli appears there in the shape of Pūṅkōtai with a child and stands weeping. Taricaṉaṉ tells the people that it is not his wife but Nīli. But Nīli says that because of his mad desire for prostitutes he calls her demon and giantess. The citizens do not accept the words of Taricaṉaṉ. Nīli asks them to take away the sword from him. He says that without the sword, Nīli will kill him. The assembled people say that such a thing will not happen; if so, they will give their life. They put him in the temple where Taricaṉaṉ asks her to tell him the crime he committed, she narrates it. Nīli kills Taricaṉaṉ and taking the shape of an old lady, Taricaṉaṉ's mother, she goes to the Vēḷāḷars and asks them to die in fire according to their promise to her son. Sixtynine Vēḷāḷars die in

fire. The seventieth Vēḷāḷar taking the shape of the old man's daughter, narrates the situation to the ploughing Vēḷḷālar. Saying that he is also to be blamed, he dies by piercing himself with the sharp tip of the plough.

Revenge in *Nīli Parākkiramam*

Nīli changing cactus branch into a child, troubles Cutarcaṉaṉ and complains to the assembly of citizens. When he is asked to stay there at night, he says that she is a devil. They say that if she is a devil, all the seventy of us will become hostages. Nīli takes revenge. Sixtynine people died in sacred fire. Only one had gone to plough. Nīli took the shape of his wife.

She says "you alone want to live. Even the tip of a plough is a right weapon for the son of a Vēḷāḷar". Immediately he dies with the help of the sharp tip of the plough with which he was ploughing.

Among those who fell saying they will die
Only one was different.
Nīli going to the field being ploughed
Said that for those with forearm
The plough tip was weapon enough
Before finishing these words
Saying 'I've erred died' the *vallāḷaṉ*
Of Toṇṭaināṭu

Paṭikkācup Pulavar

Hunting in *Villuppāṭṭu* Nīli story
Nīlaṉ and Nīli kill and eat buffaloes and cows.
To find this out, the king watches them for two days.
The watchmen find this out on the third day.

The whole sky appeared terribly dark and they, surprised at this darkness followed it. The darkness came up to the entrance of the palace and suddenly turned into two children who locked the palace gates. This was witnessed by the watchmen.

In the *Nīliyaṭcakāṉam*, it is said that the two children, changed themselves into devils and ate the burning corpses in burial grounds and also ate goats. Then they entered the city and going into every house they ransacked the pots and vessels and stealthily ate rice, gruel and porridge coming down from the cradle and reaching burial ground . They quenched their hunger eating the burning

corpses ransacking pots and vessels in every house gulped down rice, gruel and porridge, entering the herd of goats unknown to the shepherdess; they simply swallowed a hundred goats.

Hunting in *Nīlacuvāmi's* story

It is said that as devils they killed the living things in the forest.

The return of Nīlaṉ and Nīli after getting boons

Strangling the throat of animals they drank their blood. The place appeared like a battlefield. Devils, demons and gnomes enjoyed a feast.

Nīlaṉ and Nīli in *Ciṉṉaṉañci* story

In '*Ciṉṉaṉañci* story' edited by N. Ramacantiran and kept at the Institute of Asian Studies, [the following lines occur] when Poṉṉaṉañja Perumāḷ and Civaṉāṉanja Perumāḷ were coming through Ceṉpaka mountain, going before threw to get proper boons and favour.

Shapely Nīlacuvāmi
Horseriding Nīlarācaṉ
Coming on top of mountain
One messenger, seeing him
said, protector, Nīlarācāṉ, come

Since Civaṉaṉañjar was riding on heavenly horse, he was asked not to accept worship in the world. Without breaking this order, the devotees should be protected and brought up as lotus. This idea occurs in *Nīlacuvāmi* story also.

Without fail you should always protect the devotees like lotus. Nīli is called

"The supreme power with swan like gait

Beautiful Nīliyammai"

In *Muttārammaṉ* story edited by Dr. S. Nirmala Devi.

"Godly source Nīlaṉ and Nīli
Praised by the learned in Tamil
And poets go before, worshipping"

Nīlaṉ and Nīli are presented as protecting deities.

Printed works

In Dr. S. Shanmugasundaram's "The history of folk literature" the ballad sung by Ramasamy Pulavar '*Paḻaiyanallūr Nīli katai*' was printed in 1934.

This version of *Nīli* story and the one given in '*Tamil Villuppāṭṭukaḷ*' by Dr. T.C. Gomathinayagam are almost similar. Arumukaperumal Nadar Published in 1978, "*Paḻakainallūr Nīlikatai*"!.

* * * *

நீலசுவாமி கதை

மலைவளப்பம்

காப்பு

1. அலைகடலும் புவியேழும்[1] படைத்த நாதன்
அழியாத[2] வரங்கொடுத்து விட்ட போதே
மலைவழியே[3] திருவனந்தரம் தன்னில் போக
வந்தகதை அம்புவியில்[4] வகுக்க லுற்றேன்.

பகலும் இரவும் ஓயாத அலையையுடைய கடலையும், அந்தக் கடலால் சூழப்பட்ட நிலவுலகையும் படைத்தளித்துக் காப்பவன் இறைவன். 'இனி உனக்கு என்றும் அழிவே இல்லை' என்று நீலனுக்கு வரம் கொடுத்தவன் அவ்விறைவன். வரத்தைப் பெற்ற நீலன் மலைகள் பலவற்றைக் கடந்து திருவனந்தபுரம் செல்லத் துணிந்து புறப்பட்டான். அவ்வாறு புறப்பட்டு வருபவனாகிய நீலனின் கதையை நானறிந்தவாறு இந்த உலகத்தாருக்கும் எடுத்துச் சொல்லத் தொடங்குகின்றேன்

புவிஏழு - கீழுலகு ஏழு; மேலுலகு ஏழு. இவற்றுள் மேலுலகங்களே புவிஏழு எனப்பட்டன அவை : பூலோகம், புவர்லோகம், சுவர்லோகம், சனலோகம், தபோலோகம், மகாலோகம், சத்தியலோகம் என்னும் ஏழாகும். இவ்வாறே அலைகடலும், உவர்நீர்க்கடல், நன்னீர்க்கடல், பாற்கடல், தயிர்க்கடல், நெய்க்கடல், கருப்பஞ்சாற்றுக்கடல், தேன்கடல் என ஏழாகும் நாதன் - எப்பொருட்கும் இறைவன்; தலைவன். திருவனந்தரம் - திருவனந்தபுரம் என்னும் தலம் அம்புவி - அழகிய பூமி, அம் - அழகு. வகுத்தல் - வகைப்படுத்துதல்; வகைப்படுத்திக் கூறுதல்.

சு சொல் : 1 யேளும் 2 அளியாத 3 வளியே 4 அன்புவி

Malaivaḷappam

Kăppu

alaikaṭalum puviyēḻum paṭaitta nātan
aḻiyāta varaṅkoṭuttu viṭṭa pōtē
malaivaḻiyē tiruvanantaram taṉṉil pōka
vantakatai ampuviyil vakukka luṟṟēṉ

Invocation

The unceasing wavy sea and the seven worlds
Created by the great one who gave
The boon of immortality to Nīlaṉ
Who thereafter travelled through mountains to Tiruvaṉantaram[1]
Let me narrate his story in this beautiful world.

1. Tiruvaṉantapuram - Tiruvaṉantaram, Tiruvaṉantarapuram, Aṉantam.

2. விருத்தம்

சீரிலங் கியமா யோன்தன் திருவடி பாதம் போற்றி
போரிலங் கியமா யவன்தன் புகழ்பெறும்[1] கதையைப் பாட
வாரிலங் கியதோர் கொங்கை மயிலெனும் உமையா ளீன்ற
காரிலங் கியதோர் கும்ப கணபதி [யி]னிருசரணம் காப்ப[2]தாமே

பெருமையும், வீரமும் மிக்கவனாகிய மாயவனின் திருவடிகளை வணங்கி அவனது புகழ்மிக்க கதையைப் பாடத் தொடங்குகின்றேன் என்னுடைய பாடல் சிறப்புற அமைய உமையவளின் மகனாகிய விநாயகப் பெருமானின் திருவடிகள் துணை நிற்பதாக.

மாயோன் - திருமால். போர் - திருமாலின் அழித்தல் தொழில். மயில் - உமையவளுக்கு உவமையாயிற்று கும்ப கணபதி - யானைமுகத்தோன்.

சு.சொல் : 1 புகள் 2. காற்ப்ப

cīrilaṅ kiyamā yōṉtaṉ tiruvaṭi pātam pōṟṟi
pōrilaṅ kiyamā yavaṉtaṉ pukaḻpeṟum kataiyaippāṭa
vārilaṅ kiyatōr koṅkai mayileṉum umaiyā ḷīṉṟa
kārilaṅ kiyatōr kumpa kaṇapati [yi]ṉirucaraṇam kāppatāmē

Worshipping the feet of ever - glorious and valorous Māyavaṉ[1]
I start to sing this story worthy of fame
Let the feet of Kaṇapati, the elephant faced, cloud hued son of Umaiyāḷ
Who looks like a peacock
With breasts encased in a corset
Stand by me and protect me in this endeavour

1. Māyavaṉ - Lord Tirumāl.

3. விருத்தம்

கஞ்சனை வதைத்த மாயன் கழலிரு[1] பாதம் போற்றி
மிஞ்சவே வரங்கள் வேண்டி விதம்பெற[2] உலகில் வந்து
செஞ்சொலார்[3] புலவோர் தங்கள் தீவினை தீர்க்கும்[4] செல்வன்
தஞ்சமென் றோரைக் காக்கும் நீலன்கதை சாற்று வோமே.

நல்ல பல வரங்களைப் பெற்று அவற்றின் பயனாக உலகில் பிறந்தவன் நீலன்; தன்னிடம் அடைக்கலம் அடைந்தவர்களைப் பாதுகாக்கும் பண்புடையவனாகத் தோன்றியவன்; அவனுடைய சிறப்புக்களை எடுத்துக் கூறுவோருடைய பாவச் செயல்களை எல்லாம் போக்குகின்ற தன்மையும் பெற்றவன். ஆகையால் அவனது வரலாற்றைச் சொல்லத் தொடங்குகிறேன். தொடங்கும்முன் கொடியவனான கம்சனை அழித்த மாயனது வீரக்கழல் அணிந்த பாதங்களைப் போற்றுகின்றேன்.

கஞ்சன் - கம்சன்; யதுகுல உக்கிரசேனனின் மகன்; கண்ணபிரானின் தாய்மாமன்; முற்பிறப்பில் காலநேமி என்னும் அசுரன். செஞ்சொலார் - வெளிப்படப் பேசுந்திறமை பெற்றோர். தீவினை - பாவம்; நல்வினை, தீவினை என்னும் இருவினைகளில் ஒன்று. தஞ்சம் - அடைக்கலம்

சு.சொல் : 1. களவிரு 2. பிற 3 சொல்லார் 4 தீற்கும்.

kañcaṉai vataitta māyaṉ kaḻaliru pātam pōṟṟi
miñcavē varaṅkaḷ vēṇṭi vitampeṟa ulakil vantu
ceñcolār pulavōr taṅkaḷ tīviṉai tīrkkum celvaṉ
tañcameṉ ṟōraik kākkum nīlaṉkatai cāṟṟu vōmē

Eve I start I venerate the ankleted feet of Māyōṉ[1]
Who annihilated Kamcaṉ
Nīlaṉ, born after getting numerous boons for the benefit
Of those who come for refuge, protected them
And removed the evil from those who spread his good deeds

1. Māyōṉ - Māyavaṉ. (Lord Tirumāl).

4. அலையாத[1] செம்பியர்க்கு மகவாய்ப் பிறந்து
அவனாட்டில் மாடாடு[2] கொலைகள் செய்து
சிலைநுதலாள் நீலியொடு நீல ராசன்
தென்பழவை[3] தனையழைத்துச்[4] சிவலோ கத்தில்

நிலையான பெருமைமிக்க சோழர்குலத்திலே பிறந்து, அச்சோழ நாட்டில் மாடு, ஆடு போன்றவற்றைக் கொலை செய்து சுற்றித் திரிந்தவர்கள் அழகிய நீலியும், அவள் தமையனாகிய நீலராசனும். அவர்கள் கதையைப் பாடத் தொடங்குகிறேன்.

செம்பியர் - சோழர் சிலை - வில். நுதல் - நெற்றி.

சு.சொல் : 1 அலயாத 2. குலை 3. பளவை 4 யளைத்து

alaiyāta cempiyarkku makavāyp pirantu
avanāṭṭil māṭāṭu kolaikaḷ ceytu
cilainutalāḷ nīliyoṭu nīla rācan
tenpaḻavai tanaiyaḻaittuc civalō kattil

Born among the Cōlās of lasting fame
The beautiful foreheaded Nīli and her brother Nīlarācan
Were roaming about all over the places
Killing cattle and goats in Tenpaḻavai

திங்களு மரவுமணியும்[1] சிவனும் உமைதிருவும்
தேசமெங்கும் தானளந்த திருமாலும் லெக்ஷ்மியும்
மங்கைகுற மாதுயியல்[2] வள்ளிவடி வேலவரும்
வந்தடியேன் தன்கதைக்கு வாக்கினும் நடம்புரிவாய்

திங்களையும், பாம்பையும் சூடிய சந்திரசேகரனே! உமையம்மையே! உலகனைத்தையும் மூன்றடியால் அளந்த திருமாலே! இலக்குமிதேவியே! குறமகளாகிய வள்ளியம்மையே! வடிவேலவரே! நீங்கள் அனைவரும் நான் கதை சொல்வதற்குத் துணையாய் வந்திருந்து அடியேன் வாக்கினில் நடம்புரிய வேண்டும்.

திங்கள் - சந்திரன் அரவு - பாம்பு,

சு.சொல் : 1 றவி 2 மியல்

tiṅkaḷu ma ravumaṇiyum civaṉum umaitiruvum
tēcameneṅkum tāṉaḷanta tirumālum leṣmiyum
maṅkaikuṟa mātuyiyal vaḷḷivaṭi vēlavarum
vantaṭiyēṉ taṉkataikku vākkiṉum naṭampurivāy

Oh the moon! snake clad Civaṉ, Uma,
The world measurer Tirumāl, Lakṣmi

The beautiful daughter of kuṟavar, Vaḷḷi and Vaṭivēlaṉ
All of thee come to my aid and dance in my words.

புரிவாய் அரிமருகா பொன்னம்பலப் பிள்ளையாரே[1]
போதவே கரும்பின்நீர் ஆதரவாய் நான்படைப்பேன்[2]
விரியும் கடல்நீரும்[3] *புவியும் நிறைந்துநின்ற*
விண்ணவர் அடிவணங்க வேதங்கள் ஒலிமுழங்க
தாயார்திரி[4] *சூலிபத்திர காளியம்மன் தன்கதைக்குச்*
சந்ததியென் றெண்ணிஎண்ணி தமிழ்பாடவும்[5] *அருள்புரிவாய்*
மாயதவங்கள் வேண்டிவந்த நீலன் நீலிகதை
வையகத்தி லேவழங்க[6] *வாக்கில்பிழை வாராமல்*

திருமாலின் மருகனான முருகப்பெருமானே! தில்லைத் திருத்தலத்தின் திருப்பொன்னம்பலத்தில் எழுந்தருளியிருக்கும் பிள்ளையாரே! (திருஞானசம்பந்தமூர்த்தியே) உமக்குக் கரும்பின் நீரினை உள்ளன்போடு படைக்கிறேன். பரந்து விரிந்த கடல் நீரிலும், அந்தக் கடலால் சூழப்பட்ட நிலவுலகத்திலும் பரிபூரணமாய் நிறைந்து நிற்பவளும், தேவர்களால் போற்றி வணங்கப்படுபவளும், வேதங்களால் ஒலிமுழக்கம் செய்யப்படுபவளுமாகிய தாயார் பத்திரகாளியம்மையே! அன்னை திரிசூலியே! உன்னுடைய அவதாரமாகவும், வழித்தோன்றல்களாகவும் இந்நிலவுலகிலே பிறந்து, மாயதவங்கள் பலவற்றை விரும்பி ஏற்றுவந்த நீலன், நீலி ஆகியோர்தம் கதையை இந்த நில உலகத்திலே சான்றோர் முன்னிலையிலே எடுத்துக்கூறத் துணிந்தேன். அப்படிக்கூறும் என்னுடைய சொற்களிலே தவறு ஏதும் தோன்றிவிடாதவாறு அருள்புரியுமாறு வேண்டுகின்றேன்.

சு.சொல் : 1. பிள்ளையாறே 2 னாந் 3 நீரிலும் 4 திறி 5 தமிள் 6 வளங்க

purivāy arimarukā poṉṉampalap piḷḷaiyārē
pōtavē karumpiṉṉīr ātaravāy nāṉpaṭaippēṉ
viriyum kaṭalnīrum puviyum niṟaintuniṉṟa
viṇṇavar aṭivaṇaṅka vētaṅkaḷ olimuḻaṅka
tāyārtiri cūlipattira kāḷiyammaṉ taṉkataikkuc
cantatiyeṉ ṟeṇṇieṇṇi tamiḻpāṭavum aruḷpurivāy
māyatavaṅkaḷ vēṇṭivanta nīlaṉ nīlikatai
vaiyakatti lēvaḻaṅka vākkilpiḻai vārāmal

O Murukā, Tirumāl's nephew and Kaṇēsā
Stationed at Poṉṉampalam in Tillai, Tiruñāṉacampantar
With love I make the offering of sugarcane juice

On Mother *Pattlrakāḷi*! Goddess of Trident, in the wide open
Vast ocean and in the world surrounded by water
You stand perfect in everything, adored by all the
Heavenly citizens with the chanting of the Vetās
Help me to narrate the story of Nīlan̲, who considered
Himself your incarnation and progeny
Allow not any mistake to creep in while I narrate it
In the presence of elders.

அவையடக்கம்

சிந்தைதனி லன்புவைத்துச் செப்புகிறே னிப்புவியில்
சிறியோர்கள் செய்தகுற்றம் பெரியோர் பொறுத்தருள்வீர்
போற்றிசெய்து நீலன்கதை புரிவேன்நான்[1] என்பதற்கும்[2]
சறுக்காமல் காதவழி[3] ஆடுங்கெட்டியக் காரர்முன்னே
சப்பாணி தவழ்ந்துசென்று[4] தானும்சரி யென்பதற்கும்

உத்தசந்தி யில்வழக்கு[5] உரைக்கும் சமர்த்தன்முன்னே
ஒன்றுமறி யாதவெறும் ஊமைசரி யென்பதற்கும்
வென்றியுட[6] னேபெரிய வீரப்புலி யென்பதற்கும்
வீட்டில்வெள் ளாட்டுக்குட்டி மீளுவேனான்[7] என்பதற்கும்
நன்றியறிந் தேகொடுக்கும் நல்லறிவோர் தங்கள் முன்னே
நாட்டிலொரு வர்க்கும்கொடா நாய்கள்சரி யென்பதற்கும்
அள்ளிவாரி நஞ்சையுண்ட அரனுக் கிணையதாக
அய்யமிரந் தேகுடிக்கும் ஆண்டிசரி யென்பதற்கும்
வெட்டும்வீரன் பெற்றெடுத்த வீரவர்கள் தங்கள்முன்னே
வீட்டுக்குள் கிடக்கும்நொண்டி மீளுவேனான்[8] என்பதற்கும்
அப்படிப்போ லேஅடியேன் இப்புவியோர் தங்கள்முன்னே
அறைந்தேன்நான்[9] நீலன்கதை அம்புவியி[10] லேவழங்க

நீலன், நீலி வரலாற்றில் அமைந்துகிடக்கும் நற்பண்புகள் பலவற்றையும் நாடறியச் செய்ய வேண்டும் என்னும் ஆவல் என் உள்ளத்தில் ஊறிக் கிடக்கிறது. அந்த ஆசை ஒன்றின் காரணத்தாலேயே அடியேன் இக்கதையைப் பாடத்தொடங்குகிறேன். சிறியேனாகிய என் செயலில் உள்ள தவறுகளைச் சான்றோர்கள் பொறுத்து என்னை ஆதரிக்க வேண்டுகிறேன்.

நீலன் கதையை மிகநன்றாக எடுத்துக்கூறுவேன் என்று எடுத்துக்கொண்ட அடியேனுடைய செயல் எவ்வாறு இருக்கிறது?.

தரையில் கால்சிறிதும் வழுக்காமல் விரைந்து காதவழி ஓடும் திறமை வாய்ந்த ஓட்டக்காரர் முன்னால், நடக்கவே இயலாத சப்பாணி ஒருவன் நானும் அந்த ஓட்டக்காரனோடு ஓடுகிறேன் என்று கூறிக்கொண்டு தவழ்ந்து செல்வது போல் உள்ளது அல்லவா? அது மட்டுமா?

சான்றோர் பலர் கூடியுள்ள அவையில் கொண்டுவரும் வழக்கை அலசி, ஆய்ந்து நல்ல முடிவை எடுத்துக்கூறும் தலைவன் ஒருவனின் எதிரில் நிற்கும் ஊமை ஒருவன் நானும் அவனுக்குச் சமமாகப் பேசுகிறேன் என்று கூறுவது போல இருக்கிறது. மேலும், வீட்டில் உள்ள வெள்ளாட்டுக் குட்டியானது, பெரிய புலியுடன் போரிட்டு வெற்றியோடு வருவேன் என்று கூறுவது போலவும்; யாருக்கும் ஒரு சிறுபொருளுங் கொடுக்க விரும்பாத அற்பர்களாகிய உலோபிகள் நன்றியுணர்வும், வள்ளல் தன்மையும், பேரறிவும் படைத்த சான்றோருக்கு நாங்கள் சமமாவோம் என்பதுபோலவும்; பிச்சை எடுத்து உண்டு வாழும் ஆண்டியானவன் (தன் உடை முதலியவற்றால்) நான் நஞ்சுண்ட கண்டனாகிய சிவபெருமானுக்கு நிகராவேன் என்று நடந்துகொள்வது போலவும்; வீட்டில் முடங்கிக் கிடக்கும் நொண்டியானவன் வீரர்களின் மக்களான பலசாலிகளுடன் போரிட்டு வெற்றி பெறுவேன் என்று கூறுவதுபோலவும் இருக்கிறதல்லவா? இவ்வளவு வேறுபாடுகள் இருந்தும் அறிவிற் சிறியேனாகிய அடியேன் சான்றோர் நிறைந்த இப்பூவுலகில் நீலன் கதையைச் சொல்லத் துணிந்தேன். எதனால்? சான்றோர்கள் என் பிழையைப் பொறுத்து இக்கதையை ஏற்று அருள் புரிவார்கள் என்ற துணிவு காரணத்தால் அல்லவா?

சறுக்குதல் - வழுக்குதல், தவறுதல். காதம் - 4 கூப்பிடு தூரம்; கூப்பிட்டால் கேட்குந்தூரம் ஒரு கூப்பிடுதூரம். சப்பாணி - நடக்க முடியாதவன். உத்தசந்தி - உற்றசந்தி உற்ற - தகுதிவாய்ந்த; சந்தி - கூட்டம், அவை. வென்றி - வெற்றி. நஞ்சு - விடம். அரன் - சிவன்; நஞ்சுண்ட கண்டன். அய்யம் - ஐயம் - பிச்சை. இரத்தல் - யாசித்தல். ஆண்டி - யாசகன். வீரவர் - வீரர்.

சு.சொல் : 1. னாந் 2 யென்பதற்கும் 3 காதவளி 4. தவிள்ந்து 5. வளக்கு 6. சமற்த்தன் 7 யுடநே 8. னாந் 9 னாந் 10. அன்பு

Avaiyaṭakkam

cintaitaṉi laṉpuvaittuc ceppukirē ṉippuviyil
ciṟiyōrkaḷ ceytakuṟṟam periyōr poṟuttaruḷvīr
pōṟṟiceytu nīlaṉkatai purivēṉṉāṉ eṉpataṟkum
caṟukkāmal kātavaḻi āṭukeṭṭiyak kārarmuṉṉē
cappāṇi tavaḻntuceṉṟu tāṉumcari yeṉpataṟkum
uttacanti yilvaḻakku uraikkum camarttaṉmuṉṉē

onrumari yātaverum ūmaicari yenpatarkum
venriyuta nēperiya virappuli yenpatarkum
vitatilvel lāttukkutti miluvēnān enpatarkum
nanriyarin tēkotukkum nallarivōr tankalmunnē
nāttiloru varkkumkotā nāykalcari yenpatarkum
allivāri nañcaiyunta aranuk kinaiyatāka
ayyamiran tēkutikkum ānticari yenpatarkum
vettumviran perretutta viravarkal tankalmunnē
vittukkul kitakkumnonti miluvēnan enpatarkum
appatippō lēatiyēn ippuviyōr tankalmunnē
araintēnnān nīlankatai ampuviyi lēvalanka

The Modesty of the writer

With love at heart I say, on this earth,
The little wrongs committed by the smaller ones,
The elders and the great should forgive
My resolve to narrate Nīlan's story
Is like the unequal challenge of
A crawling lame man against the run of an excellent athlete
That of an ignorant dumb man against
The clever tongue of a lawyer in the council of the wise
That of the little house-goat against the exploits of the terrible tiger
That of the miserly dog against those who are munificent to the deserving
That of the beggar who begs for food and dress
Against Civan of the poisoned throat,
That of the domestic handicapped against the
Exploits of the courageous soldier in battle
Yet, I make bold to sing in the hope
That the wise and the good will support me forgiving my mistakes

பாடவிரும்பிய கதை

செப்பமுள்ள நீலனுட(ன்) தேன்மொழியாள்[1] நீலியுமாய்
செம்பியன் தனக்குமுன்னாள் சிறுவரா கப்பிறந்து

தேசம்தனி லேமெய்க்க தென்பழவை[2] யுமழித்து
சிவனா ரிடத்தில்சென்று தீதற வரமும்வேண்டி
வாசங்கள் குழைந்திலங்கும்[3] நீலனும் நீலியுமாய்
வாசங்கள் சிறந்திலங்கும் மதுவழியே[4] திருவனந்தரம்
புரமதிலே போகவென்று வந்தகதை பூமியிலே

குழந்தைப்பேறு வேண்டித் தொழுத சோழனுக்கு மக்களாகப் பிறந்த நீலனும், நீலியும் தென்பழவை என்னும் திருத்தலத்தில் எழுந்தருளியுள்ள உமையம்மையையும், சிவபெருமானையும் வணங்கித் தங்கள் பயணத்தில் ஏதும் குறைவராதபடி அருள்புரியுமாறு வேண்டி வரம் பெற்றவர்களாய்த் திருவனந்தபுரம் செல்ல வேண்டுமென்று புறப்பட்டுச் சிறந்த சோலைகளின் வழியே செல்லத் தொடங்கினார்கள். அவர்களுடைய கதையை மக்களிடையிலே எடுத்துக் கூற விரும்புகின்றேன். இறையவனே! உன் திருவடிகளைத் தொழுகிறேன். மக்கள் விரும்பி ஏற்குமாறு எழுதவல்ல திறனை அடியேனுக்கு அருளிச் செய்வாயாக!

தீதற - குற்றமற, மது - சோலை.

சு.சொல் : 1. மொளியாள் 2. பளவை 3. குளந்திலங்கும் 4 வளியே

Pāṭa virumpiya katai

ceppamuḷḷa nīlaṉuṭa(ṉ) tēṉmoḻiyāḷ nīliyumāy
cempiyaṉ taṉakkumuṉṉāḷ ciṟuvarā kappiṟantu
tēcamtaṉi lēmeykka teṉpaḻavai yumaḻittu
civaṉā riṭattilceṉṟu tītaṟa varamumvēṇṭi
vācaṅkaḷ kuḻaintilaṅkum nīlaṉum nīliyumāy
vācaṅkaḷ ciṟantilaṅkum matuvaḻiyē tiruvaṉantaram
puramatilē pōkaveṉṟu vantakatai pūmiyilē

The story I wanted to sing

Born as children to the Cōḻās who prayed for the gift of a child
Upright Nīlaṉ and honeytongued Nīli
Worshipped umaiyāḷ and Civā at Teṉpaḻavai
And prayed for a harmless safe journey
And went their way to Tiruvaṉantaram
Through the wooded groves
Give me the gift of writing well, acceptable to the people

நூலாசிரியர்

வகையாகப் பாடுதற்கு வாக்குடன்தென் சூரைநகர்
வலங்கை குலத்துதித்தோன் எந்தனுக்கு நல்லவரம்
இவ்வுலகோ ரும்புகழ்[1] இறையவன்தன் பாதத்தை
ஏற்றித் தொழவும்வல்லோன்[2] இறையவன்தன் பாதத்தை
இன்பமுடன் வளம்கூட்டி எழுதிய பாலனென்னும்[3]
கங்கை மதிச்ச[ட்]டையை[4] அணிந்த சிவனருளால்
கல்விகடை வாய்திறந்த காளாத்தி நாதர்பாதத்தை
கைதொழவே[5] நல்லகுரு புத்திரன் தானாய்வந்த
வல்வினை வராதபடி பத்திர மாகாளிதன்னை
வணங்கும்அறு முகப்பெருமாள் பெருமரபை ஈன்றெடுத்த
புதல்வனென[6] வேவளர் பொன்னணஞ் சான்புதல்வன்

தென்சூரை மாநகரிலே, வலங்கைக்குலம் என்னும் குலத்திலே கங்கையையும் பிறைச்சந்திரனையும் தரித்த சிவபெருமானின் திருவருளைப் பெற்றவரும், திருக்காளத்திநாதரையும், மாகாளியம்மையையும் இடைவிடாது தொழுது வருபவரும், சிறந்த ஆசிரியரின் மகனாகப் பிறந்தவருமாகிய ஆறுமுகப்பெருமாள் என்பவரின் மரபிலே பிறந்து வளர்ந்தவருமாகிய பொன்னணஞ்சான் என்பவரின் மகனாகப் பிறந்தவன் அடியேன்.

வல்வினை - வலியவினை.

சு.சொல் : 1 புகள் 2 தொளவும் 3. நென்னும் 4 மதியச்சட்டை 5 தௌவே 6 நெனவேவளர்

Nūlāciriyar

vakaiyākap pāṭutaṟku vākkuṭaṉteṉ cūrainakar
valaṅkai kulattutittōṉ entaṉukku nallavaram
ivvulakō rumpukaḻa iṟaiyavaṉtaṉ pātattai
eṟṟitt toḻavumvallōṉ iṟaiyavaṉtaṉ pātattai
iṉpamutaṉ vaḷamkūṭṭi eḻutiya pālaṉeṉṉum
kaṅkai maticca(ṭ)ṭaiyai aṇinta civaṉaruḷāl
kalvikaṭai vāytiṟanta kāḷātti nātarpātattai
kaitoḻavē nallakuru puttiraṉ tāṉāyvanta
valviṉai varātapaṭi pattira mākāḷitaṉṉai
vaṇaṅkumaṟu mukapperumāḷ perumarapai īṉṟeṭutta
putalvaṉeṉa vēvaḷar poṉṉaṇañ cāṉputalvaṉ

About the poet

I the offspring of Ponnanañcan
Who himself was born of Ārumuka Perumāḷ
Who worshipped Mākāḷi to ward off evil
And who was the son of a teacher
Who adored Tirukkāḷattinātar
And who got the blessings of Civan̲ with the sickled moon and Ganga
And he belonged to the tribe of *valaṅkai* in the city of Ten̲cūrai

நூல்பாட இறையருள் வேண்டுதல்

பொற்பாதத்தை யெப்பொழுதும்[1] போற்றித்[2] தொழுதுகொண்டு
வன்னமுள்ள நீலனுட வரலாறு பாடுதற்கு
வாக்குத்தவ றாமலருள் நோக்கமும் தருவாரென
பொன்னிலங்கி தன்பயின்ற புத்திரன்முச் சந்திபங்கில்
வாடாத மதிமுகத்தான் நீலனுட நீலியம்மை
மலைவழியே[3] வரம்வேண்டி வந்தகதை நல்கலுற்றேன்
வகுத்துரைப்பேன் இக்கதையை வையகத் தவர்கள்முன்னே
தொழுதேத்தும்[4] அடியார்க்குத் தொந்திவயி றாய்துணையே
துணையாக வந்துதவாய் அய்யாஎன் நாவதிலே
இணைஒருவ ரொவ்வாத இசல்நீல தம்புரனார்[5]
வரிசையுள்ள வரம்வேண்டி வாய்த்தநல்ல கதைபாட
கரிமுகனே[6] கணபதியே[7] கந்தனுக்கு மூத்தபிள்ளாய்
வந்துதவ வேணுமென்று மயிலேறும் சேவுகனே
தேடரிய நீலதம்புரான் திருக்கதையைப் பாடுதற்கு
செல்வியே சரஸ்வதியே சுந்தரியே வந்துதவாய்!

நீலனுடன் நீலியம்மையும் காடு, மலைகளைக் கடந்து வந்த வரலாறுகளைப் பாடத் தொடங்குகிறேன்.

தொந்தி வயிற்றோனே! யானை முகத்தோனே! முருகப்பெருமானுக்கு முன் பிறந்தவனே! கணபதியே! எனக்குத் துணை இருப்பாயாக! மயிலேறும் முருகப்பெருமானே! சரசுவதி அம்மையே! எனக்குத் துணையிருந்து அருள்புரிவீர்களாக!

சு.சொல் : 1. பொளுதும் 2. தொளுது 3. வளியே 4 தொளுதேற்றும் 5 புரனார் 6 கரிமுகநே 7. கிணபதி.

Nūlpāṭa Iṟaiyaruḷ vēṇṭutal

poṟpātattai yeppoḻutum pōṟṟit toḻutukoṇṭu
vaṉṉamuḷḷa nīlaṉuta varalāṟu pāṭutaṟku
vākkuttava ṟāmalaruḷ nōkkamum taruvāreṉa
poṉṉilaṅki taṉpayiṉṟa puttiraṉmuc cantipaṅkil
vāṭāta matimukattāṉ nīlaṉuṭa nīliyammai
ṃalaivaḻiyē varamvēṇṭi vantakatai nalkaluṟṟēṉ
vakutturaippēṉ ikkataiyai vaiyakat tavarkaḷmuṉṉē
toḻutēttum aṭiyārkkut tontivayi ṟāytuṇaiyē
tuṇaiyāka vantutavāy ayyāeṉ nāvatilē
iṇaioruva rovvāta icalnīla tampuraṉār
varicaiyuḷḷa varamvēṇṭi vāyttanalla kataipāṭa
karimukaṉē kaṇapatiyē kantaṉukku mūttapiḷḷāy
vantutava vēṇumeṉṟu mayilēṟum cēvukaṉē
tēṭariya nīlatampurāṉ tirukkataiyaip pāṭutaṟku
celviyē carasvatiyē cuntariyē vantutavāy

Invocation for God's blessing

Worshipping the golden feet of God for ever
I wish to sing the story of Nīlaṉ
Never to be at fault for words and never to miss the central theme,
Of how the bright moonfaced Nīlaṉ and Nīli
Journeyed through the mountains beseeching blessing
Let me present this story rightly before the people
The big bellied God stands by his Worshippers
To sing this Oh! Kaṇapati! Give me the special grace,
Oh! the eldest son of Kantā! Oh the god of peacock chariot,
Oh Carasvati Help me! Assist me in singing the story of Nīlaṉ

கயிலையில் நீலனும் நீலியும்

கண்ணுதலோன் வீற்றிருக்கும் கயிலாச மானதிலே
வன்னமுள்ள நீலனுட மங்கையரும் நீலியுமாய்
கயிலாச மானதிலே கரைகண்டனார் லோகத்திலே

அயிலாரும் வேல்விழியார்[1] ஆலாத்தி ஏந்திவர
தெய்வாரும் வானவரும் சிவனாரைப் போற்றிசெய்ய
மைவிழியார்[2] குரவையிட மாமுனிவோர் தொழுது[3]நிற்க
ஆடரவும் கயிலாசம் அருளிருக்கும் கயிலாசம்
அந்தநல்ல கயிலையிலே ஆதியுமை பார்வதியும்[4]
இருக்குமந்த நேரத்திலே யேற்றபுகழ்[5] நீலராசன்
எவ்வுயிர்க்கும் உயிராக யெங்கும்ஒன்றாய் நின்றோனே[6]
மன்றுலகெல் லாம்படைத்த மாயவரே மைத்துனரே
யென்றுநீல ராசன் ஈசுபரனைத்தொழுது[7] நின்றாரே

திருக்கயிலாயமலை! நெற்றிக்கண்ணையுடைய பரமனின் மலை! அரவம் ஆட, அருள் வடிவாய்த் தோன்றும் மலை! நஞ்சுண்ட கண்டனாகிய பெருமானின் உலகமாகிய மலை! உமையவளாகிய பார்வதிதேவியுடன் பரமன் வீற்றிருக்கிறான். தேவமகளிர் ஆலாத்தி ஏந்தி குரவையாடிப் பாடுகின்றனர் வானவரும், முனிவர்களும் போற்றித்தொழுது நிற்கிறார்கள். நீலனும், நீலியும் மகளிர் பலர் சூழ அங்கு தோன்றுகிறார்கள். கயிலைநாதனை நோக்கி, எங்கும் நிறைந்த இறைவனே! மண்ணுலகைப் படைத்த மாயவனே! படைத்த உலக உயிர்களுக்கெல்லாம் உயிராய் நிற்பவனே! உன்னைப் பாடும் அடியவர்களையெல்லாம் வாழ்வித்து அருள்புரிய வேண்டும் என்றெல்லாம் வேண்டித் தொழுகின்றார்கள்.

சு.சொல் : 1. விளியார் 2. விளியார் 3 தொளுது 4 பாற்வதி 5. புகள் 6 நின்றோநே 7. தொளுது.

Kayilaiyil Nīlaṉum Nīliyum

kaṇṇutalōṉ vīṟṟirukkum kayilāca māṉatilē
vaṇṇamuḷḷa nīlaṉuṭa maṅkaiyarum nīliyumāy
kayilāca māṉatilē karaikaṇṭaṉār lōkattilē
ayilārum vēlviḻiyār ālātti ēntivara
teyvārum vāṉavarum civaṉāraip pōṟṟiceyya
maiviḻiyār kuravaiyiṭa māmuṉivōr toḻutuniṟka
āṭaravum kayilācam aruḷirukkum kayilācam
antanalla kayilaiyilē ātiyumai pārvatiyum
irukkumanta nērattilē yēṟṟapukaḻ nīlarācaṉ
evvuyirkkum uyirāka yeṅkumoṉṟāy niṉṟōṉē
maṉṟulakel lāmpaṭaitta māyavarē maittuṉarē
yeṉṟunīla rācaṉ īcuparaṉaittoḻutu niṉṟārē

Nīlaṉ and Nīli at Kailash

Kailash the seat of the God with forehead studded with one eye
Colourful Nīlaṉ went there with Nīli and her women,
In Kailash, the world of the God of poisoned neck
With the dancing snake around his neck, worshipped
By the sages all around, accompanied
By Umaiyāḷ, Pārvati, his consort
To God he addressed Oh! omnipresent
Oh! creator of all, Give thy grace to all those
Who sing thee and your servants

சோழன்மகன் நீலன்

இலங்காய் நீலராசன் இயல்பெறும் கயிலைதனில்
துலங்கவே வரங்கள் வேண்டிச் சொல்லெடுத்துப் பாடவண்ணம்
மலங்கிடும் அடியோர்தம்மை வாழ்விக்க[1] வேணுமென்று
நலம்பெறும் கயிலைவாழும்[2] நாதனைத் தொழுதுநின்றாரே

நின்றஅந்த நேரத்திலே நீலதம் புரானார்
நேருடனே[3] பிறந்ததங்கை யிசக்கி யம்மனோடே
நன்றெனவே சோழராசன்[4] தனக்கு மகவாகி
நரவுலகில் தென்பழவை[5] நகரழித்த பின்பு

அடியவர்களாகிய தங்களை வாழ்விக்க வேண்டுமென்று தொழுது நிற்க, அவ்விறைவன் அருளால் தானும், தங்கை இசக்கியுமாகத் தென்பழவை என்னும் நகரிலே சோழ மன்னனின் மக்களாகப் பிறந்து வளர்கிறார்கள்.

தம்பிரான் - கடவுள்.

சு.சொல் : 1. வாள்விக்க 2, வாளும் 3, நேருடநே 4, சோவேசன் 5. பளவை.

Cōḻaṉmakaṉ Nīlaṉ

ilaṅkāy nīlarācaṉ yiyalpeṟum kayilaitaṉil
tulaṅkavē varaṅkaḷvēṇṭic colleṭuttup pāṭavaṇṇam
malaṅkiṭum aṭiyōrtammai vāḻvikka vēṇumeṉṟu
nalampeṟum kayilaivāḻum nātaṉait toḻutuniṉṟārē
niṉṟaanta nērattilē nīlatam purāṉār

nēruṭaṉē piṟantataṅkai yicakki yammaṉōṭē
naṉṟeṉavē cōḻarācaṉ taṉakku makavāki
naravulakil teṉpaḻavai nakaraḻi ttapiṉpu

Cōḻaṉ's son, Nīlaṉ

In the beautiful court at Kailash
The devotees stood singing and
Begging for blessings, Beseeching
God and worshipping the God of Kailash
At this juncture Nīla*tampurāṉ*, (Godly Nīlaṉ)
Along with his sister Icakki *Ammaṉ*
Was born as the offspring of Cōḻā king,
In the city of Teṉpaḻavai.

நீலனின் தவம்

சென்றுசிவன் கயிலையிலே நீலதம் புரானார்[1]
சிறப்பாக நீலியம்மை சிவனிடத்தைத்தான் கண்டு
கண்டபோது தெண்டம்பண்ணி நீலதம்பு ரானார்
கரைகண்டர் மனமுருகி கரகூவி யதுபெறவே
இன்றுநாம் அந்தரத்தி லேதவங்கள் நின்று
ஏற்றரிய தவங்கள்செய்தால் சென்றுவரம் தருவார்
புவனமெல்லாம் படைத்தவனே[2] புண்ணியனே[3] யென்று
புகழ்பெரிய[4] நீலதெய்வம் பொன்னும்செப்புக் குடத்தில்
தவனமதைத் தானமர்த்திச் சங்கடங்கள் தீர்க்கும்[5]
சங்கரரைத் தான்பணிந்து தான்தவங்கள் நிற்க
அடவுடனே[6] பொன்னாலே பொன்னுசெப்புக் குடத்தில்
அன்புடனே[7] பொன்னூசி தன்னையதில் நாட்டி
நாட்டியதோர் ஊசியிலே நீலதம்பு ரானார்
நல்லதிருக் கால்மிதித்து வல்லதவம் செய்தார்
நிற்கும்பொன் னூசியிலே நீலதம் புரானார்
நிலமைதவ றாமல்சிவன் கருத்தின்படி சொல்ல
ஆண்டவனே[8] யெந்தனுக்கு அழியாவரம் தருவீர்
ஆதிசிவன் சத்திஉமை அம்மையைக்கும் பிடுவார்

சிலகாலங் கழித்து நீலனும் நீலியும் மீண்டும் கயிலாயம் செல்கிறார்கள். நீலகண்டர் தம் மனமுருகித் தாங்கள் விரும்பிய வரத்தைத் தரவேண்டுமேயானால் அந்தரத்திலே நின்று கொடிய தவத்தை மேற்கொள்ள வேண்டும் என்று முடிவெடுக்கிறார்கள் அம்முடிவின்படி இறைவனை வணங்கி ஒரு பொற்குடத்தில் பொன் ஊசி ஒன்றை நாட்டுகிறார்கள். நீலனானவன் அந்தப் பொன் ஊசியின் மீது தனது கால்களை ஊன்றித் தவம் செய்யத் தொடங்கினான். நீலியும் துணை நின்றாள். சிறிதும் தளர்ச்சியடையாமல் தவத்தை மேற்கொண்ட நீலன், ஆண்டவனே! உமையம்மையே! என்றும் அழியாநிலையாகிய பெரும்பேற்றினை எங்களுக்கு அளித்து அருள்புரியுங்கள் என்று வேண்டித் துதித்து வந்தான்.

சு.சொல் : 1. புறனார் 2. படைத்தவநே 3. புண்ணியநே 4, புகள் 5, தீற்கும் 6, அடபுடநே 7, அன்புடநே 8, ஆண்டவநே.

Nīlaṉiṉ tavam

ceṉṟucivaṉ kayilaiyilē nīlatam purāṉār
ciṟappāka nīliyammai civaṉiṭattait tāṉkaṇṭu
kaṇṭapōtu teṇṭampaṇṇi nīlatampu rāṉār
karaikaṇṭar maṉamuruki karakūvi yatupeṟavē
iṉṟunām antaratti lētavaṅkaḷ niṉṟu
ēṟṟariya tavaṅkalceytāl ceṉṟuvaram taruvār
puvaṉamellām paṭaittavanē puṇṇiyanē yeṉṟu
pukaḷperiya nīlateyvam poṉṉumceppuk kuṭattil
tavaṉamatait tāṉamarttic caṅkaṭaṅkaḷ tīrkkum
caṅkararait tāṉpaṇintu tāṉtavaṅkaḷ niṟka
aṭavuṭaṉē poṉṉālē poṉṉuceppuk kuṭattil
aṉpuṭaṉē poṉṉūci taṉṉaiyatil nāṭṭi
nāṭṭiyatōr ūciyilē nīlatampu rāṉār
nallatiruk kālmitittu vallatavam ceytār
niṟkumpoṉ ṉūciyilē nīlatam purāṉār
nilamaitava rāmalcivaṉ karuttiṉpaṭi colla
āṇṭavaṉē yentaṉukku aḷiyāvaram taruvīr
āticivaṉ cattiumai ammaiyaikkum piṭuvār

The penance of Nīlaṉ

Reaching Civaṉ's Kailash, Godly Nīlaṉ,
And glorious Nīli saw the abode of Civaṉ,
Fell prostrate and godly Nīlaṉ,

With hands folded in worship resolved
To undertake rigorous penance
To achieve his aim and desire
From the Creator of the universe, the purest
Well famed Godly Nīlan̲ wanted to do penance
In gold pot with total control of mind
Evil remover, Caṅkaran̲, bent before him,
And set a gold needle in a gold pot
On that needle Nīlan̲ stood
And did penance extreme and addressing Civan̲
Asked for the rare boon of immortality,
And called O! Ancient Civan̲! Oh Cakti

சிவன் உமையை வினவுதல்

கும்பிடவே நீலகுல தெய்வகுல நீலி
கோலத்தைக்கண் டரனாரும் கொண்டாடிக் கொண்டார்
அம்பிட்டதேவி வேல்விழியாள்[1] அம்மையுமை யாளே
ஆதிதவம் செய்கிறது ஆரென்று சொல்லாயோ

இன்று குலதெய்வமாக விளங்கும் நீலனும், நீலியும் அன்று மேற்கொண்ட கடுந்தவத்தைக் கண்ட சிவபெருமான் நீலனைப் பாராட்டித் தன் தேவியைப்பார்த்து வேல்விழியாளே! தவம் செய்யும் இவன் யார் தெரியுமா எனக் கேட்கிறான். உமையும் சொல்லத் தொடங்குகிறாள்.

சு.சொல் · 1 விளியாள்

Civan̲ Umaiyai vin̲avutal

kumpiṭavē nīlakula teyvakula nīli
kōlattaikkaṇ ṭaran̲ārum koṇṭāṭik koṇṭār
ampiṭṭatēvi vēlviḻiyāḷ ammaiyumai yāḷē
ātitavam ceykir̲atu āren̲r̲u collāyō

Civan̲ enquires Umā

Seeing the worship of Nīlan̲ and Nīli
Blue necked God much appreciated

And enquired of his consort, the arrow eyed Umā
Who that person was.

உமை நீலனின் முற்பிறப்பைக் கூறத் தொடங்குதல்

சொல்லக்கேளும் சிவன்முதலே நீலன்பிறந் திறந்த
சொல்பெரிய நீலன்முப் பிறப்பெல்லாம் தொலையாது
சொல்லைக் கேளுமக தேவரே யின்று
சொல்பெரிய நீலன் முப்பிறப் பெல்லாம்

உமாதேவி சிவனை நோக்கி, மகாதேவரே! நீலன் இவ்வுலகிலே பிறந்து இறந்த பிறப்பின் வரலாற்றை எல்லாம் சொல்கிறேன். அருள்கூர்ந்து கேளுங்கள் என்று கூறி நீலன் வர்லாற்றைச் சொல்லத் தொடங்கினாள்.

Umai Nīlan̲in̲ mur̲pir̲appaik kūr̲at toṭaṅkutal

collakkēḷum civan̲mutalē nīlan̲pir̲an tir̲anta
colperiya nīlan̲mup pir̲appellām tolaiyātu
collaik kēlumaka tēvarē yin̲r̲u
colperiya nīlan̲ muppir̲ap pellām

Umā describes Nīlan̲'s previous birth

Oh! supreme Civan̲! Listen to the story,
Of the previous birth of Nīlan̲
Listẹn Oh God! Listen to the birth,
And Death and Nīlan̲ of yore,

சோழனுக்கு மகவின்மை

அல்லல் தன்னைத் தவிர்த்தே உலகத்தில்
அன்புடனே[1] சோழன்[2] ராச்சியம் ஆண்டதும்
மூன்று புவிக்குள் ஒருபிரி வாகவே
முன்முறை சோழன் மகவத் திருந்தநாள்
இருந்தானே சோழன்[2] பிள்ளையில் லாமலே
இடைந்தான் மகவாசையாலே நித்தம்
கிடந்தான் சிவன்சிந்தை யறியவே

தமிழ்நாட்டின் மூன்று பிரிவுகளில் ஒன்றான சோழநாட்டை ஆண்டுவந்த சோழமன்னன் மகப்பேறு இல்லாமல் வருந்தியிருந்தான். பிள்ளைப்பேறு கிடைக்காதா

என்னும் ஆசையோடு நாள்தோறும் உம்மையே சிந்தித்து இடைவிடாது தொழுது வந்தான்.

அல்லல் - துன்பம். மூன்று பிரிவு - சேர, சோழ, பாண்டியப் பேரரசுகள். இடைதல் - வசங்கெடுதல்.

சு.சொல் : 1. அன்புடனே 2 சோளன்.

Cōlanukku makavinmai

allal tannait tavirttē ulakattil
anputanē cōlan rācciyam āntatum
mūnru puvikkul orupiri vākavē
munmurai cōlan makavat tiruntanāl
iruntānē cōlan pillaiyil lāmalē
itaintān makavācaiyālē nittam
titantān civancintai yariyavē

Cōlan is childless

Avoiding evil and pain
Cōlan reigned his land with love over,
One of the three divisions of the world
In the days of yore, he remained issueless
And with deep longing for a child,
He worshipped Civan in his mind, day in day out

இறையருள் புரிதல்

தெய்வப் பிரமாவும்[1] நீரு மறையவே[2]
வடந்தனில் கண்துயின்ற பெருமாளும்
மாமுதலோரும் நீரு மற்றுமுள் ளோரும்
உடன்சிறப் பாக வீசிய போதனை
உற்றசோழன்[3] திருதேவி வயிறதில் படைத்தது
படைத்தது மன்று தெரியாதோ வென்னா
பார்பதி[4] யாளுமை யம்மையும் சொல்வாள்

தாங்கள் மனமிரங்கிப் பிரமாவிடம் கூறினீர்கள். திருப்பாற்கடலில் ஆலிலையின்மேல் பள்ளிகொண்ட திருமாலும், தேவர் முதலானோரும் அருள்புரிய உங்கள் அனைவரின் திருவருளால் சோழமாதேவி கருவுற்றாள்.

பிரமா - பிரமதேவன். சிருட்டித் தொழிலைச் செய்யுமோர் தேவன்; மும்மூர்த்திகளில் ஒருவன்; திருமாலின் திருநாபிக் கமலத்தில் அவதரித்தவன்.

சு.சொல் : 1. பிறமா 2 மறய 3. சோளன் 4. பாற்பதி

Iṟaiyaruḷ puṟital

teyvap piramāvum nīru maṟaiyavē
vaṭantaṉil kaṇtuyiṉṟa perumāḷum
māmutalōrum nīru maṟṟumuḷ ḷōrum
uṭaṉciṟap pāka vīciya pōtaṉai
uṟṟacōḻaṉ tirutēvi vayiṟatil paṭaittatu
paṭaittatu maṉṟu teriyātō veṉṉā
pārpati yāḷumai yammaiyum colvāḷ

God grants grace

You pleaded with Pirammā
And Perumāḷ who slept on the rope
In the sea of milk was requested
By the heavenly chiefs and other Gods (tēvā)
"By all your grace Cōḻaṉs wife carried a child
Don't you know this?" asked Umā

சோழன் மகப்பேறு பெறுதல்

பத்து மாதமும் சென்ற பொழுதிலே[1]
　　பாலனும் பாலகியாள் பிறந்ததும்
சற்றும் குறையில்லாதே யந்தச்
　　சோழனும்[2] தங்கத்திருத் தொட்டில்கட்டி வளர்த்ததும்[3]

திங்கள் பத்தும் கடந்ததும், சோழமாதேவி மகன் ஒருவனையும், மகள் ஒருத்தியையுமாக மக்கள் இருவரைப் பெற்றெடுத்தாள். சோழனும் மகிழ்ச்சியில் மூழ்கிக் குழந்தைகளுக்குப் பொன்னாலே தொட்டில் செய்து அதில் கிடத்திச் சிறப்பித்தான்.

சு.சொல் : 1 பொளுதிலே 2, சோளனும் 3, வளற்த்ததும்

Cōḻaṉ makappēṟu peṟutal

pattu mātamum ceṉṟa poḻutilē
　　pālaṉum pālakiyāḷ piṟantatum

caṟṟum kuṟaiyillātē yantac
cōḻaṉum taṅkattirut toṭṭilkaṭṭi vaḷarttatum

Cōḻaṉ gets children

Ten months later, a boy and a girl
Were born, blameless and faultless
Cōḻaṉ brought them up
In cradle made of gold.

மக்களின் தீச்செயல்

பக்தி சோதிக்கப் பிறந்ததோர் பாலகன்
பயின்றெ[1] டுத்துமே செம்பியன் வெறுத்ததும்
புத்தி விபரத்தினால் பிள்ளை ரெண்டுமே[2]
பேய்களாய்ச் சென்றந்த நாட்டை யழித்ததும்[3]

சோழனும், தேவியும் மிகச் செல்லமாகக் குழந்தைகளை வளர்க்கத் தொடங்கினார்கள். ஆனால் சோழனின் பக்தியைச் சோதிப்பதற்காகவே நீங்கள் பிறக்கச் செய்த அம்மாயக் குழந்தைகள் சிறிது வளர்ந்து கருத்தறியும் பருவமடைந்தார்கள். அப்பருவத்தில் சோழன் வெறுப்புக்கு ஆளானார்கள் அதாவது இரண்டு குழந்தைகளும் இரவில் பேய்களாய் உருவெடுத்துக் காட்டில் புகுந்து உயிர்களை அழிக்கத் தொடங்கினார்கள்.

செம்பியன் - சோழன்.

சு.சொல் : 1 பைன்றெ 2 ரண்டுமே 3. அளித்ததும்

Makkaḷiṉ tīcceyal

pakti cōtikkap piṟantatōr pālakaṉ
payiṉṟe ṭuttumē cempiyaṉ veṟuttatum
putti viparattiṉāl piḷḷai reṇṭumē
pēykaḷāyc ceṉṟanta nāṭṭai yaḻittatum

Evil actions of the children

Children born as a test of devotion *(pakti)*
Grew of age and Cōḻaṉ hated them,
For the duo turning as devils atnight
Destroyed life and the land

குழந்தைகளைக் காட்டில் விடச்செய்தல்

நாட்டுக்குந் தென்பழ[1] கைக்கு மாகவே
நல்ல சோழன்தா னாசை[2] வெறுத்ததும்
கூட்டுக் கிளிபோ லிருந்தது போதுமே
கொண்டுபோய்க் காட்டிலே போட்டுவா யென்றதும்

தென்பழகை உள்ளிட்ட நாட்டுமக்கள் அனைவராலும் போற்றப்பட்டவன் சோழன். பெருமையோடு வாழ்ந்த அவனது அமைதியான வாழ்க்கையில் குழந்தைகளின் பேய்க்குணம் பெருந்துன்பத்தை அளித்துவிட்டது. குழந்தைகளை வெறுத்தான். பழைய தனிமையே மேலானது என்று உணர்ந்தான். இந்தப் பேய்களைக் கொண்டுபோய்க் காட்டிலே வீசியெறிந்துவிட்டு வாருங்கள் என்று கட்டளையிட்டான்.

சு.சொல் : 1 பளகை 2 சோளன்

Kuḻantaikaḷaik kāṭṭil viṭacceytal

nāṭṭukkun teṉpaḻa kaikku mākavē
nalla cōḻaṉtā ṉācai veṟuttatum
kūṭṭuk kiḷipō liruntatu pōtumē
koṇṭupōyk kāṭṭilē pōṭṭuvā yeṉṟatum

Children ordered to be left in the forest

Cōlaṉ of good repute in the state
Teṉpaḻavai hated the children
"Enough that they remained like caged parrots
Leave them in the forest" he ordered

பணியாளர் காட்டில் விடுதல்

போட்டுவா வென்று தலையாரி மார்களும்
பிள்ளை ரண்டையும்[1] பிடித்துக்கொண்டு[2] போனதும்
வீட்டைவிட்டு அப்புறம் காட்டில் முளைத்தது
வேப்ப மரத்தடி மூட்டிலே யிட்டதும்
போட்ட பொழுதிலே[3] நீலனும் நீலியும்
பின்ன பேதகம் வராமலே நின்றார்

ஆணையை ஏற்ற பணியாளர்கள் குழந்தைகள் இருவரையும் தூக்கிச்சென்று காட்டிலிருந்த ஒரு வேப்பமரத்தடியில் போட்டுவிட்டுத் திரும்பினார்கள். நீலனுக்கும் நீலிக்கும் எந்தக் கேடும் ஏற்படவில்லை.

தலையாரி - காவற்காரன். பின்னபேதகம் - விரோதம்.

சு.சொல் : 1 ரண்டு 2. கொடு 3 பொழுதிலே.

Paṇiyāḷar kāṭṭil viṭutal

pōṭṭuvā veṉṟu talaiyāri mārkaḷum
piḷḷai raṇṭaiyum piṭittukkoṇṭu pōṉatum
viṭṭaiviṭṭu appuṟam kāṭṭil muḷaittatu
vēppa marattaṭi mūṭṭilē yiṭṭatum
pōṭṭa poḻutilē nīlaṉum nīliyum
piṉṉa pētakam varāmalē niṉṟār

Servants leave the children in the forest

Ordered to place the children in the forest,
The village bailiff caught them both,
Left them under the neem tree,
Far from the house. From that moment
Nīlaṉ and Nīli stood there
Not being affected by any other problem

நீலன், நீலியின் முற்பிறவியை உமை கூறிமுடித்தல்

காட்டிலே வாழும்[1] மிருகங்கள் தன்னை
கையா[2] லேதான் கொன்ற பழியினால்[3]
நாட்ட மாகவே குண்டோத வகையினால்
நாடும் நகரும் அறியப் பிறந்ததாய்
பிறந்த பின்புவரம் வாங்கவே வந்ததாய்
இலங்கிய நீலன்இவ[4] னென்றுஉரைத் தாரே

காட்டிலே வாழ்ந்த நீலனும் நீலியும் மிருகங்களைக் கொன்று வாழ்ந்த பழி, பாவங்களால் நாடறியச் சோழன் மக்களாகப் பிறந்தார்கள். இன்று தங்களிடம் வரம் பெற வேண்டுமென்று வந்து தவத்தை மேற்கொண்டுள்ள நீலனே இவன் என்று உமையம்மை கூறி முடித்தாள்.

சு.சொல் : 1. வாளும் 2. கய் 3 பளி 4. இவநென்று.

Nīlaṉ Nīliyiṉ muṟpiṟaviyai Umai kūṟimuṭittal

kāṭṭilē vāḻum mirukaṅkaḷ taṉṉai
kaiyā letāṉ koṉṟa paḻiyiṉāl

nāṭṭa mākavē kuṇṭōta vakaiyiṉāl
nāṭum nakarum aṟiyap piṟantatāy
piṟanta piṉpuvaram vāṅkavē vantatāy
ilaṅkiya nīlaniva ṉeṉṟuurait tārē

Umā finishes narration of their previous birth

With the sin of killing with their own hands
All the animals of the forest,
They were born as Cōḻā's children.
This being known to all the people,
The same Nīlaṉ has come here
To get your blessing.

சிவபெருமானின் மகிழ்ச்சி

நீல னிவனென்று சொல்ல நீலகண்டனார்
மனமகிழ்ந்து[1] சிவனாரும் வல்லவன்காண் என்றுரைத்தார்
என்றுமந்த சிவனாரும் ஏற்றதிரு வார்த்தை சொல்வார்
வரமதுன்முன் கொடுக்கவில்லை மாயமென் சுரூபமென்றார்
அறந்தழைக்க[2] சிவன்முதலோன் அம்மைபார்வதி[3] சொல்லவே

நீலன் இவன் என்று சொல்லிய உமையம்மையின் கூற்றைக் கேட்டு மனம் மகிழ்ந்த சிவபெருமான், நீலன் யாவற்றிலும் வல்லவனாவான். அவனுக்கு நான் வரம் ஏதும் கொடுக்கவில்லை. இருப்பினும் என் சொரூபமாகவே விளங்குகின்றான் என்று கூறினார்

மாயம் - தந்திரம், அழகு. சுருபம் - உருவம்.

சு.சொல் : 1 மகிள்ந்து 2 தளைக்க 3 பாற்வதி

Civaperumāṉiṉ makiḻcci

nīlaṉi vaṉeṉṟu collanīla kaṇṭaṉār
maṉamakiḻntu civaṉārum vallavaṉkāṇ eṉṟuraittār
eṉṟumanta civaṉārum ēṟṟatiru vārttai colvār
varamatuṉmuṉ koṭukkavillai māyameṉ curūpameṉṟār
aṟantaḻaikka civaṉmutalōṉ ammaipārvati collavē

Civaṉ's Happiness

Hearing the story of Nīlaṉ, blue necked Civaṉ,
Happy at heart averred, "Nīlaṉ is powerful

And clever", saying this he added that
He did not give any special grace
His figure, like mine, is elusive
'Let virtue thrive, said Pārvati.

நீலனுக்கு வரமளிக்குமாறு உமை கூறுதல்

பிறந்ததுவும் அரனறிவார் இறந்ததையும் சிவனறிவார்
அறந்தழைக்க[1] பெருமையுள்ள அழகுடைய[2] நீலனுக்கு
புத்தியுடன் நினைத்தகல்வி பொருந்த வரம்கொடுக்கவுமே
வரங்கொடுப்போம் என்றுசொல்லி மங்கைபார்வதி[3] சொல்லுவாளே

நீலனுடைய முற்பிறவியைப் பற்றியும் அறிந்தவன் இறைவன். ஆதலின் உமையம்மை சிவபெருமானை நோக்கி, அவன் நினைத்த கல்வி அறிவை அவன் பெறுமாறு வேண்டிய வரத்தைக் கொடுப்பது நம்முடைய கடமையாகும் என்று வற்புறுத்தினாள்.

அரன் - சிவன்.

க.சொல் : 1 தளைக்க 2 அளகு 3. பாற்வதி

Nīlaṉukku varamaḷikkumāṟu Umai kūṟutal

piṟantatuvum araṉaṟivār iṟantataiyum civaṉaṟivār
aṟantaḻaikka perumaiyuḷḷa aḻakuṭaiya nīlaṉukku
puttiyuṭaṉ niṉaittakalvi porunta varamkoṭukkavumē
varaṅkoṭuppōm yeṉṟucolli maṅkaipārvati colluvāḷē

Umā requests Civaṉ to grant grace to Nīlaṉ

"Oh God! Thou knoweth birth! Thou knoweth death!
For the growth of virtue, please grant to famous Nīlaṉ
Knowledge proper. Let us give him this boon"
Said Pārvati to Civaṉ

நீலனை அழைத்துவர அரன் ஆணை

இரங்கியே சிவனாரும் ஏற்றநந்தி[1] தனையழைத்து[2]
நந்திதனை[3] வரவழைத்து[4] நாயகனார் ஏதுசொல்வார்
சிந்தையுள்ள நீலனைத்தான் திருமுன்பே கொண்டுவாடா
கொண்டுவாடா வென்றுரைக்கக் குருநந்தி[5] வழிநடந்தார்[6]

உமையம்மையின் வேண்டுகோளைக் கேட்டு மனமிரங்கிய சிவபெருமான் உடனே நந்திதேவனை அழைத்தார். நீலனை உடனே என் முன்னே கொண்டு வருக என்று ஆணையிட்டார். ஆணையை ஏற்ற நந்திதேவன் விரைந்து புறப்பட்டார்.

நந்தி - நந்திதேவன்; சிவன் வாகனம்.

Nīlaṉai aḻaittuvara araṉ āṇai

iraṅkiyē civaṉārum ēṟṟananti taṉaiyaḻaittu
nantitaṉai varavaḻaittu nāyakaṉār ētucolvār
cintaiyuḷḷa nīlaṉaittāṉ tirumuṉpē koṇṭuvāṭā
koṇṭuvāṭā veṉṟuraikkak kurunanti vaḻinaṭantār

Civaṉ orders to bring Nīlaṉ

Civaṉ, with compassion, called Nanti,
And ordered him to fetch Nīlaṉ,
The good hearted person, in his presence,
Nantitēvār went off to bring Nīlaṉ.

நந்தி நீலனிடம் சென்று கூறுதல்

சடைகளது புரண்டாட தாமாகம் தானிலங்க
குடையெடுத்து நந்திதேவர்[1] கொண்டாடிச் சொல்லுவாராம்
உடையவனார் அருளாலே உற்றநந்தி வழிநடக்க[2]
தண்டமிழ்சேர்[3] நீலனுட தவத்தருகே சென்றுநின்று
சேரும்படி உனையழைக்கச்[4] சிவனாரும் என்னைவிட்டார்
வாருமடா நீலராசா வரந்தருவார் மகதேவர்
என்னாணை வாருமென்று யேற்றநந்தி சொன்னபோது

சடைகள் ஆடி அசையவும், இறைவனது வாக்காகிய ஆணையானது உள்ளத்திலே விளங்கவும், மகிழ்ச்சியோடு விரைந்து சென்ற நந்திதேவர் நீலன் இருந்த இடத்தை அடைந்தார். நீலனைப் பார்த்து, நீலராசனே! சிவபெருமான் உன்னை அழைத்து வருமாறு என்னை அனுப்பி இருக்கிறார். உடனே புறப்படுக! அப்பெருமான் உனக்கு வேண்டிய வரங்களைத் தரக் காத்திருக்கிறார் என்று கூறினார்.

சு.சொல் . 1 னந்தி 2 வளி 3 தண்டமிள் 4, உனையளைக்க

Nanti Nīlaṉiṭam ceṉṟu kūṟutal

caṭaikaḷatu puraṇṭāṭa tāmakam tāṉilaṅka
kuṭaiyeṭuttu nantitēvar koṇṭāṭic colluvārām

uṭaiyavaṉār aruḷālē uṟṟananti vaḻinaṭakka
taṇṭamiḻcēr nīlaṉuṭa tavattarukē ceṉṟuniṉṟu
cērumpaṭi uṉaiyaḻaikkac civaṉārum eṉṉaiviṭṭār
vārumaṭā nīlarācā varantaruvār makatēvar
eṉṉāṇai vārumeṉṟu yēṟṟananti coṉṉapōtu

Nanti speaks to Nīlaṉ

With plaited hair spread, with god's words
At heart, Nanti made his way
Towards Nīlaṉ urged by God's grace
Reached Nīlaṉ's place of penance
Civaṉ sent me to bring you
Come, Nīlā to Civaṉ who will
Grant you your prayer",
This is Civaṉ's order.

நீலனின் புறப்பாடு

ஆணைதனை மறுத்ததுண்டால் அரந்தனக்கு யேவவிது
நாணயமாய்[1] நீலராசன் நந்தியுடனே[2] நடக்க
பொன்னூசி விட்டிறங்கிப் புகழும்செப்பு[3]க் குடமுமிட்டு
வன்னமுள்ள பொன்னுநீலன் வழிநடந்து[4] நந்தியுடன்[2]

இறைவனின் அழைப்பைக் கேட்ட நீலன், இறைவனுடைய ஆணையை மறுப்பேனோ என்று கூறி, அன்பும் பக்தியும் மீதூர நந்தியுடன் செல்ல எண்ணினான். உடனே தான் தவம் செய்த ஊசியைவிட்டு இறங்கி அங்கிருந்த செப்புக்குடத்தையும் தாண்டி நந்தியுடன் சேர்ந்து நடக்கத் தொடங்கினான்

சு.சொல் : 1 னாணயமாய் 2 னந்தி 3 புகளும் 4. வ்ளி

Nīlaṉiṉ puṟappāṭu

āṇaitaṉai maṟuttatuṇṭāl arantaṉakku yēvavitu
nāṇayamāy nīlarācaṉ nantiyuṭaṉē naṭakka
poṉṉūci viṭṭiraṅkip pukaḻumceppuk kuṭamumiṭṭu
vaṉṉamuḷḷa poṉṉunīlaṉ vaḻinaṭantu nantiyuṭaṉ

Nīlaṉ starts

"Hearing the call of God, can I refuse?",
Said Nīlaṉ and getting down from

The gold needle in the gold pot,
Walked with Nanti to Civaṉ.

கயிலையில் நீலன்

காட்டானைப் பொய்கைவிட்டுக் கயிலாச மலையதிலே
ஆண்டவனார் வீற்றிருக்கும் அழகுவெள்ளி[1]க் கயிலையிலே
கூட்டைவிட்டுக் கொண்டுவந்தேன் கோலமுள்ள நீலனைத்தான்
தேட்டமுள்ள நீலன்தான் சென்றுநின்றார் சிவனாரிடம்

காடு, மலை, நீர்நிலைகள் ஆகியவற்றைக் கடந்து, சிவபெருமான் வீற்றிருக்கின்ற வெள்ளியங்கிரியாகிய கயிலை மலையை அடைந்தார்கள் தங்கள் ஆணையின்படி, தவம் செய்து கொண்டிருந்த நீலனை அழைத்து வந்துவிட்டேன் என்று கூறி நின்றான் நந்தி தேவன். நீலனும் இறைவனை அணுகி நின்றான்.

தேட்டம் - கவலை.

க.சொல் . 1 அளகு

Kayilaiyil Nīlaṉ

kāṭṭāṉaip poykaiviṭṭuk kayilāca malaiyatilē
āṇṭavaṉār vīṟṟirukkum aḻakuveḷḷi kayilaiyilē
kūṭṭaiviṭṭuk koṇṭuvantēṉ kōlamuḷḷa nīlaṉaittāṉ
tēṭṭamuḷḷa nīlaṉtāṉ ceṉṟuniṉṟār civaṉāriṭam

Nīlaṉ at Kailash

Leaving the forests, lakes and other places,
Nīlaṉ comes to Kailash - the white
Silvery abode of Civaṉ Nanti said,
"At your behest I've brought worried Nīlaṉ".

நீலனின் தொழுகை

பதம்பெறவே தொழுவாராம்[1] பார்வதியாள்[2] சிவன்தனையும்
கண்குளிர நோக்குவாராம் கையெடுத்துக் கும்பிடுவார்
வெளிகடந்து போகாமல் மேதினியைக் காத்தவனே[3]
யென்றுசொல்லி நீலதெய்வம் ஈசுபரனார் தனைத்தொழுது[4]
அக்கறுகு கொன்றைதும்பை அம்புலியோடு மணிந்து

நல்லரனார் மார்பதிலே நல்லரவம் ஆபரணம்
ஈஸ்பரரும்[5] இவரெனவே இயல்நீலன் தொழுதுநின்றார்

இறைவனை அணுகிய இருவரும் சிவபெருமானையும், உமா தேவியாரையும் மிகுந்த மகிழ்ச்சியோடு கண்டு களித்து கை தூக்கிக் கும்பிட்டார்கள். அக்கமாலையும் (உருத்திராட்சம்), அறுகும், தும்பையும் அணிந்து கொன்றை மாலை சூடி, மார்பிலே அரவாபரணம் விளங்கக் காட்சி அளித்த இறைவனைக் கண்டு, 'இந்த நிலவுலகத்தை அழியாது காக்கும் எம்பெருமானே' என்று கூறியவனாய்த் தொழுது நின்றான்.

பதம் - பக்குவம், மேதினி - பூமி. அக்கு - அக்கமாலை. அறுகு - அறுகம்புல்.

சு.சொல் : 1 தொளுவாராம் 2. பாற்வதி 3 காத்தவநே 4 தொளுது 5 ஞஸ்பரரும்.

Nīla<u>n</u>i<u>n</u> to<u>l</u>ukai

patampe<u>r</u>avē to<u>l</u>uvārām pārvatiyāḷ civa<u>n</u>ta<u>n</u>aiyum
kaṇkuḷira nōkkuvārām kaiyeṭuttuk kumpiṭuvār
veḷikaṭantu pōkāmal mēti<u>n</u>iyaik kāttava<u>n</u>ē
ye<u>n</u><u>r</u>ucolli nīlateyvam īcupara<u>n</u>ār ta<u>n</u>aitto<u>l</u>utu
akka<u>r</u>uku ko<u>n</u><u>r</u>aitumpai ampuliyōru maṇintu
nallara<u>n</u>ār mārpatilē nallaravam āparaṇam
īspararum ivare<u>n</u>avē iyalnīla<u>n</u> to<u>l</u>utuni<u>n</u><u>r</u>ār

Nīla<u>n</u> worships

They worshipped the feet of Pārvati,
And gazed long at Civa<u>n</u> with upheldhands,
'Oh God! Thou protector of the world'
Saying this, with folded hands in worship,
They identified Civa<u>n</u> with his garlands of
Harialli grass, Lecucas, Indian Laburnum and the ornamental
Garland like cobra on his chest they
Stood worshipping long.

இறைவன் வினாவும் நீலன் விடையும்

பாசுபதம் கொடுக்கவென்று பரமசிவன் மனதிரங்கி
எங்கிருந்து வாறாயோடா இலங்கியதோர் நீலராசா
அங்கேயொன்றும் நானறியேன் ஆதிசிவ னேகேளும்[1]

பெற்றாரை நானறியேன்[2] பேருயிட்டா ரொருவரில்லை
உற்றா ருடன்பிறந்தார் உள்ளோரும் நீரல்லவோ

நீலனைக் கண்ட சிவபெருமான் சிறந்த வெகுமதியைக் கொடுக்க வேண்டுமென்று உள்ளம் கொண்டவராய், நீலனே! நீ எங்கிருந்து வருகிறாய்? என்று கேட்டார். ஐயனே! என்னுடைய ஊர் எது? பெற்றோர் யார்? எனக்குப் பேரிட்டவர் யார்?. நான் எங்கிருந்து வருகிறேன் என்பனபற்றி அடியேன் ஒன்றும் அறியேன். எனக்கு உற்றாரும், பெற்றோரும், உறவினரும், உடன் பிறந்தவரும், தாங்களே ஆவீர் என்று கூறி வணங்கினான்

பாசுபதம் - பசுபதிபாணம். உற்றார் - உறவோர், சினேகர்.

சு.சொல் : 1 நேகேளும் 2 னானறியேன்.

Iraivan vinavum Nilan vitaiyum

pācupatam koṭukkavenru paramacivan manatiranki
eṅkiruntu vārāyōṭā ilaṅkiyatōr nīlarācā
aṅkēyonrum nānariyēn āticiva nēkēḷum
perrārai nānariyēn pēruyiṭṭā roruvarillai
urrā ruṭanpirantār uḷḷōrum nīrallavō

God's Query and Nilan's answer

Desirous of giving a blessing, Paramacivan
Took pity on Nilan and asked him
From where he came 'Nilan replied'
"Oh! Civan! Hear me. I know nothing
Of my parents, birthplace and who
Gave us names. you are the one Being
All for us, parents, brothers..."

இறைவன் வரமளிக்க முடிவு செய்தல்

புத்தியுள்ள நீலனென்று[1] புகழ்ந்துகொண்டார்[2] நீலராஜன்
இத்தனைக்கும் புத்தியுள்ளோர் இவனைப்போல் ஒருவரில்லை
சித்தம்வைத்துச் சிவனாரும் திறல்வீரன் நீலனுக்கு 160
மெத்தவங்கே மனமகிழ்ந்து[3] வெகுவரந்தந் தனுப்புகிறேன்
ஆரணங்கே சொன்னபோது அழகுடைய[4] நீலனுக்கு
கந்தனுடன் மனமகிழ்ந்து கரைக்கண்டரும் ஏதுசெய்தார்

தன்னையே உற்றார், பெற்றோராகக் கருதிய நீலனின் பேச்சைக் கேட்ட இறைவன், நீலன் சிறந்த புத்திசாலி. இவனைப் போன்ற உள்ளம் உடையவர் வேறு யாரும் இல்லை என்றெல்லாம் எண்ணி மகிழ்ச்சியடைந்தவராய் உமையம்மையைப் பார்த்து, தேவியே! திறமையும், வீரமுமிக்க நீலனுக்கு வேண்டிய வரங்களைக் கொடுத்தனுப்புகிறேன் என்று கூறி மகிழ்ச்சியடைந்தார்.

சித்தம் - உள்ளம். திறல் - வலி.

சு.சொல் : 1 நீலநென்று 2. புகள்ந்து 3 மகிள்ந்து 4 அள்கு

Iṟaivaṉ varamaḷikka muṭivu ceytal

puttiyuḷḷa nīlaṉeṉṟu pukaḻntukoṇṭār nīlarājaṉ
ittaṉaikkum puttiyuḷḷōr ivaṉaippōl oruvarillai
cittamvaittuc civaṉārum tiṟalvīraṉ nīlanukku
mettavaṅkē maṉamakiḻntu vekuvarantan taṉuppukiṟēṉ
āraṇaṅkē coṉṉapōtu aḻakuṭaiya nīlaṉukku
kantaṉuṭaṉ maṉamakiḻntu karaikkaṇṭarum ētuceytār

God decides to give a grace

God praised Nīlaṉ as a brainy person
There's none to equal his intelligence.
Civaṉ resolved to give the boons needed
To clever Nīlaṉ when Umā herself said so,
Civaṉ was pleased to give the boons to Nīlaṉ

வரமளிப்பதில் நீலகண்டர் கருத்து

வேலைசெய்தால் கூலியுண்டு மேன்மேலும் குன்றாது
ஆலவனம் போல்திரளும் அவனியிலே பேருமுண்டு
சிந்தையுடன் வரங்கள்தந்தால் சிறந்ததொரு அடியார்கள்
எந்தனுக்குப் படைத்துவைப்பார் ஈஸ்பரனை முன்னினைப்பார்
தந்தவர்கள் தான்மணக்கும்; தராதார்க் கேதுமில்லை

வேலைக்கு ஏற்ற கூலி கொடுப்பது அவ்வேலையை மேலும்மேலும் சிறப்படையச் செய்வதற்குத் தூண்டுகோலாகும். அதுவே ஆல் போல் தழைத்து வளரும் இந்த நிலவுலகத்தில் என்றும் புகழ் நிலைத்து நிற்கும். நீலன் அடியார்கள் பெருகுவார்கள். அவர்களுடைய பாராட்டும் கிடைக்கும் என்று உள்ளத்தில் நினைத்தார்.

வனம் - காடு.

Varamaḷippatil Nīlakaṇṭar karuttu

vēlaiceytāl kūliyuṇṭu mēṉmēlum kuṉṟātu
ālavaṉam pōltiraḷum avaṉiyilē pērumuṇṭu
cintaiyuṭaṉ varaṅkaḷtantāl ciṟantatoru aṭiyārkaḷ
entaṉukkup paṭaittuvaippār īsparaṉai muṉṉiṉaippār
tantavarkaḷ tāṉmaṇakkum; tarātārk kētumillai

The opinion of Nīlakaṇṭaṉ on giving grace

"There is reward for labour. It'll never diminish
It'll bring good and grow like the banyan.
If proper blessings are given the devotees
Present it back to us and think of God,
Those who give, grow and prosper
For those who do not give, there's nothing"

அரன் மகிழுமாறு நீலன் ஆட எண்ணுதல்

அந்தவகைப் படிபோலே அரனாரும் மனமகிழ்ந்து[1]
சேட்டமுள்ள சிவன்மகிழ[2] திருநடனம் ஆடவேணும்
வாட்டமறக் கேட்டவரம் மகதேவர் தரவேணும்
என்றுசொல்லி நீலராசன் என்னுடைய திருக்கூத்தை
மண்ணுலகம் தான்படைத்த மகாதேவர் பார்க்கவேணும்[3]
பார்க்கவேணு மென்றுசொல்லிப் பகட்டாக நீலன்சொல்ல

சிவபெருமானது உள்ளத்து மகிழ்ச்சியைக் கண்ட நீலன் அந்த இறைவன் மகிழ்ச்சி அடையுமாறு நடனம் ஆட வேண்டும். என்னுடைய நடனத்தைக் கண்டு மகிழ்ந்து சிறந்த வரங்களை எல்லாம் எனக்குத் தரவேண்டும் என்று எண்ணியவனாய் இறைவனைப் பார்த்து, இவ்வுலகத்தைப் படைத்தருளிய மகாதேவனே! என்னுடைய எளிய கூத்தைத் தாங்கள் கண்ணுற்று அருள வேண்டும் என்று வேண்டினான்.

சேட்டம் - அழகு (முதன்மை, மேன்மை, திறம்). வாட்டம் - சோர்வு. பகட்டு - இறுமாப்பு.

சு.சொல் : *1. மகிள்ந்து 2. மகிள 3 பாற்க்க*

Araṉ makiḻumāṟu Nīlaṉ āṭa eṇṇutal

antavakaip paṭipōlē araṉārum maṉamakiḻntu
cēṭṭamuḷḷa civaṉmakiḻa tirunaṭaṉam āṭavēṇum

vāṭṭamaṟak kēṭṭavaram makatēvar taravēṇum
eṉṟucolli nīlarācaṉ eṉṉuṭaiya tirukkūttai
maṇṇulakam tāṉpaṭaitta makātēvar pārkkavēṇum
pārkkavēṇu meṉṟucollip pakaṭṭāka nīlancolla

Nīlaṉ wants to dance to please Civaṉ

In this manner, Civaṉ growing happy,
Nīlaṉ wanted to dance to enthral beautiful Civaṉ,
To get the desired grace without fail,
"Let the creator of the universe see my dance,
Let Him see my dance" averred Nīlaṉ

நீலன் ஆடத்தொடங்குமுன்

ஆர்வமுள்ள சிவனாரும் அவன்தனைக்கண் டேதுசொல்வார்
காதாட்ட நீலதெய்வம் கண்ணுருட்ட[1] நீலதெய்வம்
பிள்ளைபோலே நடந்துவந்தேன் பெரியோனே[2] பரமசிவா
நல்லநல்ல சமர்த்தனென்று[3] நாதன்கொண் டாடிக்கொண்டார்
கொண்டாட்டத் தோடேநான்[4] குணத்தையும்பார் கோலத்தையும்பார்
தண்டா மரையுரையும் சரஸ்பதி முகத்துரையும்
எண்டிசையும் புகழ்நீலன்[5] இலங்கும்தெய்வ கன்னிபோலே
உண்டான திருக்கூத்தை உடையவரே பாருமென்று

முறையாகக் காதினை அசைப்பதிலும், கண்ணை உருட்டுவதிலும் சிறுபிள்ளை போல நடப்பதிலும் வல்லவனாகிய நீலன் ஆடத் தொடங்கியதைக் கண்ணுற்றார். எல்லோராலும் புகழப்படுகின்ற நீலன் தெய்வ கன்னியைப் போல நின்று ஆடத் தொடங்குகிறான். அவனுடைய ஆட்டமும், குணமும், அலங்காரமும் தாமரையில் வீற்றிருக்கின்ற கலைமகளின் முகத்துக்கு ஒப்பாக விளங்கின.

சமர்த்தன் - சாமார்த்தியன், வல்லபன்.

சு.சொல் : 1 கண்ணுனுட்ட 2 பெரியோநே 3 சமர்த்தநென்று 4 னாந் 5. புகள்

Nīlaṉ āṭat toṭaṅkumuṉ

ārvamuḷḷa civaṉārum avaṉtaṉaikkaṇ ṭētucolvār
kātāṭṭa nīlateyvam kaṇṇuruṭṭa nīlateyvam
piḷḷaipōlē naṭantuvantēṉ periyōṉē paramacivā

nallanalla camarttanenru nātankoṇ ṭāṭikkoṇṭār
koṇṭāṭṭat tōṭēnān kuṇattaiyumpār kōlattaiyumpār
taṇṭā maraiyuraiyum caraspati mukatturaiyum
eṇṭicaiyum pukaḻnīlan ilaṅkumteyva kannipōlē
uṇṭāna tirukkūttai uṭaiyavarē pārumenru

Before starting the dance

Hearing this, what will the interested Civan say
Nīlan, highly capable of moving the ears,
Eyes, and crawling like a babe,
Started his dance and all praised his talent.
"Look at his dance. Look at his qualities
Look at his person. All these resemble
The face of goddess Carasvati,
Seated in the white Lotus,
And famed in eight directions."

அணிகலன் அலங்காரம்

ஆடிடவே பலபணிகள் அடங்கலுமே பூணுவாராம்
கோடாமல் நீலனுந்தான் கோலத்துக் கேற்றதெல்லாம்
பணிகளது பலவிதமும் பத்துவிரல் மோதிரமும்
அணிகள்பல ஆபரணம் அதியமுத்துத் தாவடமும்
கைகெட்டுப் பொன்னிலங்க காலில்மணி தானிலங்க
உள்கெட்டுத் தாவடமும் ஒய்யவி தொங்கலுமாய்
செச்சமுடன் வீரதண்டை சிறந்தமுத்துப் பணியணிந்தார்
அச்சமில்லா நீலராசன் அலங்காரப் பணியணிந்தார்
முத்துவடம் பொன்னாலே மோதிரம்சே றாட்டுகொஞ்ச
சற்றும்குறை யில்லாமல் தானெடுத்து' அணிந்திடுவார்
பூண்டபணி ஆபரணம் பொன்னரிய மாலைகளும்
வேணும்பட்டு வீரதண்டை வீரமணி காலிலிட்டார்
ஆரணியும் மலைமார்பன் அலங்காரப் பணியணிந்து

நீலன் ஆடத்தொடங்குமுன் அந்த ஆட்டத்திற்கு உரிய கோலத்தை மேற்கொள்ளத் தொடங்கினான். பத்து விரல்களிலும் மோதிரங்களை அணிந்தான்.

முத்துத் தாவடம் எனப்படும் கழுத்தணி, காலில் மணிகளால் ஆன கச்சை, காதணி, வீரதண்டை, முத்துமாலை, பலவகையான மாலைகள் போன்ற பலவகையான ஆபரணங்களை அணிந்து தன்னை அலங்காரம் செய்துகொண்டான்

தாவடம்-உருத்திரமணி மாலை; கழுத்தணிமாலை.

கு.சொல் : தாநெடுத்து

Aṇikalaṉ alaṅkāram

āṭiṭavē palapaṇikaḷ aṭaṅkalumē pūṇuvārām
kōṭāmal nīlaṉuntāṉ kōlattuk keṟṟatellām
paṇikaḷatu palavitamum pattuviral mōtiramum
aṇikaḷpala āparaṇam atiyamuttut tāvaṭamum
kaikeṭṭup poṉṉilaṅka kālilmaṇi tāṉilaṅka
uḷkeṭṭut tāvaṭamum oyyavi toṅkalumāy
ceccamuṭan vīrataṇṭai ciṟantamuttup paṇiyaṇintār
accamillā nīlarācaṉ alaṅkārap paṇiyaṇintār
muttuvaṭam poṉṉālē mōtiramcē rāṭṭukoñca
caṟṟumkuṟai yillāmal tāṉeṭuttu aṇintiṭuvār
pūṇṭapaṇi āparaṇam poṉṉariya mālaikaḷum
vēṇumpaṭṭu vīrataṇṭai vīramaṇi kāliliṭṭār
āraṇiyum malaimārpaṉ alaṅkārap paṇiyaṇintu

Decovation with ornament

Ere dancing, he decked himself with ornaments,
All that is necessary for a grand look
Nīlaṉ began wearing rings in all the fingers,
An ornament called *uruttiramālai* made of pearls,
Eight gold anklets for the hands,
A jewel made of jingling bells for the leg
Hanging stud for the ear, *Vīrataṇṭai*,
Pearl garland, gold ring and other jewels
He wore, rounding off with rare
Gold garlands, silk and thus
Completed his decoration without any fault.

ஆடையலங்காரம்

பூலோகச் சந்திரன்போல் பொன்மேனி தானிலங்க
சருவபொன் தலப்பாவும் தலப்பாமேல் மாலைகெட்டி
பட்டினால் சட்டையிட்டு பலபணிகள் கலகலென
வட்டதிருச் சல்லடத்தில் வைத்தமணி கலகலென
அரயில்திருச் சல்லடத்தில் அழகுதிரு[1] மையெழுதி[2]
திருவரயில் பொன்னரஞாண் செங்கதிரோன் உதித்தாற்போல்
வெள்ளியாலே தக்கணிந்தார் விளங்கியபொன் முன்கையிடம்[3]

தலைப்பாகை அணிந்தான். அதன்மேல் மாலைகளையும் தரித்தான். பட்டாலான சட்டையை அணிந்தான். மையினால் முகத்தை அலங்கரித்தான் இடுப்பிலே பொன் ஞாண் அணிந்தான் இவ்வாறு ஆடை ஆபரணங்களால் அலங்கரித்த நீலன் நடந்துவர கலகல என்று ஓசையுண்டாக, செங்கதிரோன் தோன்றியது போல விளங்கினான்.

தலைப்பா - ஒருவித தலைச்சீலை சல்லடம் - குறுக்காற்சட்டை அரை - இடை அரைஞாண் - ஆண்மக்கள் அரையிற்கட்டும் கயிறு.

சு.சொல் · 1 அளகு 2 யெளுதி 3 முங்கையிடம்.

Āṭaiyalaṅkāram

pūlōkac cantiraṉpōl poṉmēṉi tāṉilaṅka
caruvapoṉ talappāvum talappāmēl mālaikeṭṭi
paṭṭiṉāl caṭṭaiyiṭṭu palapaṇikaḷ kalakaleṉa
vaṭṭatiruc callaṭattil vaittamaṇi kalakaleṉa
arayiltiruc callaṭattil aḻakutiru maiyeḻuti
tiruvarayil poṉṉarañāṇ ceṅkatirōṉ utittāṟpōl
veḷḷiyālē takkaṇintār viḷaṅkiyapoṉ muṉkaiyiṭam

Dressing up

His body shone like moon on the earth
He wore a gold head gear, and over that put his garlands
He adorned his body with a silk shirt, shart pants,
And buckled his waist with a gold string
Daubed his black paint
And appeared bright like the rising sun,
And the jewels made a tinkling sound.

மேனியில் மணப்பொருள்கள்

அள்ளியகை நீரிலங்க[1] ஆதிசிவன் தனைநினைத்து
துள்ளியேகூத் தாடிடுவார் தோந்தோமென் றாடிடுவார்
நல்லஅர னாரருளால் நலச்சந்திரன் உதித்தாப்போல
பொட்டுமிட்டு நீலசுவாமி புகழிருந்த[2] மேனியெல்லாம்
கத்தூரி களபமின்ன கமகமென வாடைகெம்ப
அழகழகாய்ப்[3] புனுகணிந்தார் அழகுடைய[4] நீலராசன்
கொண்டையில்பூ மாலைகளும் கோலமதி முகமும்கண்டு
அண்டையிலே நின்றுபோவார் அதிசயமாய்ப் பார்த்திருக்க
பிச்சியிரு வாச்சிகளும் புகழ்பெறவே[5] மணம்வீச
அழகுதிரு[4] மேனியிலே அத்தர்மணம் தான்வீச
இத்தனையும் எடுத்தணிந்தார் இயல்நீல ராசாவும்

இறைவனை நினைத்துக் கையிலே தண்ணீரை ஏந்தியவனாய்த் துள்ளிக் குதித்து ஆடத் தொடங்கினான். நெற்றியிலே இருந்த பொட்டும், உடலிலே பூசிய கத்தூரி களபங்களும் கமகம என்று மணம் பரப்பின. மேலும் கொண்டையில் பூமாலைகளைத் தரித்து அத்தரும் புனுகும் பூசினான். இவ்வாறு அழகும் மணமும் மிக்கவனாய்த் தோன்றிய நீலனைக் கண்டு அருகிலே இருந்தவர்கள் ஆச்சரியம் அடைந்தவர்களாய் அவனையே நோக்கினார்கள்.

களபம் - கலவைச்சாந்து; சந்தனம். கத்தூரி - கத்தூரி மானிடமிருந்து கிடைக்கும் நறுமணப்பொருள். இருவாச்சி - கருமுகைச்செடி; ஒரு மரம்.

சு.சொல் : 1, நீறிலங்க 2. புகளிருந்த 3. அளகளகாய் 4. அளகு 5. புகள்

Mēṉiyil maṇapporuḷkaḷ

aḷḷiyakai nīrilaṅka āticivaṉ taṉainiṉaittu
tuḷḷiyēkūt tāṭiṭuvār tōntōmeṉ ṟāṭiṭuvār
nallaara ṉārarulāl nalaccantiraṉ utittāppōla
poṭṭumiṭṭu nīlacuvāmi pukaḻirunta mēṉiyellām
kattūri kaḷapamiṉṉa kamakameṉa vāṭaikempa
aḻakaḻakāyp puṉukaṇintār aḻakuṭaiya nīlarācaṉ
koṇṭaiyilpū mālaikaḷum kōlamati mukamumkaṇṭu
aṇṭaiyilē niṉṟupōvār aticayamāyp pārttirukka
picciyiru vāccikaḷum pukaḻpeṟavē maṇamvīca
aḻakutiru mēṉiyilē attarmaṇam tāṉvīca
ittaṉaiyum eṭuttaṇintār iyalnīla rācāvum

Scents on his body

Remembering Civaṉ, he took water on hand
And danced jumping with thud thud sound
With the grace of God the tilak on his forehead
Looked like the moon and Nīlacuvāmi's
Famous body emanated smell of *kastūri*
And he smeared his body with scents
Like Civet. Beautiful Nīlarācaṉ had
Flowers on his hair and garlands.
Seeing his moonlike face by standers
Were wonderstruck by the smell of *attar*,
And other aromatic stuff and
The fine smell emanating from his physique.

நீலனை அரன்காணுதல்

செலவிருந்த சிவனாரும் சிரித்தவனைப் பார்த்துநிற்க[1]
பார்த்திருந்த சிவனாரும் பகருவாராம் ஒருவார்த்தை 215
திறம்புகழும்[2] நீலனுட திறத்தையும்பார் கோலத்தையும்பார்
என்றரனார் பிரியமுற்று யெல்லோரும் செருமிடவே

ஆடை அணிகளால் அலங்கரித்து வந்த நீலனைக் கண்ட சிவபெருமான் மனமகிழ்ச்சியோடு அருகில் இருந்தவர்களைப் பார்த்து, மிக்க திறமைசாலியாகிய நீலனுடைய அழகையும், அலங்காரத்தையும் பாருங்கள் என்று மிகவும் விருப்பத்தோடு கூற, மற்றவர்கள் எல்லோரும் பொறாமையோடு பார்த்தார்கள்.

பகருவாராம் - சொல்லுவாராம் திறம் - சாமர்த்தியம். கோலம் - அழகு; ஒப்பனை. செருமிட - இருமிட

சு சொல் · 1 பாற்த்து 2 புகளும்

Nīlaṉai araṉ kāṇutal

celavirunta civaṉārum cirittavaṉaip pārttuniṟka
pārttirunta civaṉārum pakaruvārām oruvārttai
tiṟampukaḻum nīlaṉuṭa tiṟattaiyumpār kōlattaiyumpār
eṉṟaraṉār piriyamuṟṟu yellōrum cerumiṭavē

Civan̲ sees (decorated) Nīlan̲

Civan̲, seeing the bejewelled smiling Nīlan̲,
Uttered the following to all
"Look at the talent and bewitching beauty of Nīlan̲"
All those who heard this were simmering with envy.

நீலனைக் காண தேவர் கூட்டம்

அன்றுதிருக் கூத்துக்காண அருள்முனிவர் கூடுவாராம்
வானவரும் தானவரும் வந்தவர்கள் கூடுவாராம்
தானவர்கள் கயிலையிலே தவத்தியர்கள் கூடுவாராம்
கார்வண்ண நாராயணனார் கருதிமிகப் பார்த்திருக்க
பார்புகழும்[1] கணபதியும் பச்சமால் மருமகனும்
வேலவரும் மயிலேறி வீதியிலே பார்த்திருக்க
காலனுந்தான் நீலனுட கலியுகத்தைக் கண்டுநிற்க
தேவாதி தேவரெல்லாம் திருக்கூட்டம் பார்த்திருக்க

நீலன் ஆடிய ஆட்டத்தைக் காண முனிவர் கூட்டம் ஒருபுறம் கூடினார்கள். தேவர்கள் வந்து கூடினார்கள். கயிலையிலே இருந்த தவசியர்களும், அடியவர்களும் ஒருபுறம் கூடினார்கள் திருமாலும் பார்த்தார். இவர்களுக்கிடையிலே முழுமுதற்கடவுளாகிய கணபதி தோன்றினார் திருமாலின் மருமகனாகிய முருகப் பெருமான் மயில் வாகனராய் வந்து நோக்கினார். காலனும், காலதூதர்களும் ஒருபுறம் வந்து பார்த்தார்கள் இவ்வாறு தேவர்கூட்டம் நீலனின் ஆட்டத்தைக் கண்டு களித்தது

தானவர் - அசுரர் தவத்தியர் - தவசியர். கார்வண்ணன் - விட்டுணு. பச்சமால் மருமகன் - திருமாலின் மருமகனாகிய முருகன் காலன் - நமன்

சு.சொல் : 1 பார்புகளும்

Nīlan̲aikkāṇa Tēvar kūṭṭam

an̲r̲utiruk kūttukkāṇa aruḷmun̲ivar kūṭuvārām
vān̲avarum tān̲avarum vantavarkaḷ kūṭuvārām
tān̲avarkaḷ kayilaiyilē tavattiyarkaḷ kūṭuvārām
kārvaṇṇa nārāyaṇan̲ār karutimikap pārttirukka
pārpukaḻum kaṇapatiyum paccamāl marumakan̲um
vēlavarum mayilēr̲i vītiyilē pārttirukka
kālan̲untān̲ nīlan̲uṭa kaliyukattaik kaṇṭunir̲ka
tēvāti tēvarellām tirukkūṭṭam pārttirukka

The crowd of Gods to see Nīlan̲

On one side assembled sages to witness the dance;
On another ascetics from Kailash,
Yet another, side devotees and disciples of Kailash and giants,
Black coloured Kirus̤n̤an̲, his nephew,
The peacock charioted Vēlavan̲
Even yaman̲ and all Gods and Goddesses
Assembled to witness Nīlan̲'s dance.

தேவ கன்னியர்

கானவனத் தில்வாழும்[1] கன்னியர்கள் குரவையிட
பத்திரம மாகாளிவந்து பார்பதியா[2] ளருகிருக்க
சித்திரஞ்சேர் சிவனருகே திருமாலும் வந்திருக்க
அந்நேரம்[3] நீலராசன் ஆடுவராம் கழணிகட்டி[4]
முன்னுமந்தத் தவத்தியர்கள் முனிவருடன் மதிமயங்கி
மத்தாளம் கொட்டுவாரும் கைமணிகள் போடுவாரும்
அரகரா வென்றுசொல்லி அழகுடைய[5] நீலராசன்
பரமசிவன் திருமுகத்தைப் பார்த்தாடத் தொடங்குவாரே[6]

தேவர்கள் ஒருபுறம் கூடியிருக்க அக்கானகத்திலே வாழுகின்ற கன்னியர்கள் கூடி, குரவையிடத் தொடங்கினார்கள். மாகாளி அம்மனும், உமை அம்மையும், சிவபெருமானும், திருமாலும் ஆகிய தலைவர்களும் கூடி நீலராசனின் ஆட்டத்தைக் கண்டு களித்தார்கள். அரகரா என்று கூறி, சிவபெருமானின் திருமுகத்தைப் பார்த்தபடியே திரைச்சீலைகட்டி ஆடிய நீலனைக் கண்டு, கன்னியர்களும், முனிவர்களும் மதிமயங்கி மத்தளம் கொட்டுவாரும், கை மணிகள் ஆட்டுவாரும் ஆயினர்.

குரவை - குலவை - மாதர்கள் வாயினால் செய்யும் மங்கல ஒலி. கழனி - அரங்கம்; திரைச்சீலை.

க.சொல் : 1 வாளும் 2 பாற்பதி 3. அன்னேரம் 4. களனி 5 அளகு 6. துடங்குவாரே

Tēva Kan̲n̲iyar

kān̲avan̲at tilvāl̤um kan̲n̲iyarkal̤ kuravaiyit̤a
pattirama mākāl̤ivantu pārpatiyā l̤arukirukka
cittirañcēr civan̲arukē tirumālum vantirukka
annēram nīlarācan̲ āt̤uvārām kal̤an̤ikat̤t̤i
mun̲n̲umantat tavattiyarkal̤ mun̲ivarut̤an̲ matimayaṅki

mattāḷam koṭṭuvārum kaimaṇikaḷ pōṭuvārum
arakarā veṉṟucolli aḻakuṭaiya nīlarācaṉ
paramacivaṉ tirumukattaip pārttāṭat toṭaṅkuvārē

Heavenly Maids

Maids of the forest started *kuravai* voice
The great kāḷi stood beside Pārvati,
Tirumāl stood by the side of panting Civaṉ
All other sages lost their balance in the dance
Of Nīlarācaṉ before the stage curtain
The drummers and cymbalists shouted *Arakarā*
And handsome Nīlaṉ started
His dance straight looking at the face of Civaṉ

அனைவரும் மயங்கும் ஆட்டம்

தொடங்கின[1] தோர்நீல ராசாவைக் கண்டு
துடிநடையும் திருமார்பு மாட
தடஞ்செறியும் மலைமார்பன் நீல ராசன்
தவத்தியர்கள் மதிமயங்கித் தாளம்போட
சிலம்பு கலன் சதங்கை கொஞ்ச
திருக்கையி னால்திரண் டம்மானை ஆட
சதங்கைமணி தாளம் குஞ்சம் போட
தகுதி குததியெனத் தாளம் போட
துடியிடை துவள மயிலினைப் போலே
இடைதுவள கதலிதுடை மருங்கா தாட
இருவிழிகண்[2] பவளம்போல் [போலவே] மின்ன
திருக்கழனி[3] தனிலிருக்கும் தேவதேவர்
அருகே முனிமயங்க மால்மயங்க
ஆடுவார் நீலதம்புரான் ஆடுவாரே

ஆடை அணிகளோடு மாலைகள் நிறைந்த மார்பையுடைய நீலன், தவம் மேற்கொண்ட மகளிரெல்லாம் கூட மதிமயங்கித் தாளம் போடுமாறு ஆடத்தொடங்கினான். கால்களிலே சிலம்பும் சதங்கையும் கொஞ்சி விளையாடின. கைகள் அம்மானை ஆடின. காலணிகள் தகுதிகுததி எனத் தாளம் போடத் தொடங்கின. மகளிரைப்

போன்ற துடி இடையானது துவளவும், மயிலினைப் போல அழகுற ஆடினான். இரண்டு கண்களும் பவளம்போல் மின்னின. இவ்வாறு ஆடிய ஆட்டத்தைக் கண்ட தேவதேவர்களும் முனிவர்களும் மயங்கி நின்றார்கள்.

சு.சொல் : 1 துடங்கின 2 விளி 3. களனி

Anaivarum mayankum āṭṭam

toṭankiṉa tōrnīla rācāvaik kaṇṭu
tuṭinaṭaiyum tirumārpu māṭa
taṭañceṟiyum malaimārpaṉ nīla rācaṉ
tavattiyarkaḷ matimayankit tāḷampōṭa
cilampu kalaṉ catankai koñca
tirukkaiyi ṉāltiraṇ ṭammāṉai āṭa
catankaimaṇi tāḷam kuñcam pōṭa
takuti kutatiyeṉat tāḷampōṭa
tuṭiyiṭai iṭaituvaḷa mayiliṉaip pōlē
iṭaituvaḷa katalituṭai marunkā tāṭa
iruviḻikaṇ pavaḷampōl [pōlavē] miṉṉa
tirukkaḷaṉi taṉilirukkum tēvatēvar
arukē muṉimayanka mālmayanka
āṭuvār nīlatampurāṉ āṭuvārē

Dance bewitching Every one

Nīlarācaṉ began to dance with quick steps,
The bedecked chest swayed with garlands,
All the sages clapped losing their balance,
And kept measured time for the dance,
The tinkling bells of the anklet beat
His hands played the *Ammāṉai,*
And the jingle bells in his legs made
The dance beat *Takutiku tati*
His womanly waist bent gently and
He danced like a peacock
His eyes shone like crystal and all Gods
And sages were stunned by his dance.

பாட்டும் இசைக் கருவிகளும்

கிடுபிடி மத்தளம் மகுடங்கள் தப்பு
 கெம்பிடும் வீராணம் பம்பை முழங்க[1]
வாய்சொரிய கவிபாட்டும் பாடி
 வரமது தந்தென்னை ஆளும் சிவனே
பார்புகழும்[2] நீலன் திருநடனம் ஆட
அகம்கனிந்து கன்னியர்வெண் சாமரை வீச
 அலங்கார நீல ராசனும் ஆட

கிடுபிடி, மத்தளம், மகுடங்கள், வீராணம், பம்பை போன்ற தோற்கருவிகள் முழங்க, வாயால் பாட்டும் பாடி, சிவபெருமானே! என்னை ஆட்கொண்டு அருள்வீராக! என்று கூறியபடியே திருநடனம் ஆடுகின்றான். கன்னியர்கள் மனம் மகிழ்ந்து வெண்சாமரை வீசுகின்றனர்.

கிடுபிடி - ஓர்வாச்சியம். மத்தளம் - மகுடம் - தோற்கருவிகள். தப்பு - ஒரு மேளம். வீராணம், பம்பை - வாத்திய வகை.

சு.சொல் : 1. முளங்க 2. புகளும்

Pāṭṭum icaik karuvikaḷum

kiṭupiṭi mattaḷam makuṭaṅkaḷ tappu
 Kempiṭum vīrāṇam pampai muḻaṅka
vāycoriya kavipāṭṭum pāṭi
 varamatu tantenṉai āḷum civaṉē
pārpukaḻum nīlaṉ tirunaṭaṉam āṭa
 akamkaṉintu kaṉṉiyarveṇ cāmarai vīca
alaṅkāra nīla rācaṉum āṭa

Song and musical instruments

Single faced drum and double faced base drum,
Hand drum, *Vīrāṇam*, and *Pampai* were played.
Nīlaṉ continued his dance singing,
Mouthful songs praying Civaṉ
To dominate his person and heavenly maids
With a happy heart were fanning him
With white feathered fans handsome Nīlaṉ danced.

தேவர் புகழ்தல்

ஆடுகின்ற திருக்கூத்தும் அருங்கூத்தும் கண்டு
அருகிருந்த தானவர் வானவர்கள் சொல்வார்
தேடுகின்ற திரவியம் கொடுத்தா லுந்தான்
திருநீலன் நடனத்துக்கு யிணையுமில்லை யென்று

எவ்வளவு பொருள் கொடுத்தாலும் திருநீலனின் நடனத்துக்கு இணையாகாது என்று ஆட்டத்தைக் கண்ணுற்ற வானவர்களும் தானவர்களும் சொல்லி மகிழ்ந்தார்கள்.

வானவர் - தேவர். தானவர் - அசுரர். திரவியம் - பொருள்.

Tēvar pukaḻtal

āṭukiṉṟa tirukkūttum aruṅkūttum kaṇṭu
arukirunta tāṉavar vāṉavarkaḷ colvār
tēṭukiṉṟa tiraviyam koṭuttā luntāṉ
tirunīlaṉ naṭaṉattukku yiṉaiyumillai yeṉṟu

Praise of the gods

Witnessing the rare and holy dance,
The nearby citizens of Heaven declared,
"All the wealth you can earn is not
Equal to the dance of Tirunīlaṉ"

தேவமாதர் புகழ்தல்

சிலம்பொன் சதங்கை அரம்பை மாதர்
இருபுறமும்[1] கவரிவெண் சாமரை வீச
நன்றதுகாண் நீலன்போல் ஒருவருண்டோ
நாடுதனில் மிக்கான் நளினக் காரன்

சிலம்பும், சதங்கையும் அணிந்து விளங்கிய தேவமாதர்கள் அனைவரும், இரண்டு பக்கங்களிலுமிருந்து கவரி வீசியபடியே, நளினமிக்க ஆட்டத்தை ஆடுபவனாகிய நீலனைப்போல் உலகில் வேறொருவரும் இல்லை என்று புகழ்ந்தார்கள்.

சு.சொல் · 1 பிறமும்

Tēvamātar pukaḻtal

cilampoṉ cataṅkai arampai mātar
irupuṟamum kavariveṉ cāmarai vīca

naṉṟatukāṉ nīlaṉpōl oruvaruṇṭō
nāṭutaṉil mikkāṉ naḷiṉakkāraṉ

The praise of Heavenly maids

Heavenly maids wearing gold anklets
And Jingle bells, fanning the dancer with
White feathered fans declared that there was
No dance to equal the blithe, nimble Nīlarācaṉ

சிவனும் திருமாலும் நடனம் காணுதல்

இருபுறமும் பிரம கணக்கர்
அரக்கர் குலத்தை அறுத்த சிவன்மாலே
அதிய வரமது கொடுப்போமா யென்று
கவினுருகிக் கடைந்திடு பொன்னுருகி னாபோல
காவலன் நீலன் திருநடனம் கண்டார்
சொல்லுவார் முக்கோடி தெய்வார்கள் காண
தோற்றாம லேவரம் கொடுத்தே அனுப்பும்
ஆடுவார் திருநீல தம்புரான் திருநடனம் ஆடுவாரே

அரக்கர் குலத்தை அழித்த சிவனும், திருமாலும் இருபுறமும் பிரமகணக்கர் சூழ வீற்றிருக்கிறார்கள். நீலனின் திருநடனத்தைக் கண்டு பொன் உருகியது போல அவன் நடனத்திலும், பாட்டிலும், உள்ளம் உருகியவர்களாய் நீலனுக்கு உயர்ந்த வரத்தினைக் கொடுக்க வேண்டுமென்று எண்ணினார்கள். முக்கோடி தேவர்களும் நடனத்தைக் கண்டு நீலனுக்குச் சிறந்த வரத்தைக் கொடுக்கலாம் என்று பரிந்துரையாகக் கூறுமளவிற்கு அமைந்தது நீலனின் திருநடனம்.

Civaṉum Tirumālum naṭaṉam kāṇutal

irupuṟamum pirama kaṇakkar
arakkar kulattai aṟutta civaṉ mālē
atiya varamatu koṭuppōmā yeṉṟu
kaviṉurukik kaṭaintiṭu poṉṉuruki ṉāpōla
kāvalaṉ nīlaṉ tirunaṭaṉam kaṇṭār
colluvār mukkōṭi teyvārkaḷ kāṇa
tōṟṟāma lēvaram koṭuttē aṉuppum
āṭuvār tirunīla tampurāṉ tirunaṭaṉam āṭuvārē

Civan̲ and Tirumāl witness the dance

The destroyers of evil giants, Civan̲
And Tirumāl, sat surrounded by
The first citizens of heaven.
Just like the fast melting gold, they,
Swayed and drawn by Nīlan̲'s dance,
Declared that Nīlan̲ should be given
A worthy boon. Even the three crores of Gods,
Recommended the same for Nīlan̲

இசைக்கருவி முழக்கம்

அந்திமதியும் அறுகும் தரித்த அரனார் மருகோனே[1]
ஆடிடவே புகழ்[2]நீலன் கொண்டாடிஅய்யா பிதாகாணவே
தொந்தோம் திமிதிமிதோமெனவே சூழ்[3] வந்தாடிவர
சுந்தரமாகவே கைமணி வீணைகள் சுருதிமுறைகள் கொட்ட
சந்தத்தமிழும்[4] குரவைதெரியும் தார்முனி பார்த்துநிற்க[5]
தத்தலாங்கு தித்திதிமிதிமியென தாளத்தின் ஓதிவைத்தார்
மங்காத நீலன் திருமுகத்தி னொளிவானில் இடிமுழங்க[6]
வந்தாராம் கொட்டின மத்தள மதினொலி
வந்தவர் பார்த்துநிற்க[5]
கைமணி வீணை கின்னரம் சீங்குழல்[7]
காளாஞ்சி பிடித்துவர

பிறைச்சந்திரனையும், புலித்தோலையும் தரித்தவனாகிய சிவபெருமான் முன்னிலையில் ஆடிய நீலன், ஐயனே! என்று இறைவனை விளித்தவாறு ஆடுகின்றான். அழகுமிகுந்த கைமணிகளும், வீணைகளும் தாளங்களும், மத்தளமும், கின்னரம், குழல், ஆகியவை சிறப்புற ஒலிக்க் நீலனின் முகத்தின் அழகு வான்வரை எட்ட திமிதிமிதோம், தித்திதிமிதிமி என்ற ஓசை இசைக்கருவிகளுக்கேற்ப ஒலித்து நின்றது. இந்த ஆட்டத்தின் சிறப்பை, சந்தமும் குரவையும் அறிந்த முனிவர்களும் அங்கே வந்திருந்த தேவர்களும் பார்த்துப் புகழ்ந்தனர்.

அறுகு - ஆண்புலி. கைம்மணி - கையாலசைக்குஞ்சிறுமணி. கின்னரம் - ஒரு வீணை.
காளாஞ்சி - தாம்பூலக்கமலம்.

சு.சொல் : 1 மருகோநே 2 புகள் 3. சூள 4 தமிளும் 5 பாற்த்து 6. முளங்க 7 குளல்

Icaikkaruvi muḻakkam

antimatiyum aṟukum taritta araṉār marukōṉē
āṭiṭavē pukaḻnīlaṉ koṇṭāṭi ayyāpitā kāṇavē
tontōm timitimitōmeṉavē cūḻa vantāṭivara
cuntaramākavē kaimaṇi vīṇaikaḷ curuti muṟaikaḷ koṭṭa
cantattamiḻum kuravaiteriyum tārmuṉi pārttuniṟka
tattalāṅku tittitimitimiyeṉa tāḷattiṉ ōtivaittār
maṅkāta nīlaṉ tirumukatti ṉoḷivāṉil iṭimuḻaṅka
vantārām koṭṭiṉa mattaḷa matiṉoli
vantavaṟ pārttuniṟka
kaimaṇi vīṇai kiṉṉaram cīṅkuḻal
kāḷāñci piṭittuvara

Musical instruments being played

Nīlaṉ, dancing before supreme Civaṉ
Who wears the sickled moon and tiger skin
Addressed him, "Oh Lord! Oh God!"
All round is heard *Tantōm, Timitimi,*
Tattalāṅku, tittitimitimi from hand cymbals,
Veena and flute. The bright face of Nīlaṉ
Caused thunder in heaven and all
All heavenly citizens who knew rhythm and *kuravai*
Praised and were moonstruck by Nīlaṉ's dance.

நீலன் பார்வையில் தேவமகளிர்

கண்வெட்டும் பார்வையு மின்வெட்டுங்
கண்டவர் சென்றிடவே நீலன்
மைவிழி[1]சேர் தெய்வ மடவார்கள்
வளைந்து குரவையிட
மன்னர் மெய்க்கும்[2]புகழ் திருநீல ராசன்
வாடாமல் ஆடிவர
சல்லட மாட மணியாட கையாட
தாவடம் ஆடிவர

சங்குகள் ஓலம் சிலம்பம் பாட
வண்டினம் ஆடினாப்போல்
திங்கள் முகமுள்ள நீலகுல தெய்வம்
குதித்துக் கூத்தாட
செங்கையில்மான் மழுவேந்தி[3] நிற்கும்
சிவனாரும் பார்த்திருக்க[4]
வல்லம் புகழ்பெற்ற நீலகுல தெய்வம்
மகதேவர் தானுமெய்த்து
வாத்தியம் பம்பை முழங்கவே[5] மல்லாரி
சங்குகள் நின்றூத
சொல்லத் துலையாது நீலன் திருநடனம்
சூழவந்[6] தாடிவர
செஞ்சதங் கைமணி கிண்கிணி கொஞ்ச
சிலம்பு கலகலென
தெய்வர் நடுங்க பிரமா யிருசிகள்
சேரவே பார்த்திருக்க
தேவர் திருக்கூட்டம் பார்த்திட[7] நீலன்
சிறந்த சபைநடுவே
மைவிழி சேர தெய்வ மடவார்கள்
வளைந்து குரவையிட
மத்தாள தாளத்தின் காலு வைத்தாட
வலதுகால் தூக்கிஆடவே
வந்து வளையவே நின்ற தெய்வார்கள்
வளைந்து நின்றேது சொல்வார்
சந்தோச முள்ள நீலன் போலே
தரணியில் ஆருமுண்டோ
யெத்தனை தெய்வார்கள் எண்ணாயிரம் கோடி
யிந்தக் கயிலையிலே
புத்தியுள்ள தெய்வ நீலராசனைப் போலிந்த
பொன்னுல கத்திலுண்டோ
வல்ல பிலக்காரன் வெல்லும் குலதெய்வம்
வரிசை துரைநீலன்

நல்லவன் குலத்துக்கும் நாடகத் துக்கும்[8]
    நளின முடையவனே[9]
கலனுருகு சில தெய்வார் குழுறிட
    கண்ணுதலோ னாகுக
இன்பம் உருகிடப் பாடிடுவார் நீலன்
    தம்புரான் என்று[10]
அன்பனுக் கன்பா யிருந்த சிவன்முதல்
    ஆதி மனமகிழ்ந்து[11]
பாடின பாட்டும் கவிபாடி கிணங்க
    பார்த்தது[12] பூரையென்றார்
ஆடின நாடகம்[13] பூராயும் கண்டு
    அமத்தும் அமத்துமென்றார்

தேவர்களும், முனிவர்களும் நீலனின் நடனத்தைக் கண்டு புகழ்ந்து நிற்க மின்னலையொத்த பார்வையையும், அழகிய கண்களையும் உடைய தெய்வமடந்தையர்கள் நீலனைச் சுற்றிக் குரவை ஆடி வந்தார்கள். சல்லடமும், மணியும், தாவடமும் பூண்டு ஆடியவர்கள் பலர். சங்குகள் ஒலிக்க, சிலம்பின் ஒலி பாட்டாக அமைய வண்டுக் கூட்டங்கள் ஒலித்து வருவதுபோல அவ்விடம் காட்சி அளித்தது. சந்திரனை ஒத்த முகத்தை உடையவனாகிய நீலன் ஆடிய கூத்தை மானும், மழுவும் ஏந்திய சிவபெருமான் பார்த்துக் கொண்டே இருந்தார். மக்களின் குலதெய்வம் போல விளங்கிய நீலன் பம்பை, மல்லாரி, சங்கு, சதங்கை, சிலம்பு போன்ற வாத்தியங்களும் அணிகலன்களும் முறையாக ஒலித்துக் கொண்டேயிருக்க தேவர் கூட்டம் இமை கொட்டாது கண்டு களித்தார்கள். தெய்வ மகளிரோ சிறிதும் சோர்வடையாமல் குரவை ஆடியவர்களாய் இந்தக் கயிலையிலே எண்ணாயிரம் கோடி தெய்வர்கள் ஆடி வந்தாலும் மகிழ்ச்சியோடு ஆடுகின்ற நீலனுக்கு இணையாக மாட்டார்கள் தேவர் உலகத்தைத் தவிர மண்ணுலகத்திலும் யாரும் நீலனுக்கு ஒப்பாக மாட்டார்கள். நீலனோ வெற்றியை உடைய குலதெய்வமாகவும், நாடகத்தின் நாயகனாகவும், மிக நல்லவனாகவும் விளங்குகிறான் என்றெல்லாம் பலவாறு புகழ்ந்து வந்தார்கள்.

சல்லடம் - குறுங்காற்சட்டை. மழு - சிவனாயுதத்தொன்று. மல்லரி - பம்பைமேளம்.

சு.சொல் : 1 விளி 2 புகள் 3 மளு 4 பாற்த்திருக்க 5 முள்ங்கவே 6 சூள 7 பாற்த்திட 8. ணாடகத்துக்கும் 9. முடையவநே 10. யென்று 11 மகிள்ந்து 12 பாற்த்தது 13. ணாடகம்

Nīlan pārvaiyil tēvamakaḷir

kaṇveṭṭum pārvaiyu miṉveṭṭuṅ kaṇṭavar
    ceṉṟiṭavē nīlaṉ

maiviḻicēr teyva maṭavārkaḷ
vaḷaintu kuravaiyiṭa
maṉṉar meykkumpukaḻ tirunīla rācaṉ
vāṭāmal āṭivara
callaṭa māṭa maṇiyāṭa kaiyyāṭa
tāvaṭam āṭivara
caṅkukaḷ ōlam cilampam pāṭa
vaṇṭiṉam āṭiṉāppōl
tiṅkaḷ mukamuḷḷa nīlakula teyvam
kutittuk kūttāṭa
ceṅkaiyilmāṉ maḻuvēnti niṟkum
civaṉārum pārttirukka
vallam pukaḻpeṟṟa nīlakula teyvam
makatēvar tāṉumeyttu
vāttiyam pampai muḻaṅkavē mallāri
caṅkukaḷ niṉṟūta
collat tulaiyātu nīlaṉ tirunaṭaṉam
cūḻavan tāṭivara
ceñcataṅ kaimaṇi kiṇkiṇi koñca
cilampu kaḷakaleṉa
teyvar naṭuṅka piramā yirucikaḷ
cēṟavē pārttirukka
tēvar tirukkūṭṭam pārttiṭa nīlaṉ
ciṟanta capainaṭuvē
maiviḻi cēra teyva maṭavārkaḷ
vaḷaintu kuravaiyiṭa
mattāḷa tāḷattiṉ kālu vaittāṭa
valatukāl tūkki āṭavē
vantu vaḷaiyavē niṉṟa teyvārkaḷ
vaḷaintu niṉṟētu colvār
cantōca muḷḷa nīlaṉ pōlē
taraṇiyil ārumuṇṭō
yettaṉai teyvārkaḷ eṇṇāyiram kōṭi
yintak kayilaiyilē
puttiyuḷḷa teyva nīlarācaṉaip pōlinta

poṉṉula kattiluṇṭō
valla pilakkāraṉ vellum kulateyvam
varicai turainīlaṉ
nallavaṉ kulattukkum nāṭakat tukkum
naḷiṉa muṭaiyavaṉē
kalaṉuruka cila teyvār kumuṟiṭa
kaṇṇutalō ṉākuka
iṉpam urukiṭap pāṭiṭuvār nīlaṉ
tampurāṉ eṉṟu
aṉpaṉuk kaṉpā yirunta civaṉmutal
āti maṉamakiḻntu
pāṭiṉa pāṭṭum kavipāṭi kiṇaṅka
pārttatu pūraiyeṉṟār
āṭiṉa nāṭakam pūrāyum kaṇṭu
amattum amattumeṉṟār

Heavenly maids in the eyes of Nīlaṉ

The heavenly maids with beautiful eyes,
And lightning glance stood around Nīlaṉ,
And danced the *kuravai*. Nīlaṉ of royal fame
Danced untired and vigorous,
With shortpants, cymbals and hands moving,
Dancing anklets singing songs
The bees dancing and buzzing well;
Moonfaced Nīlaṉ danced on jumping and jumping
Civaṉ holding a sharp spear and deer,
Went on looking. Well famed Nīlaṉ danced
For the music of Tabour, *mallāri*, conch, and
The anklet in the leg too danced as cymbals,
And all the gods witnessed this dance without twitching their eyelids,
In the centre of the court, heavenlymaids
Went on dancing the *kuravai* in unison
With the drumbeat, lifting their right leg.
All the Gods stood around and said,

"There is none to equal the dance of Nīlaṉ
Not even the myriads of Gods can equal
Nīlaṉ's dance. Even in the world of humans
There's none to equal Nīlaṉ in dance.
Nīlaṉ is like the ethnic God, tribal deity
Central character in the drama of life
And a very good man of gentle grace"
Nīlaṉ sang and that agitated some gods
And gave joy to the third eyed God.
Civaṉ's heart grew kind and happy
And He listened to Nīlaṉ's song
And witnessed all his dances
And at last said 'That's enough, enough!

என்ன பரிசு கொடுப்பது

போதும் போதும் நாளும் திருநடனம்
பூரையென் நீலனுக்கு
ஏது வெகுமானம் நாம்கொடுக்கப் போறோம்
ஏற்றதோர் நீலனுக்கு
நல்ல சமர்த்தனுக் கேற்ற வரிசைகள்
நாடு நகரமெய்க்க
எல்லா தெய்வாரினும் சொல்லச் சொல்ல
வெகுமானம் கொடுப்போம்
நீலனுக்கு வெகுமானம் நேசமுடன் கொடுப்போமென
காலனைக் காலாலுதைத்த கண்ணுதலோன் மனமகிழ்[1]
ஆடாத அருங்கூத்தை ஆடினார் நீலராசர்
கோடாத வரிசைகள் குறையறவே கொடுப்போமென
நல்லதமிழ்[2] பாடிடவே நாடகங்க ளாடினதால்
சொல்லவல்ல நீலனுக்குத் துங்கமுடி சிவனார் சொல்லுவார்
கடல்சூழ்ந்த[3] வய்யத்தில் கண்டதுண்டோ நீலனைப்போல்
பம்பைகிடு பிடிமுழங்க[4] பலராகம் பாடிவர
மாவிலங்கு மதிமுகத்தான் வடிவழக[5] நீலனுக்கு

ஏதும் பலவரிசை யித்தரையும் கொடுத்தாலும்
நிறுத்திவைத்துச் சொரிந்தாலும் நிகரில்லைகாண் நீலனுக்கு
கரைகண்டனார் மனமகிழ்ந்து[6] கனவரிசை கொடுப்போமென்றார் 300

நீலனது பாட்டையும் பாடியாடிய ஆட்டத்தையும் முழுமையாகக் கண்டுகளித்தார் சிவபெருமான் அன்பருக்கு அன்பரானதால் நீலனைப் பெரிதும் புகழ்ந்தவராய் நீலனுடைய திறனுக்கு ஏற்ற நல்ல பரிசு என்ன கொடுக்கலாம் என்று யோசித்தார் தேவர்கள் யாவரும் புகழுமாறு பரிசு கொடுக்கவேண்டும் என்று நினைத்தார்.

மார்க்கண்டேயனுக்காக யமனைக்காலால் உதைத்த கண்ணுதற் கடவுள், நீலராசனின் கூத்தோ யாரும் ஆடாத அருங்கூத்து; அவன் பாடலோ நல்ல தமிழ்ப் பாடல். அவனுடைய நாடகமோ பம்பையும் கிடுபிடியும் முழங்க பல ராகத்தோடு இணைந்த ஒன்று என்றெல்லாம் புகழ்ந்தார் கடல் சூழ்ந்த இந்த நிலவுலகில் நீலனைப்போல் அழகும் திறனும் வாய்ந்த வேறு ஒருவன் இல்லை இவனுடைய செயல்களுக்கு எத்தகு உயர்ந்த பரிசுகளை வழங்கினாலும் ஈடாகாது என்று பலவாறு கூறி மனமகிழ்ந்தார் இறைவன்

பூரை - பூரணம்; முழுமை இத்தரை - இத்தனை என்பதன் மலையாள வழக்கு

சு.சொல் · 1 மகிள 2 தமிள் 3 சூள்ந்த 4 முளங்க 5 வடிவளக 6, மகிள்நது

Enna paricu koṭuppatu

pōtum pōtum nāḷum tirunaṭanam
pūraiyen nīlanukku
ētu vekumānam nāmkoṭukkap pōrōm
ērratōr nīlanukku
nalla camarttanuk kērra varicaikaḷ
nāṭu nakarameykka
ellā teyvārinum collac colla
vekumānam koṭuppōm
nīlanukku vekumānam nēcamuṭan koṭuppōmena
kālanai kālālutaitta kaṇṇutalōn manamakiḷa

āṭāta aruṅkūttai āṭinār nīlarācar
kōṭāta varicaikaḷ kuraiyaravē koṭuppōmena

nallatamiḻ pāṭiṭavē nāṭakaṅka ḷāṭinatāl
collavalla nīlanukkut tuṅkamuṭi civanār colluvār

kaṭalcūḻnta vayyattil kaṇṭatuṇṭō nīlanaippōl
pampaikiṭu piṭimulaṅka palarākam pāṭivara

māvilaṅku matimukattāṉ vaṭivaḷaka nīlaṉukku
ētum palavaricai ittaraiyum koṭuttālum
niṟuttivaittuc corintālum nikarillaikāṉ nīlaṉukku
karaikaṇṭaṉār maṉamakiḻntu kaṉavaricai koṭuppōmeṉṟār

What gift to give

'"Oh this is enough What prize shall we give
For the excellent dance of Nīlaṉ,
And that too a gift worthy of Nīlaṉ
I'll give a gift acceptable to all gods,
All the world and cities and
Worthy of a person's talent.
"Let us give a gift to Nīlaṉ with pleasure"
Nīlaṉ danced a rare dance performed by none
Giving pleasure to the forehead eyed God
Who kicked yamaṉ with his legs.
"Let us give him a gift without a blemish
He sang good songs in chaste Tamil
And acted in the drama of life,
To indescribable Nīlaṉ Civaṉ said,
"We've seen none like Nīlaṉ in the world
His dance is one with Tabour and drums
Even numerous gifts will not compensate
His talent and any amount of gift
Will not be equal to his talent

உமையின் பரிந்துரை

கொடுப்போமென்று சிவனுரைக்கக் குற்றமில்லா நீலனுக்கு
தடுத்தொருவர் சொல்லாமல் தரணியெல்லாம் படைத்தவரே
திருத்தமுள்ள நீலனுக்குத் திருமனத்திற் கேற்றபடி
வருத்திவரம் கொடுப்போ மென்றுமங்கை உமையம்மை

நீலனுக்கு உயர்ந்த பரிசுகளைக் கொடுக்க வேண்டும் என்று கூறிய சிவபெருமானை நோக்கி உமாதேவியார், உலகத்தைப் படைத்தளித்த எம்பெருமானே!

எல்லாவகையிலும் திறனுடைய நீலனுக்கு, அவன் மனம் விரும்பும்படியான உயர்ந்த வரத்தைக் கொடுத்தருளுவோம் என்று கூறினார்.

Umaiyiṉ parinturai

koṭuppōmeṉṟu civaṉuraikkak kuṟṟamillā nīlaṉukku
taṭuttoruvar collāmal taraṇiyellām paṭaittavarē
tiruttamuḷḷa nīlaṉukkut tirumaṉattiṟ kēṟṟapaṭi
varuttivaram koṭuppō meṉṟumaṅkai umaiyammai

Umā's Recommendation

To Civaṉ who wanted to gift Nīlaṉ suitably,
There was none to speak against.
Umā said, "Oh God! Let us give a gift,
Desired by Nīlaṉ himself"

சிவன் நாரதரையும் முனிவர்களையும் வினவுதல்

பொருப்பதிலே வாழ்ந்திருக்கும்[1] புண்ணியனார் மனமகிழ[2] 305
விருப்பமுட னீதனை மீண்டழைத்தங்[3] கேதுசொல்வார்
சேரும்படி வெகுமானம் செப்புமென்றார் சிவன்முதலார்

வெள்ளியங்கிரியிலே எழுந்தருளியுள்ள சிவபெருமான் உமாதேவியின் வார்த்தையைக் கேட்டு, மகிழ்ச்சியடைந்து எதிரிலே இருந்த நாரதரையும், முனிவர்களையும் நோக்கி நீலனுக்கு உரிய சிறந்த பரிசினைத் தேர்ந்து கூறுங்கள் என்று கேட்டுக் கொண்டார்.

பொருப்பு - மலை

சு சொல் : 1 வாள்ந்திருக்கும் 2 மகிள 3. மீண்டளைத்தங்கே

Civaṉ Nārataraiyum muṉivarkaḷaiyum viṉavutal

poruppatilē vāḻntirukkum puṇṇiyaṉār maṉamakiḻa
viruppamuṭa ṉītaṉai mīṇṭaḻaittaṅ kētucolvār
cērumpaṭi vekumāṉam ceppumeṉṟār civaṉmutalār

Civaṉ consults Nāratars and sages

Nīlaṉ who danced excellently
For the whole world was praised
By Gods and sages and they said,
"Let us give him priceless precious jewels".

நாரதரும் முனிவர்களும் கூறுதல்

நாரதரும் முனிவர்களும் நாயகனோடேது[1] சொல்வார்
தேரளந்த நீலனுக்குத் தொல்லுலகெல் லாம்புகழ்[2]த்
திருக்கூத்து ஆடினதோர் தெய்வகுல நீலனுக்கு
ஒருவரு ஸ்ரீதான் விலைமதியார் உத்தபணி கொடுப்போமென்றார்

உலகமெல்லாம் புகழுமாறு நடனமாடியவனும் தெய்வகுலத்துக்கு நிகரானவனுமாகிய நீலனுக்கு யாவராலும் விலைமதிக்க முடியாத உயர்ந்த அணிகலன்களைக் கொடுக்கலாம் என்று நாரதரும் முனிவர்களும் சிவபெருமானிடம் கூறினார்கள்

சு சொல 1 நாயகநோடேது 2 புகள

Nāratarum muṉivarkaḷum kūṟutal

nāratarum muṉivarkaḷum nāyakaṉōṭētu colvār
tēraḷanta nīlaṉukkut tollulakel lāmpukaḻat
tirukkūttu āṭiṉatōr teyvakula nīlaṉukku
oruvaru srıtāṉ vilaimatiyār uttapaṇi koṭuppōmeṉṟār

Cīvaṉ consults Nāratar and sages

That the mountain dwelling virtuous Lord may rejoice,
Calling Nārātar and sages with pleasure once again,
All including Civaṉ declared to him proper present and reward.

சிவன் முடிவு

விலைமதியா மாணிக்கங்கள் வேண்டும்வண்ணம் கொடுப்போமோ
அலைகடலில் முத்துமணி அரவுமணி கொடுப்போமோ
முத்துமாலை கொடுப்போமோ மோகனமாலை .கொடுப்போமோ
தத்திபித்தும் நின்றதெய்வார் தான்விளங்கக் கொடுப்போமோ
சற்றுஞ்செருக்காத நீலனுக்குச் சரப்பணியைக் கொடுப்போமோ
ஆடுகின்ற கூத்தைக்கண்டு அதியபணி கொடுப்போமோ
தேடுங்கருவலம் கொடுப்போமோ தெய்வகுல நீலராசனுக்கு
அம்மைஉமையாளே நீலனுக்கு அரவுமணி கொடுப்போமோ
உம்மைப்புகழ்ந்த[1] நீலனுக்கு உகந்துகொடுப்பது பேறாமென்றார்

விலைமதிக்க முடியாத மாணிக்கங்கள், கடலில் பிறக்கின்ற முத்துக்குவியல்கள், அரவம் உமிழ்கின்ற மாணிக்கமணி, முத்துமாலை, மோகனமாலை போன்றவற்றைத் தேவர்கள் புகழுமாறு கொடுக்கலாமா என்று சிந்தித்தார். அல்லது சிறிதும் கர்வமில்லாத நீலனுக்கு அவன் ஆடிய ஆட்டத்திற்கு ஏற்ற சரப்பணி போன்ற பல ஆபரணங்களை அளிக்கலாமா அல்லது யாவரும் விரும்புகின்ற பெரும் செல்வத்தைக் கொடுக்கலாமா என்று பலவாறு சிந்தித்தவராய் அருகிலே இருந்த உமாதேவியைப் பார்த்து உம்மைப் புகழ்ந்து பாடிய நீலனுக்கு யாது கொடுக்கலாம் என்று வினவினார்.

கருவலம் - செல்வம்.

சு.சொல் : 1 புகள்ந்த

Civaṉ muṭivu

vilaimatiyā māṇikkaṅkaḷ vēṇṭumvaṇṇam koṭuppōmō
alaikaṭalil muttumaṇi aravumaṇi koṭuppōmō
muttumālai koṭuppōmō mōkaṉamālai koṭuppōmō
tattipittum niṉṟateyvār tāṉviḷaṅkak koṭuppōmō
caṟṟuñcerukkāta nīlaṉukkuc carappaṇiyaik koṭuppōmō
āṭukiṉṟa kūttaikkaṇṭu atiyapaṇi koṭuppōmō
tēṭuṅkaruvalam koṭuppōmō teyvakula nīlarācaṉukku
ammaiumaiyāḷē nīlaṉukku aravumaṇi koṭuppōmō
ummaippukuḻnta nīlaṉukku ukantukoṭuppatu pēṟāmeṉṟār

Civaṉ's decision

"Shall we give priceless rubies to his heart's desire?
Shall we give pearls or *mōkaṉamālai*
To the extent that Gods themselves approve of it?
Or to him without pride, shall we give ornaments
Like carappaṇi? Or shall we give enormous wealth?
Or shall we give anything superior to all these
Oh! Umā! Tell me what to give him
Who praised you"

பரிசுகொடுக்க நீலன் உரைத்தல்

குற்றமற்ற இடத்தாயும் குறையறவே கொடுத்தபோது
பொன்பணம் தந்தாத்கால் பூவுலகுக் கேலாது

என்சிவனே[1] யெனக்கேற்ற இன்னதென்று சொன்னாக்கால்
தந்தருள வேணுமெங்கள் தம்புரானே[2] எனத்தொழுதார்

இறைவன் பலவாறு சிந்தித்தபடியே யாவற்றிலும் சிறிதும் குறைவுபடாது அணிமணிகளும், செல்வமுமாக வழங்கினார். அதைக்கண்ட நீலன் சிவபெருமானை நோக்கி 'ஐயனே! என் தலைவனே! பொன்னும், பணமும் எவ்வளவு கொடுத்தாலும் அது இந்த நில உலகிற்கு ஏற்புடையதாகாது. எனவே நான் விரும்பிக் கேட்பதைத்தந்து அருள்புரியுங்கள்' என்று கூறி வணங்கினான் நீலன்.

சு.சொல் : 1 சிவநே 2 தம்புராநே

Paricu̧ koṭukka nīlan̲ uraittal

kur̲r̲amar̲r̲a iṭattāyum kur̲aiyar̲avē koṭuttapōtu
pon̲paṇam tantākkāl pūvulakuk kēlātu
en̲civan̲ē yen̲akkēr̲r̲a in̲n̲aten̲r̲u con̲n̲ākkāl
tantaruḷa vēṇumeṅkaḷ tampurān̲ē en̲attoḻutār

Nīlan̲'s request

Even while presenting without blame, without limit
If thou giveth gold and cash, it is unacceptable
O! Civan̲! if I say what is proper for me to the world
I beg of thee to grant it and thus worshipped him.

சிவன்வினாவும் நீலன்விடையும்

சிந்தையுற்று நீலனைத்தான் சொல்லுமென்றார் சிவனாரும்
நீலனங்கே மனமகிழ்ந்து[1] நிலமைகொள்ள வேணுமென்று
நிலமைகொள்ள வேணுமென்று நீலன்மகிழ்ந்[1] தேதுசொல்வார்
பாலனுக்காய் காலனையும் படைத்துவிட்ட சிவன்முதலே
ஆலவிசம் உண்டோனே[2] அம்புவியெங் கும்புகழ[3]
நாவுலகில் உமதடியார் நருளிடத்தில் நான்போனால்
பூவுலகில் என்னையுந்தான் போற்றிசெய்துப் பூசித்தோர்க்கும்
இடைகூறும் நவக்கிரகம் இடுக்கங்கள் வந்ததுண்டால்
தடையறவே சிவனேநீர்[4] தந்ததிரு நீற்றையிட்டால்
உறங்கி முழித்தாப்போல்[5] உயிர்பிழைக்க[6] வரம்தாரும்
அறந்தழைக்க[7] சிவன்முதலே அடியாரென் பேருசொன்னால்

மாற்றானும் அணுகாமல் வல்வினைகள் சேராமல்
ஏற்றவரம் தாருமய்யா வெனக்கேட்டார், ஈசுபரனார்

நீலனே! நீ உன் உள்ளத்திலே நினைத்திருப்பதைக் கூறுவாயாக என்று சிவபெருமான் கட்டளையிட, மனம் மகிழ்ச்சியடைந்த நீலன் சொல்லத் தொடங்குகிறான். மார்க்கண்டேயன் என்னும் சிறுவனுக்காக, காலனைக் காலால் உதைத்த என் தலைவனே! தேவர்களைக் காத்தல் பொருட்டு ஆலகால விஷத்தை அள்ளி உண்ட நீலகண்டனே! தங்கள் அடியார்கள் நிறைந்த நிலவுலகத்தில் நான் போவேனேயானால் இந்த நிலவுலகத்தோர் என்னையும் பூசிக்க வேண்டும். அப்படி என்னை வணங்குபவர்களுக்கு நவக்கிரகங்களால் ஏதேனும் துன்பங்கள் ஏற்படுமேயானால், அவற்றை நீக்குவதற்குரிய திருநீற்றினை எனக்கு அளித்து உதவுங்கள் அந்தத் திருநீற்றை நான் அவர்களுக்கு இடும்பொழுது அவர்கள் உறங்கி எழுந்தவர்களைப் போல உயிர்பிழைத்து மகிழ வேண்டும். தங்களை வணங்கி, அறம் தழைக்கப் பாடுபடும் அடியவர்கள் என் பேரைச் சொன்ன உடனேயே அவர்களிடத்திலே விரோதிகளும், கொடுவினைகளாகிய பாவங்களும் சேராமல் அழியவேண்டும். இதற்கு ஏற்ற வரத்தினைத் தந்துதவுங்கள் என்று கேட்டு வணங்கினான் நீலன்.

நருள் - சனம்.

சு.சொல் : 1 மகிள்ந்து 2 உண்டோநே 3 புகள 4 சிவநே 5 முளித்தாப்போல் 6 பிளைக்க 7. தளைக்க

Civaṉvināvum nīlaṉviṭaiyum

cintaiyuṟṟu nīlaṉaittāṉ collumeṉṟār civaṉārum
nīlaṉaṅkē maṉamakiḻntu nilamaikoḷḷa vēṇumeṉṟu
nilamaikoḷḷa vēṇumeṉṟu nīlaṉmakiḻn tētucolvār
pālaṉukkāy kālaṉaiyum paṭaittuviṭṭa civaṉmutalē
ālavicam uṇṭōṉē ampuviyeṅ kumpukaḻa
nāvulakil umataṭiyār naruḷiṭattil nāṉpōṉāl
pūvulakil eṉṉaiyuntāṉ pōṟṟiceytup pūcittōrkkum
iṭaikūṟum navakkirakam iṭukkaṅkaḷ vantatuṇṭāl
taṭaiyaṟavē civaṉēnīr tantatiru nīṟṟaiyiṭṭāl
uṟaṅki muḻittāppōl uyirpiḻaikka varamtārum
aṟantaḻaikka civaṉmutalē aṭiyāreṉ pērucoṉṉāl
māṟṟāṉum aṇukāmal valviṉaikaḷ cērāmal
ēṟṟavaram tārumayyā veṉakkēṭṭar īcuparaṉār

Civaṉ's query and Nīlaṉ's answer

At last Civaṉ bade Nīlaṉ to tell his choice
At his behest, Nīlaṉ, happy at heart,

Steadying himself in his happiness said,
"Oh! Civaṉ! you kicked yamaṉ for young Mārkaṇṭēyaṉ,
Oh! The one who drank poison for the welfare of the world
If I enter the world of your devotees,
They should worship me as they worship you
If there is any harm to my devotees,
And if I give the ashes given by you,
They should come back alive as if from sleep
For the growth of virtue, if my devotees
Pronounce my name, evil should never
Harm them Please give me this grace".

இறைவன் வரமளித்தல்

சருவிலசரி சத்தமிட்டுத் தணியாத நோய்பிணிதீர[1]
உரிமையுள்ள நீலனுக்கு உமையுடன் வரம்கொடுத்தார்
கையில்திரு[2] நீறெடுத்துக் கனபிணிகள் கொண்டவர்மேல்
மெய்யாகப் போட்டதுண்டால் வீறுடனே[3] பிழைக்கவரம்[4]
பொய்யாகப் போகாமல் பொன்னரனார் வரம்கொடுத்தார்

உலக உயிர்களுக்கு உணவளித்து நோய் வராது காத்தருளும் சிவபெருமான் உமாதேவியாரோடு நீலன்முன் தோன்றினார். கையில் திருநீற்றை எடுத்துக் கொடுத்து இதனை உண்மையான பக்தியோடு பூசுவார்களேயானால் அவர்களைச் சார்ந்த எத்தகு பெரும்பிணிகளும் நீங்கி மகிழ்ச்சியடைவார்கள் இது பொய்யாகாது என்றுகூறி வரம் கொடுத்தார்.

சு.சொல் : 1 னோய் 2 கயில்திரு 3 வீறுடநே 4 பிளைக்க

Iṟaivaṉ varamaḷittal

caruvilacari cattamiṭṭut taṇiyāta nōypiṇitīra
urimaiyuḷḷa nīlaṉukku umaiyuṭaṉ varamkoṭuttār
kaiyiltiru nīṟeṭuttuk kaṉapiṇikaḷ koṇṭavarmēl
meyyākap pōṭṭatuṇṭāl vīṟuṭaṉē piḷaikkavaram
poyyākap pōkāmal poṉṉaraṉār varamkoṭuttār

God grants special gift

Civan̲ who protects the world from evil
Along with Umā gave this boon to Nīlan̲
As a matter of right. Taking Civan̲'s ashes
In hand and if it is thrown on those who suffer,
Their evils fly and this will never (be false) fail.

நீலன் மீண்டும் ஒருவரம் வேண்டுதல்

செய்யவரம் தான்வேண்டித் திரும்பவேநீலன் சொல்லுவாரே
இன்னம் ஒருவரம் எந்தனுக்குத் தரவேணும்
எந்தன் தம்புரானே[1] இறையவனே[2] மகதேவா
பொன்னய னேவரம்[3] என்னயனே[4] தரவேணும்
பூதலமெல்லாம் புகழ்பெற்ற[5] நீலனும் கேட்டார்
வாட்ட மில்லாமல் பிள்ளையைப்போல் நெடுநாளாய்
வணங்கும் அடியார்க்கு மகவாசை யானதுதீர
கோட்டர வாயமனம் வாட்டமதாய் இருந்தோர்க்கு
குற்றமில் லாமலே குறையவரம்[6] தரவேணும்
மற்றும் நிகரொவ்வா சித்திரம்சேர் நீலராசன்
மறுத்து மகிழ்ந்து[7] சிவனோடுரை மொழிசெப்ப[8]
பித்த பயித்தியம் ஏப்பிளைப்பு[9] மண்டைநோயும்[10]
பொறுக்க ஒண்ணாத வயிற்றுவலி காய்ச்சல்தீர
குற்ற மில்லாமல்திரு நீற்றைச் செங்கையில்
போட்டுக் குழப்பிக்[11] கொடுக்கப்பல பிணிதீர
என்றுசொல்லி நீலன் குன்றாமலே வரம்கேட்க
ஈஸ்பரனாரும் நீலனுக்கு வரமீந்தார்
தந்தோ மெனவே மகிழ்ந்துசிவ னாருரைக்க

மக்களால் புகழப்படும் நீலன் இறைவனை நோக்கி, ஐயனே! மகாதேவா! தங்கள் குழந்தையைப் போல் நீண்ட நாட்களாய் சிறிதும் சோர்வு இல்லாமல் தங்களை வணங்கி வரும் அடியவர்களுக்கு பிள்ளைப்பேற்றினைப் பெறவேண்டும் என்னும் ஆசையை நிறைவேற்றித் தாருங்கள் மேலும் பைத்தியம், இளைப்பு, மண்டைநோய், பொறுக்கமுடியாத வயிற்றுவலி, காய்ச்சல் போன்ற கொடிய நோய்கள் நீங்குவதற்கு இந்தத் திருநீறு பயன்படவேண்டும் இந்தத் திருநீற்றைக் கையிலெடுத்துக் குழப்பி நோய் தீர்க என்று சொல்லி நான் கொடுப்பேனேயானால் உடனே அந்த நோய் நீங்க வேண்டும். இவற்றிற்கு வரம் தாருங்கள் என்று கேட்க சிவனாரும் மிகுந்த மகிழ்ச்சியோடு அந்த வரத்தைக் கொடுத்தார்.

பூதலம் - பூமி கோட்டரவு - துக்கம்.

சு.சொல் 1 தம்புராநே 2. இறையவநே 3. பொன்னையநே 4 யென்னயநே 5. புகள் 6 குறய 7 மகிள்ந்து 8 மொளி 9 யெப்பளைப்பு 10 னோயும் 11 குளப்பி

Nīlaṉ mīṇṭum oruvaram vēṇṭutal

ceyyavaram tāṉvēṇṭit tirumpavēnīlaṉ colluvārē
iṇṇam oruvaram entaṉukkut taravēṇum
entaṉ tampurāṉē iṟaiyavaṉē makatēvā
poṉṉaya ṉēvāram eṉṉayaṉē taravēṇum
pūtalamellām pukaḻpeṟṟa nīlaṉum kēṭṭār
vāṭṭa millāmal piḷḷaiyaippōl neṭunāḷāy
vaṇaṅkum aṭiyārkku makavācai yāṉatutīra
kōṭṭara vāyamaṉam vāṭṭamatāy iṟuntōrkku
kuṟṟamil lāmalē kuṟaiyavaram taravēṇum
maṟṟum nikarovvā cittiramcēr nīlarācaṉ
maṟuttu makiḻntu civaṉōṭurai moḻiceppa
pitta payittiyam ēppiḷaippu maṇṭainōyum
poṟukka oṇṇāta vayiṟṟuvali kāyccaltīra
kuṟṟa millāmaltiru nīṟṟaic ceṅkaiyil
pōṭṭuk kuḻappik koṭukkappala piṇitīra
eṉṟucolli nīlaṉ kuṉṟāmalē varamkēṭka
īsparaṉārum nīlaṉukku varamīntār
tantō meṉavē makiḻntuciva ṉāruraikka

Nīlaṉ wants one more grace

"Oh God! I beg of you to grant me one more
Oh my God! Supreme Being "said Nīlaṉ
Civaṉ questioned, "What else do you want?"
All the world famed Nīlaṉ said,
"Those who steadily worship me through out
Should not suffer from sterility
And they should beget children
Besides those who are beset by worries
Should have their worries diminished"

And continuing his tete-a-tete with Civaṉ,
Painting like Nīlarācaṉ said to the Lord,
"Those who suffer from madness, disorders of
The head, wasting illness, unbearable stomach ache,
And fever should get rid of these
If I give ashes mixed with water"
"Granted", said Civaṉ, with pleasure
And was happy to bestow these on Nīlaṉ.

மீண்டுமோர் வரம்

சறுக்காமல் நீலன்மறுத்து சிவனோடு கேட்க
சிந்தை மகிழ்ந்து[1] துதித்தென்னைப் போற்றியபேர்க்கும்
சிவனே[2] நீலாதுணை யென்று நம்பினபேர்க்கும்
மன்றுலகிலே பிள்ளை யில்லாதமா மடவார்க்கும்
மனது கவலையால் வாடியிருந்த பேருக்கும்
என்ன வந்தாலும் இடுக்கத்தை ரெச்சித்துக்கொள்ள
யீசுபர னாருமே நீலனுக்கே வரம்கொடுத்தார்
மதலை கொடுத்துத்தன் பேர்கொள்ள வரம்தாரும்
வாடாமல் நீலா வையகந்தன்னிலே போடா
அதலவிதல தராதல நீதல மெய்க்க
ஆதியே சோதியே நாதியே கும்பிட்டுச்சொல்வார்
இன்னும் ஒருவரம் எந்தனுக்குத் தரவேணும்
என்தம்பு ரானே[3] யிறையவனே[4] மகதேவா
அன்னம் போலேசில மங்கைமார் தன்னோடுசேர்த்து
அநியாய மாகக்கருவை அழிக்கின்ற[5] பேயை
அப்பா லடித்து அடித்துத் துரத்தியேநீக்கி
ஆண்பிள்ளை தந்தால் அடியேன்என் பேரிடவேண்டும்
இப்படிக் கொற்றவரம் தரவேணும் சிவனே
இன்பத்துடனே[6] இயல்பெறும் நீலனும் கேட்டார்
மெய்யுடனே[7] நீலாகேட்ட வரமது தந்தேன்
விரைவாக முக்காலும் தந்தேனென்றார்[8] சிவனாரும்
இன்னம் ஒருவரம் எந்தனுக்கு வரம்தந்தால்

எப்போதும் பூசைதப்பாமல் நான்கொள்ள[9] வேணும்
என்னைக் கவனியாமல் உம்மயும்தான் வணங்காமல்
இருக்கிற வஞ்சரை நெஞ்சைக் கலக்கிடவேதான்
மாற்றமா[10] யந்தப்பே யிந்தப்பேய் தொடுகிறபேரை
மதத்தை அடக்க வரந்தரவேணும் சிவனே
யேற்றமா[11] யில்லாத தெய்வார்களை வெல்லவேதான்
எல்லை[12] யில்லாத வரம்கொடுத்தார் சிவனாரும்

மீண்டும் நீலன் இறைவனை நோக்கி, ஐயனே! உள்ள மகிழ்ச்சியோடு என்னைப் போற்றி, ஐயனே நீலா! என்று கூறி என்னைப் போற்றி, நம்பி வணங்குவோருக்கு, பிள்ளையில்லாத குறை தீர வேண்டும். மனக்கவலையால் துன்புற்றவர்கள் மகிழ்ச்சியடைய வேண்டும். எந்த வகையில் துன்பங்கள் வந்தாலும் அவற்றைத் தீர்த்து நான் ரட்சிக்க வேண்டும் இதற்கு வரம் தாருங்கள் என்று வேண்டினான். அவ்வாறு என்னிடம் குழந்தை வரம் முதலான நன்மையைப் பெற்றவர்கள், நீலனே! நீ இந்த ஏழுலகும் புகழுமாறு விளங்க வேண்டும் என்று சொல்லி என்னைப் போற்ற வேண்டும் என்றும் வேண்டினான் அவ்வாறே இறைவனும் வரங்கொடுத்தார். இவ்வாறே, மகளிருக்கு ஏற்படும் கருவை அழிக்கின்ற பேயை அடித்துத்துரத்தும் வல்லமை எனக்கு வேண்டும் அந்த மகளிருக்கு ஆண்பிள்ளை பிறந்தால் அடியேன் பெயரை வைக்க வேண்டும். தங்களைப் பூசிப்பதில் நான் என்றுமே தவறக் கூடாது. தங்களை வணங்காமலும், என்னைப் போற்றாமலும் இருக்கின்ற வஞ்சகர்கள் நெஞ்சைக் கலக்கி அவர்கள் மதத்தை நான் அடக்க வேண்டும் என்று வேண்டினான் நீலன். சிவபெருமானும் அவன் கேட்டபடியெல்லாம் அளவற்ற வரத்தைக் கொடுத்தார்

மதலை - பிள்ளை. அதல விதல தராதலம் - கீழேழுலகங்களுள் மூன்று மதம் - செருக்கு.

சு.சொல் : 1 மகிள்ந்து 2 சிவநே 3 தம்புராநே 4 இறையவநே 5 அளிக்கின்ற 6 இன்பத்துடநே 7 மெய்யுடநே 8 தந்தேநென்றார் 9 னாந் 10. மாத்தமா 11 யேத்தமா 12. யெல்லயெல்லாத

Mīṇṭumōr varam

caṟukkāmal nīlaṉmaṟuttu civaṉōṭu kēṭka
cintai makilntu tutittennaip pōṟṟiyapērkkum
civaṉē nīlātuṇai yeṉṟu nampiṉapērkkum
maṉṟulakilē piḷḷai yillātamā maṭavāṟkkum
maṉatu kavalaiyāl vāṭiyirunta pērukkum
eṉṉa vantālum iṭukkattai reccittukkoḷḷa
yīcupara ṉārumē nīlaṉukkē varamkoṭuttār
matalai koṭuttuttaṉ pērkoḷḷa varamtārum
vāṭāmal nīlā vaiyyakantaṉṉilē pōṭā

atalavitala tarātala nītala meykka
ātiyē cōtiyē nātiyē kumpiṭṭuccolvār
iṉṉum oruvaram entaṉukkut taravēṇum
eṉtampu rāṉē yiṟaiyavaṉē makatēvā
aṉṉam pōlēcila maṅkaimār taṉṉōṭucērttu
aniyāya mākakkaruvai aḻikkiṉṟa pēyai
appā laṭittu aṭittut turattiyēnīkki
āṇpiḷḷai tantāl aṭiyēṉeṉ pēriṭavēṇṭum
ippaṭik koṟṟavaram taravēṇum civaṉē
iṉpattuṭaṉē iyalpeṟum nīlaṉum kēṭṭār
meyyuṭaṉē nīlākēṭṭa varamatu tantēṉ
viraivāka mukkālum tantēṉeṉṟār civaṉārum
iṉṉam oruvaram entaṉukku varamtantāl
eppōtum pūcaitappāmal nāṉkoḷḷa vēṇum
eṉṉaik kavaṉiyāmal ummayumtāṉ vaṇaṅkāmal
irukkiṟa vañcarai neñcaik kalakkiṭavētāṉ
māṟṟamā yantappē yintappēy toṭukiṟapērai
matattai aṭakka varantaravēṇum civaṉē
yēṟṟamā yillāta teyvārkaḷai vellavētāṉ
ellai yillāta varamkoṭuttār civaṉārum

One more grace wanted

"Oh! you've given me a boon, a gift without fail
Those who worship me from the bottom of their heart
And those who call me for help and
Women who are childless and those
With minds worried should get rid of
Their worries and problems
Civaṉ granted all these with joy.
Nīlaṉ then desired that all male children born
In all the three worlds should bear his name
And he asked for the power to drive away
The devil that causes abortion
He continued asking one grace after another

And Civaṉ granted all these
"I must get daily pooja from devotees
And those who never brother about you or me,
And never worship both, I should
Control their pride and arrogance
Give me that gift" Civaṉ granted
All these boons almost unlimited

நீலனும் நீலியும் வரங்கேட்டல்

வாங்கி யழகுள்ள[1] நீலனும் நீலியும்கூடி
    மனதுமகிழ்ந்து[2] மறுத்துச் சிவனோடே கேட்டார்
தூங்கிக்கிடந்து துரம்பா யிருக்கின்ற பேரை
    தூக்கி எடுத்து வீரனாக ஆக்கவரம் வேணும்
எங்கும் புகழவே[3] பெண்ணாளே நீலாஉனக்கு
    எப்போதும் வரம்தப்பாமலே தந்தே னென்றார்[4]
ஒத்தகுடியும் ஒருகோவிலும் கட்டியே[5] தந்தால்
    உத்தகுடிவசம் தப்பிநாடு[6] முள்ளதைச் சேர்ப்பேன்
சேர்த்திக் கிடுவேன் குடிதன்னை வளர்த்தங்கருதி
    சிவனே[7] துணையென்று உம்மைஒரு நாள்மறவேன்[8]

நீலனும் நீலியும் சேர்ந்து மனமகிழ்ச்சியோடு சிவனை வணங்கி, ஐயனே! உலகில் தூங்கிக் கிடப்போர், சோம்பேறிகளாக இருப்போர் ஆகியோரைத் தூக்கி வீரனாக ஆக்கும் திறமையை எங்களுக்குத் தரவேண்டும் எங்களுக்கென்று ஒரு கோவிலையும் உருவாக்கித் தரவேண்டும். அக்கோயிலில் மக்கள் அனைவரும் ஒன்று சேர்ந்து நல்ல பண்புகளைப் பெறும்படிச் செய்வேன் என்றெல்லாம் கேட்க இறைவனும் அவ்வரங்களைக் கொடுத்தார்.

மறுத்தும் - மீண்டும்.

சு.சொல் : 1 யளகுள்ள 2. மகிள்ந்து 3 புகளவே 4 நென்றார் 5 கெட்டியே 6 னாடு 7 சிவநே 8 னாள்

Nīlaṉum nīliyum varaṅkēṭṭal

vāṅki yaḻakuḷḷa nīlaṉum nīliyumkūṭi
    maṉatumakiḻntu maṟuttuc civaṉōṭē kēṭṭār
tūṅkikkiṭantu turampā yirukkiṉṟa pērai
    tūkki eṭuttu vīraṉāka ākkavaramvēṇum
eṅkum pukaḻavē peṇṇāḷē nīlāuṉakku

eppōtum varamtappāmalē tantē nenrār
ottakuṭiyum orukōvilum kaṭṭiyē tantāl
uttakuṭivacam tappināṭu muḷḷataic cērppēn
cērttik kiṭuvēn kuṭitannai vaḷarttaṅkaruti
civanē tuṇaiyenru ummaioru nāḷmaravēn

Nīlan and Nīli ask for grace

Most beautiful Nīlan and Nīli, with great joy,
Asked of Civan one more grace;
"Please give us the power to transform,
Idle and sleepy fellows into great heroes.
Civan said that he granted this grace too;
They desired a temple to be built in their name,
So that those who assembled there for worship,
May imbibe all that is good.
Promptly Civan granted this grace too.

மீண்டும் நீலன் வரங்கேட்டல்

இப்படி யாக வரங்களை வாங்கினபோது
இன்னும் ஒருவரத்தைத் தப்பாமல் நீலனும்சொல்ல
கந்தசேர் செந்தில் ஆறுமுக வேலாயுதனை
கடவுள ரெங்கள் பெருமான் போற்றாதி[ருப்]பேனா
பத்திரகாளி பரமேஸ் பரியாள் உமையை[1]
பண்புடன் போற்றாத பாதகர் நெஞ்சைப்பிளப்பேன்
பேய்க்கடிமைப் பட்டுக்கெட்டோம் கெட்டோமென்ற
பேரை இரந்து குடுக்கவும் தம்பதியில் லாமல்
ஆக்கிவைப்பே னய்யனே[2] பரநாதா[3] யீஸ்பரா
அடியேனைப்பின்னர் குறையது சொல்லவும் வேணாம்
இந்தப்படிக்கு எனக்கு வரம்தர வேணும்
இன்பத்துடனே[4] இயல்பெறும் நீலனும் கேட்டார்
மெய்யதுடனே[5] நீலன்கேட்ட வரங்களை யெல்லாம்
விரைவாக முக்காலும் தந்தே னென்றாரே[6]

ஐயனே! நான் தங்களை என்றுமே மறவேன். அதேபோல கந்தன், செந்தில், ஆறுமுகம், வேலாயுதம் என்னும் பெயர்களையுடைய முருகக் கடவுளையும் என்றும் மறவாது வணங்குவேன். பத்திரகாளி, பரமேஸ்வரி, உமாதேவி ஆகியோரையும் போற்றுவேன் அவர்களையெல்லாம் வணங்காத கொடியவர்கள் நாட்டில் இருப்பார்களேயானால் பேய் வடிவம் எடுத்து அவர்களது நெஞ்சைப் பிளப்பேன். பேயினால் கெட்டோம் என்று அவர்கள் கூறி வருந்தவும், அவர்கள் குடும்பமே இல்லாதவாறு அழிப்பேன் என்று நீலன் கூறி வேண்ட, நீலனின் வேண்டுகோளையெல்லாம் ஏற்று இறைவன் வரமளித்தார்

பாதகன் - துரோகன்.

சு.சொல் · 1 உமையை 2 னய்யநே 3. பரனாதா 4 யின்பத்துடநே 5 மெய்யதுடநே 6 நென்றாரே

Mīṇṭum nīlaṉ varaṅkēṭṭal

ippaṭi yāka varaṅkaḷai vāṅkiṉapōtu
iṉṉum oruvarattait tappāmal nīlaṉumcolla
kantacēr centil āṟumuka vēlāyutaṉai
kaṭavuḷa reṅkaḷ perumāṉ pōṟṟāti[rup]pēṉā
pattirakāḷi paramēs pariyāḷ umaiyai
paṉputaṉ pōṟṟāta pātakar neñcaippiḷappēṉ
pēykkaṭimaip paṭṭukkeṭṭōm keṭṭōmeṉra
pērai irantu kuṭukkavum tampatiyil lāmal
ākkivaippē ṉayyaṉē paranātā yīsparā
aṭiyēṉaippiṉṉar kuṟaiyatu collavum vēṇām
intappaṭikku eṉakku varamtara vēṇum
iṉpattuṭaṉē iyalpeṟum nīlaṉum kēṭṭār
meyyatuṭaṉē nīlaṉkēṭṭa varaṅkaḷai yellām
viraivāka mukkālum tantē ṉeṉṟārē

Once again Nīlaṉ asks for another grace

Getting boons thus one more word Nīlaṉ said
"Will I ever forget to worship sentil vēlaṉ,
Kantaṉ, Pattirakāḷi, Paramēsvari and Umā.
Give the power to cut open the breast of those
Who do not worship the supreme.
Let them confound themselves repeatedly
That they were spoilt by the devil

And let me wipe out their entire families
Without a trace. Give me such gift
Oh Civaṉ as I desire",. And Civaṉ Granted
All the boons desired by Nīlaṉ.

மீண்டும் ஓர் வரம்

5. விருத்தம்

கொடுத்ததோர் வரத்தை வேண்டிக் குறையில்லா நீல ராசன்
அடுத்ததோர் அடியார்க் கெல்லாம் ஆபத்து வாரா வண்ணம்
படைத்திடும் சிவனே[1] யேனை[2] பலபலசீர்மை யெங்கும்
நடத்தவே வரம்குன் றாமல் நாயகரே[3] தாரு மென்றாரே

வரத்தையெல்லாம் பெற்றுக் குறை நீங்கிய நீலன், ஐயனே! தங்களை வணங்கும் அடியார்களுக்கெல்லாம் துன்பம் ஏதும் வராமல் பாதுகாக்கின்றீர் எங்கும் எல்லா வகையான சீர்மையும் நிலவச் செய்கின்றீர். அப்படிப்பட்ட தங்களிடம் மீண்டும் ஒரு வரம் கேட்கிறேன் என்று கூறினான்.

சு.சொல் : 1. சிவநே 2 யென்ன 3 னாயகரே

Mīṇṭum ōr varam

viruttam

koṭuttatōr varattai vēṇṭik kuṟaiyillā nīla rācaṉ
aṭuttatōr aṭiyārk kellām āpattu vārā vaṇṇam
paṭaittiṭum civaṉē yēṉai palapalacīrmai yeṅkum
naṭattavē varamkuṉ ṟāmal nāyakarē tāru meṉṟārē

One More Grace

Getting all the gifts desired; with no complaint,
Nīlaṉ said that Civaṉ protects all devotees
From all dangers and justice rules everywhere.
"From thee Oh Civaṉ! Let me ask for one more boon

கேட்டவரங்கள்

6. நடை

தாருமென்று நீலன்சொல்ல சங்கரரும் ஏதுசொல்வார்
சேரும்படி உள்ளவரம் சிறப்பாகக் கேளுமென்றார்

சொல்லுகிறேன் என்சிவனே[1] சூச்சமுடன் நீலன்சொல்வார்
கொல்லவரம் வெல்லவரம் கொலைப்பழிகள்[2] செய்யவரம்
அறந்தழைக்கும்[3] பூவுலகில் அடங்காத பேர்களைத்தான்
பிறப்பறவே கொல்லவரம் பெருமலடு[4] ஆக்கவரம்
தாழ்வான[5] வார்த்தைசொல்லும் சங்கையில்லா மங்கையரை
வாழாக்கொடி[6] ஆக்கவரம் மடவார்கள் தங்களைத்தான்
சேராசேர்க்கை ஆக்கவரம் சிவனேநீர் தாருமென்றார்
நேராகத் தொழுதவரை[7] நிச்சயமாய்க் குடிவளர்த்து
உடைஉணவு கொள்ளவரம் உகந்துகுடி வளர்க்கவரம்
வாட்டமுள்ள நீலனுக்கு மகதேவர் மனமகிழ்ந்து[8]
கேட்டகேட்ட வரங்களையெல்லாம் கிருபையுடன்[9] கொடுத்தபோது

அறச்செயல்கள் நிறைந்த இந்த நிலவுலகில் நீதிக்கு அடங்காதவர்களையெல்லாம் வெல்லவும், கொல்லவும் வரம்தரவேண்டும். கொலைப்பழிகள் வந்து சேர்ந்தாலும் அவற்றைப் பொருட்படுத்தாது இருத்தல் வேண்டும். அற்பமான கொடிய வார்த்தைகளைப் பேசுகின்ற வெட்கமற்ற மாதர்களை வாழாவெட்டியாக்கவும் வரம் வேண்டும். நல்ல பண்புடைய மாதர்களாக இருந்து அவர்களுக்குக் கொடுமை நேர்ந்தால் அவர்கள் குடியை வளர்க்கவும், உணவு, உடை பெற்று அவர்கள் மகிழ்ச்சியடையவும் அருள்கூர்ந்து வரமளியுங்கள் என்று கேட்டார். அவ்வாறே அனைத்து வரங்களையும் கொடுத்தார் இறைவன்.

சங்கை - அச்சம். கிருபை - அருள்

சுசொல் : 1 சிவநே 2. குலைபளிகள் 3. தளைக்கும் 4 பெறுமலடு 5. தாள்வான 6 வாளாகொடி 7 தொளுத 8 மகிள்ந்து 9 கிறுபை

Kēṭṭa varaṅkaḷ

naṭai

tārumeṉṟu nīlaṉcolla caṅkararum ētucolvār
cērumpaṭi uḷḷavaram ciṟappākak kēḷumeṉṟār
collukiṟēṉ eṉcivaṉē cūccamuṭaṉ nīlaṉcolvār
kollavaram vellavaram kolaippaḻikaḷ ceyyavaram
aṟantaḻaikkum pūvulakil aṭaṅkāta pērkaḷaittāṉ
piṟappaṟavē kollavaram perumalaṭu ākkavaram
tāḻvāṉa vārttaicollum caṅkaiyillā maṅkaiyarai
vāḻākkoṭi ākkavaram maṭavārkaḷ taṅkaḷaittāṉ

cērācērkkai ākkavaram civaṉēnīr tārumeṉṟār
nērākat tōḻutavarai niccayamāyk kuṭivaḷarttu
uṭaiuṇavu koḷḷavaram ukantukuṭi vaḷarkkavaram
vāṭṭamuḷḷa nīlaṉukku makatēvar maṉamakiḻntu
kēṭṭakēṭṭa varaṅkaḷaiyellām kirupaiyuṭaṉ koṭuttapōtu

The graces demanded

Hearing Civaṉ ordered him to ask for special graces.
With nice diplomacy he mentioned his demand as follows:
"Grant me the power to defeat, to kill evil persons
Beyond control in this world of virtue
And the power to remove their fertility,
The power to make widows shameless women,
Of mean words and good people should be
Protected from evil and their clan
Should grow with food, and dress".
All these graces, the Supreme Lord granted to Nīlaṉ

வரம்பெற்ற நீலன் வசதிவேண்டுதல்

இன்னமுண்டால்[1] சொல்லுமடா[2] யியல்பெரிய நீலராசர்
சொன்னதெல்லாம் தந்தீரே தோற்றாமல் வைத்துக்கொள்ள
போறேன்பொன் னம்பலவா பேர்பெரிய சிவன்முதலே
அருள்கொடுத்து அருள்புரியும் அடிமைகொண் டமர்முதலே
காசினியில் பூசைகொள்ளக் கால்நடையாய்ப் போவேனோ
தேசிகனே[3] யெந்தனுக்குத் தெய்வபரி வேணுமென்றார்
வேணுமென்று நீலன்சொல்ல மேகத்திறன் போலேயொத்த[4]
கருமேக போலுருவாய் கரும்புரவி தான்கொடுத்தார்

நான் கேட்ட வரங்களையெல்லாம் கொடுத்து என்னை ஆதரித்த பொன்னம்பலவா! தங்கள் அருள் குணத்திற்குப் பெரிதும் கடமைப்பட்டிருக்கிறேன். தாங்கள் அருளியபடி நான் இப்பூவுலக மக்களின் பூசையை ஏற்றுக்கொள்ள, கால்நடையாய்ச் செல்லுவது நீதியாகுமா? எனக்கு, தெய்வீகக் குதிரை ஒன்று கொடுத்தருளும் என்று வேண்ட, இறைவனும் மேகத்தையொத்த கரிய நிறத்தை உடையதும் விரைந்து செல்லக் கூடியதுமான குதிரை ஒன்றினைப் பரிசாக அளித்தார்.

காசினி - பூமி. தேசிகன் - அழகன், குரு. பரி, புரவி - குதிரை.

க.சொல் : 1. யென்ன 2 சொல்லுமெடா 3 தேசிகநே 4. யொற்ற

Varamperra Nīlan vacativēṇṭutal

innamuṇṭāl collumaṭā yiyalperiya nīlarācā
connatellām tantīrē tōrrāmal vaittukkoḷḷa
pōrēnpon nampalavā pērperiya civanmutalē
aruḷkoṭuttu aruḷpuriyum aṭimaikoṇ ṭamarmutalē
kāciniyil pūcaikoḷḷak kālnaṭaiyāyp pōvēnō
tēcikanē yentanukkut teyvapari vēṇumenrār
vēṇumenru nīlancolla mēkattiran pōlēyotta
karumēka pōluruvāy karumpuravi tānkoṭuttār

After receiving graces, Nīlan wants facilitee

"All that I wanted you've granted,
Without reservation. Oh Ponnampalam
I am most indebted to thee O! Civā!
To give and get grace and worship from people
Can I go on foot all over the world?
O! Civan! Give me a horse to travel fast".
Instantly, Civan presented him
A horse as dark as the dark clouds

புரவிக்கு அலங்காரம்

கட்டழக[1] னீலனுக்குக் கரும்புரவி கொடுத்தபோது
வட்டநெற்றிப்[2] பிறையும்பொன்னால் வயிரப்பொன் மாணிக்கமும
முககடுகு பொன்னாலே முகவாறும் பொன்னாலே
கழுத்துக்கு[3] வீரமணி காலுக்கு வீரதண்டை
வாலுக்குக் குஞ்சம்பொன்னால் வளமையுடன் அலங்கரித்து
அலங்கரித்த புரவியின்மேல் ஆயுதமும் தான்கொடுத்து
அகமகிழ்ந்து[4] நீலராசன் அலங்கரித்த புரவிமேலே
நலம்பெறவே[5] யேறுவாராம் நாயகனார்[6] தனைவணங்கு
ஆசையுடன் பூவுலகில் அடியவர்க ளிடமதிலே

பூசைகொள்ளப் போறேனென்று[7] புண்ணியனார் தனைத்தொழுதார்[8]
வாழ்ந்திருக்கப்[9] போறேனென்று மகதேவரை அடிதொழுதார்[10]
தொழுதுவிடை[11] தனைவேண்டித் தோற்றாத நீலராசன்
பழுதுபடாப்[12] புரவியேறிப் பரிவுடன் புறப்பட்டாரே.

இறைவன் நீலனுக்குக் கரும்புரவியை அளித்தபோது அதனுடைய நெற்றிப் பிறை பொன்னாலும், வயிரத்தாலும், மாணிக்கக் கற்களாலும் அலங்கரிக்கப்பட்டதாய் விளங்கியது. அதேபோல முகத்திற்குப் பொன்னாலான வாரும், கழுத்துக்கு வீரமணியும் காலுக்கு வீரதண்டையும், வாலுக்குப் பொன்னாலான குஞ்சமுமாகப் பலவகையான அலங்காரங்களோடு விளங்கியது. அவ்வாறு அலங்கரித்த குதிரையின்மேல் ஏறியபொழுது நீலனுக்கு வேண்டிய ஆயுதங்களையும் இறைவன் அளித்தார். இவற்றையெல்லாம் பெற்ற நீலன் இறைவனை வணங்கி, எம்பிரானே! இந்நிலவுலகில் உள்ள அடியவர்களிடத்திலே பூசை கொள்ளச் செல்கிறேன் என்று கூறி மகாதேவனின் திருவடிகளை மீண்டும் தொழுது புரவியின் மீது ஏறிப் புறப்பட்டான்.

பழுது - குற்றம்; சிதைவு பரிவு - அன்பு; இன்பம்; பக்குவம்.

சு.சொல் : 1. சுட்டளக 2 நெத்தி 3 களுத்து 4. மகிள்ந்து 5 பிறவே 6 னாயகனார் 7 நென்று 8 னாதனைதொளுதார் 9 வாள் 10. நென்று 11 தொளுதார் 12 பளுபடா

Puravikku alaṅkāram

kaṭṭaḻaka ṉīlaṉukkuk karumpuravi koṭuttapōtu
vaṭṭaneṟṟip piṟaiyumpoṉṉāl vayirappoṉ māṇikkamum
mukakaṭuku poṉṉālē mukavārum poṉṉālē
kaḻuttukku vīramaṇi kālukku vīrataṇṭai
vālukkuk kuñcampoṉṉāl vaḷamaiyuṭaṉ alaṅkarittu
alaṅkaritta puraviyiṉmēl āyutamum tāṉkoṭuttu
akamakiḻntu nīlarācaṉ alaṅkaritta puravimēlē
nalamperavē yēṟuvārām nāyakaṉār taṉaivaṇaṅki
ācaiyuṭaṉ pūvulakil aṭiyavarka ḷiṭamatilē
pūcaikoḷḷap pōrēṉeṉṟu puṇṇiyaṉār taṉaittoḻutār
vāḻntirukkap pōrēṉeṉṟu makatēvarai aṭitoḻutār
toḻutuviṭai taṉaivēṇṭit tōṟṟāta nīlarācaṉ
paḻutupaṭāp puraviyēṟip parivuṭaṉ puṟappaṭṭārē

The horse being decorated

While getting the black Pegasus (horse) handsome Nīlaṉ
Was wearing sickled moon shaped gold dollar on the forehead,

Studded with sapphire and diamonds.
His horse too had reins of gold and wore
Viramaṇi for the neck, anklet for the leg,
Gold hangings for the tail. Sitting on the decorated horse
Nīlaṉ bowed his head before Civaṉ
And said that he was going to the world to get worship.
Once again he worshipped the feet of the Lord.
Getting leave of the Supreme Being,
He rode on his horse carrying proper weapons.

நீலன் புறப்பாடு

நீல னங்கே பரிமீதி லேறியேநின்ற
தெய்வார் குரவை முழங்கவே[1]
அடவட மாக ஆலாத்தியேந்தி
ஆலவட்டம் வீசும்பெண்கள் நெருங்க
நீலனங்கே பரிமீதி லேறியே
நேசத்துடன்வார நேரந் தனிலே
காலதூதர் இசமனுங் கண்டுகாவலர்
நீல[2] *னோடே நடக்க*
தெய்வப் புரவியி லேறியேநீலன்
தேட்டத் துடன்படை கூடவரவே
மைவிழி[3] *யார்கள் குரவைகள் பாட*
வானத்தி னரம்பையர் வெண்சாமரை வீச

குதிரையில் ஏறி, நீலன் புறப்பட்ட போது தேவமகளிர் குரவை பாடத் தொடங்கினார்கள் அவருள் சிலர் ஆரத்தி ஏந்திவந்தார்கள்; சிலர் ஆலவட்டம் வீசியபடியே நீலனைச் சூழ்ந்து வந்தார்கள். அரம்பையர் வெண்சாமரை வீசிவந்தார்கள். இவர்களைக் கண்ட காலதூதர்களும் நீலனுக்குப் பாதுகாவலர்களாக உடன் நடக்கத் தொடங்கினார்கள்.

க.சொல் : 1 முளங்க 2 னீல 3 மைவிளி

Nīlaṉ puṟappāṭu

nīla ṉaṅkē parimīti lēṟiyēniṉṟa
teyvār kuravai muḻaṅkavē

aṭavaṭa māka ālāttiyēnti
ālavaṭṭam vīcumpeṇkaḷ neruṅka
nīlanaṅkē parimīti lēriyē
nēcattuṭanvāra nēran tanilē
kālatūtar icamanuṅ kaṇṭukāvalar
nīla nōṭē naṭakka
teyvap puraviyi lēriyēnīlan
tēṭṭat tuṭanpaṭai kūṭavaravē
maiviḻi yārkaḷ kuravaikaḷ pāṭa
vānatti narampaiyar veṇcāmarai vīca

Nīlaṉ starts

Nīlaṉ, Seated on his horse started his journey,
Kuravai being sung by heavenly maild
Some of them performed *Āratti* Platter and others,
Carrying large circular fans
Nīlaṉ came on horse with heart full of love,
And body guards started walking by his side.
Seated on godly horse, Nīlaṉ was followed by an army
Black eyed women started singing *kuravai*
And Heavenly beauties (Rampā's) fanned
With soft white feathered fans.

Ālavaṭṭam - A large circular fan.

நீலன் திறன்

சொல்லுத் தவறாத நீலகுல தெய்வம்
துட்டரைக் கொட்டி அடக்கவும் வல்லான்
சொல்லும் குறியும் குணமு முடையோன்
துங்க பரிமீதி லேறியே வாறார்
தீரன் நகுல சிவனணைஞ்சப் பெருமாளும்
தெய்வப் பரிமீதி லேறியே வாறார்
வீரத் துடன்வரும் சேவுகக் காரர்
மெய்யான தெய்வப் படையது சூழ

பலரும் புடைசூழ தெய்வப்புரவியின் மீது வருகின்ற நீலன், சொன்ன சொல் தவறாத பண்பு உடையவன். தீயவர்களைக் கொட்டி அடக்கும் வல்லமை பெற்றவன். சொல்லும் செயலும் ஒன்றுபட நடக்கும் மனமுடையவன் இத்தகைய பண்புகள் பலவும் படைத்த நீலன் சிவனணஞ்சப் பெருமாளும் உடன்வர குதிரை மீது வருகின்றான்.

துட்டர் - தீயர். துங்கம் - உயர்ச்சி; பெருமை; வெற்றி

சு.சொல் : 1 சூள

Nīlan̲ tiran̲

collut tavar̲āta nīlakula teyvam
tuṭṭaraik koṭṭi aṭakkavum vallān̲
collum kur̲iyum kuṇamu muṭaiyōn̲
tuṅka parimīti lēr̲iyē vār̲ār
tīran̲ nakula Civan̲aṇaiñcap perumāḷum
teyvap parimīti lēr̲iyē vār̲ār
vīrat tuṭan̲varum cēvukak kārar
meyyān̲a teyvap paṭaiyatu cūl̲a

Nīlan̲'s Talent

Nīlan̲, never breaking his promised word,
Capable of controlling the wicked,
His words and actions being the same,
Came on horseback like Perumāḷ.
Those who came by his side
Are bold servers and attendants.
They came surrounding Nīlan̲
Almost like a huge army

நீலனின் நோக்கம்

ஒப்பரவாய் நாமள்[1] ஒருதலந் தன்னில்
ஒன்றிலே பூசை கொள்ளவும் வேணும்
தப்பாமல் எப்போதும் அடியவர் தம்மைத்
தாமரை போலே வளர்க்கவும்[2] வேணும்
எங்கள் குலதெய்வம் தங்கத் திருநீலன்
எல்லாப் படைக்கு முன்னோடியாக[3]

தென்கனி வாணுதல் மங்கையர் நின்று
சேர வளைந்து குரவையிட் டாட
பொன்னுங் கயிலாச மலையதும்[4] விட்டுப்
புகழ்பெறும்[5] நீலசுவாமி வெள்ளிமலை நடந்தாரே

பூவுலகத்திலே சென்று ஏதேனும் ஒரு தலத்தில் நிலையாக இருந்து மக்களின் பூசையை ஏற்க வேண்டும். அவ்வாறு பூசைசெய்யும் அடியவர்களை அன்பாகத் தாமரை மலரை வளர்ப்பது போல வள்ர்க்கவும் வேண்டும் என்னும் பேரவாவுடன் மங்கையர் சூழ வெள்ளி மலையைவிட்டு நடந்து வரத்தொடங்கினான்.

க.சொல் : 1 ளாமள் 2 வளக்க 3 முன்னீளி 4 மலயது 5. புகள்

Nīlaṉiṉ nōkkam

opparavāy nāmaḷ orutalan taṉṉil
oṉṟilē pūcai koḷḷavum vēṇum
tappāmal eppōtum aṭiyavar tammait
tāmarai pōlē vaḷarkkavum vēṇum
eṅkaḷ kulateyvam taṅkat tirunīlaṉ
ellāp paṭaikku muṉṉōṭiyāka
teṉkaṉi vāṇutal maṅkaiyar niṉṟu
cēra vaḷaintu kuravaiyiṭ ṭāṭa
poṉṉuṅ kayilāca malaiyatum viṭṭup
pukaḻpeṟum nīlacuvāmi veḷḷimalai naṭantārē

Nīlaṉ's purpose

Nīlaṉ desired to accept pooja from a fixed place
In this world, inorder that
He may protect his devotees
As the gentle lotus stands protected.
Our clan's god Nīlaṉ came as
A precursor to all armies, he, being
Surrounded by women singing *kuravai*,
Left silvery Kailash to the terrestrial world

நீலன் கடந்த இடங்கள்

கடந்தே புகழ்நீலன்[1] தொடர்ந்தே[2] நடந்திடவே
கதிர்வேல் விழிமடவார்[3] இருபுறமும்[4] இடையாட[5]

வடவரல் முகமதுவும் மலையதுவுங்[6] கடந்து
வாடா மதிமுகத்தோன் வடிவழகன்[7] புகழ்நீலன்[1]
வரமதுவும் வேண்டிசிவன் மலர்ப்பாதம் தொழுது[8]
வாறார்புகழ் நீலன்தெய்வ மலையான்து கடந்து
கடந்தனனே[9] நீலராசன் கயிலாச மலையும்விட்டு[10]
அடந்ததெய்வ லோகம்விட்டு அழகுதெய்வ[11] மலையும்விட்டார்[12]
சந்திரகிரி மலையும்விட்டு[10] சதுரகிரி மலையில்வந்தார்[13]
இந்திரனார் மலையும்விட்டு[10] இருசிவன் தோட்டம்விட்டார்
சிம்பாத பரிமீதில் தெய்வகுல நீலனவர்

வெள்ளிமலையைவிட்டு இறங்கிய நீலன், வேல்போன்ற விழிகளையுடைய மகளிர் இருபுறமும் சூழ்ந்து வர முகம் வாடாமலும் வடிவம் மிகுந்த அழகு விளங்கவும், சிவபெருமானது வரத்தினால் புகழ் விளங்கவும் புறப்பட்ட நீலன், தெய்வமலையாகிய கயிலாச மலையைவிட்டு தேவர்கள் சூழ்ந்த தேவலோகத்தை அடைகிறான் அடுத்து சந்திரகிரிமலை, சதுரகிரிமலை, இந்திரனார் மலை, இருசிவன் தோட்டம் ஆகியவற்றையெல்லாம் சிவனது வரமகிமையினாலே கடந்து வருகிறான்.

சு.சொல் : 1. புகள் 2 துடந்து 3 விளி 4 யிரு 5 யிடை 6 மலயது 7 வளகன் 8 தொளுது 9. கடந்தனநே 10 மலயுமிட்டு 11 அளகு 12 மலயுமிட்டார் 13 மலயில்

Nīlan̲ kaṭanta iṭaṅkaḷ

kaṭantē pukaḻnīlan̲ toṭarntē naṭantiṭavē
katirvēl viḻimaṭavār irupur̲amum iṭaiyāṭa
vaṭavaral mukamatuvum malaiyatuvuṅ kaṭantu
vāṭā matimukattōn̲ vaṭivaḻakan̲ pukaḻnīlan̲
varamatuvum vēṇṭicivan̲ malarppātam toḻutu
vār̲ārpukaḻ nīlan̲teyva malaiyān̲atu kaṭantu
kaṭantan̲an̲ē nīlarācan̲ kayilāca malaiyumviṭṭu
aṭantateyva lōkamviṭṭu aḻakuteyva malaiyumviṭṭār
cantirakiri malaiyumviṭṭu caturakiri malaiyilvantār
intiran̲ār malaiyumviṭṭu irucivan̲ tōṭṭamviṭṭār
cimpāta parimītil teyvakula nīlan̲avar

The places Crossed by Nīlan̲

Nīlan̲, followed by his own fame,
Was escorted by beautiful fish eyed women,

Dancing with gyrations of the hip
His face bright and beautiful and fresh
Without fatigue, the moon faced handsome Nīlaṉ
Worshipping the feet of Civaṉ, started
Crossing many places, sitting on his
Horseback with the special grace of Civaṉ
From Kailash he crossed beautiful tēvā's world
Then Cantirakiri, Caturakiri, Intirakiri,
And at last the Garden of Irucivaṉ.

பூவுலகடைதல்

நாகலோகம்[1] தன்னைவிட்டுப் பூவுலகம் தனில்வரவே
மைவிழியார்[2] குரவையிட வருணன்வந்து மழைபொழிய[3]
மருட்டுமொளிப் பொன்னாகி வடநாடு[4] யெல்லைவிட்டு
பெண்ணீசி நாடும்விட்டுப் பெருங்காலன் சீமைவிட்டுத்
தன்னருளால் நீலராசன் தாரணியில் பூசைகொள்ள
ஒத்தகாலன் சீமைவிட்டு உலகுவட தேசம்விட்டார்
வாக்கும்நோக்கும்[5] வடிவமுள்ள வரங்கள்பெற்ற நீலராசன்

தேவலோகத்தைக் கடந்த நீலன் இடையிலே நாகலோகத்தைக்கடந்து பூவுலகம் வந்து சேர்கிறான். வரமகிமையால் சிறந்த வாக்கும், பண்புடைய நோக்கும், அழகிய வடிவமும் பெற்றவனாய் பூவுலகத்தை அடைந்தபொழுது மகளிர் பாடியாடி வரவேற்றனர். வருணன் மழைபொழிந்து மகிழ்ச்சியூட்டினான். மயக்கத்தை உண்டாக்குகின்ற பல இடங்களையும், உயிரைப் போக்குகின்ற காலனின் சீமையையும் கடந்து பூமியில் பூசைகொள்ள வேண்டுமென்ற பெருநோக்கத்தோடு வடநாட்டை அடைந்தான்.

சு.சொல் : 1 னாக 2 விளி 3 மளபொளிய 4 னாடு 5: னோக்கும்

pūvulakaṭaital

nākalōkam taṉṉaiviṭṭup pūvulakam taṉilvaravē
maiviḻiyār kuravaiyiṭa varuṇaṉvantu maḻaipoḻiya
maruṭṭumoḷip poṉṉāki vaṭanāṭu yellaiviṭṭu
peṇṇīci nāṭumviṭṭup peruṅkālaṉ cīmaiviṭṭut
taṉṉaruḷāl nīlarācaṉ tāraṇiyil pūcaikoḷḷa
ottakālaṉ cīmaiviṭṭu ulakuvaṭa tēcamviṭṭār
vākkumnōkkum vaṭivamuḷḷa varaṅkaḷpeṟṟa nīlarācaṉ

He reaches our world

Leaving Nākalōkam he reached our world,
Crossing mysterious places, like the land of yamān
The life-taker. Fish eyed women danced *kuravai*
And Varuṇan showered rain in welcome.
And Nīlan came to this world to get worship
And entered the Northern land,
With excellence in speech, purpose and broad outlook

தென்னாடு

மயபுரன் சீமைவிட்டு மகுடவன்னியர் நாடும்விட்டு[1]
காக்கன்மூக்கன் சீமைவிட்டுக் கன்னடர்கள் நாடும்விட்டு

மயபுரம் எனப்படும் தேவதச்சனுடைய நாட்டைவிட்டுப் புறப்பட்டு வடதேசத்தை அடைந்த நீலன், அங்கிருந்து தென்னாடு நோக்கி நடக்கத் தொடங்கினான். வன்னியர் நாடு, காக்கன் மூக்கன் எனப்படுகின்ற மூர்க்கர்கள் வாழுகின்ற பகுதி இவைகளையெல்லாம் தாண்டி, கன்னட நாட்டை அடைந்தான்.

சு.சொல் : 1. னாடுமிட்டு.

Teṉṉāṭu

mayapuraṉ cīmaiviṭṭu makuṭavaṉṉiyar nāṭumviṭṭu
kākkaṉmūkkaṉ cīmaiviṭṭuk kaṉṉaṭarkaḷ nāṭumviṭṭu

The south

Leaving the land of Māyaṉ and
Crossing the territory of Vaṉṉiyar,
And then the area of Kakkaṉ Mookkaṉ,
He moved southwards and reached
The land of Kannadigas

திருச்செந்தூர் திருமால்

தெற்கேநோக்கி[1] வழிநடந்து[2] செந்தூர்பதி தனிலேவந்தார்
செந்தூர்பதி தனிலேவந்து திருமாலைப் போற்றிசெய்து
அடிதொழுத[3] நீலனைத்தான் அச்சுதரும் ஏதுசொல்வார்

எங்கிருந்து வாறாயோடா இலங்கியதோர் நீலராசா
சங்கரனா ரிடமதிலே தவசிருந்து வரங்கள்பெற்றேன்
இங்கேவந்தேநா[4] னும்மைத்தேடி உத்தரம் கேழ்க்கவென்று[5]
குன்றாமல் மண்ணளந்தோன் கோவிந்தரும் ஏதுசொல்வார்
சங்கரனார் தந்தவரம் தானுனக்குத் தந்தேனென்றார்[6]
சிங்கார நீலராசா தென்பூமி தனில்போடா
திருமாலை அடிதொழுது[7] செந்தூர்பதி தனைக்கடந்து

தெற்கு நோக்கி நடந்து திருச்செந்தூர் என்னும் திருத்தலத்தை அடைந்தான். அங்கே கோயில் கொண்டுள்ள திருமாலை வணங்கித் துதிசெய்தான் அவ்வாறு பக்தியோடு தன்னை வணங்கிய நீலனைப் பார்த்து, நீ எங்கிருந்து வருகிறாய் என்று கேட்டார் திருமால். நீலன், மீண்டும் திருமாலை வணங்கி ஐயனே! நான் சங்கரனாரை நோக்கித் தவம் செய்து சிறந்த வரங்களையெல்லாம் பெற்றுத் தங்களுடைய ஆணையையும் பெறவேண்டும் என்ற நோக்கத்தோடு தங்களைத் தேடி வந்திருக்கிறேன் என்று கூறினான். நீலனின் வேண்டுகோளைக் கேட்ட மண்ணளந்தோனாகிய கோவிந்தன் நீலனே! சங்கரனார் உனக்கு அளித்த வரங்களையெல்லாம் நானும் மகிழ்ச்சியோடு கொடுக்கிறேன் தென்னாடு நோக்கிப் புறப்படுவாயாக என்று கூறினார். நீலனும் திருமாலை வணங்கி திருச்செந்தூர்ப் பதியை விட்டுப் புறப்பட்டான்.

அச்சுதர் - திருமால்.

சு.சொல் : 1 தெக்கேனோக்கி 2 வளி 3. தொளுத 4. னானும் 5. கேள்க்க 6 நென்றார் 7 தொளுது

Tiruccentūr tirumāl

te̲rkēnōkki va̲linaṭantu centūrpati ta̲nilēvantār
centūrpati ta̲nilēvantu tirumālaip pō̲r̲r̲iceytu
aṭitoḻuta nīla̲naittā̲n̲ accutarum ētucolvār
eṅkiruntu vā̲r̲āyōṭā ilaṅkiyatōr nīlarācā
caṅkaraṉā riṭamatilē tavaciruntu varaṅkaḷpe̲r̲r̲ē̲n̲
iṅkēvantēnā ṉummaittēṭi uttaram kēḻkkaveṉṟu
kuṉṟāmal maṇṇaḷantōṉ kōvintarum ētucolvār
caṅkaraṉār tantavaram tāṉuṉakkut tantēṉeṉṟār
ciṅkāra nīlarācā teṉpūmi taṉilpōṭā
tirumālai aṭitoḻutu centūrpati taṉaikkaṭantu

Tirumāḷ of Tiruccentūr

Walking southwards he reached Tiruccentūr
And paid obeissence to the Lord Tirumāl

At Tiruccentūr where Tirumāl
Asked him from where he came
"After getting special boons from Civan̲
I came in search of you to get your orders"
He who measured the world said that
He knew the gifts conferred on him.
"Go south" said the Lord and Nīlan̲ after worship left for the south

திருவாரூர் அடைதல்

திறல்வீரன் பரியேற தெய்வார்கள் குரவையிட
மைவிழிசேர்[1] மடவார்கள் வழிமறித்துக்[2] குரவையிட
சிறப்புடனே[3] வழிநடந்துநல்ல சீர்காழியன்[4] பதியில்வந்தார்
செப்பமுள்ள நீலராசன் திருவாரூர் பதியும்விட்டு[5]
கன்னியர்கள் குரவையிட[6] காவேரி யாற்றில்
காவேரி தன்னைவிட்டுக் கமலக்கடம் பாறுமிட்டு

திருச்செந்தூரிலிருந்து குதிரைமீது புறப்பட்ட நீலராசனைச் சூழ்ந்து மகளிர் பலர் குரவையாடி மகிழ்வித்து வர, மகிழ்ச்சியோடு வழிகடந்து சீர்காழி வழியாக திருவாரூர்த் திருத்தலத்தை அடைந்தான். அங்கிருந்து காவிரியாறு, கடம்பாறு ஆகியவற்றைத் தாண்டி தாமரை நிறைந்த அழகிய தடாகம் ஒன்றை அடைந்தான்.

க.சொல் : 1 விளி 2 வளி 3 சிறப்புடநே 4 சீர்காளி 5 பதியுமிட்டு 6 குரவி.

Tiruvārūr aṭaital

tir̲alvīran̲ pariyēr̲a teyvārkaḷ kuravaiyiṭa
maiviḻicēr maṭavārkaḷ vaḻimar̲ittuk kuravaiyiṭa
cir̲appuṭan̲ē vaḻinaṭantunalla cīrkāḻiyan̲ patiyilvantār
ceppamuḷḷa nīlarācan̲ tiruvārūr patiyumviṭṭu
kan̲n̲iyarkaḷ kuravaiyiṭa kāvēri yār̲r̲il
kāvēri tan̲n̲aiviṭṭuk kamalakkaṭam pār̲mviṭṭu

Reaching Tiruvārūr

Talented knight on horseback, followed by
Blackeyed heavenly maids dancing *kuravai*
All along, reached Cīrkāḻi and then came to Tiruvārūr

The women performed *kuravai* when he crossed
Kāvēri, Kaṭampāṟu and reached a lotus tank.

தாமரைப் பொய்கையில் மகளிர்

பூவேரி பூவிரியும் பொய்கையிலே[1] நீலனவர்
நீலனைத்தாம் கண்டபோது நேசமுள்ள கன்னியர்கள்
வாலிபப் பிராயமிவர் மருகநல்ல பருவமென்றார்
என்றுசொல்லிக் கன்னியர்கள் ஏந்திழைமார்[2] தனைமருட்டி
சென்றுமுந்திப் பிடிப்போமடி[3] சிரித்துமெல்லச் சொல்வோமடி[4]
அண்டையிலே[5] செல்வோமடி[6] ஆவிகெட்டிப் பிடிப்போமடி[7]
கந்தமரும் கன்னியர்கள் கலந்துகும்மி அடிப்போமென்றார்

7 பொய்கையில் நீலனைக் கண்டபோது
பொற்கொடி மாதர்க ளெல்லோரும்
பொருந்தவே யெங்கள் நீலசுவாமியைப்
போற்றிக் கும்மி யடிப்போமடி[8] 1

வருந்தியே அந்த மடவார்கள்
மங்கைமா ரெல்லோருந் தான்கூடி
பொருந்தவே யெங்கள் நீலசுவாமியைப்
போற்றிக் கும்மி யடிப்போமடி 2

செந்தாமரை போலநிறத்தானை-சிவ
சூரியன் போலே நிறத்தானை
பைந்தமிழ்[9] பாடுங் கிளியானை
பார்த்துக் கும்மி அடிப்போமடி[10] 3

மங்கைய ரேயிளங் கன்னியரே
மானே[11] தேனே மரகதமே
மைவிழியா[12] ரெங்கள் நீலசுவாமியை
வாழ்த்திக்[13] கும்மி அடிப்போமடி 4

மாமயில் போலே நிறத்தழகி[14]
மங்கைநல்லா ளெங்கள் நீலியம்மை
பூமயில் போலே நிறத்தாளை
போற்றிக் கும்மி அடிப்போமடி 5

பொட்டிலங்கப் பட்டுப் பணியிலங்க
பொன்னா பரணம் தானிலங்க
கட்டி அணைத்தெங்கள் நீலசுவாமியைக்
கையினால் கும்மி யடிப்போமடி 6

காறைக் கழுத்தி[15] லங்குதடி
கயில வளையல்[16] கொஞ்சுதடி
வாரேறு மதனத்தான் நீலசுவாமியை
வாழ்த்திக் கும்மி அடிப்போமடி 7

சேவேறும்[17] ஈசன் திருவடிவைச்
சென்று கண்டுவரம் வாங்கிவந்த
மாவேறும் திண்புயத்தா னீலராசாவை
வாழ்த்திக் கும்மி அடிப்போமடி 8

தாமரைப் பொய்கையைக் கடந்த நீலனை, அங்கிருந்த மகளிர் கண்டு இவன் அழகும் இளமையும் வாய்ந்த மன்மதனைப் போல விளங்குகிறான்; அவன் அருகிலே சென்று அவனைக் கட்டிப்பிடிப்போம்; அவனைச் சுற்றிலும் சூழ்ந்து கும்மியடிப்போம் வாருங்கள் என்றெல்லாம் கூறிக்கொண்டு அவன் அருகிலே வந்து, நீலசுவாமியைப் போற்றிக் கும்மியடிப்போம் என்று தொடங்கி இவன் செந்தாமரை போலவும், சிவந்த சூரியன் போலவும் சிவந்து விளங்குகிறான். அவனைப் புகழ்ந்துபாடி கும்மியடிப்போம் என்றனர். அழகிய மயில் போலே நிற்கின்றாள் நீலியம்மை. அழகிய நிறத்தை உடையவளாய் நெற்றியிலே பொட்டும், இடையிலே பட்டும், உடலிலே பொன் ஆபரணங்களும் உடையவளாய் விளங்கும் நீலியைப் பாடிக் கும்மியடிப்போம் என்றெல்லாம் பாடி கும்மியடிக்கத் தொடங்கினார்கள் இறுதியாக இறைவனிடத்திலே வரம் வாங்கி வந்திருக்கும் நீலராசனைப் பலவாறு வாழ்த்திப்பாடிக் கும்மியடித்தார்கள்.

காறை - கழுத்தணியிலொன்று. மதனன் - மன்மதன்

க சொல் : 1 பொய்க 2 யேந்திளை 3 பிடிப்போமடி 4 சொல்வோமெடி 5 அண்டயிலே 6 சொல்வோமெடி 7 பிடிப்போமெடி 8. யடிப்போமெடி 9 தமிள் 10 அடிப்போமெடி 11. மாநே 12 விளி 13 வாள்த்தி 14, நிறத்தளகி 15 களுத்து 16 வளயல் 17 செவ்வேறும்

Tāmaraip poykaiyil makaḷir

pūveri pūviriyum poykaiyilē nīlaṉavar
nīlaṉaittām kaṇṭapōtu nēcamuḷḷa kaṉṉiyarkaḷ
vālipap pirāyamivar marukanalla paruvameṉṟār
eṉṟucollik kaṉṉiyarkaḷ ēntiḻaimār taṉaimaruṭṭi
ceṉṟumuntip piṭippōmaṭi cirittumellac colvōmaṭi
aṇṭaiyilē celvōmaṭi āvikeṭṭip piṭippōmaṭi
kantamarum kaṉṉiyarkaḷ kalantukummi aṭippōmeṉṟār

poykaiyil nīlaṉaik kaṇṭapōtu
poṟkoṭi mātarka ḷellōrum
poruntavē yeṅkaḷ nīlacuvāmiyaip
poṟṟik kummi yaṭippōmaṭi

varuntiyē anta maṭavārkaḷ
maṅkaimā rellōrun tāṉkūṭip
poruntavē yeṅkaḷ nīlacuvāmiyaip
pōṟṟik kummi yaṭippōmaṭi

centāmari pōlaniṟattāṉai - civa
cūriyaṉ pōḷē niṟattāṉai
paintamiḻ pāṭuṅ kiḷiyāṉai
pārttuk kummi aṭippōmaṭi

maṅkaiya rēyiḷaṅ kaṉṉiyarē
māṉē tēṉē marakatamē
maiviḻiyā reṅkaḷ nīlacuvāmiyai
vāḻttik kummi aṭippōmaṭi

māmayil pōlē niṟattaḷaki
maṅkainallā ḷeṅkaḷ nīliyammai
pūmayil pōlē niṟattāḷai
pōṟṟik kummi aṭippōmaṭi

poṭṭilaṅkap paṭṭup paṇiyilaṅka
poṉṉā paraṇam tāṉilaṅka
kaṭṭi aṇaitteṅkaḷ nīlacuvāmiyaik
kaiyiṉāl kummi yaṭippōmaṭi

kāṟaik kaḻutti laṅkutaṭi
kayila vaḷaiyal koñcutaṭi
vārēṟu mataṉattāṉ nīlacuvāmiyai
vāḻttik kummi aṭippōmaṭi

cēvēṟum īcaṉ tiruvaṭivaic
ceṉṟu kaṇṭuvaram vāṅkivanta
māvēṟum tiṉpuyattā ṉilarācāvai
vāḻttik kummi aṭippōmaṭi

Women bathing in the lotus tank

In the flower choked lotus tank, the bathing maids
Saw the handsome Nīlaṉ and said,
"He is young and fit to play with us,
Shall we stretch the front of our sarees
And smiling shall we go near him?
And getting near shall we embrace him tight?
And shall we, the virgins, perform *kummi* before him?"
When they saw Nīlaṉ in the tank
Gold creeper like women went to perform *kummi*
In his honour. For the one like
The red lotus; For the one like
The red sun; For the one who sings
Tamil like the sweet parrot,
Let us perform *Kummi* together,
"Oh women! Oh virgins! Oh deer! Oh honey,
Oh rubies! Oh blackeyed women,
Let us perform *kummi* for Nīlaṉ,
For Nīli who is like the peacock,
Coloured like the earth, let us
Praise her without *Kummi* in group"
"Nīlan with his kumkum and silken dress
Adorned with gold jewels, should be
Tightly embraced after our *Kummi.*
Nīlacuvāmi with ornamental neck gear,
And Kailash bangles looks attractive,
Let us perform our *kummi* in his praise"
The one who got boons from the God
Who rides the ox and
The strong shouldered Nīlaṉ riding on horse.
Shall be praised through our *kummi* for coming south.

மங்கையர் ஏக்கம்

கன்னி நல்லார்கள் மனமகிழ்[1]
    கண்ணான நீலனைக் கண்டபோது
பொன்முகத்தைக் கொண்டுயென் முகத்தோடே - மோத 9
    இந்தக் கும்மி அடிப்போமடி
திரும்பி யென்முகம் பாரானோ
    சேயிழை[2] மார்களைக் காணாரோ
விம்மியே யெங்கள் நீலசுவாமியை
    வீர கும்மி அடிப்போமடி 10
எள்ளளவு மனதி ரங்காதோ
    எங்களைக் கண்கொண்டு பாராரோ
துலங்கவே நீலன் பரிமீதில்வாறார்
    தொழுது[3] கும்மி அடிப்போமடி 11
கண்டு கலியது தீர்த்தோமடி
    கண்ணான தோர்நீல ராசாவை
கொண்டையில் மாலை குலாவுதடி
    குதித்துக் கும்மி அடிப்போமடி 12

ஆடவர்களுள் மிகச்சிறந்த அழகோடு விளங்கியவனாகிய நீலனைக் கண்டு அவனைச் சூழ்ந்து கும்மியடித்து மகிழ்ச்சியடைந்த மகளிர் ஒவ்வொருவரும், நீலன் திரும்பி என் முகத்தையே பார்க்க மாட்டானா? உள்ளம் இரங்கி அன்போடு என்னைப் பார்க்க மாட்டானா? என்று எண்ணியவாறு கும்மியடிக்கத் தொடங்கினார்கள் குதிரைமீது வருகின்ற நீலனைக் கண்ட போதே எங்கள் துன்பமெல்லாம் நீங்கியது நாங்கள் அணிந்துள்ள மாலைகள் அவனோடு குலாவ நினைக்கின்றன என்பன போன்ற வார்த்தைகளைச் சொல்லிக் கும்மியடித்தார்கள்.

சேயிழைமார் - ஆபரணமணிந்த பெண்கள்.

சு.சொல் : 1 மகிள 2 சேயிளை 3 தொளுது

Maṅkaiyar ēkkam

kaṉṉi nallārkaḷ maṉamakiḻa
    kaṇṇāṉa nīlaṉaik kaṇṭapōtu
poṉmukattaik koṇṭuyeṉ mukattōṭē - mōta
    intak kummi aṭippōmaṭi

tirumpi yeṉmukam pārāṉō
cēyiḻai mārkaḷaik kāṇārō
vimmiyē yeṅkaḷ nīlacuvāmiyai
vīra kummi aṭippōmaṭi
eḷḷaḷavu maṉati raṅkātō
eṅkaḷaik kaṇkoṇṭu pārārō
tulaṅkavē nīlaṉ parimītilvāṟār
toḻutu kummi aṭippōmaṭi

kaṇṭu kaliyatu tīrttōmaṭi
kaṇṇāṉa tōrnīla rącāvai
koṇṭaiyil mālai kulāvutaṭi
kutittuk kummi aṭippōmaṭi

The longing of women

Good virgins, happy on seeing Nīlaṉ,
Desired to press their faces with his during *Kummi.*
Each one ached to think if Nīlaṉ would look at her face
They longed for his gaze; if he would look at the bejewelled lasses.
"Let us perform *Kummi*" they said
With lot of whimpering and simmering
"Will he not look at us, cast a glance?
Looking at Nīlaṉ on horseback,
All our woes were gone. The garlands
In our hairs do want to play on his chest.
Let us perform *Kummi*".

நீலன் குடமாடு மலையடைதல்

8 பொய்கையில் வாழு மடவார்க்குப்
புத்திபல சொல்லி நீலனுமே
பொய்கையில் வாவி தனைக்கடந்து
பொன்னான நீல ராசனவர்
நாதனே துணையெனவே நாயகியும் தமையனுமாய்
காவலன் நீலராசன் கயத்தாறு தனைக்கடந்து

அடுத்துகல் லாறுவிட்டு அதிசயமாய் நீலனவர்
வெப்பாறு நெய்ப்பாறு வடநாடு எல்லைவிட்டு
திருச்சிராப் பள்ளிவிட்டுத் திருநெல்வேலி யூரும்விட்டு
ஆணழகன் நீலராசன் ஆழ்வார்திருநெல்வேலி யூரும்விட்டு
அன்னம்போலே வழிநடந்து பொன்மலை காவும்விட்டு
திடமாக வழிநடந்து குடமாடு மலையில்வந்தார்

தடாகத்தில் தன்னைச் சுற்றிலுமிருந்து கும்மியடித்து விளையாடிய மகளிரை நோக்கி, நீலனும் நீலியுமாய் பல புத்திமதிகளைச் சொல்லிவிட்டு அப்பொய்கையைவிட்டுப் புறப்பட்டார்கள் கயத்தாறு, வெப்பாறு,நெய்ப்பாறு போன்ற ஆறுகளையெல்லாம் கடந்து திருநெல்வேலி, திருச்சிராப்பள்ளி ஆகிய நகரங்களைக் கடந்து வரத் தொடங்கினார்கள் இறுதியாக பொன்மலை என்னுமிடத்தை அடுத்த குடமாடுமலை என்னுமிடத்தை வந்து அடைந்தார்கள்.

Nīlaṉ kuṭamāṭu malaiyaṭaital

poykaiyil vāḻu maṭavārkkup
puttipala colli nīlaṉumē
poykaiyil vāvi taṉaikkaṭantu
poṉṉāṉa nīla rācaṉavar
nātaṉē tuṇaiyeṉavē nāyakiyum tamaiyaṉumāy
kāvalaṉ nīlarācaṉ kayattāṟu taṉaikkaṭantu
aṭuttukal lāṟuviṭṭu aticayamāy nīlaṉavar
veppāṟu neyppāṟu vaṭanāṭu ellaiviṭṭu
tirucciṟāp paḷḷiviṭṭut tirunelvēli yūrumviṭṭu
āṇaḻakaṉ nīlarācaṉ āḻvārtirunelvēli yūrumviṭṭu
aṉṉampōlē vaḻinaṭantu poṉmalai kāvumviṭṭu
tiṭamāka vaḻinaṭantu kuṭamāṭu malaiyilvantār

Nīlaṉ reaches kuṭamāṭu mount

Nīlaṉ gave advice to women around the
Lotus tank and left the place with Nīli.
In company with his sister, Nīlaṉ
Crossed Kayattāṟu, Kallāṟu, Veppāṟu, Neyyāṟu
And came to Tiruccirāppaḷḷi; then went to
Tirunelvēli, followed by his visit to Āḻvār Tirunelvēli

Walking like swan they came to Ponmalai
And finally reached kuṭamāṭu mount.

குடமாடுமலை கடத்தல்

குடமாடு மலைமீதில் கூண்டஅய்யன் கோவில்கண்டார்
குப்பமிட்ட சோலைகளும் கூண்டவன வாசங்களும்
வந்துகண்டார் நீலராசன் சந்தோச மாய்மகிழ[1]
ஆனைகளும் குதிரைகளும் அங்கிருக்கும் நாணயமும்
கண்டுமகிழ்ந் தேநடந்து காவலவன் நீலராசன்[2]
சாய்ந்தமலை தனைக்கடந்து சரிந்தமலை தனிலேவந்தார்
சரிந்த மலைதனைக் கடந்து தங்கையரும் தமயனுமாய்
நடுதீர்த்தான் பாறைவிட்டு நட்டாற்றின் கரையும்விட்டு
நட்டாற்றின் கரைகடந்து நம்பிகுறுங் குடியில்வர
சேட்டமுள்ள நீலராசன் சூட்டுமலைப் புரத்தைவிட்டு
கண்ணாடிச் சோலைவிட்டுக் காவலவ னீலராசன்
புதுமையாய் வழிநடத்தும் உடையாருட கோவில்விட்டு
உருண்டமலை பிரண்டமலை ஓம்மதிடி யூரும்விட்டு
வெள்ளைத்தலைவர் கோவில்விட்டு வெங்கலமறுவாள் குளமும்விட்டு
சிங்காரமார்பன் நீலராசன் தேன்மொழியாள் நீலியுமாய்
சந்தோஷமாய் வழிநடந்து தென்பழகை நகர்வந்தாரே

குடமாடு மலையை அடைந்த நீலனும் நீலியும் அங்கு சிறப்புற விளங்கிய கூண்டஐயன் கோவிலைக் கண்டு வணங்கினார்கள் அந்த இறைவன் கோவிலைச் சுற்றிலும் சிறுசிறு குடிசைகள் நிறைந்த குப்பங்களும், சோலைகளும் நிறைந்திருப்பதைக் கண்டார்கள் மக்கள் வனவாசிகளைப் போல வாசம் செய்வதையும், யானை, குதிரை போன்றவை அங்கே உலவி வருவதையும், மக்களின் நல்ல நடத்தைகளையும் கண்டு மகிழ்ந்தபடியே மலைச்சாரலை எல்லாம் கடந்து வந்தார்கள் இடையிலே இருந்த நடுத்திர்த்தாம்பாறை, நாட்டாற்றின் கரை, குறுங்குடி, சூட்டுமலை, கண்ணாடிச்சோலை போன்ற பல இடங்களின் காட்சிகளையெல்லாம் கண்டபடியே நடந்து வந்தார்கள் நட்டாறு, நட்டாற்று வாவி, நம்பிமலைநாடு, சூட்டுமலையின் அடிவாரம் போன்றவற்றையெல்லாம் கடந்து இறுதியாகத் தென்பழகை நகரினை அடைந்தார்கள்

நாணயம் - உண்மை, கட்டுப்பாடு; உயர்வு; வாக்குப் பிசகாமை

க சொல · 1 மகிள 2 னீலாாசன

Kuṭamāṭumalai kaṭattal

kuṭamāṭu malaimītil kūṇṭaayyaṉ kōvilkaṇṭār
kuppamiṭṭa cōlaikaḷum kūṇṭavaṉa vācaṅkaḷum
vantukaṇṭār nīlarācaṉ cantōca māymakiḻa
āṉaikaḷum kutiraikaḷum aṅkiruḳkum nāṇayamum
kaṇṭumakiḻn tēnaṭantu kāvalavaṉ nīlarācaṉ
cāyntamalai taṉaikkaṭantu carintamalai taṉilēvantār
carinta malaitaṉaik kaṭantu taṅkaiyarum tamayaṉumāy
naṭutīrttāṉ pāṟaiviṭṭu naṭṭāṟṟaṉ karaiyumviṭṭu
naṭṭāṟṟiṉ karaikaṭantu nampikuṟuṅ kuṭiyilvara
cēṭṭamuḷḷa nīlarācaṉ cūṭṭumalaip purattaiviṭṭu
kaṇṇātic cōlaiviṭṭuk kāvalava ṉīlarācaṉ
putumaiyāy vaḻinaṭattum uṭaiyāruṭa kōvilviṭṭu
uruṇṭamalai piraṇṭamalai ōmmatiṭi yūrumviṭṭu
veḷḷaittalaivar kōvilviṭṭu veṅkalamaṟuvāḷ kuḷamumviṭṭu
ciṅkāramārpaṉ nīlarācaṉ tēṉmoḻiyāḷ nīliyumāy
cantōṣamāy vaḻinaṭantu teṉpaḷakai nakarvantārē

Crossing Kuṭamāṭu mount

They worshipped at Kūṇṭaayyaṉ Temple at Kuṭamāṭu
And the place surrounded by forests, hamlets
And slums. He saw their primitive life
Amidst elephants, horses and ancient currency
And was happy to come from leaning mount
To displaced mount and crossing fallen mount
He came to Naṭutīrttāṉ pāṟai,
Naṭṭāṟu bank and crossing this bank
He reached Nampikuṟuṅkuṭi
And then crossed Cūṭṭumalai, and beautiful
Kaṇṇaṭiccōlai. He crossed the following
Places, Uṭayār Kovil, Uruṇṭamalai,
Piraṇṭamalai, Ōtmmaṭiṭiyūr, Veḷḷaittēvar kovil
Veṅkalamaruvāḷkuḷam, And finally reached
Teṉpaḷavai, with his sister Nīli,

பழகையின் பழமை நினைத்தல்

தென்பழகை நகர்தன்னிலே வந்தவர்
சிந்தைமகிழ்ந் தேது சொல்வார்
நாடாக்கி வைத்த பழகை நகரைக்
கண்டவ ரேது சொல்வார்
முன்னா ளுடையவன் தந்த
வரத்தினால் அழித்த பழவைநகர்
வந்தெங்கள் நீலனும் நீலி யிசக்கியும்
மனமகிழ்ந் தேது சொல்வார்
முன்பி லிருந்து காப்பாரை ஆண்ட
வளங்களைச் சொல்லுவாராம்

பழகை நகர் மிகச்சிறப்பான நகரமாக விளங்குவதைக் கண்டார்கள். அதே நகர் முன்பு தங்களால் அழிக்கப்பட்டதை நினைத்துப் பார்க்கிறார்கள் கரையாளர் என்னும் அந்நகர்வாழ் மக்களின் சிறப்பை நினைக்கிறார்கள் ஆனால் தாங்கள் தங்கியிருந்த வேப்பமரத்தினை வெட்டிய காரணத்தினால் தங்கள் அனைவரின் வாழ்க்கை அழிந்ததை நினைத்துப் பார்க்கிறார்கள்

Paḻakaiyiṉ paḻamai niṉaittal

teṉpaḻakai nakartaṉṉilē vantavar
cintaimakiḻn tētu colvār
nāṭākki vaitta paḻakai nakaraik
kaṇṭa varētu colvār
muṉṉā ḷuṭaiyavaṉ tanta
varattiṉāl aḻitta paḻavainakar
vanteṅkaḷ nīlaṉum nīli yicakkiyum
maṉamakiḻn tētucolvār
muṉpi liruntu kāppārai āṇṭa
vaḷaṅkaḷaic colluvārām

Nīlaṉ thinks about ancient Paḻavai

Reaching Teṉpaḻavai, they look at its prosperity.
What can they say about Paḻavai when
They think of how they destroyed it previously.

What can they say except how the place
Was proseperous under the rule of Kings.
Now they think of destruction made by them.

பழகையின் வேம்பு

வீணிலே வேம்பையும் வெட்டி அழித்த'
வளங்களைத் தானுரைப்பார்
விறுதாவில் நீங்க ளிறக்கவும் சொன்ன
யெழுதீ யிட்டபடியே
அண்ணா ரிருந்த வேம்பையும் வெட்டி
அனைபேரும் இறந்தீரே
மங்கை யிளங்கொடி பெண்கொடி யாளங்கள்
வைத்தோர் நீலிசொல்வாள்
நெட்டூரமாக வழக்கை யுரைத்தல்லோ
வீணி லிறந்தீர்களே.

தென்பழகை வந்தடைந்த அவர்கள் இருவரும் சிவபெருமான் தந்த வரத்தினால் அன்று இந்தப் பழகை நகரை அழித்தோம். நான் இருந்த வேப்ப மரத்தை நீங்கள் வெட்டியதால் பலவகையான வளப்பங்களையும் அழித்தோம். எங்களுடைய அழிசெயலால் இங்கே குடியிருந்த அனைவரும் இறந்து அழிந்தீர்கள் என்றெல்லாம் கூறி இருவரும் வருந்தினார்கள்.

விறுதா - விருதா - பயனின்மை, வீண் நெட்டூரம் - நிட்டூரம் - இடையூறு; கொடுமை.

சு.சொல் : 1 அளித்த

Paḻakaiyiṉ vēmpu

vīṇilē vēmpaiyum veṭṭi aḻitta
vaḷaṅkaḷait tāṉuraippār
viṟutāvil nīṅka ḷiṟakkavum coṉṉa
yeḻutī yiṭṭapaṭiyē
aṇṇā rirunta vēmpaiyum veṭṭi
aṉaipērum iṟantīrē
maṅkai iḷaṅkoṭi peṇkoṭi yāḷaṅkaḷ
vaittōr nīlicolvāḷ
neṭṭūramāka vaḻakkai yuraittallō
vīṇi liṟantīrkaḷē

The neem tree of Pa<u>l</u>avai

They mentioned the meaningless
Felling down of the neem tree,
And the destruction of many other
Fertile growth. Purposeless felling of
The neem tree was the cause of the death of many.
All young women of that place
Suffered untold hardships
And Nīla<u>n</u> and Nīli felt sad about it.

மீண்டும் பழகை சிறப்படைதல்

கரையாள ரிறந்த இடத்தையும் பார்த்தம்மன்
கண்குளிரக் கூர்ந்து சொல்வாள்
சொல்லுவார் நீலனும் நீலி யிசக்கியும்
தோகைமயி லதுபோல் முன்னாள்
அழித்த யிலங்கா புரியைப் பார்த்து மனமகிழ்ந்தார்
பார்த்து மகிழ்ந்து தமயனோடே நீலியம்மையும் ஏதுசொல்வாள்
பழகை நகரை அழித்தோம் - தீவைத்தோம்
ஆதி சிவனருளால் மூபேரும் வந்து
பழகை நகரில் முழுதும் குரவையிட்டார்

பழகை நகரை இலங்காபுரியைப்போல் அழித்துத் தீ வைத்தோம்; அதன் பயனாய் வேம்பை வெட்டிய கரையாளர் இறந்துபட்டனர் இன்று சிவனருள் பெற்று மீண்டும் இதே நகரத்தை அடைந்திருக்கிறோம் என்று எண்ணி மகிழ்ச்சியோடு குரவையிட்டு அவர்கள் இறந்த இடத்தையெல்லாம் கண்டு மகிழ்ந்தனர்

Mīṇṭum pa<u>l</u>akai ci<u>r</u>appaṭaital

karaiyāḷa ri<u>r</u>anta iṭattaiyum pārttamma<u>n</u>
kaṇkuḷirak kūrntu colvāḷ
colluvār nīla<u>n</u>um nīli icakkiyum
tōkaimayi latupōl mu<u>n</u><u>n</u>āḷ
a<u>l</u>itta yilaṅkā puriyaip pārttu ma<u>n</u>amaki<u>l</u>ntār
pārttu maki<u>l</u>ntu tamaya<u>n</u>ōṭē nīliyammaiyum ētucolvāḷ
pa<u>l</u>akai nakarai a<u>l</u>ittōm - tīvaittōm

āti civaṉaruḷāl mūpērum vantu
paḻakainakaril muḻutum kuravaiyiṭṭār

Paḻavai gets back its old glory

Witnessing the places where *karaiyāḷars* died,
They said that they had destroyed Paḻavai
They saw the old places with nostalgia;
Once they were happy at the destruction of Paḻavai
Like that of Ilaṅkai
Nīlaṉ and Nīli said that they were
Back to old Paḻavai with the grace of
Ancient Civaṉ and started dancing the *kuravai*

பழகையில் நீலன்

அந்த வனத்திலே நின்ற தெய்வார்கள் அழகுள்ள நீலனைத்தான்
அதிசயமாகக் கண்டுவணங்கி அவர்களுக் கேதுசொல்வார்
கயிலாசத்தி லீசன் தன்னைக் கண்டே
வரம் வாங்கிக் கொண்டிங்கு வந்தோம்
வந்தோம் மலைவழியே[1] திருவனந்தரம் தன்னிலே
சொல்லவென்னா நீலனைக்கண்டு தொழுத தெய்வார்கள்
நில்லெனவே நிறுத்தி நிறுத்தியே
தென்பழகை நகர்தன்னைக் கடந்தாரே.

அந்தக் காட்டிலே வாழ்ந்துவந்த தேவதைகள் அந்நகரத்திற்கு மீண்டும் வந்த நீலனைக் கண்டு வணங்கினர். திருக்கயிலையில் சிவபெருமானிடம் வரம் பெற்றுவந்த செய்தியை அந்தத் தேவதைகளிடம் மிகப் பெருமையோடு கூறிவிட்டு நீலனும், நீலியும் தென்பழகை நகரைவிட்டுப் புறப்பட்டார்கள்

சு.சொல் : 1. வளியே

Paḻakaiyil Nīlaṉ

anta vaṉattilē niṉṟa teyvārkaḷ
aḻakuḷḷa nīlaṉaittāṉ
aticayamākak kaṇṭuvaṇaṅki
avarkaḷuk kētucolvār

kayilācatti līcan̲ tannaik kaṇṭē
varam vāṅkik koṇṭiṅku vantōm
vantōm malaivaḻiyē tiruvan̲antaram tan̲n̲ilē
collaven̲n̲ā nīlan̲aikkaṇṭu toḻuta teyvārkaḷ
nillen̲avē nir̲utti nir̲uttiyē
ten̲paḻakai nakartan̲n̲aik kaṭantārē

Nīlan̲ in Ten̲paḻavai

Those who were in the forest
Worshipped Nīlan̲, To whom, Nīlan̲ said
"Obtained boons from the Kailash
We reached here, Through Hills,
Tiruvan̲antaram! celestials paid their
Respect to Nīlan̲ and Nīli,
Who crossed over Ten̲paḻakai.

மலைவளம் கண்டு செல்லுதல்

நல்லதென்று நீலனுடன் நாயகியாள் நீலியுமாய்
சொல்லரிய வனங்கடந்து சோலைவழி போகவென்னா
வரிசைபெறும் நீலராசன் வாறதொரு புதுமையென்ன
தார்சிலம்பு சதங்கைகொஞ்ச சந்தனங்கள் கமகமென
சல்லடங்கள் அரக்கசைகள் தங்கத்திரு வரையிலங்க
வல்லபுகழ் நீலராசன் மலைவளப்பம் காணவென்று
தென்பழவை யூரும்விட்டுத் தேன்சொரியும் சோலைவிட்டு
பாம்பணையில் பள்ளிகொண்ட பச்சைமா லருளாலே
வைகூறாணி மலையும்விட்டு மருந்துவாழ் மலையும்விட்டு
அக்கறுகு கொன்றைதும்பை அம்புலியை அணிந்திருக்கும்
தெக்ஷணா பூமியிலே சிறந்திருக்கும் மலையழகும்
அக்ஷமற நீலராசன் அதிசயத்தைக் காண்கிறாராம்
மன்றுலகில் பருவதமும் மலையில்கரி பரிகள்வாழும்
இன்னுமங்குத் தவமுனிவர் இருக்கக்கண்டார் நீலராசன்
குன்றுகளும் பருவதமும் குமடுகளு மதுவாயும்
வண்டுலாவும் பூங்குழலாள் மாயிசக்கி நீலியுடன்
கண்டுநல்ல நீலராசன் களிகூர்ந்து இருக்கையிலே

சிலம்பும் சதங்கையும் ஒலிக்க, சல்லடமும் அரைக்கச்சையும் விளங்க, சந்தனம் மணங்கமழப் புறப்பட்டார்கள். பாம்பணையில் பள்ளிகொண்ட திருமாலின் திருவருளால் தென்பழகையைவிட்டுப் புறப்பட்டுத் தேன்சொரியும் சோலைகளின் வழியாக தவசியரும், யானை, குதிரைகளும் நிறைந்திருந்த வைசூறாணி மலை, மருந்துவாழ் மலை முதலான மலைகளையும், தென்னாட்டுக் குன்றுகளையும் கண்டு களித்தவாறு சென்றார்கள்.

சு.சொல் : 1 யூருமிட்டு

Malaivaḷam kaṇṭu cellutal

nallateṉṟu nīlaṉuṭaṉ nāyakiyāḷ nīliyumāy
collariya vaṉaṅkaṭantu cōlaivaḻi pōkaveṉṉā
varicaiperum nīlarācaṉ vāratoru putumaiyeṉṉa
tārcilampu cataṅkaikoñca cantaṉaṅkaḷ kamakameṉa
callaṭaṅkaḷ arakkacaikaḷ taṅkattiru varaiyilaṅka
vallapukaḻ nīlarācaṉ malaivaḷappam kāṇaveṉṟu
teṉpaḻavai yūrumviṭṭut tēṉcoriyum cōlaiviṭṭu
pāmpaṇaiyil paḷḷikoṇṭa paccaimā laruḷālē
vaicūrāṇi malaiyumviṭṭu maruntuvāḻ malaiyumviṭṭu
akkaṟuku koṉṟaitumpai ampuliyai aṇintirukkum
teṣaṇā pūmiyilē ciṟantirukkum malaiyaḻakum
aṣamaṟa nīlarācaṉ aticayattaik kāṇkiṟārām
maṉṟulakil paruvatamum malaiyilkari parikaḷvāḻum
iṉṉumaṅkut tavamuṉivar irukkakkaṇṭār nīlarācaṉ
kuṉṟukaḷum paruvatamum kumaṭukaḷu maṭuvāyum
vaṇṭulāvum pūṅkuḻalāḷ māyicakki nīliyuṭaṉ
kaṇṭunalla nīlarācaṉ kaḷikūrntu irukkaiyilē

Enjoying the sight of Fertile mountains

It's good that Nīlaṉ and Nīli crossed the forest
And the groves and gardens. Dressed in
Shorts and waist sash, bells jingling, and
Smeared with sandalwood, departed
From Paḷavai and leaving honey laden groves,
With the grace of sleeping Thirumāl at *Pāmpaṇai*,
Crossed medicinal mount, Tashṇāpūmi,

Full of *uruttiramālai,* Indian laburnum, Leucas.
He enjoyed the beauty of these places.
He saw the ascetics doing their penance,
Mountains, elephants and horses.
He witnessed the mountains, hills, hillocks,
He enjoyed all these with the tipsy mouthed
Bees singing in the hair of Nīli mesmerizing her
And she was happy to the utmost

சுனையாடும் மகளிர்

அகத்தியமா முனியுடனே அறுபத்து மூவர்களும்
செகமகிழச்[1] சிறந்திருக்கும் தெக்ஷணாபுவி மலைமேல்
கருங்கண் மலர்குழலாள் களித்தாடும் சுனையருகே
குரும்ப தனமுடைய கோத்திரத்துக் கன்னியர்கள்
அருங்கயத்திலே சுனைகள் ஆடுந்தெய்வத் தலமும்கண்டார்

அகத்திய முனிவரும், அறுபத்து மூன்று நாயன்மார்களாகிய அடியவர்களும் சிறப்புற்று விளங்கிய தென்னாட்டு மலையை அடைந்தார்கள். அங்கே கருமையான கண்களையும், மலர்சூடிய கூந்தலையும் உடைய கன்னியர்கள் கூடி அழகிய சுனைகளிலே நீராடி மகிழ்கின்ற காட்சி நிறைந்த தெய்வீகத் தலத்தினையும் கண்டார்கள்.

சு.சொல் · 1 செகமகிள

Cuṉaiyāṭum makaḷir

akattiyamā muṉiyuṭaṉē aṟupattu mūvarkaḷum
cekamakiḻac ciṟantirukkum teṣaṇāpuvi malaimēl
karuṅkaṇ malarkuḻalāḷ kaḷittāṭum cuṉaiyarukē
kurumpa taṉamuṭaiya kōttirattuk kaṉṉiyarkaḷ
aruṅkayattilē cuṉaikaḷ āṭunteyva talamumkaṇṭār

Women bathing in the fountain

In the mountain at Takshaṇāpūmi
The sage Akastiyar and Sixty-three disciples
Were most happy. In that place
Virgins with black eyes and flower laden hair,

Assembled near the fountain for bath.
Nīlaṉ saw this heavenly place.

பறவைக் கூட்டம்

இன்னுஞ்சொல்லத் தொலையாது[1] இயல்நீலன் வரும்மலையில்
அன்னங்கள் ஓடமிட அருவாயில் குயில்கூவ
நீலன்தன்னைக்[2] கண்டவுடன் நின்மலையில் மிருகமெல்லாம்
கோலமுடன் மயிலாடக் குயில்கூடிக் குரவையிட
பலம்பெரிய[3] அனுமானும் பெருமாளுக் காகவல்லோ
நிலங்கிரியை விட்டெறிந்த நீதியுள்ள மலைநாடு
மருந்துவாழ் மலைதனிலே வடிவழகன் நீலராசன்
இருந்து தகையேறி இயல்பெரிய நீலியுடன்
வனங்கடந்து நீலராசன் வருமலையில் புதுமைகண்டார்

நீலனும், நீலியும் மலையைச் சார்ந்த அந்தத் தெய்வீகத் தலத்திற்கு வந்தவுடன் அவர்களைக் கண்ட அன்னங்களும், மயில்களும், குயில்களும், மிருகக் கூட்டங்களும் அழகாக நடைபயின்றும், ஆடியும், பாடியும் அவர்களை வரவேற்றன அனுமான் இராமபிரானுக்காக மலையையே தூக்கிப் பறந்தது போலக் காணப்பட்ட இக்காட்சிகளை நீலனும் நீலியுங் கண்டு களித்தார்கள்.

ஓடம் - மிதவை. குரவை - ஒலி; பெருஞ்சத்தம். தகை - முகடு

சு.சொல் : துலயாது 2. நீலந்தன்னை 3 பெலம்பெரிய

Paṟavaik kūṭṭam

iṉṉuñcollat tolaiyātu iyalnīlaṉ varummalaiyil
aṉṉaṅkaḷ ōṭamiṭa aruvāyil kuyilkūvu
nīlaṉtaṉṉaik kaṇṭavuṭaṉ niṉmalaiyil mirukamellām
kōlamuṭaṉ mayilāṭak kuyilkūṭik kuravaiyiṭa
palamperiya aṉumāṉum perumāḷuk kākavallō
nīlaṅkiriyai viṭṭeṟinta nītiyuḷḷa malaināṭu
maruntuvāl malaitaṉilē vaṭivaḻakaṉ nīlarācaṉ
iruntu takaiyēṟi iyalperiya nīliyuṭaṉ
vaṉaṅkaṭantu nīlarācaṉ varumalaiyil putumaikaṇṭār

Flock of birds

Impossible to narrate! On his coming
Mountain swans ran like boats.

On seeing Nīlaṉ sweet mouthed Cuckoo sang
And all forest animals started *kuravai* dance
Along with the proud peacock.
Even the strong Aṉumāṉ thought
That only for perumāḷ Nīlaṉ left his land.
To the medicine mount came Nīlaṉ
With Nīli. There's something strange
In the coming of Nīlaṉ and Nīli

நீலனுக்குச் சிறப்பு

இனஞ்சிறந்த யீசனுட யிலங்கியதே னுடைந்தோட
செந்தே னுடைந்தோட தெய்வார்கள் தானெடுத்து
சந்தோஷமாய் நீலனுக்குத் தான்சிறப்பு வைக்குறாராம்
தின்றுபசி யாறுமய்யா தெய்வகுல நீலராசா
யென்றுசொல்லித் தெய்வார்கள் இரண்டாயிரம் பேர்தொழுதார்

காட்டினைக் கடந்து மலையில் புதுமையினைக் கண்டார் ஈசனின் திருவருளால் அம்மலைகளில் செழுமையான தேன் கூடுகள் உடைந்து தேனாறு பெருகியது தெய்வக் கன்னியர் கூடி அத்தேனைத் திரட்டி நீலன், நீலி ஆகியோர் முன் மகிழ்ச்சியோடு ்வைத்து, இத்தேனையுண்டு பசியாறுங்கள் என்று கூறி அன்போடு தொழுது நின்றர்கள்

Nīlaṉukkuc ciṟappu

iṉañciṟanta yīcaṉuṭa yilaṅkiyatē ṉuṭaintōṭa
centē ṉuṭaintōṭa teyvārkaḷ tāṉeṭuttu
cantōsamāy nīlaṉukkut tāṉciṟappu vaikkuṟārām
tiṉṟupaci yāṟumayyā teyvakula nīlarācā
yeṉṟucollit teyvārkaḷ iraṇṭāyiram pērtoḻutār

Special worship for Nīlaṉ

Honey, closely associated with god
Began to flow. Red honey ran profusely,
Heavenly girls, collecting it place it before
Nīlaṉ and Nīli; Two Thousand People
Worshipped them and begged them
To feed their hunger with honey.

மாயன் வாழனந்தம் நோக்கிப்புறப்படுதல்

தொழுதுநின்ற தெய்வார்க்குச் சொல்லுவாராம் நீலராசன்
வழுகாத புகழுடைய மாயன்வா ழனந்தமதில்
போறேன்நான்[1] மலைவழியே புண்ணியனார் தனைத்தேடி
வீறான நீலியுடன் வீறான நீலனுமாய்
பொருந்திய நீலராசன் புனங்களெல்லாந் தான்கடந்து
மருந்துவாழ் மலையும்விட்டு மகத்துவமாய் வழிநடக்க

உபசாரம் செய்து தொழுது நின்ற கன்னியர்களைப் பார்த்து, பெண்களே! குற்றமற்ற புகழுக்கு உரியவனும், பெரும்பேற்றினை அளிப்பவனும், மாயவன் என்னும் பெயருக்குரியவனுமாகிய எம்பெருமான் எழுந்தருளி இருக்கின்ற திருவனந்தபுரத்தை நோக்கிப் புறப்படுகிறோம் என்று கூறி நீலியுடன் புறப்பட்ட நீலன் மருந்துவாழ் மலையையும், சார்ந்த காடுகளையும் நோக்கி நடக்கத் தொடங்கினான்.

வீறு - பெருமை; வேகம்.

சு.சொல் : 1. போறேனாந்

Māyan̲ vāl̲an̲antam nōkkip pur̲appaṭutal

tol̲utunin̲r̲a teyvārkkuc colluvārām nīlarācan̲
val̲ukāta pukal̲uṭaiya māyan̲vā l̲an̲antamatil
pōr̲ēn̲nān̲ malaival̲iyē puṇṇiyan̲ār tan̲aittēṭi
vīr̲ān̲a nīliyuṭan̲ vīr̲ān̲a nīlan̲umāy
poruntiya nīlarācan̲ pun̲aṅkaḷellān tān̲kaṭantu
maruntuvāl̲ malaiyumviṭṭu makattuvamāy val̲inaṭakka

Going Towards Māyan̲ and Vāl̲an̲antam

To all worshipping heavenly maids Nīlan̲ said,
"Māyan̲ of Blameless fame lives in Vāl̲an̲antam,
I start for that place" Going in search of
The holy person, Nīlan̲ and Nīli, moving fast,
Crossed with pride all forests and medicine mount.

காத்தவடி மலையடைதல்

அடுத்தமலை நகூறாமலை அதனிடையில் இடமலையும்
தொடுத்தமலை அதுவழியே துய்யபுகழ் நீலராசன்

பன்றிகளும் கடமானும் பலமிருகம் சாய்ந்தோட
குன்றுமலைப் பருவதத்தில் குமடுகடந்தே நடந்து
ஆடிடவே மிருகமெல்லாம் உயாவனமும் தான்கடந்து
கட்டாந்த சோலைவிட்டுக் காத்தவடி மலையில்வந்தார்

நகூறாமலை, இடமலை போன்ற மலைத்தொடர்களையும், குன்றுகளையும், மலைக்குமடுகளையும் கடந்து, உயாவனங்கள், சோலைகள் ஆகியவற்றின் வழியாக வரும்போது பன்றிகளும் மான்களுமாகிய பலவகை மிருகங்கள் உலாவித்திரிவதைக் கண்டார்கள் இறுதியாகக் காத்தவடி மலையை அடைந்தார்கள்

Kāttavaṭi malaiyaṭaital

aṭuttamalai nakūṟāmalai aṭaniṭaiyil iṭamalaiyum
toṭuttamalai atuvaḻiyē tuyyapukaḻ nīlarācaṉ
paṉṟikaḷum kaṭamāṉum palamirukam cāyntōṭa
kuṉṟumalaip paruvatattil kumaṭukaṭantē naṭantu
āṭiṭavē mirukamellām uyāvaṉamum tāṉkaṭantu
kaṭṭānta cōlaiviṭṭuk kāttavaṭi malaiyilvantār

Reaching Kātavaṭi Mount

Crossing Nakūṟā mount and Iṭamalai
And other such mountains, he happened
To see forest creatures such as pigs,
Deer. Many such beasts went roaming
He crossed mountain cliffs, gardens and groves,
And atlast reached kāttavaṭi mount.

மலைப்பெருமாள் கோயிலடைதல்

சூதாடித் துளுக்கானம் சூரைகொண்டு மாண்டதுவும்
வாதடிக் காத்தாடி படர்ந்தமரக் காவும்விட்டு[1]
பலகுமடும்[2] தான்கடந்து பண்டிருந்த சேரனிட்ட
பழையகோட்டை[3] · வழியாகக்
கண்டுமகிழ்ந்தே நடந்து கருத்துடைய நீலராசன்
அடிவாரத்து மலையும்விட்டு ஆனமுனி பொய்கைவிட்டு[4]
மடியாமல் நீலராசன் மலைப்பெருமாள் கோவில்வந்தாரே

சூதாடுதலும், கொள்ளையடித்தலும், வாதாடுதலும் ஆகிய பலவகைத் தீத்தொழில்களால் உயிரிறந்தோர் வாழ்ந்திருந்த பெருங்காடுகள், குன்றுகள், ஆகியவற்றைக் கடந்து, சேரமன்னன் உருவாக்கிய கோட்டைகளின் வழியாக் ஆனமுனிப் பொய்கையைத் தாண்டி, தங்கள் உயிருக்குத் தீங்கு ஏதும் ஏற்படாதவாறு மலைப்பெருமாள் கோயிலை வந்தடைந்தார்கள்.

துளு - தேயமைம்புத்தாறில் ஒன்று. தேயம் - நாடு

சு.சொல் : 1 காவுமிட்டு 2 பலகுமடும் 3 பளையகோட்டை 4 பொய்க்கவிட்டு

Malaipperumāḷ kōyilataital

cūtāṭit tuḷukkāṉam cūraikoṇṭu māṇṭatuvum
vātāṭik kāttāṭi paṭarntamarak kāvumviṭṭu
palakumaṭum tāṉkaṭantu paṇṭirunta cēraṉiṭṭa
paḻaiyakōṭṭai vaḻiyākak
kaṇṭumakiḻntē naṭantu karuttuṭaiya nīlarācaṉ
aṭivārattu malaiyumviṭṭu āṉamuṉi poykaiviṭṭu
maṭiyāmal nīlarācaṉ malaipperumāḷ kōvilvantārē

Reaching Rock Perumāḷ Temple

Land of plunder, gambling, dispute and quarrels
Tuḷu, he crossed. The forest, refuge for
All evil workers he crossed and reached
Paḻaiyakōṭṭai of Cēraṉ's Creation.
Enjoying the fine scenery enroute,
He came safely to the foot of perumāḷ Rock;
Crossing Ānaimuṉitank and other places.

கோயிலின் சூழல்

கண்டனனே[1] அருவாயில் மலைப்பெருமாள் கோவில்
கான்யாறும் சோலைவனம் ஏரிகளும் விட்டார்[2]
மண்டலமெல் லாம்புகழும் மலைப்பெருமாள் கோவில்

அருவாயில் என்னுமிடத்தில் இருந்த மலைப்பெருமாள் கோயிலானது காட்டாறுகளும், சோலைவனங்களும், ஏரிகளும் நிறைந்த அழகான சூழ்நிலையில் அமைந்திருந்தது. இதனை எல்லா நாட்டு மக்களும் கண்டுகளித்துப் பாராட்டி வந்தார்கள்.

சு.சொல் : 1 கண்டனநே 2 யேரிகளுமிட்டார்.

kōyilin̲ cūl̲al

kaṇṭanan̲ē aruvāyil malaipperumāl kōvil
kān̲yār̲um cōlaivan̲am ērikaḷum viṭṭār
manṭalamel lāmpukaḷum malaipperumāḷ kōvil

The Temple atmosphere

He saw at Aruvāyil where Perumāḷ, Resides in the Mountains
Forest streams, groves and lakes.
This temple was praised by one and all
For its beautiful locale and environs.

நீலனைக்கண்ட பறவைகள்

வன்னமரக் காவுகரவுகளில் பொன்வரி வண்டாட
கூந்தப்பனை சோலைகளில் குயில்க ளிசல்பாட
குஞ்சரங்கள் சீவ யினமுள்ள குயில்பாட
அந்தமுள்ள சோலையிலே மலைப்பெருமாள் கோவில்
அணிகள்இசல் பாடவே நீலன்வரும் நேரம்
கொந்துகொந்து தோறும் குயில்கூவி யிசல்பாட
குரவையிட மலைக்கன்னிமார் கூடிநின் றங்காட
சந்தோச மாகயெங்கள் நீலதம்பு ரானார்
தனபெருமாள் வாழ்மலையில்[1] மலைப்பெருமாள் கோவில்
சிந்தைகளெல் லாமகிழ்ந்து திருநடையில் வரவே

மரங்களடர்ந்த அக்காட்டில் வாழ்ந்த உயிரினங்கள் யாவும், மலைப்பெருமாள் கோயிலை வந்தடைந்த நீலன், நீலி ஆகியோரைக் கண்டன. மகிழ்ச்சிப்பெருக்கால் வண்டுகள் அங்குமிங்கும் பறந்து ரீங்காரம் செய்யத் தொடங்கின. இதே நிலையில், குயில்கள் கூவின; யானைகள் முதலான உயிரினங்களும் மகிழ்ச்சியோடு நடைபோட்டு வரவேற்றன. மலையில் வாழும் கன்னியர்கள் கூடிக் குரவையாடி வரவேற்றார்கள்.

சு.சொல் : 1 வாள்மலையில்

Nīlan̲aikkaṇṭa par̲avaikaḷ

van̲n̲amarak kāvukaravukaḷil pon̲vari vaṇṭāṭa
kūntappan̲ai cōlaikaḷil kuyilka ḷicalpāṭa
kuñcaraṅkaḷ cīva yin̲amuḷḷa kuyilpāṭa

antamul̲la cōlaiyilē malai perumāḷ kōvil
an̲ikaḷical pāṭavē nīlan̲varum nēram
kontukontu tōr̲um kuyilkūvi yicalpāṭa
kuravaiyiṭa malaikkan̲n̲imār kūṭinin̲ r̲aṅkāṭa
cantōca mākayeṅkaḷ nīlatampu rān̲ēr
tan̲aperumāḷ vāl̲malaiyil malaipperumāḷ kōvil
cintaikaḷel lāmakil̲ntu tirunaṭaiyil varavē

The birds saw Nīlan̲

In the beautiful forests full of trees
The insects began to buzz and dance
In groves full of Palmyra, cuckoos began to sing
Lively songs; in the grove adjacent,
Squirrels began to sing and every branch
After branch, cuckoos began singing
Forest women began to dance *kuravai*
In groups. With great joy Godly Nīlan̲
Reached-Perumāḷ Temple situated
In a mountain where the God of wealth resides

பெருமாளின் வினா

தெய்வகுல நீலனைக்கண் டேபெருமாள் சொல்வார்
வாடாத மனதீரா நீல ராசாவே
மலையிலொரு நாளுமிங்கே வந்ததுகண் டீரே
நாட்டுவழிப் போகா பலமலையில் வந்தசெய்தி
நல்லமலை யில்பெருமாள் சொல்லுமென உரைத்தார்

தம்மை நோக்கி வந்த நீலனைக்கண்ட பெருமாள், நீலராசனே! ஊர்களின் வழியே செல்லாமல், பல மலைகளையெல்லாந்தாண்டி, சிறிதும் சோர்வடையாமல் மனவலிமையோடு இங்கே வந்ததன் காரணம் என்ன என்று கேட்டார்.

Perumāḷin̲ vin̲ā

teyvakula nīlan̲aikkan̲ ṭēperumāl colvār
vāṭāta man̲atīrā nīla rācāvē
malaiyiloru nāḷumiṅkē vantatukan̲ ṭīrē

nāṭṭuvaḻip pōkā palamalaiyil vantaceyti
nallamalai yilperumāḷ collumeṉa uraittār

Perumāḷ's Query

On seeing Godly Nīlaṉ, Perumāḷ asked,
"Oh! you bold and tireless Nīlā,
You've never come to this mountain earlier,
Instead of going along flat-ground and cities
Why did you come to this difficult terrain?"

நீலன் விடை

கயிலாச மலையும் இடபதமும் சிவனிடத்தில்
கண்டுதெரி சித்துவர எண்டிசையும் புகழ
அயிலாரும் வேல்விழியாள் உமையும் சிவன்தனையும்[1]
அன்றுதொழு தேநடந்து தென்பழவை மட்டும்
கண்டு தெக்ஷணாபூமியில் மருந்துமலை யளவும்
காவிலுள்ள மலைவளப்பம் காணவந்தே னென்றார்

காரணம் வினவிய பெருமாளை நோக்கி, ஐயனே! நாங்கள் கயிலாய மலைக்குச் சென்று சிவபெருமானையும் உமையம்மையையும் வணங்கி விடைபெற்றோம். அங்கிருந்து புறப்பட்டுத் தென்பழகை மாநகரையும், தென்னாட்டுத் திருத்தலங்கள், மலைவளப்பங்கள் போன்றவற்றையெல்லாம் கண்டு வரும்வழியில் தங்கள் மலையையும், தங்களையும் காண வந்தோம் என்றான்

சு.சொல் : 1 சிவந்தனையும்

Nīlaṉ viṭai

kayilāca malaiyum iṭapatamum civaṉiṭattil
kaṇṭuteri cittuvara eṇṭicaiyum pukaḻa
ayilārum vēlviḻiyāḷ umaiyum civaṉtaṉaiyum
aṉṟutoḻu tēnaṭantu teṉpaḻavai maṭṭum
kaṇṭu teṣaṇāpūmiyil maruntumalai yaḷavum
kāviluḷḷa malaivaḷappam kāṇavantē ṉeṉṟār

Nīlaṉ's Reply

"Worshipping the feet of Civaṉ at Kailash,
And worshipping the famed fish eyed Umā,

We reached Teṉpaḻavai after crossing
Taksaṇāpūmi, medicine mount and other places
We came to see your fertile mount"

பெருமாளின் வாழ்த்து

நல்லதுகாண் நீலன்நம்மைத் தேடிவந்தா ரென்று
நமக்கேற்ற தம்பி உன்னைப் போலொருவ ருண்டோ
செல்லாத தேசமெல்லாம் சென்றுகுடி கொண்டு
திசைபுகழ வீற்றிருந்து செப்பினா ரப்போது
அன்றுவிடை வாங்கிவந்து நீலனும் நீலியும் 135
அழகுமலையில் பெருமாள் வாழும் காவும்விட்டார்

தம்மைத் தேடிவந்த நீலனைப் பார்த்து, தம்பி! உன்னைப் போலத் திறமை பெற்றவர்கள் வேறு யாரும் இருக்கமுடியாது யாரும் சென்றறியாத நாடுகளையெல்லாங் கண்டு, அங்கு வாழும் மக்கள் மனத்திலே என்றும் நீங்காத இடம் பெறுவாயாக என்று கூறி வாழ்த்தினார். பெருமாளிடம் விடைபெற்ற நீலனும் நீலியும் அங்கிருந்து புறப்பட்டார்கள்.

Perumāḷiṉ vāḻttu

nallatukāṇ nīlaṉnammait tēṭivantā reṉṟu
namakkēṟṟa tampiuṉṉaip pōloruva ruṇṭō
cellāta tēcamellām ceṉṟukuṭi koṇṭu
ticaipukaḻa vīṟṟiruntu ceppiṉā rappōtu
aṉṟuviṭai vāṅkivantu nīlaṉum nīliyum
aḻakumalaiyil perumāḷ vāḻum kāvumviṭṭār

Perumāḷ's Greetings

"It's good that Nīlaṉ came in search of me
Where can I get a fitting brother like you?
Visit all the untravelled places you desire
And perpetuate your name in all those
Who live there. Taking leave of
Perumāḷ, Nīlaṉ and Nīli, getting
His blessings left for other places.

தென்னவன்நாடு காணுதல்

குப்பமிட்ட கூட்டமாய்ச் சோலை வழியாக
குற்றமில்லா நீலராசன் மெத்தமன மகிழ்ந்து
வாழைவன முஞ்சுனையும் கான்யாறும் விட்டு
மாரிபொழி யும்மலையில் மேகம் சிறந்தோட
பாக்கு விரிய கமுகுப்பூ குலைசரிய
பய்யப் பரிவண்டு பறந்து மணங்களுண்ண
வன்னமுள்ள நீலியுடன் வடிவழக[1] நீலன்
மலையிலுள்ள புதுமைகண்டு மலைநாட்டி[2] லிறங்கி
தென்னவ னாளும்[3] குதிரைவிடுந் தலமும்விட்டு

அடர்ந்து நெருங்கிய சோலையின் வழியாக மகிழ்ச்சியோடு செல்லத் தொடங்கினார்கள். செல்லும்வழியில் வாழைத் தோப்புகள் நிறைந்திருந்தன. காட்டாறு குறுக்கிட்டது. கமுக மரங்கள் குலைதள்ளி இருந்தன இவற்றிடையே வண்டுகள் ஓலமிட்டு மலர்களில் தேனுண்டு மகிழ்ந்தன. மலையின் மீது மேகங்கள் நிறைந்து விளங்கின. இப்புதுமைகளையெல்லாங் கண்டு நீலனும் நீலியும் தென்னவன் குதிரை ஓட்டிப் பயிலும் நகரத்தைச் சென்று அடைந்தார்கள்.

சு.சொல் 1 வடிவளக 2 மலைனாட்டி 3 னாள்

Teṉṉavaṉṉāṭu kāṇutal

kuppamiṭṭa kūṭṭamāyc cōlai vaḻiyāka
kuṟṟamillā nīlarācaṉ mettamaṉa makiḻntu
vāḻaivaṉa muñcuṉaiyum kāṉyāṟum viṭṭu
māripoḻi yummalaiyil mēkam ciṟantōṭa
pākku viriya kamukupū kulaicariya
payyap parivaṇṭu paṟantu maṇaṅkaḷuṇṇa
vaṉṉamuḷḷa nīliyuṭaṉ vaṭivaḻaka nīlaṉ
malaiyiluḷḷa putumaikaṇṭu malaināṭṭi liṟaṅki
teṉṉava ṉāḷum kutiraiviṭun talamumviṭṭu

Seeing Southern King's Country

With the following Crowd, Nīlaṉ left via groves,
Faultless Nīlarācaṉ was very happy
He crossed banana plantations, water fountains,

Forest streams and the whole rain drenched mount
Was covered with clouds.
He crossed Areca trees heavy with nuts
And areca trees heavy with fruits,
And the insects were drinking honey
From the fruits. Nīlan̲ and Nīli
Witnessing all these reached the land
Of the southern king where
He used to practise riding.

சோழ நாட்டு வளங்காணல்

செம்பியனூர்ச் சிறுவரிரு பேருமாய் நடந்து
நன்னெறி நடக்கும்திரு சோழமன்ன[1] னாட்டில்
நல்லதொரு வாழைத்தோப்பு வழியாக வரவே
கூடியிருந்தே குரங்கு பல்காட்டி ஆட
குட்டிக்குரங் குப்படைகள் எட்டியெட்டிப் பார்க்க
ஆடல்பரி லேறுந்தெய்வ நீலதம் புரானார்
அங்கிருக்கும் பறவைகளும் இறகுவிரித் தாட
பூணியலிருந் தேசிலம்ப அணிகள்இசல் பாட
பிள்ளைக் கொப்பி லிருந்துகுயில் பேய்க்காச்சல் காய
வானிலகு[2] மாலையணி மாயனரு[3] ளாலே
மன்னனெங்கள் நீலராசன் வாரதொரு நேரம்
கருமந்தி கைத்தாளம்போட கனியைப்பறித் தெறிய
கண்டிருந்து குரங்குகனியைக் கையாலே பிடிக்க
அங்கிருந்த கருமந்திகள் கர்ணங்கள் போட்டாட
அங்கிருந்து கருமந்திகள் அதற்கிசயாய்ப் பாட
சோலைதொறும் குயில்கூவ குயில்இருந்து புலம்ப

சோழநாட்டில் பிறந்த நீலனும், நீலியும் சோழநாட்டின் வாழைத்தோப்பு வழியாக வந்தனர். நீலனும் நீலியும் வருவதைக் கண்ட குட்டிக் குரங்குகள் எட்டி எட்டிப் பார்த்தன கூடியிருந்த குரங்குகள் ஆடின. விரைவாக ஆடுவதிலே வல்லவனாகிய நீலதம்புரானைக் கண்டு அங்கிருந்த பறவைகள் தங்களது சிறகுகளை விரித்தாடின. குயில்கள் பாடித் திரிந்தன. திருமாலின் அருள்பெற்ற நீலராசன் வருகின்றபோது கருங்குரங்குகள் கைகளைத் தட்டித் தாளம் போட்டு, பழங்களைப் பறித்து எறிந்தன. அதனைப் பார்த்த குரங்குகள் பழங்களைக் கைகளால் பிடித்தன. கருமந்திகள் கர்ணங்கள் போட்டு ஆடிப் பாடின.

சு.சொல் : 1 சோளமன்ன 2 வானிகு 3. மாயநரு.

Cōḻanāṭṭu vaḷaṅkāṇal

cempiyaṉūrc.ciṟuvariru pērumāy naṭantu
naṉṉeṟi naṭakkumtiru cōḻamaṉṉa ṉāṭṭil
nallatoru vāḻaittōppu vaḻiyāka varavē
kūṭiyirunta kuraṅku palkāṭṭi āṭa
kuṭṭikkuraṅ kuppaṭaikaḷ eṭṭiyeṭṭip pārkka
āṭalpari lēṟunteyva nīlatam purāṉār
aṅkirukkum paṟavaikaḷum iṟakuvirit tāṭa
pūṇiyalirun tēcilampa aṇikaḷical pāṭa
piḷḷaik koppiliruntukuyil pēykkāccal kāya
vāṉilaku malaiyaṇi māyaṉaru ḷālē
maṉṉaṉeṅkaḷ nīlarācaṉ vāratoru nēram
karumanti kaittāḷampōṭa kaṉiyaippaṟit teṟiya
kaṇṭiruntu kuraṅkukaṉiyaik kaiyālē piṭikka
aṅkirunta karumantikaḷ karṇaṅkaḷ pōṭṭāṭa
aṅkiruntu karumantikaḷ ataṟkicayāyp pāṭa
cōlaitoṟum kuyilkūva kuyiliruntu pulampa

Seeing the fertility of Cōḻaṉ country

Born in Cōḻaṉ country, both walked across
The country full of virtuous deeds
And came along banana plantations
The crowd of monkeys grinned with their teeth,
The young monkeys put out their heads.
Seeing the excellent dancer, Godly Nīlaṉ,
All the birds danced spreading their wings
From their perch, squirrels began to sing
From tender branches cuckoos made deafening noise,
The heavenly garland wearing
Nīlarācaṉ's timely and rare appearance
Made the black monkeys keep time
With their hands and
With fruits in their hands some black monkeys

Began to dance somersaulting
Some other black monkey sang in tune
With the dance and from every grove
Cuckoos cooed followed by other cuckoos

தென்னாட்டின் சிறப்பு

செல்வம்குறை யாதபுகழ் நீதியுள்ள நாட்டில்
மானனைய வேல்விழியாள் வாழுந்தெய்வ நாடு[1]
மரபுநெறி அழியாத மன்னர்மலை நாடு
தேன்மொழியாள் கற்பழியா சிறைகாக்கும் நாடு
சேரமலை நாடு வடவைக்கூனர் நாடு
காயலிலே பெரிய காயாளர்வாழும் நாடு
கன்னல்செந் நெல்விளையும்[2] *கருகூனர் நாடு*[3]
தாய்தனினும் தயவரன் சற்றுமுள்ள நாடு
தர்மம்தழைத்[4] *தோங்கும்வெகு சங்கையுள்ள நாடு*

செல்வச் செழிப்பும், புகழும், நீதியும் நிறைந்ததும் வேல்விழியாளாகிய நீலிஇசக்கி வாழுகின்றதுமாகிய தெய்வத் திருநாடு, மரபு வழுவா ன்னர் வாழும் மலைநாடாகும். கற்புடை மகளிரும், வடவைக் கூனரும், உப்பளங்களில் காயாளர்களும், செந்நெல் விளைவிக்கும் வேளாளர்களும், தாய்போலும் அன்பு செலுத்துபவர்களும் நிறைந்திருக்கும் நாடு. ஆகையால் இந்நாட்டில் வளமும், செல்வமும், தர்மமும் தழைத்தோங்கி இருந்தன.

சு.சொல் *: 1 னாடு 2 னல்விளயும் 3 னாடு 4 தற்மம்தளைத்*

Teṉṉāṭṭiṉ ciṟappu

celvamkuṟai yātapukaḻ nītiyuḷḷa nāṭṭil
māṉaṉaiya vēlviḻiyāḷ vāḻunteyva nāṭu
marapuneṟi aḻiyāta maṉṉarmalai nāṭu
tēṉmoḻiyāḷ kaṟpaḷiyā ciṟaikākkum nāṭu
cēramalai nāṭu vaṭavaikkūṉar nāṭu
kāyalilē periya kāyāḷarvāḻum nāṭu
kaṉṉalcen nelviḷaiyum karukūṉar nāṭu
tāytaṉiṉum tayavaran caṟṟumuḷḷa nāṭu
tarmamtaḻait tōṅkumveku caṅkaiyuḷḷa nāṭu

The special features of the south

Land of undiminished riches, land of justice,
Land of deer like, arrow-eyed Nīli,
Tradition bound mountainous land,
The land of safety and protection for
Honey tongued virgins, The land of
Cērās and the land of Northern kūṇar
The land where kāyāḷars labour in salt pans
The land of Vēḷāḷars producing paddy and sugarcane
The land of people showing mother's love,
The land where justice and virtue flourish

நாஞ்சில் நாடு

பொன்னிலங்கு மலைமார்பன் நீலதம் புரானார்
புதுமைகண்டு நீலசுவாமி நாஞ்சில் நாட்டில்
செந்நெல்விளைந் தேசுனையில் வயலதிலே சாட
சிலவயலில் கதிரறுத்துச் சூடுபோ லேற
பகடுதன்னைப் பூட்டிச்சூ டடித்துக்கதிர் தூற்றிப்
பலவிதமாய்க் கொத்தளப்பார் பாரில்கவி யாளர்
சகடுகொண் டேயளந்து கோட்டைகெடு நாடு
தன்னையுங்கண் டேமகிழ்ந்து சங்கையுள்ள நீலன்
வடவரையும் கண்டுபெரு நாஞ்சில்நாட்டில் வரவே

பொன்னாபரணங்கள் விளங்கும் மலை போன்ற மார்பினை உடைய நீலசுவாமியும் நீலியும் நாஞ்சில் நாட்டை அடைகின்றனர் சில வயல்களிலே செந்நெல் விளைந்து நிற்பதும், சில வயல்களில் நெற்கதிரை அறுத்துக் குவித்து யானை, பசு, எருமை இவற்றையெல்லாம் வைத்துப் பூட்டி சூடடித்து, கதிரினைத் தூற்றுவதுமாகிய காட்சிகளைக் காணுகின்றனர். கவியாளர்களாகிய பண்ணையாளர்கள், சகடு என்னும் மரக்காலால் நெல்லையளந்து பணியாளர்களுக்குக் கொடுத்து, மிகுதியைக் கோட்டையாகக் குவித்து வைப்பதுமாகிய செல்வச் செழிப்பையுங் கண்டு மகிழ்கின்றனர்.

கன்னல் - கரும்பு. பகடு - யானை.

Nāñcil nāṭu

poṉṉilaṅku malaimārpaṉ nīlatam purāṉār
putumaikaṇṭu nīlacuvāmi nāñcil nāṭṭil

cennelviḷain tēcuṉaiyil vayalatilē cāṭa
cilavayalil katiraṟuttuc cūṭupō lēṟa
pakaṭutaṉṉaip pūṭṭiccū ṭaṭittukkatir tūṟṟip
palavitamāyk kottaḷappār pārilkavi yāḷar
cakaṭatukoṇ ṭēyaḷantu kōṭṭaikeṭu nāṭu
taṉṉaiyuṅkaṇ ṭēmakiḻntu caṅkaiyuḷḷa nāṭu
vaṭavaraiyum kaṇṭuperu nāñcilnāṭṭil varavē

Nāñjil Nāṭu

Godly Nīlaṉ with a mount like chest,
Covered with gold, reached Nāñjil land
In some fields paddy was ripe and uncut,
In some fields harvested paddy was being
Thrashed with the pressure of cow, buffalo,
And landlords and the cultivators gave
Paddy as wages measured in bushels,
And the rest was stocked in bundles.
Happy with this he learnt about Nāñjil country

வடமலை அடைதல்

மலைவழியே திருவனந்தர புரமதிலே போக
உலகக்கயம் அதிலேவந்து தீர்த்தமது ஆடி
உற்றபுகழ் நீலனையும் நீலியம்மை தனையும்
பலமலையும்[1] சோலைகளும் குவடுகளும் விட்டு[2]
பராபரன் நீலராசன் பாயும்புலி போலே
அடவுடனே[3] குவட்டில்வர அன்னம்விளை யாட
அருங்கயம் தோறும் செந்தாமரை யிலங்க
தடமதிர வழிதேடி நீலகுல தெய்வம்
தாக்குடைய நீலன் வடமலைவந் தாரே

நாஞ்சில் நாட்டிலிருந்து மலைவழியே திருவனந்தபுரம் செல்லப் புறப்பட்ட நீலனும் நீலியும், பெருங்குளம் ஒன்றிலே வந்து தீர்த்தம் ஆடினார்கள். பல மலைகளையும், சோலைகளையும், குவடுகளையும் கடந்து, புலி போலப் பாய்ந்து, விரைந்து, மலை உச்சியை அடைந்தார்கள். அங்கு குளங்களில், செந்தாமரை மலர்கள் பூத்துக் குலுங்கின;

அன்னங்கள்விளையாடித் திரிந்தன. அனைத்தையும் பார்த்துக் கொண்டே வடமலையினை வந்தடைந்தார்கள்

கயம் - குளம்.

சு சொல் : 1 பலமலயும் 2. குமடுகளுமிட்டு 3 அடவுடநே

Vaṭamalai aṭaital

malaivaḻiyē tiruvaṉantara puramatilē pōka
ulakakkayam atilēvantu tīrttamatu āṭi
uṟṟapukaḻ nīlaṉaiyum nīliyammai taṉaiyum
palamalaiyum cōlaikaḷum kuvaṭukaḷum viṭṭu
parāparaṉ nīlarācaṉ pāyumpuli pōlē
aṭavuṭaṉē kuvaṭṭilvara aṉṉamviḷai yāṭa
aruṅkayam tōṟum centāmarai yilaṅka
taṭamatira vaḻitēṭi nīlakula teyvam
tākkuṭaiya nīlaṉ vaṭamalaivan tārē

Reaching Northern Mount

On the mountainous way to Tiruvaṉantaram,
They bathed in a huge tank
Crossing a number of Mountains, groves.
Like attacking tiger, they reached
The top of northern mount where
There was red lotus in the tanks
And swans played freely.

தெய்வமாமலை

9. **விருத்தம்**

பலபல மலையும்[1] நாடும்[2] பரிவுடன் கடந்து நீலன்
சிலைதனை வளைத்த மாயன் திருவடி பாதம் போற்றி
நலமுடன் மலையி னோடே நல்லதோர் வளப்ப மெல்லாம்
சிலைமத னீல ராசன் தெய்வமா மலையில் வந்தாரே.

மலைகளையும், நாடுகளையும் கடந்து, திருமாலின் திருவடியினைப் போற்றித் துதித்தவாறே தெய்வமாமலைக்கு வந்தார்கள்.

சு.சொல் : 1 மலயும் 2 னாடும்

Teyvamāmalai

palapala malaiyum nāṭum parivuṭaṉ kaṭantu nīlaṉ
cilaitaṉai vaḷaitta māyaṉ tiruvaṭi pātam pōṟṟi
nalamuṭaṉ malaiyi ṉōṭē nallatōr vaḷappa mellām
cilaimata ṉīla rācaṉ teyvamā malaiyil vantārē

Godly supermount

Crossing many many countries and mountains,
Worshipping the feet of Tirumāl,
They came near this godly supermount
And witnessed fertile feet all along

மலைவளம்

10. வந்தார் பெரியமரச் சோலையிலே
மயிலாடிய சந்தன வர்ழ்மலையாம்[1]
கூந்தல்பனை யாட்குமடர் மலையாம்
குயிலோலங்கள் பாடிய வாழ்மலையாம்
ஆதியரனும் சிவனுமதி சிவனும் திருமால்
அகஸ்தியர் வாழ்மலை அதியமலை
துதிசெய்யும் தவமுனிவோர்கள் மலை
துடிசே ரிடையார்சுனை யாடுமலை

தெய்வீக மாமலையில் பெரிய பெரிய மரங்கள் நிறைந்த காடுகள் அடர்ந்திருந்தன. உயர்ந்த சந்தனமரங்களிலும், மரங்களிலும், மலைச் சிகரங்களிலும் மயிலினங்களும், குயிலினங்களும் ஆடிப் பாடின. சிவனுந் திருமாலும் எழுந்தருளிய அம்மலையில் அகத்திய முனிவரும், தவம் செய்யும் முனிவர்களும் வாழ்ந்து வந்தார்கள். துடி போன்ற இடையினையுடைய மகளிர்பலர் அருவியிலே நீராடி மகிழ்ந்தார்கள்.

சு.சொல் : 1. வாளமலயாம்.

Malaivaḷam

vantār periyamarac cōlaiyilē
mayilāṭiya cantaṉa vāḻmalaiyām
kūntalpaṉai yāṭkumaṭar malaiyām
kuyilōlaṅkaḷ pāṭiya vāḻmalaiyām

ātiyaraṉum civaṉumati civaṉum tirumāl
akastiyar vāḻmalai atiyamalai
tuticeyyum tavamuṉivōrkaḷ malai
tuṭicē riṭaiyārcuṉai yāṭumalai

Fertile Mount

They came across thick forests with huge trees
On tall sandalwood trees peacocks played and danced
On tall palmyra trees cuckoos sang
Akastiyar and other sages lived there
Where Civaṉ and Tirumāl had their abode
In the fresh fountains many beautiful women
With the smallest waist were bathing with joy

மரக்காடு

செஞ்சந்தன வாழைமரம் புன்னைமரம்
சித்திரஅத்தியோ டத்திகல் லத்திகளாம்
சிறுதேக் குகளுடன் செண்பகமரம்
சித்திர வேங்கையோ டரசனியாம்
பாலைவெப் பாலைவிரி யோடுமுவை
பருத்தா ளிகளாம்கல் லத்திகளாம்
வேம்புபல் லுறவே நெல்லிகளாம்
மஞ்சாடிக ளாம்வலு தோதகத்தி
சிறுனாரை சுவமயிலைகளாம்
சிவகாசியில்வெள் ளுலுக்கில்[1] நாங்குகளாம்
கறுத்தே யிலையிட்டிடும் வீரபிலா
கனிகாய்த்திடும் மாமரம் பூமரமார்
மருதாசனி மஞ்சாடி முள்ளிலுப்பை
வானமட்டும் வளர்ந்திரும்[2] வன்னிமரம்
இருண்ட பணையோடு கூந்தப்பனை
யிலுமிச்சை யோடுநல்ல நாரத்தியாம்
ஏணைகளாம் நாக வீரைகளாம்
இலவங்க முகமயிலை மூங்கில்களாம்

சிறப்பு வாய்ந்த காடுகளில் செஞ்சந்தன மரங்களும், வாழை, புன்னை, அத்தி, கல்லத்தி, தேக்கு, செண்பகம், வேங்கை, ஆல், அரசு, பாலை, வெப்பாலை, நெல்லி, மஞ்சாடி, வேம்பு ஆகிய மரங்களும் நிறைந்து அவற்றினிடையிலே சிங்கமும், புலியும், யானைகளும் உலவித் திரிந்தன. பலா மரங்களும், கனி கொடுக்கும் மாமரங்களும், இலுப்பை மரங்களும் நீண்டு வளர்ந்திருந்தன. வன்னி மரங்களும், எலுமிச்சை, நார்த்தை, இலவம், மூங்கில் போன்ற மரங்களும் உயர்ந்து அடர்ந்திருந்தன.

அத்தி, கல்லத்தி, பாலை, உழுவை, தாளி, மஞ்சாடி, தோதகத்தி, மயிலை, நாங்கு, வீரை, மீங்கில் மரவகைகள் நாகம் - புன்னை மரம்.

சு.சொல் : 1 ஞுஞுகில் 2. வளந்திரும்

Marakkāṭu

ceñcantaṉa vāḻaimaram puṉṉaimaram
cittiraattiyō ṭattikal lattikaḷām
ciṟutēk kukaḷuṭaṉ ceṇpakamaram
cittira vēṅkaiyō ṭaracaṉiyām
pālaivep pālaiviri yōṭuḻuvai
paruttā ḷikalāmkal lattikaḷām
vēmpupal luṟuvē ṇellikaḷām
mañcāṭika ḷāmvalu tōtakatti
ciṟuṉārai cuvamayilaikaḷām
civakāciyilveḷ ḷulukkil nāṅkukaḷām
kaṟuttē yilaiyiṭṭiṭum vīrapilā
kaṉikāyttiṭum māmaram pūmaramāṟ
marutācaṉi mañcāṭi muḷḷiluppai
vāṉamaṭṭum vaḷarntirum vaṉṉimaram
iruṇṭa paṉaiyōṭu kūntappaṉai
yilumiccai yōṭunalla nārattiyām
yēṉaikaḷām nāka vīraikaḷām
ilavaṅka mukamayilai mūṅkilkaḷām

Forest full of trees

In the forest there the following trees stood
Red sandal wood, banana, *puṉṉai*
Fig tree, stone fig, Miniteakwood, Michelia
Neem, banyan, pipal, *Veppālai*, gooseberry

Redwood, *Vēṅkai.* Among the trees
Were freely roaming lions, tigers and elephants
Fruit yielding trees such as mango,
South Indian Mahva, lime along with black palymyra
And white Palmyra, Indian mesquiet, wild lime and
Cotton stood tall

கனகா அடைதல்

சோலையி லேபுகழ்[1] நீலனவர்
சொல்லத் தொலையா[2] மரங்களெல்லாம்
தண்டாமரைப் பொய்கைத் தடஞ்சுனையாம்
சருவேசர் முனிவோர்கள் இருப்பிடமாம்
கண்டே புகழ்ந்தே புகழ்நீலனவர்
கனகாவி லேறி நடந்தாரே

வகைப்படுத்திச் சொல்ல முடியாத மரங்களோடு தாமரைமலர்ப் பொய்கைகளும், சுனைகளும், அருவிகளும் நிறைந்து, முனிவர்கள் தங்கியிருக்கும் இடங்களையெல்லாம் பார்த்துப் புகழ்ந்து கொண்டே அடர்ந்த சோலையில் நடந்தர்ர்கள்

சருவேசர் - கடவுள்

சு.சொல் · 1 புகள் 2 துலயா

Kaṉakā aṭaital

cōlaiyi lēpukaḻ nīlaṉavar
collat tolaiyā maraṅkaḷellām
taṇṭāmaraip poykait taṭañcuṉaiyām
caruvēcar muṉivōrkaḷ iruppiṭamām
kaṇṭē pukaḻntē pukaḻnīlaṉavar
kaṉakāvi lēṟi naṭantārē

Reaching Kaṉakā

Nīlaṉ entered the groves full of trees
Beyond classification, and with tanks full of white lotus,
Cold water fountains. Praising these places,
The abode of the gods, Nīlaṉ reached kaṉakā.

சாய்ந்த மலை

நடந்தனரே நீலராசன் நல்லதிருப் பாதம்நோக்கி[1]
கடந்தனனே கடுகுமலை காட்டுபுதூர் மலையும்விட்டு
ஆரமுடன் அடுத்தமலை அயிராணி பருவதமும்[2]
வீரவன் வீறாமலை மிகுந்தபெரும் சோலைவிட்டு
வடமலையாம் மேனாடு மந்திகுதி பாயுமலை
தடமலையும் குவடும்விட்டுச்[3] சாய்ந்தமலை தனிலேவந்தார்

கடுகுமலை, காட்டுப்புதூர் மலைவழியே அயிராணி மலை, வீரவன் வீறாமலை, பெருஞ்சோலைகள் ஆகியவற்றைக் கடந்து, மந்திகள் குதித்தும் பாய்ந்தும் விளையாடும் பெரிய மலைகளையும், மலைச்சிகரங்களையும் தாண்டி சாய்ந்த மலையினை வந்தடைந்தார்கள்.

சு.சொல் 1 பாதம்னோக்கி 2 பறுவதமும் 3 குமடுமிட்டு

Cāyntamalai

naṭantaṉarē nīlarācaṉ nallatirup pātamnōkki
kaṭantaṉaṉē kaṭukumalai kāṭṭuputūr malaiyumviṭṭu
āramuṭaṉ aṭuttamalai ayirāṇi paruvatamum
vīravaṉ vīṟāmalai mikuntaperum cōlaiviṭṭu
vaṭamalaiyām mēṉāṭu mantikuti pāyumalai
taṭamalaiyum kuvaṭumviṭṭuc cāyntamalai taṉilēvantār

The leaning mount

Nīlarācaṉ walked towards kaṭukumalai,
Crossed kāṭṭuputūr, the next mount Ayirāṇi,
Then Vīṟāmalai, and traversing groves
Came to vaṭamalai where monkeys
Jump and play and beyond Taṭamalai
Reached the leaning mount.

மிருகங்களின் வினா

அலங்காரத் தோப்பும்விட்டு அணையும்பல சுனையும்விட்டு
கலங்காத மனதீரன் காவலவ னீலராசன்

வருமலையில் மிருகமெல்லாம்[1] வந்திவரை வணங்கிடுமாம்
கருநாகம்[2] பன்றிமுயல் காட்டானை கரடிபுலி
புல்வாயோ டாளிசிங்கம் புற்றில்வாழும்[3] அரவமுடன்
வேதமொடு கலைமிளாவும் மிக்கதொரு கடமானும்
ஆணழக நீலனைக்கண்டு அதிசயமாய் வணங்கிடுமாம்
புலியுடனே[4] பசுக்களுமாய் பொருந்தியே நீர்குடிக்கும்
கலியுகமாய்க் கண்டனரே காவலவ னீலராசன்
தரவமுட னீலனுட தன்னடியைத் தான்பணிந்து
ஆவலுடன் தம்புரானே அருங்காவில் வந்ததென்ன
வாய்பேசா மிருகமெல்லாம்[5] வாய்பேசி வணங்கி நிற்க

தோப்பும் துரவும், அணையும் சுனையும் கடந்து நீலனும் நீலியும் வருகின்ற வழியில், விலங்குகள் பலவும் நீலனைக் கண்டு வணங்கத் தொடங்கின. கருநாகம், பன்றி, முயல், காட்டானை, கரடி, புலி, புல்வாய், ஆளி, சிங்கம், புற்றிலே வசிக்கும் பாம்பு, கலைமான், கடப்பமான் அனைத்தும் ஆச்சரியத்தோடு நீலனைப் பார்த்து வணங்கி நின்றன. புலிகளும், பசுக்களும் ஒற்றுமையாகச் சேர்ந்து நீர் குடிக்கும் கலியுகத்தைக் கண்டு மகிழ்ந்தனர் நின்ற நீலனுடைய திருவடிகளை வணங்கிய அந்த மிருகங்கள், தம்பிரானே! இந்த அருஞ்சோலைக்குத் தாங்கள் வந்த காரணமென்ன என்று கேட்டு வணங்கி நின்றன.

அரவம் - பாம்பு.

சு.சொல் : 1. மிறுகமெல்லாம் 2. கருனாகம் 3. புத்தில்வாளும் 4. புலியுடநே 5. மிறுகமெல்லாம்

Mirukaṅkaḷiṉ viṉā

alaṅkārat tōppumviṭṭu aṇaiyumpala cuṉaiyumviṭṭu
kalaṅkāta maṉatīraṉ kāvalava nīlarācaṉ
varumalaiyil mirukamellām vantivarai vaṇaṅkiṭumām
karunākam paṉṟimuyal kāṭṭāṉai karaṭipuli
pulvāyō ṭāḷiciṅkam puṟṟilvāḻum aravamuṭaṉ
vētamoṭu kalaimiḷāvum mikkatoru kaṭamāṉum
āṇaḻaka nīlaṉaikkaṇṭu aticayamāy vaṇaṅkiṭumām
puliyuṭaṉē pacukkaḷumāy poruntiyē nīrkuṭikkum
kaliyukamāyk kaṇṭaṉarē kāvalava nīlarācaṉ
taravamuṭa nīlaṉuṭa taṉṉaṭiyait tāṉpaṇintu
āvaluṭaṉ tampurāṉē aruṅkāvil vantateṉṉa
vāypēcā mirukamellām vāypēci vaṇeṅkiniṟka

Animal's Query

Leaving beautiful groves, dams and fountains,
Nīlan̠ of strong mind and valour
Came to a place where all animals made obeissance
Black cobra, pigs, rabbits, wild elephants, tigers
And bear, Pulvāy, lion, snakes in their anthills,
Varietics of deer, worshipped the most handsome Nīlan̠,
They witnessed the wonder of cows and lions
Drinking water from the same sources
The speechless animals began to speak
And asked Nīlan̠ the purpose of his visit
To their places.

நீலன் உலக இயல்பு கூறுதல்

பாசமுட னீலராசன் பகருவாராம் ஒருவார்த்தை
கேட்டிடுங்கோ நாட்டிலுள்ள[1] கிருபையெல்லாம் சொல்லுகிறேன்
நாட்டமுடன் கயிலைமுதல் நான்காணா யிடமுமில்லை
வைய்யகங்கள் தாழ்ந்ததென்ன மலைகளெல்லாம் உசந்ததென்ன
மெய்யாகச் சொல்லுகிறேன் மிருகங்களே கேளுமெல்லாம்
பொய்யாம லுலகமதில் பூமியதில் மூன்றிலொன்று
செய்யசிவன் திருவருளால் சிறந்தகடல் மூன்றிலொன்று
மன்றுலகில் வளர்ந்தமலை வய்யகத்தில் மூன்றிலொன்று
சென்றறிந்து போகவந்தோம் திருநீல தம்புரரே
யென்றுசொல்லி மிருகமெல்லாம் ஏத்தகாவில் போனதுவே.

மிருகங்களே நான் பார்த்து வந்த் உலக இயல்பைக் கூறுகிறேன் கேளுங்கள் என்றுகூறிச் சொல்லத் தொடங்கினான் நீலன். கயிலாயமலை தொடங்கி எல்லா இடங்களையும் பார்த்து விட்டேன். உலகம் முழுவதும் தாழ்ந்து, மலைகள் உயர்ந்து நிற்கின்றன. பூமி, கடல், மலை என்ற மூன்று பிரிவுகளும் ஒன்றாய்ச் சேர்ந்ததே உலகமாகும். இவ்வுலகில் மூன்றிலொரு பங்கே இந்நிலவுலகம்; மூன்றிலொரு பங்கு கடல்; மற்றைய ஒரு பங்கு மலை என்பதே உண்மை. இவையாவும் இறைவனின் திருவுளப் படைப்பாகும் என்று கூறினான் ஐயனே! இவ்வுண்மைகளை அறியவே தங்களிடம் வந்தோம் உண்மையறிந்து மகிழ்ந்தோம் என்று கூறிச் சென்றன அம்மிருகங்கள்.

சு.சொல் : 1 னாட்டிலுள்ள

Nīlan̲ ulaka iyalpu kūr̲utal

pācamuṭa n̲īlarācan̲ pakaruvārām oruvārttai
kēṭṭiṭuṅkō nāṭṭilul̲l̲a kirupaiyellām collukir̲ēn̲
nāṭṭamuṭan̲ kayilaimutal nān̲kāṇā yiṭamumillai
vaiyyakaṅkaḷ tāl̲ntaten̲n̲a malaikaḷellām ucantaten̲n̲a
meyyākac collukir̲ēn̲ mirukaṅkaḷē kēḷumellām
poyyāma lulakamatil pūmiyatil mūn̲r̲ilon̲r̲u
ceyyacivan̲ tiruvaruḷāl cir̲antakaṭal mūn̲r̲ilon̲r̲u
man̲r̲ulakil vaḷarntamalai vayyakattil mūn̲r̲ilon̲r̲u
cen̲r̲ar̲intu pōkavantōm tirunīla tampurarē
yen̲r̲ucolli mirukamellām ēttakāvil pōn̲atuvē

Nīlan̲ narrates the nature of the world

With love and kindness, Nīlan̲ started to reply
And said that he would narrate the way of the world
"From kailash downwards, there's not a place
I've not visited. The world has come down,
And the mountains stand high,
Let me tell you! Listen to me,
In the whole universe, the land is one third,
Water occupies one third and mountains one third,
Hearing this the animals said that they came to learn this
And they were happy with this knowledge.

நீலனும் வனவிலங்குகளும்

குன்றுமலை பருவதத்தில்[1] கொலைகள்செய்து[2] வேட்டையாட
மலையதிலே வரும்போது மதிநினைந்தார் நீலராசன்
கொலைகள்செய்து குருதியுண்டார் கூண்டமலை மிருகங்களை
கூக்கையிட்டுத் தான்பிடித்துத் துணிந்துவேட்டை ஆடுவாராம்
வாகுடைய[3] நீலராசன் வயிற்றுப்பசி ஆறவென்ன
பூராகவே நினைந்து புகழுடைய[4] நீலராசன்
வந்த மிருகமெல்லாம்[5] வந்திவரை வணங்கிடுமாம்
வேடரைப்போல் நீலராசன் வெகுதொழிலும் கற்றவராய்

பாடியொரு மந்திரத்தைப் பறித்தெறிந்தார் பச்சிலையை
அச்சமற மிருகமெல்லாம் அதுவாழும் காவும்விட்டு
நிச்சயமாய் நீலனுட நிலைதேடி வந்திடுமாம் 55

பழகை நகரைச் சார்ந்த மலையிலே வந்து தங்கிய நீலனும், நீலியும் தங்களுடைய வயிற்றுப்பசியைப் போக்கிக்கொள்ள கூண்டமலை என்னும் மலையிலிருந்த மிருகங்களைக் கொன்று அவற்றின் குருதியைக் குடித்தார்கள் இவ்வாறே மிருகங்கள் பலவற்றையும் வேட்டையாடத் தொடங்கிய நீலன் மந்திரசக்தியால் பச்சிலையைப் பறித்து எறிந்தான். அந்த மந்திர சக்தியால் மிருகங்கள் அச்சமில்லாமல் தங்களுடைய காட்டை விட்டு வரிசை வரிசையாய் வந்து நீலனை வணங்கத் தொடங்கின.

பூரகம் - பூரித்தல் அச்சமற - பயமில்லாமல்.

சு.சொல் : 1 பறுவதத்தில் 2 குலைகள்செய்து 3 வாகுடைய 4 புகளுடைய 5 மிறுகமெல்லாம்

Nīla̲num va̲navilaṅkukaḷum

kun̲r̲umalai paruvatattil kolaikaḷceytu vēṭṭaiyāṭa
malaiyatilē varumpōtu matinin̲aintār nīlarācan̲
kolaikaḷceytu kurutiyuṇṭār kūṇṭamalai mirukaṅkaḷai
kūkkaiyiṭṭut tān̲piṭittut tuṇintuvēṭṭi āṭuvārām
vākuṭaiya nīlarācan̲ vayir̲r̲uppaci ār̲aven̲n̲a
pūrākavē nin̲aintu pukaḻuṭaiya nīlarācan̲
vanta mirukamellām vantivarai vaṇaṅkiṭumām
vēṭaraippōl nīlarācan̲ vekutoḻilum kar̲r̲avarāy
pāṭiyoru mantirattaip par̲itter̲intār paccilaiyai
accamar̲a mirukamellām atuvāḻum kāvumviṭṭu
niccayamāy nīlan̲uṭa nilaitēṭi vantiṭumām

Nīlan̲ and the animals

On hills and mountains Nīlan̲ traversed,
And thought of hunting animals for food,
He did kill animals and drank their blood,
And hunted them boldly to satiate
His hunger. And the animals came to worship him.
Adept in hunting Nīlan̲ pronounced Manthra
And threw a green herb which made
All animals come to him without fear.

வனத்தில் விலங்குகள்

கோலநிறக் கடுவாயும் கூட்டமிட்ட வரிப்புலியும்
சடப்புலியும் கடமானும் தங்களிலே உறவாடி
படையைவெல்லு[1] மதகரியும் பருவாயி லாடுகளும்
சிங்கமுடன் ஆளிகளும் திரண்டுபடை கூடிவர
அங்கப்புலி போலேநீலன் அடிதேடி வருகுதல்லோ

கடுவாய்ப்புலி, வரிப்புலி, சடப்புலி, மான்கூட்டம், யானைக்கூட்டம், ஆடுகள், சிங்கம் ஆகிய மிருகங்கள் பலவும் நீலனுடைய திருவடியை வணங்க அவனைத் தேடிப்புறப்பட்டன

கடுவாய் - ஒரு புலி, நாய்.

சு.சொல் : 1 படையைவெல்லு

Vaṉattil vilaṅkukaḷ

kōlaniṟak kaṭuvāyum kūṭṭamiṭṭa varippuliyum
caṭappuliyum kaṭamāṉum taṅkaḷilē uṟavāṭi
paṭaiyaivellu matakariyum paruvāyi lāṭukaḷum
ciṅkamuṭaṉ āḷikaḷum tiraṇṭupaṭai kūṭivara
aṅkappuli pōlēnīlaṉ aṭitēṭi varukutallō

Animals in the forest

Tiger with ferocious mouth, striped tiger and
Maned tiger, varieties of deer had
Close contact among themselves. Army defeating
Black Elephants, all types of goats,
Lions, and other animals came to worship him.

நீலன் விலங்குகளை முறியடித்தல்

கண்டுஅந்த நீலராசன் காட்டில்சிங்கம் உருவானார்
சிங்கமது சினந்துசீறித் திரண்டமத யானைகளை
அங்கமது தனைப்பிளக்க ஆனைகள் வீறிட்டலற
பங்கமது செய்தல்லவோ பசியாற நீலராசன்
ஓடாமல் கடுவாயை ஊட்டிதனை முறிக்குறாராம்
காடான தில்வாழும் கழுகுகளுக்கு விருந்திடவே

வரிசைவரிசையாய் வந்து கொண்டிருந்த வனவிலங்குகளைக் கண்ட நீலன் கொடிய சிங்கத்தைப் போல் உருவம் மாறினான். தன்னை நாடி வந்த யானைகளை வீறிட்டு அலறுமாறு தாக்கினான். அதே போல கடுவாய்ப்புலியை வெட்டி முறித்தான் இப்படி அவன் கொன்ற விலங்குகளை எல்லாம் காட்டில் உள்ள கழுகுகளுக்கு விருந்தாக்கினான்

பங்கம் - குற்றம். ஊட்டி - மிடறு, கழுத்து

Nīlaṉ vilaṅkukaḷai muṟiyaṭittal

kaṇṭuanta nīlarācaṉ kāṭṭiḷciṅkam uruvāṉār
ciṅkamatu ciṉantucīṟit tiraṇṭamata yāṉaikaḷai
aṅkamatu taṉaippiḷakka āṉaikaḷ vīṟiṭṭalaṟa
paṅkamatu ceytallavō paciyāṟa nīlarācaṉ
ōṭāmal kaṭuvāyai ūṭṭitaṉai muṟikkuṟārām
kāṭāṉa tilvāḻum kaḻukukaḷukku viruntiṭavē

Nīlaṉ defeats the animals

Seeing this, Nīlaṉ took the lion's shape
And as roaring lion attacked the elephant.
With their body rent they trumpeted loud
To tear them, Nīlaṉ did like this.
He broke the neck of the ferocious tiger,
And threw the carcases as feast for vultures.

மகளிர் செயல்

பாலிரத மொழிமடவார் பழவைநகர் நீலியுமாய்
காலிகன்று புல்வாயும் கடுங்கோபத் தால்பிடித்து
பசியாற நீலராசன் படுகளம்போ லேயிருக்கும்
கசிந்தோடு குருதிரெத்தம் கனகுவடு மலைதோறும்
உதிரவெறி[1] நீலன்கொள்ள ஒளிந்தோட சிலமிருகம்
மதுரமொழி[2] நீலியுமாய் வலைபோட்டு மயக்குவாரே

நீலியும் உடன்வந்த மகளிரும் நீலனின் செயலைக் கண்டார்கள். நீலன் கொன்ற மிருகங்களின் இரத்தம் மலைகளிலே வெள்ளமாக ஓடி வருவதைக் கண்டார்கள். அவனுடைய வேட்டைத் தொழிலுக்கு அஞ்சி ஓடி ஒளிந்து கொள்ளும் மிருகங்களையும் கண்டார்கள். நீலனைப்போல வேட்டையில் இறங்காமல் அவற்றிற்கு வலைபோடத் தொடங்கினார்கள். அச்செயலுக்கு அஞ்சிய மிருகங்கள் ஒன்று சேர்ந்து வெள்ளத்தைப் போல ஓடத் தொடங்கின.

பால் + இரதம் - பாலையும் பழச்சாற்றையும் போன்ற படுகளம் - போர்க்களம்.
உதிரம் - இரத்தம்.

சு சொல் : 1 உதிரவெலி 2 மதுரமொழி

Makaḷir ceyal

pālirata moḻimaṭavār paḻavainakar nīliyumāy
kālikaṉṟu pulvāyum kaṭuṅkōpat tālpiṭittu
paciyaṟa nīlarācaṉ paṭukaḷampō lēyirukkum
kacintōṭu kurutirettam kaṉakumaṭu malaitōṟum
utiraveṟi nīlaṉkoḷḷa oḷintōṭa cilamirukum
maturamoḻi nīliyumāy valaipōṭṭu mayakkuvārē

Women's Action

Nīli and her belly shaking women-in-waiting
Saw Nīlaṉ's hunting prowess and how he killed the tiger,
And how the place resembled a battlefield,
And how the blood of animals flowed like a river
Afraid of Nīlaṉ's bloodthirst, the animals
Hid themselves and sweet tongued Nīli
Enticed the animals with a net.

விலங்குகளின் நடுக்கம்

மசக்க வலைபோட்டு நீலனும் நீலியும்
மலையில் மிருகம்[1] கலைந்தோடி சாட
இசக்கி மசக்கவே திசக்கியே மிருகங்கள்
இருண்ட வனந்தோறும் மாண்டு மடிந்திட
வெள்ளம் பிரண்டாப்போல் மிருகங்கள் அலறிட
வெகுண்டு பலகுட்டி பயந்தங்கே ஓடிட
சள்ளைப் பிரண்டாப்போல் தயங்கி மயங்கியே
தாய்கள் தனைவிட்டுத் தடுமாறித் தவறிட
கூட்டக் கடமானும் பன்றிபுல் வாயுடன்
கொஞ்சும் புள்ளிமானும் கடுவாயோ டாளி
வேட்டை யிடவே நீலனும் நீலியும்
வேண்டும் இடுகாடு படுகளம் போலவே

ஓடிய விலங்குகளின் குட்டிகள் பயந்து தங்கள் தாய்களை விட்டுப் பிரிந்து ஓடத்தொடங்கின. நீலன் நீலியின் செயலாலும் விலங்குகளின் செயலாலும் மலையும் காடுமாகிய அந்த நிலம் முழுவதும் படுகளம் போல வெறிச்சிட்டுக் காணப்பட்டன.

சள்ளை - இடுப்பு. படுகளம் - போர்க்களம்.

சு.சொல் : 1 மிறுகம்

Vilaṅkukaḷiṉ naṭukkam

macakka valaipōṭṭu nīlaṉum nīliyum
malaiyil mirukam kalaintōṭi cāṭa
icakki macakkavē ticakkiyē mirukaṅkaḷ
iruṇṭa vaṉantōṟum māṇṭu maṭintiṭa
veḷḷam piraṇṭāppōl mirukaṅkaḷ alaṟiṭa
vekuṇṭu palakuṭṭi payantaṅkē ōṭiṭa
caḷḷaip piraṇṭāppōl tayaṅki mayaṅkiyē
tāykaḷ taṉaiviṭṭut taṭumāṟiṭ tavaṟiṭa
kūṭṭak kaṭamāṉum paṉṟipul vāyuṭaṉ
koñcum puḷḷimāṉum kaṭuvāyō ṭāḷi
vēṭṭai yiṭavē nīlaṉum nīliyum
vēṇṭum yiṭukāṭu paṭukaḷam pōlavē

The fear of animals

To catch them trickily, Nīlaṉ and Nīli put the net
And the animals ran helter skelter.
Cornered by Icakki the animals began dying
In the dark forests. They ran like flood,
Roaring and growling and grunting.
The young ones, terribly frightened
Ran here and there, separated from their mothers.
Crowds of deer, Antelope, Pulvoy,
Tiger, lion and others were found
In the forest which resembled a battle field and burning ghat

பேய்களின் கொண்டாட்டம்

சற்றும் சறுக்காமல் தங்கையும்[1] தமயனும்
சறுக்கர பூலிலே உறுக்கியே மிருகங்கள்

கதறக் கதறவே கடுவாயோ டாளியைக்
கழுத்தை முறித்திட கடுவா யலறிட
உதறியே மிருகத்தை உதறியே குடிப்பாராம்
ஓடு மிருகத்தை ஊட்டியை[2] முறிக்க
நீலன் மலைவேட்டை யாடுற நேரம்
நீசப்[3] பேய்ப்படை ஆயிரம் கூடுமாம்
நல்ல நீலன் வரம்பெற நாயனார்
நமக்கு விருந்திட்டார் மலைக்குள்ளே யென்று
சொல்லிக் கூடியே சிலபேய்கள் ஆட
கும்பிட்டே நீலனைத் தெண்டம் பண்ணுவார்
வாடி நின்றோம் வெலிகிடை யாமலே
மன்னர் நீலன்திருப் பாதம் போற்றுமாம்

அண்ணனும் தங்கையுமாகச் சேர்ந்து காட்டுப்புலி முதலாகிய பலவகை மிருகங்களையும் கொன்று அவற்றின் குருதியைக் குடித்துப் பசியாறி இருக்க அவனிடம் சிக்காமல் பல மிருகங்கள் ஓடி ஒளிய இவ்வாறு நிகழ்ந்த வேட்டை நிகழ்ச்சிகளை எல்லாம் கண்ட பேய்கள் கூட்டம் கூட்டமாகக் கூடின. நாம் பலி கிடைக்காமல் வாடிக் கிடந்தோம். இறைவனிடம் வரம்பெற்ற நீலராசன் இந்த மலைக்காட்டிலே நமக்கெல்லாம் நல்ல விருந்தை அளித்து விட்டார் என்று மகிழ்ச்சியடைந்து ஆடத் தொடங்கின. நீலனைக் கண்டு அவனுடைய திருவடிகளை வணங்கி போற்றத் தொடங்கின.

நீசம் - கொடுமை. வெலி - பலி.

சு.சொல் : 1 தங்கயும் 2 ஊட்டியே 3 னீச.

Pēykaḷiṉ koṇṭāṭṭam

caṟṟum caṟukkāmal taṅkaiyum tamayaṉum
caṟukkaru pūlīlē uṟukkiyē mirukaṅkaḷ
kataṟak kataṟavē kaṭuvayō ṭāḷiyaik
kaḻuttai muṟittiṭa kaṭuvā yalaṟiṭa
utaṟiyē mirukattai utaṟiyē kuṭippārām
ōṭu mirukattai ūṭṭiyai muṟikka
nīlaṉ malaivēṭṭai yāṭuṟa nēram
nīcap pēyppaṭai āyiram kūṭumām
nalla nīlaṉ varampeṟa nāyaṉār
namakku viruntiṭṭār malaikkuḷḷē yeṉṟu

collik kūṭiyē cilapēykaḷ āṭa
kumpiṭṭē nīlaṉait teṉṭam paṇṇuvār
vāṭi niṉṟōm velikiṭai yāmalē
maṉṉar nīlaṉtirup pātam pōṟṟumām

Devil's celebrations

Without fail brother and sister killed the animals
Without a miss, in spite of their groans and growls
Breaking the tiger's neck, drank its blood,
Shaking its head. Even the escaping
Animals neck was broken. The devils
Assembled in thousands and said,
"Nīlaṉ got the grace and with it
Kills animals to give us a feast in the mountain,
Some began dancing and fell flat before Nīlaṉ,
Saying, "Our sorrow is gone,
Let us praise the feet of Nīlaṉ".

பூதங்களும் கூளிகளும்

போற்றி நின்று வணங்க சிலபூதம்
பொன்னும் நீலனும் நீலியே நம்மையும்[1]
போதும் போதும் இனிவேட்டை பூரைதான்
போங்கோ வென்று கூளிகளை[2] யேவினார்
தீதில் லாசிவன் மாய னருளினால்
தெய்வ ராசன் நீலன் வருகின்றாரே.

பேய்கள் ஒருபுறம் வணங்கி நிற்க பூதங்கள் சில போதும் போதும் என்ற அளவிலே வேட்டையில் கிடைத்த பூசைகளை ஏற்றுக் கொண்டன. தொடர்ந்து கூளிகளைப் பார்த்து நீலன் அளிக்கும் விருந்துக்காக அனுப்பி வைத்தன. இவ்வாறு காட்டு விலங்குகளைக்கொன்று, பேய் பூதங்களுக்கு இரை அளித்த நீலன் சிவபெருமானின் அருள்விளங்க பூசை ஏற்று நின்றான்

பூரை - பூரணம்; முழுமை. கூளி - பேய்.

க சொல் : 1 நம்மயும் 2 கூளிங்களை.

Pūtankaḷum kūḷikaḷum

pōṟṟi niṉṟu vaṇaṅka cilapūtam
poṉṉum nīlaṉum nīliyē nammaiyum
pōtum pōtum inivēṭṭai pūraitāṉ
poṅkō veṉṟu kūḷikaḷai yēviṉār
tītil lācivaṉ māya ṉaruḷiṉāl
teyva rēcaṉ nīlaṉ varukiṉṟārē

Devils [spirit of giants] and gnomes

Some spirits stood worshipping and some others
Satisfied with their lot stood by Nīlaṉ and Nīli
Gnomes came to feast offered by Nīlaṉ,
Thus Nīlaṉ offering feast for the spirits
Came to receive the blessings of Civaṉ.

நீலி வந்துசேர்தல்

அந்தநல்ல நேரத்திலே ஆணழக[1] னீலராசன்-மிகச்
சிந்தையது மிகமகிழ்ந்து செப்புவாராம் ஒருவார்த்தை
சாத்திரங்கள் லக்கினங்கள்[2] தானறிந்தார் நீலராசன்
ஆத்திரம்சேர் நீலனையும் கண்டனுப்பத் தெய்வார்கள்
அந்தமலை தனைக்கடந்து அருஞ்சுனையும் கயமுமிட்டு
சிந்தையுடன் நீலராசன் தெய்வனிலந் தனிலேவந்தார்
மைவிழிசேர் நீலியம்மை வனத்தில்வந்து கூடுவாளாம்
கூடினதோர்[3] நீலியம்மை கூறுவாளாம் தமயனிடம்
நாடிமுன்னால்[4] ஒருவயிற்றில் நாமளிரு பேருமாக
உடன்பிறப்பாய்ச் செம்பியர்க்கு உடலுயிராக நாமிருந்தோம்
திடமுடைய[5] நீலனுடன் திருநீல தம்புரானார்
தங்கையுடன்[6] தமயனுமாய் தான்மலையில் வாறபோது

பலவகைச் சாத்திரங்களையும், லக்கினங்களையும் அறிந்தவனாகத் தோன்றிய நீலன் மேலும் பல மலைகளையும், சுனைகளையும், குளங்களையும் கடந்து வந்து கொண்டிருந்தான் வனத்திலே வந்து கொண்டிருந்த நீலனோடு நீலியும் வந்து சேர்ந்தாள். அவள் தமையனைப் பார்த்து அண்ணா நாம் இருவரும் செம்பியர்க்கு மக்களாகப் பிறந்து வளர்ந்தவர்கள் என்று தங்களுடைய வரலாற்றைக் கூறியபடியே நீலனோடு காடுமலைகளைக் கடந்து வரத் தொடங்கினாள்.

சு.சொல் : 1 ஆணளக 2 லக்கனங்கள் 3 கூடனதோர் 4 னாடிமுன்னால் 5. திடமுடய 6. தங்கயுடன்.

Nīli vantucērtal

antanalla nērattilē āṇaḻaka nīlarācan-mikac
cintaiyatu mikamakiḻntu ceppuvārām oruvārttai
cāttiraṅkaḷ lakkiṉaṅkḷ tāṉaṟintār nīlarācaṉ
āttiramcēr nīlaṉaiyum kaṇṭaṉuppat teyvārkaḷ.
antamalai taṉaikkaṭantu aruñcuṉaiyum kayamumiṭṭu
cintaiyuṭaṉ nīlarācaṉ teyvaṉilan taṉilēvantār
maiviḻicēr nīliyammai vaṉattilvantu kūṭuvāḷām
kūṭiṉatōr nīliyammai kūṟuvāḷām tamayaṉiṭam
nāṭimuṉṉāl oruvayiṟṟil nāmaḷiru pērumāka
uṭaṉpiṟappāyc cempiyarkku uṭaluyirāka nāmiruntōm
tiṭamuṭaiya nīlaṉuṭaṉ tirunīla tampurāṉār
taṅkaiyuṭaṉ tamayaṉumāy tāṉmalaiyil vāṟapōtu

Arrival of Nīli

At this auspicious moment, beauty among men,
Nīlaṉ, happy at heart, uttered the following,
Well-versed in *sastras* and astrology
He crossed mountains, streams and fountains,
And reached the holy land of Gods
Black-eyed Nīli reached this place.
Thereafter she told Nīlaṉ that
In previous birth, they were born
Of the same mother as brother and sister
And were together like life and body
Saying this brother and sister
Crossed, the mountains, one by one.

இருவரும் தொடர்ந்து நடத்தல்

எங்குமுள்ள பூதகணம் இவர்களைக்கண் டோடிவர
நில்லுங்கோ வென்றுசொல்லி நிலைநிறுத்தி[1] நடக்கலுற்றார்
கல்லும் காடும்கடந்து காளையாறு தனைக்கடந்து
வண்டுரைக்கும் சத்தமது மலைகளெல்லாம் மணிஓசை[2]

யெண்டிசையும் கெம்பிடவே யிருண்டவனம் தனிலேவர
முனிவர் தவத்தியர்கள் முப்பத்திமுக் கோடிதெய்வார்
மேலெங்கும் வெண்ணிலங்க[3] விரித்தசடை நிலந்தூக்க
அப்படியே தவமுனிவர் எண்ணா யிரம்கோடி
தப்பாம லங்கிருக்கும் தவமுனிவர் மலையும்விட்டு
செப்பமுள்ள நீலராசன் திறப்பாயு மலையும்விட்டு

இருவரும் வனத்திலே வருகிறபொழுது பூதகணங்கள் பலவும் அவர்களைத் தொடர்ந்து பின்சென்றன. ஆனால் இருவரும் பூதகணங்களைப் பார்த்து நீங்கள் இங்கேயே நில்லுங்கள். நாங்கள் செல்கிறோம் என்று கூறி, ஆறு, வனம், மலைகள் இவற்றையெல்லாம் கடந்து செல்லத் தொடங்கினார்கள். வழியிலே முனிவர்களும், தவசியர்களும் முப்பத்து முக்கோடி தேவர்களுமாக வசிக்கின்ற மலைகளை எல்லாம் கண்டு அவற்றையெல்லாம் விட்டுச் செல்லத் தொடங்கினார்கள்

பூதகணம் - பேய். கெம்பல் - ஆரவாரம்.

சு சொல் · 1 நிலைநெறுத்தி 2 மணிஓச 3 வெண்ணீலங்க

Iruvarum toṭarntu naṭattal

eṅkumuḷḷa pūtakaṇam ivarkaḷaikkaṇ ṭōṭivara
nilluṅkō veṉṟucolli nilainiṟutti naṭakkaluṟṟār
kallum kāṭumkaṭantu kāḷaiyāṟu taṉaikkaṭantu
vaṇṭuraikkum cattamatu malaikaḷellām maṇiōcai
yeṇṭicaiyum kempiṭavē yiruṇṭavaṉam taṉilēvara
muṉivar tavattiyarkaḷ muppattimuk kōṭiteyvār
mēleṅkum veṇṇilaṅka virittacaṭai nilantūkka
appaṭiyē tavamuṉivar eṇṇā yiramkōṭi
tappāma laṅkirukkum tavamuṉivar malaiyumviṭṭu
ceppamuḷḷa nīlarācaṉ tiṟappāyu malaiyumviṭṭu

They continued to walk together

Demons everywhere came running towards them
They asked them to stop. They continued to walk
Crossed stones, forests, kāḷaiyāṟu and
The buzzing of the bees was heard all over the hills
The sound of bells rang thunderous

All over the forest. Sages and ascetics,
Thirty three crores of them, with their body shining white
Their hair touching the ground, And penance
Performing ascetics thousand crores
In number, were living in such mountains
Nīlaṉ and Nīli, after seeing them, Continued their journey.

வனத்தின் சிறப்பு

குப்பமிட்ட சோலைவிட்டுக் கூண்டவன காசமிட்டுக்
கூவிளமும் கொன்றைகளும் குங்குமம்செந் தாமரையும்
அன்னமும் குருவினமும் அருங்கொப்பில் தானாட
கன்னலுடன் கதலிகளும் காய்த்துதிரும் பூச்சொரிய
செந்நெலது[1] தான்விளைந்து தினைக்கதிரில் குலைசரிய
பொன்னழகர்[2] [நீல]நீலனவர் புவனமது தானிலங்க

அவர்கள் சென்ற வனத்திலும் சோலைகளிலும் கொன்றை, கூவிளம், குங்குமம், செந்தாமரை, போன்றவை அழகுற விளங்கின கரும்புத் தோட்டங்கள் முதிர்ந்து நின்றன. கதலிகள் காய்த்துக் குலுங்கின. செந்நெல், தினை போன்றவை விளைந்து கதிர்கள் சாய்ந்திருந்தன. இத்தகு சிறப்பையெல்லாம் கண்டு செல்கிறார்கள்

புவனம் - பூமி

க.சொல் : 1 சென்னலது 2 பொன்னளகர்.

Vaṉattiṉ ciṟappu

kuppamiṭṭa cōlaiviṭṭik kūṇṭavaṉa kācamiṭṭuk
kūviḷamum koṉṟaikaḷum kuṅkumamcen tāmaraiyum
aṉṉamum kuruviṉamum aruṅkoppil tāṉāṭa
kaṉṉaluṭaṉ katalikaḷum kāyttutirum pūccoriya
cennelatu tāṉviḷaintu tiṉaikkatiril kulaicariya
poṉṉaḻakar [nīla] nīlaṉavar puvaṉamatu tāṉilaṅka

The speciality of the forest

Leaving hamlets, groves, forests full of
Kūviḷam, Indian Laburnum, kumkum, red lotus,
And swans and sparrows , they saw

The dancing of the Civaṉ and the thrush
On dangerous branches; sugarcane
And banana ripe with fruits,
Paddyfull grown and ripe have fallen on ragi
In the land where Poṉṉaḻakar has traversed.

இயற்கையின் ஆடல் பாடல்கள்

அரவமிகு மலையிலுள்ள ஆகாயக் கன்னியர்கள்
குரவையிட நீலனவர் குயில்கூவ மயிலாட
தடஞ்சுனையில் தாமரைகள் சந்திரனைப்போல் நின்றாட
படந்து மிதனில்மேகம் பார்த்தழைக்கப்[1] பொழிந்திடவே
வானமதில் கதிரெழும்ப மலையில்மஞ்சி சரிந்தோட
தேனுகந்த மனமுடைய[2] தெய்வகுல நீலன்சொல்வார்
மலையிலுள்ள சிறப்பதைப்போல் வய்யகத்தில் கண்டதில்லை
சிலைவடிவாய்[3] நீலதம்புரான் திருமனது மகிழ்ந்தனராம்

எதிர் ஒலி ஒலிக்கின்ற மலையில் வந்து இறங்கிய ஆகாயக் கன்னியர்கள் ஒருபுறம் குரவையிட்டு மகிழ்ச்சியூட்டினர். அங்கிருந்த சுனைகளிலே தாமரைகள் மலர்ந்து சந்திரோதயம் போல விளங்கின குயில்கள் கூவின. மயில்கள் ஆடின. உலகம் தழைக்குமாறு மேகங்கள் பொழிந்தன மலை முழுவதும் மேகங்கள் சூழ்ந்து நிறைந்தன. இவற்றையெல்லாம் கண்ட நீலன் இந்த மலையின் சிறப்பைப்போல உலகத்தின் வேறு எதையும் நான் கண்டதில்லை என்று கூறி மகிழ்ச்சியடைந்தான்.

மஞ்சு - பனி

சு சொல் 1 பார்த்தளைக்க 2 மனமுடய 3. சிலவடிவாய்.

Iyaṟkaiyiṉ āṭal pāṭalkaḷ

aravamiku malaiyuluḷḷa ākāyak kaṉṉiyarkaḷ
kuravaiyiṭa nīlaṉavar kuyilkūva mayilāṭa
taṭañcuṉaiyil tāmaraikaḷ cantiraṉaippōl niṉṟāṭa
paṭantu mikataṉilmēkam pārttaḻaikkap poḻintiṭavē
vāṉamatil katireḻumpa malaiyilmañci carintōṭa
tēṉukanta maṉamuṭaiya teyvakula nīlaṉcolvār
malaiyiluḷḷa ciṟappataippōl vayyakattil kaṇṭatillai
cilaivaṭivāy nīlatampurāṉ tirumaṉatu makilntaṉarām

Nature's song and dance

Heavenly maids, living in echoing hills,
Performed *kuravai* for Nīlaṉ, the cuckoo song
Peacocks danced. In the cold fountains
The lotus flowered like moon and danced.
On seeing this, the clouds began to pour rain
Godly Nīlaṉ with the honey like aroma said,
"I've never seen such a mountain anywhere",
And his heart overflowed with joy

நீலன் திருமாலின் அழகை உணர்தல்

நாராயணப் பெருமாள் நம்பிரான் கிட்டிணனார்
பூராய மாய்வாழும் புகழந்தர புரமதிலே
உன்னமுள்ள நீலராசன் மாயன்திரு வடிவுகாண
புண்ணியனார் பதிகாணப்பொங்கும் மாமலைதனில் வந்தாரே.

வனத்தின் அழகையெல்லாம் கண்டு மகிழ்ந்த நீலன், நாராயணன், கிருட்டிணன், மாயன் என்றெல்லாம் சிறப்பிக்கப்படுகின்ற திருமாலின் அழகைக் காணவேண்டுமென்ற எண்ணத்தோடு வந்து கொண்டிருந்தான்.

பூராயம் - விருப்பம்.

Nīlaṉ Tirumāliṉ aḻakai uṇartal

nārāyaṇap perumāḷ nampirāṉ kiṭṭiṇaṉār
pūrāya māyvāḻum pukaḻantara puramatilē
uṉṉamuḷḷa nīlarācaṉ māyaṉtiru vaṭivukāṇa
puṇṇiyaṉār patikāṇappoṅkum māmalaitaṉil vantārē

Nīlaṉ understands Tirumāl's beauty

Nārāyaṇaṉ, Perumāl, Nampirān, Kiruṭiṇaṉ
Happily living in famous Tiruvaṉantaram,
Nīlaṉ came to see the figure of Māyaṉ
And get his blessings from the god living in the Mountain.

முனிவர்வாழிடம் அடைதல்

பொங்குமா மலைதனிலே புலைவேட ரிருப்பிடமாம் 145
புகழ்ந்தே மலைக்குறவர் பயிரேற்றும் தெய்வத்தலமாம்

செங்கண்மால் திருவருளால் தெய்வநீலன்[1] வரும்நேரம்
சிவன் கருத்தாகச் சிவமுனிவர் உறைதலமாம்
மடவாளைகள் குதிபாய்ந் தெழுகதலி வனம்நெருங்க
மலையில் குறமடவார் ஒருபுறமாய்[2] விளையாட
கடலானதைப் படைத்துத்திரு வளையானது மிகுத்து
காலால் உலகேழும்[3] ஓரடியால் அளந்தோனை
நினைந்தே அருள்பெறவே தெய்வநீலன் வரும்நேரம்
நிலையாகவே தொலையாமல்[1] வளப்பமொன்று கேளாய்

தெய்வீக உணர்வோடு வந்துகொண்டிருந்த நீலன் மலைக்குறவர் வாழுகின்ற இடத்தை அடைந்தான். அங்கே சிவமுனிவர் பலரும் வாழ்ந்திருந்தார்கள் வாழை முதலியன நிறைந்திருந்தன குறமகளிர் பலர் ஆடிப்பாடி விளையாடினர். ஓரடியால் உலகேழும் அளந்த திருமாலை நினைந்தபடியே வந்து கொண்டிருக்கிறார்கள்.

சு.சொல் : 1 தெய்வனீலன் 2 ஒருபிறமாய் 3 உலகேளும்

Muṉivār vāḻiṭam aṭaital

poṅkumā malaitaṉilē pulaivēṭa riruppiṭamām
pukaḻntē malaikkuṟavar payirēṟṟum teyvattalamām
ceṅkaṇmāl tiruvaruḷāl teyvanīlaṉ varumnēram
civaṉ karuttākac civamuṉivar uṟaitalamām
maṭavāḷaikaḷ kutipāyn teḻukatali vaṉamneruṅka
malaiyil kuṟamaṭavār orupuṟamāy viḷaiyāṭa
kaṭalāṉataip paṭaittuttiru vaḷaiyāṉatu mikuttu
kālāl ulakēḻum ōraṭiyāl aḷantōṉai
niṉaintē aruḷpeṟavē teyvanīlaṉ varumnēram

Reaching the abode of sages

In this great mountain, the dwelling place of hunters,
Mountain *kuṟavar* cultivated the holy land.
By the grace of red eyed Māl Godly Nīlaṉ came
With Civaṉ as a focus. The abode of Civaṉ's sages
Was full of banana
In the mountain *kuravar* women were dancing
And playing. The God who created the sea

And measured the world with one foot,
He remembered, and came to worship for his blessing

குறவர் வாழ்க்கை

குறவர் மலையதிலே மந்தி-குலங்கள் வந்தடைய[2]
குடமான தில்குறவர் மஞ்சி-குடத்தில் இடித்தடைய
திடமாய்க் குறமடவார் திண்டாடி விளையாட
சிறப்பாய் ஒருதரமாய்-அவர்சேர்ந்த மலைதோறும்
வண்டாடும் பூங்குழலார்-கிழங்கெடுப்பார் தின்றுகளிப்பார்
வாழைக் குலை-தேனும்-தினைமாவும் அருந்திடுவார்
கொண்டை முடிஅசைய-தனம்-குலங்கி சிலம்பாட
கூடி யிசைபாடிக்-கும்மி-அடிப்பார் மனங்களிப்பார்
கூந்தப் பனைகள்ளைக் குடிப்பார் கூடிடுவார்
வஞ்ச மறநீலன்-மலை-வனத்தே வரும்நேரம்
வளப்பமத னைக்கண்டு-மன-மகிழ்ந்தார் புகழ்நீலன்

குறவர்கள் நிறைந்து வாழ்ந்த அந்த மலையிலே குரங்குகள் பல குறமகளிரோடு விளையாடித்திரிந்தன. அவற்றைக்கண்டு அஞ்சி குறமகளிர் திண்டாடினர். மேலும், அவர்கள் அந்த மலையிலே இருந்த கிழங்குகளைக் களைந்தெடுத்து உணவாகப் பயன்படுத்தினர் வாழைக்குலை தேன், தினைமா போன்ற பொருள்களைச் சேகரித்து மகிழ்ச்சியோடு உண்பார்கள் மகளிர் பலரும் கூடி இசைபாடி கும்மியடித்து மகிழ்வார்கள் பனைமரத்துக் கள்ளைக் குடித்து கூடி ஆடுவார்கள் அவர்களுடைய மகிழ்ச்சியை எல்லாம் கண்டு களித்தான் நீலன்.

மந்தி - குரங்கு. தனம் - பொன்

சு.சொல் : 1 துலயாமல் 2 வந்தடய

Kuṟavar vāḻkkai

nilaiyākavē tolaiyāmal vaḷappamoṉṟu kēḷāy
kuṟavar malaiyatilē manti-kulaṅkaḷ vantaṭaiya
kuṭamāṉa tilkuṟavar mañci-kuṭattil iṭittaṭaiya
tiṭamāyk kuṟamaṭavār tiṇṭāṭi viḷaiyāṭa
ciṟappāy orutaramāy-avarcērnta malaitōṟum
vaṇṭāṭum pūṅkuḻalār-kiḻaṅkeṭuppār tiṉṟukaḷippār
vāḻaikkulai-tēṉum-tiṉaimāvum aruntiṭuvār
koṇṭai muṭiacaiya-taṉam-kuluṅki cilampāṭa

kūṭi yicaipāṭik-kummi-aṭippār maṉaṅkaḷippār
kūntap paṉaikaḷḷaik kuṭippār kūṭiṭuvār
vañca maṟanīlaṉ-malai-vaṉattē varmnēram
vaḷappamata ṉaikkaṇṭu-maṉa-makiḻntār pukaḻnīlaṉ

Kuṟavar's life

Hear of the prosperity of the never stationary *kuṟavar.*
In this *kuṟavar* mountain, groups of monkeys
Of all types were playing with the pots of *kuṟavar* females,
Who were cornered in their play with them.
Whenever they assembled in groups
The beautiful haired women ate and enjoyed
The roots of all plants, banana fruit, ragi and millet,
They danced with their hair do performing like wise,
And huge dangling breasts tossed about
They sang and performed *kummi* with joyous heart.
They drank white palmyra toddy and assembled.
Blameless and faultless Nīlan came to enjoy
The beauty of the mountain and was happy.

இயற்கையின் வரவேற்பு

வருக்கைக்[1] கனிபழுத்து மடல்வாழை தனில்விழவே
வாழைக்கனி பழுத்துக் கனிந்தாறாய் ஒழுகிடுமாம்
திருவானவ ருறையும் கனசெந்தாமரைத் தடாகம்
செழுங்காவு கள்தோறும் செண்பகப் பூக்களும்
தெய்வகுல நீலன்வர முல்லை சொரிந்திடுமாம்
சேரவே பிச்சிவாச்சிகள் செண்பகப் பூக்களும்
செந்தாமரை முகத்தான் தெய்வப்பெருமாள் புகழ்ந்திடவே[2]
செந்தாமரை வனமானது கடந்து பொய்கையிலே[3]
புகழ்ந்தே சுனையாட புகழ்நீலன் வரும்நேரம்

குறவர்களின் வாழ்க்கையைக் கண்டு களித்த நீலன் அந்தக் கானகத்தைக் கடந்து சுனையில் நீராடப் புறப்படுகிறான் புறப்பட்டுச் செல்லும் போது வழியில் பலாக்கனிகள் பழுத்து வாழையின் மீது சாய்ந்திருந்தன. வாழை மரங்களில் குலைகள்தள்ளி அவை பழுத்து

கசிந்து ஒழுகின. இலக்குமி வீற்றிருக்கின்ற செந்தாமரை நிறைந்த குளங்கள் ஒருபுறம் காட்சியளித்தன. நீலன் வரவை வரவேற்பது போல செண்பகப் பூக்களும் முல்லை மலர்களும், பிச்சிப் பூக்களும் உதிர்ந்தன அத்தகு அழகிய வனங்களையெல்லாம் கண்டு மகிழ்ச்சியோடு வருகிறான்

வருக்கைக்கனி - பலாப்பழம். தடாகம் - குளம். பிச்சி - ஒரு மல்லிகை

க.சொல் : 1. வருக் 2 புகள்ந்திடவே 3 பொய்கயிலே

Iyaṟkaiyiṉ varavēṟpu

varukkaik kaṉipaḻuttu maṭalvāḻai taṉilviḻavē
vāḻaikkaṉi paḻuttuk kaṉintāṟāy oḻukiṭumām
tiruvāṉava ruṟaiyum kaṉacentāmarait taṭākam
ceḻuṅkāvu kaḷtōṟum ceṉpakap pūkkaḷum
teyvakula nīlaṉvara mullai corintiṭumām
cēravē piccivāccikaḷ ceṉpakap pūkkaḷum
centāmarai mukattāṉ teyvapperumāḷ pukaḻntiṭavē
centāmarai vaṉamāṉatu kaṭantu poykaiyilē
pukaḻntē cuṉaiyāṭa pukaḻnīlaṉ varumnēram

Nature's welcome

The ripe jackfruit fell on the banana,
And banana being fully ripe began
To drip profusely and its pulp ran like river.
The tanks full of red lotus, abode of Lakṣhmi,
The jasmine and michelia flowers
Fell on the ground welcoming godly Nīlaṉ
Crossing the tanks of red lotus,
Godly Nīlaṉ came to that place,
Full of praise for that place

பூங்காவில் மகளிரும் நீலனும்

பூங்காவினில் மடவார் புதுப்புனலில் குளித்திடுவார் 175
பாங்காய்ச் சிலமடவார்கூடிப் பாய்ந்தாடுற நேரம்[1]
பகர்வார் புகழ்நீலன் அந்தமாதர் களிடத்தில்
தண்டை புலம்பலம்ப சல்லடங்கள் எடுத்துடுத்து

தடமாய்ப் பனிபொருக புனுகணிந்தார் புகழ்நீலன்
கொண்டை குலுங்கிடவே பச்சக்கொழுந்து குடமாள்
குழைகாதினில் கடுக்கன் திருவரை யானதில்
அரைஞாண்[2] முத்து வடமணிந்தார்
கொத்துமுன்கை[3] யிலங்கிடவே
முகத்தில் வரிகுரியாம் பட்டுடையாம்
உடையழகும் அலங்கார வேல்விழியார்
கண்டாசை யதுகொள்ளவே

நீலன் வருகிறபொழுது அந்தச் சோலையில் ஓடிவருகின்ற புதிய வெள்ளத்தில் மகளிர் கூடி அங்குமிங்குமாகப் பாய்ந்து விளையாடினார்கள். நீலன் காலில் வீரதண்டைகளையும் சல்லடத்தையும் அணிந்தான் மணம் மிகுமாறு புனுகைப் பூசினான் கொண்டையை எடுத்து முடித்து காதில் கடுக்கனை அணிந்தான் இடையில் அரைஞாணும் முத்துவடமும் அணிந்தான் பட்டாடைகளை அணிந்தான். அவனது ஆடை அலங்காரங்களைப் பார்த்த வேல்விழியராகிய மாதர்கள் அவனது அழகைக் கண்டு வியப்புற்றார்கள்.

சல்லடம் - காற்சட்டை

சு.சொல் · 1 னேரம் 2 அரஞாண் 3 முங்கை

Pūṅkāvil makaḷirum nīlaṉum

pūṅkāviṉil maṭavār putuppuṉalil kuḷittituvār
pāṅkāyc cilamaṭavārkūṭip pāyntāṭuṟa nēram
pakarvār pukaḻnīlaṉ antamātar kaḷiṭattil
taṇṭai pulampalampa callaṭaṅkal eṭuttuṭutu
taṭamāyp paṉiporuka puṉukaṇintār pukaḻnīlaṉ
koṇṭai kuluṅkiṭavē paccakkoḻuntu kuṭamāḷ
kuḻaikātiṉil kaṭukkaṉ tiruvarai yāṉatil
araiñāṇ muttu vaṭamaṇintār
kottumuṉkai yilaṅkiṭavē
mukattil varikuriyām paṭṭuṭaiyām
uṭaiyaḻakum alaṅkāra vēlviḻiyār
kaṇṭācai yatukoḷḷavē

Women and Nīlaṉ in the park

In the park women started bathing
In fresh water and a few girls in groups

Started dancing. Famed Nīlaṉ
In full view of the womenfolk
Wore the anklet, shorts, smeared himself
With Civet and making the hair do dance,
Put on the ear stud and tied the gold
Waist sash and pearl garlands.
He wove the silk dress and lined his face.
On seeing bedecked and bejewelled Nīlaṉ,
Arrow - eyed women looked at him with deep desire.

மகளிர் செயல்

அழகான புகழ்நீலன் வடிவானார் அழகானார்
ராசா வடிவாகிப் புகழானார் புகழ்நீலன்
நளினமய்யல் மடவார் சிலவாகிய மடவார்கள்
மய்யலானது கொள்ளவே மதிமயங்காடி வாறார்
மானார் களித்தாடும் சுனைவனமானது நோக்கி[1]
வரவே சிலைமடவார் சுற்றத்தார் சுனையாடுவாரே.

அரசகோலத்தில் விளங்கிய நீலனைக் கண்ட மகளிருள் சிலர் மதிமயங்கி அவன்மீது மையல் கொண்டனர். சில மகளிர் மகிழ்ச்சியோடு சுனையில் ஆடத்தொடங்கினர்.

க.சொல் : 1 னோக்கி

Makaḷir ceyal

aḻakāṉa pukaḻnīlaṉ vaṭivāṉār aḻakāṉār
rācā vaṭivākip pukaḻāṉār pukaḻnīlaṉ
naḷiṉamayyal maṭavār cilavākiya maṭavārkaḷ
mayyalāṉatu koḷḷavē matimayaṅkāṭi vāṟār
māṉār kaḷittāṭum cuṉaivaṉamāṉatu nōkki
varavē cilaimaṭavār cuṟṟattār cuṉaiyāṭuvārē

Women's Action

Handsome, famous and well-shaped,
Royal figured Nīlaṉ began to see

Those women enamoured of him,
Infatuated with him to the point of
Losing their mind. Some began
Dance and bathe in the mountain

கன்னியரும் நீலனும்

11. *விருத்தம்*

கண்டனர் நீல ராசன் கன்னிமார் தன்னை யீன்று
கொண்டதோர் காத லாலே குறக்குலக்[1] கன்னி யர்கள்
அண்டையில் நடந்து பய்ய அருவரை வழிய தாக
மண்டல குழலார் கூடி வாரசுனை சொல்லுவாரே

மலைப்பகுதியில் வாழும் குறக்குலக் கன்னியர்கள், மலை வழிகளில் நடந்து அருவியை நோக்கி வருகிறார்கள். அவ்வாறு கூட்டங் கூட்டமாய்க் கூடி வருகின்ற கன்னியர்களை நீலன் காணுகின்றான்

க சொல் : 1 கோரகுல

Kanniyarum nilanum

viruttam kantanar nila racan kannimar tannai yinru
kontatōr kāta lālē kurakkulak kanni yarkal
antaiyil natantu payya aruvarai valiyataka
mantala kulalār kūti vāracunai colluvārē

Nīlan and Virgins

Kuravar women madly in love with Nīlan
Walked by his side gently and went to the fountain
To bathe. Nīlan saw such women.

கன்னியர் நீராடுதல்

12 *வாழ்வியல்[1] சொல்லும் நேரம் மங்கைமார் ஒன்று கூடி*
தாழவே துயிலை வைத்துத் தாமரைக் கயத்தில் சாட
ஆழவே முங்கி கொங்கை ஆயிழைமார்க ளாடும்
வேழயம் தன்னில் மெல்ல-நீலசுவாமி-மெல்லவே சொல்லுவாரே.

மலையிலுள்ள சுனையை அடைந்த அக்கன்னியர்கள் தங்கள் தங்கள் ஆடைகளையெல்லாம் களைந்து கரையிலே வைத்துவிட்டு, தாமரைச் சுனையிலே இறங்கி நீரில் மூழ்கி விளையாடத் தொடங்கினார்கள் அவர்களோடு நீலன் பேசத் தொடங்கினார்

சு சொல் : 1 வாள்வியல்.

Kaṉṉiyar nīrāṭutal

vāḻviyal collum nēram maṅkaimār oṉṟu kūṭi
tāḻavē tyilai vaittut tāmaraik kayattil cāṭa
āḻavē muṅki koṅkai āyiḻaimārka ḷāṭum
vēḻayam taṉṉil mella-nīlacuvāmi-mellavē colluvārē

Virgins bathe

At the right time of life virgins assembled,
After undressing, they bathed in lotus fountain, .
Deep diving with their attendant women folk.
Seeing them Nīlaṉ began to speak.

நீலன் மகளிருடன் ஆடல்

13. சொல்லவே நீராடும் பொய்கையி[1] லேதான்
சேரக் குளித்து விளையாடு வாராம்
வல்லமுடி யாடவே தனமாட
மார்பினில் முத்துவட மாலை யாட
கொங்கை குலுங்க யிடைதுவண் டாட
கோலமயில் போல பெண்க ளாட
பூங்கா வனமும் பொங்குமா மலையில்
பொன்னரிய வாவி தன்னிலே மின்ன
மெய்த்து மனங்குளிர்ந்தே[2] நீல ராசன்
மேனிநல் லாருட சித்திரம்[3] கண்டு
கன்னி குமுக்குகளுந் தொக்கு மின்ன
கய்யிலாண் டம்மானை ஆடவே பெண்கள்

முத்துவடம் ஆடவும், கூந்தல் விரியவும், தனம் குலுங்கவும், இடை துவளவும் மயில் போல நீரிலே மூழ்கி மூழ்கி விளையாடிக் கொண்டிருந்த மங்கையரைக் கண்டான் நீலராசன். அவர்கள் ஆடுவதைக் கண்டு மனமகிழ்ச்சியடைந்த நீலராசன், இன்பத்திலே

மூழ்கி தானும் அம்மானை ஆடிக்கொண்டிருந்த அம்மகளிரோடு கலந்து விளையாடத் தொடங்கினான்.

குமுக்கு - கூட்டம்

க சொல் . 1 பொய்கயிலே 2 மனங்குளிந்தே 3 சித்திரம்ங்

Nīlaṉ makaḷiruṭan āṭal

collavē nīrāṭum poykaiyi lēṭāṉ
cērak kuḷittu viḷaiyāṭu vārām
vallamuṭi yāṭavē taṉamāṭa
mārpiṉil muttuvaṭa mālaiyāṭa
koṅkai kuluṅka yiṭaituvaṇ ṭāṭa
kōlamayil pōla peṇkaḷāṭa
pūṅkā vaṉamum poṅkumā malaiyil
poṉṉariya vā(ḷ)vitaṉṉilē miṉṉa
meyttu maṉaṅkuḷirntē nīla rācaṉ
mēṉinal lāruṭa cittiram kaṇṭu
kaṉṉi kamukkukaḷun tokku miṉṉa
kayyilāṉ ṭammāṉai āṭavē peṇkaḷ

Nīlaṉ bathes with the women

In the bathing spot of the tank
Nīlaṉ played with the bathing women
The spread hair of the women swung here and there,
Hiding the pearl garland in their chest,
Their breasts shaking, waist falling limp,
Resembling dancing peacocks.
The whole park began shining in the golden light.
Happy at heart Nīlarācaṉ, seeing
The beauty of feminine anatomy joined them
And played with them the game of *Ammāṉai*

வாவியில் கயல்கள்

வன்னஞ் சிறந்த கதலித் துடையாம்[1]
வந்தாடும் இன்சுனையில் சுனைமீன்கள்

மண்டி மகரம் கரையிலே சாட
விறாலுகள் பாய வாளைகள் துள்ள
அருஞ்சுனை வேல்விழி யார்சுனை யாட
அருங்கயம் தன்னிலே கயலிகள் சேர

இவ்வாறு குறக்குலக் கன்னியர்கள் நீராடி மகிழ்ந்த அக்குளத்தில் சுனை மீன்கள், நிறைந்திருந்தன. அவற்றுள் மகரங்கள் எனப்பட்ட மீன்கள் கரையோரம் ஒதுங்கிக் கரையில் சாடின. விறால் மீன்களும், வாளை மீன்களும் அச்சுனையில் இடையிடையே துள்ளிக் குதித்து ஆடித் திரிந்தன

மகரம் - சுறாமீன். விரால் - வரால் - ஒரு மீன் கயம் - குளம் கயல் - கெண்டை மீன்.

சு சொல் : 1 துடயாம்

Vāviyil kayalkaḷ

vannañ ciranta katalit tuṭaiyām
vantāṭum incunaiyil cuniminkaḷ
manṭi makaram karaiyilē cāṭa
virālukaḷ pāya vāḷaikaḷ tuḷḷa
aruñcunai vēlvili yārcunai yāṭa
aruṅkayam tannilē kayalikaḷ cēra

Fishes in the tank

In the fountain full of fine coloured
Banana like bathing thighs,
A number of fishes came to play.
Plenty of sharks were on the bank
Virāl, Vaḷai and other fishes jumped to and fro
Sharp arrow eyed women were bathing
A number of *kayal* fish came near

மகளிர் நீலனைக் காணுதல்

தாமரை வண்டுகள் ஓலங்கள் பாட
சங்குகள் முத்து இலங்கிட வேதான்
பூஞ்சுனைத் தாரயில் பூக்கள் விரிய
பூவைப் பறித்து விளையாடு வாராம்

வான்சுனைப் பெண்கள் சென்றுநீ ராட
மங்கள ஞானக் கண்ணாலே கண்டார்
ஆடுஞ் சுனையில் குளித்திடும் நேரம்
அன்னம் போலேவரும் நீலனைக் கண்டார்
கூடிக் குலாவி விளையாடும்[1] நேரம்
கொற்றவன்[2] தன்முகம் பார்த்தா ளொருத்தி

அத்தாமரைத் தடாகத்திலே வண்டுகள் ரீங்காரம் செய்ய, முத்துக்களும், சங்குகளும் ஒளிவிட்டு விளங்கின. அவற்றினிடையிலே நீராடிய மகளிர் தங்களுக்குள் கூடிக்குலவி விளையாடியபடியே தங்களிடையிலே அன்னத்தைப் போலவரும் நீலனையும் நோக்கி நோக்கி உள்ளம் மகிழ்ந்தார்கள்.

ஓலம் - ஒலி கொற்றவன் - அரசன்

சு.சொல் : 1 விளயாடும் 2 கொற்றவந்

Makaḷir nīlaṉaik kāṇutal

tāmarai vaṇṭukaḷ ōlaṅkal pāṭa
caṅkukaḷ muttu ilaṅkiṭa vēṭāṉ
pūñcuṉait tārayil pūkkaḷ viriya
pūvaip paṟittu viḷaiyāṭu vārām
vāṉcuṉaip peṇkaḷ ceṉṟunī rāṭa
maṅkaḷa ñāṉak kaṇṇālē kaṇṭār
āṭuñ cuṉaiyil kuḷittiṭum nēram
aṉṉam pōlēvarum nīlaṉaik kaṇṭār
kūṭik kulāvi viḷaiyāṭum nēram
koṟṟavaṉ taṉmukam pārttā ḷorutti

Women eyeing Nīlaṉ

Lotus bees buzzed sweetly,
Conch and pearls shone bright,
In the cold fountain, flowers blossomed
They plucked and played with the flowers
In heavenly fountain women bathed
And saw him (lustfully) with the inner eye
They ogled with deep desire,

At Nīlaṉ who was like a swan.
One particular woman wistfully saw
The face of Nīlaṉ during play time.

ஒருத்தியின் உள்ளம்

உடுத்த துயிலைக் கரையிலே வைத்து
ஊரு[1] வளப்பங்கள் பேசவே பெண்கள்
தொடுத்த சரம்விழிக்[2] கண்ணாலே பார்த்து
தோகையர் மேல்சரம் பட்டு உருவி
கற்பழி யாமல் மலையி லிருந்தோம்
கானகந் தன்னிலே ஆடவர் காண
மெய்யுங் குலைந்து மனமும் உருகி
மெல்லிநல் லாள்பொன்னும் நீலனைக் கண்டாள்

நீலனைக் கண்டு உள்ளம் மயங்கிய ஒருத்தி ஆடையைச் சுனையின் கரைமீது வைத்துவிட்டு நீரிலே இறங்கி ஊர்க் கதை பேசத் தொடங்கினாள். அப்போது நீலனின் கண்ணாகிய அம்பு பெண்கள் மேல் பட்டது. அவள் 'இத்தனை நாள் கற்பழியாமல் இருந்தோம் இன்று ஆடவர் கண்டனரே என்று மனம் உருகி நீலனைப் பார்த்தாள்.

சு.சொல் : 1 உறு 2. விளி

Oruttiyiṉ uḷḷam

uṭutta tuyilaik karaiyilē vaittu
ūru vaḷappaṅkaḷ pēcavē peṇkaḷ
toṭutta caramviḻik kaṇṇālē pārttu
tōkaiyar mēlcaram paṭṭu uruvi
karpaḻi yāmal malaiyi liruntōm
kāṉakan taṉṉilē āṭavar kāṇa
meyyuṅ kulaintu maṉamum uruki
mellinal lāḷpoṉṉum nīlaṉaik kaṇṭāḷ

The heart of one particular woman

The undressed attire remaining on the bank,
The womanly eyes meant for gossip,
Turned into sharp arrow aimed at Nīlaṉ,

Each and every one eyeing him with deep desire,
Without loss of virginity, who
Escaped the look of all other men folk
And Now, got confused and weak physically

மகளிர் ஆடை அணி அணிதல்

பட்டு வட்டம் துப்பட்டி சேலை
பய்ய அரையில் சாத்தினார்[1] பெண்கள்
கட்டுடன் சித்தாடை சேலைகண் டாங்கி
கய்யார வேஅங் கெடுத்தா ளொருத்தி
மன்னவன் கண்ட சதுரத் துடையை[2]
மறைய உடுத்த விமான நாயகிகள்[3]
உதைத்துக் கிறுகிளிங்கும் அணிகள்
உள்கெட்டுக் கொண்டாடி குழல்செங்கு[4] தாலி
யெடுத்தணிந்தார் குழைகாது தோடுயெங்கு மிலங்கவே
ரெத்தினப் பொட்டிட்டு பாம்படம் பீலிமயிலடி
தண்டட்டி யைம்பொன்வடம் தண்டைக்கால் மோதிரம்
அம்பர மாகவே செம்பொன்மட வார்அணிந்தார்
அணிந்தயிப் பணியது ஆபரணம சித்தார்
வாக்கும் நோக்குமுள்ள[5] நீலனைக் கண்டு
மங்கையர் சேர மய்யலாகி நின்றார்
ஆக்க[6] முடனீல ராசாவைக் கண்டு
அன்ன நடையார்கள் அன்புகொண் டாரே.

மீண்டும் மீண்டும் நீலனை நோக்கிய அனைவரும் தங்கள் நீராடலை முடித்து ஒவ்வொருவராகத் தங்கள் தங்கள் பட்டாடைகளையும் சேலை சிற்றாடை கண்டாங்கி போன்ற அவரவர் ஆடைகளையும் எடுத்து மிகநிதானமாக அணிந்தார்கள். ஆடை அணிந்த பிறகு தாலி, தோடு, பொட்டு, பாம்படம், பீலி, மயிலடி, வடம், தண்டை, மோதிரம் போன்ற அணிகளையும் எடுத்து அணிந்தவர்களாய் நீலனையே நோக்கி மயங்கி நின்றார்கள். அவனிடம் அன்பு கொண்டார்கள்.

பீலி - மாதர் காலணியில் ஒன்று. மயிலடி - மாதர் காலாழியினொன்று. அம்பரம் - பரவெளி.

சு சொல் : 1 சாற்றினார் 2 துடயை 3 நயவிகள் 4. குளல்செங்கு 5 னோக்குமுள்ள 6 ஆற்க்க

Makaḷir āṭai aṇi aṇital

paṭṭu vaṭṭam tuppaṭṭi cēlai
payya araiyil cāttiṉār peṇkaḷ
kaṭṭutaṉ cittāṭai cēlaikaṉ ṭāṅki
kayyāra vēaṅ keṭuttā ḷorutti
maṉṉavaṉ kaṇṭa caturat tuṭaiyai
maṟaiya uṭutta vimāṉa nāyakikaḷ
utaittuk kiṟukiḷiṅkum aṇikaḷ
uḷkeṭṭuk koṇṭāṭi kuḻalceṅku tāli
yeṭuttaṇintār kuḻaikātu tōṭuyeṅku milaṅkavē
rettiṉap poṭṭiṭṭu pāmpaṭam pīlimayilaṭi
taṇṭaṭṭi yimpoṉvaṭam taṇṭaikkāl mōtiram
ampara mākavē cempoṉmaṭa vāraṇintār
aṇintayip paṇiyatu āparaṇama cittār
vākkum nōkkumuḷḷa nīlaṉaik kaṇṭu
maṅkaiyar cēra mayyalāki niṉṟār
ākka muṭaṉīla rācāvaik kaṇṭu
aṉṉa naṭaiyārkal aṉpukoṇ ṭārē

Women dressing themselves

Round piece of silk, blanket and saree
They put around their hip,
Pettycoat and *kaṇṭāṅki* saree
Were taken by one woman.
Heavenly women dressed to hide
The thighs already seen by Nīlaṉ
They started wearing jewels that make sound,
Caṅkutāli, earstud, hanging and shining
Applying kumkum with precious stone,
Pāmpaṭam, Pīli, mayilaṭi, taṇṭai
Gold chain and ẉore them all in the open
After wearing all these, they ogled him
Full of love and lust and the swan like women
Were infatuated with Nīlarācaṉ

மையலால் நீலனைப் புகழ்தல்

வாடாத செந்தா மரைமுகம் கண்டு
        வாரானோ நம்மைச் சேரானோ யென்பார்
வாரானோடி நம்மைச் சேரானோ யென்பார்
        கண்டாசை கொண்டந்த கன்னியர் கூடி
கண்ணான தோர்நீல ராசாவைக் கண்டு
        காம னோசிவ னோநளன் தானோ
நாரா[1] யணனோ சிவன்திரு மைந்தனோ
        நான்முக னோவடி வேலவன் தானோ
பூராய மாய்நீல ராசாவைக் கண்டு
        பூவையர் கூடிநின் றேதுரை சொல்வார்
இந்திரனோ வானத்துச் சந்திரனோ யென்பார்
        எங்குமெய்க் கும்புகழ்[2] சங்குவா ரணனோ[3]
அந்தப் படிசொல்லி நிற்கின்ற[4] நேரம்[5]
        அல்லோரும் நிற்க அதிலொரு தோழி

அன்று மலர்ந்த செந்தாமரை மலர்போல இருக்கின்ற நீலனின் முகத்தினைப் பார்க்கிறார்கள். இவன் வந்து நம்மைச் சேரமாட்டானோ என்று ஏங்குகிறார்கள். இவன் மன்மதனோ, சிவபெருமானோ, நளனாக இருப்பானோ, நாராயனனோ, சிவபெருமானின் மகன் வடிவேலவனாக இருப்பானோ, நான்முகனோ என்றெல்லாம் கூறி மயங்குகிறார்கள். மேலும் சிலர் இவன் இந்திரனோ, வானத்துச் சந்திரனோ, சங்கை ஏந்திய திருமாலோ என்றெல்லாம் கூறி மயங்கினர்

பூராயம் - ஆராய்வி; விசித்திரம்; விருப்பம்.

சு.சொல் : 1 னாரா 2 புகள் 3. ரனனோ 4 நிற்க்கிற 5 னேரம்

Maiyalāl nīlaṉaip pukaḻtal

vāṭāta centā maraimukam kaṇṭu
        vārāṉō nammaic cērāṉo yeṉpār
vārāṉōṭi, nammaic cērāṉō yeṉpār
        kaṇṭācai koṇṭanta kaṉṉiyar kūṭi
kaṇṇāṉa tōrnīla rācāvaik kaṇṭu
        kāma ṉōciva ṉōnaḷaṉ tāṉō
nārā yaṇaṉā civaṉtiru maintaṉō

nānmuka nōvaṭi vēlavan tānō
pūrāya māynīla rācāvaik kaṇṭu
pūvaiyar kūṭinin ṟēturai colvār
intiranō vānattuc cantiranō yenpār
eṅkumeyk kumpukaḷ caṅkuvā raṇanō
antap paṭicolli niṟkinṟa nēram
allōrum niṟka atiloru tōḻi

Praising Nīlan out of love

Seeing a face like the never dying lotus,
They said, "will he not unite bodily with us?
Won't he come to be united with us?"
With such desire the women assembled
And seeing a rare person, Nīlarācan,
They wondered whether here was Manmata,
Or Civan or Naḷan or Nārāyaṇan or
Son of Civan or four faced Pirammā or Vaṭivēl
Researching about Nīlan, they stood together,
And asked if he was Intiran or heavenly Cantiran
Or ever famed conch holding Tirumāl
When they were discussing thus,
One particular lady spoke.

ஒரு பெண்

கருத்து நானறிந்' தேனடி பெண்காள்
கன்னியரே சொல்லக் கேளும்நீர் பெண்கள்
திருத்தமுடன் செம்பியன் சோழன் பெற்ற
தெய்வ குலநீல தம்புரா னென்றார்

நாரா யனனும் அவனேடி[2] பெண்ணே
நல்ல திருநீல கண்டனும் அவனே
பூரிய மாய்நல்ல பேயோடே ஆடும்
பெருமா னவனேடி பேதை நல்லாள் 40

உண்மையை உணர்ந்தாள் ஒரு தோழி. மற்ற தோழியரைப் பார்த்து, தோழியரே! இவன் செம்பியனாகிய சோழ மன்னன் பெற்ற நீலதம்புரான் ஆவான். நாராயணனும் அவனே! திருநீலகண்டனாகிய சிவபெருமானும் அவனே! சிறப்பாகப் பேயோடு ஆடக்கூடிய பெருமானும் அவனே! என்று சொல்லி ஐயத்தைப் போக்கினாள்.

சு.சொல் 1 னாநறிதேனடி 2 அவநெடி

Orupeṇ

karuttu nāṉaṟin tēṉaṭi peṇkāḷ
kaṉṉiyarē collak kēḷumnīr peṇkaḷ
tiruttamuṭaṉ cempiyaṉ cōḻaṉ peṟṟa
teyva kulanīla tampurā ṉeṉṟār
nārā yaṇaṉum avaṉēṭi peṇṇē
nalla tirunīla kaṇṭaṉum avaṉē
pūriya māynalla pēyōṭē āṭum
perumā ṉavaṉēṭi pētai nallāḷ

One woman speaks

"Oh! womenfolk! I have found out
Who he is! listen! Oh! virgins
He is the son begot by perfect chembian Cōḻar
He is Nārāyaṇaṉ; he is Nīlakaṇṭaṉ.
He is the Lord who can dance with devils too".

அனைவரும் நீலனையடைதல்

என்றங்கள் நீலனைக் கண்டங் கொருத்தி
யேந்திழை மார்ஓ ரிடத்திலே கூடி
பூம்பொழில்கள்[1] பொழியும் பொங்குமா மலையில்
பூஞ்சுனை விட்டங் காவிலே வரவே
மண்டலம் பூங்குழ லார்கள் கூடி
மன்னன் நீலராசன் முன்பில்வந் தாரே.

பூவையணிந்த கூந்தலையுடைய அப்பெண்கள் பூஞ்சோலைகள் நிறைந்துள்ள மலையையும், சுனைகளையும் கடந்து மன்னனாகிய நீலராசன் இருக்குமிடத்தை அடைந்தார்கள்.

சு.சொல் : 1 பூம்பொளிகள்

Aṉaivarum nīlaṉaiyaṭaital

eṉṟaṅkaḷ nīlaṉaik kaṇṭaṅ korutti
yēntiḻai mārō riṭattilē kūṭi
pūmpoḻilkaḷ poḻiyum poṅkumā malaiyil
pūñcuṉai viṭṭaṅ kāvilē varavē
maṇṭalam pūṅkuḻa lārkaḷ kūṭi
maṉṉaṉ nīlarācaṉ muṉpilvaṉ tārē

All of them go to Nīlaṉ

So said one woman in the assembly of virgins
And all of them grouped in one place
Leaving the beautiful fountained groves
And the fertile mount, all of them
Gathered before Nīlarācaṉ

மகளிர் தங்களுக்குள்ளே

யென்றுமந்த கன்னியர்கள் இயல்நீல ராசனுக்கு
குன்றையொத்த[1] தனமடவார் கூடிநின்று ஏதுசொல்வார்
பரமசிவன் திருமகனோ பாராளும் ராசாவோ
அரவமது கடலடைத்த ஆதிநாரா[2] யணரோ
அன்புகொண்டு நீலனுக்கு ஆசைமய்ய லாகிநின்றார்
எம்பெருமான் தன்னருளால் என்னைமணம் செய்யாரோ
மாரிறுகத் தனம்நெருங்க வந்துமய்யல் தீரானோ
யெதிரிகைக்கு நீலராசன் இன்றுவந்து சேரானோ
கட்டழக[3] நீலனுக்குக் கண்டாசை கொண்டுநிற்க
வட்டதிரு முகத்தோடே மதிமுகத்தைச் சேரானோ

நீலராசனைவிடக் குறைந்த அளவு பொன்னணிகள் அணிந்திருந்த அம்மகளிர் கூட்டமாக நின்று, இவன் பரமசிவன் திருமகனோ! இந்த உலகத்தை ஆட்சி செய்யும் மன்னனோ! திருப்பாற்கடலிலே பாம்பணையின் மீது பள்ளி கொண்ட நாராயணனோ என்றெல்லாம் பேசிக் கொண்டே நீலன்மீது மையல் கொண்டு நின்றார்கள் இறையருளால் தன்னை மணக்க மாட்டாரோ! மணம்முடித்து அருகிலே வந்து, கட்டித்தழுவி என் மையலைப் போக்க மாட்டாரோ! என்றெல்லாம் எண்ணியவாறே கட்டழகன் நீலனைப் பார்த்துப்பார்த்து உள்ளம் மகிழ்ந்தவர்கள் பலராவர்

சு.சொல் : 1 குன்றயொத்த 2 ஆதினாரா 3. கட்டளக

Makalir taṅkaḷukkuḷḷē

yeṉṟumanta kaṉṉiyarkaḷ iyalnīla rācaṉukku
kuṉṟaiyotta taṉamaṭavār kūṭiniṉṟu yētucolvār
paramacivaṉ tirumakaṉō pārāḷum rācāvō
aravamatu kaṭalaṭaitta ātinārā yaṇarō
aṇpukoṇṭu nīlaṉukku ācaimayya lākiniṉṟār
emperumāṉ taṉṉaruḷai eṉṉaimaṇam ceyyārō
māriṟukat taṉamneruṅka vantumayyal tīrāṉō
yetirikaikku nīlarācaṉ iṉṟuvantu cērāṉō
kaṭṭaḷaka nīlaṉukkuk kaṇṭācai koṇṭuniṟka
vaṭṭatiru mukattōṭē matimukattaic cērāṉō

Women among themselves

The women with much less jewels than Nīlaṉ,
And women with plump breasts asked,
"Whether he was Paramacivaṉ's son,
Or a king reigning the world
Whether he was Ātinārāyaṇaṉ sleeping
On the snakebed in the sea of milk?"
They were madly in love with him
And everyone desired that Nīlaṉ would marry her
And cure her love sickness by tightly embracing her
And crushing her breast in the process,
Will not Nīlaṉ join me to-day?
In such manner every woman was after Nīlaṉ.

மேலும் சிலர் உள்ளம்

மாமலையில்[1] நீராடி வந்துதெய்வ மடவார்கள்
பூமணக்கும் குழல்சரியப் பொருந்தானோ யென்பாரும்
கொண்டைமுடி[2] தனமசையக் கூடிநம்மைச் சேரானோ
அண்டையிலே நீலராசன் அணையானோ வென்பாரும்
கெண்டய விழிமடவார் காதல்கொண்டு வாடினரே.

சுனைநீராடி, மணம் வீசும் கூந்தல்சரிய நான்நிற்கும்போது நீலராசன் என்னை நெருங்கி வந்து, நிலவு போன்று குளிர்ச்சி பொருந்திய என் முகத்தோடு தன் வட்டமுகத்தைச்

சேர்த்து என்னை அணைத்துக் கொள்ள மாட்டாரோ என்றெல்லாம் எண்ணி எண்ணி, சொல்லிச் சொல்லி கெண்டைமீன் போலும் விழியுடைய பெண்கள் நீலராசன் மீது காதல்கொண்டு வாடி நின்றார்கள்

குழல் - கூந்தல்.

சு.சொல் : 1 மாமலயில் 2 கொண்டமுடி

Mēlum cilar uḷḷam

māmalaiyil nirāṭi vantuteyva maṭavārkaḷ
pūmaṉakkum kuḻalcariyap poruntāṉō yeṉpārum
koṇṭaimuṭi taṉamacaiyak kūṭinammaic cērāṉō
aṇṭaiyilē nilarācaṉ aṇaiyāṉō veṉpārum
keṇṭaya viḻimaṭavār kātalkoṇṭu vāṭiṉarē

The heart of some other women

"Will he not put moonlike face on my round face?"
Heavenly women who came after bathing
Wanted him to fall on them disturbing their hair do
"Will he not join us moving his hair on us
Oh! will he not come near for us to embrace tight"
Fisheyed women thus suffered from love sickness.

ஒருத்தி மருந்திட்டு மயக்குவோம் எனல்

வெந்தெரிந்த தீயதிலே வெள்ளம்கோரி யிடவேவந்தாய்
வந்தார்காண் நம்முடைய மய்யல்தீர்ந்தோ மென்றிருந்தோம்
மயக்கவந்த தல்லாமல் மருகவந்த தல்லவென்பார்
இசக்கியுடன் பிறந்தவர்க்கு எங்குமில்லா குணங்களுண்டு
அயக்கமனம் வருகுதில்லை அழகுபொன்னும் நீலனைத்தான்
மயக்கமருந் திடுவோமடி மலையில்வாழும்[1] மடவாரே.

இதுவரை எரிந்து கொண்டிருந்த வெப்பத்தைத் தணிக்க வெள்ளம் போல் குளிர்ச்சி தருவதற்காக வந்திருக்கிறார். அதனால் நமது விருப்பம் நிறைவேறிவிட்டது என்று எண்ணி இருந்தோம். மயக்கம் தருவதற்காக வந்தாரே தவிர நம்மை அணைவதற்காக வரவில்லை என்று மனம் நொந்தார்கள் இசக்கியுடன் பிறந்த நீலராசனுக்கு எங்கும் இல்லாத குணங்கள் உண்டு என்பதை அறிவோம் ஆனாலும் அழகு பொருந்திய, நீலனை மயக்கவும்

மனம் வரவில்லை. மலைநிலத்தில் வாழும் பெண்களே! நீலனை மருந்துவைத்து மயக்குவோம் வாருங்கள் என்று ஒருத்தி கூறினாள்.

வெள்ளம் - நீர். அயக்க - மறக்க.

சு.சொல் . 1 மலயில்வாளும்

Orutti maruntiṭṭu mayakkuvōm eṉal

venterinta tīyatilē veḷḷamkōri yiṭavēvantāy
vantārkāṉ nammuṭaiya mayyaltīrntō meṉṟiruntōm
mayakkavanta tallāmal marukavanta tallaveṉpār
icakkiyuṭaṉ piṟantavarkku eṅkumillā kuṇaṅkaḷuṇṭu
ayakkamaṉam varukutillai aḻakupoṉṉum nīlaṉaittāṉ
mayakkamarun tiṭuvōmaṭi malaiyilvāḻum maṭavārē

One woman's advice to mesmerize Nīlaṉ with medication

He has come to put out the burning fire of love
With water. We thought our amor would be
Satiated by his visit. He has come to mesmerize us
And not to embrace with love
The one born with Icakki has all the rare qualities
It's difficult to think of forgetting Nīlaṉ.
Oh! hillside women! Let us bewitch him by medication

மற்றொருத்தி நீலனை மயக்கமுடியாது எனல்

யென்றொருத்தி சொல்லுமுன்னே யிலக்கணங்க ளறிந்தவண்டி
அன்றுமந்த பெண்களுக்கு அதிலொருத்தி[1] யேதுசொல்வாள்
கயிலாச பருவதத்தைக் கண்ணாலே பார்த்தவண்டி
நயினா ருடன்களிக்கும் நமன்கணக்கும் அறிந்தவண்டி[2]
சிவன்திருமா லயன்மகிழச் சென்றுதிரு நடனமாடி

மருந்துவைப்போம் என்று ஒருத்தி கூறவும், மற்றொருத்தி கூறுகிறாள். தோழியே! நீலனோ கயிலாய மலையைக் கண்டவன். சிவனாருடன் இருக்கும் எமனின் கணக்கினையும் அறிந்தவன்; சிவனுந் திருமாலும் அயனுமாகிய அனைவரும் மகிழ நடனமாடி அளவிலாப் பெரும்பொருளைப் பரிசாகப் பெற்றவன்.

நயினார் - ஆண்டவன். நமன் - இயமன்.

சு.சொல் : 1. அதிலொதி 2 அறிந்தவேணடி

Maṟṟorutti nīlaṉai mayakkamuṭiyātu ėṉal

yeṉṟorutti collumuṉṉē ilakkaṇaṅka ḷaṟintavaṇṭi
aṉṟumanta peṇkaḷukku atilorutti yētucolvāḷ
kayilāca paruvatattaik kaṇṇālē pārttavaṇṭi
nayiṉā ruṭaṉkaḷikkum namaṉkaṇakkum aṟintavaṇṭi
civaṉtirumā layaṉmakiḻac ceṉṟutiru naṭaṉamāṭi

Another woman says the opposite

Before she could finish another said
That Nīlaṉ knew the grammar of everything
He is the one who has seen Kailash
He knows the place of yamaṉ who lives with god
He is the one who danced
Pleasing Civaṉ, Tirumāl and Ayaṉ

மேலும் நீலன் திறம்

கனவரிசை பெற்றவண்டி கனசூட்சக் காரனடி
அனவரத காலமெல்லாம் அழியாத நீலனடி
யிறவாத பொருளான யிசல்நீல ராசனுக்கு
மறவாத உபதேசம் மந்திரங்கள் மெத்தஉண்டு

இவைமட்டுமா? நீலன் பெருஞ்சூட்சமறிந்தவன். இறப்பு என்பதே இல்லாதவன். பல வரங்களையும், உபதேசங்களையும் பெற்றவன்; மந்திரங்களைக் கற்றவன்.

சூட்சம் - தந்திரம்; நுட்பம்; யூகம்; சூத்திரம். அனவரதம் - எப்பொழுதும்.

Mēlum Nīlaṉ tiṟam

kaṉavaricai peṟṟavaṇṭi kaṉacūṭcak kāraṉaṭi
aṉavarata kālamellām aḻiyāta nīlaṉaṭi
yiṟavāta poruḷāṉa yicalnīla rācaṉukku
maṟavāta upatēcam mantiraṅkaḷ mettauṇṭu

Some more talent of Nīlaṉ

With numerous achievements, highly scheming
And tricky Nīlaṉ has no death for all eternity

Such an immortal Nīlarācaṉ has
A huge fund of teachings and Manthras.

மேலும் சில காரணங் கூறுதல்

அந்தமுள்ள நீலனுக்கு அடங்காத வரமுண்டு
தென்னாடு வடனாடு தேசமது[1] அளந்தவண்டி
பொன்னரிய மலைவளப்பம் புவனமெல்லாம் அறிந்தவண்டி
நீலகண்ட சொக்கரிட்ட நிலமையுள்ள நீலனுக்குக்
கோலம்பதி னெட்டுமுண்டு[2] கூண்டமுறைத் தோழியுண்டு
மாயம்பல தொழிலுமுண்டு மாயமலை வித்தையுண்டு
காயம்பொறி கலக்கிடுவார் கட்டழக நீலனைத்தான்
மருந்திடுவோ மென்றுசொன்ன வார்த்தையது விட்டுவிடு
யிருந்தடிக்குள் சுரூபமாறி யெங்குமொன்றாய்க்[3] கலந்திருப்பார்

தென்னாடு, வடநாடு முழுவதையும் அறிந்தவன்; உலகங்களையும் அவற்றின் மலை வளப்பங்களையும் அறிந்தவன். மருந்திடுவோம் என்ற வார்த்தையை மறந்துவிடுவோம். உலகிலுள்ள அனைத்துப் பொருள்களிலும் கலந்திருப்பவர்

நீலகண்ட சொக்கர் - சிவன் கோலம் - உருவம்

சு.சொல் : 1 தேஷமது 2 நெட்டுமுண்டும் 3. யெங்குமொன்றா

Mēlum cila kāraṇaṅkūṟutal

antamuḷḷa nīlaṉukku aṭaṅkāta varamumuṇṭu
teṉṉāṭu vaṭaṉāṭu tēcamatu aḷantavaṇṭi
poṉṉariya malaivaḷappam puvaṉamellām aṟintavaṇṭi
nīlakaṇṭa cokkariṭṭa nilamaiyiḷḷa nīlaṉukkuk
kōlampati ṉeṭumuṇṭu kūṇṭamuṟait tōḻiyuṇṭu
māyampala toḻilumuṇṭu māyamalai vittaiyuṇṭu
kāyampoṟi kalakkiṭuvār kaṭṭaḻaka nīlaṉaittāṉ
maruntiṭuvō meṉṟucoṉṉa vārttaiyatu viṭṭuviṭu
yiruntaṭikkuḷ curūpamāṟi yeṅkumoṉṟāyk kalantiruppār

Some More Reasons

Nīlaṉ has acquired limitless gifts and boons
He has measured the North and South,

He has knowledge of the prosperous mountains,
Nīlaṉ has attained the status of Nīlakaṇṭa cokkar
He has attained Civaṉ's rank and has women in waiting.
He has eighteen shapes and figures
He can perform a number of vanishing tricks
And he is adept in a number of tricks of the trade.
Handsome Nīlaṉ has physical control.
"Leave your advice of medication,
He has mingled with every creature in the world"

அன்பு ஒன்றே வழி என்று வணங்குதல்

அன்புருக மனமுருக ஆசைவைத்தோ மானாக்கால்
இன்புருக மடவார்க்கு யேகபர மாயிருப்பார்
ஆசைமன மாகனின்று அருவாயில் கன்னியர்கள்
பாசமுள்ள நீலனையும்[1] பார்த்தாலும் போதுமென்பார்
அய்யாவே யெங்களுட அருங்காவில் போனதென்னா
கைதொழுது[2] கன்னியர்கள் கனகாவில் போய்மறைந்தார்

மனத்திலே அன்பு வைத்து நினைத்தோமானால், பெண்களாகிய நாம் இன்பமடையும்படி எங்கும் நிறைந்திருப்பவர் நீலராசன். எனவே நாங்கள் அன்பு வைத்துள்ள நீலனைப் பார்த்தாலே போதும் என்று எண்ணுவார்கள். ஐயனே! எங்களுடைய அழகிய சோலையின்வழி தாங்கள் போவதற்கு நாங்கள் என்ன புண்ணியம் செய்தோமோ என்று சொல்லி, கை கூப்பி வணங்கிச் சென்றனர் கன்னியர்கள்.

சு.சொல் : 1 நீலனயும் 2 கயிதொழுது

Aṉpu oṉṟē vaḻi eṉṟu vaṇaṅkutal

aṉpuruka maṉamuruka ācaivaittō māṉākkāl
iṉpuruka maṭavārkku yēkapara māyiruppār
ācaimaṉa mākaṉiṉṟu aruvāyil kaṉṉiyarkaḷ
pācamuḷḷa nīlaṉaiyum pārttālum pōtumeṉpār
ayyāvē yeṅkaḷuṭa aruṅkāvil pōṉateṉṉā
kaitoḻutu kaṉṉiyarkaḷ kaṉakāvil pōymaṟaintār

The only path is love

"With all your heart and love, love him
He will be our support and our joy forever

Many women think that it is just enough
To have a glimpse of Nīlaṉ whom they love
If he chooses our groves, we are lucky"
Saying so and worshipping with
Folded hands, they disappeared in the forest.

நீலன் நீலியுடன் பொன்மலையடைதல்

கன்னியர்கள் போனபோது காவலவ னீலராசன்
அன்னமின்னும் நடையழகி ஆயிழையும் நீலியுமாய்
பெருவனந்தம் தனிலான பெருமாள்வனந் தனிலான
பெருமா ளவன்அனந்த மதில்திரு வனந்தரம்
தனைக் கடந்து தென்கடலு மலைனோக்கி
செங்கமுடு மலையும்விட்டு கண்ணாடிச் சோலைவிட்டு
கடந்துபல மலையும்விட்டு கட்டழகர் நீலராசன்
ஏந்துகொங்கை மடவார்கள் இருபுறமும் குரவையிட
கவர்ந்தமலை தனைக்கடந்து காக்காச்சி பொன்மலை வந்தாரே

நீலனும், அன்னம் போன்ற நடையினையுடைய ஆயிழையாள் நீலியும், பெருமாள் வீற்றிருக்கும் தலமான திருவனந்தபுரத்தைக் கடந்து தென்கடல், செங்கமடு மலை, கண்ணாடிச் சோலை போன்ற பல மலைகளையும் கடந்தனர். பெண்கள் குரவையாடியபடியே இருபுறமும் சூழ்ந்துவர காக்காச்சிப் பொன்மலையினை வந்தடைந்து மனம் மகிழ்ந்தார்.

ஆயிழை - விசேஷ ஆபரணம்.

Nīlaṉ nīliyuṭaṉ poṉmalaiyaṭaital

kaṉṉiyarkaḷ pōṉapōtu kāvalava nīlarācaṉ
aṉṉamiṉṉum naṭaiyaḻaki āyiḻaiyum nīliyumāy
peruvaṉantam taṉilāṉa perumāḷvaṉan taṉilāṉa
perumā ḷavaṉaṉanta matiltiru vaṉantaram
taṉaik kaṭantu teṉkaṭalu malaiṉōkki
ceṅkamuṭu malaiyumviṭṭu kaṇṇāṭic cōlaiviṭṭu
kaṭantupala malaiyumviṭṭu kaṭṭaḻakar nīlarācaṉ
yēntukoṅkai maṭavārkaḷ irupuṟamum kuravaiyiṭa
kavarntamalai taṉaikkaṭantu kākkācci poṉmalai vantārē

Nīlaṉ and Nīli reach Poṉmalai

After the virgins' departure, protector Nīlaṉ
And swan like Nīli, crossing the forest
Where Perumāḷ dwells and beyond
Tiruvaṉantaram and South sea
Traversed Ceṅkamuṭu and Kaṇṇāṭiccōlai,
Leaving one mountain after another,
Nīlarācaṉ reached Kākkācci Poṉmalai
Accompanced by *kuravai* dancing women of attractive breasts.

பொன்மலையின் சிறப்பு

வந்தனனே[1] சிந்தை மகிழ்ந்த நீலராசன்
மலைகாக்காச்சி பொன்மலை மீதிலே
அந்தமுள்ள கடமானும் புள்ளிமான் கரடிபுலி
அருவாயில் ஆடுமிது மாமலை
சந்தமுடன் அதிரவே யிடமலையும் குவடும்விட்டு
சாய்ந்தமலை சரிந்தமலை தாண்டியே
மந்திரகிரி மலையும்விட்டு[2] குவடுகள் அடவிவிட்டு
மகராசன் நீலன் வரும்நேரம்
மாணிக்க மதுவிளையும் ஆனபொன் மலையும்விட்டு
வைடூரியம் விளையும் பொன்மலை
காணிக்கை அதுபோட மாணிக்க மதுவிளையும்
கதிர்காம வேள்விமலை நேருமாம்
அணிகள் இசல்பாடவே குயில்கள் விருதூதவே
அழகுடைய[3] பொன்மலை மீதிலே
குழிகளது யானைவிழக் குப்பமிட் டுக்குவடு
கோலநில மானதொரு பொய்கையாம்
சிலைகளது போல்வளரும் அருவாயில் ஒருமலை
தெய்வார்கள் உறையுமலைப் பொய்கையாம்
மருவளரும் தொழுதேற்றும் மகராச நீலதம்புரான்[4]
மந்திரகிரி மலை வந்தாரே.

பொன்மலையில் கடமானும், புள்ளிமானும், கரடியும், புலியும் ஆகிய மிருகங்கள் விளையாடித் திரிந்தன. இடமலை, சாய்ந்தமலை, சரிந்தமலை, மந்திரகிரி மலை ஆகியவற்றின் சிகரங்களையும், காடுகளையும் கடந்து நீலராசன் வந்தபோது பொன்மயமான அம்மலைகளிலே மாணிக்கம், வைடூரியம் போன்றவை விளைந்தன காணிக்கை போட அதுவே மாணிக்கமாயிற்று கதிர்காமவேள்விமலை வரும்போது அணிகலன்கள் இசை பாடின; குயிலினங்கள் அவன் புகழ்பாடின. மேலும், யானைகள் குழிகளிலே விழுந்து சத்தமிட்டன. இவ்வாறு காடும், மலையும், நிலமும், குளமும், அருவியும் நிறைந்து விளங்கிய அம்மலையானது தேவமகளிர்வந்து கூடிவாழும் சிறப்பையும் பெற்றிருந்தது. பகைவர்களும் போற்றி வணங்கக்கூடிய மகராசனாகிய நீலதம்புரான் இம்மலைவளங்களைக்கண்டு, அப்பொன்மலையைவிட்டு நீங்கி மந்திரகிரி மலையினை வந்தடைந்தார்.

அடவி - சோலை. மாணிக்கம் - சிவப்புக்கல்; செம்மணி; நவமணியினொன்று
வைடூரியம் - நவமணியில் ஒன்று. மருவலர் - பகைவர்

சு சொல் · 1 வந்தனநெ 2 மலயுமிட்டு 3 அளகுடைய 4 னீலதம்பிரான்

Pon̲malaiyin̲ ci̲rappu

Vantan̲an̲ē cintai makil̲nta nīlarācan̲
Malaikākkācci pon̲malai mītilē
antamuḷḷa kaṭamān̲um puḷḷimān̲ karaṭipuli
aruvāyil āṭumitu māmalai

Cantamuṭan̲ atiravē yiṭamalaiyum kuvaṭumviṭṭu
Cāyntamalai carintamalai tāṇṭiyē
Mantirakiri malaiyumviṭṭu kuvaṭukaḷ aṭaviviṭṭu
Makarācan̲ nīlan̲ varumnēram

māṇikka matuviḷaiyum ān̲apon̲ malaiyumviṭṭu
vaiṭūriyam viḷaiyum pon̲malai
kāṇikkai atupōṭa māṇikka matuviḷaiyum
katirkāma vēḷvimalai nērumām

aṇikaḷ icalpāṭavē kuyilkaḷ virutūtavē
al̲akuṭaiya pon̲malai mītilē
kul̲ikaḷatu yān̲aivil̲ak kuppamiṭ ṭukkuvaṭu
kōlanila mān̲atoru poykaiyām

cilaikaḷatu pōlvaḷarum aruvāyil orumalai
teyvārkaḷ ur̲aiyumalaip poykaiyām

maruvaḷarum toḻutēṟṟum makarāca nīlatampurāṉ
mantirakiri malai vantārē

Special features of Poṉmalai

With great joy at heart came Nīlaṉ
To the place called Mount Kākkācci Poṉmalai.
This is the mount where antelope,
spotted deer, Tiger and leopard dance
With the rhythmic shivering of the mountain.
Beyond groves, beyond leaning mount,
Displaced mount, and Mantirakiri, came
Nīlarācaṉ leaving Poṉmalai the rearing
Ground for rubies. Giving it as a present
To God it produced rare sapphires.
He came to Katirkāma pooja mountain
Cuckoos sang in reply to the music of jewels
In the beautiful poṉmalai elephants
Fell into the pit and trumpeted terribly
This was the place with a fine tank
Among the mounts growing like statues
There was one where celestial creature
Lived in a tank. Nīlaṉ witnessing these
Came atlast to Mantirakiri

மேலும் பலவளம்

வந்தனன் அழகுடைய நீலனும் நீலியம்மை
வாழும்மலை யில்பெருமை வன்னமாயிரம் மலையாம்
சிந்தையுடன் அகஸ்தியர் சிறப்பா யிருக்குமலை
தினந்தவ றாதுமழை[1] புனந்தோறும் பெய்யுமலை
கேளுமே அழகுடைய[2] நீலன்வார தோர்மலையில்
கெம்பிதமாய் மாரிமழை தப்பாமல் பொழியுமலை
மாலிலங்கும்[3] மாலையணி மாயவன் வளருமலை
மாநாகம்[4] வாழுமலை தானாகநீ நின்றமலை

பொன்மலை யரன்மலையும் புனவேடர் வாழுமலை
பூங்காவன மாங்கமுகு பூச்சொரியும் பொன்மலை
வன்னமரம் தென்னைமரமும் வாகாக வளருமலை
மந்திகுலங்கள் பெருகி வாழும்வன வாசமலை
அன்னம்பரி பூரணமாய் அகத்தியர் வாழுமலை
அரனை நினைந்து தவம்புரியும் பெரியமலை
குயில்கள் அருவாயில் கூடியிருந் தாடுமலை
குப்பமிட்டுக் காட்டெருமை கூடிவிளை யாடுமலை
மயில்கள் இருந்துவிளாப் பழங்கள் பறிக்குமலை
மற்றுமுள்ள புற்றரவம் மலைநாகம் வாழுமலை
அன்னமும் குருவினமும் புள்ளினம் தாராவுடனே[5]
ஆளிசிங்க மதகரியும் அடவியுண் டாகுமலை
வன்னமரம் தென்னைமரம் மாங்கமுகு சோலைமலை
மாடப்புறா[6] வாழுமலை வந்திருந்து கூவுமலை
பொன்னரிய வன்னமலை புதுமையும் கண்டுகொண்டு
பூங்கொடியாள் நீலியுடன் பொன்னாக நீலன்வர

அழகு பொருந்திய நீலனும், நீலியும் வரும் இடங்களில் பெருமையும் அழகும் பொருந்திய ஆயிரம் ஆயிரம் மலைகள் இருந்தன. அவற்றுள் ஒன்று தமிழகக் குறுமுனிவரான அகஸ்தியர் வீற்றிருக்கும் சிறப்பைப் பெற்றிருந்தது. பிறவாகிய மலைகளில், நாள்தோறும் மழை தவறாமல் பெய்தது; பருவமழையும் தவறாமல் பெய்தது. மாலையணிந்த திருமால் எழுந்தருளி இருக்கின்ற நீண்டு உயர்ந்து நின்ற மலைகளில் நாகக்கூட்டங்களும் வேடர்களும் வாழ்ந்தனர். பூஞ்சோலைகள் நிறைந்து மாவும், கமுகும், வன்னியும், தென்னையும் பூத்துக்குலுங்கின. குரங்கினங்கள் நிறைந்திருந்தன. அகத்தியர் வாழும் மலை என்னும் சிறப்புடைய அம்மலையில் சிவபெருமானை நினைத்துத் தவம்புரிந்தோர் பலர். குயில்கள் கூடிக் கூவின; காட்டெருமைகள் கூடி விளையாடின; மயில்கள் விளாம்பழங்களைப் பறித்தன; புற்றுப்பாம்புகளும், மலைப்பாம்புகளும் நிறைந்திருந்தன; அன்னமும், குருவியும், கொக்கு போன்ற பல பறவை இனங்களும், ஆளியும், சிங்கமும், மதம் கொண்ட யானைகளும் கூட்டங் கூட்டமாகத் திரிந்து வாழ்ந்தன. வன்னிமரம், தென்னைமரம், மா, கமுகு போன்ற மரங்களும், மாடப்புறாக்களும் நிறைந்திருந்தன. இத்தகு அழகு பொருந்திய மலையின் புதுமைகளைப் பார்த்துக் கொண்டே நீலியும் நீலனும் வருகின்றனர். பொன்னிற வர்ணங்களையுடைய சாவல் கூவ, மயில்கள் ஆட, கன்னியர்கள் குரவையிட, தொண்டர்பலர் நீலன் நீலியைத் தொழுது உடன் வருகின்றனர்.

சு.சொல் : 1 மலை 2. அளகுடய 3 மாளிலங்கும் 4 மானாகம் 5 த்றாவுடநே 6. மாடம்புறா

Mēlum palavaḷam

vantaṉaṉ aḻakuṭaiya nīlaṉum nīliyammai
vāḻummalai yilperumai vaṉṉamāyiram malaiyām
cintaiyuṭaṉ akastiyar ciṟappā yirukkumalai
tiṉantava ṟātumaḻai puṉantōṟum peyyumalai
kēḷumē aḻakuṭaiya nīlaṉvāra tōrmalaiyil
Kempitamāy mārimaḻai tappāmal poḻiyumalai
mēlilaṅkum mālaiyaṇi māyavaṉ vaḷarumalai
mānākam vāḻumalai tāṉākanī niṉṟamalai
Poṉmalai yaraṉmalaiyum puṉavēṭar vāḻumalai
pūṅkāvaṉa māṅkamuku pūccoriyum poṉmalai
vaṉṉamaram teṉṉaimaramum vākāka vaḷarumalai
mantikulaṅkaḷ peruki vāḻumvaṉa vācamalai
aṉṉampari pūraṇamāy akattiyar vāḻumalai
araṇai niṉaintu tavampuriyum periyamalai
kuyilkaḷ aruvāyil kūṭiyirun tāṭumalai
kuppamiṭṭuk kāṭṭerumai kūṭiviḷai yāṭumalai
mayilkaḷ iruntuviḷāp paḻaṅkaḷ paṟikkumalai
maṟṟumuḷḷa puṟṟaravam malainākam vāḻumalai
aṉṉamum kuruviṉamum puḷḷiṉam tārāvuṭaṉē
āḷiciṅka matakariyum aṭaviyuṇ ṭākumalai
vaṉṉamaram teṉṉaimaram māṅkamuku cōlaimalai
māṭappuṟā vāḻumalai vantiruntu kūvumalai
poṉṉariya vaṉṉamalai putumaiyum kaṇṭukoṇṭu
pūṅkoṭiyāḷ nīliyuṭaṉ poṉṉāka nīlaṉvara

Some more natural riches

Handsome Nīlaṉ and Nīḷi came
To the mountain of repute among thousands
This is the abode of Akastiyar and has
Daily rains and groves with copious rains without fail
Oh! hear the mountain reached by beautiful Nīlaṉ
Rains came regular without fail
Here lives Tirumāl and it is the mountain of garland wearing Civaṉ

The mountain of king cobras, mountain of self sustenance
Mountain of gold, fortress like abode of the hunters
A place full of park, mango trees, and areca nut trees,
Mountain full of flower blossoming trees,
A mount of Indian mesquit trees and coconut trees.
Varieties of monkeys multiply and live there.
It is the dwelling seat of great Akastiyar,
A place where many do tabas for Civaṉ
And cuckoos sing and dance at the entrance
A mount where bisons make noise and play,
Where peacocks pluck fruits of wood apple,
Where besides python, other snakes live
Where the swan and the thrush live together
Where *yāḷi* lion and the uncontrolled elephant are seen together
Where the Indian mesquit trees exists with coconut trees
With groves of mango trees and arecanut trees
Where the dove lives and calls,
A rare mountain seeing which the
Slender waisted Nīli came along with Nīlaṉ

மேலும் மலைவளம்

பூவைமயில் கூவும்சாவல் பொன்னின்நிற[1] வர்ணங்களும்
கானமயி லாடுமலை[2] கன்னியர் குரவையிடக்
கண்டன கனாகாண்டன மனயும்தொண்டர் தொழுது[3]
வானமெங்குமே வளர்மஞ்சி சரியுமலை
வன்னமரம் ஆயிரங்கள் பூதமது வாழுமலை
ஆம்பையோடு தாமரையும்[4] ஆலவட்டம் வீசுமலை
ஆனபொன் பணியும் செம்பொன் விளையுமலை
கைதைநெய்தல் முல்லைதோறும் காக்காப்பொன் விளையுமலை
கண்டகண்ட சோலைதோறும் கரும்புமுத் தீனுமலை

மேகம் நிறைந்து சரிந்து வானத்தைத் தொட்டது. ஆயிரமாயிரம் வன்னமரங்களும், ஆம்பல் மலர், தாமரை மலர்களும் நிறைந்து மணம் பரப்பின.

பொன்னும் மணியும் நிறைந்திருந்தன. தாழை, நெய்தல், முல்லை மலர, கரும்புகள் முத்துக்களை ஈன்றன.

சு.சொல் : 1. பொன்னிநிற 2 லாடமலை 3 தொளுது 4. தாமரயும்.

Mēlum malaivaḷam

pūvaimayil kūvumcāval poṉṉiṉṉiṟa varṇaṅkaḷum
kāṉamayi lāṭumalai kaṉṉiyar kuravaiyiṭak
kaṇṭaṉa kaṉākāṇṭaṉa maṉayumtoṇṭar toḻutu
vāṉameṅkumē vaḷarmañci cariyumaḷai
vaṉṉamaram āyiraṅkaḷ pūtamatu vāḻumalai
āmpaiyōṭu tāmaraiyum ālavaṭṭam vīcumalai
āṉapoṉ paṇiyum cempoṉ viḷaiyumalai
kaitaineytal mullaitōṟum kākkāppoṉ viḷaiyumalai
kaṇṭakaṇṭa cōlaitōrum karumpumut tiṉumalai

Some more riches of the mountain

Multicoloured golden cock and
The peacock danced spreading all its gold enhues
The mountain virgins began *Kuravai* dance.
Volunteers followed them worshipping.
The clouds bent to touch the sky
In the mountains peopled by thousands of demons
And Indian mesquit trees, ymphaea lotus and lotus fanned
Where gold and beads were in plenty
And all the groves yielded sugarcane and pearls

தீர்த்தமாடுதல்

மைவர்ணன் அழகுடைய மாயன்நிரை[1] மேய்த்தமலை
மாயனே[2] துணையெனவே வாய்த்தபஞ்ச பாண்டவர்கள்
வனவாசம் செய்தமலை வாய்த்தகுரு நாட்டுமலை
வரிசை துரையழகன் மகராசன் நீலராசன்
அடங்கா கயங்கடந்து ஆனைவாழும் சோலைவிட்டு
ஆனைபோலே நீலராசன் பொன்மலை காவும்விட்டு

ஆறும்அருவி சுனையில் அங்கனவே யிறங்கிதீர்த்தம்
அள்ளமாரி மாவென்று அயராமல் போற்றிக்கொண்டு
சீறும்பரி மேனகுலம் தெய்வகுல நீலராசன்
திருவனந் தரபுரத்தில் சென்றுநெடு மாலைக்காண
திறமையு டன்நடந்து காடுமலை யுங்கடந்து
காணிகுற வரிருக்கும் மாணிக்க மலைகடந்து
அதிக தூரநடந்து மருத நிலங்கடந்து
நித்தியகலி யாணிசெல்வன் நீலகுல தம்புரானார்
நெய்தநில முங்கடந்து ஆறருவி யுஞ்சுனையும்
பக்தியுடனே[3] நடந்து பார்புகழும் நீலராசன்
பாலைநில முங்கடந்து ஆறருவி யுஞ்சுனையும்
சந்தமுடனே நடந்து தாரணியி லேபரந்த
தளந்தனில் நீலராசன் தளத்தில் வந்தாரே.

கருமையும் அழகும் பொருந்திய திருமால், மாடுகளை மேய்த்ததும், பஞ்சபாண்டவர்கள் திருமாலே துணையென்று வனவாசத்தினை மேற்கொண்டதுமாகிய குருநாட்டு மலையினைக் கடந்தனர் யானைகள் வாழுகின்ற அடர்ந்த சோலை, ஆறு, அருவிகளைக் கடந்து சென்று சுனையில் தீர்த்தமாடினர். நித்திய கல்யாணியின் மகனாகிய நீலதம்புரனார் திருவனந்தபுரத்தில் எழுந்தருளியிருக்கும் திருமாலைக் காணும் ஆசையோடு காடு, மலைகளைக் கடந்து குறவர்கள் வாழும் மாணிக்கமலையினைக் கடந்து, மருத நிலத்தினைக் கடந்தனர். பின்பு நெய்தல் நிலம், ஆறு, அருவி பாலைநிலம் ஆகியவற்றையெல்லாம் கடந்து அழகுடனே நடந்து வந்த, உலகம் புகழும் நீலராசன் இந்நில உலகின் பரந்த இடத்தை அடைந்தார்.

சு.சொல் : 1. மாயநிரை 2 மாயநே 3. பக்திடநே.

Tīrttamāṭutal

maivarṇan aḻakuṭaiya māyaṉnirai mēyttamalai
māyaṉē tuṇaiyeṉavē vāyttapañca pāṇṭavarkaḷ
vaṉavācam ceytamalai vāyttakuru nāṭṭumalai
varicai turaiyaḻakaṉ makarācaṉ nīlarācaṉ
aṭaṅkā kayaṅkaṭantu āṉaivāḻum cōlaiviṭṭu
āṉaipōlē nīlarācaṉ poṉmalai kāvumviṭṭu
āṟumaruvi cuṉaiyil aṅkaṉavē yiṟaṅkitīrttam
aḷḷamāri māveṉṟu ayarāmal pōṟṟikkoṇṭu

ciṟumpari mēṉakulam teyvakula nilarācaṉ
tiruvaṉan tarapurattil ceṉṟuneṭu mālaikkāṇa
tiṟamaiyu ṭaṉnaṭantu kāṭumalai yuṅkaṭantu
kāṇikuṟa varirukkum māṇikka malaikaṭantu
atika tūranaṭantu maruta nilaṅkaṭantu
nittiyakali yāṇicelvaṉ nīlakula tampurāṉār
neytaṇila muṅkaṭantu āṟaruvi yuñcuṉaiyum
paktiyuṭaṉē naṭantu pārpukaḷum nīlarācaṉ
pālainila muṅkaṭantu āṟaruvi yuñcuṉaiyum
cantamuṭaṉē naṭantu tāraṇiyi lēparanta
taḷantaṉil nīlarācaṉ taḷattil vantārē

Taking the holy bath (holy dip)

The mountain where black and beautiful Tirumāl was the cowherd.
Where the five Pāṇṭavar spent the exile in forest
Putting their trust in the lord Kriṣṇaṉ
Was crossed by the beauty and prime among men Nīlarācaṉ.
The groves full of elephants were crossed
By elephant like Nīlarācaṉ and leaving Poṉmalai
He took holy dip in the rivers and fountains en route
Praising god continuously, godly Nīlarācaṉ
Like a flying horse sped fast
To Tiruvaṉantaram to see and worship Tirumāl
Crossing mountains and forests and
The sapphire mountain of the *Kuṟavar,*
Traversing on foot long distances,
Nīlatampurāṉ, Nityakalyāṇi son,
Crossed the seashore, land, rivers, fountains, rivulets,
And with great piety crossed desert lands,
Rivers, rivulets and fountains with dancing steps
And reached the wide open vast flat ground.

தெய்வநாடு

14. வந்தனன் நீலராசன் வா[ள்]வியும் ஒன்றாயியைந்து
விந்தையாய்[1] மறையோர் வேதம் விளங்கிடும் தெய்வனாட்டிலே
திந்தையாய் திசைகளெட்டும் செந்நெலு மதுவிளைய
அந்தமாய் நீலராசன் ஆனக நாட்டில் வந்தாரே.

இந்தத் தெய்வீக நாட்டில் அந்தணர்கள் வேதம் ஓதுவதையும், எட்டுத்திசைகளிலும் செந்நெல் விளைந்திருப்பதையும் கண்டு ஆனக நாட்டையடைந்தான் நீலராசன்.

சு.சொல் : 1 விந்தயாய்

Teyvanāṭu

vantaṉaṉ nilarācaṉ vā[ḷ]viyum oṉṟāyiyaintu
vintaiyāy maṟaiyōr vētam viḷaṅkiṭum teyvaṉāṭṭilē
tintaiyāy ticaikaḷeṭṭum cennelu matuviḷaiya
antamāy nilarācaṉ āṉakanāṭṭil vantārē

Land of god or godly land

Nilarācaṉ reached the godly land of lakes
Where the brahmins sang the vētās
And in all eight directions redpaddy grew.
At last he came to the land of Āṉaka

பொன்மலை நாடு

15. வந்தனன் பொன்மலை நாடு[1] - பொன்னாட்டில்
மன்மதனென வருகுல நீலன்
செந்தமிழ்[2] பகர்ந்திடு நாடு
சேரப் பெருமாள் மலைநாடு
கருமனை யோடாறு நெய்யாறு
களித்திடும் பெண்கள் குளித்துரையாறு
அரவமது கடலதை நோக்கி
ஆறதுவழி ஆறது கடந்து
நரல்லாறு கல்லகரி யேரிகளும்

நாட்டில்பாய்ந் தாறது வழியே
மேலாந் தலைமாயொரு திசையில் விளைந்திடு
வழிஆறதுவழி ஆறது வழியே
பற்றிகளன் ஏரிகள் ஆறுகள்-பலபல
வாவிகள் வயல்கள் புரவுகள்
கறவைகள் சுரந்தாவியே கதறி
கன்றினத்துக் கிரங்கிடும் நாடு
பொன்மலை நகரானது விட்டுப்
புகழழகுள்ள நீலனும் வரவே

நீலன் வந்துசேர்ந்த அந்தப் பொன்மலை நாடு செந்தமிழ் பேசும் மக்கள் நிறைந்தது. சேர மன்னனுக்கு உரித்தாய் விளங்கியது. அந்த நாடு நெய்யாறும், ஏரிகளும் நிறைந்து செழிப்போடு விளங்கியது. அந்த நீர்நிலைகளிலும், ஆறுகளிலும் மகளிர் இருந்து நீராடி மகிழும் பல துறைகள் நிற்றந்திருந்தன. வாவிகளும் வயல்களும் நிறைந்து வளப்பம் பெற்றிருந்தது. அங்கே பசுக்களும், கன்றுகளும் ஒன்றையொன்று நினைந்து அழைத்துக் கொண்டன. அந்நகரை எல்லாம் கண்டு நீலன் கல்குள நாடுநோக்கிப் புறப்பட்டான்.

க.சொல் : 1. னாடு 2. செந்தமிள்.

Poṉmalai nāṭu

vantaṉaṉ poṉmalai nāṭu - poṉṉāṭṭil
maṉmataṉeṉa varukula nīlaṉ
centamiḻ pakarntiṭu nāṭu
cērap perumāḷ malaināṭu
Karumaṉai yōṭāṟu neyyāṟu
kaḷittiṭum peṇkaḷ kuḷitturaiyāṟu
aravamatu kaṭalatai nōkki
āṟatuvaḻi āṟatu kaṭantu
narallāṟu kallakari yērikaḷum
nāṭatilpāyn tāṟatu vaḻiyē
mēlān talaimāyoru ticaiyil viḷaintiṭu
vaḻiāṟatuvaḻi āṟatu vaḻiyē
paṟṟikaḷaṉ ērikaḷ āṟukaḷ - palapala
vāvikaḷ vayalkaḷ puravukaḷ
kaṟavaikaḷ curantāviyē kataṟi
kaṉṟiṉattuk kiraṅkiṭum nāṭu

poṉmalai nakarāṉatu viṭṭup
pukaḻaḻakuḷḷa nīlaṉum varavē

The land of Poṇmalai

Nīlaṉ set his foot on poṉmalai land
This land where Nīlaṉ comes like Maṇmathaṉ (cupid)
Is the land of Tamil speakers and of Cēraṉ king.
Neyyār river crossed this mountainous land
And happy playful women bathed in the ghats
Crossing the lake kallakari and river Narallāṟ
The rivers rushed towards the noisy sea.
Criss crossed by rivers and lakes the land was fertile
With bumper crop. All along the lakes
And rivers the cows and their calves
Called each other and Nīlaṉ
Left the city of Poṉmalai and started towards Kalkuḷa country.

கல்குள நாடு

கர்மம் கருகிட கலிதீர்க்கும்
காரேடு மூல காவிவிட்டு
தர்மம் தழைத் தோங்கிய செல்வம்
தழைத்திடும், வள்ளி ஆறது வழியே
கர்மவினை பாவமது தீர
கல்குளம் பல்பனா புரம்விட்டு
வந்தார் மன்னன் சிந்தை தெளிந்திட
வடிவழகன் அழகுள்ள நீலன்
அந்தமுடன் கல்குளம் மேவியே
அழகு டன்மக தேவரைக்காண

தர்மமும், செல்வமும் தழைத்து விளங்கும் வள்ளி ஆற்றின் வழியாக, கர்மவினைகளையும், பாவங்களையும் போக்கும் கல்குளம், பல்பனாபுரம் ஆகியவற்றைக் கடந்தனர்.

Kalkuḷa nāṭu

karmam karukiṭa kalitīrkkum
kārēṭu mūla kāviviṭṭu

tarmam ta̱lait tōṅkiya celvam
ta̱laittiṭum valli āṟatu va̱liyē
karmavinai pāvamatu tīra
kalkuḷam palpanā puramviṭṭu
vantār mannan cintai teḷintiṭa
vaṭiva̱lakan a̱lakuḷḷa nīlan
antamuṭan kalkuḷam mēviyē
a̱laku taṉmaka tēvaraik kāṇa

Land of Kalkuḷam or kalkuḷa country

Leaving kāreṭu which can remove
The evils of Karma or fate,
He came along Vaḷḷi river, source of
Wealth and dharma and in order that
Evilsand sins of karma may go
He crossed kalkuḷam, palpanāpuram
With the desire of seeing
The beautiful Makatēvar and thus
Our Nīlan the beautiful proceeded beyond kalkuḷam

மகதேவர் நாடு

வளமையுடன் புதுமை வளரும்
மகதேவரின் நாட்டில் - பெருமை 5
அருகளரி சிலவாய்த்திடும் கோட்டை
அதனூடு டாடியே கதவாம்
சத்தரங்கள் கோட்டைகள் கொத்தளமாம்
சூழவே குருவித்தலைய சிறகாம்
சித்திர வடிவழ குள்ள-நீலன்
செல்லுகிறயிடம் சிறப்பாம் பெருமையாம்
செந்தாமரை வாவியும்[1] பெருமையும்
சிறப்புடன்நெல்[2] விளைகிற நிலமும்

வளமையும், புதுமையும் நிறைந்த மகதேவரின் நாட்டில் கோட்டைக் கொத்தளங்களும், சத்திரங்களும் சூழ்ந்திருந்தன.

களரி - போர்க்களம். கொத்தளம் - மதிற்புரம்.

சு.சொல் : 1 லுடயும் 2. சிறப்புடனெல்

Makatēvar nāṭu

vaḷamaiyuṭaṉ putumai vaḷarum
makatēvariṉ nāṭṭil - perumai
arukaḷari cilavāyttiṭum kōṭṭai
ataṉōṭū ṭāṭiyē katavām
cattaraṅkaḷ kōṭṭaikaḷ kottaḷamām
cūḷavē kuruvittalaiya ciṟakām
cittira vaṭivaḷa kuḷḷa - nīlaṉ
cellukiṟayiṭam ciṟappām perumaiyām
centāmarai vāviyum perumaiyum
ciṟappuṭaṉnel viḷaikiṟa nilamum

Land of Makatēvar

Makatēvar's land full of fertile richness
And novelty, is dealt with battle scars.
With fortresses and in between them
Inns and walls of forts
Nīlaṉ beautiful like a painting of a thrush
With a small head and fine wings,
Enriches the place he goes.
This land is full of lakes with red lotus
And fields full of ripered paddy.

மகதேவர் சன்னதி

நந்தனவனம்[1] பூங்கா வனமாம் - நல்ல
மகதேவர் சன்னதியாம்
கொந்தார் குழலார்[2] மடவார்-கூடியே
சுனையாடிய பொய்கையாம்
அகர்தெரு வடிவாம் சாலையாம்
அந்தணர் சிவஆலயம் பதியாம்

சிகாமணி மாடத் தெருவில்-சிலை
வடிவாய் நீலனும் வரவே

பலவகைச் சிறப்பும், பெருமையும் உடைய பூஞ்சோலைகளினிடையே மகதேவர் சன்னதி விளங்கியது.

கொந்து - பூங்கொத்து.

சு.சொல் : 1. னந்தரவனம் 2. குளலார்.

Makatēvar cannati

nantanavanam pūṅkā vanamām - nalla
makatēvar cannatiyām
kontār kulalār matavār - kūṭiyē
cunaiyāṭiya poykaiyām
akarteru vaṭivām cālaiyām
antaṇar civaālayam patiyām
cikāmaṇi māṭat teruvil- cilai
vaṭivāy nīlanum varavē

Sanctorum of Makatēvar

Makatēvars sanctorum a place is
Rich faith flower gardens, a fine garden resort.
Flower decked fine haired women bathe
In the fountains and springs.
Broad and wide streets of the place
With Civan's temple for Brahmins in
Sikāmaṇi Māṭa street, Nīlan
Made his appearance as beautiful as a statue.

நாட்டில் மகளிர்

கொந்தலரும் குழல்விழி மடவார்
கூடியே குடமெடுப்பார் நடப்பார்
விந்தைசெறி மலர்க்குழ லழகழிய
விளையாடி நடப்பார் தெருவோடே 25

கட்டழக னீலன் பல்பனா புரமும் விட்டுக்
கனதெரு வோடே வருகிற புதுமையாம்
வட்டத் திருமுகமும் பிறையும்
மயில்போலே நடையுடை யழகாம்

பாம்படம் சிலம்போலங்கள் பாட
பாவையர் இடைதுவள நடப்பார்
நடப்பவர் தமிழ்ப்[1] பலபல தெருவாம்
இப்படிப்பல பெருமைகள் கண்டு
யிலங்கியபுகழ் நீலனும் வரவே

அகன்ற தெருக்களையும், சாலைகளையும், மகளிர் நீராடி மகிழும் குளங்களையும் உடைய அந்நாட்டின் மாடத்தெருவின் வழியாக நீலன் வரும்போது அழகுமகளிர் கூடிக்குடம் எடுத்துக்கொண்டு நடந்தார்கள். நீலராசன் பல்பனாபுரத்தைக் கடந்து வருகின்ற புதுமையைக் கண்டு, அழகிய வட்டமுகத்தினையும், பிறைபோன்ற நெற்றியையும், மயில்போன்ற நடையினையும், உடையழகினையும் உடைய மகளிர் பாம்படம், சிலம்பு போன்ற அணிகலன்கள் ஓசையிட இடைதுவள நடந்து வருகின்றனர்.

கு.சொல் : 1. தமிள்.

Nāṭṭil makaḻir

kontalarum kuḻalviḻi maṭavār
kūṭiyē kuṭameṭuppār naṭappār
vintaiceṟi malarkkuḻa laḻakaḻiya
viḷaiyāṭi naṭappār teruvōṭē
kaṭṭaḻaka ṉīlaṉ palpaṉā puramumviṭṭuk
kaṉateru vōṭē varukiṟa putumaiyām
vaṭṭat tirumukamum piṟaiyum
mayilpōlē naṭaiyuṭai yaḻakām
pāmpaṭam cilampōlaṅkaḷ pāṭa
pāvaiyar iṭaituvaḷa naṭappār
naṭappavar tamiḻp palapala teruvām
ippaṭippala perumaikaḷ kaṇṭu
yilaṅkiyapukaḻ nīlaṉum varavē

Women in the country

Flower decked fine haired women in groups
Carrying water pots walk along

The streets with their beautiful hair in disarray.
Handsome Nīlaṉ's leaving palpaṉāpuram and
Reaching their street is a novelty.
The women with beautiful round visage
And crescent shaped forehead walked
Like a peacock wearing *pāmpaṭam*
Anklets and other ornaments
Their gentle walk hurting their slender waist
They speak Tamil crossing many streets,
And the famous Nīlaṉ reached their place

நீலன் சன்னதியடைதல்

மெய்யுடன் பல்பனாபுர மதிலே
மேவியே மகாமக தேவர்சன் னதியில்
சேரப் பெருமாளூரை உலகம்
திருவாசலை நோக்கியே நீலராசன்
சென்றார் மகதேவர் சன்னதிக்கே
வந்தனனே நீல ராசன்
அகமகிழ்ந்து மகதேவர் அழகுமலர்ப் பாதம்காண
கலங்காத மனதீரன் காவலவன் நீலராசன்
பல்பனாபுரச் சன்னதியில் பதினாறு வாசல்விட்டு
உற்பனமாய் மகதேவர் உகந்திருக்கும் திருப்பதியில்
சென்றுகண்டு நீலராசன் திருப்பாதம் வணங்கிநின்றார்
இன்றுகண்டேன் மகதேவர் இருப்பிடமும் சன்னதியும்
கண்குளிரக் கண்டுநின்று கைதொழுதார் நீலராசன்
எம்பெருமாள் நன்னாட்டில்[1] இலங்கியதோர் மகதேவர்
அன்பாக நீலராசன் அருளுவாராம் ஒருவார்த்தை
சென்றுகண்டு நீலராசன் திருப்பாதம் வணங்கியே
யின்றுகண்டேன் மகதேவர்! கலங்காமல் நீபிறந்த
காரணத்தைச் சொல்லுமென மகதேவர் வினவிடவே

இவற்றையெல்லாம் கண்டுவந்த நீலன் மகாமகதேவர் சன்னதியில், பெருமாள் வீற்றிருக்கும் வாயிலைநோக்கி வந்தான். இறைவனின் திருவடிகளைக் காணவேண்டுமென்ற திண்ணிய மனத்தினையும், காவலையும் உடைய நீலராசன் அந்தப் பல்பனாபுரச் சன்னதியில்

பதினாறு வாசல்களையும் கடந்து, மகதேவர் வீற்றிருக்கும் திருக்கோலத்தைக் கண்டு அவர் திருவடிகளைக் கண்ணாரக் கண்டு கைகளால் தொழுதான். திருவடிகளில் வணங்கிய நீலராசனை நோக்கி, நீலனே நீ பிறந்த காரணத்தைத் தெளிவாகச் சொல்லுக என்று வினவினார் மகதேவர்.

உற்பனம் - உண்மை; தோற்றம்.

சு.சொல் : 1. நந்நாட்டில்.

Nīlaṉ caṉṉatiyaṭaital

meyyuṭaṉ palpaṉāpura matilē
mēviyē makāmaka tēvarcaṉ ṉatiyil
cērap perumāḷurai uḷakam
tiruvācalai nōkkiyē nīlarācaṉ
ceṉṟār makatēvar caṉṉatikkē
vantaṉaṉē nīla rācaṉ
akamakiḻntu makatēvar aḻakumalarp pātamkāṇa
kalaṅkāta maṉatīraṉ kāvalavaṉ nīlarācaṉ
palpaṉāpurac caṉṉatiyil patiṉāṟu vācalviṭṭu
uṟpaṉamāy makatēvar ukantirukkum tiruppatiyil
ceṉṟukaṇṭu nīlarācaṉ tiruppātam vaṇaṅki niṉṟār
iṉṟukaṇṭēṉ makatēvar iruppiṭamum caṉṉatiyum
kaṇkuḷirak kaṇṭuniṉṟu kaitoḻutār nīlarāraṉ
emperumāḷ naṉṉāṭṭil ilaṅkiyatōr makatēvar
aṉpāka nīlarācaṉ aruḷuvārām oruvārttai
ceṉṟukaṇṭu nīlarācaṉ tiruppātam vaṇaṅkiyē
iṉṟukaṇṭēṉ makatēvar! kalaṅkāmal nīpiṟanta
kāraṇattaic collumeṉa makatēvar viṉaviṭavē

Nīlaṉ reaches sanctorum

In truth, leaving palpaṉāpuram, Nīlaṉ reached
Makatēvar's sanctorum and straight
Proceeded to the door of Perumāḷs abode
Nīlaṉ mightily pleased with the sight of
Makatevar's feet stood with firm heart as a protector
Crossing the sixteen gates at palpaṉāpuram
Came to the holy place where Makatēvar resides in truth

Seeing him he worshipped Makatēvar's feet
And said To-day I found out his abode
Saying this he stood worshipping
Gazing at God to his eyes content
Makatēvar domiciled in the land of Perumāḷ
With love and kindness asked Nīlaṉ
To tell him the story and reason of his birth.

நீலன் தன் பிறப்புக் கூறுதல்

ஆதிதிரு வள்ளுவர்க்கு அகமகிழப்[1] பாலகனாய்
நீதியுட னிருபேர்கள் நேசமுடன் பிறந்ததுவும்
தங்கையபன்ற சரமறவர்க்குச் சந்ததியாய் வாழ்ந்ததுவும்
வளர்ந்து வரும்நாளையிலே வல்லதமிழ் கற்றதுவும்
அழகுடைய சோதிடங்கள் ஆதரவாய்க் கற்றதுவும்
சாத்திரங்கள் லக்கினங்கள் தான்பேசச் சமர்த்தனுமாய்

அழகு பொருந்திய நீலராசனும் அந்த நல்ல நேரத்தில் தான் பிறந்த செய்திகளை எல்லாம் நினைவில் கொண்டுவந்து சொல்லத் தொடங்கினான். நாங்கள் இருவரும் வீரமிகுந்த குடியில் பிறந்து, வள்ளுவர் மனம்மகிழ நீதிகாக்கின்ற குழந்தைகளாய் வளர்ந்தோம். தமிழ் மொழியினைத் தெளிவாகக் கற்று சோதிடங்கள், சாத்திரங்கள், லக்கினங்கள் போன்ற அனைத்துக் கலைகளிலும் வல்லவர்களாகி வாழ்ந்து வந்தோம்.

பாலகன் - குழந்தை

சு.சொல் : 1 அகமகிள

Nīlaṉ taṉ piṟappukkūṟutal

ātitiru vaḷḷuvarkku akamakiḻap pālakaṉāy
nītiyuṭa ṉirupērkaḷ nēcamuṭaṉ piṟantatuvum
taṅkaiyaṉṟa caramaṟavarkkuc cantatiyāy vāḻntatuvum
vaḷarntu varumnāḷaiyilē vallatamiḻ kaṟṟatuvum
aḻakuṭaiya cōtiṭaṅkaḷ ātaravāyk kaṟṟatuvum
cāttiraṅkaḷ lakkaṉaṅkaḷ tāṉpēcac camarttaṉumāy

Nīlaṉ narrates his birth

That they were the happy children of vaḷḷuvars
And how they supheld righteousness

How they were the progeny of *maṟavars* and
How they learnt Tamil in its fullness
How learnt astrology as a support
How they became adept in sastras and astrology
He narrated.

நீலனும் நீலியும் கயிலாயம் அடைதல்

கூற்றுவனாய் வள்ளுவர்க்குக் குலங்களெல்லாம் அழித்ததுவும்
மாந்தயரும், வள்ளுவரும் வாதாடி மடிந்ததுவும்
சிந்தையுடன் தான்பிறந்து-அந்தச் செல்வமது அழிந்ததுவும்
சாம்புவந்தன் கிளைகளெல்லாம் தங்கையீ டேற்றினதும்
ஈடேற்றிக் கயிலாசம் இருபேரும் சேர்ந்ததுவும்

சிறிது காலத்திற்குப்பின் வள்ளுவர்க்கே எமனாகி அவரது குலங்களை அழித்தோம். மக்களும், வள்ளுவரும் எங்களைத் திருத்துவதற்காக வாதாடி இறுதியில் மடிந்துவிட்டனர். மற்றுமிருந்த சுற்றத்தார் எல்லாம் தங்கையால் காப்பாற்றப்பட்டனர். இச்செயல்களோடு எங்கள் முதல் பிறவி முடிந்துவிட்டது. பிறகு இருவரும் கயிலாயம் சென்றடைந்தோம்.

மாந்தர் - மனிதர்; ஆண்மக்கள் சாம்புவந்தன் - இராமன் படைத்தலைவரிலொருவன்.

Nīlaṉum nīliyum kayilāyam aṭaital

kūṟṟuvaṉāy vaḷḷuvarkkuk kulaṅkaḷellām aḻittatuvum
māntayarum vaḷḷuvarum vātāṭi maṭintatuvum
cintaiyuṭaṉ tāṉpiṟantu-antac celvamatu aḻintatuvum
cāmpuvantaṉ kiḷaikaḷellām taṅkaiyī ṭēṟṟiṉatum
īṭēṟṟik kayilācam irupērum cērntatuvum

Nīlaṉ and Nīli reach kailash

How they became destroyers of the same vaḷḷuvars
And how the people interceded for them and died
How they lost all their wealth
And how Nīli saved the clan of Cāmpuvantaṉ
And how they reached kailash at last
He narrated.

மறுபிறவிச் செய்திகள்–பஞ்சவரில் வீமன்

சேர்ந்துமறு பிறவியதில் செப்புகிறோம் கேளுமென்றார்
கேளுமே மகதேவா! யென்நாயகா[1]
கீர்த்தி யானதெல்லாம் நீலன்சொல்லுவார்
பஞ்சவர்கள் குலத்தில் துரோபதை
    பாரினில் பிறந்துபகை யானதும்
அஞ்சுபேரில் அதில்வலு வீமனாய்
    ஆதியில் பிறந்த நீலன்[2] நானென்றார்[3]

தங்கள் மறுபிறவிகளைப்பற்றிச் சொல்லுகிறான் நீலன் பஞ்ச பாண்டவர்களும், திரௌபதையும் பிறந்து உலகத்தில் பகை உண்டாயிற்று. அந்தப் பாண்டவர் ஐவரில் நான் வலிமைமிக்க வீமனாகப் பிறந்தேன்.

கீர்த்தி - புகழ்.

சு.சொல் : 1 யெனாயகா 2 னீலனா 3 நென்றார்.

Maṟupiṟavic ceytikaḷ - pañcavaril vīmaṉ

cērntumaṟu piṟaviyatil ceppukiṟōm kēḷumeṉṟār
kēḷumē makatēvā! yeṉṉāyakā
kīrtti yāṉatellām nīlaṉcolluvār
pañcavarkaḷ kulattil turōpatai
    pāriṉil piṟantupakai yāṉatum
añcupēril atilvalu vīmaṉāy
    ātiyil piṟanta nīlaṉ nāṉeṉṟār

Details of Rebirth - Bīmāṉ among Pāṇṭavar

Oh! Makatēvā! Hear us, we narrate
All that happened in our rebirth
Thus Nīlaṉ spoke.
The birth of Tiraupati among the Pāṇṭavar
Became the point of enmity in the world
Among the five, the strongest, Bīmaṉ
Was none other than myself.

நீலி - சூர்ப்பனகைப் பிறப்பு

நால்திசை புகழ்[1] ராவணன் சேனைக்கு
நாடழிக்கவே சூர்ப்பனகை யானதும்

நான்கு திசைகளிலும் புகழ்பெற்ற இராவணனின் படைகளையும், அவனது நாட்டையும் அழித்தற்குக் காரணமான சூர்ப்பனகையாகப் பிறந்தாள் நீலி.

சு சொல் · 1 புகள்

Nīli - Cūrppaṉakaip piṟappu

nālticai pukaḻ rāvaṇaṉ cēṉaikku
nāṭaḻikkavē cūrppaṉakai yāṉatum

Nīli - the birth of Cūrppaṉakai

Famed in all the four directions
The reason for destruction of Rāvaṇaṉ's land.
Cūrppaṉakai was none other than Nīli

மதுரையில் பிறந்தது

கூத்துவனாய்ப் பிறந்தோம் மதுரையில்
கூண்டரிவன்ன சேனைகள் மாண்டதும்
கண்ணகியாள்[1] பிறந்து மதுரையில்
கண்கொள்ளாத படைவீ டழிந்ததும்
அண்ணர் தன்னருளால் தெய்வ பாண்டியன்
அங்குசம்வாழ வைத்ததும் நாங்கள்தான்

கண்ணகியால் மதுரை மாநகரத்தை அழித்து, தெய்வ அருளால் பாண்டிய மன்னனின் செங்கோலினை வாழ வைத்தவர்களும் நாங்களே.

கூத்துவன் - எமன் அங்கிசம் - வமிசம்.

சு.சொல் : 1 கர்னகியாள்.

Maturaiyil piṟantatu

kūttuvaṉāyp piṟantōm maturaiyil
kūṇṭarivaṉṉa cēṉaikaḷ māṇṭatum
kaṇṇakiyāḷ piṟantu maturaiyil

kaṇkoḷḷāta paṭaivī taḻintatum
aṇṇar taṉṉaruḷāl teyva pāṇṭiyaṉ
aṅkucamvāḻa vaittatum nāṅkaḷtāṉ

Birth in Maturai

We were born as the dancing diety at Maturai,
Destroyed the place as Kaṇṇaki
And annihilated the armies
With God's grace we restored the sceptre
And progeny of the Pāṇṭiyā king

நிலவுலகப் பிறவியில் அந்தணன் கொடுமை

பின்பு தான்புவி லோகத்தி லுள்ளவர்
பிறவிதான் சொல்லக் கேளுமகதேவா!
ஆதி தன்னில் பெரும்பறையனிடம்
ஆகவே யிருபேர்கள் பிறந்ததும்
பிறந்து யிளவயதுப் பிராயமாய்ப்
பெருக வயதுபன்னி ரண்டிலே
அறந்தழைக்கும் சிவனரு ளாலேதான்
அந்த ணன்ஒரு வேதியன் கண்டதும்
மண்டபம் பூங்குழ லாளை யின்றைக்கு
மருக வாவென்று வார்த்தைகள் சொன்னதும்
சொன்ன போது மனமும்வே றாகியே
தோகை யர்வர மாட்டே னென்றதும்
கண்டிருந்து கையில் கத்தி கொண்டல்லோ
கதற[1] வெட்டிக் கிணத்திலே தள்ளினான்

மகதேவரே! இப்பூமியில் இருவரும் பறையனுக்குப் பிள்ளைகளாகப் பிறந்தோம். சிவனருளால் பன்னிரெண்டு வயதடைந்தோம். வேதியன் ஒருவன் எங்களைப் பார்த்தான் பூவையணிந்த கூந்தலோடு விளங்கிய என் சகோதரியின்மீது ஆசைகொண்டு, என்னுடன் மருவ வா என்று அழைத்தான். மனம் நொந்து அந்தணன் விருப்பத்தை மறுத்தாள். அந்தணன் அவளைக் கத்தியால் குத்திக் கிணற்றிலே தள்ளிவிட்டான்.

சு.சொல் : 1. கவள

Nilavulakap piṟaviyil antaṇaṉ koṭumai

piṉpu tāṉpuvi lōkatti luḷḷavar
piṟavitāṉ collak kēḷumakatēvā!
āti taṉṉil perum paṟaiyaṉiṭam
ākavē yirupērkaḷ piṟantatum
piṟantu yiḷavayatup pirāyamāyp
peruka vayatupaṉṉi ranṭilē
aṟantaḷaikkum civaṉaru ḷāiētāṉ
anta ṇanoru vētiyaṉ kaṇṭatum
maṇṭapam pūṅkuḷa lāḷai yiṉṟaikku
maruka vāveṉṟu vārttaikaḷ coṉṉatum
coṉṉa pōtu maṉamumvē ṟākiyē
tōkai yarvara māṭṭē ṉeṉṟatum
kaṇṭiruntu kaiyil katti koṇṭallō
kataṟa veṭṭik kiṇattilē taḷḷiṉāṉ

Brahmin Guetly in this world

Then only we took rebirth inthis world
Oh! hear me Makatēvā
In the days of yore we were born of
The great paṟaiyaṉ and in our younger days
Around the age of twelve, in our full bloom of virtue
With the grace of Civaṉ one brahmin saw us.
The flower decked beautiful haired sister
Was called by a brahmin with great lust.
Shocked at this Nīli rejected the brahmin
Who, ruthlessly murdered her with a knife
And pushed her into a well.

தங்கையுடன் நீலன் இறத்தல்

தள்ளி விட்ட பொழுதிலே தங்கையைத் 75
தமயன் தேடியே தங்கையைக் கண்டதும்
மீளவும் உண்மை தானறி யாமலே

மெல்லியர் பிறந்த யிடத்திலே
தங்கா உன்னைச் சதிசெய்தா னென்று
தானும்உன் கூடவே மடிவே னென்னா
மங்கை நல்லா ளிறந்த யிடத்திலே
வந்து கூடித் தமயனு மாண்டதும்

தேடி வந்த அண்ணன் இறந்து கிடந்த தங்கையைப் பார்த்தான் உண்மையை அறியாமல், பெற்றவர்களே சதிசெய்து கொன்றுவிட்டார்கள் என்று கருதினான். தானும் தங்கை இறந்த இடத்திலேயே இறந்துவிட்டான்

சதி - அழிவு; வஞ்சனை

Taṅkaiyuṭaṉ nīlaṉ iṟattal

taḷḷi viṭṭa poḻutilē taṅkaiyait
tamayaṉ tēṭiyē taṅkaiyaik kaṇṭatum
mīḷavum uṇmai tāṉaṟi yāmalē
Melliyar piṟanta yiṭattilē
taṅkā uṉṉaic caticeytā ṉeṉṟu
tāṉumuṉ kūṭavē maṭivē ṉēṉṉā
maṅkai nallā ḷiṟanta yiṭattilē
vantu kūṭit tamayaṉu māṇṭatum

Nīlaṉ dies with his sister

Around this time the brother coming
In search of his sister saw her dead.
Not knowing the truth - mistaking it
To be the evil work of the parents,
Decided to die along with her
Saying this, he also died in the well.

மீண்டும் கயிலையடைதல்

மாண்டு போயிரு பேரு மறுபடி
வந்து கையிலாசம் தன்னிலே சேர்ந்ததும்
சேர்ந்த போது மறுபிற விதனில்
சிந்தை மெய்க்கச் சிவதலம் சேவிக்க

இறந்த தமையனும், தங்கையும் கயிலாயம் வந்து சிவனை வழிபட்டு வந்தார்கள்.

Mīṇṭum kayilaiyaṭaital

māṇṭu pōyiru pēru maṟupaṭi
vantu kaiyilācam taṉṉilē cērntatum
cērnta pōtu maṟupiṟa vitaṉil
cintai meykkac civatalam cēvikka

At kailash again

The dead twin returned to Kailash
Thereafter began their worship of Civaṉ in rebirth,
To their heart's content, in his own abode.

நட்டுவர் பிறவி

சிறந்த தாதி வயிற்றில் செனித்ததும்
நட்டுவ னாக நீலன் பிறந்தல்லோ
நல்ல தங்கையும் தாதியு மாகினார்
விட்ட கூத்துக்கும் நட்டுவ தாளமும்
விதவித மாகத் தொழிலும்[1] வ்ருத்தியே
அப்போது தெய்வ நீலனும் நீலியும்
அன்று தாதியும் நட்டுவனு மாக
ஆகவே வளர்ந்து பன்னி ரண்டிலே
அவனி மெய்க்கச் சங்கீதங்கள் பாடுவார்

நீலனும் நீலியும் தாதி ஒருத்தியின் வயிற்றில் பிறக்கின்றனர் நீலன் நட்டுவனாகவும், நீலி தாதியாகவும் வளர்கின்றனர் இவ்வாறு பிறந்து வளர்ந்து தங்களது பன்னிரெண்டாம் வயதிலே இந்த உலகம் போற்றக்கூடிய அளவிலே சங்கீதங்கள் பாடத் தொடங்கினர்

தாதி - அடியவள் நட்டுவன் - நடனம் கற்றுத்தருபவன்; ஜதி சொல்பவன். அவனி - பூமி.

சு.சொல் : 1 தொளிலும்

Naṭṭuvar piṟavi

ciṟanta tāti vayiṟṟil ceṉittatum
naṭṭuva ṉāka nīlaṉ piṟantallō
nalla taṅkaiyum tātiyu mākiṉār

viṭṭa kūttukkum naṭṭuva tāḷamum
vitavita mākat toḻilum varuttiyē
appōtu teyva nīlaṉum nīliyum
aṉṟu tātiyum naṭṭuvaṉu māka
ākavē vaḷarntu paṉṉi ranṭilē
avaṉi meykkac caṅkītaṅkaḷ pāṭuvār

The birth of the dancer

Born of a Nurse as their children,
Nīlaṉ grew up a dancer,
Nīli became a sister and nurse of Nīlaṉ
With great pains he learnt the art of dancing.
Godly Nīlaṉ and Nīli grew up as dancer and nurse
And at twelve sang songs
That bewitched the whole world.

நீலி, முன்பு தன்னைக் கொன்றவனை அறிதல்

தவமாக மறையவன் சந்தித்துத்
 தைய்ய நல்லாளுடன் கூடினான்
பாட கம்சிலம் போலங்கள் பாடவே
 பைந்தொடியும் மறையவனு மாகவே
நாடக மாடிவீற் றிருக்கும்-நாளில்
 நாயகி யாள்குடி புகுந்தே பார்த்தாள்
பார்த்தபோது தலையில் கல்லைப் போட்டுப்
 பண்டுதான் வெட்டுப்பட்டதோர் னாதியே
ஆதி தான்மற வேதியனும் சொல்ல
 ஆயிழை யாளும் யேதுரை சொல்லுவாள்

தவம் மேற்கொண்ட வேதியன் ஒருவன் தாதியைச் சந்திக்கிறான் நீலியாகிய அவளுடன் பழகுகிறான். பாடகமும், சிலம்பும் இசைக்க மகிழ்கின்றனர் தாதியும், மறையவனும் நாடகமாடி மகிழ்கின்றனர். தாதியானவள் அம்மறையவளை உற்று நோக்கிப் பார்க்கின்றாள். முன்பு கல்லைத் தூக்கித் தன் தலையில் போட்டுக் கொன்றவன் இவனே என்பதை உணர்கிறாள் இவனால் கொல்லப்பட்ட அனாதையே நாம் என்றும் அறிகிறாள்.

Nīli, munpu tannaik konravanai arital

tavamāka maraiyavan cantittut
taiyya nallāḷuṭan kūṭinān
pāṭa kamcilam pōlaṅkaḷ pāṭavē
paintoṭiyum maraiyavanu mākavē
nāṭaka māṭivir rirukkum - nāḷil
nāyaki yāḷkuṭi pukuntē pārttāḷ
pārttapōtu talaiyil kallaip pōṭṭup
panṭutān veṭṭuppaṭṭatōr nātiyē
āti tānmara vētiyanum colla
āyilai yāḷum yēturai colluvāḷ

Nīli comes to know of her killer in previous birth

Vedic expert of great penitence met
Nīli the nurse and moved close with her.
Both enjoyed the music and dance.
With *Pāṭakam* and anklet and the nurse
Looked intensely at the face of the vedhic expert
Sudden came the realization that it was
The same man who killed her putting a stone on her head.
Thus orphaned was she previously

நட்டுவ வாழ்க்கை

நாழியிலே தமையனும் நட்டுவனுமாய்
நல்லதங்கையும் தாதியானாரே
நட்டுவனும் தாதியுமாய் நாங்கள்வந்து பிறந்ததுவும்
இட்டமுடன் கூத்து நாடகமும்
எடுத்துப் பதினெட்டுத் தாளத்துக்கும்
கொட்டும் பதினெட்டுத் தாளத்துக்கும்
காத்துமக ராஜராஜனுமாய்
ஏட்டுக் கணக்குக்கும் ஈட்டுக்குமாய்
இனியமகராச நீலராசன்
ஆணரசன் நட்டுவனும் அதியதங்கை தாதியுமாய்
நாணயமாய் வாழ்ந்திடும்நாள் நம்பிகா சாசை கொண்டு.

அண்ணன் நட்டுவனாகவும், தங்கை தாதியாகவும் பிறந்துள்ளார்கள். விருப்பத்துடன் கூத்தும் நாடகமும் நடத்தி, பதினெட்டுவகையான தாளத்துக்கும் அதிபதியாகி இருவரும் சிறந்த வாழ்க்கையை நடத்தி வந்தார்கள் தாதியின் கணவன் பணத்தின் மீது பேராசை கொள்ளுகிறான்.

Naṭṭuva vāḻkkai

nāḻiyilē tamaiyaṉum naṭṭuvaṉumāy
nallataṅkaiyum tātiyāṉārē
naṭṭuvaṉum tātiyumāy nāṅkaḷvantu piṟantatuvum
iṭṭamutaṉ kūttu nāṭakamum
eṭuttup patiṉeṭṭut tāḷattukkum
koṭṭum patiṉeṭṭut tāḷattukkum
kāttumaka rājarājaṉumāy
ēṭṭuk kaṇakkukkum īṭṭukkumāy
iṉiyamakarāca nīlarācaṉ
āṇaracaṉ naṭṭuvaṉum atiyataṅkai tātiyumāy
nāṇayamāy vāḻntiṭumnāḷ nampikā cācaikoṇṭu

Life as dancer

In due course brother and sister
Became dancer and his nurse,
Being born as dancer and nurse
And with pleasure practised dance and drama
And became masters of all rhythm
And eighteen varieties of different rhythms.
The great Nīlarācaṉ, the king of dance
Stood equal to anything in the written texts
They led a decent life as dancer and nurse
And Nīlaṉ became greedy of money.

செம்பியன் மக்களாய்ப் பிறத்தல்

தேடுகிற திரவியமும் செம்பொன்நவமணி அணிந்ததுவும்
வாடுமிடை பெண்கொடியை மறந்தொருநாள் நடந்ததுவும்
தேடியிவன் போனதுவும் தேன்மொழியைக்' கொன்றதுவும் 110

வாடியந்தத் தங்கையுடன் மாண்டதுவும் பூதலத்தில்
ஆண்டவனார் திருவருளால் அரிவயரும் தங்கையுமாய்
மீண்டும்ஒரு செம்பியர்க்கு மேதினி யெலாம்புகழ
குதலைமொழி கேளாமல் கொஞ்சுங்கிளி மொழியாரும்
இப்படியே சோழனுக்கு யிரண்டுமக வாய்ப்பிறந்து

பொன்னாலும், நவமணிகளாலும் செய்யப்பட்ட அணிகலன்களை அணிந்தான். மெல்லிய இடையையுடைய நட்டுவத்தியாகிய நீலி அறியாமலேயே இச்செயல் நடந்தது. தேடிய நட்டுவன், தேன் போன்ற இனிய மொழிகளைப் பேசக்கூடிய நட்டுவத்தியைக் கொன்று விட்டான். பின்பு கொன்றதை நினைத்துத் தங்கையுடன் தானும் இறந்துவிட்டான். ஆண்டவனின் திருவருளால் அண்ணனும் தங்கையுமாக மீண்டும் புகழ்மிக்க சோழகுலத்திலே பிறக்கின்றனர்.

சு சொல் · 1 தேன்மொளி.

Cempiyaṉ makkaḷāyp piṟattal

tēṭukiṟa tiraviyamum cempoṉṉavamaṇi aṇintatuvum
vāṭumiṭai peṇkoṭiyai maṟantorunāḷ naṭantatuvum
tēṭiyivaṉ pōṉatuvum tēṉmoḻiyaik koṉṟatuvum
vāṭiyivaṉ pōṉatuvum tēṉmoḻiyaik koṉṟatuvum
vāṭiyantat taṅkaiyuṭaṉ māṇṭatuvum pūtalattil
āṇṭavaṉār tiruvaruḷāl arivayarum taṅkaiyumāy
mīṇṭumoru cempiyarkku mētiṉi yelāmpukaḻa
kutalaimoḻi kēḷāmal koñcuṅkiḷi moḻiyārum
ippaṭiyē cōḻaṉukku yiraṇṭumaka vāyppirantu

Born as Cempiaṉ's children

Nīlaṉ began wearing gold and precious stones
Even without the knowledge of
The slender waisted Nīli
The dancer going in search of his companion,
Killed the sweet tongued Nīli
Realizing his evil act, he killed himself
Along with his sister. With God's grace
They were once again born on earth

Of Cempiaṉ who was not blessed
With the joy of listening to the lisping of babies
Thus came on this earth the children of
Cōlaṉ Cempiaṉ

மக்களைச் செம்பியன் வெறுத்தல்

மேய்ப்புடனே செம்பியன்தான் மேதினியை அழித்ததுவும்
கண்கறுத்துச் செம்பியகோன் காட்டிலேவிட் டெறிந்ததுவும்
வீண்கறுத்துப் பழகைநகர் வீறுடனே[1] அழித்ததுவும்

இருவரும் சோழ ராச்சியத்தை அழிக்கின்றனர். கோபம் கொண்ட செம்பிய ராசன் குழந்தைகளைக் காட்டிலே விட்டுவரச் சொல்லிவிட்டான்

சு.சொல் : 1 வீறுடநே

Makkaḷaic cempiyaṉ veṟuttal

mēypputaṉē cempiyaṉtāṉ mētiṉiyai aḻittatuvum
kaṇkaṟuttuc cempiyakōṉ kāṭṭilēviṭ ṭeṟintatuvum
vīṇkaṟuttup paḻakainakar vīṟuṭaṉē aḻittatuvum

Cempiaṉ hates his children

The children destroyed with vigour
Paḻakai city and razed down the land of Cempiaṉ
With impunity. And the angry Cempiaṉ
Ordered them to be left in the forest.

கயிலையில் வரம்

அழித்துக்கொண்டு கயிலையிலே அழியாத வரம்வேண்டி
தெளிந்துவந்தே மகதேவர் செப்பவும்கேள் துலையாது
காகதேவர் கல்குளத்தில்வாழ் பல்பனாபப் பெருமாள்
செகமகிழச் செப்புவாராம் தெய்வகுல நீலராசன்
இன்னம் சொல்லத்துலையாது யெங்களுட பிறவியது
வன்னமுள்ள நீலன்சொல்ல மகதேவர் கேட்டபோது

தென்பழகை நகரினை அழித்து, கயிலாயம் சென்று அழியாத வரங்களை வேண்டிப்பெற்றுத் தெளிவாக வந்துள்ளேன் மகதேவா! என்று கல்குளத்தில் வீற்றிருக்கும்

பல்பனாபப் பெருமாளிடம் முறையிட்ட நீலராசன், எங்களுடைய பிறவிச் செய்திகளை மேலும் சொல்லிக்கொண்டே போகலாம் என்று கூறினான்.

Kayilaiyil varam

aḻittukkoṇṭu kayilaiyilē aḻiyāta varamvēṇṭi
teḷintuvantē makatēvar ceppavumkēḷ tulaiyātu
kākatēvar kalkuḷattilvāḻ palpaṉāpap perumāl
cekamakiḻac ceppuvārām teyvakula nīlarācaṉ
iṉṉam collattulaiyātu yeṅkaḷuṭa piṟaviyatu
vaṉṉamuḷḷa nīlaṉcolla makatēvar kēṭṭapōtu

Boon at Kailash

These destroyers wanted at Kailash
The boon of deathlessness (immortality)
And have come to Makatēvar, getting the boon
Nīlārācaṉ averred to Palpaṉāppa perumāḷ of Kalkuḷam
That their story of birth is endless
And he can go on narrating it.

ஈசன் திருமாலிடன் அனுப்புதல்

உன்னைப்போல் சமர்த்தனிந்த உலகந்தனில் கண்டதில்லை
நன்னெறிகள் நடக்குமந்த நகானந்தர புரமதிலே
உன்புதுமை உலகளந்த உற்றதிரு மாலறிவார்
அன்புடன்போ நீலாவே அனுப்பிவிட்டார் மகதேவர்

நீலன் கூறியதைக் கேட்ட மகதேவர், உன்னைப்போலச் சமர்த்தான ஒருவரை இந்த உலகத்தில் பார்க்கவில்லை. உன்னுடைய பெருமைகளை, ஒழுக்க நெறியில் உயர்ந்து விளங்கும் நாகானந்தரபுரத்தில் எழுந்தருளியுள்ளவரும், இந்த உலகத்தை மூன்றடியால் அளந்தவருமாகிய திருமால் நன்கு அறிவார். அன்புடனே போ என்று சொல்லி நீலனை அனுப்பி வைத்தார்

Īcaṉ tirumāliṭam aṉupputal

uṉṉaippōl camarttaṉinta ulakantaṉil kaṇṭatillai
naṉṉeṟikaḷ naṭakkumanta nakāṉantara puramatilē

uṉputumai ulakaḷanta uṟṟatiru mālaṟivār
aṉputaṉpō nīlāvē aṉuppiviṭṭār makatēvar

God sends him to Perumāḷ

There is none so clever as you on this earth
Go to Nākāṉantapuram, a place high
In character and virtue and meet
Perumāḷ the one who measured the world
With his foot. He knows your worth
So said Makatēvar (and despatched Nīlaṉ)

இருவரும் குளித்துறை அடைதல்

இன்பமுடன் களிகூர்ந்து யிருகய்யாலே தொழுது
அன்புடைய தமையனுடன் அதியதங்கை நீலியுமாய்
நலபனுட திருவருளால் நல்லகோட்டை வாசல்விட்டு
பல்பனா புரமும்விட்டு பரளவள்ளி ஆறும்விட்டு
நடிப்புடனே வழிநடந்து நல்லகோன் புரமும்விட்டு
சீர்சிறந்த தெய்வதம்பிரான் திருவிதாங் கோடும்விட்டு
அறந்தழைக்கும் சிவன்முதலார் அழகியமண் டபம்கடந்து
நாட்டமுடன் நீலதம்புரான் நாயகனே துணையெனவே
கூட்டமா சோலைவிட்டுக் குளித்துறைஆறு தனில்வந்தாரே

மகிழ்ச்சியடைந்த நீலனும் நீலியும் இருகைகளாலும் மகதேவரை வணங்கி, திருமாலின் திருவருள் துணை நிற்க நல்லகோட்டைவாசல், பல்பனாபுரம் பரளவள்ளியாறு, நல்லகோன்புரம், திருவிதாங்கோட்டுப் பகுதிகளைக் கடந்தனர் அறந்தழைக்கக்கூடிய சிவபெருமானின் அழகிய மண்டபத்தினைக் கடந்து நாயகனே துணையென்று சோலை வழியாகக் குளித்துறை ஆற்றுக்கு வந்தனர்.

Iruvarum kuḷitturai aṭaital

iṉpamuṭaṉ kaḷikūrntu yirukayyālē toḻutu
aṉpuṭaiya tamaiyaṉuṭaṉ atiyataṅkai nīliyumāy
nalapaṉuṭa tiruvaruḷāl nallakōṭṭai vācalviṭṭu
palpaṉā puramumviṭṭu paraḷavaḷḷi āṟumviṭṭu
naṭipputaṉē vaḻinaṭantu nallakōṉ puramumviṭṭu
cīrciṟanta teyvatampirāṉ tiruvitāṅ kōṭumviṭṭu

arantalaikkum civanmutalār alakiyaman tapankatantu
nāttamutan nīlatampurān nāyakanē tunaiyenavē
kūttamā cōlaivittuk kulitturaiāru tanilvantārē

Both reach kulliturai

With joy they worshipped Makatēvar
With both hands and brother and sister,
With the grace of God, left Nallakottai entrance,
Crossing Palpanāpuram and Paralavalli river
They reached Nallakōnpuram
Departed from Godly Tampirān's Tiruvitāṅkōtu
And crossing Civan's great hall full of dharma and virtue
Putting his trust in god, through many groves
Came to Kulitturai river.

சோழநாட்டுச் சிறப்பு

வந்தனனே நீலராசன் வடிவழக நீலன்
வாவியும் பூங்காவனமும் வைத்தசெந் நெல்நிலமும்
மந்திகுதி பாயுமலை வன்னமுள்ள நாடு
மரபுநெறி தவறாத மன்னர் மலைநாடு
கூறத் துலையாத குளம்ஏரி களுமுடைத்து
குளித்துறையில் வெள்ளமது பாயுமலை நாடு
ஆறிலொரு கடமைகொண்டு ஆளும்தெய்வ நாடு
அவனிதனில். . . . .
சென்னர்மலை நன்னாடு சேரமலை நாடு
தெய்வநெறி குன்றாத சோழமன்னர் நாடு.

குளம், பூங்காவனம், செந்நெல் நிலம் ஆகியவற்றின் வழியே குரங்குகள் குதித்து விளையாடுகின்றமலை, அழகுடைய நாடு, மரபுநெறி தவறாத மன்னர்கள் ஆட்சிபுரியும் மலைநாடு, குளங்களும், ஏரிகளும் நிரம்பி குளித்துறையில் வெள்ளம் பாய்கின்ற மலைநாடு, சென்னர்மலை, சேரமலைநாடு, தெய்வநெறி மிகுந்த சோழமன்னர் நாடு ஆகியவற்றின் வழியே நடந்து வந்தனர்.

Cōlanāttuc cirappu

vantananē nīlarācan vativalaka nīlan
vāviyum pūṅkāvanamum vaittacen nelnilamum

mantikuti pāyumalai vaṉṉamuḷḷa nāṭu
marapuneṟi tavaṟāta maṉṉar malaināṭu
kūṟat tulaiyāta kuḷamēri kaḷumuṭaittu
kuḷitturaiyil veḷḷamatu pāyumalai nāṭu
āṟiloru kaṭamaikoṇṭu āḷumteyva nāṭu
avaṉitaṉil . . . .
ceṉṉarmalai naṉnāṭu cēramalai nāṭu
teyvaneṟi kuṉṟāta cōḻamaṉṉar nāṭu

Special features of Cōḻā land

Nīlarācaṉ, shapely and handsome man
Crossed tanks, groves and fields of golden paddy,
And lands full of playful monkeys,
Lands of kings never going against tradition,
And mountain land full of tanks and lakes.
And reached Kuḷituṟai full of flooded streams
And land of God, governed by the sixth sense of duty
It is called the good Ceṉṉar land,
Cērā land and *Cōḻā* land
Never failing in the laws of God.

இயற்கை அழகு காணுதல்

வன்னமுள்ள நீலராசன் ராசன்தெய்வ ராசன்
மலைநாடு குளித்துறை ஆற்றங் கரையிலேதான்
கமுகினங்கள் வளர்ந்து தென்னைமர மதிலேசாட
கருமந்தி கள்ஓடி விளையாடு மந்தநாடு
மாவின்கனி யைப்பறித்து வயலதிலே யெறிய
மந்திகுரங் கோடிச்சென்று மாங்கனி யருந்த
தாவிக் குதித்தோடி மந்திவிளை யாடக்கண்டு
சங்கையுள்ள நீலராசன் மங்கையர் கண்டு
அகமகிழ்ந்து குருவினமும் புள்ளினமும் தாராவும்
அதுபறக்கப் பூச்சொரியும் அழகுதெய்வ நாடு

குளித்துறை ஆற்றங்கரையிலே கமுகு மரங்கள் வளர்ந்து தென்னை மரத்திலே சாய்ந்திருந்தன. கருங்குரங்குகள் ஓடி விளையாடி மாம்பழங்களைப் பறித்து

வயல்வெளிகளிலே எறிய, ஆண்குரங்குகள் ஓடிச்சென்று அக்கனிகளை உண்கின்றன. நீலனையும் நீலியையும் பார்த்த குருவி, கொக்கு போன்ற பறவை இனங்கள் மனம் மகிழ்ந்து பறக்கும் போது பூக்களைச் சிந்துகின்றன.

கமுகு - பாக்கு. சங்கை - மதிப்பு.

Iyaṟkai aḻaku kāṇutal

vaṉṉamuḷḷa nīlarācaṉ rācaṉteyva rācaṉ
malaināṭu kuḷittuṟai āṟṟaṅ karaiyilētāṉ
kamukiṉaṅkaḷ vaḷarntu teṉṉaimara matilēcāṭa
karumanti kaḷōṭi viḷaiyāṭu mantanāṭu
māviṉkaṉi yaippaṟittu vayalatilē yeṟiya
mantikuraṅ kōṭicceṉṟu māṅkaṉi yarunta
tāvik kutittōṭi mantiviḷai yāṭakkaṇṭu
caṅkaiyuḷḷa nīlarācaṉ maṅkaiyar kaṇṭu
akamakiḻntu kuruviṉamum puḷḷiṉamum tārāvum
atupaṟakkap pūccoriyum aḻakuteyva nāṭu

Witnessing nature's beauty

Godly Nīlarācaṉ reached mountainous land
On the banks of Kuḷittuṟai river
Arecanut trees lean on coconut trees
Black monkeys run here and there
In playful mood and they throw
Mango fruits on the fields
And other monkeys run to catch and eat them
Seeing this playfulness Nīlaṉ the respectable
Came, pleasurably seen by the womeṅ,
And with great joy, thrush, cranes and other birds
Showered flowers on him in this beautiful godly land

நாட்டு வளம்

மாங்கனிகள் பூங்கனிகள் வருக்கைபிலாக் கனிகள்
வயலில்தே னுடைந்தாறாய் ஓடிவிடு நாடு
தென்னைமடல் அடந்து செந்நெல் நிலமதிலே சாட 160

இத்தகு அழகுடைய தெய்வநாட்டில் மாம்பழங்களும், பலாப்பழங்களும் நிறைந்து தேன்கூடுகள் உடைந்து தேனானது வயல் வெளிகளில் ஆறுபோல் ஓடுகின்றது. தென்னை மரங்கள் அடர்ந்து அதன் மடல்கள், உயர்ந்து வளர்ந்திருக்கின்ற நெற்பயிர்களிலே மோதுகின்றன.

பிலாக்கனி - பலாப்பழம்.

Nāṭṭuvaḷam

māṅkaṉikaḷ pūṅkaṉikaḷ varukkaipilāk kaṉikaḷ
vayaliltē ṉuṭaintāṟāy ōṭiviṭu nāṭu
teṉṉaimaṭal aṭantucennel nilamatilē cāṭa

Fertile land

It is a land where mango fruits,
Jack fruits and other fruits
Pour their honey like a river into the fields.

ஆட்சிச்சிறப்பு

குளித்துப் புனலுருகிப் பொங்கும்சேர மலைநாட்டில்
கூடுவார்கள் பலருமுண்டு யேற்பாரு மில்லை
யெப்போதும் செல்வம் குறையாத மன்னர்நாடு
கடுவாயும் பசுவும் ஓர்துறையில் நீருண்ண
கற்பனையாய் சேரமன்னர் ஆளுமந்த நாடு
நன்னாடு பொன்னாடு நல்லமலை நாடு
நாடதிலும் அழகான நல்லமலை நாடு

நீர்வளமும், செல்வவளமும் எப்போதும் குன்றாத நாடு. புலிகளும், பசுக்களும் ஓரிடத்திலே நீர் அருந்த, சேரமன்னர் ஆளுகின்ற மலைநாட்டைப் பார்த்து மனம்மகிழ்ந்தனர்.

புனல் - ஆறு. கடுவாய் - ஒருபுலி.

Āṭciccirappu

kuḷittup puṉalurukip poṅkumcēra malaināṭṭil
kūṭuvārkaḷ palarumuṇṭu yēṟpāru millai
yeppōtum celvam kuṟaiyāta maṉṉarnāṭu
kaṭuvāyum pacuvum ōrtuṟaiyil nīruṇṇa

karpanaiyāy cēramannar āḷumanta nāṭu
nannāṭu ponnāṭu nallamalai nāṭu
nāṭatilum aḷakāna nallamalai nāṭu

The glorious rule

It is a mountainous land
Full of flooding rivers; a place
Of assembly for many; but none to ask for more,
The land of the king with undiminished riches,
A dreamland where the tiger
And the cow drink from the same water source
A land governed by Cērā king
A good land, golden country, hilly land
A land most beautiful, a good hilly terrain.

நீலன் குளித்துறை கடந்து செல்லுதல்

அந்நாட்டில் வளப்பமது கண்டு நீலராசன்
அகமகிழ்ந்து குளித்துறை ஆறது கடந்தார்
ஆச்சியர்கள் வெண்ணெயது திருடியது உண்ண 170
அச்சுதனார் வாழும் அனந்தரபுரத்தை நோக்கி

மலைநாட்டில் வளப்பங்களைப் பார்த்து உள்ள மகிழ்ச்சியுடன் குளித்துறை ஆற்றைக் கடந்தனர்.

அச்சுதன் - விட்டுணு.

Nīlan kuḷitturai kaṭantu cellutal

annāṭṭil vaḷappamatu kaṇṭu nīlarācan
akamakiḻntu kuḷitturai āratu kaṭantār
ācciyarkaḷ veṇṇeyatu tiruṭiyatu uṇṇa
accutanār vāḻum anantarapurattai nōkki

Nīlan crosses kuḷitturai

Witnessing the fertile riches of this land,

Nīlaṉ crossed Kuḷitturai with joy,
And proceeded towards Aṉantarapuram,
The abode of Tirumāl, who stole,
The butter of the milkmaids.

சாலயன் பதியடைதல்

வாசம்புகழ் மலைமார்ப னீலதம் புரனார்
வழிநடந்து பாறைச்சாலை வயல்புரமும் விட்டார்
கடந்து திருவட்டாறு நெய்யாற்றங் கரையும்
கமுகம்பூச் சோலைவிட்டுக் காவலவ னீலன்
வெங்கா லூரும்விட்டு விளிஞ்ஞ மதுவிட்டு
வீரப்பிலா ஆசனியும் காடுகளும் விட்டு
வரம்பெரிய நாராயணனார் திருப்பதியை நோக்கி
வரம்சிறந்த கருமனை ஆற்றங் கரைவந்தார்
தண்டமிழ்சேர் நீலராசன் கொண்டாடிக் கொண்டு
தங்கமலை நாட்டில் சாலையன்பதியைக் கண்டாரே.

மலைபோன்ற திண்ணிய மார்பினையுடைய நீலதம்புரனார் பெருமாள் எழுந்தருளியுள்ள அனந்தரபுரத்தை நோக்கி, நடக்கத் தொடங்கினார். பாறைச்சாலை, வயல்புரம், திருவட்டாறு, நெய்யாற்றங்கரை, கமுகமரங்கள், நீண்டு வளர்ந்துள்ள பூஞ்சோலைகள் ஆகியவற்றைக் கடந்து கருமனை ஆற்றங்கரைக்கு வந்தனர். தங்கமலை நாட்டில் சாலையன்பதியை அடைந்தனர்

Cālayaṉpatiyaṭaital

vācampukaḻ malaimārpa ṉīlatam puraṉār
vaḻinaṭantu pāṟaiccālai vayalpuramum viṭṭār
kaṭantu tiruvaṭṭāṟu neyyāṟṟaṅ karaiyum
kamukampūc cōlaiviṭṭuk kāvalava ṉīlaṉ
veṅkā lūrumviṭṭu viḷiñña matuviṭṭu
vīrappilā ācaṉiyum kāṭukaḷum viṭṭu
varamperiya nārāyaṇaṉār tiruppatiyai nōkki
varamciṟanta karumaṉai āṟṟaṅ karaivantār
taṇṭamiḻcēr nīlarācaṉ koṇṭāṭik koṇṭu
taṅkamalai nāṭṭil cālayaṉpatiyaik kaṇṭārē

Reaching Cālaiyanpati

Nīlatampurān̲ with strong, fine scented chest
Walked across Pāraiccālai and left the fields,
Crossing Tiruvaṭṭāru, and the bank of Neyyāru,
Crossing arecanut groves, Venkālūr,
Viḷiñjam and a number of forests,
Proceeded towards the holy place of perumāḷ
And reached the banks of Karumanai river
Praising the beauty of Tamil
At last came to Cālaiyan̲pathi in the land of Golden mount.

திருவனந்தபுரமடைதல்

*சாலையாம் பதியாம் தென்னஞ் சோலையாம்
சங்கம் கூடி யிருக்கின்ற சந்தியாம்
சத்தி ரங்களாம் சாவடி வாசலாம்
தர்மம் செய்கிற மண்டப வாசலும்
சிந்தை மெய்க்கும் புகழ்பெற்ற நீலனார்
தெக்கு ளல்ல தெருவழி யாய்வர
சித்திரக் காலில் சிலம்பு புலம்பிட
சென்று தானழு பேரும் நடந்தனர்
தர்க்கமில் லாம லேபுகழ் நீலனும்
சாலை யாம்பதி ஊரும் கடந்தல்லோ
வந்த னர்புகழ் நீலனும் நீலியும்
சாலை யாம்பதி ஊரும் கடந்தல்லோ
வந்த னர்புகழ் நீலனும் நீலியும்
வாவி யாஞ்சில நீராவிப் பொய்கையாம்
செந்தா மரையாம் வாவிபூங் காவுகள்
திருவ னந்தர புரத்திலே வந்தனர்.
வந்து கண்டாரே நீலனும் நீலியும்
மாய வாழும் அனந்தர புரத்திலே
செல்லும் போது திருநீல தம்புரான்
சிறந்த கீழத் தெருவிலே வந்தனர்*

வந்தனன் பெருமாளுடைய சன்னதியில்
மறையவர் கூடுவார் பெருமையாம்
சிந்தை மெய்க்கும் பிராமண கன்னியர்
தீர்த்த மாடவே தெப்பக் குளங்களாம்
குளமும் நீராடும் கல்படி மண்டபம்,
கோவில் தெருவில் நீலன் வருகிறாரே

நீலனும், நீலியும் அணிந்துள்ள சிலம்பு இசை எழுப்ப நடந்து சத்திரங்களையும், சாவடிகளையும், தர்மசாலைகளாகிய மண்டப வாசல்களையும் கடந்து தெற்கிலுள்ள தெருவழியாகச் சென்றனர். வாவிகளையும், கேணி, குளம், பூஞ்சோலைகளையும் கடந்து திருவனந்தபுரத்தின் கீழத்தெருவின் வழியாக அந்தணர்கள் கூடியிருக்கும் பெருமையையுடைய பெருமாளின் சன்னதியை அடைந்தனர். அந்தணக் கன்னிப் பெண்கள் தீர்த்தமாடும் தெப்பக்குளம், கல்படி மண்டபம் ஆகியவற்றின் வழியாகக் கோவில் தெருவில் வருகின்றனர்

Tiruvanantapuramataital

cālaiyām patiyām tennañ cōlaiyām
caṅkam kūṭi yirukkinra cantiyām
catti raṅkaḷām cāvaṭi vācalām
tarmam ceykira manṭapa vācalum
cintai meykkum pukulperra nīlanār
tekku ḷalla teruvaḷi yāyvara
cittirak kālil cilampu pulampiṭa
cenru tānamū pērum naṭantanar
tarkkamil lāma lēpukaḷ nīlanum
cālai yāmpati ūrum kaṭantallō
vanta narpukaḷ nīlanum nīliyum
vāvi yāñcila nīrāvip poykaiyām
centā maraiyām vāvipūṅ kāvukaḷ
tiruva nantara purattilē vantanar
vantu kaṇṭārē nīlanum nīliyum
māya vālum anantara purattilē
cellum pōtu tirunīla tampurān
ciranta kīlat teruvilē vantanar
vantanan perumāḷuṭaiya cannatiyil
maraiyavar kūṭuvār perumaiyām

cintai meykkum pirāmaṇa kaṉṉiyar
tīrtta māṭavē teppak kuḷaṅkaḷām
kuḷamum nīrāṭum kalpaṭi maṇṭapam
kōvil teruvil nīlaṉ varukiṟārē

Arrival at Tiruvaṉantapuram

Cālayaṉpathi, full of coconut groves
A meeting place of the caṅkam,
A place with many inns and choultries,
With an entrance for the hall for dharma
Famed Nīlaṉ, making others heart happy
Entered the place along the south street
The anklet making rhythmic sound.
They crossed the place unchallenged
And went beyond Cālayaṉpathi.
Nīlaṉ and Nīli bathed in the lakes
Tanks and steaming springs and
Crossed lakes full of lotus and flowery groves
And reached Tiruvaṉantaram and
Entered through east street perumāḷ's sanctorum
Where *vētic* scholars proudly assemble.
There were tanks meant for bathing
By brahmin virgins who strike our mind.
Tanks there were with flight of steps
For bath and Nīlaṉ came to this place.

தெருக்களில் நீலன்

வந்தனனே சித்தரங்கு மாளிகையும் கண்டனனே
கொந்தலரும் குழலார்கள் குரவையிடக் கண்டனரே
யிடைதுவள தனமசைய யிருவிழிகள் போராட
கடலடைத்த மார்பனுட கமலமுகக் கன்னியர்கள்
கானமயில் போல்நடையும் கரும்பையொத்த விழியார்கள்
கண்டுநிற்கும் தெருவதிலே காவலவன் நீலன்வர்றார்

சித்தரங்கு மாளிகையில் அடர்ந்த கூந்தலையுடைய மகளிர் குரவையாடினர் மெல்லிய இடையானது துவண்டு வருத்தமுற அணிந்திருந்த பொன்னாபரணங்கள் அசைய இரு விழிகளும் போராட தாமரை போன்ற முகத்தினையுடைய அக்கன்னியர்கள் மயில் போன்று நடந்து செல்லும் தெருவில் வருகின்றனர்.

Terukkaḷil Nīlaṉ

vantaṉaṉē cittaraṅku māḷikaiyum kaṇṭaṉaṉē
kontalarum kuḻalārkaḷ kuravaiyiṭak kaṇṭaṉarē
yiṭaituvaḷa taṉamacaiya yiruviḻikaḷ pōrāṭa
kaṭalaṭaitta mārpaṉuṭa kamalamukak kaṉṉiyarkaḷ
kāṉamayil pōlnaṭaiyum karumpaiyotta viḻiyārkaḷ
kaṇṭuniṟkum teruvatilē kāvalavaṉ nīlaṉvaṟṟār

Nīlaṉ in the streets

On arrival he saw bright castles
Where beautiful plaited women performed
Kuravai dance with their slender waist
Becoming limp and the breasts swaying,
Their eyes waging a battle
They walked along with the vast chested one
The lotus faced ones with sweet eyes like sugarcane
Walked like peacock along the street
Where Nīlaṉ makes his entry.

நான்கு தெருக்களையும் சுற்றுதல்

மண்டபமாம் ஒருபீடமாம் மாளிகையாம் சாவடியாம்
எண்டிசையும் புகழ்படைத்த இலங்கும்திரு வனந்தமதில்
கொண்டல்போல் நிறத்தழகன் கோலமுள்ள நீலராசன்
பெருமாளே யெழுந்தருளும் பெரியதெரு சுத்துவாராம்
திருநாள் சேவித்தாப்போல் தெருநாலும் சுத்துவாராம்
தெற்குத்தெரு மேலத்தெரு சிறந்தநல்ல வடக்குத்தெரு
ஒசாவுந்தான் சுற்றுவாராம் ஒய்யார நீலராசன்

மண்டபங்கள், மாளிகைகள், சாவடிகள் ஆகியவற்றின் வழியாக, புகழ்பெற்ற திருவனந்தபுரத்தில் பெருமாள் எழுந்தருளக்கூடிய பெரிய தெருவினைச் சுற்றி, விசேஷ

ஆராதனை நாளில் வணங்கியது போல வணங்கியவாறு தெற்கு, வடக்கு, கிழக்கு, மேலத்தெரு என்ற நான்கு தெருக்களையும் சுற்றி வந்தனர்.

கொண்டல் - மேகம். ஓசா - உலா.

Nāṉku terukkaḷaiyum Cuṟṟutal

mantapamām orupīṭamām māḷikaiyām cāvaṭiyām
eṇṭicaiyum pukalpaṭaitta ilaṅkumtiru vaṉantamatil
koṇṭalpōl niṟattaḷakaṉ kōlamuḷḷa nīlarācaṉ
perumāḷē yeḻuntaruḷum periyateru cuttuvārām
tirunāḷ cēvittāppōl terunālum cuttuvārām
teṟkutteru mēlatteru ciṟantanalla vaṭakkutteru
ocāvuntāṉ cuṟṟuvārām oyyāra nīlarācaṉ

Going round the four streets

Famed Tiruvaṉantam in all the eight directions
Dotted with halls, altars, castles, inns
Where Nīlaṉ of great beauty visited
To worship the deity Perumāl
As they do on days of festilities.
Nīlaṉ crossed the North, South,
West and East streets by way of worship.

திருமதிலுங் கோபுரமும்

சுத்திபண்ணி நமஸ்கரித்துத் திருப்பெருமாள் திருநடையில்
உத்திரதூளி சாவடியாம் அனாகாத கொட்டகையாம்
சுத்திவரத் திருமதிலும் சிகரநாலு கோபுரமாம்
முத்திபெறச் சேரமன்னர் முகித்ததோர் பணிமுகப்பாம்.

உயர்ந்த தூண்களையுடைய பரந்த சாவடிகளும், கொட்டகைகளும் நிறைந்த ஆலயம். சுற்றிவருவதற்குரிய திருமதில்களும், சேர மன்னர்களால் முடிக்கப்பட்ட நான்கு சிகரங்களையுடைய கோபுரங்களாலானது அந்த ஆலயம்.

முகப்பு - கோபுர உச்சி.

Tirumatiluṅ kōpuramum

cuttipaṇṇi namaskarittut tirupperumāḷ tirunaṭaiyil
uttiratūḷi cāvaṭiyām aṉākāta koṭṭakaiyām

cuttivarat tirumatilum cikaranālu kōpuramām
muttipeṟac cēramaṉṉar mukittatōr paṇimukappām

The holy walls and the temple tower

The temple built by Cērā kings
To attain moksha consisted of
Purified tall pillars of great height,
Huge and broad sheds, choultries,
Tall walls in all four directions and
Four temple towers of great beauty.

திருக்கோயிலின் வாயில்

ஒற்றைக்கால் மண்டபமாம் உயர்மாடச் சாவடியாம் *225*
சித்திரமா யித்தனையும் சிங்காசனச் சிறப்பாம்
கண்டுகொண்டு நீலராசன் கலிதீர மனமகிழ்ந்து
பண்டுவைத்த படித்துறையும் பதினாறு வாசல்விட்டு

ஒற்றைக்கால் மண்டபம், உயர்ந்த மாடங்கள், சாவடிகள், சித்திரம் போலிருந்தன. இவை அனைத்தையும்விடச் சிங்காசனம் மிகவும் சிறப்பாக இருந்தது. இவற்றைப் பார்த்த நீலராசன் அச்சமின்றி மனம் மகிழ்ந்து, பழமைமிக்க படித்துறைகளோடு கூடிய பதினாறு வாசல்களையும் கடந்து திருவனந்தப்பெருமாள் வீற்றிருந்த சன்னதியைக் கண்டார்

கலி - துன்பம்.

Tirukkōyiliṉ vāyil

oṟṟaikkāl maṇṭapamām uyarmāṭac cāvaṭiyām
cittiramā yittaṉaiyum ciṅkācaṉac ciṟappām
kaṇṭukoṇṭu nīlarācaṉ kalitīra maṉamakiḻntu
paṇṭuvaitta paṭittuṟaiyum patiṉāṟu vācalviṭṭu

The entrance to the temple

Single pillared hall, high encasements
Resembled artistice paintings; in particular,
The throne was exquisite. Seeing these
Nīlaṉ crossed sixteen bathing ghats and entrances.

திருக்கோயிலைக் காணுதல்

திருவனந்தப் பெருமாள்தன் சன்னதியை வந்துகண்டு
உருவான பொருள்களெல்லாம் உகந்திருக்கும் மண்டபத்தில்
திருவிளக்கு மாளிகையும் திசைதிசையா யிலங்கிடவே
பெருமாள்வா ழனந்தமதில் பெருமையைநீலன் கண்டாரே

உலகப் பொருள்கள் அனைத்தும் நிறைந்து இருக்கக்கூடிய மண்டபத்தையும், திருவிளக்குகளாலான மாளிகையையும் பார்த்து பெருமாள் வீற்றிருக்கும் பெருமைதனைக் கண்டார்.

Tirukkōyilaik kāṇutal

tiruvaṉantap perumāḷtaṉ caṉṉatiyai vantukaṇṭu
uruvāṉa poruḷkaḷellām ukantirukkum maṇṭapattil
tiruviḷakku māḷikaiyum ticaiticaiyā yilaṅkiṭavē
perumāḷvā ḻaṉantamatil perumaiyainīlaṉ kaṇṭārē

Witnessing the temple

Reaching Perumāḷ's sanctum sanctorum
Nīlaṉ saw in the hall adorned with
Holy lamps all possible things of the world
Assembled there and understood the greatness of the place.

எம்பெருமான் தோற்றம்

கண்டனனே யெம்பெருமாள் மண்டபங்கள் நின்றிலங்க
கண்கொள்ளா சதபொன்னு முத்து யிலங்கவே
தண்டமிழ்சேர் மாலை மாலைகள்பொன் ஆபரணம்
தங்கத்தாலே நீலராசன் கண்டார்
கொண்டலெனும் மாயன்பள்ளி கொண்டிருக்கும் கோவில்கல்லில்
கெந்தலரும் மாலைகள் நின்றாடவே
கண்டனர் பொன்மாலை பதினாயிரங்கள் நின்றிலங்க
காவலவ னீலதம் புரனார்

மேகம் போன்ற நிறத்தையுடைய திருமால் பள்ளி கொண்டிருக்கும் இடத்தில் பொன்னாபரணங்களும், முத்து மாலைகளும் நிறைந்து, பதினாயிரக் கணக்கில் மாலைகள் குவிந்து கிடந்தன.

கொண்டல் - மேகம்.

Emperumān tōṟṟam

kaṇṭanaṉē yemperumāḷ maṇṭapaṅkaḷ niṉṟilaṅka
kaṇkoḷḷā catapoṉṉu muttu yilaṅkavē
taṇṭamiḻcēr mālai mālaikaḷpoṉ āparaṇam
taṅkattālē nīlarācaṉ kaṇṭār
koṇṭaleṉum māyaṉpaḷḷi koṇṭirukkum kōvilkallil
kentalarum mālaikaḷ niṉṟāṭavē
kaṇṭaṉar poṉmālai patiṉāyiraṅkaḷ niṉṟilaṅka
kāvalava ṉīlatam puraṉār

The appearance of Perumāḷ

Nīlaṉ saw eye filling sights
Of gold and pearls in the halls of perumāḷ Temple
Garlands countless, of gold and ornaments
Of gold were found by him
Dark cloud like perumāḷ sleeps here in stone.
Flower deeked garlands and garlands
Made of gold were found by thousands by Nīlaṉ

ஆலயத்துள் இலக்குமி

எத்திசையும் மேகடலில் முத்துநவ ரெத்தினங்கள்
எண்ணில்லாத முத்துஒளி வீசவே
தங்கமணி மாலையது தான்மதிக்க ஒண்ணாதெடுத்து
தத்திதத்தி தத்திதோறு மின்ன
யெங்குமே லெக்ஷ்மியா ளிருந்துகுடி கொண்டிலங்க
யென்பெருமாள் கோவிலுக் குள்ளேதான்

எண்ணிலடங்கா முத்துக்கள் ஒன்றுசேர்ந்து ஒளி வீசுவதைப் போல எல்லாத் திசைகளிலும் முத்து, நவரத்தினங்கள், தங்கம் இவற்றாலான மணிமாலைகள் நிறைந்து விலை மதிக்கமுடியாத சிறப்பினைத் தோற்றுவித்தன. செல்வத்தின் தலைவியாகிய லக்ஷ்மிதேவி எங்கும் குடிகொண்டிருப்பதைப் போலக் காட்சியளித்தது.

Ālayattuḷ ilakkumi

etticaiyum mēkaṭalil muttunava rettiṉaṅkaḷ
eṇṇillāta muttuoḷi vīcavē

taṅkamaṇi mālaiyatu tāṉmatikka oṇṇāteṭuttu
tattitatti tattitōṟu miṉṉa
yeṅkumē lekṣhmiyā ḷiruntukuṭi koṇṭilaṅka
yeṉperumāḷ kōviluk kuḷḷētāṉ

Lakṣhmi within the temple

Pearls, diamonds of all hues from all directions
And countless pearls poured their shine
Garland of gold beads brightly shone
With flickering brightness and the
Whole place, was the veritable
Abode of Lakṣhmi, the goddess of wealth
Within the temple of perumāḷ

செல்வக் காட்சி

தங்கமும் பொன்மாலை முத்துமாலை வயிடூரியங்கள்
தங்கமதால் தீயொளிவு மின்ன 240
சங்குமுத்து கன்னமுத்து சரியான கோடிமுத்து
தானிலங்க யெம்பெருமாள் கோவில்
எங்கும் கடலில்விளைந்த பொன்னுமுத்து நற்பவளம்
பொன்னிறங்கள் மின்னலொளி வீசவே

தங்கமாலை, முத்துமாலை, வயிடூரியங்கள் நிரம்பியிருந்தன. தங்கத்தால் செய்யப்பட்டவை தீயின் ஒளியைப்போல ஒளிவீசி மின்னின. சங்குமுத்து, கன்னமுத்து என்று கோடிக்கணக்கில் முத்துக்கள்; பொன்னால் செய்யப்பட்ட மணிமாலைகள் ஆகியவை கோவிலில் நிறைந்திருந்தன.

Celvakkāṭci

taṅkamum poṉmālai muttumālai vayiṭūriyaṅkaḷ
taṅkamatāl tīyoḷivu miṉṉa
caṅkumuttu kaṉṉamuttu cariyāṉa kōṭimuttu
tāṉilaṅka yemperumāḷ kōvil
eṅkum kaṭalilviḷainta poṉṉumuttu naṟpavaḷam
poṉṉiṟaṅkaḷ miṉṉaloḷi vīcavē

The sight of the riches

Perumāḷ's temple shone bright like lightning
With gold, gold garlands, Pearl garlands,
Sapphires shedding golden light and
Varieties of pearls of all types.

கோயிற்காட்சி

தூணிப் பொன்னுருக்கு மணிமாலையோடு கோடிகளாய்
சுத்திவரப் பொன்விளக் கெரியவே
காணிபரி பூரணமாய் காசினியோர் கண்டுபெற
கார்வண்ண நாராயணப் பெருமாள்
கண்டனரே நீலசுவாமி காசினியிலவர் பெருமை
கண்ணனுட கோவில் சிறப்பெல்லாம்
மண்டபங்கள் தோறும் சென்று
வானிலொலி போல முழங்க

கோவிலைச் சுற்றிப் பொன்விளக்குகள் ஒளிவீசிக் கொண்டிருந்தன. உலகமறிந்த நாராயணப் பெருமாளின் பெருமைகளையும், கோயிலின் சிறப்புகளையும் கண்ட நீலன் ஒவ்வொரு மண்டபமாகச் சென்று அவற்றின் ஒலி முழக்கத்தில் மூழ்கினான்.

தூணி - நாலுமரக்காலளவு.

Kōyiṟkāṭci

tūṇip poṉṉurukku maṇimālaiyōṭu kōṭikaḷāy
cuttivarap poṉviḷak keriyavē
kāṇipari pūraṇamāy kāciṉiyōr kaṇṭupeṟa
kārvaṇṇa nārāyaṇap perumāḷ
kaṇṭaṉarē nīlacuvāmi kāciṉiyilā perumai
kaṇṇaṉuṭa kōvil ciṟappellām
maṇṭapaṅkaḷ tōṟum ceṉṟu
vāṉiloli pōla muḻaṅka

The temple scene

The temple lamp burnt with golden hue
Surrounded by gold and pearl chains

Nīlacuvāmi saw Nārāyaṇap Perumāḷ
As he was witnessed by men of the world.
Going round hall after hall
He was drowned in the noised in praise of Perumāḷ
That emanated from each and every hall.

தீபஒளியும் வேதஒலியும்

மாயனுட கோவிலி லேதான்
வைரமணி தானிலங்க- வெண்சாமரை குஞ்சங்கள்போட
பத்துநூறுகோடி பகரத்துலையாது - பச்சமுகில் காத்தசன்னதியில்
நீக்கமற வேதியர்கள் சுத்திபண்ணித் தீபமிட
நிறவிளக்குக் கோடிப்பொன் விளக்காம்
கொந்தலரு மலைமார்பன் நித்தியகலியாண செல்வன்
கோவில்சிறப்பை நீலன் கண்டார்
ஆதிமற வேதியர்கள் அரகரவென்று நிற்க
ஆலாத்தி தான்பிடித்து நிற்க.

முகில்வண்ணனின் திருக்கோயிலில் வைரமணிகளோடு கூடிய வெண்சாமரைகள் வீசப்பட்டன. கோடிக்கணக்கான பொன் விள்க்குகளைச் சுத்தம் செய்து தீபம் ஏற்றிய அந்தணர்கள் அரகர என்று சொல்லி ஆலாத்தி எடுத்து நின்றார்கள்.

Tīpaoḷiyum vētaoliyum

māyanuṭa kōvili lētān
vairamaṇi tānilaṅka - veṇcāmarai kuñcaṅkaḷpōṭa
pattunūrukōṭi pakarattulaiyātu - paccamukil kāttacannatiyil
nīkkamara vētiyarkaḷ cuttipaṇṇit tīpamiṭa
niraviḷakkuk kōṭippon viḷakkām
kontalaru malaimārpan nittiyakaliyāṇa celvan
kōvilcirappai nīlan kaṇṭār
ātimara ,vētiyarkaḷ arakaravenru nirka
ālātti tānpiṭittu nirka

The light of the lamps and sounds of Vedas

Shining bright with diamonds the fans
Were waving with silk pendants

The vedic scholars cleansed the lamps
And they shone a million gold lamps.
Nīlaṉ saw the special grace of the temple of Perumāḷ
And the vedic experts sang "*Arakarā*"
Catching the plate for religious cleansing

பள்ளிகொண்ட காட்சி

மாலையணி திண்புயத்தான் மாயன்பள்ளி கொண்டிருக்க
வாய்த்ததிருக் கண்துயிலும் நேரம்
எம்பெருமாள் தன்னைக்கண்டு யின்றுகெதி பெற்றோமென்று
யென்றுசொல்லி நீலதம் புரனார்

மலையை நிகர்த்த தோள்களை, மலர்மாலைகள் அலங்கரிக்கப் பள்ளிகொண்ட கோலத்தில் எழுந்தருளியிருந்த மாயவனைக் கண்ட நீலன் இன்று பெரும்பேறு பெற்றேன் என்று கூறி மகிழ்ந்தான்.

Paḷḷikoṇṭa kāṭci

mālaiyaṇi tiṇpuyattāṉ māyaṉpaḷḷi koṇṭirukka
vāyttatiruk kaṇtuyilum nēram
emperumāḷ taṉṉaikkaṇṭu yiṉṟuketi peṟṟōmeṉṟu
yeṉṟucolli nīlatam puraṉār

The sight of the sleeping pose

Tirumāl, like mountan chested,
And adorned with garland,
Was sleeping in the reclining posture
Seeing this, Nīlatampurāṉ averred that
The aim of his life was attained that day.

மாலையும் வாகனமும்

வம்பணிந்த பூந்துளசி மாலையணி மாயனுட
மலர்ப்பாதம் வந்துகண்டார் நீலன் 255
வாழ்கெருட வாகனமும் மாயன்பள்ளி
கொண்டதுவும் வந்துகண்டு சிந்தை குளிர்ந்தாரே

புதிய துளசி மாலையணிந்து கருட வாகனத்தில் எழுந்தருளியுள்ள மாயவனாகிய திருமாலின் திருவடிகளைக் கண்டு வணங்கி உள்ளம் மகிழ்ந்தான்.

கருடன் - திருமாலின் வாகனம்.

Mālaiyum vākaṉamum

vampaṇinta pūntuḷaci mālaiyaṇi māyaṉuṭa
malarppātam vantukaṇṭār nīlaṉ
vāḻkeruṭa vākaṉamum māyaṉpaḷḷi
koṇṭatuvum vantukaṇṭu cintai kuḷirntārē

Garland and vechicle (or chariot)

Nīlaṉ witnessed and was glad at heart
At the sight of Perumāḷ on his eagle chariot
Wearing the *tuḷaci* garland
He worshipped the feer of Tirumāl.

அடியும் முடியும்

ஆழ்கடலை நோக்கி பொன்னு முடியிலங்க
அன்பாகப் பாதம் வடக்காக
நாகமது ஓர்புறத்தில் நல்ல
நாரா யணப்பெருமாள் தானும்
தெக்குவடக் காகப்பள்ளி திருவனந்தர புரத்தில்
செப்பமுடன் பள்ளி கொண்டிருந்தார்
அந்தமுடன் நீலராசன் அரவணையில் பள்ளிகொண்ட
அச்சுதன் பாதமதைக் கண்டார்.

கடலை நோக்கிய பொன்னாலான திருமுடியும், வடக்கு நோக்கிய திருவடியும் விளங்க, திருவனந்தபுரத்தில் தெற்கு வடக்காகப் பாம்பணையில் பள்ளி கொண்டிருந்த திருமாலின் திருவடிகளைக் கண்டு வணங்கிநின்றான் நீலன்.

அந்தம் - அழகு; ஒழுங்கு.

Aṭiyum muṭiyum

āḻkaṭalai nōkki poṉṉu muṭiyilaṅka
aṉpākap pātam vaṭakkāka

nākamatu ōrpurattil nalla
nārā yaṇapperumāḷ tāṉum
tekkuvaṭak kākappaḷḷi tiruvaṉantara purattil
ceppamutaṉ paḷḷi koṇṭiruntār
antamutaṉ nīlarācaṉ aravaṇaiyil paḷḷikoṇṭa
accutaṉ pātamataik kaṇṭār

The head and the foot

With the golden locks towards the sea,
And the gentle feet towards the North,
The cobra on one side,
Narāyaṇapperumāḷ was sleeping North south,
At Tiruvaṉantaram embraced by the snake.
Nīlaṉ witnessed the feet of the Lord in sleep.

நீலன் வேண்டுகோள்

கண்டஉடன் நீலராசன் வாய்புதைத்துத் தெண்டம்பண்ணி
கார்வண்ண நாராயணப் பெருமாள்
எண்டிசை யெல்லாம்புகழ யென்முகத்தைப் பாரீரோ
யெழுந்தருள வேணும் அரிராமா
பள்ளிஉறக் கம்தனிலே மெஞ்ஞான நித்திரையில்
பார்த்து நின்றுநீல னுரைசெப்ப

பாம்பணையில் மெஞ்ஞான உறக்கத்தில் எழுந்தருளியிருந்த திருமாலைப்பார்த்து, பக்திப் பரவசத்தில் வாய்புதைத்து வணங்கிநின்ற நீலன், எட்டுத்திசையில் உள்ளவர்களும் புகழுமாறு என்னுடைய முகத்தைப் பார்க்கமாட்டீரோ! அரிராமா! எழுந்து அருள்புரிய வேண்டும் என்று வேண்டிக் கொண்டான்.

தெண்டம் - வணக்கம். மெய்ஞ்ஞானம் - உண்மைஞானம்

Nīlaṉ veṇṭukōḷ

kaṇṭauṭaṉ nīlarācaṉ vāyputaittut teṇṭampaṇṇi
kārvaṇṇa nārāyaṇap perumāḷ
eṇṭicai yellāmpukaḻa yeṉmukattaip pārīrō
yeḻuntaruḷa vēṇum arirāmā
paḷḷiuṟak kamtaṉilē meññāṉa nittiraiyil
pārttu niṉṟunīla ṉuraiceppa

Nīlaṉ's prayer (or request)

At the sight of jet of black Nārāyaṇaṉ,
Nīlaṉ, dumbstruck, fell prostrate.
And begged him whether He will not look at his face
And wanted the boon of praise from all eight directions
From *Arirām*! who was in sleep
With his inner self in deep religious slumber

மாயனின் பெருமை பேசுதல்

. . . . போலுலகில் யெங்குமா யிருந்தோனே
யென்று காண்பேன் பொற்பதத்தை 265
யென்றடியே னிங்கு வந்தேன்
இளகிவிடும் எந்தன் பெருமாளே
மன்றலணி திண்புயத்தான் வாள்வீர நீலராசன்
மாயன்மலர் பாதமது போற்றி

என்றும், எல்லாவிடத்தும், எல்லாப் பொருள்களிலும் நிறைந்து நிற்பவ்னே! எம்பெருமாளே! உனது திருவடிகளை எப்போது காணப்போகிறோம் என்னும் ஆவலோடு அடியேன் தேடி வந்தேன். மனம் இளகி அருள்புரிய வேண்டும் பெருமாளே என்று வாள்வீரனாகிய நீலராசன் திருமாலின் மலரடிகளை வணங்கிப் போற்றினான்.

Māyaṉiṉ perumai pēcutal

.... pōlulakil yeṅkumā yiruntōṉē
yeṉṟu kāṇpēṉ poṟpatattai
yeṉṟaṭiyē ṉiṅku vantēṉ
iḷakiviṭum entaṉ perumāḷē
maṉṟalaṇi tiṇpuyattāṉ vāḷvīra nīlarācaṉ
māyaṉmalar pātamatu pōṟṟi

Speaks of the greatness of Māyaṉ

Oh Perumāl! ever present and omnipresent!
I came here unsure whether I will ever see
Your golden feet for worship.

Praising His feet, Nīlaṉ, the sword hero, (gladiator)
Begged perumāḷ to give him a boon, relenting his heart.

பாரதப்போர் முடித்தவா

பஞ்சவரை யீடேற்றிப் பாரதப்போர் முடித்தவள்ளல்
பச்சமலர் அச்சுதா கோவிந்தா
வஞ்சமற நீலராசன் வந்துநின்று கைதொழுது
மாயனுட பெருமையது சொல்வார்

தூய உள்ளத்தோடுகூடிய நீலராசன், கைகளால் தொழுது நின்று பஞ்சபாண்டவர்களுக்குத் துணையாகிப் பாரதப் போரினை முடித்த வள்ளலே! அச்சுதா! கோவிந்தா! என்றும் வணங்கினார்

Pāratappōr muṭittavā

pañcavarai yīṭēṟṟip pāratappōr muṭittavaḷḷal
paccamalar accutā kōvintā
vañcamaṟa nīlarācaṉ vantuniṉṟu kaitoḻutu
māyaṉuṭa perumaiyatu colvār

The one who finished the Barath war

Praising the greatness of the Lord
Nīlaṉ said' Oh! Thou, the one
Who saved the Pāṇṭavās by finishing Barath war
Oh! Accutā kōvinta, wearing flowers!
Without guile, thus Nīlaṉ worshipped with folded hands.

நீலன் உம்மைத் தேடிவந்தேன் எனல்

வய்யகமெல்லாம் அளந்து மாவெலியைச் சிறையில்
வைத்த வய்யகமெல்லாம் அரிராமா 270
கய்யார் விரியுண்ட உறிவெண்ணை தயிர்பாலை
காயாம்பு மேனிநிற வர்ணா
வல்லரக்கனைக் கொன்று வரமது தானளித்த
மாயனே யெழுந்தருள வேணும்
கல்லுமலையுங் கடந்து நீலனும்மைத் தேடிவர
கார்வண்ண நாராயணா கண்பாராய்!

உலகத்தை மூன்றடியால் அளந்து, மாவெலிச்சக்கரவர்த்தியைச் சிறைப்படுத்திய திருமாலே! அரிராமா! பால், தயிர், வெண்ணெய் ஆகியவற்றை உரியிலிருந்து வாரி உண்டவா! காயாம்பூ மேனியனே! கொடிய அரக்கனைக் கொன்று வரமளித்த திருமாலே! கார் வண்ணனே! கல்லையும், மலையையும் கடந்து உம்மைத் தேடி வந்திருக்கின்ற அடியேன்மீது இரக்கங்கொண்டு அருள்புரிய வேண்டும்.

மாவலி - ஒரு சக்கரவர்த்தி.

Nīlan̲ ummait tēṭivantēn̲ en̲al

vayyakamellām aḷantu māveliyaic cir̲aiyil
vaitta vayyakamellām arirāmā
kayyār viruyuṇṭa ur̲iveṇṇai tayirpālai
kāyāmpu mēn̲inir̲a varṇā
vallarakkan̲aik kon̲r̲u varamatu tān̲aḷitta
māyan̲ē yel̲untaruḷa vēṇum
kallumalaiyuṁ kaṭantu nīlan̲ummait tēṭivara
kārvaṇṇa nārāyaṇā kaṇpārāy!

Nīlan̲ says I came in search of you'

Oh Thou! the measurer of the world,
The one who imprisoned Māveli,
Oh! Hare Ram, thou art the one
Who stole the butter from suspended pots,
The one coloured like the *Kayāmpu* flower,
The one who killed the powerful demon (Rakshasha)
And gave a boon. I have crossed
Stones and mountains coming in search of you,
Oh! the black coloured Nārayaṇā
Grant me a boon.

இரணியனைப் பிளந்தவா

அரியென்ற அச்சரத்தை அண்ணாக்கி லேஉன்னி
ஆதிசிவனைக் கெவனி யாமல்
இரணியன் தன்னையிரு கூறதாகவே பிளந்து
யெண்ணிலக் கிலாதபெரு மாளே-லக்ஷ்மியே!

அரியென்ற உன்னுடைய நாமத்தை நாவில் நினையாமல் சிவனையும் வணங்காமலிருந்த இரணியனை இருகூறாகப் பிளந்தவனே! திருமாலைப் பிரியா இலக்குமிதேவியே!

Iraṇiyaṉaip piḷantavā

ariyeṉṟa accarattai aṇṇākki lēuṇṇi
āticivaṉaik kevaṇi yāmal
iraṇiyaṉ taṉṉaiyiru kūṟatākavē piḷantu
yeṇṇilak kilātaperu māḷē - lakṣhmiyē!

The one who split Iraṇyā

Thou art the one who split into two.
Iraṇyā who never pronounced thy name Hari,
Who never cared for the ancient Civaṉ
Or Lakṣhimi who never leaves perumāl.

இராவணனை வதைத்தவா

தேனுகந்த மென்மொழியாள் சீதை யென்ற
சிறைமீட்ட ராவணனை வெல்ல
அனுமாரை விட்டிலங்கை யெண்ணூறு காதவழி
அன்றெரித்து விட்ட பெருமாளே!
தனுவமுடைய பத்துத்தலை யுள்ள ராவணனைச்
சரத்தாலே யெய்திருக்கும் நேரம்
பத்துத்தலையு மறுத்துப் பன்னிருகை தோன்றப்
பாருலகை யெய்த பெருமாளே!
யென்றுசொல்லி வாய்புதைத்து நீலசுவாமி வந்துநிற்க
யெம்பெருமாள் தன்பெருமை சொல்வார்

தேன்போன்ற இனிய மென்மையான மொழிகளைப் பேசக்கூடிய சீதையைச் சிறைவைத்த இராவணனை வெல்ல, அனுமாரை அனுப்பி எண்ணூறு காதவழி பரப்புள்ள இலங்கையை எரித்துவிட்ட பெருமாளே! பத்துத்தலைகளையுடைய இராவணனை அம்பாலே எய்த நேரத்தில் பத்துத்தலைகளையும் ஊடுருவச்செய்து உலகத்தைக் காத்த பெருமாளே என்றெல்லாம் சொல்லி வாய்புதைத்து நின்றான் நீலசுவாமி.

காதம் - 10 மைல்கள்; நாலு கூப்பிடு தூரம்; 14 கி.மீ. சரம் - அம்பு.

Irāvaṇaṉai vataittavā

tēṉukanta meṉmoḻiyāḷ cītai yeṉṟa
ciṟaimiṭṭa rāvaṇaṉai vella
aṉumārai viṭṭilaṅkai yeṉṉūṟu kātavaḻi
aṉṟerittu viṭṭa perumāḷē!
taṉuvamuṭaiya pattuttalai yuḷḷa rāvaṇaṉaic
carattālē yeytirukkum nēram
pattuttalaiyu maṟuttup paṉṉirukai tōṉṟap
pārulakai yeyta perumāḷē!
yeṉṟucolli vāyputaittu nīlacuvāmi vantuniṟka
yemperumāḷ taṉperumai colvār

The one who tortured Rāvaṇā

To defeat Rāvaṇā, who imprisoned
The sweet honey tongued Cītā
(Cītā of mellifluous speech)
Than sent Aṉumāṉ and burnt
The vast land of Laṅkā.
Thou destroyed with thy arrow.
The well armed ten headed Rāvaṇā
And pierced all the ten headswith thy arrow.
Thy twelve hands appeared to protect the world.
Saying this, Nīlacuvāmi, continued wonderstruck
To speak of the greatness of Perumāḷ.

மேலும் பெருமை பேசுதல்

சென்றுசிவ னார்முடியைத் தேடியடி காணாத
தேவர்தொழும் எங்கள் பெருமாளே!
சொல்லரிய தோர்விதுரன் வில்லையு முறித்தெறிந்து
தூண்டும்மா முனியவரை வென்று
கல்லைப்பெண் ணாக்கிவைத்து கடலை அடைத்தோனே
காசினி யில்லாத பெருமாளே!
ஆலிலைமேலே துயின்ற அன்றசுரரைச் செயித்த
ஆதியான யெங்கள் பெருமாளே!

சிவபெருமானின் திருவடி, திருமுடி காணாது தேவர்கள் போற்றித் தொழநின்ற பெருமாளே! சொல்லில் வல்லவனாகிய விதுரனின் வில்லை முறித்தவனே! பரசுராமனை வென்று கல்லைப் பெண்ணாக்கிக் கடலை அடைத்த பெருமாளே! அசுரர்களை வென்று ஆலிலையிலே துயில்கொண்ட பெருமாளே!

விதுரன் - திருதராஷ்ட்ரன் மந்திரி. திருதராஷ்ட்ரன் பாண்டவரை வஞ்சிக்கத் துணிந்தபோது அது தகாதென வாதாடியவன். பாண்டவருக்கு, திருதராஷ்ட்ரனும் அவன் புத்திரரும் செய்த வஞ்சனைகளையெல்லாம் பாண்டவர்களுக்கு அறிவித்தவன். கல்லைப் பெண்ணாகியவன் - இராமன். அகலிகை, கணவனாகிய கௌதமன் சாபத்தால் கல்லாகிக் கிடந்தாள். இராமன் திருவடி பட்டவுடன் சாபம் நீங்கி பழைய உரு பெற்றாள். கடலை அடைத்தோன் - சீதையைக் காண்பதற்காக, இலங்கையை நோக்கிச் சென்றபோது குறுக்கிட்ட கடலை அணைகட்டி கடலைக் கடந்தவன்.

Mēlum perumai pēcutal

cenruciva nārmutiyait tētiyati kānāta
tēvartolum eṅkaḷ perumāḷē!
collariya tōrvituran villaiyu muritterinta
tūṇṭummā muniyavarai venru
kallaippeṇ ṇākkivaitta kaṭalai aṭaittōnē
kācini yillāta perumāḷē!
ālilaimēlē tuyinra anracuraraic ceyitta
ātiyāna yeṅkaḷ perumāḷē!

Some more greatness

The gods failed in finding the feet of Civan
And worshipped Thee, Oh Perumāḷ!
Vituran, clever in his words,
Was defeated by thee by breaking his bow.
Thou! overcoming the great Paru
Turned a stone into a woman
And plugged the sea! the one.
unequalled in this world the one
Who slept on the banyan leaf
And defeated the demons!
Oh Thou! the ancient Perumāḷ!

திருவடி தொழுதல்

நீல குலதெய்வ தம்புரான் திருவனந்தர
புரமதிலே நித்தனுட பொற்பாதம்
பொற்பாதம் போற்றி நின்றாரே!
போற்றிநின்று தானீல ராசன்
புண்ணியரைத் தான் வணங்கி
நாற்றிசையும் கீர்த்திகொண்ட நாராயணா! யென்கோனே!
செப்பமுள்ள நீலராசன் திருப்பாதம் போற்றிநிற்க

அடியேன் நின்னைப் பார்ப்பதற்காகத் திருவனந்தபுரத்திற்கு வந்திருக்கிறேன் என்றெல்லாங் கூறி, இறைவனின் திருவடிகளை வணங்கினான். புண்ணியனே! நாற்றிசை புகழ் நாராயணனே! என் தலைவனே! என்றெல்லாங்கூறித் தொழுதான்.

Tiruvaṭi toḻutal

nīla kulateyva tampurāṉ tiruvaṉantara
puramatilē nittaṉuṭa poṟpātam
poṟpātam pōṟṟi niṉṟārē!
pōṟṟiniṉṟu tānīla rācaṉ
puṇṇiyarait tāṉ vaṇaṅki
nāṟṟicaiyum kīrttikoṇṭa nārāyaṇā! yeṉkōṉē
ceppamuḷḷa nīlarācaṉ tiruppātam pōṟṟiniṟka

Worshipping the holy feet

The godly Nīlaṉtampurāṉ stood
Worshipping the golden feet of the Lord
At Tiruvaṉantaram. Addressing Perumāḷ
As Nārāyaṇā! the famed one
In all the four directions! My king!
He stood there worshipping Perumāḷ.

திரு மஞ்சனம்

அப்போது யெம்பெருமாள் அறுகுமுழித் திளகாமல்
திருமால் முழித்திளக தெய்வகுல நீலராசன்
வருமஞ் சனமுடைய மாயவன்தன் பாதமதில்

திருமஞ் சனமெடுத்துத் திருமால் தனையெழுப்ப
பூமலரும் பொன்மலரும் போட்டவரை யெழுப்பிடவே
நம்முடைய தெய்வமான நாராயணா அரிராமா!
நீலன்நான் வந்துநின்று நின்பாதம் போற்றுகிறேன்
ஆலிலைமேல் பள்ளிகொண்ட அரிராமா யெழுந்தருளும்
தெக்குவடக்காகப் பள்ளிகொண்ட திருமாலே யெழுந்தருளும்
பக்குவமாய் நீலராசன் பரதவித்து யெழுப்புகிறார்

நீலன் பலவாறு புகழ்ந்து போற்றித் துதிக்கவும் திருமால் பள்ளிகொண்டவாறே இருந்தார். அவரைத் திருப்பள்ளியெழுச்சி பெறச்செய்ய விரும்பிய நீலன், மஞ்சத்தின் மீதிருந்த மாயவனுக்குத் திருமஞ்சனமாட்டுவித்து, பூக்களாலும் பொன்மலராலும் அருச்சித்து வழிபட்டான். ஆலிலையில் பள்ளிகொண்ட அரிராமா! தெற்கு வடக்காகப் பள்ளிகொண்டுள்ள திருமாலே! எழுந்தருளும்! என்று மேலும் பலவாறு போற்றித் திருப்பள்ளியெழச் செய்தான்.

திருமஞ்சனம் - நீராட்டிப் பூசை செய்தல். பரதவித்து - பரிதவித்து என்பதன் பேச்சுவழக்கு. அறுகு முழித்திளகாமல் - என்னைநோக்கி அருள்புரியாமல்.

Tirumañcaṉam

appōtu yemperumāḷ aṟukumiḻit tiḷakāmal
tirumāl muḻittiḷakā teyvakula nīlarācaṉ
varumañ caṉamuṭaiya māyavaṉtaṉ pātamatil
tirumañ caṉameṭuttut tirumāl taṉaiyeḻuppa
pūmalarum poṉmalarum pōṭṭavarai yeḻuppiṭavē
nammuṭaiya teyvamāṉa nārāyaṇā arirāmā!
nīlaṉnāṉ vantuniṉṟu niṉpātam pōṟṟukiṟēṉ
ālilaimēl paḷḷikoṇṭa arirāmā yeḻuntaruḷum
tekkuvaṭakkākap paḷḷikoṇṭa tirumālē yeḻuntaruḷum
pakkuvamāy nīlarācaṉ paratavittu yeḻuppukiṟār

Bathing the Lord in worship

Till then perumāḷ was unyielding
And to make him yield his prayer,
Godly Nīlarācaṉ started to wake up the Lord
With holy bathing followed by worship

With natural flowers and flowers of gold.
On our Lord Nārāyaṇā! AriRāmā!
"I, Nīlaṉ, worship Thy feet!
Oh! wake up AriRam who sleepeth on banyan leaf!
Oh! wake up then who sleepeth North-south,"
Saying like this, he gently tries to wake up Perumāḷ.

திருமால் வினா

எண்ணா யிரம்கோடி யேற்றதெய்வார் வந்தாலும்
மூவாயி ரங்கோடி முனிவர்வந்து தொழுதாலும்
அண்ணல்முழித் திளகுவேனோ அவர்முகத்தைப் பார்ப்பேனோ
சங்கரனார் பார்வதிக்கும் தவத்தியர்க்கும் தெய்வார்க்கும்
எங்கும்உல களந்தவனே இயல்நீலா யிந்நேரம்
வந்ததென்ன வளப்பமென்ன வணங்கிநின்று தொழுததென்ன
சிந்தைமகிழ்ந் தேபெருமாள் செப்புமென்றார் நீலனையும்

எண்ணாயிரங்கோடி தேவர்களும், மூவாயிரங்கோடி முனிவர்களும் வந்து தொழுதாலும் துயிலெழாதவர்; சிவபெருமான், உமையம்மை, தவசியர், தேவர் ஆகியோர் பொருட்டு உலகளந்தவர் திருமால். அத்தகு பெருமைவாய்ந்த திருமால் நீலனைப் பார்த்து, நீலனே! நீ இங்கு வந்த காரியம் என்ன? என்னைத் தொழுது நின்றதன் காரணம் என்ன? கூறுவாயாக! என்று உள்ளமகிழ்ச்சியோடு வினவினார்.

Tirumāl viṉā

eṇṇā yiramkōṭi yēṟṟateyvār vantālum
mūvā yiraṅkōṭi muṉivarvantu toḻutālum
aṇṇalmuḻit tiḷakuvēṉō avarmukattaip pārppēṉō
caṅkaraṉār pārvatikkum tavattiyarkkum teyvārkkum
eṅkumula kaḷantavaṉē iyalnīlā yinnēram
vantateṉṉa vaḷappameṉṉa vaṇaṅkiniṉṟu toḻutateṉṉa
cintaimakiḻn tēperumāḷ ceppumeṉṟār nīlaṉaiyum

Tirumāls query

Even if eight thousand crore Devas
And three thousand crore sages worshipped Him,
Perumāḷ would never wake up from slumber.

He measured the world for the sake of Pārvati,
Penitential worshippers and the gods.
Perumāḷ of such repute, glad at heart,
Questioned Nīlaṉ why he came there to worship him.

நீலன் தன் பிறவி கூறுதல்

அந்நேரம் நீலனுமே அருளுவாராம் ஒருவார்த்தை
தன்னிகரில்லா மாயன் தன்னுடனே சொல்லுவாராம்
பன்னிரண்டு ஒன்று பதினெட்டுப் பிறவியுண்டு
முன்னிரண்டு பாலகராய் முனிவரிட்ட சாபமதால்
இலங்குமதி சடைக்கணிந்த யிட்டவிதி அப்படியே
பெற்றோர்க ளிப்படியே பேருயிட்டார் ஒருவரில்லை
உற்றார்கள் ஒருவரில்லை உடன்பிறந்தாள் ஒருத்தியுண்டு
யித்தனையும் மாயவர்க்கு யியம்புவாராம் நீலராசன்

தன்னிகரற்ற மாயவனாகிய திருமாலை வணங்கிச் சொல்கிறான் நீலன். ஐயனே! சந்திரனைத் தன் தலையிலே அணிந்த சிவபெருமானின் விதிப்படியும், முனிவர் ஒருவரின் சாபத்தினாலும் இரண்டு குழந்தைகளாகப் பிறந்தோம். எங்களுக்குப் பெயர் வைத்தவர்களோ உறவினர்களோ யாரும் இல்லை. உடன்பிறந்த தங்கை ஒருத்தி மட்டும் உண்டு என்று கூறினான்.

Nīlaṉ taṉ piṟavi kūṟutal

annēram nīlaṉumē aruḷuvārām oruvārttai
taṉṉikarillā māyaṉ taṉṉuṭaṉē colluvārām
paṉṉiraṇṭu oṉṟu patiṉeṭṭup piṟaviyuṇṭu
muṉṉiraṇṭu pālakarāy muṉivariṭṭa cāpamatāl
ilaṅkumati caṭaikkaṇinta yiṭṭaviti appaṭiyē
peṟṟōrka ḷippaṭiyē pēruyiṭṭār oruvarillai
uṟṟārkaḷ oruvarillai uṭaṉpiṟantāḷ oruttiyuṇṭu
yittaṉaiyum māyavarkku yiyampuvārām nīlarācaṉ

Nīlaṉ narrates his previous birth

To matchless Māyaṉ (Perumāl) Nīlaṉ
Offered the words following in reply.
According to Civaṉ the one who wears

The moon in his hair, because of the law of fate
And the cycle of eighteen rebirths
And a sage's curse on us, we were born
As two children, without relatives and
Without anyone to give us a name.
But I have a sister, so said Nīlaṉ.

நீலனைப் பாடிஆடச் சொல்லுதல்

புத்தியுள்ள நீலன்சொல்ல புண்ணியனார் ஏதுசொல்வார்
நீலனென்ற பேருனக்கு நிலமைஅல்லால் வேறுமுண்டோ
ஆலவிசம் தன்னையுண்ட ஆதிபரன் கயிலையிலே
கோலம்பதி னெட்டும்உண்டு கூத்தும்பதி னெட்டும்உண்டு
ஆடினதோர் நாடகமும் அதுக்கிசைந்த கவிப்பாட்டும்
கேட்டிருப்பேன் நீலாஉன் கிருபையது மனமகிழ
அனந்தமதில் நான்காண ஆடுமென்றார் நாடகத்தை

நீலன் கூறியதைக் கேட்ட திருமால் நீலனை நோக்கி, நீலா! ஆலகால விஷத்தை உண்ட சிவபெருமான் வீற்றிருக்கும் கயிலாயமலையிலே பதினெட்டுக் கோலங்கள், பதினெட்டு வகையான கூத்துக்கள் உண்டு. ஆடப்பட்ட நாடகமும், அதற்கேற்றாற்போல இசைக்கப்பட்ட பாட்டுக்களும் கேட்டிருக்கிறேன். உனது நாடகத்தைக்கண்டு மனம் மகிழ்ச்சியடையும்படித் திருவனந்தரபுரத்திலே நாடகத்தைத் தொடங்கி ஆடுவாயாக என்றார்.

Nīlaṉaip pāṭiāṭac collutal

puttiyuḷḷa nīlaṉcolla puṇṇiyaṉār ētucolvār
nīlaṉeṉṟa pēruṉakku nilamaiallāl vēṟumuṇṭō
ālavicam taṉṉaiyuṇṭa ātiparaṉ kayilaiyilē
kōlampati ṉeṭṭumuṇṭu kūttumpati ṉeṭṭumuṇṭu
āṭiṉatōr nāṭakamum atukkicainta kavippāṭṭum
kēṭṭiruppēṉ nīlāuṉ kirupaiyatu maṉamakiḻa
aṉantamatil nāṉkāṇa āṭumeṉṟār nāṭakattai

Nīlaṉ is asked to sing and dance

Hearing brainy Nīlaṉ, the Lord of Virtue said, .
"Is not the name Nīlaṉ permanent for you?

The ancient Civaṉ abiding at Kailash
After eating the terrible poison of *Ālakālam*
Danced in eighteen poses and performed
Eighteen type of different dances.
I've seen those dances and heard
The music relevant and poetic songs,
Perform your dance for me to see
And gladden my heart Nīlaṉ".

நீலன் ஆடத் தொடங்குதல்

மனமதிலே சடயாமல் வடிவழக நீலராசன்
பாடுகிறேன் கவிப்பாட்டு பரமானந்தப் பெருமாளே
யின்றுநீலன் கச்சைகெட்டி யானாடும் நாடகத்தை
மன்றளந்த மாயவரே மகிழ்ந்துதிருக் கண்களிக்க
பார்த்திருவும் ஞானக்கண்ணால் பகருவாராம் ஒருவார்த்தை
அந்தமுடன் கழனிகெட்டி ஆடுவாராம் நாடகமும்

மனமகிழ்ச்சியடைந்த நீலன் பரமானந்தப் பெருமாளே! திருவடியால் உலகளந்த மாயவனே! நான் காலிலே கச்சைகட்டி ஆடுகின்ற நாடகத்தை மனம்மகிழ்ந்து தங்கள் திருக்கண்களிக்குமாறு ஞானக்கண்ணால் கண்டருளுங்கள் என்று கூறி அழகுடைய் திரைச்சீலையினைக்கட்டி நாடகத்தை ஆடத் தொடங்கினான்.

சடயாமல் - வருந்தாமல் என்பதன் பேச்சுவழக்கு. கழனி - திரைச்சீலை.

Nīlaṉ āṭat toṭaṅkutal

maṉamatilē caṭayāmal vaṭivaḻaka nīlarācaṉ
pāṭukirēṉ kavippāṭṭu paramāṉatap perumāḷē
yiṉṟunīlaṉ kaccaikeṭṭi yāṉāṭum nāṭakattai
maṉṟaḷanta māyavarē makiḻntutiruk kaṇkaḷikka
pārttiruvum ñāṉakkaṇṇāl pakaruvārām oruvārttai
antamuṭaṉ kaḻaṉikeṭṭi āṭuvārām nāṭakamum

Nīlaṉ begins to dance

Handsome, well shaped Nīlaṉ, happy at heart
Sings the poetic songs for the ever joyful Perumāḷ.

The dance and drama I perform with front curtain
And wearing the sash in my loins
O! world measurer! witness joyfully
With your eyes and also see with your inner eye.
Saying this Nīlaṉ started his dance.

திருமால் ஆணையிட தேவர் கூடுதல்

திசைபுகழப்[1] பெருமாளும் தெய்வங்களை வரவழைத்தார்
ஆசையுடன் நீலராசன் அருங்கூத்து காணுதற்கு
அனந்தமதில் பெரும்கீர்த்தி ஆடும்நாட கம்காண
வனமதிலே யிருந்ததெய்வார் வருவதுபன்னீ றாயிரமாம்
அங்காங்கே தானிருந்து அனந்தமதில் படைநெருங்க
மங்காத யிந்திரனும் மாயவனா ரிடத்தில்வர
சந்திரரும் சூரியரும் தானவரும் வானவரும்
கந்தனுடன் வேலவரும் கடவுளவரே வரவே

விருப்பத்துடன் நீலராசன் ஆடுகின்ற கூத்தைக் கண்டு உலகம் புகழவேண்டுமென்று கருதிய திருமால் வனத்திலே வாழும் பன்னீராயிரம் பேரும் தங்கள் தங்கள் இடத்தைவிட்டுப் புறப்பட்டுத் திருவனந்தபுரத்தை அடைந்தார்கள். புகழ்மிக்க இந்திரன், சந்திரன், சூரியர், அசுரர், வானவர், முருகப்பெருமாள் ஆகிய அனைவரும் திருவனந்தபுரத்தில் எழுந்தருளினார்கள்.

கீர்த்தி - புகழ்.

1. க.சொல் : தெசைபுகள.

Tirumāl āṇaiyiṭa tēvarkūṭutal

ticaipukaḻap perumālum teyvaṅkaḷai varavaḻaittār
ācaiyuṭaṉ nīlarācaṉ aruṅkūttu kāṇutaṟku
aṉantamatil peruṅkīrtti āṭumnāṭa kamkāṇa
vaṉamatilē yiruntateyvār varuvatupaṉṉī ṟāyiramām
aṅkāṅkē tāṉiruntu aṉantamatil paṭaineruṅka
maṅkāta yintiraṉum māyavaṉā riṭattilvara
cantirarum cūriyarum tāṉavarum vāṉavarum
kantaṉuṭaṉ vēlavarum kaṭavuḷavarē varavē

Devas (Minor gods) assemble at the behest of Tirumāl

Famed in all sides, Perumāḷ invited
All the Gods to witness the rare dance of Nīlaṉ
To witness this well famed dance drama,
Twelve thousand Gods of the forest,
Came to Aṉantaram from wherever they were,
The undiminished Intiraṉ, Cantiraṉ (moon), the sun
Gods, demons, Kantaṉ, and Vēlmurukaṉ,
All of them came to the place for Nīlaṉs dance

தேவமாதரும் முனிவரும்

யெழுந்தருளி யெல்லோரும் ஏற்றநல்ல அனந்தமதில்
செழுந்தகுண மொழியார்கள் தெய்வரம்பை மாதரவர்
இன்பதுன்ப மில்லாத பேசாமுனி வோர்கள்வர
அன்பனுக் காயிருந்த அச்சுதனார் பதியில்வர
ஆசையுட நீலராசன் ஆடும்நாடகம் காண
திருவனந்தர புரமதிலே தேவர்திருக் கூட்டமின்ன

அரம்பை முதலான தேவகன்னியரும், இன்ப துன்பங்களைத் துறந்த முனிவர்களும் நீலனின் ஆட்டத்தைக் காணும் ஆவலோடு வந்து குழுமினார்கள்.

Tēvamātarum muṉivarum

yeḻuntaruḷi yellōrum ēṟṟanalla aṉantamatil
ceḻuntakuṇa moḻiyārkaḷ teyvarampai mātaravar
iṉpatuṉpa millāta pēcāmuṉi vōrkaḷvara
aṉpaṉuk kāyirunta accuntaṉār patiyilvara
ācaiyuṭa nīlarācaṉ āṭumāṭakam kāṇa
tiruvaṉantara puramatilē tēvartiruk kūṭṭamiṉṉa

Godly women and sages

In the fine place Aṉantaram,
There was an assembly of virtuous fine women,
Godly Rampā, and other goddess like women,
Great sages without speech and beyond

The pleasures and pains came to the place
For the sake of Accutan̲, the loving god,
To witness the dance drama of Nīlan̲.
Such was the crowd at Tiruvan̲antaram.

நீலனின் ஆடற்கோலம்

அந்நேரம் நீலராசன் அருந்தவேசம் தான்மாறி
முன்னிருந்த முனிமயங்க மோகினியாய் சமைத்ததுபோல்
அந்நேரம் நீலராசன் அணிந்தாரே சிலம்புதண்டை
பணிந்தவர்கட் கருள்புரியும் பச்சமாலே யென்பெருமாள்
திருக்கழனி கெட்டியல்லோ தெய்வார்கள் பார்த்திருக்க
மருகமழும் துடைமார்பன் வரிசைபெற்ற நீலராசன்
திருவனந்தப் பெருமாளும் திருமால்மன மகிழ்ந்திடவே
உருக்கமுடன்[1] நாடகத்தை உண்மையுடன் பார்த்திருக்க
அத்தனைக்கும் வெகுசுருபம் அடிக்குளொரு கோலம்கொண்டு
சித்தம்வைத்து நீலதெய்வம் திருக்கழனி தனிலேவந்தாரே
வந்தனர் ரிசிகள்தானும் மாலவர் முனிமயங்க
திந்தை கசங்கி திசங்கியே மனமுருக
அந்தமும் சிந்தை அழகுட ரூபமாய்
வந்தனர் நீலராசன் வணங்கினா ரப்பொழுதே

முனிவர்களே மயங்குமாறு திருமால் மோகினி வடிவம் கொண்டது போல நீலராசன் சிலம்பு தண்டை முதலான அணிகளால் தன்னை அலங்கரித்து ஆடுதற்குத் தயாரானான் தன்னைக் கதி என்று நம்பிப் பணிந்தவர்களுக்கு அருள்புரியக்கூடிய திருமாலாகிய எம்பெருமானும், வந்திருந்த தேவாதிகளும் அலங்கரிக்கப்பட்டிருந்த திரைச்சீலையினை உற்று நோக்கியவாறு இருந்தார்கள். திருமால் மனமகிழ்ச்சியுடன் ஆவலோடு நாடகத்தைப் பார்த்துக் கொண்டிருந்தார். நீலனோ அனைவரும் மயங்கத்தக்க அழகிய கோலத்தோடு திரைச்சீலையின் முன்பாக வந்து நின்று வணங்கினான். திருமால், வந்திருந்த ரிஷிகள், முனிவர்கள் ஆகிய அனைவரும் நீலராசனைப் பார்த்து மயங்கி மனமுருகினார்கள்

மரு - வாசனை. மோகினி - ஒரு தேவதை; திருமால் கொண்ட பெண்ணுரு. இது திருமால் பதினைந்தவதாரத் தொன்று.

சு.சொல் : 1. உறைக்கமுடன்

Nīlaṉiṉ āṭaṟkōlam

annēram nīlarācaṉ aruntavēcam tāṉmāṟi
muṉṉirunta muṉimayaṅka mōkiṉiyāy camaittatupōl
annēram nīlarācaṉ aṇintārē cilamputaṇṭai
paṇintavarkaṭ karulpuriyum paccamālē yeṉperumāḷ
tirukkaḻaṉi keṭṭiyallō teyvārkaḷ pārttirukka
marukamaḻum tuṭaimārpaṉ varicaipeṟṟa nīlarācaṉ
tiruvaṉantap perumāḷum tirumālmaṉa makiḻntiṭavē
urukkamuṭaṉ nāṭakattai uṇmaiyuṭaṉ pārttirukka
attaṉaikkum vekucuruṇpam aṭikkuḷoru kōlamkoṇṭu
cittamvaittu nīlateyvam tirukkaḻaṉi taṉilēvantārē
vantaṉar ricikaḷtāṉum mālavar muṉimayaṅka
tintai kacaṅki ticaṅkiyē maṉamuruka
antamum cintai aḻakuṭa rūpamāy
vantaṉar nīlarācaṉ vaṇaṅkiṉā rappoḻutē

The dance pose of Nīlaṉ

At this juncture Nīlarācaṉ appeared
As bewitching the sages just as perumāḷ himself
Changed into the enticing Mōkiṉi
Nīlaṉ began to wear anklets and *taṇṭai*
Perumāḷ, ever blessing and giving boons
To those who obey Him, looked at
The front curtain along with all the gods.
The aroma chested Nīlaṉ, winner of all gifts,
Danced to gladden the heart of Perumāḷ
Who, with great concentration and love
Witnessed the dance drama in which
Nīlaṉ appeared before the decorated
Front curtain with bewitching beauty.
All the sages, Perumāḷ himself, and ascetics
Were wonderstruck, enticed by the beauty
And the dance of Nīlaṉ and Nīlarācaṉ
Made obeissane to one and all.

நீலனின் நடனம்

ஆடினார் நாடகமும் நீலராசன்
அன்னம்போல் காலுவைத்து தேடியே
மாலனந்த்ர புரந்தர புரம்தன்னில்
திருமுன்பில் ஆடுவாராம்
தொந்தோ திமிதிமி தெய்யனவே
தான்திருக்காலில் ஆடிவர
தத்தலாங்கு திமிதிமி தோவென
தாளத்தி லாடிவர
தன்னை நிகரில்லா மாயவன்தன்னைச்
சரண மெனவணங்க
தம்பிரான் நீலன்செல்லப் பிள்ளைஅவர்
தானாட நாடகத்தை
மின்னுகின்ற[1] காளாஞ்சி தீவெட்டி
வெட்டி பிடித்துவர
மெய்க்குந் திருமால் மனமகிழ்ந்தே
தெய்வ நீலனும்வர
சீவட போவட மெய்க்கும்
சரப்பளித் தாவடம் ஆடிவர
பாட்டும் கண்சிமிட்டும் கண்டு
பய்ய மசங்கிநிற்க
கூத்துக் கிணங்கிய கொட்டுடன்
கைமணி கோலமணியுடன்
பாடித் தெரிந் தாடபதினெட்டு நாடகம்
பச்சமால் இலங்க
மாதேவி மோகினி ரூபத்தைக்கொண்டு
மயங்க யிடிபோலே
பம்பை முரசு பேக்காள
முதகைமணி நின்றதிர
சீதேவி நின்று யிலங்கிய மேனிபோல்
துலங்கிய தீயதுபோல
மேக்தி உள்முகம் கையில்

பணியும்வெண் சாமரை வீச
சமலிக்க விட்டது கண்டு[2]
தாளம்வைத்து ஆடினாரே

அனைவரையும் வணங்கிய நீலராசன் நாடகத்தை ஆடத் தொடங்கினான் அன்னம்போல காலினை வைத்து நடந்து திருவனந்தபுரத்தில் வீற்றிருக்கும் திருமாலின் முன்பு ஆடுகின்றான் தொந்தோ திமிதிமி தெய்; தத்தலாங்கு திமிதிமி தோம் என்ற தாளத்திற்கேற்ப ஆடி, மாயவன்முன் சரணமென்று வணங்கினான். செல்லப்பிள்ளையாகிய நீலன் ஆடிய போது பலர் தீவட்டிகளைத் தாங்கினர்; ஒருபுறம் வெண்சாமரை வீசப்பட்டது. சிலர் தாம்பூலம், மலர் ஆகியவை நிறைந்த தட்டுகளைத் தாங்கி நின்றனர். நாடகத்துக்கேற்ற கொட்டும் கைமணி கோலமணியும் முழங்கின. நீலனின் பாட்டையும், கண்சிமிட்டையும் பார்த்து எல்லோரும் மயங்கி நின்றார்கள். மாதேவி, மோகினி வடிவம் பூண்டு மயங்கி இருக்கும்போது ஏற்படும் இடியோசை போல பம்பையும் முரசுமாகிய கருவிகள் ஒலித்தன; முன்கையிலிருக்கும் மணிகள் அதிர்ந்தன இவ்வாறு நடைபெற்ற பதினெட்டு வகையான நாடகத்தையும் திருமால் கண்டுகளித்தார்.

சரப்பளி - ஓராபரணம். தாவடம் - உருத்திரமணிமாலை; கழுத்தணிமாலை. கைம்மணி - கைத்தாளம்; கையாலசைக்குஞ்சிறுமணி. மாதேவி - பார்ப்பதி; பார்வதி

க.சொல் : 1 மின்னுசரிணயான 2 கன்று

Nīlaṉiṉ naṭaṉam

āṭiṉār nāṭakamum nīlarācaṉ
aṉṉampōl kāluvaittu tēṭiyē
mālaṉantara purantara puramtaṉṉil
tirumuṉpil āṭuvārām
tontō timitimi teyyaṉavē
tāṉtirukkālil āṭivara
tattalāṅku timitimi tōveṉa
tāḷatti lāṭivara
taṉṉai nikarillā māyavaṉtaṉṉaic
caraṇa meṉavaṇaṅka
tampirāṉ nīlaṉcellap piḷḷaiavar
tāṉāṭa nāṭakattai
miṉṉukiṉṟa kāḷāñci tīveṭṭi
veṭṭi piṭittuvara
meykkun tirumāl maṉamakiḻntē
teyva nīlaṉumvara

cīvaṭa pōvaṭa meykkum
carappaḷit tāvaṭam āṭivara
pāṭṭum kaṇcimiṭṭum kaṇṭu
payya mecaṅkiniṟka
kūttuk kiṇaṅkiya koṭṭuṭaṉ
kaimaṇi kōlamaṇiyuṭaṉ
pāṭit terin tāṭa patiṉeṭṭu nāṭakam
paccamāl ilaṅka
mātēvi mōkiṉi rūpattaik koṇṭu
mayaṅka yiṭipōlē
pampai muracu pēkkāḷa
mutakaimaṇi niṉṟatira
cītēvi niṉṟu yilaṅkiya mēnipōl
tulaṅkiya tīyatupōla
mēkati uḷmukam kaiyil
paṇiyumveṇ cāmarai vīca
camalikka viṭṭatu kaṇṭu
tāḷamvaittu āṭiṉārē

Nīlaṉ's dance

Nīlaṉ danced, setting his foot like the swan
He danced at the sanctorum of Perumāḷ
At Tiruvaṉantaram, for the rhythm of
Tonthōm, Timitimi, followed by rhythm of
Tattalāṅku TimiTimi Tōm.
Worshipping the matchless Māyavaṉ
And surrendering himself to Him.
Nīlaṉ Tampirāṉ, the pet child of Perumāḷ
Began his dance to the light
Of the burning torches held by many,
Gladdening the heart of Perumāḷ,
His ornaments, *Cīvaṭam, Carappaḷi,*
Tāvaṭam dancing along with him.
All became slightly crazed with the

Song, dance and flickering eyes of Nīlan̲.
Dance, with its accompaniments like
Drums, hand cymbals, and the eighteen
Types of dances bewitched them all
The thunderlike sound at the time of
Pārvati changing herself into Mōkin̲i,
Was heard now with the reverberations of,
Pampai, drums, Pēkkāḷam, the small bell.
The fans were being waved and all
The dance was witnessed by Perumāḷ.

தேவர்கள் புகழ்தல்

முன்னங் கால்பின் வைத்து
    மோகினியாக நீலசுவாமியாட
அன்னங்கள் போலே வடிவமுடைய
    அரம்பையர் ஆடிவர 375
ஆடிவர மகதேவர் கயிலையில்
    அவரவர் வெற்றிகொட்டி
பாடியாடும் ஒப்பினையும் கண்டு
    பச்சமால் தான்மகிழ
செகத்திலுள்ள தெய்வாரனை பேரும்
    சேருங்க யென்றாரே.

முன்னங்காலினைப் பின்புறமாக வைத்து மோகினியாகவே ஆடுகின்றார் நீலசுவாமி. அன்னங்களைப் போன்ற வடிவமுடைய அரம்பையர்கள் உடன் ஆடிவருகிறார்கள். கயிலையில் மகதேவர் முன்னிலையில் கைகொட்டிப் பாடி ஆடுவதை ஒத்திருந்த நீலனின் ஆட்டத்தைப் பார்த்துத் திருமால் மனமகிழ்ந்தார். கூடியிருந்த தேவர் அனைவரும் மகிழ்ச்சி ஆரவாரம் செய்தார்கள்.

அரம்பை - தெய்வப்பெண். செகம் - உலகம்.

Tēvarkaḷ pukal̲tal

mun̲n̲aṅ kālpin̲ vaittu
    mōkin̲iyāka nīlacuvāmiyāṭa
an̲n̲aṅkaḷ pōlē vaṭivamuṭaiya

arampaiyar āṭivara
āṭivara makatēvar kayilaiyil
avaravar veṟṟikoṭṭi
pāṭiyāṭum oppiṉaiyumkaṇṭu
paccamāl tāṉmakiḻa
cekattiluḷḷa teyvāraṉai pērum
cēruṅka yeṉṟārē

Encomium by Devas (Minor gods)

Nīlacuvāmi danced like Mokiṉi
Keeping his front leg ḅehind
Accompanied by Rampā like women
Dancing graceful like the swans.
Seeing this dance similar to the one
Performed before Makatēvar with
Triumphant clapping of hands
Well turned with song and dance.
Tirumāl grew happy and all
The gods of the world joined the chorus of praise.

கண்டோர் செய்த சிறப்பு

பூவை யிட்டுமன மெய்த்திட நீலன்
போற்றிக்கொண்டார் சிலர் வாழ்த்திக் கொண்டாரே
போதும் போதும்இனி ஆடிய நாடகம்
பூரை பூரையென்று ஆடியவர் கண்டார். 380

நீலனின் ஆட்டத்தைக்கண்ட தேவர்களும், முனிவர்களும் மனம் மகிழ்ந்து நீலனைப் போற்றினர். சிலர் வாழ்த்தினர். ஆடிய நாடகம் முழுமை பெற்றுவிட்டது என்பதை உணர்ந்தவர்களாய் பூக்களைத் தூவி வாழ்த்தினார்கள்.

Kaṇṭōr ceyta ciṟappu

pūvai yiṭṭumaṉa meyttiṭa nīlaṉ
pōṟṟikkoṇṭār cilar vāḻttik koṇṭārē
pōtum pōtumiṉi āṭiya nāṭakam
pūrai puraiyeṉṟu āṭiyavar kaṇṭār

The honour bestowed by the audience

Some praised Nīlaṉ offering flowers
Others praised him and others said
That his dance drama was more than enough
And others showered flowers on him.

மாலை மரியாதை

சேர விருந்தி முங்கையின் மோதாரி
செல்வநீலன் கயிலையில் சேரவே
கிட்ட அழைத்து சரப்பணி மாலை
கெம்பித மாய்நீலன் கழுத்தினி லிட்டார்
வட்டமிட் டாடிய நீலனுக்குத் தான
வரிசை கொடுத்த புகழ்நீல ராசன்
பிரமாவும் தேவர் ரிசிகளும் காண
வேண்டும் வரிசை கொடுக்க வெண்ணி
அடடா உன்தேசம் ஆளும் புவியும்
ஆணழகா நீலா உன்னைப் போலுண்டோ
தங்கமும் பொன்னுஞ் சரப்பணி மாலை
சமைத்த நல்ல சரப்பணி கொடுத்தார்
பொங்கும் புகழ்நீல தம்புரான் வாங்கி
பொன்னுமனே வாழ்த்திக் கொண்டர்ரே
போர்த்திக் கொ்ண்டார்-நீல-வாழ்த்திக்கொண்டாரே
மாயனை நன்றாய் வணங்கிக் கொண்டாரே.

நீலன் மகிழ்ச்சியோடு கயிலை அடைய வேண்டும் என்ற ஆர்வத்தோடு நீலனை அருகில் அழைத்து மணி மாலைகளைக் கழுத்தில் அணிவித்துப் பெருமைப்படுத்தினர். மேலும் பிரமாவும், தேவர்களும், முனிவர்களும் கண்டு புகழுமாறு வரிசைப் பொருள்களைக் கொடுக்க வேண்டும் என்று எண்ணினார்கள். இந்த உலகையே ஆளும் திறம்வாய்ந்த ஆணழகனே! உனக்கு நிகரானவர் யாரும் இல்லை என்று புகழ்ந்து தங்கத்தாலும், பொன்னாலும், மணிகளாலும் செய்யப்பட்ட மாலைகளை வழங்கி வாழ்த்தினார்கள். நீலனும் வணங்கியபடியே வாழ்த்தி அவற்றைப் பெற்றுக்கொண்டு திருமாலை வணங்கினான்.

Mālai mariyātai

cēra virunti muṅkaiyiṉ mōtāri
celvanīlaṉ kayilaiyil cēravē

kiṭṭa aḻaittu carappaṉi mālai
kempita māynīlaṉ kaḻuttiṉi liṭṭār
vaṭṭamiṭ ṭāṭiya nīlaṉukkuṭ tāṉa
varicai koṭutta pukaḻnīla rācaṉ
piramāvum tēvar ricikaḷum kāṇa
vēṇṭum varicai koṭukka veṇṇi
aṭaṭā uṉṭēcam āḷum puviyum
āṇaḻakā nīlā uṉṉaip pōluṇṭō
taṅkamum poṉṉuñ carappaṉi mālai
camaitta ṉalla carappaṉi koṭuttār
poṅkum pukaḻnīla tampurāṉ vāṅki
poṉṉumaṉē vāḻttik koṇṭārē
pōrttik koṇṭār - nīla - vāḻttikkoṇ ṭārē
māyaṉai naṉṟāy vaṇaṅkik koṇṭārē

Honoured with garlands

In order that he may reach Kailsah early with joy
The son of Cēraṉ was called near, adorned with bracelets,
And offered presents as Carappaṇi, (a kind of necklace)
Which hung around his neck majestically.
Nīlaṉ who danced in circles
Was given a series of presents
By Pirammā, Devas and sages
Far surpassing the expectation of all.
They said that there was none
More beautiful than Nīlaṉ in this land
And gold, shining carappaṇi:
Nīlaṉ, the famed one, received all these
With thanks and praise in his lips
And covered himself with these and
Worshipped well Tirumāl.

சங்கத்தார் செய்த சிறப்பு

யெங்கும் புகழுவே சங்கத்தார் கூடி
யிட்டார் பலபணி பட்டாடை யெல்லாம்

செங்கை வளையலு முங்கை மோதாரி
சித்திர நீலன் திருக்கையி லிட்டார் 390

நீலனின் ஆட்டத்தைக்கண்ட தேவர் முதலானோர் சிறப்புசெய்து முடித்தபிறகு அச்சபையில் கூடியிருந்த சங்கத்துச் சான்றோர்கள் பலவகை அணிகலன்களையும், பட்டாடைகளையும் அணிவித்தார்கள். நீலனின் கைகளுக்குரிய காப்பு முதலானவற்றைக் கையில் அணிவித்துச் சிறப்பித்தார்கள்

Cankattār ceyta cirappu

yenkum pukalavē cankattār kūti
yittār palapani pattātai yellām
cenkai valaiyalu munkai mōtāri
cittira nīlan tirukkaiyi littār

Special honour by members of the Cankam (guild or Association)

The members of the guild assembled
Gave Nīlan varieties of silk
And adorned his hands with gold bracelets.

திருமாலுக்கு மாலை அணிவித்தல்

தெய்வ பெருமாள் அனந்தர புரத்தில்
திருப்பெரு மாளுட சன்னதி கண்டார்
மையிட்ட கண்ண நீலனும் நீலியும்
வரிசைகள் பெற்று வெகுமானம் பெற்றார்
பெற்றார் திருஉண்மை தானா யிருக்க
பெரிய நீலன் கண்ட வரத்தில்
தங்கம் பதித்த சரகலாத்து முத்து
தனிமுத்து மாலை சரப்பணி யிட்டார்.

பரிசாக வரிசைப் பொருள்கள் பலவற்றைப் பெற்ற மையணிந்த கண்களையுடைய நீலியும் நீலனும் திருவனந்தபுரத்திலே எழுந்தருளியுள்ள பெருமாளின் ஆலயத்தினுட் சென்றார்கள். தாங்கள் பெற்ற பரிசுப் பொருள்களிலிருந்து சரப்பணி, முத்துமாலை ஆகியவற்றைத் திருமாலுக்கு அணிவித்து வணங்கினார்கள்.

Tirumālukku mālai anivittal

teyva perumāl anantara purattil
tirupperu māluta cannati kantār

maiyiṭṭa kaṇṇa nīlaṉum nīliyum
varicaikaḷ peṟṟu vekumāṉam peṟṟār
peṟṟār tiruuṇmai tāṉā yirukka
periya nīlaṉ kaṇṭa varattil
taṅkam patitta carakalāttu muttu
taṉimuttu mālai carappaṇi yiṭṭār

Garlanding Tirumāl

Reaching the sanctorum of Perumāḷ
At Aṉantarapuram, Nīlaṉ and Nīli
With black painted eyes, witnessed the Lord.
After getting various presents, Nīlan
Thought if fit to present gold carappaṇi,
Pearls and pearl garlands to the great Tirumāl

பரிசுக்குப் பின்

மங்காத படியே தெய்வார்கொண் டாட
மகராச நீலன் வருகிற புதுமை
யேங்கியே யீரேழு உலகமும் மெய்க்க
யிட்டார் விலைமதிக்க வொண்ணாத முத்து
செங்கண்மால் பாதம் பெற்றெங்கள் நீலன்
திருமா லிருக்கும் அனந்தர புரத்தில்
மெய்யாக நீலன் பரிசையும் பெற்று
மேன்மையாய் நிற்கிற வேளையது தன்னில்

நீலன் தேவர்கள் புகழ ஈரேழு உலகத்தவர்களும் சூழ்ந்து பாராட்ட, விலைமதிப்பற்ற பொருள்களைப் பரிசாகப் பெற்று அனந்தரபுரத்துத் திருமாலை வணங்கியவனாய் மகிழ்ந்திருக்கும் வேளையில் மேலும் நிகழ்ந்தது யாது எனில்!

Paricukkup piṉ

maṅkāta paṭiyē teyvārkoṇ ṭāṭa
makarāca nīlaṉ varukiṟa putumai
yēṅkiyē yīrēḻu ulakamum meykka
yiṭṭār vilaimatikka voṇṇāta muttu

ceṅkaṇmāl pātam peṟṟeṅkaḷ nīlaṉ
tirumā lirukkum aṉantara purattil
meyyāka nīlaṉ paricaiyum peṟṟu
mēṉmaiyāy niṟkiṟa vēḷaiyatu taṉṉil

After getting the presents

With undiminished fame, praised by all Devas
The entry of Nīlaṉ was glorious, fit enough
To be envied in all the fourteen worlds,
With priceless gifts of pearls
He worshiped the feet of red eyed Tirumāl
Abiding at the Temple at Aṉantarapuram,
And standing high in the world, at that time,

மீண்டும் திருமால் ஆடச் சொல்லுதல்

உம்பா ருலகில் ஒருவர்நிக ரில்லை
ஒருநாட கம்ஆட வேணுமென் றாரே
ஆடுமென்று அச்சுதன்சொல்ல ஆணழகன் கேட்டு
அவனிதனில் மிக்கான நாடகம் கெட்டி
ஆடுவார் நீலராசன் தேடும் தமிழ்ஞானம்
உபதேசம் அருள்கின்ற திருமால் மனமகிழ

மீண்டும் திருமால் நீலனை நோக்கி, நீலா! தேவலோகத்திலேயே உனக்கு நிகரானவர் யாருமில்லை. மீண்டும் என்முன் ஆடுவாயாக என்று பணித்தார். அதைக்கேட்ட நீலனும், அரிய தமிழறிவை ஊட்டவல்ல திருமாலின் உள்ளம் மகிழுமாறு ஆடத் தொடங்கினான்.

Mīṇṭum tirumāl āṭaccollutal

umpā rulakil oruvarnika rillai
orunāṭa kamāṭa vēṇumeṉ ṟārē
āṭumeṉṟu accutaṉcolla āṇaḻakaṉ kēṭṭu
avaṉitaṉil mikkāṉa nāṭakam keṭṭi
āṭuvār nīlarācaṉ tēṭum tamiḻñāṉam
upatēcam aruḷkiṉṟa tirumāl maṉamakiḻa

Tirumāl asks him to dance once again

Perumāḷ said that there was none
To equal Nīlaṉ even in the world of gods
And asked him to dance once again
Hearing this he started to dance
Better and greater than, the previous one
To please the heart of Tirumāl,
The one who gives great knowledge of Tamil

மீண்டும் நாடகம்

சிவராமா ராமா யெனவே செப்பினார் நாடகத்தை
தகுதிகு திகுயெனத் தாளங்கள் வைத்திட
சிந்தையில் வைத்தாட சிலைதனிலும்
வடிவழ குள்ளநீலன்
திருமாலின் முன்பில் ஆட
தகுதி திகுதியென தாளங்கள் வைத்துத்
தண்டைகள் ஆடிவர
சரணம் சரணமென்று குருபரா சரணமென்று
தாளம்வைத் திசல்பாடவே
திந்தோம் திமிதிமி யெனவே
திரியளி ரம்பைபோல
ஸ்ரீராமா ராமா யெனவே
தெய்வகுல நீலனார்
செங்கண் மலர்முகம் ஆடவே நீலன்
சித்திரக் கூத் தாட
செஞ்சிலம்பு தண்டை ஒலங்கள் பாட
திருப்பாதம் ஆடிவர
திருமால் மனமதுமே பக்கமகிழ
செங்கண்மால் தன்பேரிலே தெய்வங்கள்
சூழவே அரம்பையர் கூட

சிலம்பும் தண்டையும் ஒலிக்க, சிவராமா-ராமா எனப் பாடியவாறே திருவடிகள் சித்திரக் கூத்தாடத் தொடங்கின. அதைக்கண்ட செங்கண்மாலும், அவரைச் சூழ்ந்திருந்த தேவர்களும், அரம்பையரும் மனமகிழ்ந்தார்கள்

Miṉṭum nāṭakam

civarāmā rāmā yeṉavē
ceppiṉār nāṭakattai
takutiku tikuyeṉat tāḷaṅkaḷ vaittiṭa
cintaiyil vaittāṭa cilaitaṉilum
vaṭivaḻa kuḷḷanīlaṉ
tirumāliṉ muṉpil āṭa
takuti tikutiyeṉa tāḷaṅkaḷ vaittut
taṇṭaikaḷ āṭivara
caraṇam caraṇameṉṟu kuruparā caraṇameṉṟu
tāḷamvait ticalpāṭavē
tintōm timitimi yeṉavē
tiriyaḷi rampaipōla
srirāmā rāmā yeṉavē
teyvakula nīlaṉār
ceṅkaṇ malarmukam āṭavē nīlaṉ
cittirak kūttāṭa
ceñcilampu taṇṭai ōḷaṅkal pāṭa
tiruppātam āṭivara
tirumāl maṉamatumē pakkamakiḻa
ceṅkaṇmāl taṉpērilē teyvaṅkaḷ
cūḻavē arampaiyar kūṭa

Drama Again

Starting the drama, calling
The name of Civarāmā! Oh Rama,
With the rhythm of *Taku Tiku Tiku*
Keeping in mind the right rhythm,
The most handsome Nīlaṉ
Started his dance in Tirumāl's presence
With the rhythm of *Taku Tiku Tiku.*
The anklet came dancing and
The rhythmic song was
'Surrender, surrender to Tirumāl'

With well timed rhythm of *Tintōm, Timi, Timi.*
Godly Nīlan̲ danced saying, 'Ramā! Rama!'
Which made red eyed Tirumāl happy.
With joyful face Nīlan̲ danced painting like.
His anklet, sang music
And his feet danced, making Tirumāl
All surrounding Gods and Rampā most happy.

ஆடலும் பாடலும்

திருமனது களிகூர்ந்து சிந்தை வைத்துத்
திருப்பாதம் கண்டாட
பாடுவார் ஆடுவார் பதினாலுலக மெய்க்க
பலராக மதுபாட
பம்பை முரசு கிடுபிடி மத்தளம்
தாரைகள் நின்றூத
ஆடின நாடகம் பதினெட்டு மேளமும்
ஆடினார் புனர்பூரை
அருமை அறியவே பெருமை கொண்டாட
அச்சுதர் நீலன் முன்னே 415

மனமகிழ்ச்சியோடும், ஆழ்ந்த கவனத்தோடும் காலடிகளின் மாற்றங்களை அறிந்து ஆடினான் நீலன், பலவகைப் பண்கள் இசைத்தன. பம்பையும், முரசும், கிடுபிடியும், மத்தளமும் முழங்கின. தாரைகள் ஒலித்தன. பதினெட்டுவகையான இசைக்கருவிகளுடன் ஆடிய நீலனின் ஆட்டத்தைக்கண்டு பதினான்கு உலகமும் பாராட்டின.

பதினாலு உலகம் - மேலுலகம் ஏழு. கீழுலகம் ஏழு. இவற்றுள் மேலுலகம் ஏழும் முதல் பாடலிலேயே கொடுக்கப்பட்டுள்ளன. கீழுலகம் ஏழு - அதலம், விதலம், சுதலம், தராதலம், ரசாதலம், மகாதலம், பாதலம்.

Āṭalum pāṭalum

tirumanatu kaḷikūrntu cintai vaittut
tiruppātam kaṇṭāṭa
pāṭuvār āṭuvār patinālulaka meykka
palarāka matupāṭa
pampai muracu kiṭupiṭi mattaḷam
tāraikaḷ ninrūta

āṭiṉa nāṭakam patiṉeṭṭu mēḷamum
āṭiṉār puṉarpūrai
arumai aṟiyavē perumai koṇṭāṭa
accutar nīlaṉ muṉṉē

Song and Dance

Gladdening every heart and happy within himself.
Nīlaṉ danced rightly with the right step.
He sang and danced, stunning the fourteen worlds,
With varieties of tunes to the accompaniment of
Tabour, drum, *Kitupiti*, Mattaḷam, and Trumpet
He danced all the eighteen dances
With all the eighteen rhythms
Before Accutaṉ in order that
Nīlaṉ's greatness may come to the fore.

திருமால் வரமளித்தல்

மருவியென் பேரிலே நாடகம் வந்தாட
வரிசைபெறத் தந்தேனென்றார்
வய்யகம் உள்ள வரைக்கும் உனக்கு
வரம்தந்தே னென்றார்
திருவனந் தரபுரம் அமர்ந்துயிருக் கின்றதோர்
தேவர் பெருமா ளருளால்
செப்பினேன் எப்போதும் நீல ராசாவே
திருமாலுன் பங்கிலுண்டு
முக்காலும் உனக்கு வரமது தந்தேன்
எக்கால மாறாது

தன்முன் ஆடப்பட்ட நாடகத்தின் அருமையினை அறிந்தார் திருமால். நீலன்முன் தோன்றினார். நீலனே! நான் சொல்லியதற்காக மீண்டும் நீ நாடகத்தை ஆடியதால் உலகம் உள்ளவரைக்கும் நிலைக்கும்படியான பரிசுப்பொருளாக உனக்கு வரத்தினைக் கொடுக்கிறேன். திருவனந்தபுரத்திலே எழுந்தருளியுள்ள பெருமாள் அருளினால் இவ்வரம் உனக்குக் கொடுக்கப்படுகிறது திருமாலின் அருள் உனக்கு எப்போதும் உண்டு. இந்த வரத்தில் என்றும் மாற்றம் இருக்காது என்று கூறினார்.

மருவி - விரும்பி. முக்காலும் - மூன்று முறை.

Tirumāl varamaḷittal

maruviyen̲ pērilē nāṭakam vantāṭa
varicaipeṟat tantēnen̲ṟār
vayyakam uḷḷa varaikkum un̲akku
varamtantē n̲en̲ṟār
tiruvan̲an tarapuram amarntuyiruk kin̲ṟatōr
tēvar perumā ḷaruḷāl
ceppin̲ēn̲ eppōtum nīla rācāvē
tirumālun̲ paṅkiluṇṭu
mukkālum un̲akku varamatu tantēn̲
ekkāla māṟātu

Tirumāl offers a boon

Nīlā, with pleasure you came to dance
In my presence and you were rewarded
As long as the world lasts
I give you a great boon
With the grace of God stationed
Seated at Tiruvan̲antaram
I declare solemnly you Always have
A share in the blessings of Tirumāl.
This promise will never change at all times

அளித்த வரங்கள்

மோசம் வாராது மாயன் திருவாணை
முறைகள் தவறாதேடா
தர்க்க மில்லாமல் கோவில் குடிகொண்டு
சார்ந்து வணங்குமடியார்
சங்கடங்கள் தீர்த்து ரெச்சித்திடும் தெய்வம்
தானே யிருந்திடுவாய்
மெய்யாக வாழவும் பூசைநீ கொள்ளவும்
வெகுமான வரிசைபலதும்
வேண்டிய நீலனும் நீலி யிசக்கியும்
விண்ணவர் கொண்டாட நின்றாரே. 425

வாதம் புரியாமல் திருக்கோவிலில் வீற்றிருப்பாயாக. அப்போது உன்னை நம்பி வந்து வணங்கும் அடியவர்களின் துன்பங்களை நீக்கி, அருள்புரிகின்ற தெய்வமாக நீ விளங்குவாயாக. உண்மையாக வாழ்வதற்கும் அடியவர்கள் அளிக்கும் பூசைகளையும், பரிசுப் பொருள்களையும் ஏற்றுக்கொண்டு நீலனும் நீலியுமாகிய நீங்கள் தேவர்கள் போற்ற விளங்குவீர்களாக என்று வரமளித்தார்.

தர்க்கம் - வாதம் சங்கடம் - துன்பம் ரெச்சித்தல் - அருள்புரிதல்

Aḷitta varaṅkaḷ

mōcam vārātu māyan̲ tiruvāṇai
mur̲aikaḷ tavar̲ātēṭā
tarkka millāmal kōvil kuṭikoṇṭu
cārntu vaṇaṅkumaṭiyār
caṅkaṭaṅkaḷ tīrttu reccittiṭum teyvam
tān̲ē yiruntiṭuvāy
meyyāka vāḻavum pūcainī koḷḷavum
vekumān̲a varicaipalatum
vēṇṭiya nīlan̲um nīli yicakkiyum
viṇṇavar koṇṭaṭa nin̲r̲ārē

Boons Bestowed

No evil well overtake you.
Never break religions and holy conventions.
Be present in the temple without arguments
And remove the problems and save
Those who worship thee.
Live like a God and receive poojas
And presents from them.
Thus stood Nīlan̲ and Nīli
With the praise of all the dwellers of heaven

திருமாலின் வாழ்த்து

வரம்வேண்டி நீலராசன் வரிசைகளும் பெற்றனரே
ஆடுகின்ற கோலத்தோடே அலங்காரப் பணியோடே
தேடுகின்ற பெருமாள் தெருவெல்லாம் தேடுவாராம்

தொழுதுநின்ற நீலனைத்தான் சொல்லுவாராம் பெருமாளும்
பழுதறவே பூசைகொண்டு பாருலகில் வாழ்ந்திரென்றார்.

ஆடிய கோலமும் அலங்கார ஆடையணிகளும் விளங்கத் திருமாலைத் தேடி வணங்கிநின்ற நீலனை நோக்கி குற்றமற்ற பூசைகளை ஏற்று இந்நிலவுலகிலே வாழ்ந்திருப்பாயாக என்று வாழ்த்தினார்.

பழுதற - குற்றமற.

Tirumāliṉ vāḻttu

varamvēṇṭi nīlarācaṉ varicaikaḷum peṟṟaṉarē
āṭukiṉṟa kōlattōṭē alaṅkārap paṇiyōṭē
tēṭukiṉṟa perumāḷ teruvellām tēṭuvārām
toḻutuniṉṟa nīlaṉaittāṉ colluvārām perumāḷum
paḻutaṟavē pūcaikoṇṭu pārulakil vāḻntireṉṟār

Tirumāl's praise

Seeking boons, Nīlaṉ got presents too.
Costumed as a dancer and in this make up
He went in search of perumāḷ
All over the streets. To this Nīlaṉ
Perumāḷ said, 'Receive the poojas
And live long in this world"

நீலன் வணங்குதல்

என்றமொழி தனைக்கேட்டு யியல்பெரிய நீலராசன்
மன்றுலகில் பூசைகொள்ள மாயவரை அடிதொழுதார்
அடிதொழுது நீலராசன் அச்சுதனாதனை வாழ்த்தினார்
படியேழுந் தான்புகழ பள்ளிகொண்ட பெருமாளே
பூவுலகில் பூசைகொள்ளப் போறேனான் புண்ணியனே
நாவுலகில் பூசைகொள்ள நாரணரை அடிவணங்க

வரமளித்து வாழ்த்திய திருமாலின் உரையைக்கேட்ட நீலன், ஏழுலகும் புகழுமாறு பள்ளிகொண்டருளும் பெருமானே! இம்மண்ணுலகில் அடியவரின் பூசையினை ஏற்பதற்காகத் தங்கள் ஆணையின்படி புறப்படுகிறேன் என்றும் என்நாவில் வீற்றிருந்து

என்வாக்குக்கு அருள்புரியவேண்டும் என்று வேண்டித் திருவடிகளை வணங்கினான்.

மண்ணுலகில் என்பது எதுகைநோக்கி மன்றுலகில் எனத்திரிந்தது

Nīlaṉ vaṇaṅkutal

eṉṟamoḻi taṉaikkēṭṭu yiyalperiya nīlarācaṉ
maṉṟulakil pūcaikoḷḷa māyavarai aṭitoḻutār
aṭitoḻutu nīlarācaṉ accutaṉātaṉai vāḻttiṉār
paṭiyēḻun tāṉpukaḻa paḷḷikoṇṭa perumāḷē
pūvulakil pūcaikoḷḷap pōṟēṉāṉ puṇṇiyaṉē
nāvulakil pūcaikoḷḷa nāraṇarai aṭivaṇaṅka

Nīlaṉ's obeissance

Hearing these words, large hearted Nīlaṉ
Fell to worship Perumāḷ to receive Poojas
In this world. He worshipped Accuttaṉ
Prostrating in worship at his feet.
"The slumbering Lord of seven worlds,
Lord of virtues, with thy grace
Let me receive worship and poojas
In this world. Reside on my tongue"
So saying he worshipped the feet of Nārāyaṇaṉ

திருமாலின் உறுதிமொழி

அடிவணங்கி நீலனைத்தான் அச்சுதரு மனமகிழ
மடியாதே நீலாகேள் உன்வாக்கில் நானிருப்பேன்
சடையாதே நீலாகேள் சார்ந்தகுடி தனைவளர்க்க
கருத்தாக நானும்வந்து கைக்குதவி யாகநிற்பேன்
நயப்பான[1] வார்த்தைசொல்லி நாராயணர னுப்பிவிட்டார்

தன்னை வணங்கிய நீலனைநோக்கி, நீலனே! சிறிதும் அஞ்சாதே. நான் உன் வாக்கிலிருந்து உன் வாக்குகளை நிறைவேற்றுவேன். உன்னை நம்பி வந்தடைந்த குடிமக்களைக் காப்பதற்கு உனக்குத் துணையாக இருப்பேன் என்று உறுதிகூறி நாராயணர் நீலனை அனுப்பிவைத்தார்.

மடி - சோம்பல். சடையாதே - வருந்தாதே.

சு.சொல் : 1 நறப்பான

Tirumālin urutimoli

aṭivaṇaṅki nīlaṉaittāṉ accutaru maṉamakiḻa
maṭiyātē nīlākēḷ uṉvākkil nāṉiruppēṉ
caṭaiyātē nīlākēḷ cārntakuṭi taṉaivaḷarkka
karuttāka nāṉumvantu kaikkutavi yākanirpēṉ
nayappāṉa vārttaicolli nārāyaṇara ṉuppiviṭṭār

Tirumāl's promise

With gladness at heart Accutaṉ
Said to Nīlaṉ who worshipped his feet
"Do not be afraid. Residing in your words,
I will fulfil all your words.
Do not worry I will always be at hand
To help you to protect your subjects.
Saying these fine words, Nārāyaṇaṉ sent him off.

நீலன் நீலி புறப்பாடு

நன்றெனவே நீலதம்புரான் நாராயணரிடம் வரம்வாங்க
விடைவாங்கி நீலராசன் மெய்ப்புடைய நீலியுமாய்
தடையறவே பூசையுண்ண தானிருவர் தானடக்க
திருமாலை அடிதொழுது திருவனந்தர புரமும்விட்டு 445
கடந்தனனே நீலராசன் கருமனை ஆறும்விட்டு

நாராயணரிடம் வரம்பெற்று விடைபெற்றுக் கொண்ட நீலராசன் நீலியுடன், குற்றமற்ற பூசைகளை ஏற்றுக்கொள்வதற்காகத் திருமாலின் திருவடிகளைத்தொழுது திருவனந்தபுரத்திலிருந்து புறப்பட்டான்

Nīlaṉ Nīli puṟappāṭu

naṉṟeṉavē nīlatampurāṉ nārāyaṇariṭam varamvāṅka
viṭaivāṅki nīlarācaṉ meypputaiya nīliyumāy
taṭaiyaṟavē pūcaiyuṇṇa tāṉiruvar tāṉaṭakka
tirumālai aṭitoḻutu tiruvaṉantara puramumviṭṭu
kaṭantaṉaṉē nīlarācaṉ karumaṉai āṟumviṭṭu

Nīlaṉ and Nīli start

Receiving the boons from Nārāyaṇaṉ
Nīlaṉ and truthful Nīli left
To receive poojas unhindered.
Worshipping the feet of Tirumāl
They left Tiruvaṉantaram
And crossed river Karumaṉai.

சேர நாடடைதல்

அடர்ந்தமரச் சோலைவிட்டு அழகுதெய்வ நீலராசன்
வடக்கே யிருந்து தெற்கே[1] நோக்கி
    வாழனந்தர புரமும்விட்டு
மேற்கிருந்து[2] கிழக்கேவர மேனாடு ராச்சியத்தில்
ராச்சியத்தில் மிக்கான நல்லசேரன் மலைநாட்டில்
புதுமைசெய்து நீலராசன் பொன்னழகன் பேர்விளம்ப

திருவனந்தபுரத்திலிருந்து புறப்பட்டுக் கருமனை ஆற்றின் வழியே அடர்ந்த மரச்சோலைகளைக் கடந்து வடக்கிலிருந்து தெற்குநோக்கி வாழனந்தரபுரத்தைக் கடக்கின்றனர். பின்பு மேற்கிலிருந்து கிழக்குநோக்கி மேனாட்டு ராச்சியமாகிய சேரனின் மலைநாட்டில் நீலராசனின் பெயர் விளங்குமாறு புதுமைகள் செய்ய நினைத்தார்.

ஒப்புரவு - ஒற்றுமை; சமாதானம்; சமம்.

சு.சொல் : 1 தெக்கே 2. மேக்கிருந்து

Cēraṉāṭaṭaital

aṭarntamarac cōlaiviṭṭu aḻakuteyva nīlarācaṉ
vaṭakkē yiruntu teṟkē nōkki
    vāḻaṉantara puramumviṭṭu
mēṟkiruntu kiḻakkēvara mēṉāṭu rācciyattil
rācciyattil mikkāṉa nallacēraṉ malaināṭṭil
putumaiceytu nīlarācaṉ poṉṉaḻakaṉ pērviḷampa

Reaching Cēraṉ Country

Leaving the thick forests
Handsome Nīlaṉ moved North to South

And leaving Vāḻaṉantarapuram
Moved from East to West
And came to the beautiful
Western mountainous land of Cēraṉ
And performed miracles to Cēraṉ his name.

மேனாட்டு ஊர்களும் மக்களும்

அதிசயமாய் அந்நாட்டில் அங்கிருக்கும் ஊர்தோறும்
வெள்ளாளர் சூத்திரர்கள் வேதியர்கள் மலையாளம்
கள்ளமுள்ள நாயர்களும் காயாளர் தம்மிடமும்
கொள்ளைகொண்டு குருதியுண்ண குற்றமற்ற நீலராசன்
பிள்ளைகளுக்கும் பெரியோர்களுக்கும் பேரடிமை கொள்ளுவாரும்
அற்பமான பிசாசுகளை அடித்துமிகத் துரத்திவிட
மெய்ப்பான தெய்வங்களை வீரமுடனே நிறுத்தி
ஒப்புரவாய் நீலதம்புரான்[1] உணவுகொண்டு குடிவாழ
மெய்ப்புடைய சிவனருளால் மேனாட்டில் பூசைகொண்டாரே
இளைய பெருமாளும் ஏதுரைப்பார்.

மேனாட்டைச் சேர்ந்த ஊர்களில் வசித்த சூத்திரர்கள், வெள்ளாளர், அந்தணர்கள், மலையாளிகள், நாயர்கள், காயாளர்கள் ஆகிய மக்களையும், குழந்தைகளையும் கொள்ளையடித்து அடிமைகளாக்கி அவர்கள் இரத்தத்தைக் குடித்துவந்த பிசாசுகளை அடித்துத் துரத்தினார்கள். அவ்விடங்களில் பாதுகாப்புக்குரிய உண்மையான தெய்வங்களை வீரத்துடன் நிலைநிறுத்தினார்கள். சிவபெருமானின் திருவருளால் அங்கிருந்த மக்கள் அனைவரும் துன்பமின்றி உணவு உட்கொண்டு வாழ்வதற்குரிய வழிவகை உருவாக்கித்தந்து, அந்நாட்டு மக்களின் பூசையினை ஏற்றுக் கொண்டார்கள்.

சு.சொல் : 1 நீலதம்பிரான்

Mēṉāṭṭu ūrkaḷum makkaḷum

aticayamāy annāṭṭil aṅkirukkum ūrtōṟum
veḷḷāḷar cūttirarkaḷ vētiyarkaḷ malaiyāḷam
kaḷḷamuḷḷa māyarkaḷum kāyāḷar tammiṭamum
koḷḷaikoṇṭu kurutiyuṇṇa kuṟṟamaṟṟa nīlarācaṉ
piḷḷaikaḷukkum periyōrkaḷukkum pēraṭimai koḷḷuvārum
aṟpamāṉa picācukaḷai aṭittumikat turattiviṭa

meyppāṉa teyvaṅkaḷai vīramuṭaṉē niṟutti
oppuravāy nīlatampurāṉ uṇavukoṇṭu kuṭivāḻa
meyppuṭaiya civaṉaruḷāl mēṉāṭṭil pūcaikoṇṭārē
iḷaiya perumāḷum ēturaippār

Western cities and the people

Witnessing the strange places there,
He saw Veḷḷāḷas, Cūttirar, Vedic scholars,
Malayalees, guileful Nāyars,
Kayāḷars being arsoned, enslaved
And their blood being sucked by
Minor devils. He chased them out
And boldly stationed truthful
And reliable so that
All may live in peace and eat.
Thus young Perumāḷ by the grace of Civaṉ
Received poojas in the western land

கயிலாயம் புறப்படுதல்

பல்லுயிரெல் லாம்தழைக்கப் படைத்துவிட்ட சிவன்தனையும்
நல்லழக னீலராசன் நாயகியாள் நீலியுமாய்
சிவனுமையாள் கயிலாசம் சென்றுகாண வேணுமென்று
அகமகிழ வழிநடக்க அரிவயர்கள்[1] குரவையிட
கயிலாய மதனைநோக்கிக் காவலவன் வழிநடந்தார்
வசுதேவன் மைந்தனென்னும் வளர்பெருமா ளருளாலே
தெய்வலோகம் தனைக்கடந்து செல்லப்பிள்ளை நீலன்வாறார்
அருவரையும் ஏரிகளும் அடவிகளும் தான்கடந்து
கையிலாசக் கோட்டையிலே காவலவ னீலனவர்

பெருமாள் கூறியபடி உலக உயிர்களைப் படைத்துக் காக்கும் சிவபெருமானும், பார்வதிதேவியும் எழுந்தருளியுள்ள கயிலாயமலையை நோக்கி நீலனும் நீலியும் செல்லத் தொடங்கினார்கள். மனம்கிழ்ச்சியோடு நடப்பதற்கு ஏற்றவாறு அரிவையர்கள் குரவையாடி வந்தார்கள்.

அரிவையர் - பெண்கள். அடவி - சோலை. வசுதேவன் - சூரன் புத்திரன்; தேவகி

நாயகன்; கிருஷ்ண பலராமர்களுக்குத் தந்தை.

க.சொல் : 1. அருவயர்கள்

Kayilāyam puṟappaṭutal

palluyirel lāmtaḻaikkap paṭaittuviṭṭa civaṉtaṉaiyum
nallaḻaka ṉilarācaṉ nāyakiyāḷ niliyumāy
civaṉumaiyāḷ kayilācam ceṉṟukāṇa vēṉumeṉṟu
akamakiḻa vaḻinaṭakka arivayarkaḷ kuravaiyiṭa
kayilāya mataṉainōkkik kāvalavaṉ vaḻinaṭantār
vacutēvaṉ maintaṉeṉṉum vaḷarperumā laruḷālē
teyvalōkam taṉaikkaṭanta cellappiḷḷai nilaṉvārār
aruvaraiyum ērikaḷum aṭavikaḷum tāṉkaṭantu
kaiyilācak kōttaiyilē kāvalava ṉilaṉavar

Starting for Kailash

Handsome Nīlaṉ and beautiful Nīli
Started towards Kailash to see
The creator and protector of million creatures,
Civaṉ in company with Umaiyāḷ.
Walking with joy towards Kailash
Accompanied by *Kuravai* dancing women.
With the blessing of Perumāḷ, son of Vācutēvar
Crossed the world of Gods, Nīlaṉ, the pet
Traversing rivers, lakes and groves, and
Reached the fortress of Kailash.

கயிலையில் நீலன்

அத்தனுட பாதம்போற்றி ஆடிடுவார் ஒருகோடி
கந்தனுட கயிலைவளம் காண்குறாராம் நீலராசன்

கயிலையை அடைந்த நீலன், கயிலைநாதனின் திருவடிகளை வணங்கி, வளங்களைக் காணத் தொடங்கினான்.

அத்தன் - சிவன்.

Kayilaiyil nīlaṉ

attaṉuṭa pātampōṟṟi āṭiṭuvār orukōṭi
kantaṉuṭa kayilaivaḷam kāṇkuṟārām nīlarācaṉ

Nīlaṉ at Kailash

Praising the fect of Civaṉ with a million dance
Nīlaṉ witnessed the fertile land of Kantaṉ, Kailash.

கயிலைக்காட்சி

அஞ்செழுத்தை நெஞ்சில்வைத்து அச்சரங்க ளோதுவாராம்
பஞ்சாசரம் படிப்பார் பரமசிவர் தஞ்சமென்பார்
முப்பிறவி பாவம்செய்து முழுநரகில் கிடப்பாரும் 475
இப்பிறப்பில் தனைவெறுத்து யிருப்பார்கள் ஒருகோடி
கங்கைதனைச் சடைக்கணிந்த கடவுளார் கயிலையிலே
கந்தனுடன் கணபதியும் கருணையுடன் போற்றிசெய்ய

நமசிவாய என்ற ஐந்தெழுத்து மந்திரத்தினை மனத்தில் தியானித்தவர்களாய் எம்பெருமானே! உன்னையே அடைக்கலமடைந்தேன் என்று கூறி நிற்பார் பலர். முற்பிறவிகளில் செய்த பாவங்களின் பயனாக நரக வாழ்க்கையில் உழன்று கொண்டிருப்பவர் பலர். இப்பிறவியினை வெறுத்து வந்திருப்போர் பலர். கங்கையைத் தரித்த சடாமுடியையுடைய கயிலாயபதியைக் கணபதியும், கந்தனும் ஒருபுறம் துதித்து நின்றார்கள்.

அஞ்செழுத்து - 'நமசிவாய' எனும் ஐந்தெழுத்து மந்திரம். அச்சரம் - அட்சரம் என்பதன் பேச்சுவழக்கு. அட்சரம் - எழுத்து.

Kayilaik kāṭci

añceḻuttai neñcilvaittu accaraṅka ḷōtuvārām
pañcācaram paṭippār paramacivar tañcameṉpār
mupiṟavi pāvamceytu muḻunarakil kiṭappārum
ippiṟappil taṉaiveṟuttu yiruppārkaḷ orukōṭi
kaṅkaitaṉaic caṭaikkaṇinta kaṭavuḷār kayilaiyilē
kantaṉuṭaṉ kaṇapatiyum karuṇaiyuṭaṉ pōṟṟiceyya

The scerce at Kailash

With the five letter prayer at heart and
With repetition of holy words many were there.

Begging for refuge from Civaṉ
Those in hell for their sins in previous birth,
And those dejected with the present life were millions
The God with Kaṅka in his hair
Was worshipped by Kantaṉ and Kaṇapati on either side

சிவனும் உமையும்

கொந்துதிரை நாலுதிக்கும் குளிப்பார்கள் ஒருகோடி
நயினார் கணக்குடனே நாலுகணக்கு மிருக்க
அயிராணி பார்வதியும் ஆதிபர னிடத்திருக்க
சிவனார்க்கும் பார்வதிக்கும் திருமால்நா ராயணர்க்கும்
பலமுற நந்திநின்று பணிமாறும் வேளையிலே

நான்குபுறமும் பொங்கும் அலைகளிலே மூழ்கித் திளைக்கும் கூட்டம் ஒருபுறம். இவ்வாறு கணக்கிலடங்கா காட்சிகளுக்கிடையே சிவபெருமான் எழுந்தருளியிருக்க அருகிலே உமாதேவியாரும் இருந்தார்கள் சிவபெருமானும், உமாதேவியும், திருமாலுமாகக் கூடியிருந்த நேரத்தில் நந்திதேவன் எதிரிலேயிருந்து பணிவிடைகள் செய்துகொண்டிருந்தான்.

அயிராணி - பார்வதி. கொந்துதிரை - கொந்தளிக்கின்ற அலைகள்.

Civaṉum umaiyum

kontutirai nālutikkum kuḷippārkaḷ orukōṭi
nayiṉār kaṇakkuṭaṉē nālukaṇakku mirukka
ayirāṇi pārvatiyum ātipara ṉiṭattirukka
civaṉārkkum pārvatikkum tirumālnā rāyaṇarkkum
palamuṟap pintiniṉṟu paṇimāṟum vēḷaiyilē

Civaṉ and Umā

Millions were bathing in the waves of the sea
Amidst such countless scenes, Civaṉ appears
With Pārvati at his left,
Accompanied by Tirumāl
And served by Nanti.

நீலனுக்கு வழி

வடிவுடைய நீலனவர் வழிவிடுவார் அங்கிருப்போர்
படியேழுந் தான்கடந்து பரமசிவன் திருமுன்வந்து 485
திரிபுரத்தைத் தீயெரித்த சிவனும் நாராயணரும்
வருகவென எல்லோரும் வள்ளிமண வாளனுமாய்
செயன்செயன கயிலையிலே சிறந்திருக்கும் வேளையிலே

பலரும் கூடியிருந்த திருக்கயிலையிலே நீலராசன் நுழைகிறான். அங்கிருந்தோர் அனைவரும் விலகிநின்று நீலனுக்கு வழிவிடுகிறார்கள். ஏழு திருப்படிகளைக்கடந்து நீலன் சிவபெருமான்முன் வந்தடைகிறான். திரிபுரமெரித்த சிவபெருமானும் திருமாலும் முருகனுமாய், வந்த நீலனை வருகவென வரவேற்றார்கள்.

Nīlaṉukku vaḻi

vaṭivuṭaiya nīlaṉavar vaḻiviṭuvār aṅkiruppōr
paṭiyēḻun tāṉkaṭantu paramacivaṉ tirumuṉvantu
tiripurattat tīyeritta civaṉum nārāyaṇarum
varukaveṉa ellōrum vaḷḷimaṇa vāḷaṉumāy
ceyaṉceyaṉa kayilaiyilē ciṟantirukkum vēḷaiyilē

Pathway for Nīlaṉ

Many made way for shapely Nīlaṉ
Crossing seven steps he came before Civaṉ
Who burnt *Tiripuram* and was welcomed
By Nārāyaṇaṉ and Vaḷḷi's husband

தஞ்சமடைந்த திருக்கூட்டம்

பாசுபதம் பெற்றவர்கள் பரமசிவர் தஞ்சமென்பார்
பஞ்சவர்க ளய்பேரும் பச்சமால் தஞ்சமென்பார் 490
வஞ்சமற மார்க்கண்டனும் வாய்த்தபஞ்ச பாண்டவரும்
கூட்டோடே கயிலையிலே கொலுவிருக்கக் கண்டவர்கள்
கண்டுசென்று அடிபணிய காவலவ நீலராசன்

சிவபெருமானிடம் பாசுபதத்தினைப் பெற்றவர்கள் சிவபெருமானே! தஞ்சம் என்று பணிந்தார்கள். பஞ்சபாண்டவர்கள் ஐவரும் திருமாலினைத் தஞ்சமென்று பணிந்தார்கள். இவ்வாறு திருக்கயிலையிலே வீற்றிருந்த அனைவரையும் கண்டவர்கள்

அவர்களை அடிபணிந்து நின்றார்கள்.

பாசுபதம் - பசுபதிபாணம்.

Tañcamaṭainta tirukkūṭṭam

pācupatam peṟṟavarkaḷ paramacivar tañcameṉpār
pañcavarka ḷaypērum paccamāl tañcameṉpār
vañcamaṟa mārkkaṇṭaṉum vāyttapañca pāṇṭavarum
kūṭṭōṭē kayilaiyilē koluvirukkak kaṇṭavarkaḷ
kaṇṭuceṉṟu aṭipaṇiya kāvalava nīlarācaṉ

The crowd of surrendering devotes

Those who got *Pācupatam* from Civaṉ
Surrendered to Him and
The five Pāṇṭavās surrendered to Tirumāl
Thus, witnessing Paṉdavas and Mārkkaṇṭaṉ
Seated at Kailash, Nīlaṉ and Nīli made obeissance.

நீலன் திருவடிபணிதல்

பண்டுசெய்த வினையிலே பரமகெதி பெறவெனவே
பொன்னுநல்ல கெண்டியிலே பூவும்தண் ணீரும்விட்டு 495
வன்னமுள்ள சிவனுடைய மலர்ப்பாதம் தன்னில்விட்டுத்
தொழுதுநின்ற நீலனுடன் சொல்லுவார் சிவன்முதலார்

தஞ்சமடைந்து கூடியிருந்த கூட்டத்தைக்கண்ட நீலன், முன்வினைப்பயனாய்த் தொடர்ந்த தீவினை நீங்கி வீடுபேறு அடையவேண்டுமென எண்ணியவனாய், பொன்னாலான கெண்டியில் தண்ணீரேந்திவந்து சிவபெருமானின் திருவடிகளிலே மலரும் நீருமிட்டுத் திருவடி பணிந்து நின்றான்.

பண்டு - முன்பு.

Nīlaṉ tiruvaṭipaṇital

paṇṭuceyta viṉaiyilē paramaketi peṟaveṉavē
poṉṉunalla keṇṭiyilē pūvumtaṉ ṇīrumviṭṭu
vaṉṉamuḷḷa civaṉuṭaiya malarppātam taṉṉilviṭṭut
toḻutuniṉṟa nīlaṉuṭaṉ colluvār civaṉmutalār

Nīlaṉ worships His Holy feet

Looking at the Crowd of surrendering devotees,
To remove the consequence of the actions
Of previous birth, Nīlaṉ, took
A religious golden jug with water and flower
And washed the feet of Civaṉ and
Civaṉ said to the worshipping Nīlaṉ

சிவன் வினா

ஆதியிலே தந்தவரம் அழியாது ஒருநாளும்
நீதியுள்ள நீலராசன் நிலைநிறுத்தித் தந்தோமே
யிப்போது வந்ததென்னா இடுக்கமுண்டோ உந்தனுக்கு
செப்பமுள்ள நீலராசன் சொல்லுவாராம் ஒருவார்த்தை

நீலனே! யாம் முன்பு கொடுத்தவரம் என்றும் அழியாது. நீதிதவறாத உன்னிடம் என்றும் அது நிலைத்திருக்கும். இருந்தும் நீ இப்போது இங்கு வந்த காரணம் என்ன? ஏதாவது துன்பம் உண்டாயிற்றோ என்று வினவினார் சிவபெருமான்.

இடுக்கம் - துன்பம்.

Civaṉ viṉā

ātiyilē tantavaram aḻiyātu orunāḷum
nītiyuḷḷa nīlarācaṉ nilainiṟuttit tantōmē
yippōtu vantateṉṉā iṭukkamuṇṭō untaṉukku
ceppamuḷḷa nīlarācaṉ colluvārām oruvārttai

Civaṉ's query

The boon offered long ago
Will never perish with you the just.
What problem made you come
Once again here. Tell me And Nīlan said

நீலன் உலகத்துயர் கூறுதல்

காரணமாய்ப் பூவுலகில் காட்சி மெத்த தங்குதய்யா
வாரணம்போல் நடக்குமந்த மனுக்களெல்லாம் இறக்கிறதும்
வாடாமல் கோடாமல்

ஆடிவிலை போகுதப்பா அற்றவயி றானதுதான்
நாட்டில் கலிபெருத்தாட நானதுக்கு யென்னசெய்வேன்
ஓட்டிலிரந் துண்ணவைத்தான் உடையவளை கிரகமது

ஐயனே! இந்த நிலவுலகத்தில் யானைபோல வாழும் திடமான உயிர்களெல்லாம் திடீரென இறந்துபோகின்றனவே. பசி மிகுந்து விட்டது. நாட்டில் துன்பங்கள் மிகுந்துவிட்டன. நானதற்கு என்ன செய்வேன்? தீய கிரகங்கள் சூழ்ந்து உயர்ந்தவர்களையெல்லாம் ஓட்டில் உண்ணவைத்து விட்டனவே! என்றெல்லாம் முறையிட்டான் நீலன்.

வாரணம் - யானை.

க.சொல் : காச்சி.

Nīlan ulakattuyar kūṟutal

kāraṇamāyp pūvulakil kāṭci metta taṅkutayyā
vāraṇampōl naṭakkumanta maṉukkalellām iṟakkiṟatum
vāṭāmal kōṭāmal
āṭivilai pōkutappā aṟṟavayi ṟāṉatutāṉ
nāṭṭil kaliperuttāṭa nāṉatukku yeṉṉaceyvēṉ
ōṭṭiliran tuṉṉavaittāṉ uṭaiyavaḷai kirakamatu

Nīlaṉ narrates the sufferings in the world

Without any reason the following scene of sudden death
Of people as strong as elephants takes place
The glorious acceptance of dance without grace and pain, is ominous
Owing to the power of Saturn,
Evil planets make the great and the high
Eat in the (beggar's bowl) humble plate.
What can I do for all these?

சிவன் மக்கள் நடத்தையை எடுத்துக்கூறுதல்

தாட்டியமாய்க் குடிகளுக்குச் சஞ்சலிப்பு வருங்காலம்
வாட்டமில்லா நீலாகேள் வய்யகத்தில் நடக்கிறதை
பெரியோர்க்குச் சிறியோர்கள் புத்திசொல்லும் காலமிது
அதியபுத்தி தான்படுத்து அழியுதெடா நீலாகேள்
அகபெருமை கொண்டல்லவோ அவனியிலே கலிபிடித்து

சிவன்பேரு சொல்லாமல் சிவபத்தியும் தான்மறந்து
தங்கதங்கள் தெய்வமென சரவுகளை வைப்பாரும்
அங்கவர்க்கு யிடுக்கம்வந்தால் அவர்கள் ஒளிந்தோடிடுமே
உன்னைவணங்கும் குடிக்கும் இடுக்கம்உண்டோ நீலராசா

நீலா! குடிமக்களுக்கு இயற்கையாகவே துன்பங்கள் நிகழுங்காலம் இது. உலகில் நடப்பதைக் கூறுகிறேன் கேள்! சிறியவர்கள் பெரியவர்களுக்கு அறிவுரைகள் சொல்லக்கூடிய காலம் இது. மிகவும் புத்திசாலிகள் என்ற எண்ணத்தால் உலகமே அழிந்துகொண்டிருக்கிறது. உலகத்தையே சனியன்பிடித்து ஆட்டிக் கொண்டிருக்கிறான். அதனால் மக்கள் சிவனது திருநாமத்தை உச்சரிப்பதில்லை. சிவபக்தியையும் அடியோடு மறந்துவிட்டார்கள்; தாங்கள் விரும்பியபடி பலதெய்வங்களின் பெயர்களைச் சொல்லிக்கொண்டு சண்டை சச்சரவுகளை உண்டாக்குகிறார்கள். அவர்களுக்குத் துன்பம் வரும்போது ஓடி ஒளிந்துவிடுகிறார்கள் என்று கூறிய் சிவபெருமான், நீலா! உன்னை வணங்குகின்ற மக்களுக்கு ஏதேனும் துன்பம் நேர்ந்துள்ளதா என்று வினவினார்.

சரவு - சச்சரவு. தாட்டி - சாமர்த்தியம்; தைரியம். சஞ்சலம் - மனக்கவலை.

Civaṉ makkal naṭattaiyai eṭuttukkūṟutal

tāṭṭiyamāyk kuṭikaḷukkuc cañcalippu varuṅkālum
vāṭṭamillā nīlākēḷ vayyakattil naṭakkiṟatai
periyōrkkuc ciṟiyōrkaḷ putticollum kālamitu
atiyaputti tāṉpaṭuttu aḻiyuteṭā nīlākēḷ
akaperumai koṇṭallavō avaṉiyilē kalipiṭittu
civaṉpēru collāmal civapattiyum tāṉmaṟantu
taṅkataṅkaḷ teyvameṉa caravukaḷai vaippārum
aṅkavarkku yiṭukkamvantāl avarkaḷoḷin tōṭiṭumē
uṉṉaivaṇṅkum kuṭikkum iṭukkamuṇṭō nīlarācā

Civaṉ explains people's behaviour

These are evil days for the clever citizens.
Listen to me Nīlā, the untiring one, what happens in the world
These are bad days when the young advise the old
The world gets destroyed slowly because of intellectual pride
And owing to this arrogant pride Saturn grips the world,
People forgetting piety fail to utter Civan's name
And worship all and sundry gods and fight,

And disappear and hide at times of trouble.
But tell me whether any of your worshippers has suffered.

தங்கள் அருளால் குறையில்லை எனல்

உடையவனா ரங்கிருந்தால் ஒருகுறை வாராதெனக்கு
அரனே நீரறியாமல் அணுவொருநாள் அசையாது
பரனே பராபரனே பரமானந்தப் பொருளே
கல்பனைகேட் டடியேனும் கண்டுதிரு நடனமாட
சொல்பெரிய சிவன்முதலே திருக்கூத்தைப் பாருமென்றார். 520

பராபரனே! தாங்கள் எனக்குத் துணையிருக்கிறீர்கள். அதனால் என்னை வணங்கும் மக்களிடத்தில் துன்பம் நெருங்குவதேயில்லை. தங்களை அறியாமல் இந்த உலகத்தில் ஒரு அணுவும் அசைவதில்லையே! இந்த மகிழ்ச்சியோடு ஆடும் அடியேனின் கூத்தைக் கண்டுகளியுங்கள் என்று வேண்டிக்கொண்டு ஆடத்தொடங்கினான் நீலன்

Taṅkaḷ aruḷāl kuṟaiyillai eṉal

uṭaiyavaṉā raṅkiruntāl orukuṟai vārāteṉakku
araṉē nīraṟiyāmal aṇuvorunāḷ acaiyātu
paraṉē parāparaṉē paramāṉantap poruḷē
kalpaṉaikēṭ ṭaṭiyēṉum kaṇṭutiru naṭaṉamāṭa
colperiya civaṉmutalē tirukkūttaip pārumeṉṟār

By your grace I (Nīlaṉ) have no complaint

Oh God of Gods! with your protection
I have nothing to complain for
Without thy knowledge not an atom can move
O God! God of Gods! Oh God of Eternal Happiness!
With this thought in my mind
Let me dance before thee! please witness it.

பெருமாள் மகிழ நீலன் ஆடுதல்

பாருமென்று நீலன்சொல்ல பரமசிவன் மனமகிழ்ந்தார்
கோலவரன் பணியணிந்து கூண்டுநாடகம் ஆடுவாரே

16. 1. ஆடிக் கொண்டாரே - நீலதம்புரான்

ஆடிக்கொண்டாரே - புகழ்நீல தம்புரான்
அன்னம்போல - வெள்ளிக்கயிலை - சிவனிடம் (ஆடி)

2. தேடிமால் காணா சிவனை வணங்கியே
தெய்வகுல நீலதம்புரா னானவர் (ஆடி)

கூத்தைக் காணுங்கள் என்று கூறிய நீலன் வார்த்தையைக்கேட்ட சிவபெருமான் பெரிதும் மகிழ்ச்சிஅடைந்தார். நீலனும் அழகான ஆடையணிகளால் தன்னை அலங்கரித்துக்கொண்டு திருமாலுந்தேடி அறியமுடியாத சிவபெருமானின் திருவடிகளை வணங்கியபடியே நாடகத்தை ஆடத் தொடங்கினான் வெள்ளியங்கிரியில் எழுந்தருளியுள்ள சிவபெருமான் கண்டுகளிக்குமாறு ஆடினான் நீலன்

கூண்டு - கொண்டு என்பதன் கொச்சைச்சொல்

Perumāḷ makiḻa Nīlaṉ āṭutal

pārumeṉṟu nīlaṉcolla paramacivaṉ maṉamakiḻntār
kōlavaraṉ paṇiyaṇintu kūṇṭunāṭakam āṭuvārē
āṭik koṇṭārē nīlatampurāṉ
āṭik koṇṭārē pukaḻnīla ṭampurāṉ
aṉṉampōla veḷḷikkayilai civaṉiṭam (āṭi)
tēṭimāl kāṇā civaṉai vaṇaṅkiyē
teyvakula nīlatampurā ṉāṉavar (āṭi)

Nīlaṉ dances for the pleasure of Perumāḷ

Paramacivaṉ was happy with Nīlaṉ's words.
Nīlaṉ started dancing adorned with fine attire,
Nīlatampurāṉ danced and danced
Almost as graceful as the swan.
Worshipping the feet of Civaṉ which
Even Perumāḷ could not trace,
Nīlaṉ danced to the pleasure of the God of silvery Kailash

தேவர்புகழ ஆடுதல்

3. சித்திரக் காலில் சிலம்பாடி வாட
செங்கை வளையாட முன்கை குலுங்கிட
பத்திபத்தி யாகதெய்வ பிரமாக்கள்
பரமசிவன்மால் எல்லோரும் மெய்த்திட (ஆடி)

4. கற்றவர் தீர்க்கு கலிதீர்க்கும் ஆண்டவன்
    கண்கண்ட தெய்வம் புகழ்நீல தம்புரான்
சித்திர மாகத் திருநடனக் கூத்தாட
    தெய்வார்கள் சேரக் குரவை முழக்கிட (ஆடி)

5. தத்தி திமிதிமி தொந்தோ மெனவே
    தோதி கிணங்கள் தோமென வேதான்
தத்தரி கிடதக தரகிறு திதாவென
    தாளத்தில் பலமுறை தாளம்வைத் தாடிட (ஆடி)

6 அல்லாத விரதத்தவன் ஆபத்து கார்த்தவன்
    அஞ்சாதே யென்று அரவணைத் தாண்டவன்
தொல்லை யகற்றி துலைதீர்த்த நாயகனே
    தீராத வல்பிணி துலைதீர்த்த குலதெய்வம் (ஆடி)

அழகிய கால்களில் சிலம்புகள் ஓசையெழுப்பின. சிவந்த கைகளில் வளையல்கள் ஒலிக்க, முன்கைகள் குலுங்கின. வரிசையாக அமர்ந்திருந்த தேவர்கள், பிரம்மா, பரமசிவன், திருமால் ஆகிய அனைவரும் வியக்கும்படியாக நடனமாடினார் துன்பங்களைப்போக்கும் ஆண்டவன்முன் தெய்வங்கள் புகழக்கூடிய பெருமையையுடைய நீலதம்புரான், அழகாக நடனத்தை ஆடியபோது தேவர்களுஞ்சேர்ந்து குரவையிட்டு முழக்கமிட்டனர். தத்தி திமிதிமி தெந்தோம் என்னும் பலவிதமான தாளங்களில் ஆடினார். பயப்படாதே என்று அரவணைத்துத் துன்பங்களைப் போக்கியவனும் கொடிய நோயினை நீக்கியவனுமாகிய குலதெய்வ நீலன் ஆடினான்

Tēvarpukaḻa āṭutal

cittirak kālil cilampāṭi vāṭa
ceṅkai vaḷaiyāṭa muṉkai kuluṅkiṭa
pattipatti yākateyva piramākkaḷ
paramacivaṉmāl ellōrum meyttiṭa (āṭi)

kaṟṟavar tīrkku kalitīrkkum āṇṭavaṉ
kaṇkaṇṭa teyvam pukaḻnīla tampurāṉ
cittira mākat tirunaṭaṉak kūttāṭa
teyvārkaḷ cērak kuravai muḻakkiṭa (āṭi)

tatti timitimi tontō meṉavē
tōti kiṇaṅkaḷ tōmeṉa vētāṉ
tattari kiṭataka tarakiṟu titāveṉa
tāḷattil palamuṟai tāḷamvait tāṭiṭa (āṭi)

allāta viratattavan̲ āpattu kārttavan̲
añcātē yen̲ru aravan̲ait tān̲tavan̲
tollai yakar̲r̲i tulaitīrtta nāyakan̲ē
tīrāta valpin̲i tulaitīrtta kulateyvam

The Gods praise the dance

With the anklet dancing in his beautiful foot,
The bracelets jingling in the forearms
The Gods seated in row after row,
Piramman̲, Civan̲, Perumāḷ and all others were wonder struck
At the dance of Nīlan̲ in front of
The god who removes all suffering, and pain.
Famed and glorious Nīlatampurān̲s dance
Was accompanied by *Kuravai* dance of the gods.
To the rythm of *Tatti timitimi tontōm*
Tattari kiṭataka tākir̲u titta
And many other rhythms of different timings.
The god of eternal fasting and Protector
Embraced him saying "Be not afraid",
The God who removes troubles and the God
Who cures dangerous diseases comforted him

ஆட்டமும் பாராட்டும்

7. வன்னப் பணியை வயிடூரியம் பூட்டி
மாணிக்கத் தங்கக் கடயமும் பூட்டி
பொன்னுங் கடயமும் பொற்பணி பூட்டி
பொன்னான நீலன் புகழ்நீல தம்புரான் (ஆடி)

8. காயாம்பு மேனியோ னென்பார் சிலபேர்
கண்டன் கரைக்கண்ட னென்பார் சிலபேர்
பேயோ டேபெரு மாளிவ ரென்று
போத்திக்கொண்டே பெண்கள் வாழ்த்திக்கொண் டாட (ஆடி)

9. நட்டுங்கூத் தாட கெட்டிக்கார னென்னா
நாராயணார் சிவனார் மகிழ்ந்திட

வட்டத்தி லேபதி னெட்டுத்தாளம் வைத்து
மாலும் அயனும் மகிழ்ந்து கொண்டாட (ஆடி)

வயிடூரியம், மாணிக்கம், பொன்னால் செய்யப்பட்ட மாலைகள் ஆகிய பலவண்ண அணிகளையணிந்து நீலதம்புரான் ஆடும்போது நீலனைக் கண்டவர்கள் இவன் காயாம்பு நிறத்தைஉடைய திருமாலோ! நீலகண்டனாகிய சிவபெருமானோ! என்றெல்லாம் பாராட்டினார்கள் மகளிர் யாவரும் வாழ்த்தினார்கள். பதினெட்டுவகையான தாளங்களுக்கேற்ப ஆடிய நீலன் நட்டுவக்கூத்தில் மிகவும் வல்லவன் என்றுகூறி சிவனுந்திருமாலும் மனம்மகிழ்ந்து பாராட்டினார்கள்

Āṭṭamum pārāṭṭum

vaṉṉap paṇiyai vayiṭūriyam pūṭṭi
māṇikkat taṅkak kaṭayamum pūṭṭi
poṉṉuṅ kaṭayamum poṟpaṇi pūṭṭi
poṉṉāṉa nīlaṉ pukaḻnīla tampurāṉ (āṭi)

kāyāmpu mēṉiyō ṉeṉpār cilapēr
kaṇṭaṉ karaikkaṇṭa ṉeṉpār cilapēr
pēyō ṭēperu māḷiva reṉṟu
pōttikkoṇṭē peṇkaḷ vāḻttik koṇṭāṭa (āṭi)

naṭṭuṅkūt tāṭa keṭṭikkāra ṉeṉṉā
nārāyaṇār civaṉār makiḻntiṭa
vaṭṭatti lēpati ṉeṭṭuttāḷam vaittu
mālum ayaṉum makiḻntu koṇṭāṭa (āṭi)

Dance and Praise

Adorned with diverse jewels like,
Sapphire, rubies and diamonds,
And bedecked with gold garlands
And gold anklets and bracelets,
The famed Nīlatampurāṉ danced.
Some said that he atmost resembled
Kāyāmpū (black) coloured Tirumāl.
Those who saw him vouched that
He has seen the limits of dance

Women covering their head with a cloth
Praised him saying that he was clever and expert
The special rhythmic dance of Nīlan̲
Was witnessed by Nārāyaṇan̲ and Civan̲
And they praised his talent with all their heart.

இவன் யார் எனும் ஐயம்

10. இன்னா ரிவனோ யெவரென்று அறியாமல்
இந்தரக மயிலில் வந்தானோ யென்பார்
தன்னா தன்னா யிருந்தவ னென்பார்
சத்துரு வைவே றறுத்தவ னென்பார் (ஆடி)

11. உண்டிகை மேளங்கள் தாளங்கள் கொட்ட
ஒண்டொடி மார்கள்கை சாடைகள் காட்ட
ஆண்டரும் தேவரும் தொண்டுபண்ணி நிற்க
ஆனந்த மாடும் புகழ்நீல ஆண்டவன் (ஆடி)

12. வல்ல வரக்கரை வெல்லுங்குல தெய்வம்
வைய்யக மெய்க்க வரிசைதுரை வீரன்
சொல்லும் புகழும் குணமுடை யவராய்
துட்டரைக் கொட்ட மடக்கவும் வல்லவன் (ஆடி)

13. பொங்கும் கயிலாசம் எங்கும் தெருவீதி
பொன்னும் சிவனா ரிருப்பிடம் சங்கத்தில்
சங்கீதம் பாடுவார் கைமணி கொட்டுவார்
தாளத்தின் மேலேவைத் தாளங்கள் ஆட (ஆடி)

மயிலேறிவந்து பகைவர்களை அழித்துநின்ற முருகனோ! இவன் யார் என்று அறியமுடியவில்லையே! என்றெல்லாங் கூறியவாறே மேளதாளங்களின் ஒலிகளுக்கிடையே மகளிர் கையால் சாடைகள் காட்டினார்கள் தேவர்களும், முனிவர்களும் தொண்டு செய்துநிற்க நீலசுவாமி ஆனந்தமாகத் திருக்கூத்தினை ஆடினார்.

சத்துரு - பகைவன்.

Ivan̲ yār en̲um aiyam

in̲n̲ā rivan̲ō yevaren̲ru ar̲iyāmal
intaraka mayilil vantān̲ō yen̲pār

tannā tannā yiruntava nenpār
catturu vaivē raruttava nenpār (āṭi)

uṇṭikai mēḷaṅkaḷ tāḷaṅkaḷ koṭṭa
oṇṭoṭi mārkaḷkai cāṭaikaḷ kāṭṭa
āṇṭarum tēvarum toṇṭupaṇṇi niṟka
āṉanta māṭum pukaḻnīla āṇṭavaṉ (āṭi)

valla varakkarai velluṅkula teyvam
vaiyyaka meykka varicaiturai vīraṉ
collum pukaḻum kuṇamuṭai yavarāy
tuṭṭaraik koṭṭa maṭakkavum vallavaṉ (āṭi)

poṅkum kayilācam eṅkum teruvīti
poṉṉum civaṉā riruppiṭam caṅkattil
caṅkītam pāṭuvār kaimaṇi koṭṭuvār
tāḷattiṉ mēlēvait tāḷaṅkaḷ āṭa (āṭi)

The doubt about who he is

Not knowing who he is and what he is,
They surmised if he is the one coming on peacock?
Is he the one who kept himself to himself?
Is he the one who surpassed his enemies?
Saying such words, slender waisted dames
In unison with the rhythm of drum,
Spoke in sign language among themselves.
Even Gods and sages stood
In the service of Nīlaṉ,
The joyful famed dancer.
He was strong enough to subdue the strong
And the one with renown,
The one who is praised by all for character
The one capable of controlling the wicked
All the streets of Civaṉ's Kailash reverberate
With his song and dance
In unison with those who sang

And played the hand cymbals
Creating rhythm above rhythms.

கயிலையில் நீலன்

17. ஆடும் திருநடனக் கால்வைப்பு தாளமும்
அன்னம்போ லாடியே பொன்னுநீல சுவாமி
நாடு நகரும் பதியும் கொண்டாட
நாயன் கயிலையில் போய்மகிழ்ந் தாரே

தாளத்திற்கேற்பக் காலினைவைத்து அன்னம்போல் ஆடி, நாடும் நகரமும் புகழ்ந்து போற்றுமாறு திருக்கயிலாய மலையில் மகிழ்ந்திருந்தார்.

Kayilaiyil nīlaṉ

āṭum tirunaṭaṉak kālvaippu tāḷamum
aṉṉampō lāṭiyē poṉṉunīla cuvāmi
nāṭu nakarum patiyum koṇṭāṭa
nāyaṉ kayilaiyil pōymakiḻn tārē

Nīlaṉ and Kailash

Nīlaṉ's legs danced in perfect timing with tal
As graceful as the swan and
He was praised by the country and the cities.
Thus was happy Nīlaṉ at Kailash.

ஆட்டத்தின் பலன்

18. 1. யெந்தப்படி யாடினார் - நீலன்
எந்தப்படி யாடினார் - நீலதம்புரான்
எல்லோரும் கண்டு யிருள்வினை நீங்கிட
பந்தப் பழவினை யிளமை யிலாண்ட
பரம சிவனார் திருமனம் மெய்த்திட (யெந்த)

2. மத்தாள தாளத்திலே மிதித்தாடிட
வன்ன திருப்பாதம் பொன்னும் சிலம்பாட
தித்திதித்தி திமிதெய் யெனவே ஆட
தரிகிட தோம்மென தாளம்பல ஆடியே

மத்தளம், தாளம் இவற்றின் ஒலிக்கேற்ப காற்சிலம்பின் ஒலியும், அடிவைப்பும் இணையுமாறு பலவகை ஒலிகளில் ஆடிய ஆட்டத்தைக்கண்டு பரமசிவன் உள்ளம்மகிழ்ந்தார் கண்டிருந்தோர் அனைவரும் தங்கள் பழவினைகளாகிய தீவினைகள் அடியோடு நீங்கப் பெற்றவர்களாகி பழவினைப் பந்தங்களிலிருந்து விடுபட்டார்கள்

Āṭṭattin̲ palan̲

yentappaṭi yāṭin̲ār - nīlan̲
entappaṭi yāṭin̲ār - nīlatampurān̲
ellōrum kaṇṭu yiruḷvin̲ai nīṅkiṭa
pantap paḻavin̲ai yiḻamai yilāṇṭa
parama civan̲ār tiruman̲am meyttiṭa (yenta)
mattāḷa tāḷattilē mitittāṭiṭa
van̲n̲a tiruppātam pon̲n̲um cilampāṭa
tittititti timitey yen̲avē āṭa
tarikiṭa tōmmen̲a tāḷampala āṭiyē

The effect of the dance

How Nīlan̲ danced and how Nīlan̲ danced!
Nīlan̲ danced in such a way that
Those witnesses of his dance got rid of
Their previous sins and the consequences.
Paramacivan̲ was mightily happy with
The dancing rhythm in keeping with the drum,
And the golden anklets creating the rhythm of
Tittititti timitey tarikiṭatōm and
Many moves of rhythms of similar nature.

ஆட்டத்திற்குப் பரிசு

3. உத்தமியா ளுமை பார்வதியா ளம்மை
உடையவ ளோடு திருஉள்ள மாக
சித்திரக் கூத்தாடவே - நீலராசன்
சிறந்த வரிசை சிவனார் கொடுத்திட்டாரே

4. முத்து சரப்பணி தான்கொடுத் தாராம்
மோகன மாலை மிகக்கொடுத் தாராம்

பத்தி யுள்ளமிக நீலரா சாவுக்கு
பல்லாக்கு டம்மானம் சொர்ணம் கொடுத்தாரே

நீலனின் ஆட்டத்தை உமாதேவியாரோடு வீற்றிருந்து கண்டுகளித்த சிவபெருமான் முத்துச்சரப்பணி, மோகனமாலை, பல்லக்கு, பொன் போன்ற பல பரிசுகளை அளித்து மகிழ்ந்தார்

டம்மானம் - டமாரம்-இசைக்கருவி சொர்ணம் - பொன்

Āṭṭattiṟkup paricu

uttamiyā ḷumai pārvatiyā ḷammai
uṭaiyava ḷōṭu tiruuḷḷa māka
cittirak kūttāṭavē nīlarācaṉ
ciṟanta varicai civaṉār koṭuttiṭṭārē
muttu carappaṇi tāṉkoṭut tārām
mōkaṉa mālai mikakkoṭut tārām
patti yuḷḷamika nīlarā cāvukku
pallākku ṭammāṉam corṉam koṭuttārē

Gift for the dance

The virtuous Umā seated beside Civaṉ, both
Witnessed the dance of Nīlaṉ.
He was gifted generously by Civaṉ
With pearl *Carappaṇi*, bewitching garlands,
Big drum, palanquin and gold.

அணிகலன் பரிசு

5. பொற்சிலம்பு வீர சங்கிலி யிட்டார்
பொன்னும் சரப்பணி மாலை கொடுத்தார்
வன்னக் கடுக்கன் விரலாழி மோதிரம்
மாணிக்கத் தங்கக் கடுக்கன் கொடுத்திட்டாரே

6. நாடக மும்திருக் கூத்தையுங் கண்டு
நளின கவிபாட் டுரைகளும் கேட்டு
வாடாம லேசிவ நீலராசா வுக்கு
வன்னப் பணிவகை சொர்னம் கொடுக்க
(யெந்தப்படி ஆடினார்)

மேலும் பொற்சிலம்பும், வீரங்கிலியும், சரப்பணிமாலையும் அணிவித்தார் விரல்களுக்கு மோதிரங்களும், காதுகளுக்கு மாணிக்கங்கள் பதிக்கப்பெற்ற தங்கக் கடுக்கன்களும் ஆகிய பல ஆபரணங்களைப் பரிசுப் பொருள்களாக அளித்தவாறே சிறிதும் சோர்வடையாமல் நீலனின் பாட்டையும், உரையையும், திருக்கூத்தையும் கண்டுகளித்தார்

கடுக்கன் - ஆண்கள் அணியும் காதணி ஆழி - மோதிரம்

Aṉikalaṉ paricu

porcilampu vīra caṅkili yiṭṭār
poṉṉum carappaṇi mālai koṭuttār
vaṇṇak kaṭukkaṉ viralāḻi mōtiram
māṇikkat taṅkak kaṭukkaṉ koṭuttiṭṭārē
nāṭaka mumtiruk kūttaiyuṅ kaṇṭu
naḷiṉa kavipāṭ ṭuraikaḷum kēṭṭu
vāṭāma lēciva nīlarācā vukku
vaṇṇap paṇivakai coraṇam koṭukka (yentappaṭi āṭiṉār)

Gift of Jewels

Civaṉ gave gold anklet and gold chain,
Gold *Carappaṇi* and garlands,
Beautiful ear studs, gold rings for the fingers
Diamond studs and continued to enjoy untired
The dance, drama and the wonderful songs.

சிவபெருமானின் புகழுரை

7. பிறப்பு இறப்பு ஒருநாளு மில்லாத
பினாக நேயர் மானந்த நாதர்
பிறக்கும் புகழுக்கும் பூவுல கத்துக்கும்
புகழ்நீல னுக்கும் புவனங்களும் மெய்க்க

8. ஒய்யார மாகத் திருநடன மாட
உன்னைப்போல் தெய்வம் உலகத்தி லுண்டோ
மெய்யான முச்சந் திரங்கிசம கோத்திரம்
மேலும் மேலும் தழைக்க வாங்கியே

9. கொடுத்தார் சிவனார் அதிய வரத்தை
குன்றாம லொன்றும் குறைகள் வாராமலே

அடுத்தார் தொடுத்தார் யெல்லோரும் வாழ
அழகுள்ள நீல ராசர்வரம் வேண்டியே

என்றும் பிறப்பும் இறப்புமில்லாதவனும் பினாகம் என்னும் வில்லை ஏந்தியவனும் உயிர்களின் தலைவனாக விளங்குபவனுமாகிய சிவபெருமான் நீலனைப் பார்த்து இந்த உலகத்தில் நடனத்தில் புகழ் பெற்றவர்கள் உன்னைப்போல வேறுயாருமில்லை என்று புகழ்ந்துகூறி உன்னுடைய குலமும் கோத்திரமும் முப்பிறவிகளிலும் தழைத்து வளர்வதாக! ஒரு குறையுமின்றி உன்குடி வாழ்வதாக என்றெல்லாம் வாழ்த்தினார்

பினாகம் - சிவனார்வில். அதிய - அதிக என்பதன் பேச்சுவழக்கு.

Civaperumāṉiṉ pukaḻurai

piṟappu iṟappu orunāḷu millāta
piṉāka nēyar māṉanta nātar
piṟakkum pukaḻukkum pūvula kattukkum
pukaḻnīla ṉukkum puvaṉaṅkaḷum meykka
oyyāra mākat tirunaṭaṉa māṭa
uṉṉaippōl teyvam ulakatti luṇṭō
meyyāṉa muccan tiraṅkicama kōttiram
mēlum mēlum taḻaikka vāṅkiyē
koṭuttār civaṉār atiya varattai
kuṉṟāma loṉṟum kuṟaikaḷ vārāmalē
aṭuttār toṭuttār yellōrum vāḻa
aḻakuḷḷa nīla rācarvaram vēṇṭiyē

Encomium by Civaṉ

The God without birth and death,
The God with the bow *Piṉākam*, Civaṉ
The God of all life and living things
Said that there's none to beat Nīlaṉ
In his dance pleasing the world.
Civaṉ blessed him saying that
His race and ancestry were blessed
With all graces for all three births
And in future too, nothing untoward

May overtake his race and
Thus gave him this great boon.

பிறருக்காக வரம்

10 வேண்டி னார்வரம் பிள்ளையில்லா பேர்க்கு
மேலும் பயிராக்கி வீடாக்கி வைக்கவும்
தாண்டிய புகழ்வல்லார் நீல சுவாமி
பாரதன் பேருகொண்டு குடியை வளர்க்கவும் (யெந்தப்படி)

11 பெண்வழி ஆண்வழி யெல்லாம் தழைக்கவும்
பெற்றுப் பெருகி பெரியவீ டாகவும்
வண்மை அழகுள்ள நீல சுவாமி
வரிசை தூயான வரம்வேண்டிக் கொண்டார்

தன்னை வாழ்த்தியருளிய பெருமானை நோக்கி ஐயனே! பிள்ளை இல்லாதவர்களுக்குப் பிள்ளைவரம் கொடுக்கவும், அவர்களது குடிப்பெருமையினை வளர்க்கவும், பெண்வழி ஆண்வழி இரண்டும் தழைத்தோங்குமாறு வரமளிக்கவும், யாவரும் எல்லாம்பெற்று பெருமையோடு வாழும் வரமளிக்கவும் எனக்குச் சக்தியை அருளி வரமளிக்க வேண்டுமென்று கேட்டு அவ்வாறே வரம்பெற்றான்.

வண்மை - கொடைத்தன்மை.

Pirarukkāka varam

vēṇṭi ṉārvaram piḷḷaiyillā pērkku
mēlum payirākki vīṭākki vaikkavum
tāṇṭiya pukaḻvallār nīla cuvāmi
paratan pērukoṇṭu kuṭiyai vaḷarkkavum (yentappaṭi)
peṇvaḻi āṇvaḻi yellām taḻaikkavum
peṟṟup peruki periyavī ṭākavum
vaṇmai aḻakuḷḷa nīla cuvāmi
varicai tūyāṉa varamvēṇṭik koṇṭār

Boon for others

Handsome Nīlarācaṉ begged for a boon
That all childless persons may bring forth
Children for their family's growth and fame
And the one of men and women may flourish

And their progeny may increase
And asked of Him the power to grant
Such boon to all who begged Nīlan̲ for such boons.

தனக்காக வரம்

12. பேர்கூவி வாய்தெண்டம் ஆனது கொள்ளவும்
பேர்வழி நேசன்சகல பூசைகள் கொள்ளவும்
வாக்குப் பிரமாணம் என்றைக்குந் தப்பாமல்
வல்லவன் நீலன் வரம்பெற்றுக் கொண்டாரே

பிறருக்கு வரமளிக்கும்நான் பக்தர்கள் கொடுக்கும் எல்லாவிதமான பூசைகளையும் ஏற்றுக்கொள்ள வேண்டும்; அவ்வாறு பெற்றுக்கொண்டு நான் சொல்லுகின்ற வாக்கு என்றும் தப்பாமல் பலிக்க வேண்டும் என்று வேண்டித் தனக்கான வரங்களையும் பெற்றான் நீலன்

கூவி - சொல்லி வாக்குபிரமாணம் - வாக்குறுதி

Tan̲akkāka varam

pērkūvi vāyteṇṭam ān̲atu koḷḷavum
pērvaḻi nēcan̲cakala pūcaikaḷ koḷḷavum
vākkup piramāṇam en̲r̲aikkun tappāmal
vallavan̲ nīlan̲ varamper̲r̲uk koṇṭārē

Boon for himself

Nīlan̲ asked for the personal boon
To receive worship from his devotees
And the power to give them oral promises,
Unfailing in fulfilment for devotees.

இறைவனின் வாழ்த்து

13. உத்திரகோத் திரமு கூடிநதி வங்குசம்
ஒன்றும் ஒருநாளும் வற்றாக் கடல்போலே
பத்திர மாய்ப்பல நாடும் தழைத்திட
பாரேழும் வாழவே நீலசுவாமியும் ஓத

14. அத்தனும் சித்திரக் கூத்தாடக் கண்டு
ஆதர வாக வரிசை கொடுத்து
குற்றமில் லாமல் குடியை வளர்க்கவும்
கோவில் குடிகொள்ள நீல சுவாமியும்

15. புண்ணிய னாரும் புகழ்நீல னைத்தான்
போவென்று சொல்லித் திருஉள்ளம் பற்றிட
மண்ணுல கத்தில் மலைநாடு தன்னிலே
மகராசன் சிவனை நீலசுவாமி வணங்கிநின்றாரே

என்றும் வற்றாத கடல்போல ஏழு உலகங்களும், உலக நாடுகளும் தழைத்து வாழ்வதற்கு வரம் வேண்டினான் நீலசுவாமி. அவனுடைய நடனத்தில் மயங்கி பரிசுப்பொருள்களையும் வழங்கிய சிவபெருமான், நீலனைநோக்கி, குடிமக்களுக்குக் குறைஎதுவும் வராமல்காக்க அவர்களிடையே நீ கோயில்கொண்டு அவர்களுக்கு அருள்புரிந்து வருவாயாக என்று வாழ்த்தினார். வாழ்த்தைப் பெற்ற நீலனும் இறைவனை வணங்கிநின்றான்.

வங்குசம் - வம்சம். அத்தன் - சிவன்.

Iraivaṉiṉ vāḻttu

uttirakōt tiramu kūṭinati vaṅkucam
oṉṟum orunāḷum vaṟṟāk kaṭalpōlē
pattira māyppala nāṭum taḻaittiṭa
pāreḻum vāḻavē nīlacuvāmiyum ōta

attaṉum cittirak kūttāṭak kaṇṭu
ātara vāka varicai koṭuttu
kuṟṟamil lāmal kuṭiyai vaḷarkkavum
kōvil kuṭikoḷḷa nīla cuvāmiyum

puṇṇiya ṉārum pukaḻnīla ṉaittāṉ
pōveṉṟu collit tiruuḷḷam paṟṟiṭa
maṇṇula kattil malaināṭu taṉṉilē
makarācaṉ civaṉai nīlacuvāmi vaṇaṅkiniṉṟārē

God's praise or blessing

Just as the never drying sea,
The confluence of all the rivers,

All races and all people should flourish
Should live in joy at all times.
Dancing for the welfare of the world
Nīlan̲ was permitted by Lord Civan̲
To stay in temple and protect people
With out any blemish.
The Lord bade him go and Nīlan̲
Stood worshipping the Lord in mountainous land.

இறைவனைத் தேடிவருதல்

19. 1. ஈரேழு லோகம் படைத்து யெங்கெங்கு
மானிடவர் தங்களை உண்டாக்கி
பாரேழு உள்ள உயிர்களுக் கெல்லாம்
படியளந்த பரமசிவன் தேடிவா றாரே (தானா தனதந்தி)

2. வாறாரே நீல தம்புரான் மாலை
பிரமாவை சிவனையும் தேடி
பெருக நின்று குடிகொள்ள
பெரிய கயிலாசம் தேடியே வாறார் (தானாதனா தந்தனானா)

3 வந்தார் கயிலாயம் தன்னில்
வடிவழக நீலனும் நீலி
சந்தோசமாய் சிவனைக் காணத்
தம்புரான் நீலன் கயிலாயம் கண்டார்

பதினான்கு உலகங்களையும், அவ்வுலகத்து மக்களையும் படைத்து, அனைத்து உயிர்களுக்கும் படியளந்து பாதுகாக்கும் பரமசிவனையும் உடன் எழுந்தருளி யிருப்பவர்களாகிய திருமாலையும் பிரமாவையும் காண மீண்டும் கயிலாயமலைக்கு நீலனும் நீலியும் வந்தார்கள்.

Ir̲avan̲ait tēṭivarutal

īrēḻu lōkam paṭaittu yeṅkeṅku
mān̲iṭavar taṅkaḷai uṇṭākki
pārēḻu uḷḷa uyirkaḷuk kellām
paṭiyaḷanta paramacivan̲ tēṭivā r̲ārē (tān̲ā tan̲atanti)

vāṟārē nīla tampurāṉ mālai
piramāvai civaṉaiyum tēṭi
peruka niṉṟu kuṭikoḷḷa
periya kayilācam tēṭiyē vāṟār (*tāṉātaṉā tantaṉāṉa*)

vantār kayilāyam taṉṉil
vaṭivaḻaka nīlaṉum nīli
cantōcamāy civaṉaik kāṇat
tampurāṉ nīlaṉ kayilāyam kaṇṭār

Going in search of God

He goes in search of Paramacivaṉ,
The supreme God, the creator of the seven worlds
And all men and creatures of all the worlds.
And the protector and sustainer of all things.
Nīlatampurāṉ came searching for
Pirammaṉ and Civaṉ at Kailash,
In order that he may stabilize at Kailash.
Dancing to the tuneful rhythm
Tāṉātaṉā tantaṉāṉā Nīlaṉ and Nīli,
Witnessed Civaṉ with great joy.

கயிலாயக் காட்சி

4 கண்டார் கயிலாச வாசல்காக் கின்ற
கிங்கிலியர் ஆயிரம் சேனை
தொண்டர்கள் நின்று பணிமாற
தெய்வார் குரவை பாடவே கண்டார் (தானா)

5 மறையவ ராயிரம் பேர்கள்.
மார்க்கண்ட னுமொரு பக்கத்தி லிருக்க
இறையவன் மாலும் பிரமாக்கள்
இருக்கும் கயிலாசம் கண்டாரே நீலன் (தானா)

6. ஆதி திருநட மாட
ஆனந்த நாயகி பார்வதி யாட
சேர திருநட மாட
தொழவந்த தொண்டர்கள் சூழநின் றாட (தானா)

7. நாரா யணன்தேவ ராட
    நமனும் பிரமனும் ஆட
பார்வதி காளியு மாடப்
    பரமானந்த நாதனைக் கண்டாரே நீலன் (தானா)

கயிலாயமலையில் திருவாயில்காப்போராகிய கிங்கிலியர் என்னும் தொண்டர்கள் ஆயிரம் ஆயிரமாய் நின்று தொண்டுபுரிய, தேவர்கள் குரவைபாடிக் கொண்டிருந்தார்கள் வேதம் வல்லோர் ஓராயிரவரும், மார்க்கண்டனும் திருமால், பிரமா ஆகியோருடன் கூடியிருந்தார்கள் இவர்களோடு இறைவனைத் தொழவந்த அடியவர்கள் சூழ்ந்திருந்தார்கள். அக்கூட்டத்தினிடையே, நாரணனும், பிரமனும், எமனும் பிற தேவர்களுமாகச் சேர்ந்து, உமாதேவியுடனும், காளிகாதேவியுடனும் நடனமாடினார்கள். இவர்களிடையே ஆனந்தநாதனாகிய சிவபெருமான் வீற்றிருக்கும் காட்சியைக் கண்டார்கள்.

கிங்கிலியர் - காவற்காரர்; பூதகணங்கள்.

Kayilāyak kāṭci

kaṇṭār kayilāca vācalkāk kiṉṟa
    kiṅkiliyar āyiram cēṉai
toṇṭarkaḷ niṉṟu paṇimāṟa
    teyvār kuravai pāṭavē kaṇṭār (tāṉā)
maṟaiyava rāyiram pērkaḷ
    mārkkaṇṭa ṉumoru pakkatti lirukka
iṟaiyavaṉ mālum piramākkaḷ
    irukkum kayilācam kaṇṭārē nīlaṉ (tāṉā)
āṭi tirunaṭa māṭa
    āṉanta nāyaki pārvati yāṭa
cēra tirunaṭa māṭa
    toḻavanta toṇṭarkaḷ cūḻaniṉ ṟāṭa (tāṉātaṉa)
nārā yaṇaṉtēva rāṭa
    namaṉum piramaṉum āṭa
pārvati kāḷiyu māṭap
    paramāṉanta nātaṉaik kaṇṭārē nīlaṉ (tāṉātaṉa)

The scene at Kailash

Nīlaṉ witnessed thousands of *kinkiliars*
Doing sentry at Kailash doors

And armies of volunteers serving
And singing the *Kuravai* song.
A thousand vedic scholars were present
By the side of Markkaṇṭaṉ, Tirumāl, and Pirammaṉ
And such a scene Nīlaṉ witnessed at Kailash.
Along with the devotee volunteers who danced
Aṉantanāyaki, Pārvati, also danced
And all of them were joined by
The dancing group of Kāḷi and Yamaṉ
And Lord Civaṉ was seated in their midst.

நீலன் நீலியுடன் இறைவன்

8. நீலனும் நீலியு மாட
   நீல கண்டனார் பார்வதி யாட
   ஆலிலை மேல்பள்ளி கொண்ட
   ஆதிநா ராயணப் பெருமாளும் ஆட (தானா)
9. ஆடினார் பாடினார் நீலன்
   அருளானந்த நாதனைத் தேடிவா றாரே
   தேடிவந் தேயவ நீலன்
   சிவபாதம் போற்றித் தெண்டனிட் டாரே (தானா)
10. பார்வதி யைக்கண்டு போற்றிப்
   பரமானந்த நாதனைத் தேடியே கொண்டு
   சீரான ராசகுல நீலன்
   சிவன்பாதம் போற்றித் தெண்டனிட் டாரே

நீலகண்டனும், பார்வதிதேவியும் ஆலிலைமேல் பள்ளிகொண்ட நாராயணனுமாகிய அனைவருடனும் சேர்ந்து நீலனும் நீலியும் ஆடிப்பாடத் தொடங்கினார்கள். நீலனும் நீலியுமாகச் சிவபெருமானையும், பார்வதி தேவியையுங்கண்டு அவர்தம் திருவடிகளை வணங்கி நின்றார்கள்.

Nīlaṉ Nīliyuṭaṉ Iṟaivaṉ

nīlaṉum nīliyu māṭa
nīla kaṇṭaṉār pārvati yāṭa

ālilai mēlpaḷḷi koṇṭa
ātinā rāyaṇap perumāḷum āṭa (tāṉā)

āṭiṉār pāṭiṉār nīlaṉ
aruḷāṉanta nātaṉait tēṭivā ṟārē
tēṭivan tēyava nīlaṉ
civapātam pōṟṟit teṇṭaṉiṭ ṭārē (tāṉa)

pārvati yaikkaṇṭu pōṟṟip
paramāṉanta nātaṉait tēṭiyē koṇṭu
cīrāṉa rācakula nīlaṉ
civaṉpātam pōṟṟit teṇṭaṉiṭ ṭārē

God with Nīlaṉ and Nīli

Along with the dancing Nīlaṉ and Nīli
Joined the blue throated Civaṉ in company
With Pārvati and the one who sleeps
On banyan leaf, Nārāyaṇap Perumāḷ.
Dancing and singing Nīlaṉ comes
In search of the one, the giver of boons.
Searching he fell at the feet of Civaṉ
And also praised Pārvati in his search for
The Ever Joyous Supreme Being and one again
Nīlaṉ fell prostrate at the feet of Civaṉ

மகதேவன் வினவி அருளல்

11 மானும் மழுவும் தரித்த
மகதேவன் நீல ராசாவைக் கண்டு
. . . .
. . . . (தானா)

12 யிப்போது சங்கட மேது
யென்னோடே சொல்லடா நீலரா சாவே
யெப்போதும் முச்சந்தி பங்கில் யிருப்பா
யென்றுவரம் என்னாளும் தந்தேன் (தானா)

13. வீர முடையதோர் நீலா
மேலும் கணக்கொருநாள் குறைவா ராமல்
ஆர முடன்பொன் னிலங்கி
அங்குச முச்சந்தி பங்கிலுமே யிருப்பாய் (தானா)

14. என்று சிவனா ருரைக்க
யெடுத்து ரைக்கநீல தம்புர னாரும்
அன்றவ னுக்கொரு நாளும்
ஆபத்து வந்திடல் வாராமல் காப்பேன் (தானா)

15. வாடா வடிவுடைய நீலா
ஒருமாமாங்கம் ஒருபன்னிரண் டாண்டு
நாடி யெனைத்தேடி வந்த
நாள்தோறும் முன்வரம் மாறாது யென்றார்

16. மலைமேலே வந்த விளக்காய்
மகதேவர் பங்கி லிருப்பாயே யென்று
பலநாளு மேபூசை கொள்ளப்
பரமானந்த நாதனைத் தேடிவா றாரே (தானா)

மானும் மழுவுந்தரித்த மகதேவராகிய சிவபெருமான் நீலனைநோக்கி, நீலா! என்னிடம் வரம்பெற்ற உனக்கு இப்போது தொல்லைகள் ஏதேனும் உண்டோ? எதற்கும் அஞ்சாத நீலனே! என்றும் எதனாலும் குறையேதும் வாராமல் ஊரினிடையே ஆரவாரத்தோடு எழுந்தருளியிருப்பாயாக என்று கூறியருளினார். மேலும் ஒரு மாமாங்க காலஞ்சென்றாலும் முன்பு நான் கொடுத்த வரத்தின் பலன் என்றைக்கும் உனக்கு உண்டு; அதில் சிறிதும் மாற்றம் இருக்காது மலையுச்சியில் வைத்த விளக்கைப்போல என்றும் என்னுடைய அருட்பங்கு உனக்கு உண்டு என்று கூறி அருளினார். அதே அருளால் பூசைகளை ஏற்றுவந்தான் நீலன்

மாமாங்கம் - பன்னிரெண்டு ஆண்டு.

Makatēvaṉ viṉavi aruḷal

māṉum maḻuvum taritta
makatēvaṉ nīla rācāvaik kaṇṭu
. . . .
. . . ., . *(tāṉā)*

yippōtu caṅkaṭa mētu
yeṉṉōṭē collaṭā nīlarā cāvē
yeppōtum muccanti paṅkil yiruppā
yeṉṟuvaram eṉṉāḷum tanteṉ (tāṉā)

vīra muṭaiyatōr nīlā
mēlum kaṇakkorunāḷ kuṟaivā rāmal
āra muṭaṉpoṉ ṉilaṅki
aṅkuca muccanti paṅkilumē yiruppāy (tānā)

eṉṟu civaṉā ruraikka
yeṭuttu raikkanīla tampura ṉārum
aṉṟava ṉukkoru nāḷum
āpattu vantiṭal vārāmal kāppēṉ (tāṉā)
vāṭā vaṭivuṭaiya nīlā
orumāmāṅkam orupaṉṉiraṇ ṭāṇṭu
nāṭi yeṉaittēṭi vanta
nāḷtōṟum muṉvaram māṟātu yeṉṟār (tāṉā)

malaimēlē vanta viḷakkāy
makatēvar paṅki liruppāyē yeṉṟu
palanāḷu mēpūcai koḷḷap
paramāṉanta nātaṉait tēṭivā ṟārē (tāṉā)

After questioning Makatēvar offers a boon

The god adorned with the axe and the deer,
Makatēvar, on seeing Nīlarācaṉ, asked of him,
What his grievance was and said,
"Tell me Nīlā, I have given you the booṉ
To dwell in any street corner and brave Nīla,
You'll have no problem in accepting poojas
In all the places you are held in worship.
And no harm will come to him at any time any where,
Tireless and bright shapely Nīlā! Even after
The lapse of Twelve long years the power of my. boon
Will never diminish. You will stand upright

Like a lamp on top of a mountain
And accept worship at all times" Nīlaṉ
Came in search of the Ever Joyous Supreme Being.

திருமாலை வணங்குதல்

17 காலி நிரைமேய்த்த கண்ணன்
கார்வண்ணர் நாரா யணப்பெரு மாள்தான்
வேலி கட்டிநிரை மேய்த்து
வினையொன்று வாராமல் காத்தருள் வாயே (தானா)

ஆநிரைகளைக் காத்தவா! மேகவண்ணா! நாராயணப் பெருமாளே! ஆநிரைகளைக் காத்ததுபோல, தீங்குஏதும் வாராமல் எங்களையும் காத்தருளவேண்டும் என்று திருமாலை வேண்டி வணங்கினான்

Tirumālai vaṇaṅkutal

kāli niraimēytta kaṇṇaṉ
kārvaṇṇar nārā yaṇapperu māḷtāṉ
vēli kaṭṭinirai mēyttu
viṉaiyoṉṟu vārāmal kāttaruḷ vāyē (*tāṉā*)

Worshipping Tirumāl

Kaṇṇaṉ, the cowherd who looked after the cows,
The black coloured one, Nārāyaṇap Perumāḷ
Is the one who will protect us as a fence
And worshipped him to be unhurt from any evil.

நீலன் நீலியுடன் பரிமேல் ஏறிவருதல்

18. மாயன் கெருடன்மே லேற
வளைந்து தெய்வார்கள் குரவைகள் பாட
தேசந் தன்னில்போக வென்று
தெய்வக் கயிலாசம் சுற்றியே வாறார் (தானா)

19. நீலன் பரிமீதி லேற
நீலியம் மையொரு பல்லக்கில் வர்றாள்
கோலா கலமாக நீலன்
குன்றிக் கயிலாயம் சுற்றியே வாறான் (தானா)

கொட்டுடன் தம்பட்டம் மேளம்
குரவை கடலொலி முழங்க
நட்டுவ தாளங்கள் கொட்ட
நானிலம் பிளக்க ஆடிவாறாரே (தானா)

கருடவாகனராய்க் காட்சிதந்த திருமாலைச் சுற்றிலும் தேவர்கள் சூழ்ந்துநின்று குரவையாடினர். தங்கள் நாட்டிற்குச் செல்லவேண்டுமென்று நீலன் குதிரைமீதிலும், நீலி பல்லக்கிலுமாக ஏறித் திருக்கயிலாயத்தைச் சுற்றிவந்தார்கள் அப்போது கொட்டும், தம்பட்டமும், மேளமும் நட்டுவத் தாளங்களும், குரவையும் கடலொலிபோல பூவுலகு அதிருமாறு ஒலித்துக் கோலாகலமாக விளங்கின.

நட்டுவம் - நாட்டியம். தம்பட்டம் - ஒரு பறை.

Nīlan̲ Nīliyuṭan̲ parimēl ēr̲ivarutal

māyan̲ keruṭan̲mē lēr̲a
vaḷaintu teyvārkaḷ kuravaikaḷ pāṭa
tēcan tan̲n̲ilpōka ven̲r̲u
teyvak kayilācam cur̲r̲iyē vār̲ār (*tān̲ā*)
nīlan̲ parimīti lēr̲a
nīliyam maiyoru pallakkil var̲r̲āḷ
kōlā kalamāka nīlan̲
kun̲r̲ik kayilāyam cur̲r̲iyē vār̲ān (*tān̲ā*)
koṭṭuṭan̲ tampaṭṭam mēḷam
kuravai kaṭaloli muḻaṅka
naṭṭuva tāḷaṅkaḷ koṭṭa
nān̲ilam piḷakka āṭivār̲ārē (*tān̲ā*)

Nīlan̲ rides on horseback with Nīli

The Gods sang *Kuravai* bending before
Perumāḷ seated on his chariot, the eagle,
Nīlan̲, seated on a horse, followed by
Nīli in a palanquin comes round Kailash
Preparing to go to his native land,
With all the terrific sound of drum,
Base drum and *Kuravai* song beating
To the rhythm of *Naṭṭuvam*

The whole land shook with the sound.

விடைபெற்றுக் கயிலாயம்விட்டுப் புறப்படுதல்

21. தப்பாமல் முச்சந்தி பங்கில்
சார்ந்து துணையிருக்கவும் வேணும்
....
....

22. பிள்ளைக் கொருபூசை யுண்டு
பேர்கூலி பூசைபண்ணி மதுஉண்டு
கள்ளப் பிள்ளைகேடு செய்தால்
கண்டதெண்டம் வாங்கும் தெய்வமும் நானே (தானா)

23. பள்ளிக் கிருந்து பலனும்
பாவையர்க்குத்தாலி கெட்டும் பலனும்
அள்ளுந் திருநீற்றுக் காசி
அதுநமக் குண்டென்று தேடிவாறாரே (தானா)

24. அந்தத் திருநட மாட
ஆதி யரனும் சிவனும் மகிழ்ந்து
சிந்தை யுடனீல ராசர்
தேசம் தனில்பல உள்ளமது வாடி (தானா)

25. போவென்று புண்ணியர் சொல்ல
பொன்னும் சிவன் கல்பினைக் கேட்டு
ஆமென்று நீலனும் நீலியும்
அனுப்பிக்கொண் டேகயி லாயம் கடந்தார் (தானா)

ஐயனே! நாங்கள் முச்சந்தியில் எழுந்தருளியிருக்கும்போது எங்கள் பங்கில் சேர்ந்து துணையிருக்க வேண்டும். குழந்தைப்பேறு வேண்டிப் பலர்கூடி மதுபானம் படைத்துப் பூசை செய்வார்கள். நான் அருள்புரிய வேண்டும். அந்த அருளினால் பிறந்த பிள்ளைகள் கள்ளப்பிள்ளைகளாகித் தீய செயலில் ஈடுபட்டுவிட்டால் அவர்களுக்குத் தண்டனை கொடுக்கும் தெய்வமாகவும் நான் இருக்கவேண்டும். குழந்தைகளுக்குக் கல்விகற்கும் திறமையை அளிக்க வேண்டும் எனவும், திருமணமாகாத பெண்களுக்கு விரைவில் திருமணம் நடக்கவேண்டும் எனவும் வரம்வேண்டி வருவார்கள். அவர்களுக்குத் திருநீறு அளித்து அவ்வரங்களைத்தரும் சக்தியை நாங்கள்பெறவேண்டும் என்றெல்லாம் வேண்டியவாறே நடனமாடி வணங்கினான் நீலன். நீலராசனின் திருநடனத்தைக்கண்டு இன்புற்ற சிவனும், திருமாலும் அவன் விரும்பியவாறே பூலோகத்திற்குச் செல்லுமாறு

கூறியருளினார்கள். நீலனும் நீலியும் அவர்கள் அருளைப்பெற்றுத் திருக்கயிலாயத்திலிருந்து புறப்பட்டார்கள்.

முச்சந்தி - மூன்றுதெருக் கூடுமிடம் கல்பினை - கற்பனை-அழகு, சிறப்பு.

Viṭaiperṟuk kayilāyamviṭṭup puṟappaṭutal

tappāmal muccanti paṅkil
cārntu tuṇaiyirukkavum vēṇum
. . . .
. . . .

piḷḷaik korupūcai yuṇṭu
pērkūvi pūcaipaṇṇi matuuṇṭu
kaḷḷap piḷḷaikēṭu ceytāl
kaṇṭateṇṭam vāṅkum teyvamum nāṉē (*tāṉā*)

paḷḷik kiruntu palaṉum
pāvaiyarkkuttāli keṭṭum palaṉum
aḷḷun tiruniṟṟuk kāci
atunamak kuṇṭeṉṟu tēṭivāṟārē (*tāṉā*)

antat tirunaṭa māṭa
āti yaraṉum civaṉum makilantu
cintai yutaṉila rācar
tēcam taṉilpala uḷḷamatuvāṭi (*tāṉā*)

pōveṉṟu puṇṇiyar colla
poṉṉum civaṉ kalpiṉaik kēṭṭu
āmeṉṟu nīlaṉum nīliyum
aṉuppikkoṇ ṭēkayi lāyam kaṭantār (*tāṉā*)

Taking leave of Kailash

Without fail, Thou should be by our side
In any street corner place of worship.
Many will pray for child birth and they'll
Offer poojas and drinks for me.
If bad children did evil, I should have

The power to punish them and also the power
To give the blessing of education and the boon
Of marriage to spinsters and I should have
The power to offer holy ashes for this purpose.
Dancing to the pleasure of Civaṉ and Pārvati,
God asked him to go to the human world.
Hearing these beautiful words
Nīlaṉ and Nīli crossed Kailash
And proceeded towards the terrestrial region.

தன்திறங் கூறுதல்

26. உத்தி ரத்தில்காலும் நாட்டி
உலகில் பூசைகொள்ளும் நீலனும் நானே
மாற்றானை[1] வெட்டியே வென்ற
வல்ல மகனான நீலனும் நானே (தானா)

27. இரங் கூசலாட வழிதோறும்
குறுங்குடி தென்பதி கண்டுமே நீலன்
இரங்குகின்ற நம்பி நாதன்
இருக்கும் பொழுதே கைதொழு தாரே (தானா)

வடதிசையில் காலூன்றிய நிலையில் வடிவங்கொண்டு மக்கள்செய்யும் பூசையை ஏற்றுக்கொள்ளும் நீலன் நான். பகைவனை வெட்டி வெற்றிபெறக்கூடிய வலிமைமிக்கவன் நான் என்று தன்திறன் கூறியவாறே, நீலன் வழியிலே இருந்த சிற்றூர்களையும் பேரூர்களையும் கண்டு அவ்விடங்களில் தன் உள்ளத்தைச்செலுத்தியவனாய் இறைவனைத் தொழுதவாறே நடந்தான்.

மாற்றான் - பகைவன்.

சு.சொல் : 1, மாத்தானை

Taṉtiraṅ kūṟutal

utti rattilkālum nāṭṭi
ulakil pūcaikoḷḷum nīlaṉum nāṉē
māṟṟaṉai veṭṭiyē veṉṟa
valla makaṉāṉa nīlaṉum nāṉē (tāṉā)

iraṅ kūcalāṭa vaḻitōṟum
kuṟuṅkuṭi teṉpati kaṇṭumē nīlaṉ
iraṅkukiṉṟa nampi nātaṉ
irukkum poḻutē kaitoḻu tārē (*tāṉā*)

Narrating his own prowess (or) talent

Fixing his legs in the North
In the posture of dance; accepting worship
And poojas, Nīlaṉ said of himself
That he was so powerful as
To cut to pieces his adversaries.
Saying this he crossed the small villages
And hamlets and cities and walked along
Concentrating on those places, worshipping god.

வைகை நாடடைதல்

28 நாட்டாறு வாவி கடந்து
நம்பி மலைநாடு நச்சயம் விட்டு
சேட்டத் துடன்நீல ராசன்
சூடி மலைப்புரத்தைத்[1] தானும் கடந்து (தானா)

29. கைவீசி கைமாறிப் பெண்கள்
கவரிவீசிக் குரவை பாடியாடவே
வையகந்[2] தன்னையும் கண்டு
வைகைவளர் நாட்டிலே வந்தாரே நீலன் (தானா)

நாட்டாறு, குளங்கள், நம்பிமலைநாடு, மலைப்புரங்கள் ஆகியவற்றைக்கடந்து வைகை நாடடைந்தார்கள். செல்லும் போது பெண்கள் கவரிவீசிக் குரவை பாடியாடி வந்தார்கள்.

சேட்டம் - அழகு.

சு.சொல் : 1 பொரத்தை 2. வைகந்

Vaikai nāṭaṭaital

nāṭṭāṟu vāvi kaṭantu
nampi malaināṭu naccayam viṭṭu
cēṭṭat tuṭaṉnīla rācaṉ
cūṭi malaippurattait tāṉum kaṭantu (*tāṉā*)

kaivīci kaimāṟip peṇkaḷ
Kavarivīcik kuravai pēṭiyāṭavē
vaiyakan taṉṉaiyum kaṇṭu
vaikaivaḷar nāṭṭilē vantārē nīlaṉ (tāṉā)

Reaching Vaikai land

Crossing streams and lakes and
Nampimountain land; Nīlaṉ, the beautiful
Witnessed and crossed the land of Malaippuram
Women folk sang the *Kuravai*
Fanning with *Kavari*, Changing hands
Thus after witnessing these, Nīlaṉ
Reached the land of Vaikai.

பழகையையடைதல்

30. வந்துநீலன் சுற்றிப் பார்த்து
வணங்கும் குடியை வளர்க்கும்[1] நீலன்
....
.... (தானா)

31. விட்டார் இடைக்காடும் விட்டு
விரைந்து நடந்துமணப் புரத்தையும் விட்டார்
அட்டதிக்கு மெய்க்கும் நீலன்
அடுத்த பழகை நகரில்வந் தாரே. (தானா)

தன்னை வணங்கக்கூடிய குடிமக்களுக்கு அருள்புரிந்து வருகின்ற நீலன், நாடு நகரங்களைச் சுற்றிப் பார்த்துக்கொண்டே இடைக்காடு, மணப்புரம் கடந்து எட்டுத்திசைகளில் உள்ளவர்களும் புகழ பழகை நகருக்கு வந்தார்

க.சொல் : 1 வளத்துற.

Paḻakaiyaiyaṭaital

vantunīlaṉ cuṟṟip pārttu
vaṇaiṅkum kuṭiyai vaḷarkkum nīlaṉ
....
.... (tāṉā)

viṭṭār iṭaikkāṭum viṭṭu
viraintu naṭantumanap purattaiyum viṭṭār
aṭṭatikku meykkum nīlaṉ
aṭutta paḻakai nakarilvan tārē *(tāṉā)*

Arrival at Paḻakai

Traversing and going round all the places
Nīlaṉ who showers grace on his devotees
Crossed the place Iṭaikkāṭu
And walked past Manappuram
Praised by all those in eight directions
And came to the city of Paḻakai.

குமரியை அடைதல்

32. காயாளர் ஆண்ட பழவை
காடாக்கி வைத்த நீலனும் நீலியும்
திரை நீக்கியே தீர்த்தமாட
தென்குமரி நோக்கி தெற்கே வாறாரே (தானா)
கருங்குளமுங் காடும் விட்டு
காடு உடங்காடு பாக்குளம் விட்டு
வாரியூருங் காடும் விட்டு
வந்தா ரேதென் குமரியில் நீலன்
மாலை குழலார்கள் சேரவந்து
வளைந்து குரவைகள் பாட
மாலுக் கிளையவன் தீர்த்தம் வந்தாடி
நீலனும் சிந்தை தொழுதார்.

தென்குமரியிலே தீர்த்தமாடவேண்டும் என்று கருதிய நீலனும் நீலியும் காயாளர் என்போர் ஆண்ட பழகைநகரைவிட்டுப் புறப்பட்டார்கள். கருங்குளம், உடங்காடு, பாக்குளம், வாரியூர் ஆகியவற்றைக் கடந்து தென்குமரியை வந்தடைந்தார்கள். மாலையணிந்த கூந்தலையுடைய மகளிர் வளைந்து நின்று குரவையாடிவர, முதலில் அங்கிருந்த இலட்சுமண தீர்த்தத்தில் நீராடி இறைவனைத் தொழுதார்கள்.

திரை - அலை.

Kumariyai aṭaital

kāyāḻar āṇṭa paḻavai
kāṭākki vaitta nīlaṉum nīliyum
tirai nīkkiyē tīrttamāṭa
teṉkumari nōkki teṟkē vaṟārē (tāṉā)

karuṅkuḷamuṅ kāṭum viṭṭu
kāṭu uṭaṅkāṭu pākkuḷam viṭṭu
vāriyūruṅ kāṭumviṭṭu
vantā rēteṉ kumariyil nīlaṉ
mālai kuḻalārkaḷ cēravantu
vaḷaintu kuravaikaḷ pāṭa
māluk kiḷaiyavaṉ tīrttam vantāṭi
nīlaṉum cintai toḻutār

Reaching Kumari

From Paḻavai once governed by Kāyāḷars,
And laid to devastation by Nīlaṉ and Nīli,
They left for Kumari, to bathe in the South.
Cutting the waves of the sea
Proceeding south, they crossed Karuṅkuḷam
Forests, Uṭaṅkāṭu, Pākkuḷam,
And Vāriyūr and reached Kumari.
Garland adorned women sang the *Kuravai*
With bending bodies. Bathing first
In Lakhṣmaṉ fountain, they worshipped God.

பலவகைத் தீர்த்தமாடுதல்

காலிநிரை மேய்த்த கண்ணன்
காயாம்பு மேனி கருநிற வண்ணன்
பாலினி சூலி மதங்கி
பகவதியாள் தீர்த்தமது ஆடலுற் றாரே
ஆட வேணும் பகவதி தீர்த்தத்தில்
அழகு நீலனும் நீலி யிசக்கியும்

கூடவே வந்த தெய்வப் பெரும்படை
　　கூடிக்கூடி குரவை முழங்கிட
ஏறி வந்த பரிவிட் டிறங்கியே
　　இலங்கும் நீலன் அணிந்த பணியெல்லாம்
வேறில் லாமல் கழற்றிக்[1] கரையிலே
　　விடிய ஏழரை[2] நாழியல் உள்ளாக
சூழ்ந்து வந்த படையோடே நீலனும்
　　சுக்குப் பாறைக் குளத்தி லிறங்கியே
இறங்கி யேஅரி கோவிந்தா வெனவே
　　இராமரைத் துதித் தாடவே நீலனும்

நீலன் நீலி ஆகியோருடன்வந்த தெய்வீகப்படையினராகிய அனைவரும் கூடி குரவையாடி வந்துகொண்டிருந்தார்கள். அழகு நீலனும் நீலியாகிய இசக்கியும் தாங்களேறிவந்த குதிரையினின்றும் இறங்கினார்கள். விடியற்காலை ஏழரை நாழிகைக்குக் குதிரைவிட்டிறங்கிய அவர்கள், அணிந்திருந்த அணிகலன்களையெல்லாம் கழற்றி சுக்குப்பாறைக்குளத்தின் கரையிலே வைத்தார்கள். அடுத்து பாலினி, சூலி, மதங்கி என்னும் பெயர்களோடு விளங்கும் பகவதியாள் தீர்த்தத்தில் நீராடினார்கள். அடுத்து சூழ்ந்துவந்த படைமுதலான அனைவருங்கூடிச் சுக்குப்பாறைக்குளத்தில் இறங்கி அரிகோவிந்தா என்றுகூறித் துதித்தபடியே நீராடினார்கள்.

பாலினி - காப்பாற்றுபவள். சூலி - காளி; துர்க்கை. மாதங்கி - காளி; துர்க்கை. ஏழரை நாழி - மூன்றும்ணி நேரம்

சு.சொல் : 1, களத்தி 2 ஏழர

Palavakait tīrttamāṭutal

kālinirai mēytta kaṇṇaṉ
　　kāyāmpu mēṉi karuniṟa vaṇṇaṉ
pāliṉi cūli mataṅki
　　pakavatiyāḷ tīrttamatu·āṭalur ṟārē
āṭa vēṇum pakavati tīrttattil
　　aḻaku nīlaṉum nīli yicakkiyum
kūṭavē vanta teyvap perumpaṭai
　　kūṭikkūṭi kuravai muḻaṅkiṭa
ēṟi vanta parivit ṭiṟaṅkiyē
　　ilaṅkum nīlaṉ aṇinta paṇiyellām
vēṟil lāmal kaḻaṟṟik karaiyilē

viṭiya ēḻarai nāḻiyal uḷḷāka
cūḻntu vanta paṭaiyōṭē nīlaṉum
cukkup pāṟaik kuḷatti liṟaṅkiyē
iṟaṅki yēari kōvintā veṉavē
irāmarait tutit tāṭavē nīlaṉum

Bathing in a variety of fountains

Kaṇṇaṉ, the cowheard, black coloured one
The one with *Kāyāmpu* Physical body,
Nīlaṉ and Nīli took holy dip
In the fountains of Pāliṉi and Kāḷi
And Pakavati Thirth.
Accompanied by the army of gods
With the group singing of *Kuravai*
They dismounted from their horses.
Removing all their jewels they placed them
On the banks of the tank Cukkuppāṟai.
Three hours ahead of dawn,
With all those who accompanied him
Nīlaṉ bathed in Cukkuppāṟai
Chanting the name of Hari Govinda.

பலதுறையாடுதல்

சர்க்க ரைக்குளம் ஆடிக் கரையேறி
தாண்டு மாம்கயம் தன்னி லிறங்கியே
அரிசித் துறை தவிட்டுத் துறையிலும்
ஆடு வார்புகழ் நீலனும் நீலியும்
ஓடும் நல்ல துறையது தன்னிலும்
இறங்கி யேஅரி ராமரைப் போற்றியே

சர்க்கரைக்குளம், அரிசித்துறை, தவிட்டுத்துறை என்னும் பெயர்களையுடைய ஓடும் நீரையுடைய அழகியதுறைகள் பலவற்றிலும் இறங்கி இராமபிரானைத் துதித்தவாறே நீராடினார்கள்.

Palaturaiyāṭutal

carkka raikkuḷam āṭik karaiyēṟi
tāṇṭu māmkayam taṉṉi liṟaṅkiyē
aricit tuṟai taviṭṭut tuṟaiyilum
ātu vārpukaḷ nīlaṉum nīliyum
ōṭum nalla tuṟaiyatu taṉṉilum
iṟaṅki yēari rāmaraip pōṟṟiyē

Holy dip in many places

Dancing praising and worshipping Rāma
Nīlaṉ bathed in Carkkarai tank and
Coming on top of its bank,
He climbed down into Arcittuṟai,
Then Taviṭṭuttuṟai streams.
The dance famed Nīlaṉ and Nīli
Went into many bathing ghats
And praised the name of Ari Rām.

கடவுளரைத் தொழுதல்

பச்சை மாலும் பரம சிவனையும்
பார்பதி யுமைபரம சிவனுமோ
அரிகரி நாரா யணனையும்
தோத்திரம் பண்ணி நீல சுவாமியும்
சந்தி ரன்அரிச் சந்திர னென்ன
தரணி யாள்கின்ற செம்பிய நானென்ன
செம்பி யன்மக வாகப் பிறந்தவன்
தீர்க்க முள்ள திறல்வீர னானென்ன
யெழுதி வைத்த பிரமனைப் போற்றினார்
போற்றியே நீலன் தீர்த்தமு மாடியே
புண்ணிய தானம் செய்துகரை யேறி

பலதுறைகள் நீராடிமுடித்த நீலனும் நீலியும், அரிகரி நாராயணா எனத் திருமாலை வணங்கினார்கள். அடுத்து சிவபெருமான், உமையம்மையார் ஆகியோரையும் தொழுதார்கள். சந்திர குலத்திலே உதித்தவனும், அரிச்சந்திரனுக்கு நிகரானவனுமாகிய

சோழனின் மகவாகத் தோற்றுவித்து, சிறந்த திறமைகளையெல்லாம் பெறச்செய்த பிரமனைப் போற்றித் துதித்தார்கள்.

தோத்திரம் - துதி; வந்தனம் தரணி - பூமி.

Kaṭavuḷarait toḻutal

paccai mālum parama civaṉaiyum
pārpati yumaiparama civaṉumō
arikari nārā yaṇaṉaiyum
tōttiram paṇṇi nīla cuvāmiyum
canti raṉaric cantira ṉeṉṉa
taraṇi yāḷkiṉṟa cempiya nāṉeṉṉa
cempi yaṉmaka vākap piṟantavaṉ
tīrkka muḷḷa tiṟalvīra ṉāṉeṉṉa
yeḻuti vaitta piramaṉaip pōṟṟiṉār
pōṟṟiyē nīlaṉ tīrttamu māṭiyē
puṇṇiya tāṉam ceytukarai yēṟi

Worshipping the Gods

Nīlaṉ and Nīli worshipped
Tirumāl, Paramacivaṉ, Pārvati
Harihara Nārāyaṇaṉ Nīlacuvāmi,
Equalling Cantiraṉ (or the noon)
And Haricantiraṉ, was born
The child of the world governing Cōḻaṉ
And he praised Lord Pirammaṉ
For writing his fate as a talented hero.
Taking a holy dip in the fountains,
He distributed largesse to gain virtue.

காளியின் புகழுரை

மாதங்கி யாள்திரு நடையில் வந்து
வன்ன மானதோர் நீலனும் நீலியும்
பாதம் நோக்கிய நீலன் தொழுதிட
பச்சைமால் தங்கை யேதுரை சொல்லுவார்

காரங் காட்டான மணிகெட்டி பொட்டலில்
காவ லவன்பொன் னிலங்கி தனபாலன்
வாரங்க மாக வணங்கவும் வல்லவன்
வளஞ்சி றக்கும் முச்சந்தி வங்குசம்
தேடி யெங்கும் திரிந்தவ னைப்போலே
தேச மதனில் ஒருகுடி வேறில்லை
தூசி[1] துப்புர வாக நடக்கவும்
சொல்லும் வாக்கு விசுவாச மாகவும்
தெய்வ நன்னெறி போற்றித் துதிக்கவும்
சொன்ன வாக்கொரு நாளும் மறவாதான்
பத்தி முத்தி மறவாத போதவான்
பாளிசமும் பவுசையும் பெற்றவன்
அன்ன பாக்கியம் குன்றாத யோகவான்
ஆதெனக்கு யிட்டே யாதுங் கொடுப்பவன்
பாவத் துக்கொரு நாளும் ஈடுபடான்
பாவ நீக்கிப் பரகெதி பெற்றவன்
அடுத்த பேருக்குக் கேடு நினையாதான்
அரச னுக்கும் அல்லோர்க்கும் உவந்தவன்

நீலனும் நீலியும் திருமாலின் தங்கையாகிய காளிகாதேவியின் திருவடிகளைத் தொழுதுநின்றார்கள். தன்னை வணங்கிய நீலன் நீலியை நோக்கிக் கூறுகிறாள் காளி. நீலனும் நீலியும் நாட்டுக்காவலில் வல்லவனாகிய சோழர்குலத்திலே பிறந்தவர்கள். செல்வந்தழைத்த பெருமையும், யாவரும் வணங்குவதற்குரிய திறமையும் பெற்றவர்கள். மூன்று திசைகளிலும் உள்ள செல்வந்தக்குடிகளையெல்லாம் தேடிப்பார்த்தாலும் நாட்டில் இவர்களுக்கு இணையான உயர்ந்தகுடி ஏதும் இருக்காது அப்பழுக்கற்ற தூய நடத்தையுடையவர்கள். வாக்குத் தவறாமையும், பேரன்பும் கொண்டவர்கள் தெய்வநம்பிக்கையிலும், தெய்வவழிபாட்டிலும் தவறாதவர்கள். தெய்வாதிகளை என்றும் மறவாத குணவானாகவும், வெளிப்படையான கொள்கைகளையும் பெற்றவன். இத்தகு அனைத்துச் செல்வத்தையும் சிறப்பையும் பெற்ற நீலன், பாவச்செயல்களில் ஈடுபடாமல் மேலுலகப்பேறுபெற்றவன். மற்றவர்களுக்குத் துன்பம் செய்ய நினைக்காதவன். அரசன்முதல் ஆண்டிவரை உள்ள அனைவருக்கும் மகிழ்ச்சி தரக்கூடியவன் என்றெல்லாம் பாராட்டினாள் காளிகாதேவி.

விசுவாசம் - உண்மை. போதவான் - ஞானமுடையவன். பாளிசம் - பாளிதம் - கற்பூரம்; சந்தனம். பவுசு - பெருமை.

க.சொல் : 1 துசி

Kāḷiyin pukaḻurai

mātaṅki yāḷtiru naṭaiyil vantu
vaṉṉa māṉatōr nīlaṉum nīliyum
pātam nōkkiya nīlaṉ toḻutiṭa
paccaimāl taṅkai yēturai colluvār
kāraṅ kāṭṭāṉa maṇikeṭṭi poṭṭalil
kāva lavaṉpoṉ ṉilaṅki taṉapālaṉ
vāraṅka māka. vaṉaṅkavum vallavaṉ
vaḷañci ṟakkum muccanti vaṅkucam
tēṭi yeṅkum tirintava ṉaippōlē
tēca mataṉil orukūṭi vēṟillai
tūci tuppura vāka naṭakkavum
collum vākku vicuvāca mākavum
teyva naṉṉeṟi pōṟṟit tutikkavum
coṉṉa vākkoru nāḷum maṟavātāṉ
patti mutti maṟavāta pōtavāṉ
pāḷicamum pavucaiyum peṟṟavaṉ
aṉṉa pākkiyam kuṉṟāta yōkavāṉ
āteṉakku yiṭṭē yātuṅ koṭuppavaṉ
pāvat tukkoru nāḷum īṭupaṭāṉ
pāva nīkkip paraketi peṟṟavaṉ
aṭutta pērukkuk kēṭu niṉaiyātāṉ
araca ṉukkum allōrkkum uvantavaṉ

The praise of Kāḷi

Reaching Kāḷis corridor or (in her temple),
Nīlaṉ and Nīli worshipped her feet,
Tiṟumāl's- sister spoke as follows.
Nīlaṉ and Nīli are of the race of Cōḻaṉ
Known for protecting all his lands
Including the vast open wasteland
Belonging to the group of the rich.
He is worthy of worship and
In the whole of the land there is

None to equal him even among the rich.
They are blameless in character,
Spotless in behaviour, absolutely
Truthful in their words, firm in
Belief of God and worship, never
Going against his words, A man of knowledge
And wisdom, never forgetting the gods,
A person glorious as camphor or sandal
One who is full of all kinds of riches
Ready to give to others,
Shunning evil and the one
Who got paradise as a reward,
Who never thought of harm for others,
Who is acceptable to all
From the king to the last man.

நீலனுக்கு உரைத்தல்

வரிசை யோகன மனதீரன் முச்சந்தி
மனையி டத்தில் குடிகொண்டு நில்லெடா
நிலைவிட் டொரு நாளும் பிரியாதே
நீஅவ னுக்கொரு குறைவய் யாதே
பத்திர காளி துர்க்கைசந் தோஷமாய்
பச்சை மாலுக் கிளையவள் சொல்லவே
மாதா வேசிவ காமியென் தாயாரே
மனது மெய்க்கப் பாடிப்போறேன்[1] நானென்றார்

பாராட்டியதேவி நீலனை நோக்கி நீலா! முச்சந்தி கூடுமிடத்தில் குடியிருக்க வேண்டும்! உன்னுடைய நிலையிலிருந்து என்றும் மாற்றம் கொள்ளாதே என்றெல்லாம் கட்டளையிட்டாள் பத்திரகாளி என்னும் துர்காதேவி. திருமாலுக்கு இளையவளாகிய தேவியின் ஆணையைப்பெற்ற நீலனும் நீலியும், மாதாவே! சிவகாமித் தாயாரே! நாங்கள் மனமகிழ்ச்சியுடன் செல்கிறோம் என்று விடைபெற்றுக்கொண்டனர்.

1 படிப்போறேன்

Nīlan̲ukku uraittal

varicai yōkan̲a man̲atīran̲ muccanti
man̲aiyi ṭattil kuṭikonṭu nilleṭā
nilaiviṭ ṭoru nāḷum piriyātē
nīava n̲ukkoru kur̲aivay yātē
pattira kāḷi turkkaican tōṣamāy
paccai māluk kiḷaiyavaḷ collavē
mātā vēciva kāmiyen̲ tāyārē
man̲atu meykkap pāṭippōr̲ēn̲ nān̲en̲r̲ār

Advising Nīlan̲

Kāḷi said to Nīlan̲, "Always
Live in the junction of the streets,
Stabilise yourself there and
Never give up your place at any cost
And let there be no problem for him"
Tirumāl's sister said these words
With joy and Nīlan̲ and Nīli said
"Oh mother Civakāmi, we leave this place
With joy singing thy name".

நீலனும் நீலியும் மேனாடடைதல்

போறோ மென்றெங்கள் நீலனும் நீலியும்
புறப்பட் டார்படை பாவித்துச் சேவிக்க
நடந்தார் தென்குமரித் துறையும் விட்டு
நல்லழ கன்புகழ் நீல தம்புரான்
கோனாளிடி புரம் பூந்தாழை உடையும்[1]
குன்று மேல்மலை குமடுகள் தான்விட்டு
சேரமான் மலைநாடு போன நாட்டில்
தீவிர மாக வாறாரே நீலனும்
நீல பிள்ளையும் நீலி யிசக்கியும்
நிலைய தாகவே கோவில் குடிகொள்ள
மேற்கே நோக்கி வழிகள் நடந்தல்லோ
விரைந்து நல்ல மேனாட்டில் வருகின்றாரே.

விடைபெற்றுக்கொண்ட நீலனும் நீலியும் படைகள்சூழ தென்குமரியைவிட்டுப் புறப்பட்டார்கள். கோனாளிடிபுரத்தையும் பல குன்றுகளையும், சிகரங்களையுங் கடந்து சேரமான் நாடாகிய மலைநாட்டினை அடைந்தார்கள். நீலசுவாமியும் நீலியிசக்கியுமாகக் கோயில்கொள்ள வேண்டும் என்ற நோக்கத்தோடு மேனாட்டை அடைந்தார்கள்

குமடு - குவடு என்பதன் பேச்சுவழக்கு.

சு.சொல் : 1 லுடையும்

Nīlanum nīliyum mēnāṭaṭaital

pōṟō menṟenkaḷ nīlaṉum nīliyum
puṟappaṭ ṭārpaṭai pāvittuc cēvikka
naṭantār teṉkumarit tuṟaiyum viṭṭu
nallaḻa kaṉpukaḷ nīla tampurāṉ
kōṉāḷiṭi puram pūntāḻai uṭaiyum
kuṉṟu mēlmalai kumaṭukaḷ tāṉviṭṭu
cēramāṉ malaināṭu pōṉa nāṭṭil
tīvira māka vārārē nīlaṉum
nīla piḷḷaiyum nīli yicakkiyum
nilaiya tākavē kōvil kuṭikoḷḷa
mēṟkē nōkki vaḻikaḷ naṭantallō
viraintu nalla mēṉāṭṭil varukiṉṟārē

Nīlaṉ and Nīli reach the west

Departing from the place, Nīlan and Nīli
Started followed by their devotees
And walked away from the South Kumari
Crossing Koṉāḷiṭipuram and many more
Hills and mountains they reached
The land of Cēraṉ, the land of mountain
Nīlaṉ and Nīli came there to stay
And establish their abode.

தென்சுகந்தையடைதல்

அகஸ்தீஸ் புரமும்விட்டு அழகுநீலனும் நீலியுமாய்
செகத்துடனே வழிநடக்க தெய்வார்கள் வழிநடக்க

பூமருவும் புகழ்நீலன் பூசைகொள்ள வேணுமென்று
தாமரைவாழ் குளமும்விட்டு தான்வாறார் நீலனுமோ
அசையாத மனதீரன் அழகுதெய்வ நீலராசன்
விசயனுட காடும்விட்டு மணப்புரத்தைக் காடும்விட்டு
பெரத்தையடிப் புதுஊரும் புதுமையுடனே கடந்து
பழுதில்லா நீலராசன் படைசேரும் வழிநடந்து
வழுக்கன் பாறைதனைக் கடந்து வாறார் தென்சுகுந்தையிலே

தெய்வார்கள் உடன்வர மக்களின் பூசையைப் பெறவேண்டும் என்ற நோக்கத்தோடு அகஸ்தீஸ்வரத்தின் வழியாகப் பல குளங்களைக் கடந்து வருகின்றார்கள். தொடர்ந்து விசயனுட காடு, மணப்புரம், பெரத்தையடிப் புதுஊர் ஆகியவற்றைப் புதுமையுடன் கடந்து வருகிறார்கள் இறுதியாகக் குற்றமில்லாத நீலராசன் படையுடன் வழுக்கன் பாறையினைக் கடந்து தென்சுகந்தைக்கு வந்தார்கள்.

பூமருவு - பூக்கள் அணிந்த. செகம் - உலகம்

Tencukantaiyataital

akastis puramumvittu alakunilanum niliyumāy
cekattutanē valinatakka teyvārkal valinatakka
pūmaruvum pukalnilan pūcaikolla vēnumenru
tāmaraivāl kulamumvittu tānvārār nilanumō
acaiyāta manatiran alakuteyva nilarācan
vicayanuta kātumvittu manappurattaik kātumvittu
perattaiyatip putuūrum putumaiyutanē katantu
palutillā nilarācan pataicērum valinatantu
valukkan pāraitanaik katantu vārār tencukuntaiyilē

Reaching South Cukantai

Leaving Akastispuram, beautiful Nīlan and Nīli
Surrounded by Devas walked along
To receive the poojas to be offered to him,
In the world covered with myriad flowers.
Leaving the lotus covered tanks,
Came Nīlan, the man of firm will,
Man of beauty almost like a God.

He crossed Vicayan̲ forest, Maṇappuram forest,
Perattaiyaṭi putūr and in a novel way.
Blameless Nīlarācan̲ and his army of followers
Crossing Val̲ukkan̲ Pāṟai reached South cukantai.

பறக்கையூரடைதல்

இறையவரைத் தொழுதேற்றும் எம்பிரான் சன்னதியில்
உமைதாணு மாலயன் உடையவரைத் தொழுதுகொண்டு
அடிவணங்கி நீலன்நிற்க அம்மையுமை பாகன்சொல்வார்
வடிவுடைய நீலராசர் வந்ததென்ன சொல்லுமென்றார்
அருமையுடன் எனைவணங்க ஆளடியான் தனைத்தேடி
பெருமையுள்ள தென்சிவந்தைப் பெருமாளே போகவந்தேன்
எனஉரைத்து நீலதெய்வம் இசைந்துநடை கொண்டேகி
வன்னமுள்ள கானைபுதூர் வழியும்வயல் புரமும்விட்டு
மதிதென் பெருமாள்வாழ் பறக்கை யூரில்வந்தான்
வந்துமது[1] சூதனரை வணங்கிடவே நீலராசன்
அந்தமுடன், தென்பூமி அதிபதியா ரேதுசொல்வார்
எந்தனுட பதிதேடி யிங்குவந்த காரணமேன்
இந்தநல்ல நாடதிலே யெனைவணங்கக் குடிதேடி
மங்கைமது சூதனந்தான் வாக்குரைப்பார் நீலனுக்கு

இறைவனின் சன்னதியில் உமையம்மை, சிவன், திருமால் அனைவரது திருவடிகளையும் வணங்கினார். அப்போது சிவபெருமான், நீலராசன் தன்னிடம் வந்த காரணத்தைக் கேட்டார். தென்சிவந்தையிலே எழுந்தருளியுள்ள பெருமைமிக்க பெருமாளே! தங்களை வணங்கிச்செல்லவே அடியேன் தங்களைத் தேடிவந்தேன் என்று கூறி வணங்கி விடைபெற்று, அழகு பொருந்திய கானைபுதூர் வழியாக வயல்வெளிகளைக் கடந்து தென்பெருமாள் திருக்கோயில் கொண்டுள்ள பறக்கை என்னும் திருத்தலத்தை வந்தடைந்தார்கள். தென்பூமிக்கு அதிபதியாகிய இறைவன் நீலனை நோக்கி, நீலனே! என்னைத்தேடி இங்குவந்த காரணம் என்ன என்று கேட்டுவிட்டு, உடனே இந்தநாட்டில் வந்து மதுசூதனனாகிய என்னை வணங்கிய உனக்குச் சில வார்த்தைகள் கூறுகிறேன் கேள் என்று கூறிவிட்டுத் தொடங்குகிறார்.

ஆளடியான் - நீலசுவாமியின் வேறு பெயர்

சு.சொல் : மதிசூதனரை.

Paṟakkaiyūraṭaital

iṟaiyavarait toḻutēṟṟum empirāṉ caṉṉatiyil
umaitāṉu mālayaṉ uṭaiyavarait toḻutukoṇṭu
aṭivaṇaṅki nīlaṉniṟka ammaiyumai pākaṉcolvār
vaṭivuṭaiya nīlarācar vantateṉṉa collumeṉṟār
arumaiyuṭaṉ eṉaivaṇaṅka āḷaṭiyāṉ taṉaittēṭi
perumaiyuḷḷa teṉcivantaip perumāḷē pōkavantēṉ
eṉavuraittu nīlateyvam icaintunaṭai koṇṭēki
vaṉṉamuḷḷa kāṉaiputūr vaḻiyumvayal puramumviṭṭu
matiteṉ perumāḷvāḻ paṟakkai yūrilvantāṉ
vantumatu cūtaṉarai vaṇaṅkiṭavē nīlarācaṉ
antamuṭaṉ teṉpūmi atipatiyā rētucolvār
entaṉuṭa patitēṭi yiṅkuvanta kāraṇamēṉ
intanalla nāṭatilē yeṇaivaṇaṅkak kuṭitēṭi
maṅkaimatu cūtaṉantāṉ vākkuraippār nīlaṉukku

Arriving at Paṟakkaiyūr

In the sacred place of God, in His presence,
He worshipped Umā, Civaṉ and Tirumāl,
While he stood worshipping their feet,
Umā's other half, Civaṉ asked him
Why he came and for what purpose
Nīlaṉ, in answer, averred that he came
To worship Perumāḷ of South cukantai.
Saying this, Nīlaṉ, with dancing gait,
Crossing the beautiful Kaṉaiputūr and its fields,
Arrived at Paṟakkaiyūr, the abode of Perumāḷ
For worshipping Matucūtaṉaṉ.
The God, Lord of all the southern world,
Asked him the reason for Nīlaṉ's coming
In search of him and said the following
To Nīlaṉ who came to worship him there

மதுசூதனன் திருவாக்கு

அட்டான தேசமதில் அலையாதே ஒருவிடமும்
கட்டாக உனைவணங்க காளிவலங் கைத்தலைவன்
தென்சூரை பதியான சிறந்தமணி கெட்டிபொட்டல்
அன்புடைய பொன்னிலங்க அங்குசமுச் சந்தியுடன்
பதியதிலே பூசையுண்டு பலநாளும் குடிவளர்க்க
மதுசூதனப் பெருமாள் வாக்குரைக்க நீலனுக்கு

நீலா! நீ உன்னுடைய தேசத்தில் எங்கும் சென்று அலையவேண்டாம். காளியின் வரம்பெற்ற தலைவன் என்றும், காளியின் வலதுகையாக விளங்கும் தலைவன் என்றும் கருதி உன்னை வணங்கக் கூட்டங்கூட்டமாக மக்கள் திரளுவார்கள். ஆகவே தென்சூரைப்பதி என்னும் இத்திருத்தலத்திலே பரந்த இடமாகிய முச்சந்தியிலே சிறந்த மணி ஒன்றினைக் கட்டிக்கொண்டு எழுந்தருளியிருப்பாயாக! அங்கு அன்போடு வந்து உன்னை வணங்கும் குடிமக்கள் செய்யும் பூசைகளை ஏற்று அக்குடிமக்களை வாழவைப்பாயாக என்று கூறியருளினார்.

Matucūtaṉaṉ tiruvākku

aṭṭāṉa tēcamatil alaiyātē oruviṭanum
kaṭṭāka uṉaivaṇaṅka kāḷivalaṅ kaittalaivaṉ
teṉcūrai patiyāṉa ciṟantamaṇi keṭṭipoṭṭal
aṉpuṭaiya poṉṉilaṅka aṅkucamuc cantiyutaṉ
patiyatilē pūcaiyuṇṭu palanāḷum kuṭivaḷarkka
matucūtaṉap perumāḷ vākkuraikka nīlaṉukku

The holy words of Matucūtaṉaṉ

Nīlāṉ you need not wander in your land
Being blessed by Kāḷi, and being the right hand
Of Kāḷi, in all the lands of the south,
You will be worshipped by all.
Hence in the place called south cūrai
In the broad junction of the street
Take your abode and build a temple
With a bell and receive worship and poojas.

மேலும் மதுசூதனன் கூறியருளுதல்

புல்பூமி உள்ளளவும் புரிசடையோன்[1] உள்ளளவும்
அற்புதமாய் அலைகடலும் அம்புவி உள்ளளவும்
வானமது உள்ளளவும் வைய்யகங்கள் உள்ளளவும்
தானமது தவறாமல் சார்ந்து குடிவளர்க்க
கல்லுமலையும் புவியும் காசினியில் உள்ளளவும்
சொல்லு நடுதப்பாமல் துன்பமது தனைத்தீர்த்து
மண்ணும்விண்ணும் உள்ளளவும் மாமறையோர் உள்ளளவும்
எண்ணுமண்ணும் பூசைகொண்டு யிருப்பாய் முச்சந்திபங்கில்
பொன்னிலங்கி பெரும்பாலன் புகழ்பெறு முச்சந்தியென்னும்
மன்னவர்க்கும் அடுத்தவர்க்கும் மணிவிளக்காய் வந்தசெல்வன்
அங்கிசமும் கோத்திரமும் ஆளடியா னுந்தழைக்க
யெங்கெங்கும் தான்புகழ யிருந்திடுவாய் பூசையுண்டு

இந்த நிலவுலகத்தில் புல்லும் பூமியும், சடாமுடியையுடைய சிவபெருமானும், என்றும் வற்றாத அலைகடலும், வானமும், பலவகை வையகமும் நிலைபெற்று உள்ள காலம் வரையிலும் பூசையை ஏற்று விளங்குவாயாக. கல்லும், மலையும், பூமியும் நிலைபெற்று, அங்கு வாழும் மக்கள் தானதருமங்களைச் செய்வதிலும், சொன்னவாக்குத் தவறாமல் வாழ்வதிலும் குறைவராமல் அவர்களின் துன்பங்களைப்போக்கி அருள்புரிவாயாக! முச்சந்தியில் எழுந்தருளியிருக்கும் பாலகன் என்று மறையவரும் மண்ணிலும் விண்ணிலும் உள்ளவர்களும் போற்றிப் பூசைசெய்ய அதனை மகிழ்ச்சியோடு ஏற்று விளங்குவாயாக! மன்னவர்களுக்கும் மக்களுக்கும் ஆளடியான் என்னும் மணிவிளக்காக வந்த செல்வன்; குலமும், கோத்திரமும் தழைத்து ஓங்கி எல்லோரும் புகழும்படியாகப் பூசைகளை ஏற்று விளங்குவாயாக! என்றெல்லாம் கூறியருளினார்

அம்புவி - அழகிய பூமி. நடு - நடுநிலைமை. எண்ணுமண்ணும் - என்றும் அன்றும் என்பதன் பேச்சுவழக்கு. அங்கிசம் - வமிசம். கோத்திரம் - குலம்; வர்க்கம்.

சு.சொல் : புருசடையோன்.

Mēlum matucūtanan̲ kūr̲iyaruḷutal

pulpūmi uḷḷaḷavum puricaṭaiyōn̲ uḷḷaḷavum
ar̲putamāy alaikaṭalum ampuvi uḷḷaḷavum
vān̲amatu uḷḷaḷavum vaiyyakaṅkaḷ uḷḷaḷavum
tān̲amatu tavar̲āmal cārntu kuṭivaḷarkka
kallumalaiyum puviyum kācin̲iyil uḷḷaḷavum

collu naṭutappāmal tuṉpamatu taṉaittīrttu
maṇṇumviṇṇum uḷḷaḷavum māmaṟaiyōr uḷḷaḷavum
eṇṇumaṇṇum pūcaikoṇṭu yiruppāy muccantipaṅkil
poṉṉilaṅki perumpālaṉ pukalperu muccantiyeṉṉum
maṉṉavarkkum aṭuttavarkkum maṇiviḷakkāy vantacelvaṉ
aṅkicamum kōttiramum āḷaṭiyā ṉuntaḻaikka
yeṅkeṅkum tāṉpukaḻa yiruntituvāy pūcaiyuṇṭu

Further words with blessing

Till all the living things and plants exist and
And as long as the plaited haired Civaṉ exists,
As long as the sea and the world exist,
As long as stones and mountains exist,
You take your abode in order that
The people may perform dharmas (or virtuous deeds)
And never breath their words but keep them
And you shower thy blessings on them.
Receive the worship offered by vedic scholars
As the child God of street junction.
And be happy accepting the poojas
Of the citizens of the world and heaven
Thou who have come as the beacon light
Of kings and the people accept the worship
For all the world and the people to flourish.

ஆசிரியரின் வாழ்த்து

நச்சரவில் பள்ளிகொண்ட நாராயண ரருளாலே
அச்சமற முச்சந்திதன் அங்கிசமெல் லாம்தழைக்க
பாடும்புலவோர் தழைக்க பாட்டுக்கேட்டா ருந்தழைக்க
நாடு மிகதழைக்க நாட்டிலுள்ளோ ரும்தழைக்க
வீடுமிகவே தழைக்க வீட்டுமனை யாள்தழைக்க
சூடு தழைக்கபொலி சொன்னபடி தான்தழைக்க
இலக்காக நீலதெய்வம் போற்றிவைத்த விளக்கதுபோல்
துலக்கமாய் ஆளடியான் சொன்னபடி பாடிவைத்தேன்

பாம்பணையில் பள்ளிகொண்டுள்ள நாராயணனின் அருளினாலும், பாடும் புலவர்களும், பாடலைக் கேட்டுக்கொண்டிருக்கும் மக்களும் உட்பட, நாடும் நாட்டில் வாழும் மக்களும், வீடும் வீட்டுத்தலைவியும் என்றென்றும் தழைத்து வாழ்வார்களாக! எல்லாம் நலமாக இருக்கவும் நீலதெய்வம் ஏற்றிவைத்த விளக்கினைப்போல ஆளடியான் எனப்படும் நீலதெய்வம் எனக்கு அருளியபடியே நானும் இக்கதையைப் பாடியுள்ளேன்.

நச்சரவு- விஷத்தன்மைகொண்ட பாம்பு.

Āciriyarin̲ vāḻttu

naccaravil paḷḷikoṇṭa nārāyaṇa raruḷālē
accamar̲a muccantitan̲ aṅkicamel lāmtaḻaikka
pāṭumpulavōr taḻakka `pāṭṭukēṭṭā runtaḻakka
nāṭu mikataḻaikka nāṭṭiluḷḷō rumtaḻaikka
vīṭumikavē taḻaikka vīṭṭuman̲ai yāḷtaḻaikka
cūṭu taḻaikkapoli con̲n̲apaṭi tān̲taḻaikka
ilakkāka nīlateyvam pōr̲r̲ivaitta viḷakkatupōl
tulakkamāy āḷaṭiyān̲ con̲n̲apaṭi pāṭivaittēn̲

Encomium by the author (poet)

With the grace of Nārāyaṇan̲ who sleeps
On the bed of the poisonous snake,
In order that generations may flourish,
In order that the poets who sing
And those who hear them may flourish,
For all the world to prosper and
For all. the houses to prosper,
For all the housewifes to prosper
For the welfare of all and
That the lamp lit by Nīlan̲ may flourish
And as dictated by may flourish Nīlan̲
And as dictated by Nīlan̲ may flourish
And as dictated by the Goldly Nīlan̲
I, the slave of Nīlan̲, sang this.

நீலன் பூசையேற்ற ஆண்டு

கலகங்கள் வாராமல் காவலது அழியாமல்
ஆனகொல்லம் தொள்ளாயிரத்து அன்பதாம் ஆண்டையிலே
தானமது தவறாமல் நீல தம்புரான்
பூசையுண்டு வீற்றிருந் தாரே.

சண்டை சச்சரவுகள் ஏதும் வராமல், சிறப்புமிக்க காவலினைக்கொண்ட கொல்லம் ஆண்டு, தொள்ளாயிரத்து ஐம்பதிலே தானதருமங்கள் தவறாமல் பூசைகள் முறைப்படி நடைபெற அவற்றை ஏற்ற நீலதம்புரான் அருள்புரிந்து வீற்றிருந்தார்.

அன்பது - ஐம்பது என்பதன் பேச்சுவழக்கு.

Nīlaṉ pūcaiyēṟṟa āṇṭu

kalakaṅkaḷ vārāmal kāvalatu aḻiyāmal
āṉakollam toḷḷāyirattu aṉpatām āṇṭaiyilē
tāṉamatu tavaṟāmal nīla tampurāṉ
pūcaiyuṇṭu viṟṟirun tārē

The year of accepting poojas by Nīlaṉ

The year in which there was no violence or revolt,
And in the year of great protection,
In the year nine hundred and fifty
Nīlaṉ accepted poojas gracefully
And stabilised his abode.

பூசைகொள்ளும் நீலனின் தோற்றம்

கண்டகண்ட தெய்வம்புகழ் நீலதம்புரானைக் கருத்தில் நினைமனமே
கற்றவர் புத்தியில் மெத்தமகிழ்ந்து கலிதீர்த்த நாயகனே
புத்திதவறாமல் நித்தம்அருள்தந்த பொன்னான நீலனடி
பொற்பரியேற குரவைகள்பாட பூசைகொள்ள வாறார்
பஞ்சவர்க்குத் தினம்தூதுநடந்தவன் பச்சமால் தன்னருளால்
பைம்பொன் மணிமுடியுந்தலைப்பாவும் பரிவினுடனணிந்து
முத்துவடம் விரலாழிபொன் மோதிரமுன்கை[1] கலிரனவே
மோகனமாலை அணிந்தபுகழ் நீலன் முத்துவடமிலங்க

மனமே! தெய்வங்களெல்லாம் போற்றிப் புகழக்கூடிய பெருமையினையுடைய நீலசுவாமியை என்றும் நினைப்பாயாக! சிறிதும் குறைவராதபடி அருள்புரிந்து

கொண்டிருக்கிற நீலன், உன்னுடைய பூசையை ஏற்க பொற்பரியேறி குரவையொலிக்க வந்துகொண்டிருக்கிறார் நீலசுவாமி, பஞ்சபாண்டவர்களுக்காகத் தூதுசென்றவரும், நீலநிறவண்ணனாகியவருமான திருமாலின் திருவருளால், பொன்னால் செய்யப்பட்ட மணிமுடியினையும், தலைப்பாகையினையும் அன்புடன் அணிந்து விளங்குபவர். முத்துமாலையும், விரலாழி எனப்படும் பொன்மோதிரமும், மோகனமாலையும் அணிந்து விளங்குபவர்

கலி - கேடு; வறுமை. பரிவினோடு - பக்குவத்தோடு; அன்போடு.

சு சொல் : 1 முங்கை

Pūcaikoḷḷum Nīlaṉiṉ tōṟṟam

kaṇṭakaṇṭa teyvampukal nīlatampurāṉaik karuttil niṉaimaṉamē
kaṟṟavar puttiyil mettamakiḻntu kalitīrtta nāyakaṉē
puttitavaṟāmal nittamaruḷtanta poṉṉāṉa nīlaṉaṭi
poṟpariyēṟa kuravaikaḷpāṭa pūcaikoḷḷa vāṟār
pañcavarkkuṭ tiṉamtūtunaṭantavaṉ paccamāl taṉṉaruḷāl
paimpoṉ maṇimuṭiyun talaippāvum parivinuṭaṉaṇintu
muttuvaṭam viralāḻipoṉ mōtiramuṉkai kaliraṉavē
mōkaṉamālai aṇintapukaḻ nīlaṉ muttuvaṭamilaṅka

The appearance of Nīlaṉ while receiving poojas

Oh! mind! think and keep in your mind
Nīlaṉ, praised by all the gods.
Appreciating the wisdom of the scholars,
Thouhast removed all their grievance.
It is Nīlaṉ who showers grace daily without fail
And he is coming on horseback to receive
Worship, accompanied by the singing of *Kuravai*
By the grace of Tirumāl who acted
As the ambassador to the pāṇṭavās
Nīlaṉ is adorned with diamond diadem as headgear
Pearled chains and fingers full of gold rings
And bewitching garlands with pearled jewels.

மகளிர் மயக்கம்

வானத்திரள்கின்ற மேகத்திரள்போல வடிவையும் கண்டுமின்னார்
மாமோகம் கண்டுபுகழ் நீலனுக்கு மயங்கித் தயங்கிடுவார்
பொன்னணிமேனியும் பூக்கெட்டுக்கொண்டையும் பூந்தா மரைமுகமும்
போற்றிப் பிரகாசத்தானும் துலங்க பொன்னினொளிபோலே
வன்னப்பணிகள் எண்ணத்துலையாத மதிக்க ஒண்ணாதழகன்

வானத்திலே திரள்கின்ற மேகக்கூட்டத்தினைப் போன்ற நீலனின் வடிவழகைக்கண்ட மின்னலைப் போன்ற ஒளியோடு விளங்கும் மகளிர் மோகமயக்கங்கொண்டு செயலற்று நின்றார்கள். பொற்கலனணிந்த உடம்பினையும், மலர்சூடிய கொண்டையினையும், தாமரைபோன்ற முகத்தினையும் பாராட்டினார்கள். அணியாலும், ஒளியாலும் மனத்தாலும் எண்ணிப்பார்க்கமுடியாத அழகன் என்று மேலும் மேலும் பாராட்டினார்கள்.

Makaḷir mayakkam

vāṉattiraḷkiṉṟa mēkattiraḷpōla vaṭivaiyum kaṇṭumiṉṉār
māmōkam kaṇṭupukaḻ nīlaṉukku mayaṅkit tayaṅkiṭuvār
poṉṉaṇimēṇiyum pūkkeṭṭukkoṇṭaiyum pūntā maraimukamum
pōṟṟip pirakācattāṉum tulaṅka poṉṉiṉoḷipōlē
vaṉṉappaṇikaḷ yeṇṇattulaiyāta matikka oṇṇātaḻakaṉ

Women bewitched

Seeing the beautiful shape of Nīlaṉ
Equalling the gathering clouds in the sky,
The women lost their balance with intense lust,
They praised him for his unparalleled beauty
With a body covered with gold jewels,
The hair do full of flowers with a lotus face
And shining bright like gold wonderfully.

மயக்க மகளிர் கூற்று

மானார்கள் கண்டுமருண்டு மயங்கிமகிழ்ந்து குரவையிட
கூந்தல் குலைவாழை ஆபரணம்[1] பணிகுங்குமப் பொட்டழகன்
கோலப்பணிவகை தானேஅணிந்து கோட்டிகள் கொள்ளாரோ

செந்தா மரைமுகம் பொன்முகத்தோ டென்னை
சேரானோ யென்பாரும் சேர்ந்திறுகக் கட்டி
மார்பு கிணங்கிச் சேரானோ யென்பாரும்

மான்போன்ற ம்ருண்ட விழிகளையுடைய அம்மகளிர் மயங்கி, மகிழ்ச்சியுடன் குரவைபாடத் தொடங்கினார்கள். அழகிய கூந்தலும், ஆடையணிகளும், குங்குமப்பொட்டும் ஆகிய பலவகை அலங்காரங்களோடு விளங்கும் நீலனின் அழகில் பொறாமைகொள்ளாதவர்களாய், செந்தாமரை முகத்தோன் என்னை அணைத்து மகிழ்ச்சியளிக்கமாட்டானா என்று கூறிக்கொண்டார்கள்

கோட்டி - அழகு

க சொல் : 1 அபரணம்.

Mayakka makaḷir kūṟṟu

māṉārkaḷ kaṇṭumaruṇṭu mayaṅkimakiḻntu kuravaiyiṭa
kūntal kulaivāḻai āparaṇam paṇikuṅkumap pottaḻakaṉ
kōlappaṇivakai tāṉēaṇintu kōṭṭikaḷ koḷḷārō
centā maraimukam poṉmukattō ṭeṉṉai
cērāṉō yeṉpārum cērntiṟukak kaṭṭi
mārpu kiṇaṅkac cērāṉō yeṉpārum

The words of bewitched women

Deer like women with frightened looks,
Being bewitched sang the *Kuravai*
Having jewelled hair like the bunch of banana fruits
With Kumkum dotted forehead most beautiful they wished
"Will he not put his red lotus face
Against mine and will he not
Embrace my bosom most tightly?"

மயக்க மகளிர் செயல்

ஆலாத்தியேந்தி கவரிகள்வீச ஆடிடுவார் சிலபேர்
அன்னார்கள் மின்னார்கள் குரவைமுழங்க ஆலாத்தி யேந்திடவே
பூஞ்சோலையும் பட்டுப் பூவாடை மின்னபொன்னான நீலதெய்வம்
பூவுலகமெய்க்க நாவுலகத்திலே பூசைகொள்ள வாறார்

பாவினையாகவே சேவித்துப் பாடி பலராகம் தான்முழங்க
பச்சமால் தன்னருளால் பெற்றநீலன் தெச்சணா பூமியிலே
பல்லாக்கு சேனை பரியுடன் காலால் பாய்ந்து நெருங்கிடவே
பாவினையாகப் படைசேவிக்க நீலசுவாமி வருகின்றாரே

மயங்கிய மகளிருள் சிலர் ஆர்த்தி ஏந்தி கவரிவீசி ஆடினார்கள். மின்னலை நிகர்த்த மற்றும் ஒருசிலர் ஆரத்தி ஏந்தியபடியே ஆடைகள் ஒளிவீசச் சூழ்ந்துவந்தார்கள். இப்பூவுலகம் புகழ, பூசையினை மேற்கொள்ள வந்துகொண்டிருக்கும் நீலசுவாமியை வணங்கியபடியே பல ராகங்களில் பாட்டுக்களைப்பாடிப் புகழ்ந்து வந்தார்கள் ஒருசிலர். திருமாலின் திருவருளைப் பெற்று குதிரை, பல்லக்கு, காலாட்படை முதலிய பரிவாரங்கள் சூழ்ந்துவர, நீலசுவாமியும் பூசையினை மேற்கொள்ள வந்துகொண்டிருக்கிறார்.

Mayakka makaḷir ceyal

ālāttiyēnti kavarikaḷvīca āṭituvār cilapēr
aṉṉārkaḷ miṉṉārkaḷ kuravaimuḻaṅka ālātti yēntiṭavē
pūñcōlaiyum paṭṭup pūvāṭai miṉṉapoṉṉāṉa nīlateyvam
pūvulakameykka nāvulakattilē pūcaikoḷḷa vārār
pāviṉaiyākavē cēvittup pāṭi palarākam tāṉmuḻaṅka
paccamāl taṉṉaruḷāl peṟṟanīlaṉ teccaṉā pūmiyilē
pallākku cēṉai pariyuṭaṉ kālāl pāyntu neruṅkiṭavē
pāviṉaiyākap paṭaicēvikka nīlacuvāmi varukiṉṟārē

Bewitched women's actions

Holding the *'āratti'* and fanned by *Kavari* danced a few.
Some of them equalling lightning, holding *'āratti'*
Danced singing the *Kuravai*, their garment shining.
Singing songs in various tunes they praised
Nīlacuvāmi who was coming to this world
To accept poojas. Blessed by Tirumāl
Nīlaṉ was coming to the southern land
Followed by Palanquins, armies, warriors on horse
To accept poojas in this world.

பூசைகொள்ள வருங்காட்சி

21. 1. பூசைகொள்ள வாறார் நீலசுவாமி பூசைகொள்ளவாறார்
பூசைகொள்ள வாறார் பொன்னும்நீல சுவாமியைக்கண்டு

பொன்னு மாதர்கண்டு வன்ன கவரிவீச
தேசம் புகழ்படைத்த தெய்வகுல நீலன்
சிவனைத் தொழுதுகொண்டு தெய்வப் புரவியேறி (பூசை)

2. வட்ட மதிமுகமும் கட்டும் தலைப்பா சேலை முழுப்பணிகள்
வாங்கி சந்தோசமாய் பொங்கமா யணிந்து
பட்டுத் துகிலுடை யெட்டுத் திசைமயக்க
பணியு மணிந்துகொண்டு நீலன் பரியிலேறி (பூசை)

நாடெல்லாம் புகழும் நீலன் சிவபெருமானைத்தொழுது, கட்டிய தலைப்பாகையும், பட்டாடைகளும், நிறைந்த அணிகலன்களும் விளங்க, வட்டமுகத்தில் மகிழ்ச்சி பொங்கத் தெய்வீகக் குதிரையின்மீது வந்துகொண்டிருக்கிறார். இவ்வாறு பூசைகொள்ளுவதற்காக வந்து கொண்டிருக்கின்ற நீலசுவாமியைக்கண்ட மகளிர் கவரிவீசித் தொழுது நின்றார்கள்.

Pūcaikoḷḷa varuṅkāṭci

pūcaikoḷḷa vāṟār nīlacuvāmi pūcaikoḷḷavāṟār
pūcaikoḷḷa vāṟār poṉṉum nīlacuvāmiyaikkaṇṭu
poṉṉu mātarkaṇṭu vaṉṉa kavarivīca
tēcam pukaḻpaṭaitta teyvakula nīlaṉ
civaṉait toḻutukoṇṭu teyvap puraviyēṟi *(pūcai)*

vaṭṭa matimukamum kaṭṭum talaippā cēlai muḻuppaṇikaḷ
vāṅki cantōcamāy poṅkamā yaṇintu
paṭṭut tukiluṭai yeṭṭut ticaimayakka
paṇiyu maṇintukoṇṭu nīlaṉ pariyilēṟi *(pūcai)*

The scene of arrival to accept poojas

Nīlaṉ is coming to accept poojas
Nīlaṉ is coming to accept poojas
Looking at such a Nīlaṉ, women stood
Fanning with *Kavari*. Wordwide famed
Godly Nīlaṉ on heavenly horse came
Worshipping Civaṉ, and wearing
The head gear (turban), silk cloth
And all jewels and famed in all directions.

மாலைகளுடன் விளங்கிய காட்சி

3 பிச்சிமாலை யிருவாச்சி முல்லை சூடி
புகழும் நந்தவனத்தில் மாலை சூட்டியே
அத்திமாலை பச்சைஅலரிப் பூவும் சூடி
அன்ன நடையழகன் பொன்னும் நீலசுவாமி (பூசை)

4. கன்னல் விளைந்தமுத்து கதலி யீன்றமுத்து
செந்நெல் விளைந்தமுத்து சிறந்த தங்கமுத்து
தன்னை நிகரில்லா நீல சுவாமியும்
தங்கத்தாலே பூண்டு யெங்கும் பிரகாசிக்க (பூசை)

பிச்சி, இருவாட்சி, முல்லை, ஆத்தி, பச்சை, அலரி போன்ற மலர்களாலான மாலைகளையணிந்து பரிமீது ஏறி திருவனந்தபுரத்தில் வந்துகொண்டிருக்கிறார். பொன்னாபரணங்களை அணிந்துவரும் அன்னநடையழகனாகிய நீலனின் தோற்றத்திற்குக் கரும்பு, கதலி, நெல் ஆகியவற்றில் தோன்றிய முத்துக்களும், தங்கத்தாலான முத்துக்களும் நிகரில்லாதனவாயின.

பச்சை - மணம் பொருந்திய இலைகள். (துளசி, திருநீற்றுப்பச்சை போல்வன) அலரி - அரளிப்பூ.

Mālaikaḷuṭaṉ viḷaṅkiya kāṭci

piccimālai yiruvācci mullai cūṭi
pukaḻum nantāvaṉattil mālai cūṭṭiyē
āttimālai paccaialarip pūvum cūṭi
aṉṉa naṭaiyaḻakaṉ poṉṉum nīlacuvāmi (pūcai)

kaṉṉal viḷaintamuttu katali yīṉṟamuttu
cennel viḷaintamuttu ciṟanta taṅkamuttu
taṉṉai nikarillā nīla cuvāmiyum
taṅkattālē pūṇṭu yeṅkum pirakācikka (pūcai)

His appearance with garlands

Wearing garlands made of tarambuja, tuscar jasmine
Jasmine and Riding on horseback,
He came. Besides garlands of figs and oleander
Adorned him, the one with swan like gait.
Even the pearls born out of ripe sugarcane,

Ripe banana, and pearl born of ripe paddy
Bore no comparison to the bright Nīlaṉ
Shining in all splendour with gold ornaments.

முச்சந்திபாலன் அருள்

5. வன்னம் சிறந்திலங்கும் பொன்னிலங்கி பாலன்
மதன மோகன மனதீரன் முச்சந்தி
அன்ன சுற்றத்தாரும் மாமனய்யன் கிள்ளை
அடுத்து வணங்கும் குடிபலதும் ஆதரிக்க (பூசை)

6. தம்பி தமையன் அனந்தவர் கோத்திரம்
தனது மக்கள் மருமக்க ளார்தினம்
நம்பி அடிமைகொண்ட குடிகள் தரிக்க
நாளும்நாளும் சீர்த்தி வாழ்வும் குறையாமல் (பூசை)

7 ஊரும் பதியும் குடிவளைந்த கொட்டாரமும்
ஒன்று போலதினம் என்றும்கல் கோட்டையாய்
சேரும் பலகுடியும் சேர்த்துக் கொண்டு
தினமும்குறை யில்லாமல் சிவனைத் தொழுதுகொண்டு (பூசை)

8. பாலும்பழமும் பணியாரம் அரியதாம் பஞ்சசாரை சீனிமிஞ்சப்
பாலமுர்தம் சாலப் பசிதணிக்கும்
இளநீர் கதலிப்பழம் சடையா
திருந்துமனம் மகிழ்ந்து நீலசுவாமி (பூசை)

9. சிங்கன் வாழைப்பழம் தினைமா அரியதரம்
சிறக்கும் பூங்கதலி யேற்ற துளுவன்பழம்
அங்கம் குளிர்ந்த முச்சந்தி மனதுறைந்து
அரச நீலராசர் ஆச்சை கிழமைதோறும் (பூசை)

நிகரில்லாத பெருமையோடுவரும் முச்சந்திபாலனாகிய நீலன் பெருமையும், சிறப்பும், உள்ளவலிமையும் கூடியவனாய் முச்சந்தியில் வீற்றிருந்து அபயம் என்று தன்னிடம்வந்து வணங்கிநிற்கும் குடிமக்களை மட்டுமன்றி அவர்களுடைய அண்ணன் தம்பி மக்கள், மருமக்கள் முதலான சுற்றத்தார், அவர்களைச் சேர்ந்த குடி, கோத்திரம் என்ற அனைவருக்கும் வாழ்வும் புகழும் பெருக அருள்புரிந்து வாழ்த்தி வந்தார். இவ்வாறே நாடும் நகரமும், ஊரும் குடியும், வீடும் கொட்டகையும் எனப்பல இடத்திலும் வாழ்ந்துவந்த பலவகைக் குடிமக்களுக்கும் எவ்விதக்குறையும் வராதவாறு அருள்புரிந்து

வந்ததோடு தன்வாக்கு அப்படியே விளங்கவேண்டுமென்று சிவபெருமானையும் தொழுது வந்தார்.

கிள்ளை - பிள்ளை. அனந்தவர் - அனைவருடைய. பஞ்சசாரை - பஞ்சாமிர்தம். ஆச்சை - ஆழ்ச்சை - வாரம். (மலையாளச் சொல்). கிழமை - நாள்.

Muccantipālan aruḷ

vaṉṉam ciṟantilaṅkum poṉṉilaṅki pālaṉ
matana mōkaṉa maṉatiraṉ muccanti
aṉṉa cuṟṟattārum māmaṉayyaṉ kiḷḷai
aṭuttu vaṇaṅkum kuṭipalatum ātarikka (pūcai)

tampi tamaiyaṉ aṉantavar kōttiram
taṉatu makkaḷ marumakka ḷārtiṉam
nampi aṭimaikoṇṭa kuṭikaḷ tarikka
nāḷumnāḷum cīrtti vāḻvum kuṟaiyāmal (pūcai)

ūrum patiyum kuṭivaḷainta koṭṭāramum
oṉṟu pōlatiṉam eṉṟumkal kōṭṭaiyāy
cērum palakuṭiyum cērttuk koṇṭu
tiṉamumkuṟai yillāmal civaṉait toḻutukoṇṭu (pūcai)

pālum paḻamum paṇiyāram ariyatām pañcacārai ciṉimiñcap
pālamurtam cālap pacitaṇikkum
yiḷanīr katalippaḻam caṭaiyā
tiruntumaṉam makiḻntu nīlacuvāmi (pūcai)
ciṅkaṉ vāḻaippaḻam tiṉaimā ariyataram
ciṟakkum pūṅkatali yēṟṟa tuḷuvaṉpaḻam
aṅkam kuḷirnta muccanti maṉatuṟaintu
araca nīlarācar āccai kiḻamaitōṟum (pūcai)

The Boon by the God of Triple street junction

The God stationed at triple street junction
The bold one protecting not only those
Who worship him but also their dependents
And the families of elder and younger brothers
Daughters-in-law. In addition hamlets,
Towns and all places are blessed and protected

And all those living in various places
Were blessed without any evil in their life.
And every week he accepted the various offerings
Such as milk and fruit, rare five fruit nectar
Sweeter than sugar, drink of milk,
Coconut water, banana fruit,
Cinkaṉ plantain fruit, ragi flour,
Rare variety of banana fruit,
Tuḷuvaṉ plantain fruit.

பூசையில் வேறுவகை

10. கொந்தார் குழலார் குரவை யொலிமுழங்க
கோல மாலை யணிமார்பி லோலமிட
சிந்தா பொடியும் பரிமளமும் பூசி
செல்லப் பிள்ளையென்று நீல பிள்ளைதெய்வம் (பூசை)

11. பிட்டு பணியாரம் சுட்ட கொழுவடை
பிள்ளைமாவும் சர்க்கரையும் விரவியொன்றாய்
வட்ட வாழையிலையில் தட்டிக் குவித்துவைத்து
மனங்கள் மகிழ்ந்துநீலன் இணங்கும் படியதாக (பூசை)

12. சிங்கன் வாழைப்பழம் தினைமா அரியதரம்
தட்டிச் சமைத்த சோறும் பரிசலமும்
அங்கம் குளிர்ந்திட முச்சந்தி பங்கிலேதான்
அமுர்த வாக்கில் திருவுள்ளய தாக்கிதினம் (பூசை)

தன்னைநம்பிச் சரணடைந்தவர்களின் வாழ்க்கை மேலும்மேலும் சிறப்படைய வேண்டுமென்று சிவனைத் தொழுதுவந்த நீலசுவாமிக்கு மக்கள் நாள்தோறும் பூசைசெய்து வந்தார்கள். அந்தப் பூசையின்போது பாலும், பழமும், பணியாரமும், பஞ்சாமிர்தமும், சீனிசேர்த்த பாலமிர்தமும், இளநீரும், வாழைப்பழமும் எனப் பசியைப்போக்கும் பொருள்கள் பலவற்றையும் சிறிதும் தவறாது மனமகிழ்ச்சியோடுவைத்துப் பூசித்துவந்தார்கள் முச்சந்தி பாலனாகிய நீலராசன் உள்ளங்குளிரவேண்டுமென்று நாள்தவறாமல் சிங்கன்வாழை, பூங்கதலி, துளுவன்பழம் ஆகியவற்றையும்வைத்துப் பூசித்தார்கள்.

சிந்தாபொடி - வாசனைப்பொடி. பரிமளம் - பரிமளப்பொடி - சுகந்தப்பொடி. பிள்ளைமாவு - குழந்தைகளுக்கு ஊட்டும் மாவு.

Pūcaiyil vēṟuvakai

kontār kuḻalār kuravai yolimuḻaṅka
kōla mālai yaṉimārpi lōlamiṭa
cintā poṭiyum parimaḷamum pūci
cellap piḷḷaiyeṉṟu nīla piḷḷaiteyvam (pūcai)
piṭṭu paṇiyāram cuṭṭa koḻuvaṭai
piḷḷaimāvum carkkaraiyum viraviyoṉṟāy
vaṭṭa vāḻaiyilaiyil taṭṭik kuvittuvaittu
maṉaṅkaḷ makiḻntunīlaṉ yiṉaṅkum paṭiyatāka (pūcai)
ciṅkaṉ vāḻaippaḻam tiṉaimā ariyataram
taṭṭic camaitta cōrum paricalamum
aṅkam kuḷirntiṭa muccanti paṅkilētāṉ
amurta vākkil tiruuḷḷam tākkitiṉam (pūcai)

Different kind of Pooja

Beautiful haired women sang the *Kuravai*
And offered poojas, with garlands dancing
Across their breast and with
Aromatic powders being smeared on Nīlaṉ,
Their pet child and their pet child god.
To make Nīlaṉ happy, they offered
Piṭṭu, sweet *vaṭai*, baby food flour,
Sugar and all these were heaped
On banana leaf along with *ciṅkaṉ* plantain fruit
Ragi flour, five fruit nectar cooked rice,

பூசையில் வேண்டுதல்

13. வாடி அனுதினமும் பார்க்கும் புலவோர்க்கு'
வரிசையுடன் கடுக்கன் கய்யில் கடையங்களும்
பாட யியல்வுதந்து நாவில் குடிபுகுந்து
பலவிதமும் பாடி பவுசிதந்த நாயன் (பூசை)

14. கும்பிட்டுன்னை வணங்கும் [நம்பும்] சனங்களுக்கு
குற்றம்குறை வாராமல் நித்தம்

அருள்புரிந்து க்ண்பார்த்து அனுதினம்
அன்பாய் குடிவளர்த்துக் காக்கும் தெய்வம்
பொன்னும் நீல தம்புரான் (பூசை)

15. சூடன் சாம்பிராணி தீபம் கமகமன
சுத்தி வரப்படைத்து சிறப்பும் நின்றிலங்க
வாடா விளக்கெரிய அடியார் தெண்டம்பண்ண
வருந்தி மனதிரங்கி திருந்தி பொருந்திமனம் (பூசை)

16. வெற்றிச் சிறப்புகளும் சாற்ற பூசைகளும்
வேண்டு பரிசைகளும் கூண்டு சிறந்திலங்க
பத்திமறவாத முச்சந்தி பங்கில் வந்து
பாரதூரம் சுற்றிப்பார்த்து கிரகம் நீக்கி (பூசை)

17. கனவு நினைவதிலும் கைக்குள் நின்றுகொண்டு
கண்பார்த் திரங்கியே முற்றுங் காத்துக்கொள்ள
தனது கோமரமும் பொன்னிலங்கி முச்சந்தி
தன்னைவிட் டொருநாளும் பிரியாமல் அனுதினம் (பூசை)

18. உலகம் தனைப்படைத்த உடையோன் தனைத்தொழுது
உமையாள் பார்வதியும் உமையாள் தனைத்தொழுது
கண்டநடுக்கஞ் சொல்லி யென்றும் குடிவளர்க்க
கைக்குள் நின்றுதினம் என்றும் குடிவளர்க்க (பூசை)

நீலதம்பிரானே! காதில் கடுக்கனும் கையில் கடயமும் அணிந்து நாள்தோறும் உன்னைவந்து தரிசிக்கும் புலவர் பெருமக்களுக்கு உன்னைப் போற்றிப்பாடும் சக்தியைத்தந்து அருள்புரிவாயாக! உன்னைத் தஞ்சமென்று நம்பிவந்து வணங்குகிற மக்களுக்கு எந்தக் குறையும்வராமல் அருள்புரிந்து காப்பாயாக! சூடமும் சாம்பிராணியும் மணக்கத் தீபம்காட்டித் தூங்கா விளக்கேற்றிவைத்து வணங்கும் அடியவர்களுக்காக மனம்இரங்கி அவர்களுக்கு வெற்றியையும், வேண்டும் பரிசுப்பொருள்களையும் கொடுத்து அவர்கள் குடும்பம் சிறந்துவாழ அருள்புரிவாயாக! என்றெல்லாம் வேண்டியவாறே முச்சந்தியில் வந்து சுற்றிப்பார்த்துக் கிரக நிலைகளை நீக்கியருள வேண்டி இந்த உலகத்தைப் படைத்த சிவபெருமானையும் உமையம்மையையும் தொழுது நின்றார்கள்.

கடுக்கன் - ஒரு காதணி. கடையம் - கடகம் - கைவளை. பவிசு - பவிஷு - வாழ்வு கூண்டு - ஒட்டு மொத்தமாக. பாரதூரம் - வெகுதூரத்தது; மிகப்பெரியது. கோமரம் - கொடிமரம்.

சு.சொல் : 1. புலவோர்களுக்கு.

Pūcaiyil vēṇṭutal

vāṭi aṉutiṉamum pārkkum pulavōrkku
varicaiyuṭaṉ kaṭukkaṉ kayyil kaṭaiyaṅkaḷum
pāṭa yiyalvutantu nāvil kuṭipukuntu
palavitamum pāṭi pavucitanta nāyaṉ (pūcai)

kumpiṭṭuṉṉai vaṇaṅkum [nampum] caṉaṅkaḷukku
kuṟṟamkuṟai vārāmal nittam
aruḷpurintu kaṇpārttu aṉutiṉam
aṉpāy kuṭivaḷarttuk kākkum teyvam
poṉṉum nīla tampurāṉ (pūcai)

cūṭaṉ cāmpirāṇi tīpam kamakamaṇa
cutti varappaṭaittu ciṟappum niṉṟilaṅka
vāṭā viḷakkeriya aṭiyār teṇṭampaṇṇa
varunti maṉatiraṅki tirunti poruntimaṉam (pūcai)

veṟṟic ciṟappukaḷum cāṟṟa pūcaikaḷum
vēṇṭu paricaikaḷum kūṇṭu ciṟantilaṅka
pattimaṟavāta muccanti paṅkil vantu
pāratūram cuṟṟippārttu kirakam nīkki (pūcai)

Kaṉavu niṉaivatilum kaikkuḷ niṉṟukoṇṭu
kaṇpārt tiraṅkiyē muṟṟuṅ kāttukkoḷḷa
taṉatu kōmaramum poṉṉilaṅki muccanti
taṉṉaivit ṭorunāḷum piriyāmal aṉutiṉam (pūcai)

ulakam taṉaippaṭaitta uṭaiyōṉ taṉaittoḻutu
umaiyāḷ pārvatiyum umaiyāḷ taṉaittoḻutu
kaṇṭanaṭukkañ colli eṉṟum kuṭivaḷarkka
kaikkuḷ niṉṟutiṉam yeṉṟum kuṭivaḷarkka (pūcai)

Prayer during the Pooja

Thou art the Lord God who give the poetic power
To the poets who come to thee, wearing
Ear studs and bracelets and thou the giver
Of the grace to sing glorious songs
To all those people who come to thee with trust

Deign to look at them and protect them from all evils
Thou art the God who protects the people with love
To all those who worship thee with comphor and
Sweet swelling aromatic incense and lights,
And ever burning flame and those who
Worship thee prostrate at thy feet
Take pity on them and in order these worships
May bring success, thou hast stationed thyself
In the triple street junctions
And they devotees, without forgetting thee
Continue to shower their gifts and presents
So that the evil movements of the planets
May not affect them. Both in dreams
And in their actions they beseech thee
To protect them and thy flag mast.
Worshipping thee Civaṉ and Pārvati
They beg of thee thy protection and grace forever.

சிவன் வரத்தால் நீலன் அருள்புரிதல்

19. சிவனும் மாலும்தந்த வரத்தால் பெரியவனே
தெய்வார் தங்களையும் வெல்லும் குலதெய்வம்
பாவக்கிரகங்கள் நீக்கிமுச் சந்திதன்
பங்கிலிருந்து கோமரமும் குடிவளர்க்க (பூசை)

20. கோளும் கொடுமுடியும் கிரகசூ னியங்களும்
கிட்டவர ஒட்டாமல் திட்டம் பண்ணிக்கொண்டு
வாழும் பயிர்களாக்கிக் கோவில் குடியும்கொண்டு
வரிசைபெற்று சிவன்வரத்தால் நீலன் மகிழ்ந்திருந்தாரே (பூசை)

சிவபெருமானும், திருமாலும் அருளிய வரத்தினால் பிற தெய்வங்களையெல்லாம் வெல்லக்கூடிய தன்மையினைப்பெற்ற நீலன், முச்சந்தியில் வீற்றிருந்து பாவக்கிரகங்களை நீக்கிக் குடிமக்களைக் காத்து கிரக சூனியங்களை அடக்கி, வாழுகின்ற பயிர்களாக்கி கோயிலில் எழுந்தருளி மக்களின் பூசைவரிசைகளை ஏற்று மகிழ்ச்சியுடன் வீற்றிருந்தான்.

நடுக்கம் - அஞ்சும் செயல்கள். கொடுமுடி - கோள்களின் தீச்செயல்கள்.

Civaṉ varattāl nīlaṉ aruḷpurital

civaṉum māḷumtanta varattāl periyavaṉē
teyvār taṅkaḷaiyum veḷḷum kulateyvam
pāvakkirakaṅkaḷ nīkkimuc cantitaṉ
paṅkiliruntu kōmaramum kuṭivaḷarkka *(pūcai)*

kōḷum koṭumuṭiyum kirakacū ṉiyaṅkaḷum
kiṭṭavara oṭṭāmal tiṭṭam paṇṇikkoṇṭu
vāḻum payirkaḷākkik kōvil kuṭiyumkoṇṭu
varicaipeṟṟu civaṉvarattāl nīlaṉ makiḻntiruntārē

Nīlaṉ gives a gift through Civaṉ's grace

To those trembling with fear, thou hast given protection
Thou art at hand to flourish their progeny.
With the grace of Tirumāl and Civaṉ
Thou hast overcome all the gods.
Thou hast the power to remove the sins
And prosper the generation, stationed at
Triple street junction with your own flagmast.
No planet or the evil configuration of planets
Can do any harm to any body and turning them
All to good yielding planets, thou taketh thy abode
At triple street junction with Civan's blessing.

கடவுளர்மீது வாழ்த்துக்கும்மி

22. 1. கார்கொண்ட கணபதியே
கந்தன்முன் தொந்தி விநாயகனே
யேர்கொண்ட கும்மித்தமிழ் பாடஎனை
யெப்போதும் காத்தஇள கற்பகமே (தன்னை)

2. சீர்கொண்ட செஞ்சடையோன் மகனே
தெய்வானை வள்ளி நாயகமே
தார்கொண்ட மாலை யணிந்தசிவன்
தானே வாக்கருள வேணும் சிவனே கும்மி (தன்னை)

3. பூரணமான பொன்னம் பலவா
   பொன்மானை அன்று தரித்தவனே
காரணமாகவே நீலன்பேரில் கும்மி
   கவிபாட நித்தம் அருள்புரிவாய் (தன்னை)

4. நாரணனு உமைபார் வதியாள்
   நல்ல மகவென வந்துதித்த
வாரண மாக வந்துதித்த
   வள்ளி மணவாளா காத்தருள்வாய் (தன்னை)

5. அண்டர்கள் நாயக னாதிபரன்
   அம்மைஉமை சக்தி பாகனடி
தொண்டர்க்கு பக்திகொடுத்த சுவாமியைத்
   தொழுது கும்மி யடிப்போமடி

கார்கொண்ட விநாயகா! கந்தனுக்கு முன்பிறந்த தொந்திக் கணபதியே! தமிழில் சிறப்பாகக் கும்மி பாட அருள்புரியும் கற்பக விநாயகா! சிவந்த சடாமுடியுடன் விளங்கும் சிவபெருமானின் மகனாகவும், வள்ளி, தெய்வானையரின் நாயகனாகவும் விளங்கும் முருகப் பெருமானே! மாலை அணிந்த சிவபெருமானே! பொன்னம்பலத்தில் எழுந்தருளியிருப்பவனே! மானைத் தரித்தவனே! நாராயணனே! உமாதேவியாருக்கு மகனாகப் பிறந்த வாரணனே! வள்ளி மணாளனே! அண்டர் நாயகனே! ஆதிபரனே! சக்திபாகனே! தொண்டருக்கருள்புரியும் சுவாமியே! நீலசுவாமி மீது கும்மிபாட அருள்புரிவீர்களாக என்றுபாடிக் கும்மியடிப்போமாக!

Kaṭavuḷarmītu vāḻttukkummi

kārkoṇṭa kaṇapatiyē
   kantaṉmuṉ tontivināyakaṉē
yērkoṇṭa kummittamiḻ pāṭaeṉai
   yeppōtum kāttaiḷa kaṟpakamē (taṉṉai)

cīrkoṇṭa ceñcaṭaiyōṉ makaṉē
   teyvāṉai vaḷḷi nāyakamē
tārkoṇṭa mālai yaṇintacivaṉ
   tāṉē vākkaruḷa vēṇum civaṉē kummi (taṉṉai)

pūraṇamāṉa poṉṉam palavā
   poṉmāṉai aṉṟu tarittavaṉē
kāraṇamākavē nīlaṉpēril kummi

kavipāṭa nittam aruḷpurivāy *(taṉṉai)*

nāraṇaṉu umaipār vatiyāḷ
nalla makaveṉa vantutitta
vāraṇa māka vantutitta
vaḷḷi maṇavāḷā kāttaruḷvāy *(taṉṉai)*

aṇtarkaḷ nāyaka ṉātiparaṉ
ammaiumai cakti pākaṇaṭi
toṇṭarkku paktikoṭutta cuvāmiyait
toḻutu kummi yaṭippōmaṭi *(taṉṉai)*

Kummi (Folk dance) in praise of gods

Oh Kaṇapati the black, pot bellied Vināyakar
Born as the elder brother of Kantaṉ
Give me the grace to sing
Kummi songs in great Tamil! Oh! the ageless god.
Oh Murukā! thou art the son of red haired Civaṉ
Thou! the spouse of Vaḷḷi and Teyvāṉai
With the grace of garland wearing Civaṉ
Give us the grace to sing *Kummi*
Oh! Thou who liveth at Poṉṉampalam,
Thou the wearer of the deer skin,
Give us the grace to sing *Kummi*
Everyday on Nīlaṉ.
Oh thou! the son of Umātēvi!
Varaṇā the spouse of Vāḷḷi,
The God of all the minor gods and tēvās
The prime mover of Cakti, give all
Thy devotees to sing *Kummi* and praise.

திருமாலை வணங்கி நீலன்மீது கும்மி

6. பச்சமால் தன்பேரில் பாடிக்கொண்டு
பண்பாய் அவர்பாதம் போற்றிக்கொண்டு
அச்சமற வாறநீல சுவாமியை
அன்னமே கும்மி யடிப்போமடி

7. *ஆனந்த மாட சிவனிடத்தில்*
அரிவையர் கூடிக் குரவையிட
தாண்டவ மாடிய நீலசுவாமியைத்
தாளத்தால் கும்மி யடிப்போமடி

8. *பட்டாடை யும்பணி*
பரமானந்த நாதரைப் போற்றிக் கொண்டு
வட்டமிட் டாடியே நீலசுவாமி
வாறசிங் காரத்தைப் பாடுங்கடி

9. *கைமாறிக் கைமாறி ஆடுங்கடி*
கையிலாண் டம்மானை போடுங்கடி
மெய்சுத்த னானவன் முச்சந்தி பங்கிலே
வீற்றிருக்க வாறான் பாருங்கடி

10. *தோத்திரம் பண்ணுங்கோ தோழி பெண்காள்*
சூழவந் தாடுங்கோ தோழியரே.

திருமாலின் திருவடிகளைத் தொழுது வணங்கி, நீலசுவாமியைப் போற்றிக் கும்மியடிப்போமாக! கயிலாயத்தில் சிவபெருமான் முன்னிலையில் திருநடனமாடிய நீலசுவாமியைப் போற்றித் தாளம்கொட்டிக் கும்மியடிப்போமாக! பட்டாடைகளையும் ஆபரணங்களையும் அணிந்து, ஈஸ்பரனைப் போற்றியபடியே வட்டமிட்டு ஆடிவரும் நீலசுவாமியானவர் வருகின்ற அலங்காரத்தைப் பாருங்கள். கையினை மாற்றி அடித்து, தூயவனாகிய நீலசுவாமி முச்சந்தியிலே வீற்றிருக்க வருவதைக்கண்டு வணங்கித் துதித்து எல்லோரும் வந்து சுற்றி நின்று ஆடுவீர்களாக தோழியரே!

Tirumālai vaṇaṅki Nīlaṉmītu kummi

paccamāl taṉpēril pāṭikkoṇṭu
paṇpāy avarpātam pōṟṟikkoṇṭu
accamaṟa vāṟanīla cuvāmiyai
aṉṉamē kummi yaṭippōmaṭi

āṉanta māṭa civaṉiṭattil
arivaiyar kūṭik kuravaiyiṭa
tāṇṭava māṭiya nīlacuvāmiyait
tāḷattāl kummi yaṭippōmaṭi

paṭṭāṭai yumpaṇi
paramāṉanta nātaraip pōṟṟik koṇṭu

vaṭṭamiṭ ṭāṭiyē nīlacuvāmi
vāṟaciṅ kāṟattaip pāṭuṅkaṭi

kaimāṟik kaimāṟi āṭuṅkaṭi
kaiyilāṉ ṭammāṉai pōṭuṅkaṭi
meycutta ñāṉavaṉ muccanti paṅkilē
viṟṟirukka vāṟāṉ pāruṅkaṭi

tōttiram paṇṇuṅkō tōḻi peṇkāḷ
cūḻavan tāṭuṅkō tōḻiyarē

Kummi on Nīlaṉ after worshipping Tirumāl

Let us praise the green Tirumāl
And praising His feet and singing his praise
Let us sing *Kummi* for the glory
Of Nīlacuvāmi.
Let us praise and sing *Kummi*
With the proper rhythm for Nīlacuvāmi
Who performed the dance of Joy
In the presence of Civaṉ in the company
Of women who performed *Kuravai*
Look at the sight of the coming of Nīlacuvāmi
Wearing dresses of silk and ornaments of Gold
How he comes dancing in circles
And dance exchanging rhythm with hands
And perform the *ammāṉai* dance
Look! how he comes to station himself at Triple junction
Worship him! Praise him and come to dance around

நீலன் சிறப்புக்கூறிக் கும்மி

பார்த்திருக்கப் பணிபூண்டுகொண்டு நீலன்
பார்த்ததைக் கொண்டாடுங்கடி

11. ஆலவட்டம் வீசி ஆடுங்கடி
ஆதிசிவன் மேலே பாடுங்கடி

நீலசுவாமி நிலைமை கண்டாரென்று
நின்றேகும்மி யடியுங்கடி

12. நெட்டூரி நீலி நெடுமரத்தில்
நீலனை முனிட்டுக் கூட்டிக்கொண்டு
கட்டாக முச்சந்தி வங்குசம்
காக்க வாருங்கடி

நீலனின் ஆடையணிகளையும், அருட்பார்வையையுங்கண்டு ஆலவட்டம்வீசி, ஆதிசிவனை வணங்கிப் பாடுவீர்களாக! நம்நிலையை நீலசுவாமி உணர்ந்துவிட்டாரென்ற ஆனந்தத்தோடு நீலியையும் அழைத்துக்கொண்டு நமது வம்சத்தைக் காக்கவேண்டி முச்சந்தியிலிருந்து கும்மியடிப்பீர்களாக!

நெட்டூரி-நிட்டூரி-கொடியவள்.

Nīlaṉ ciṟappukkūṟik kummi

pārttirukkap paṇipūṇṭukoṇṭu nīlaṉ
pārttataik koṇṭāṭuṅkaṭi

ālavaṭṭam vīci āṭuṅkaṭi
āticivaṉ mēlē pāṭuṅkaṭi
nīlacuvāmi nilaimai kaṇṭāreṉṟu
niṉṟēkummi yaṭiyuṅkaṭi

neṭṭūri nīli neṭumarattil
nīlaṉai muṉiṭṭuk kūṭṭikoṇṭu
kaṭṭāka muccanti vaṅkucam
kākka vāruṅkaṭi

Kummi praising the traits of Nīlaṉ

Celebrate, now you saw Nīlaṉ's coming
To protect us with a mission.
Dance in circles and sing in praise
Of Ancient Civaṉ
Perform *Kummi* that Nīlacuvāmi
Has seen and understood our condition
Be happy that he has come with Nīli
And perform *Kummi* at triple junction
That we and our progeny may stand protected.

இராமர் முதலானவரை வணங்கிக்கும்மி

13. தேவர் சிறைமீண்ட சிங்கமடி
    தேவகியாள் ஸ்ரீராமனடி
ஆயர்மனை தோறும் வெண்ணையுண்ட
    அரிராமரைப் போற்றி ஆடுங்கடி

14. பாருங்கடி பெண்கா பாருங்கடி
    பரமசிவனுட சூத்தி ரத்தை
ஆருக்கும் காணக்கிடையாத பாதத்தை
    அருளவே கும்மி யடிப்போமடி

15. சேவேறும் ஈசன் திருவடிவைச்
    சென்றுகண்டே வரம் வாங்கிவந்த
மாவேறும் திண்புயத்தான் நீலராசாவை
    வாழ்த்திக் கும்மி யடிப்போமடி

16. பொய்சொல்லா நெஞ்சில் புகுந்திருப்பார்
    பூலோக மெல்லாம் நிறைந்திருப்பார்
மெய்க்கு மெய்யான பொருளாரை
    விரைந்து கும்மி யடிப்போமடி

தேவர்களைச் சிறையிலிருந்து மீட்ட சிங்கமாகியவனும், சீதையின் தலைவனாகிய இராமனும், ஆயர் வீடுகளில் வெண்ணெய் உண்டுகளித்தவனுமாகிய திருமாலின் அவதாரமாம் இராமரைப் போற்றி ஆடுங்கள். காணக்கிடைக்காத இடபவாகனராகிய சிவபெருமானின் திருவடிகளைக் காட்டியருளுமாறு வேண்டி, அவன் திருவடிகளைக்கண்டு வணங்கி வரம்பெற்றுவந்த நீலராசாவை வாழ்த்திக் கும்மியடிப்பீர்களாக! குதிரையில் ஏறிவருபவனும், உலகம் முழுவதும் நிறைந்திருப்பவனும், உண்மை பேசுபவர்களின் நெஞ்சத்தில் நிறைந்திருப்பவனும், உண்மைப் பொருளாக விளங்குபவனுமாகிய நீலசுவாமியை வாழ்த்திக் கும்மியடிப்பீர்களாக.

சே - எருது. மா - குதிரை.

Irāmar mutalāṉavarai vaṇaṅkik kummi

tēvar ciraimīṇṭa ciṅkamaṭi
tēvakiyāḷ srirāmaṉaṭi
āyarmaṉai tōṟum veṇṇaiyuṇṭa
arirāmaraip pōṟṟi āṭuṅkaṭi

pāruṅkaṭi peṇkā pāruṅkaṭi
paramacivaṉuṭa cūtti rattai
ārukkum kāṇakkiṭaiyāta pātattai
aruḷavē kummi yaṭippōmaṭi

cēvēṟum īcaṉ tiruvaṭivaic
ceṉṟukaṇṭē varam vāṅkivanta
māvēṟum tiṇpuyattāṉ nīlarācāvai
vāḻttik kummi yaṭippōmaṭi

poycollā neñcil pukuntiruppār
pūlōka mellām niṟaintiruppār
meykku meyyāṉa poruḷārai
viraintu kummi yaṭippōmaṭi

Kummi, worshipping Rāmā and others

Let us praise the name of Rāma
And dance, for he is the one who
Delivered the gods from prisons,
Citā's spouse and the one who ate butter
From every household of milkmaids.
Oh women! Look O! women!
Sing *Kummi* asking for the gift of seeing
The secret of Civaṉ, His feet,
Which none has the privilege to see.
Such feet not witnessed by any,
Our Nīlan has gone and seen
And has got gift. Let us praise Nīlaṉ
And sing *Kummi* glorifying his name.
He lives in the heart of those without lies,
He pervades the entire universe
Let us praise and sing *Kummi*
In the name of one who is truth itself among the truthful

மங்கையர், திருமால், நீலன் ஆகியோர் சிறப்பு

17. வன்னம் சிறந்த தனத்தாரே
    மாணிக்க முத்து நகையாரே
பொன்னும் சிறந்தபுகழ் நீலராசாவை
    போற்றிக் கும்மி யடிப்போமடி

18. காலிநிரை மேய்த்த கண்ணனடி
    கஞ்சனை நெஞ்சைப் பிளந்தவனடி
ஆலிலைமேல் பள்ளிகொண்ட பெருமாளை
    அழைத்துக் கும்மி யடிப்போமடி

19. மாயவரம் பெற்ற லோகமெல்லாம்
    மானிடர் கைதொழ வந்தவனை
காயாம்பு மேனிநீல சுவாமியை
    கதிர் கும்மி அடிப்போமடி

20. தண்டா மரைமுகத் தையல்நல்லார்
    சங்க யழகிய மங்கையரே
கொண்ட கோலத்தோடே நீலசுவாமி
    கோவிலில் வாறதைப் பாருங்கடி

21. காலனைக் காலால் உதைத்துவந்த
    கண்டு கொண்டுவரம் பெற்றுவந்த
நீலசுவாமியும் நீலி யிசக்கியும்
    நித்தம் பூசைகொள்ள வாறாரடி

22. சங்கத் திருநட மாடிவந்த
    தம்புரான் நீல தம்புரனார்
மங்கைமார் கூடிக்குரவை யிடப்பரி
    மீதிலேறியே வாறதைப் பாருங்கடி

அழகிய தனங்களையும் மாணிக்கம், முத்து போன்ற புன்முறுவலையுமுடைய நங்கையரே! ஆநிரை மேய்த்தவனும், கம்சனின் மார்பைப் பிளந்தவனும், ஆலிலை மேல் பள்ளிகொண்டவனும் உலக மக்கள் அனைவரும் வணங்கும் பெருமைவாய்ந்தவனும், காயாம்பு நிறத்தையுடையவனுமாகிய கண்ண பெருமாளின் அருளைப்பெற்று, கண்ணபெருமானாகவே விளங்கும் நீலசுவாமியைப் போற்றிக் கும்மியடிப்போமாக! குளிர்ச்சி பொருந்திய தாமரை போன்ற முகத்தையுடைய அழகிய மங்கையரே!

அலங்காரத்துடன் கோவிலுக்குள் வருகின்ற நீலசுவாமியைப் பாருங்கள்! காலனைக் காலால் உதைத்து, மார்க்கண்டேயனைக் காத்த சிவபெருமானிடம் வரங்களைப் பெற்றுவந்த நீலனும் நீலியிசக்கியும் தினமும் மக்கள் பூசையினை ஏற்க வருகிறார்கள். கயிலையில் திருநடனம் புரிந்துவருகின்ற நீலதம்புரானைச் சுற்றிலும் மகளிர் நின்று குரவையாடிவரக் குதிரைமீது ஏறிவருவதைக் காண்பீர்களாக!

Maṅkaiyar, Tirumāl, Nīlaṉ ākiyōr ciṟappu

vaṉṉam ciṟanta taṉattārē
māṇikka muttu nakaiyārē
poṉṉum ciṟantapukaḻ nīlarācavai
pōṟṟik kummi yaṭippōmaṭi

kālinirai mēytta kaṇṇaṉaṭi
kañcaṉai neñcaip piḷantavaṉaṭi
ālilaimēl paḷḷikoṇṭa perumāḷai
aḻaittuk kummi yaṭippōmaṭi

māyavaram peṟṟa lōkamellām
māṉiṭar kaitoḻa vantavaṉai
kāyāmpu mēṉinīla cuvāmiyai
katir kummi aṭippōmaṭi

taṇṭā maraimukat taiyyalnallār
caṅka yaḻakiya maṅkaiyarē
koṇṭa kōlattōṭē nīlacuvāmi
kōvilil vāṟataip pāruṅkaṭi

kālaṉaik kālāl utaittuvanta
kaṇṭu koṇṭuvaram peṟṟuvanta
nīlacuvāmiyum nīli yicakkiyum
nittam pūcaikoḷḷa vāṟāraṭi

caṅkat tirunaṭa māṭivanta
tampurāṉ nīla tampuraṉār
maṅkaimār kūṭikkuravai yiṭappari
mītilēṟiyē vāṟataip pāruṅkaṭi

The special traits of women, Tirumāl and Nīlaṉ

Oh! fair breasted women,
Oh! diamond and pearl adorned women

Oh! sing *Kummi* and praise the name of
Ever glorious Nīlaṉ.
Let us call Tirumāl, the one
Who looked after the herds of cows,
The one who split the chest of Kañcaṉ,
The one who slept on banyan leaf.
And sing *Kummi* in his honour
The one who got the special gift
And the one worshipped by all.
The fair skinned Nīlaṉ in his name
Let us sing and perform *Kummi*.
Oh women folk with beautiful lotus face
And women most beautiful,
Look! how Nīlaṉ enters the temple
And in what manner he comes.
Nīlaṉ and Nīli, who got gift from Civaṉ
Who trounced the god of death, Yamaṉ
Come here to accept poojas.
Look how Nīlaṉ Comes
On horseback, surrounded by *Kuravai*
Dancing women. It is he who danced
At Kailash and still performs it.

நீலனும் பிற இறைவர்களும்

23. பூரணச்சந்திரன் போல முகமும்
பொன்னான மேனி புளகிதமும்
காரணமாக நீல ராசாவே
காட்சி கொடுக்கவே வாறாரடி

24. மூத்தானை சந்திதனிலே வைத்தோன்
மூவர்குலத்தானை பங்கில் வைத்தோன்
ஆத்தாளும் அப்பனும் இல்லாத - எங்கள்
ஆதி முதலைக்கொண் டாடுங்கடி

25. கூத்தாடிப் பிச்சை தனையெடுத்து
கூசாமல் மாடேறி வெட்கமுற்று
பத்தனுட தலையோட்டி லிரந்துண்ட
பரமசிவன் மேலே பாடுங்கடி

26. கண்ணப்பர் எச்சிதனை யுகந்து
கண்மணிக்குப் பொன்மணி கொடுத்து
அண்ணர் பெருமான் மைத்துனரென்று
ஆடிக் கும்மி யடிப்போமடி

27. கொப்பாட வேகுழை காதாட
கொஞ்சி ஆடவாரும் தோழியரே
தப்பாமல் நீலசுவாமி யெனக்கொரு
தாவடம் கொண்டு தருவாரடி

28. ஆயர் மனைதோறும் வெண்ணையுண்டு
ஆச்சியர் மக்களை யீடளித்த
மாயனை ஆதிநா ராயண மூர்த்தியை
மானே கும்மி அடிப்போமடி

29. கல்லுக்குள் தேரைக்கும் பிள்ளைகட்கும்
கண்காணாப் பேர்க்கும் படியளந்து
வல்லபொருளான நல்லசிவ னாரை
வாழ்த்திக் கும்மி அடிப்போமடி

30. யெண்சாண் பரவையுள் நாடாக்கி
யெங்கு மேலாவி குடியிருக்க
அஞ்சச் சரத்தை ஒட்டயெதுக்குள்
அடைத்த ஆதி பரமனடி

31. மெத்த மகிழ்ச்சி கொடுத்தவனடி
வீரனாம் நீலனுக்குள் பொருளாய்
நித்தம்பூசை கொள்ளவே வரம் ஈய்ந்த
நீலனைக் கும்மி அடியுங்கடி

32. கல்லாத புல்லன் சுசடன் கய்யால்
கல்லெறி பட்டதும் போறாமல்

பொல்லா தவனைநல்லவ னாக்கும்
பெரியோனைப் போற்றிக் கும்மி அடியுங்கடி

33. பண்ணுந் தமிழுக் குபகாரன்
பத்திரமா காளி புத்திரனாம்
பொன்னிலங்கி புகழ்முச் சந்தி
பங்கிலே பூசைகொள்ள வாறார் பாருங்கடி

முழுநிலா போன்ற அழகும் ஒளியுமுடைய முகத்தினையும், பொன்போன்ற மேனியினையும் கொண்ட நீலசுவாமி நமக்குக் காட்சி கொடுக்க வருகின்றார். அழகிய சந்தியிலே எழுந்தருளியவனும், சிவன், பிரம்மா, திருமால் ஆகிய மும்மூர்த்திகளின் அருள்பெற்றவனுமாகிய நீலனைப் பாடுவீர்களாக! பொன்னம்பலத்துக் கூத்தாடியவனும், எருதை வாகனமாகக் கொண்டவனும், பிரமனின் மண்டையோட்டில் பிச்சை எடுத்தவனும், கண்ணப்பரின் எச்சிற்பண்டத்தை உண்டவனும், உமையம்மையை மணந்து திருமாலின் மைத்துனரானவருமாகிய சிவபெருமானைப் பாடிக் கும்மியடிப்பீர்களாக! தோழியரே! உங்கள் காதுகளில் அணிந்திருக்கும் கொப்பு, குழை போன்ற ஆபரணங்கள் அசைந்தாட வருவீர்களாக! நீலசுவாமியும் முத்துமாலைகளைத் தந்தருளுவார். ஆய்ச்சியர் வீடுகளில் வெண்ணையினைத் திருடி உண்ட மாயவனாகிய ஆதிநாராயண மூர்த்தியையும், கல்லுக்குள் வசிக்கக்கூடிய தேரைக்கும் படி அளக்கக்கூடிய பெருமைபெற்ற சிவபெருமானையும் வாழ்த்திக் கும்மியடிப்போமாக! எண்சாண் உடம்பையே இருப்பிடமாக்கி அதில் உயிரானது தங்கியிருக்குமாறு செய்து பஞ்சாட்சரத்தை அதனுள் அடக்கி மகிழ்ச்சியூட்டிய இறைவனே நீலனின் உட்பொருளாய் நின்று பூசையை ஏற்குமாறு நீலனுக்கு அருள்புரிந்திருக்கிறான் அதனால் கல்லாத அற்பர்களால் கல்லடிபட்டதோடு, பத்திரகாளியின் மகனாகி முச்சந்தியில் மக்களின் பூசையை ஏற்க வருகிறான் நீலன்

புளகிதம் - பூரிப்பு. மூத்தான் - கணபதி. பத்தன் - பக்தன் பரவை - பரந்த வெளி அஞ்சச்சரம் - பஞ்சாட்சரம் எதுக்குள் ஒட்ட - உள்ளத்துக்குள் அமையுமாறு.

Nīlaṉum piṟaiṟaivarkaḷum

pūraṇaccantiraṉ pōla mukamum
poṉṉāṉa mēṉi puḷakitamum
kāraṇamāka nīla rācāvē
kāṭci koṭukkavē vārāraṭi

mūttāṉai cantitaṉilē vaittōṉ
mūvarkulattāṉai paṅkil vaittōṉ
āttāḷum appaṉum illāta - eṅkaḷ
āti mutalaikkoṉ ṭāṭuṅkaṭi

kūttāṭip piccai taṉaiyeṭuttu
Kūcāmal māṭēṟi veṭkamuṟṟu
paṭṭaṉuṭa talaiyōṭṭi lirantuṇṭa
paramacivaṉ mēlē pāṭuṅkaṭi

kaṇṇappar eccitaṉai yukantu
kaṇmaṇikkup poṉmaṇi koṭuttu
aṇṇar perumāṉ maittuṉareṉṟu
āṭik kummi yaṭippōmaṭi

koppāṭa vēkuḻai kāṭāṭa
koñci āṭavārum tōḻiyarē
tappāmal nīlacuvāmi yeṉakkoru
tāvaṭam koṇṭu taruvāraṭi

āyar maṉaitōṟum veṇṇaiyuṇṭu
ācciyar makkaḷai yiṭaḷitta
māyaṉai ātinā rāyaṇa mūrttiyai
māṉē kummi aṭippōmaṭi

kallukkuḷ tēraikkum piḷḷaikaṭkum
kaṇkāṇāp pērkkum paṭiyaḷantu
vallaporuḷāṉa nallaciva ṉārai
vāḻttik kummi aṭippōmaṭi

yeṇcāṇ paravaiyuḷ nāṭākki
yeṅku mēlāvi kuṭiyirukka
añcac carattai oṭṭayetukkuḷ
aṭaitta āti paramaṉaṭi

metta makiḻcci koṭuttavaṉaṭi
vīraṉām nīlaṉukkuḷ poruḷāy
nittampūcai koḷḷavē varam īynta
nīlaṉaik kummi aṭiyuṅkaṭi

kallāta pullaṉ kacaṭaṉ kayyāl
kalleṟi paṭṭatum pōṟāmal
pollā tavaṉainallava ṉākkum
periyōṉaip pōṟṟikkummi aṭiyuṅkaṭi

paṇṇun tamiḻuk kupakāraṉ
pattiramā kāḷi puttiraṉām
poṉṉilaṅki pukaḻmuc canti
paṅkilē pūcaikoḷḷa vāṟār pāruṅkaṭi

Nīlaṉ and other gods

Nīlaṉ is coming to give us
A glimpse of his beautiful face
Like a full moon and a body as shining as gold
Let us praise and sing the glory of Nīlaṉ
The one who has met the Supreme Three
Pirammā Civaṉ and Tirumāl
And the one who resides at triple junction
Let us sing the praise of Paramacivaṉ
The one who danced at Poṉṉampalam
The one who had the ox as his chariot
The one who begged with Pirammā's skull
And the one who accepted
The remnant of the food of Kaṇṇappar
The one who became Tirumāl's
Brother-in-law by his marraige with Umā,
Let us sing and perform *kummi.*
Oh dear friends, consorts, come
And dance with your ear studs,
Ear rings keeping the rhythmic movement.
Without fail Nīlaṉ will give a pearl garland.
Let us have *Kummi* in praise of Ātinārāyaṇaṉ,
The one who stole butter from every household of the milkmaids
Let us have *kummi* in praise
Of all powerful Civaṉ, The one who feeds
The hidden toad in stone, and all children
Both seen and unseen.

It is the ancient God, the prime mover,
Who has contained the life
Within this body of very short length
And who has instilled the five fold manthra
Within this human body.
It is he who has given joy to Nīlaṉ
And he who stands within Nilaṉ the brave.
It is he who has given the gift
To Nīlaṉ to accept poojas and worship.
Let us have *Kummi* for the sake of Nīlaṉ
That is why, even without minding
The attack by illiterates, he has come
To convert the wicked into the good.
Let us have *Kummi* praising such a great soul.
The benefactor for Tamil and for all,
The precious son the great Pattirakāḷi.
Nīlaṉ comes to accept worship and poojas
Stationed at the triple junction of the streets.

வாழ்த்து

34. வாழையும் தெங்கும் நடுவதுபோல்
வாழும்உயி ராக்கி வைப்பதுபோல்
வேளையும் பார்த்தெங்கள் முச்சந்தி அங்குசம்
மேன்மேலும் தழைக்க வைப்பாரடி

35. வாழட்டும் கொங்கை மன்மதவேள்
மாலருளால் வந்த நீலபிள்ளை
காளங்காட்டனுடன் அங்குசத்தில் தினம்
காட்சி கொடுக்கவே வாறாரடி

36. ஏறிட்டுக் கண்பார்த் திரங்கிநித்தம்
ஏனையடி யாரிடத்தில் நிற்க
நீறிட்டு வல்பிணிதீர்த்த குலதெய்வம்
நித்தம் பூசைகொள்ள வாறாரடி

37. யென்றும்பரம்பரை யான தெய்வம்
 ரெச்சிக்க முச்சந்தி கோத்திரத்தில்
குன்றாமல் என்றைக்கும் நீலசுவாமியார்
 கோவில் குடிகொண் டாரடி

38. முட்டாங்கு காத்தி முழுநீலி
 முன்பரன் நீலி யிசக்கியுமாய்
அட்டவக்கரையிட்டு சட்டமாய் நீலன்
 அமர்ந்து பூசைகொண் டிருந்தார்

39. நாடு தழைக்க மழைபொழிய
 நாடாளு மன்னர் தழைத்தோங்க
ஈடுடனே அடியார்க ளெல்லாம்
 இரங்கிக் கும்மி அடிப்போமடி

40. வாடாமல் நித்தம் விளக்கெரிய
 வாய்த்த உணவு பரிகலத்தில்
கோடாமல் நித்தம் பூசையுண்டு
 கோவில் குடிகொண்டார் நீலனடி

41. அடியார்கள் செய்யும்பிழை பொறுத்து
 ஆபத்து காத்த அடிமைக்காரன்
படியருள் சிவனைப் போற்றியே
 பாங்கான நீலனும் வீற்றிருந்தாரே

நீலசுவாமி கதை நாட்டுவளப்பம் முற்றிவிட்டது.

வாழையும் தென்னையும் நடுவது போல, வாழும் உயிரைப் படைப்பது போல, ஏற்ற நேரம் பார்த்து முச்சந்தியில் அங்குசத்தை நாட்டி அருள்புரிவாராக! அந்த அங்குசத்தில் மன்மதவேள், திருமால் ஆகியோர் அருளால் நீலன் நாள்தோறும் காட்சியளிப்பார். காளிகாதேவியின் அருளால் அடியார்களுக்குத் திருநீறளித்து கொடியநோய்களை நீக்கியருளி அந்தப் பக்தர்களின் பூசையை ஏற்றுக் கொள்வார் நம் அனைவரையும் காத்தருளும் பரம்பரைத் தெய்வமாக நீலசுவாமி முச்சந்தியில் கோயில் கொண்டிருப்பார் நீலியாகிய இசக்கியும் நீலனாகிய பெருமானோடு எழுந்தருளி அன்பர்களின் பூசையை ஏற்று அருள்புரிந்து வந்தார்கள். தூங்காவிளக்கும், நைவேத்தியப் பொருள்களும் நிறைந்திருக்க அன்பர்கள் அளிக்கும் பூசையை ஏற்றுக் கோயில்கொண்டிருக்கும் நீலசுவாமியினருளால் நல்லமழை பொழிய நாடும், மன்னரும், அடியவர்களும் உயர்ந்து வாழ்வார்களாக அடியவரிடம் அன்புகாட்டி, நல்லதையே செய்தருளிவரும் நீலசுவாமி சிவபெருமானை என்றும் மறவாது துதித்து எழுந்தருளியிருந்தார்

காளங்காட்டன் - காளகண்டன் - சிவன். நீறு - திருநீறு. முட்டாங்கு - தடையில்லாது. அட்டவக்கரை - அக்கறை.

Vāḻttu

vāḻaiyum teṅkum naṭuvatupōl
vāḻumuyi rākki vaippatupōl
vēḷaiyum pārtteṅkaḷ muccanti aṅkucam
mēṉmēlum taḻaikka vaippārati

vāḻaṭṭum koṅkai maṉmatavēḷ
mālaruḷāl vanta nīlapiḷḷai
kāḷaṅkāṭṭaṉuṭaṉ aṅkucattil tiṉam
kāṭci koṭukkavē vārāraṭi

ēṟiṭṭuk kaṉpārt tiraṅkinittam
ēṉaiyaṭi yāriṭattil niṟka
nīṟiṭṭu valpiṇitīrtta kulateyvam
nittam pūcaikoḷḷa vārāraṭi

yeṉṟumparamparai yāṉa teyvam
reccikka muccanti kōttirattil
kuṉṟāmal eṉṟaikkum nīlacuvāmiyār
kōvil kuṭikoṇ ṭāraṭi

muṭṭāṅku kātti muḻunīli
muṉparaṉ nīli yicakkiyumāy
aṭṭavakkaraiyiṭṭu caṭṭamāy nīlaṉ
amarntu pūcaikoṇ ṭiruntār

nāṭu taḻaikka maḻaipoḻiya
nāṭāḷu maṉṉar taḻaittōṅka
īṭuṭaṉē aṭiyārka ḷellām
iraṅkik kummi aṭippōmaṭi

vāṭāmal nittam viḷakkeriya
vāytta uṇavu parikalattil
kōṭāmal nittam pūcaiyuṇṭu
kōvil kuṭikoṇṭār nīlaṉaṭi

aṭiyārkaḷ ceyyumpiḻai poṟuttu
āpattu kātta aṭimaikkāraṉ

paṭiyaruḷ civaṉaip pōṟṟiyē
pāṅkāṉa nīlaṉum viṟṟiruntārē.

Nīlacuvāmi·katai nāṭṭuvaḷappam muṟṟiviṭṭatu

Encomium (or) Praise

Just like the planting of banana and coconut,
Like the sword, being brought down to give life,
In the street junction Nīlaṉ will plant
His insignia, for the welfare of generations.
With this symbol (Emblem, insignia) he will appear
Daily to devotees with the blessings of Cupid and Tirumāl.
He comes to receive daily poojas
Taking pity on all and offering
The ashes with Kāli's blessings.
He cures all diseases of the devotees.
He abides always in the triple junction
As the traditional god to protect us.
And he resides there only for our sake,
Guarding people along with Nīli.
Stationed permanently at Triple junction
Nīlaṉ received poojas and worship.
Let us perform *Kummi* to bring rain
For the prosperity of the nation,
And for the welfare of the rulers.
And for the sake of the disciples of Nīlaṉ
Nīlaṉ is residing at triple junction
In order that light may burn endless,
That the vessel may be full with food,
That the poojas may be held upright without fail
Forgiving the sins of the devotees
Protecting even the slave from danger
Nīlaṉ took his seat praising
Lord Civaṉ and His grace.

* * * * *

துணை நூல்கள்

சுவடிகள்

பதிப்புக்குரிய சுவடி

நீலசுவாமி கதை, எண் 160, ஓலை,
ஆசியவியல் நிறுவனம், சென்னை-600 119.

ஒப்பிட உதவிய சுவடிகள்

நீலவனேசுவர சுவாமி கோவில்
சருவமானியம், டி, 3264, ஓலை,
அரசினர் சுவடி நூலகம், சென்னை-600 005.

பழையனூர் வரலாறு, டி.3443, ஓலை,
அரசினர் சுவடி நூலகம், சென்னை - 600 005.

அகராதி நூல்கள்

கதிரைவேற்பிள்ளை, நா. தமிழ் மொழியகராதி, ஏசியன் எஜூகேஷனல் சர்வீஸ், புதுடெல்லி 1992.

சிங்காரவேலு முதலியார், ஆ. அபிதான சிந்தாமணி, ஆசியன் எஜூகேஷனல் சர்வீஸ், புதுடில்லி, 1988.

வையாபுரிப் பிள்ளை, எஸ். தமிழ் லெக்சிகன், தொகுதி I-VI, சென்னைப் பல்கலைக்கழகம், சென்னை 1982.

தமிழ் அச்சுநூல்கள்

அன்னகாமு, ஏட்டில் எழுதாக் கவிதை, சர்வோதயப் பிரசுராலயம், தஞ்சாவூர், 1960.

ஆழ்வார்கள், நாலாயிர திவ்வியப் பிரபந்தம், இரத்தின நாயகர் அண்ட் சன்ஸ், சென்னை, 1977.

இராமச்சந்திரன், நா.	சமூகக் கதைப்பாடல் ஒரு வரையறை நாட்டார் வழக்காற்றியல்-.
இராமச்சந்திரன், நா. (தொகுப்பாசிரியர்)	சின்னணஞ்சி கதை, ஆசியவியல் நிறுவனம், சென்னை.
ஏகாம்பர முதலியார்	நீலிகதை, டைமண்டு அச்சுக்கூடம், சென்னை-1910.
கம்பன்	கம்பராமாயணம், கம்பன் கழகப் பதிப்பு, சென்னை 1977.
கோமதிநாயகம், தி.சி	தமிழ் வில்லுப்பாட்டுகள், தமிழ்ப் பதிப்பகம், சென்னை, 1979.
சக்திவேல், சு.	நாட்டுப்புற இயல் ஆய்வு, மணிவாசகர் பதிப்பகம், சிதம்பரம், 1983
சண்முகசுந்தரம், சு	நாட்டுப்புற இயல், மணிவாசகர் பதிப்பகம், சென்னை, 1989
சண்முகசுந்தரம். சு	நாட்டுப்புற இலக்கிய வரலாறு, மணிவாசகர் பதிப்பகம், சிதம்பரம் 1980
சித்தலைச் சாத்தனார்	மணிமேகலை, உ.வே.சா. உரையுடன், ஸ்ரீ தியாகராச விலாச வெளியீடு 1965.
சேக்கிழார்	பெரியபுராணம், சைவ சமாஜம், 1934
சுப்பிரமணிய ஐயர், எம்.எஸ்	ஸ்ரீ நீலி பராக்கிரமம் அல்லது வேளாளர் தீக்குளித்தல், சாரத சதங்கைமணி.-
சுப்பிரமணியம், பூ.	நீலியட்சகானம், ஆசியவியல் நிறுவனம், சென்னை 1994.
திருவள்ளுவர்	திருக்குறள், சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை 1970

நிர்மலா தேவி, சு.	முத்தாரம்மன் கதை, உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை, 1995.
பெருமாள், அ. நா.	தமிழில் கதைப்பாடல், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை 1985.
வானமாமலை, நா.	ஐவர்ராசாக்கள் கதை, மதுரைப் பல்கலைக்கழகம், 1974.
வானமாமலை, நா.	தமிழர் நாட்டுப் பாடல்கள், நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை 1977
வானமாமலை, நா.	வீரபாண்டிய கட்டபொம்மு கதைப்பாடல், மதுரைப் பல்கலைக்கழகம், 1971.
வேதாசலம், வெ.	இயக்கி வழிபாடு, அன்னம், மதுரை, 1989

ஆங்கில நூல்கள்

Arunachalam, A.	The Balled poetry, Gandhi Vidyalayam, Tiruchitrambalam, 1976.
Margaret and James stutley	A Dictionary of Hinduism, Allied publishers private ltd, Bombay, New-Delhi, 1972.
Moner williams, sir,	Sanskrit English Dictionary, Motilal Banarsidass, Delhi, 1982.
Somale,	Folklore of Tamilnadu-.

கட்டுரை

கதைப்பாடல் -	சில அணுகுமுறைகள், கருத்தரங்கக் கட்டுரை, டாக்டர் பூ. சுப்பிரமணியம், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை. 26-2-1988.

இணைப்பு – 3

சொல்லடைவு

(எண் - பாடல் எண்)

* * * * *

Our Publications pertaining to Palm-leaf Manuscripts

Descriptive Catalogues of Palm-Leaf Manuscripts in Tamil,

General Editors: **Dr. Shu Hikosaka, Dr. G. John Samuel**

1.	Vol I Part I	Editor	M. Shanmukham Pillai,	1990	Rs. 177.50	US $ 25
2.	Vol I Part II	Editor	M. Shanmukham Pillai,	1990	Rs. 177.50	US $ 25
3.	Vol II Part I	Editor	M. Shanmukham Pillai,	1991	Rs. 177.50	US $ 25
4.	Vol II Part II	Editor	M. Shanmukham Pillai,	1992	Rs. 225.50	US $ 25
5.	Vol III Part I	Editor	Dr. A. Thasarathan,	1993	Rs. 250.00	US $ 50
6.	Vol III Part II	Editor	Dr. A. Thasarathan,	1993	Rs. 250.00	US $ 50
7.	Vol IV Part I	Editor	Dr. P. Subramaniam,	1996	Rs. 250.00	US $ 50
8.	Vol IV Part II	Editor	Dr. P. Subramaniam,	1996	Rs. 250.00	US $ 50
9.	Vol V Part I	Editors	Dr. P. Subramaniam, Dr. K. Jayakumar,	1997	Rs. 250.00	US $ 50
			General Editor : **Dr. G. John Samuel**			
10.	Vol V Part II	Editors	Dr. P. Subramaniam, Dr. K. Jayakumar,	1998	Rs. 250.00	US $ 50

Palm-Leaf Manuscript Publications

General Editors: **Dr. Shu Hikosaka, Dr. G. John Samuel**

		Editors:			
1.	The Wandering Voice (3 Ballads),	Dr. R. Nirmala Devi,	1987	Rs. 120.00	US $ 32
2.	The Art of Drumming - Mattaḷaviyal,	Dr. V.P.K. Sundaram,	1988	Rs. 90.00	US $ 20
3.	The Dateless Muse - Veṅkalarājaṉ Katai,	Dr. R. Nirmala Devi,	1988	Rs. 80.00	US $ 20
4.	The Unsung Melodies, Palavēcañ Cērvaikkāraṉ Katai,	Dr. V. Murugan	1989	Rs.75.00	US $ 32
5.	The Divine Pilgrimage - Perumāḷcāmi katai,	M. Shanmukham Pillai,	1982	Rs. 200.00	US $ 40
6.	A Tale of Romance - Cakuntalai Nāṭakam,	Dr. A Thasarathan,	1993	Rs. 300.00	US $ 50
7.	Varma Cūttiram,	Dr. P. Subramaniam,	1994	Rs.400.00	US $ 50
8.	Nīli Yaṭcakāṉam,	Dr. P. Subramaniam,	1994	Rs. 150.00	US $ 20
9.	Peṇṇaraciyar katai,	Dr. K. Jayakumar, D. Boominaganathan	1995	Rs.100.00	US $ 20
10.	A Tale of Nemesis - Nīli Yaṭcakāṉam,	Dr. P. Subramaniam,	1996	Rs. 250.00	US $ 20
11.	The Valorous Virgins - Peṇṇaraciyar Katai,	Dr. K. Jayakumar D. Boominaganathan	1996	Rs.220.00	US $ 35
12.	A Tale of Betrayal - Cāraṅkataraṉ Yaṭcakāṉam,	Dr. P. Subramaniam,	1996	Rs.400.00	US $ 65
13.	The Epic Eternal - Irāmar Katai, Part I,	Dr. K. Jayakumar,	1996	Rs.450.00	US $ 65
14.	The Epic Eternal - Irāmar Katai, Part II,	Dr. K. Jayakumar,	1996	Rs.450.00	US $ 65
15.	Palm-leaf and other Manuscripts in Indian Languages,	Dr. A. Pandurangan, Dr. P. Maruthanayagam	1996	Rs.300.00	US $ 50
16.	Destiny and Divinity - Varāṅkaṉ Katai,	M. Parimanan,	1996	Rs.200.00	US $ 30
17.	The Vows Fulfilled - Āmaiyar Ammāṉai,	M. Maruthamuthu,	1996	Rs.450.00	US $ 65
18.	Poetic Petals in the Interior Landscape-Uttaṉṭaṉ Kōvai,	R. Jayalakshmi,	1997	Rs.400.00	US $ 50
19.	[illegible]re Justice Chimes	Dr. P. Subramaniam,	1997	Rs.400.00	US $ 50
20.	The Defender of the Faith	Dr. K. Jayakumar, R. Jayalakshmi,	1996	Rs.350.00	US $ 40
		General Editor : **Dr. G. John Samuel**			
21.	Redemption Through Grace	M. Maruthamuthu	1998	Rs.350.00	US $ 40
22.	Tirukkalampakam	M. Parimanan R. Jayalakshmi	1999	Rs.300.00	US $ 30
23.	Treatise on Mathematics	Dr. P. Subramaniam, K. Sathya Bama	1999	Rs.300.00	US $ 30